# பூர்ண அவதூதர் பூண்டி சுவாமிகள்

*பக்தர்களின் நேரடி அனுபவங்கள்*



சாயிநாதுனி குணசேகர்

## நூல் - விளக்கம்


நூலின் பெயர் : **பூர்ண அவதூதர் பூண்டி சுவாமிகள்**
பக்தர்களின் நேரடி அனுபவங்கள்

ஆசிரியர் : சாயிநாதுனி குணசேகர்

மொழி : தமிழ்

நூல் வகை : ஆன்மீகம்

பதிப்பாளர் : A. குணசேகர ராவ்
14a, அம்பலவாணர் தெரு, 100 அடி சாலை
அரும்பாக்கம், சென்னை - 600 106
தொலைபேசி என் 07299346525, 09094773772
email: sainathunigunasekhar@gmail.com

முதல் பதிப்பு : குரு பூஜை, அக்டோபர் 2011


விலை : ரூ. 200

அட்டை
வடிவமைப்பு : M. பத்மாகர், சென்னை


உள் பக்கங்கள்
வடிவமைப்பு : A.N.V.V. சத்யநாராயணா, சென்னை

அச்சிட்டோர் : சாய்பண்ட்ஸ் பிரிண்ட் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிட்டெட்,
சென்னை

ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு பூண்டிநாத் மஹராஜ்கீ ஜெய்!



ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு பூண்டிநாத் மஹராஜ்கீ ஜெய்!



*மலபீடத்தின் மீது ஸ்ரீ பூண்டிசுவாமி*

ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு சாயிநாத் மஹராஜ்கீ ஜெய்!
சத்குரு ஸ்ரீ சாயிநாதுனி சரத்பாபூஜீகீ ஜெய்!



சற்குருநாதர் ஸ்ரீ சாயிநாதுனி சரத்பாபூஜீ அவர்களின்
திருவடிகளுக்கு பக்தி, அன்புடன் இந்நூலை சமர்ப்பிக்கிறேன்

# இந்நூலில்


முன்னுரை . . . xi
உபோத்காதம் . . . xiii
அணிந்துரை . . . xx
அணிந்துரை . . . xxiv
1. எத்திராஜன், பூண்டி . . . 1
2. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, பிரதம சீடர், பூண்டி . . . 5
3. இராதாகிருஷ்ணன், நங்கிலி கொண்டா கிராமம் . . . 17
4. சுப்பிரமணியம், பூண்டி . . . 24
5. கோபால்சாமி, மேப்பத்துரை . . . 27
6. முனிரத்தின நாட்டார், திருவண்ணாமலை . . . 29
7. V.A. சொக்கலிங்கம், விளாப்பாக்கம் . . . 41
8. ஆ. ராமசாமி, கீழ்ப்புரம் கிராமம் . . . 50
9. முருகேசன், காசிக்குட்டை . . . 52
10. பரமசிவன், பழங்கோவில் . . . 68
11. ஜெயக்கொடி, பூண்டி . . . 69
12. விஜய சுந்தரம், பூண்டி . . . 71
13. சம்பந்தம், கலசபாக்கம் . . . 87
14. சச்சிதானந்த சம்பத் சுவாமிகள், சோழக்குப்பம் . . . 90
15. கிருத்துவ அன்பர், வேலூர் . . . 93
16. தியாகராஜன், பூண்டி . . . 104
17. அனு வெண்ணிலா, போளூர் . . . 105
18. சண்முகம், ஆரணி . . . 111
19. கணேசன், பூண்டி . . . 114
20. கோதண்டபாணி, வேலூர் . . . 116
21. A. சம்பத், ஆதமங்கலம் புதூர் . . . 118
22. ஆறுமுகம், காசிக்குட்டை . . . 121
23. நாராயணன், கங்காபுரம் . . . 125

24. திருமதி. சாந்தி, பூண்டி . . . . . . . . 131
25. K. கணேசன், காப்பலூர் . . . . . . . . 135
26. G. சந்தான கிருஷ்ணன், தேவன்குடி . . . . . . . . 138
27. நடராஜன், பூண்டி . . . . . . . . 143
28. திருஞானம், பூண்டி . . . . . . . . 157
29. பண்டிட் கோவிந்த சாமி, கொரால்பாக்கம் . . . . . . . . 161
30. திருமதி கஸ்தூரி, சென்னை . . . . . . . . 163
31. பரமசிவம், மகமாயி திருமணி . . . . . . . . 165
32. முத்து, திண்டிவனம் . . . . . . . . 169
33. திருமதி முத்து இந்திராணி, திண்டிவனம் . . . . . . . . 183
34. முனுசாமி கவுண்டர், சின்னகண்ணாம்பட்டி . . . . . . . . 185
35. சக்கரவர்த்தி, செஞ்சி . . . . . . . . 189
36. சுப்பிரமணியம், வீரானந்தல் . . . . . . . . 192
37. சின்னராஜ், சென்னை . . . . . . . . 196
38. S. மணி, ஊத்தங்கரை . . . . . . . . 198
39. பங்காரு சுவாமி, பூண்டி . . . . . . . . 205
40. S. பாபு, வேலூர் . . . . . . . . 215
41. கே.சி. தன்சிங், வேலூர் . . . . . . . . 217
42. S. குப்புசாமி, ஆர்காடு . . . . . . . . 233
43. ரங்கசாமி, பழங்கோவில் . . . . . . . . 235
44. பாண்டு ரங்கசுவாமி (எ) புண்டரிக்காச்சலு, பூண்டி . . . . . . . . 239
45. ராஜாமணி, சென்னை . . . . . . . . 248
46. சண்முகம், முருக்கம்பாடி . . . . . . . . 252
47. குமார சுவாமி, வேலூர் . . . . . . . . 265
48. ஆதிகேசவலு, மதுராந்தகம் . . . . . . . . 275
49. K.V. ராஜாராமன், அனியாலக்காம்பட்டு . . . . . . . . 279
50. சுந்தர மூர்த்தி, குன்னத்தூர் . . . . . . . . 289
51. R. ராஜாராம், தெனாலிபாக்கம் . . . . . . . . 298
52. பெருமாள், பழங்கோவில் . . . . . . . . 300
53. சுந்தரேசப் பிள்ளை, பூண்டி . . . . . . . . 302
54. இராதாகிருஷ்ணன், புதுநெல்லிமேடு . . . . . . . . 305
55. N. எத்திராஜன், போளூர், . . . . . . . . 311
56. சத்தியமூர்த்தி, போளூர் . . . . . . . . 316

57. மன்னன், வேடந்தவாடி . . . . . 317
58. காளிதாஸ் (Rtd, Judge) பழனி . . . . . 327
59. S. சையது கவுஸ், எள்ளூப்பாறை . . . . . 331
60. சிவாஜி, புதுநெல்லிமேடு . . . . . 334
61. மகாதேவன், சோழபுரம் . . . . . 336
62. சின்னதம்பி, நெல்லிமேடு . . . . . 338
63. அருணாச்சலம், கலசபாக்கம் . . . . . 344
64. C. நடேசன், C. கங்கம்பட்டு . . . . . 352
65. ஸ்ரீமதி வேலம்மா, பூண்டி . . . . . 359
66. ஜெயராமன், பூண்டி . . . . . 361
67. ஆறுமுகம், காங்கனூர் . . . . . 364
68. ஸ்ரீமதி கம்பீரம், பழங்கோவில் . . . . . 371
69. ஓம் சக்தி லட்சுமணன், காப்பலூர் . . . . . 376
70. ஜனார்த்தனன், கலசபாக்கம் . . . . . 377
71. பாலமுத்து, பூண்டி . . . . . 381
72. சிவராமன், பூண்டி . . . . . 386
73. கிருஷ்ணன், பூண்டி . . . . . 388
74. தண்டபாணி, பூண்டி . . . . . 389
75. ஸ்ரீமதி சன்மார்க்கம்மா, பூண்டி . . . . . 391
76. M. நடராசன், சோழபுரம் . . . . . 395
77. இராமலிங்கம், கடலாடி . . . . . 400
78. பொன்னம்பலம், ஆரணி . . . . . 406
79. நாராயணன், ஆற்காடு . . . . . 417
80. இராமகிருஷ்ணன், ஐயம்பாளையம் . . . . . 419
81. சின்னக்குழந்தை அம்மாள், சிறுவள்ளூர் . . . . . 421
82. M. ஆறுமுகம், பூண்டி . . . . . 427
83. சுப்பிரமணியன், மோட்டூர் . . . . . 429
84. குப்புசாமி, காப்பலூர் . . . . . 431
85. சதானந்த சுவாமி, தாராபுரம் . . . . . 434
86. வேலுகவுண்டர், பழங்கோவில் . . . . . 439
87. கண்ணாயிரம், பிராயம்பட்டு . . . . . 441
88. அருணாச்சலம், பழங்கோவில் . . . . . 445
89. சிவராஜ், பழங்கோவில் . . . . . 448

90. R. இராமன், மஷார் . . . . . 450
91. இளைய பெருமாள், பழங்கோவில் . . . . . 453
92. கோவிந்தசாமி, பழங்கோவில் . . . . . 457
93. பிச்சாண்டி, பூண்டி . . . . . 459
94. வெங்கடேசன், பூண்டி . . . . . 463
95. ஆறுமுகம், வேடந்தவாடி . . . . . 465
96. கமலம்மா, கொத்தந்தவாடி . . . . . 469
97. பாலகிருஷ்ணன், சென்னை . . . . . 481
98. ஹரி, பெங்களூர் . . . . . 482
99. ஜெயராமசாமி, சித்திப்பட்டு . . . . . 484
100. பாண்டு, கலசபாக்கம் . . . . . 485
101. R. காசிசெட்டியார், கூடுவாஞ்சேரி . . . . . 487
102. அதிய உடையார், சோமந்த புத்தூர் . . . . . 488
103. காமாட்சி சத்திய நாராயணன், வேலூர் . . . . . 489
104. S.C. முத்து, சோழப்புரம் . . . . . 493
105. ராஜகோபால், திருவண்ணாமலை . . . . . 495
106. இலட்சுமண சிங், வேலூர் . . . . . 503
107. இராதாகிருஷ்ணன், மதுராந்தகம் அருகில் . . . . . 510
108. சண்முகம், பிராயம்பட்டு . . . . . 515

## முன்னுரை

என் சற்குருநாதர் ஸ்ரீ சாயிநாதுனி சரத்பாபூஜி என் உள்ளத்தை அறிந்து என்னை இந்த நற்பணிக்கு பிரேரித்தல் செய்து அருள் வழங்கினார். என்மேல் கருணை வைத்து ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்களின் லீலைகளையும், பக்தர்கள் பெற்ற அனுபவங்களையும் சேகரிக்கும் பாக்கியத்தை அளித்து அனுக்கிரகித்தார். என் ஹிருதய அந்தரியமியான ஸ்ரீ சாயிபாபா என்னை பூர்ண அவதூதர் பூண்டிசுவாமிகள் பக்தர்களின் நேரடி அனுபவங்கள் என்ற புத்தகத்தை எழுதவைத்தார்.

2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை சுமார் எழு வருடங்கள் அடிக்கடி ஸ்ரீ பூண்டி சுவாமியின் சமாதி கோவிலுக்கு சென்று, சுவாமியை நேரிடையாக தரிசித்த பக்தர்களை சந்தித்து அவர்களின் அனுபவங்களை சேகரித்தேன்.

ஸ்ரீ பூண்டிசுவாமி பக்தர்களுக்கு அளித்த அனுபவங்களையும், அனுபூதிகளையும் ஆழமாக பரிசோதித்தால், சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பரபிரம்ம சொரூபம், எல்லா இலட்சணங்களையும் கலந்து சம்பூர்ண சகுணரூபமான ஸ்ரீ பூண்டி சுவாமியாய் தரிசனம் அளிப்பார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் லீலைகளையும், மகிமைகளையும் வர்ணிக்க இயலாது. அதனால் பக்தர்கள் கூறிய அனுபவங்களை உள்ளது உள்ளபடியே எழுதியுள்ளேன். இதல் எதுவும் நான் கற்பனையாக எழுதவில்லை.

ஸ்ரீ பூண்டிசுவாமிகளின் லீலைகளையும், மகிமைகளையும் அனைவரும் அறிந்துக்கொண்டு சுவாமியின் அனுக்கிரகத்தை பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தம் அனுபவங்களை கூறிய அனைத்து அன்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

*அன்பர்களின் அனுபவங்களை சேகரிக்க உதவி புரிந்த திரு. சுப்பிரமணியசுவாமி அவர்களுக்கும், திரு. இராதாகிருஷ்ணன் (நங்கிலிகொண்டா) அவர்களுக்கும், இந்த புத்தகத்தை சரிபார்த்து, முதலிலிருந்து உதவிய பேராசிரியர் திரு. இராமு அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பக்தர்களின் அனுபவங்களை தமிழில் எழுதுவதற்கு உதவிபுரிந்த எனது துணைவியார் திருமதி. காஞ்சனாதேவி அவர்களுக்கும், தமிழில் டைப் செய்ய உதவிய திரு. மணி அவர்களுக்கும், பிழைத்திருத்தம் செய்த புலவர் அனுவெண்ணிலா, திரு. தன்சிங் மற்றும் புலவர் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், சுவாமியின் புகைப்படங்களை சேகரிக்க உதவியவர்களுக்கும், அச்சேற்றி தந்தவர்களுக்கும், மேலும் கூறிக் கொண்டே போனால் பலபக்கங்கள் வரும். எல்லா அன்பர்களுக்கும் என் உளமாந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு, ஸ்ரீ பூண்டி மகானின் அருள் அனைவருக்கும் கிடைக்க மனமார வேண்டுகிறேன்.*

*இந்த நூலை சுவாமியின் மீது பக்தியோடும், அன்போடும், நம்பிக்கை வைத்து படிப்பவர்களுக்கு ஸ்ரீ பூண்டி மகானின் அருள் உறுதியாக கிடைக்கும்.*

**- சாயிநாதுனி குணசேகர்**

## உபோத்காதம்

*ஆன்மீக மாற்றங்களில் கடைசியானது, சிறந்தது ப்ராமிஸ்திதி என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்த நிலையில் வெளிப்படுகின்ற ப்ரம்மவரிஷ்டன் (அவதூதர்) பாலகனாகவோ, பைத்தியம் பிடித்தவனாகவோ அல்லது பேய் பிடித்தவன் போன்றோ இருப்பார் என்று ஆதிசங்கரர் கூறியிருக்கிறார். சாஸ்திரங்களில் விளக்கப்பட்டுள்ள அனைத்து இலட்சணங்களையும் கொண்டுள்ள உருவம் அரிது. அதிலும் சமகால மகான்களால்* ‘**சாம்ராட்**’ *என்று புகழப்பட்ட பூண்டி சுவாமியை போன்ற உருவம் மிகவும் அரிது.*

“**நாங்கள் பல்புகள் ஆனால் பூண்டி சுவாமி டிரான்ஸ்மீட்டர் போன்றவர். அங்கு ஸ்விட்ச் போட்டால் அன்றி இங்கு பல்புகள் எரியாது**”. *இந்த வார்த்தைகளைக் கூறியது யார் என்றால், நடமாடும் தெய்வம் என்று ஆயிரக்கணக்கானவர்களால் வணங்கப்பட்ட காஞ்சி பெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். ஸ்ரீ பூண்டி சுவாமிகளை தரிசிப்பது மட்டுமின்றி அவரைக் குறித்து பேசினாலும், யாராவது அவரை தரிசித்தோம் என்று கூறினாலும் பரமானந்தம் அடைவார். அது மட்டுமின்றி தாமும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் அனுக்கிரகத்திற்காக வேண்டுவோம் என்று கூறினாராம். ஸ்ரீ பூண்டி சுவாமியைப் பற்றி கேட்டதற்கு* “**அவரா! அவர் ‘டாப்புக்கே டாப்’**” *என்றார் ஸ்ரீ ஞானானந்த சுவாமி. ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்த பிரமுகர்களில் ஸ்ரீ சங்கரானந்த சுவாமி, ஸ்ரீ பூர்ணானந்த சுவாமி (சேலம்), ஸ்ரீ பாத சுவாமி (பிருந்தாவனம்), ஸ்ரீ கிருபானந்த வாரியார் முதலிய எத்தனையோ பேர் உள்ளனர்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி சுமார் 1935ஆம் ஆண்டில் திருவண்ணாமலைக்கு 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கலசபாக்கம் கிராமத்தில் உன்மத்த நிலையில், திரிந்த நிலையில் தென்பட்டார். அவரது பெரிய*

உருவமும், நடையில் கம்பீரமும் பார்ப்பவர்களுக்கு அவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி போல் தோன்றுவார். முதலில் கலசபாக்கத்திலுள்ள காக்கங்கரை பிள்ளையார் கோவிலிலும், பாழடைந்த மசூதியிலும், சில நாட்கள் திரௌபதியம்மன் கோவிலிலும் மேலும் சில நாட்கள் மரத்தடியிலும், சாலைப் பக்கத்திலும் இருந்து கொண்டிருப்பார். மேலிருந்து முழங்காலுக்கு கீழே வரையிலும் கம்பளி போன்ற சட்டையைப் போட்டிருப்பார். அதை கழற்றமாட்டார். அது கிழிந்து நைந்துவிட்டால் யாராவது வேறு சட்டை போட்டால் அந்த கிழிந்த சட்டை மேலேயே போட்டுக் கொள்வார். ஆனால் பழையதை கழற்றவே மாட்டார். அச்சட்டைப் பை நிறைய தூக்கியெறிந்த காலி சிகரெட் பெட்டிகள், குப்பைக் காகிதங்கள், சிகரெட் துண்டுகள் முதலான குப்பையெல்லாம் சொருகி வைத்திருப்பார். யாரையும் எதுவும் கேட்கமாட்டார். உணவு, தண்ணீர் கூட, யாராவது வைத்தால் சிறு குழந்தை போல் வாயில் வைத்து ஊட்டவேண்டியதே தவிர தானாகவே கையில் எடுத்துச் சாப்பிடமாட்டார். யாராவது சிகரெட்டை வாயில் வைத்து பற்ற வைத்தால் தான் புகை பிடிப்பார். அவராகவே யாருடனும் பேச மாட்டார். குளியல், சீர் செய்யாத தலைமுடி ஜடைமுடி கட்டியிருக்கும். உடல் எல்லாம் அழுக்கடைந்து ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும். ஆனாலும், எதையும் பொருட்படுத்த மாட்டார். நடக்க ஆரம்பித்தால் தொடர்ந்து மைல் கணக்கில் நிற்காமல் நடந்து கொண்டேயிருப்பார். அமர்ந்தால் இனி வாரம், மாதங்கள் ஆனாலும் எழவே மாட்டார். மீண்டும் ஏதோ பிரேரித்தல் வந்து எழுந்தால் திரும்ப அமர்வது எப்போதோ? அவர் எப்போது அமர்வாரோ? எப்போது எழுவாரோ? எப்போது எங்கு இருப்பாரோ? என்ன செய்வாரோ? என்ன செய்ய மாட்டாரோ? யாருக்கும் ஊகிப்பதற்கு சாத்தியமாகாது. அவர் யாரோ? அவர் ஊர் எதுவோ? எங்கிருந்து வந்தாரோ? குலம், மதம், தாய், தந்தையர் குறித்த விவரங்கள் யாருக்கும் தெரியாது. அவர் கடவுளின் பெயரை ஜெபித்துக் கொண்டிருக்கும் போதோ, ஆன்மீகச் சொற்பொழிவு செய்யும் பொழுதோ யாரும் பார்த்ததில்லை.

*முதன்முதலில் கலசபாக்கம் கிராமத்தினர் அவரை ஒரு பைத்தியம் என்றே நினைத்தனர். ஒரு விசித்திர நிகழ்ச்சி மூலமாக அவர் பைத்தியம் கிடையாது என்று அவதூத நிலையில் திரிகின்ற மகாசித்த புருஷர் என்று அவர்கள் அறிந்தார்கள்.*

*கலசபாக்கம் பக்கத்தில் செய்யாறு என்ற ஆறு இருக்கின்றது. ஸ்ரீ சுவாமிஅடிக்கடி அந்த ஆற்றின் மணல் மேல் அமர்ந்து இருப்பார். அமர்ந்தால் வாரக்கணக்கில் எழாமல் உட்கார்ந்து இருப்பது சுவாமிகளுக்கு சகஜமானது என்று இதற்கு முன்பே கூறினோம். சுட்டெரிக்கும் வெயிலுக்கு கணகணவென்று சுடும் அந்த மணலில் சாதாரணமாக நடக்கவே கடினம். அப்படிப்பட்ட அந்த வெயிலிலும் சந்தோஷமாக முழு நிலவொளியில் மெத்தை மீது அமர்ந்திருப்பதைப் போன்று அமர்ந்திருப்பார். ஒரு சமயம் மழை பெய்ததால் அந்த ஆற்றில் திடீரென்று வெள்ளம் வந்தது. திடீரென வெள்ளம் வருவதும், தண்ணீர் இல்லாமல் திடீரெனக் குறைவதும் அந்த ஆற்றுக்கு சகஜம். வெள்ளத்திற்கு முன்பு ஆற்றில் அமர்ந்திருந்த சுவாமியை பார்த்தவர்கள் பைத்தியக்கார சுவாமி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார் என்றே நினைத்தார்கள். வெள்ளம் குறைந்தபின்பு கிராமத்தார் பலர் சுவாமி அமர்ந்திருந்த இடத்தில் பார்த்தபொழுது சுவாமியின் உடல் எல்லாம் மணலால் மூடப்பட்டு தலைமட்டும் மேலே தென்பட்டது. மணலை அப்புறப்படுத்தியபிறகு சுவாமி நேராக எழுந்து சென்று விட்டார். அவ்வளவு வெள்ளத்தில் மூழ்கியும் அவர் ஒன்றுமே நடக்காததைப் போல் இருப்பதைக் கண்களால் கண்ட ஊர் மக்களுக்கு அவர் சாதாரணமானவர் இல்லை என்று, மகா சித்த புருஷர் என்று தெரிந்தது. இந்நிகழ்ச்சியின் மூலம் சுவாமியின் மகிமை தொடர்ந்து பரவுவதற்கு ஆரம்பித்தது. இந்நிகழ்ச்சி மூலமாகவே சுவாமியை '**ஆற்று சுவாமிகள்**' என்று அழைத்தனர்.*

*அதன் பிறகு ஆற்றுக்குப் பக்கத்திலிருக்கும் சுடுகாட்டுக்கு அருகில் சுவாமிகளுக்காக ஒரு பந்தல் போட்டார்கள். சுமார் மூன்று வருடகாலம் சுவாமி அதிகமாக அங்கு இருந்தார்.*

*1959ஆம் ஆண்டில் பூண்டியில் ஒரு பிரதான சாலைக்கு பக்கத்திலுள்ள ஒரு வீட்டுத் திண்ணை மேல் அமர்ந்து கொண்டார்.*

அவ்வளவுதான்! அப்படி அமர்ந்தவர் 1978ஆம் ஆண்டு மஹாசமாதியடையும் வரை அத்திண்ணையிலிருந்து எழவில்லை. சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள அஜகராவஸ்தா என்றால் என்னவோ அதற்கு சுவாமி நேரடி சாட்சி.

காபி அல்லது தேநீரையோ, பழத்தையோ, பலகாரங்களையோ வாயில் ஊட்டினால் சாப்பிடுவார். அப்படி எத்தனை பேர் எவ்வளவு அளித்தாலும் சாப்பிடுவார். எல்லா உணவும் அவ்வயிற்றில் என்னாகுமோ! அப்படியில்லாமல் ஏதாவது நைவேத்தியத்தை கையில் அளித்தால் அதை அப்படியே வைத்து விடுவார். பிரசாதமாக திருப்பி எவருக்கும் தரமாட்டார். அதனை யாரும் எடுக்கவும் மாட்டார்கள். அப்படி சேர்ந்த நைவேத்தியங்கள் சுவாமி அமர்ந்திருந்த திண்ணை முழுவதும் ஆக்ரமிக்கவே அந்த வராண்டாவில் இருக்கும் மற்றொரு திண்ணை மீது அன்பர்கள் ஸ்ரீ சுவாமியை அமர வைத்தனர். அப்படி இருந்தும் அந்த நைவேத்தியங்கள் நாளுக்கு நாள் சேர்ந்து அந்த வீட்டு வராண்டா முழுவதும் நிறைந்து விடவே அந்த வீட்டு உரிமையாளர் அந்த வீட்டை ஸ்ரீ சுவாமிகளுக்கே கைங்கர்யமாக அளித்தார்கள். ஆனால் சுவாமி மட்டும் அந்த வீட்டினுள் எப்போதும் அடியெடுத்து வைக்கவில்லை. அந்த திண்ணையை விடவில்லை. அப்படி அந்த மூன்றடி அகலம், ஆறடி நீளம் உள்ள அந்த திண்ணையே ஸ்ரீ சுவாமிக்கு நிரந்தர வாசமானது. வந்த நைவேத்தியங்களை எல்லாம் அன்பர்கள் அந்த வராண்டாவை அடுத்துள்ள அறையில் போட்டார்கள். அப்படி தினந்தோறும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் சமர்ப்பித்த காணிக்கைகள், பழங்கள், தின்பண்டங்கள் முதலானவை அந்த அறையிலேயே குவியல் குவியலாக வருடக்கணக்கில் குவிந்து கிடக்கும். ஆனால் அதிசயம் என்னவென்றால் அவை வெயிலுக்கு காய்ந்தது போல் காய்ந்து போகுமே தவிர எப்போதும் அழுகி, துர்நாற்றம் வீசாது.

"**இனி படுத்துக் கொள்ளுங்கள் சுவாமி**" என்று நேரத்திற்கு அன்பர்கள் படுக்க வைத்தால் படுத்துக் கொள்வார். மீண்டும் எழுந்து அமர்வதும் அப்படியே! மேலும் காலைக்கடன்கள் எல்லாம்

அங்கேயே கைக்குழந்தைக்குச் செய்வதைப் போல் பக்தர்களே தினந்தோறும் சுத்தப்படுத்துவார்கள். யாராவது பேசினால் பேசுவார். ஏதாவது கேட்டால் சுருக்கமாக பதில் அளிப்பார். யார் எப்படிக் கேட்டாலும் அப்படியே பதிலும் வரும். அப்படியென்றால் உரிமையோடு கேட்டால் உரிமையாகவும், பயத்தோடு, பக்தியோடு கேட்டால் கம்பீரமாகவும், சுருக்கமாக பதில் அளிப்பார். ஜீவன் முக்தரின் மனம் கண்ணாடி போன்றது என்றும் யார் எந்த எண்ணத்தோடு அவரை அணுகினாலும் அந்த எண்ணமே அவருள் பிரதிபலிக்கும் என்பது சாஸ்திரம். பகவான் இரமண மஹரிஷி போன்ற ஞானிகள் கூறியதற்கு நேரிடையான நிதர்சனம் அவருள் தெளிவாக தெரிகின்றது. அவரைப் பார்த்தால், "**அவதூதகீதையிலும், அஷ்டாவக்ர கீதையிலும்**" சொல்லப்பட்ட அஜகராவஸ்தா இதுதானா என்று தோன்றும் பிரம்ம நிலை அடைந்த பிரம்மவேத்தாவின் சுத்த சத்வகுணம் என்றால், எதுவென்று உள்ளதோ அதெல்லாம் தானே ஆன சுத்த சைதன்ய நிலை தீர்க்க தமசு போன்று என்றால் அஞ்ஞானம், கிரியா சூன்யத்துவம் போல் தென்படும் என்று சாஸ்திரங்கள் இதற்காகவே சொல்லப்பட்டது போலும்.

பிரதான சாலைக்குப் பக்கத்தில் அமர்ந்து இருக்கும் ஸ்ரீ சுவாமியை பார்க்கும்போது ஞானதனத்தை தெருக்களில் குவியலாக கொட்டி வைத்து அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கவே உள்ளாரா? என்று தோன்றுகின்றது. அவரின் தர்பார் எல்லா நேரங்களிலும் திறந்தே இருக்கும். அவருக்கும், பக்தனுக்கும் இடையில் எந்தவிதமான இடைஞ்சலும் தடையும் இல்லை. தினந்தோறும் தரிசனத்திற்காக வரும் நூற்றுக்கணக்கானவர்களில் யார் எதற்காக அவரின் தரிசனத்திற்காக வந்தார்களோ அவரிடமிருந்து அவர்கள் பெற்ற அனுபவங்கள் என்னவோ என்ற தகவல்கள் சேகரிப்பது சாத்தியமில்லை.

ஒரு முறை ஸ்ரீ சாயிபாபா தம் குருவைப்பற்றி சொல்லிக்கொண்டே.... **"பன்னிரெண்டு வருடங்களுக்கு மேல் என் குருவுக்கு ஹிருதயப் பூர்வமாக சேவைகள் புரிந்தேன். அவரின் சேவைக்காக எனக்கு நான் விதித்துக் கொண்ட கடமை மிகவும் கடினமானது. அவர் தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து**

**எந்த தேவைக்காகவும் எழுந்துக் கொள்ள மாட்டார். மல ஜலங்களை கழிப்பதற்கும் கூட! தன்னுள் அந்தநிஷ்டையில் உள்ள அவருக்கு மனசு, தேகம் உள்ளது என்ற விஷயமே நினைவிற்கு வராது. அந்த நிலையில் அவர் உணவு உண்ணுவதும், மலஜலம் கழிப்பதும் அங்கேயே - அவர் அமர்ந்த இடத்திலேயே செய்வார். நான் அவருக்கு உணவு ஊட்டி, அவர் அமர்ந்த இடத்தை துடைத்து சுத்தப்படுத்தி, அவரது உடைகளை மாற்றிச் சேவைகள் புரிந்தேன்...** *என்றார்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமியை பார்க்கும் போது ஸ்ரீ சாயிபாபா தம் குருவை வர்ணித்து கூறியது நினைவிற்கு வராமல் இருக்காது. அதற்குத் தகுந்தாற்போல் ஒரு சாயி பக்தர் ஸ்ரீ சுவாமிக்கு பாபாவின் போட்டோவை காண்பித்தபோது* **“ஸ்ரீ சாயிபாபாவா. அவர் மிகவும் குணவந்தர். பூஜை செய்துக்கோ”** *என்று கூறினார் சுவாமி அன்பு வெளிப்படும் குரலில்.*

*ஸ்ரீ சுவாமிசமாதியடைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு தன்னை நிரந்தரமாக வணங்கும் பக்தர் ஸ்ரீ சுப்பிரமணியத்திடம் தாம் வடக்கே போயி செய்ய வேண்டிய வேலைகளை பூர்த்தி செய்து கொண்டு சொல்ல வேண்டியவர்க்குச் சொல்லி அதன் பிறகு வந்து பூண்டியிலேயே இருந்து விடுவேன் என்று கூறினார். இரண்டு நாட்கள் கழித்து தாம் சொல்ல வேண்டிய பதினெட்டு சித்த புருஷர்களுக்கு சொல்லிவிட்டு வந்தேன் என்று ஸ்ரீ சுப்பிரமணியத்திடமே கூறினாராம். அன்றைக்கு மறுநாள் என்றால் 1978 நவம்பர் 3ந் தேதி காலை ஒன்பது மணிவரை எப்பொழுதும் போல் இருந்த சுவாமிக்கு மூச்சு தொடர்ந்து குறைந்து வந்தது. சுமார் பதினைந்து நிமிடங்கள் கழித்து ஸ்ரீ சுவாமி மிக அமைதியான நிலையில் உடலை விட்டு விட்டார். அதுவரை மழை வருவதற்கான அறிகுறி இல்லை என்றாலும் சுவாமி சமாதியடைந்த சிறிது நேரத்தில் மேகமூட்டம் ஏற்பட்டு கனத்தமழை ஆரம்பித்து மூன்று நாட்கள் இடைவிடாமல் பொழிந்தது. கனத்த மழையால் அந்த மூன்று நாட்களும் சுவாமியின் உடலை சமாதி செய்ய முடியவில்லை. ஆனால் ஸ்ரீ சுவாமிசமாதியான அன்றிரவு ரேடியோவில் அவரது கைவல்யச் செய்தி கேட்டு தொலை தூரத்திலுள்ள அன்பர்கள் கூட*

*பூண்டிக்கு வந்து - அந்த மூன்று நாட்களில் - சுவாமியின் திவ்ய தேகத்தை இறுதியாக தரிசித்துக் கொள்ள முடிந்தது. பிறகு ஸ்ரீ சுவாமியை அவர் அமர்ந்திருந்த திண்ணைக்கு அருகிலுள்ள இடத்தில் சமாதி செய்தார்கள். மூன்று நாட்களாக இருந்தாலும் சுவாமி தேகம் கெடவில்லை. வாசனையும் வரவில்லை. இறுகி போகவில்லை. உயிருடன் இருக்கும்போது எப்படி இருந்தாரோ மூன்று நாட்கள் கழித்தும் அப்படியே ஜீவக்கலை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.*

*1974ல் ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் சன்னதியில் சுமார் ஒரு மாதகாலம் தீட்சை செய்து கொள்ளும் பாக்கியம் எனக்கு (இக்கட்டுரை எழுதியவருக்கு) கிடைத்தது. அதன் பிறகும் எத்தனையோ முறை அவரை தரிசிப்பது நிகழ்ந்தது.*

*திருவண்ணாமலையைச் சுற்றிலும் சுமார் 30 மைல் வட்டத்திற்குள் இருக்கும் பிரதேசத்தை அருணாச்சலதேஜோ மண்டலம் என்றும், அந்த மண்டலத்தில் எப்போதும் யாரோ ஒரு ஜீவன் முக்தர் சதேகத்துடன் இருப்பார்கள் என்று புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது என்று பகவான் இரமண மஹரிஷி கூறினார். இனி இன்றைக்கு அந்த தேஜோமண்டலத்தில் சதேகத்துடன் இருக்கும் முக்தபுருஷர் யாரோ?*

**- ஸ்ரீ சாயிநாதுனி சரத்பாபூஜீ**

இசைச்செல்வம்
பேராசிரியர் வெ.இராமு, எம்.ஏ., எம்.ஃபில்., டிப்இசை சைவ சித.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சண்முகா கலை அறிவியல் கல்லூரி, திருவண்ணாமலை.

# அணிந்துரை

*தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்*
*தன்னை யறியும் அறிவை அறிந்தபின்*
*தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே*

*(திருமந்திரம்: 2315)*

என்ற திருமந்திர வாக்கின்படி, தன்னையறிந்த தத்துவஞானியாய், தரணியை ஆளும் தனிப்பெருந் தலைவனாய், பூண்டி என்கிற புனிதபூமியில் திண்ணையில் அமர்ந்து நாடிவந்த மக்கட்கு அருளையும் பொருளையும் வரையாது வழங்கிய வள்ளலாய் விளங்கியவர் ஸ்ரீ பூண்டி மகான். இகபர சௌபாக்கியம் அருளிய அம்மகானை கண்களால் கண்டுகளித்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உரையாடிய, உறவாடிய உள்ளங்களைத் தேடிப் பிடித்து, நாடிச்சென்று நேர்காணல் செய்து அளப்பரிய அனுபவங்களை பதிவுசெய்து நூல்வடிவம் தந்துள்ள இந்நூலாசிரியர் திருமிகு குணசேகரன் பல்லாயிரம் ஆண்டுகள் தவம் செய்தவரே!

இந்நூலை படித்துப்பார்ப்பின் அகமும் புறமும் தூய்மை உறுவதை அறியலாம். அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனே என்பார் அருணகிரிநாதர். இடர்களையும் இயற்கை வடிவினனாக அருள்பாலித்தவர் பூண்டிமகான்.

பூண்டி மகானைக் கண்ட கண்கள் அனைத்தும் புனிதம் பெற்றவையே. அவரிடம் ஆசிபெற்றோரும், திருநீறுபெற்றோரும் வாழ்வில் சோடை போகவே இல்லை. மாறாக ஆடை அணிகலனோடு அளப்பரிய பேரினையும் புகழினையும் பெற்று அகமகிழ்வோடு

வாழ்வில் வளம் கண்டார்கள் என்பது இந்நூலின்வழி தெரியலாகும் கண்கண்ட உண்மை.

நேர்காணல்களின் தொகுப்பாகக் காணப்பட்டாலும், இதுகாறும் வெளிவந்த நூல்களைக் காட்டிலும் வேறுபட்டு விளங்குகிறது. இந்நூலை வாசிக்கும்போது, அல்ல, அல்ல சுவாசிக்கும்போது உள்ளம் அன்பின் ஊற்றாக மாறுகிறது. கண்கள் பணிக்கிறது, மெய் சிலிர்க்கிறது பொய் விலகுகிறது, மெய் மிளிர்கிறது. உள்ளம் கள்ளமின்றி களிநடம் புரிகின்றது.

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவு முடிவு இல்லாத ஒன்று வந்து வந்து
தாக்கும் மனோலயந் தானேதரும் எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்லொணாது இந்த ஆனந்தமே
(கந்தரலங்காரம் : 73)

என்ற பாடற்கு இணங்க சொல்லொணா ஆனந்தநிலை தோற்றங் கொள்கிறது. பூண்டி மகான் அருளால் பிறக்கும் பேறுபெற்ற அடியேன் அவரைக் காணும்பேறும், அவர்தம் திருக்கைகளால் பலமுறை திருநீறு அணிந்துகொள்ளும் பேறும் பெற்றேன். சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழு நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே என்பதுபோல், மகானைக் காண நாலாயிரம் கண்களும் போதாது என்ற உண்மையை நேரில் கண்டவர்கள் அனுபவித்திருக்கிறார்கள் என்பதை இந்நூல் சுட்டுகிறது.

களங்கத்தோடு அவரைக் காண வந்தவர்கள் கலக்கமடைந்த உண்மைகளையும் களங்கமின்றி வந்தவர்கள் விளக்கமடைந்த தன்மைகளையும் நூலின்வழி நுகரமுடிகிறது. குருவிக்காரன் முதல் கோட்டீஸ்வரன்வரை, எழுத்தர் முதல் பிரதம மந்திரிவரை அனைத்துத் தரப்பினரும் அணைந்து வந்து அருள்பெற்ற செய்தியை நூலின்வழி அறியும்போது கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாகவும் நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாகவும் விளங்கியுள்ளார் சுவாமிகள் என்பதை உணரமுடிகிறது.

இந் நூலினை படைக்கும்பேறு கிட்டவில்லை எனினும் படைப்பாசிரியர் குணசேகரன் அவர்கட்கு அணிந்துரை வழங்கும் பேற்றினை எமக்கு நல்கிய பூண்டியின் கருணை அளவிடற்கரியதே.

சீரடி சாய்பாபாவின் பூரண அருள்பெற்ற புனிதரும் இந்நூலாசிரியருமான குணசேகரன் அவர்கள் பூண்டி அய்யாவிடம் அளவிலாக் காதலும் ஆரா அன்பும் உடைய எளியவர் இனியவர்.

சுடுகாட்டைக் கோயிலாகவும், புலித்தோலை ஆடையாகவும் அணிந்து தாயுமில்லாமல் தந்தையுமில்லாமல் தோன்றிய தனிப்பெருந் தலைவனாம் சிவனைப்போல ஊரிலாது, பேரிலாது, பெற்றோரிலாது, பூமிக்கு வந்து பூண்டியில் அமர்ந்து மனிதத்தையும் புனிதத்தையும் வளர்த்தவர் பூண்டி சுவாமிகள்.

பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து இட்ட பிச்சை எல்லாம்
நாய் போல் அருந்தி நரிபோல் உழன்று நன் மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மை சொல்லிச்
சேய்போல் இருப்பர்கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே

என்ற பட்டினத்தடிகளின் பாடற் கருத்திற்கு முழு உதாரணப் புரு ராய் சுவாமிகள் எங்ஙனம் விளங்கினார் என்பதற்கு சாட்சியாய் இந்நூல் விளங்குகிறது.

தனக்குள் தன்னைக்கண்டு சுகித்திருப்பவர்க்கு, இந்த உலகில் எவரும் நிகராக முடியாது. பொருளில்லை, மருளில்லை, தெருளில்லை, இருளில்லை. மாசில்லா மனதிற்கு உலகில் கோசமில்லை, மோசமில்லை, நாசமில்லை மேலும் பவமில்லை, அவமில்லை, தவமில்லை, நவமில்லை, கள்ளம் ஒழிந்து தன்னை உள்ளபடியே அறிந்த நிலையில் அமர்ந்திருப்பதால் கதியில்லை, மதியில்லை, சதியில்லை, விதியில்லை என்பதை இந்த அவனிக்கு எடுத்துக்காட்டி இலக்கணமாய்த் திகழ்ந்தவர் சுவாமிகள். வெட்டவெளிதன்னை நிதமென்று இருப்போர்க்குப் பட்டயம் எதற்கு என்று பட்டவர்த்தனமாய் இப்பாருக்குப் பறைசாற்றியவர் பூண்டி மகான்.

சிவனாக, திருமாலாக, முருகனாக மற்றும் இறைவடிவங்களின் பல்லுருவாக காட்சியளித்த பரபிரம்மம் நமது சுவாமிகள் என்பதை

*நூல் நுட்பமாய் உணர்த்துகிறது. உருவமாக, அருவமாக, உள்ளதாக, இல்லாததாக, மணமாக, மலராக, மணியாக, ஒளியாக, கருவாக, உயிராக, கதியாக, விதியாக, குருவாய் வந்து காட்சியளித்தவர் நம் பூண்டி மகான். அவரைப் பற்றி நூல் படைத்திருக்கும் இந்நூலாசிரியர் மேலும் பல சித்தமகாபுரு ர்களின் வரலாறுகளை, அனுபவங்களை நூலாகப் படைத்துத்தர வேண்டும் என்று கோருகிறேன். அவருக்குப் பூண்டி மகானின் பூரண அருளாசிகள் உரித்தாகுக.*

*இந்நூலைப் படிப்போரும், படிக்கப் பக்கம் நின்று கேட்போரும் எண்ணிலா நலமும் வளமும் உரமும் ஊக்கமும் பொன்னும் மணியும் பொருளும் அருளும் இன்பமும் பெறுவர்.*

*பூண்டி மகான் திவ்விய திருவடிகளே சரணம்*

*எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க.*

*பக்தியுடன்*

**வெ. இராமு.**

**கே.சி, தன்சிங், தலைவர்**
**பகவான் ஆற்றுசுவாமி அருள்நெறி இயக்கம்**
**வேலூர் - 632 004**

# அணிந்துரை

*பூண்டி மகான் ஆற்று சுவாமிகளின் பூரண அருள்பெற்ற அருளாளர் நேர்மை மிகு கொடையாளர் குணசேகரன் அவர்கள் ஆக்கியுள்ள அற்புத அருள் நூலான பூரண அவதூதர் பூண்டி சாமியின் பக்தர்களின் நேரடி அனுபவங்கள் என்ற நூலுக்கு*

*சிறப்பு சாற்றுக்கவி*

**வெண்பா**

*பூர ணஅவதூத பூண்டிசாமி யின்பக்த*
*நேர னுபவசம் ஹிதைநூல் - பேறருளும்*
*ஆரமுதாம் சீர்மை குணசேகர் சந்ததியை*
*பார்முழுதும் போற்றும் புகழ்ந்து*

**சற்குரு திருநீறு மகிமை**

*அறிவுபுகழ் கல்விவீரம் ஆயுள் அழகு*
*அறம்துணிவு நோயின்மை செல்வம் - உறவினர்*
*வெற்றிகுலம் மக்கள் நுகர்ச்சிதானி யம்யாவும்*
*ஆற்றுசாமி நீறுதரும் பேறு.*

*இவ்வையகத்தில் மானுடம் வாழ்வாங்கு வாழ்வதற்காக வேண்டி அவ்வப்போது இறைவனே ஆங்காங்கு மானுட உருவில் அவதரித்து நெறிபடுத்தி அருள் பாலிக்கின்றார்கள்.*

*அப்படிப்பட்ட அவதார ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள், ஞானிகள், மகான்கள் என பல பெயர்களால் போற்றப்படுபவர்களில் அண்மையில் நம் கண்ணெதிரில் வாழ்ந்த மகான் சற்குரு ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுாவமிகள்.*

*அவர் ஒரு அதிசய அற்புத ஞானி. முக்காலம் முற்றுணர்ந்தவர்; அவருடைய அற்புதங்களெல்லாம் இந்நூலில் உள்ளே கட்டுரைகளில் சுருக்கமாக எளிய நடையில் மிக தெளிவாக அருளப்பட்டுள்ளது.*

*கட்டுரைகள் சுருக்கமாக இருந்தாலும் மிக தெளிவாக அருள்நெறி பாதையில் போதம்பெற துடிப்புள்ளோர்க்கு உறுதுணையாக இருப்பதை காணலாம். இந்த நூலை வாசிப்பவர் ஞான நிலை உய்வர். மேலும்*

*இந்தநூல் இல்லங்களில் இருந்தால் அந்த இல்லங்களில் சற்குரு ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் அருளாசி பூரணமாய் நிறைந்து எல்லா நலமும் வளமும் பேறுகளும் பெற்று வையமதில் வாழ்வாங்கு வாழ்வார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.*

*அப்படிப்பட்ட பேரருள் அனைவரும் பெற்று உய்ய வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தில் அருளாளர் குணசேகரன் அவர்களால் இந்நூல் வெளிவருவதே சற்குருவின் அருளாசி.*

*சற்குரு ஸ்ரீ சீரடி சாயிபாபா செந்நெறி போற்றி வாழும் செம்மல்; சற்குரு ஸ்ரீ பூண்டி மகான் ஆற்று சுவாமிகள் பொற்பதம் சரணடைந்து வாழும் பேரருளர் அருள்திரு குணசேகரன் அவர்கள்.*

*இந்நூல் வெளிவர கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டு காலமாக அரும்பாடுபட்டு உருவாக்கி இருக்கிறார்கள்.*

*இந்த நூலில் மொத்தம் 108 பேர்களிடம் நேர்காணல் மூலம் கட்டுரைகள் பெற்று வெளியிட்டுள்ளார்கள். இதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சி மிகபெரிது. இதிலுள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் படிக்க படிக்க புத்தகத்தைக்கீழே வைக்கவே மனம் வரவில்லை. புத்தகத்தை படிக்கும்போது ஸ்ரீ பூண்டி மகானே நம் எதிரில் உள்ளதைப்போல் உணர முடிகிறது.*

பக்தியுடன்

**- கே.சி. தன்சிங்**

ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு பூண்டிநாத் மஹராஜ்கீ ஜெய்!



**நேர் காணல்: 1**
**20.06.2005, பூண்டி**

## எத்திராஜன், வயது: 86, பூண்டி.

*என்னுடைய சொந்த ஊர் மேட்டுபாளையம். கடந்த 20 ஆண்டுகளாக பூண்டியில் வசித்து வருகிறேன். குடும்பத்தை நடத்த வளையல் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் வியாபாரத்திற்காக சைக்கிளில் செல்லும் போது பூண்டி சுவாமி ஏதாவது ஓரிடத்தில் எனக்கு தரிசனம் கொடுப்பார். நான் வணக்கம் தெரிவித்தால் பதிலுக்கு ஸ்ரீ சுவாமி வணக்கம் தெரிவிப்பார்.*

*ஸ்ரீ ஆற்றுசுவாமி (ஆற்றில் அமர்ந்து இருந்த காரணத்தால் வந்த பெயர்) கலசபாக்கம் ஆற்றில் ஆனைவாடியான் ஊற்று (ஆனைவாடி என்னும் கிராமத்திற்கு இந்த ஊற்றிலிருந்து தண்ணீர் போகும் காரணத்தால் வந்த பெயர்) மேட்டின் மீது உட்கார்ந்து இருக்கும் போது, தங்கவேலு நயினார் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், ஸ்ரீ சுவாமிக்கு 108 குடம் பால், 108 குடம் தயிருடன் அபிஷேகம் செய்து பூஜை செய்வார். ஸ்ரீ ஆற்று சுவாமி,* **"எனக்கு ஊத்துறீங்களே, யாராவது ஏழைகளுக்கு கொடுக்கலாமே!"** *என்று சொன்னதற்கு,* **"உங்களுக்கு அபிஷேகம் செய்த பிறகு அவர்களுக்கும் கொடுக்க வேண்டியதை கொடுப்பேன்"** *என்று கூறுவார் தங்கவேலு நயினார். அப்படி சில நாட்கள் ஸ்ரீ சுவாமி அவர்களுக்கு பூஜையும் அபிஷேகமும் நடைபெற்றது.*

*ஸ்ரீ ஆற்று சுவாமிகள் கலசபாக்கம் ஆற்றில் அமர்ந்து கொண்டிருக்கும் போது வெள்ளம் வந்தது. தண்ணீர் விலகிச் சென்றதே தவிர சுவாமி அமர்ந்து இருந்த இடத்திற்கு வரவில்லை.*

*ஒரு நாள் என் கனவில் ஸ்ரீ சுவாமியும் நானும் சினிமா பார்த்து விட்டு வருகிறோம். நான்,* **"சினிமா நல்லாயிருக்கா சுவாமி?"** *என்று கேட்டதற்கு,* **"நல்லாயிருக்குடா, இரண்டு டீ சொல்"** *என்று கூறினார். வழியில் இருக்கும் டீக்கடைக்கு சென்று இரண்டு டீ வாங்கிக்*

கொண்டு வருவதற்குள் விழிப்பு வந்து விட்டது. இரண்டு நாள் கழித்து இரண்டு டீ வாங்கிச் சென்று ஸ்ரீ சுவாமியை தரிசித்து ஒரு டீயை கொடுத்தேன். மற்றொன்றை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி அவர்களுக்கு கொடுத்தேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பக்தர்கள் காணிக்கைகள் கொடுக்கும் போது சிலரிடம் வாங்கிக் கொள்வார். சிலரிடம் வாங்கமாட்டார். வேறு யாரையும் தொடவிடமாட்டார். ''**எனக்காக வைத்ததை அங்கேயே விட்டுவிடு, அதை எடுக்காதே**" என்று கூறுவார்.

போளூரிலிருந்து ஒரு பக்தர் வருவார். அவர் பெயர் மக்கு கவுண்டர். தினந்தோறும் பூண்டிக்கு வந்து ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து செல்வார். மக்கு கவுண்டர் கை விரலில் மோதிரம் அணிந்திருந்தார். ஒரு நாள் ஸ்ரீ சுவாமியை வணங்கும் நேரத்தில், "**நீ மட்டும் மோதிரம் போட்டிருக்கிறாயே! எனக்கும் ஒரு மோதிரம் கொடு**", என்று கூறியவாறு கையை காட்டினார். உடனே மக்கு கவுண்டர் விரலில் இருக்கும் மோதிரத்தை கழட்டி, ஸ்ரீ சுவாமி அவர்களின் விரலுக்கு அணிவித்து, "**உங்களுக்கு இல்லாத மோதிரம் எனக்கு எதுக்கு சுவாமி!**" என்று கூறி விட்டு போளூர் சென்றுவிட்டார். அங்கே பொழுது போக்கிற்காக நண்பர்கள் ஒன்று கூடும் இடத்திற்கு சென்றார். அங்கே ஸ்ரீ பூண்டி சுவாமி உட்கார்ந்து இருப்பதை கண்டு "**சுவாமி, உங்களை இப்பொழுது தான் பூண்டியில் தரிசித்து விட்டு வந்தேன். அதற்குள் இங்கு வந்து உட்கார்ந்து இருக்கிறீர்களே?**'' என்று அதிசயித்து கூறினார். ''**ஆமாம்பா! இந்த மோதிரம் எனது கிடையாது. உன்கிட்ட இருந்து வாங்கினேன். இது எங்க சேரணுமோ அது அங்கு சேரணும். அதற்காக இந்த மோதிரத்தை உன்கிட்ட கொடுத்து விட்டு போகலாம் என்று வந்தேன். உன் மோதிரம் வாங்கிக்கொள்,**" என்று கூறி ஸ்ரீ சுவாமி மோதிரத்தை மக்கு கவுண்டர் கையில் கொடுத்து விட்டு, ''**இந்த மோதிரம் அணிந்திருந்தால், அங்கு என்னை குளிக்க வைத்து சுத்தம் செய்பவர்கள், உங்களுக்கு எதற்கு மோதிரம் என்று கூறி எடுத்துச் செல்வார்கள். எனக்கும் கிடைக்காது, உனக்கும் கிடைக்காது. எனவே, இந்த மோதிரத்தைக் கொடுத்துவிட்டுச் செல்ல வந்தேன்,**" என்று கூறினார். மக்கு கவுண்டர் ஸ்ரீ சுவாமிக்குத் துணையாக பூண்டிக்கு வருவேன் என்று வேண்டிய

பொழுது, சுவாமி, "**நான் வந்த வழியிலேயே செல்கிறேன். நான் எப்படி வந்தேனோ அப்படியே திரும்பிச் செல்வேன். எனக்குத் துணை தேவையில்லையப்பா!**" என்று கூறினார். எவ்வளவு வேண்டியும் ஸ்ரீ சுவாமி அங்கீகரிக்கவில்லை. "**நான் எப்படி செல்லவேண்டுமோ அப்படிச் செல்கிறேன். அங்கே அவர்கள் பூஜை ஆரம்பிப்பதற்குள் நான் அங்கே செல்ல வேண்டும். இல்லையென்றால் பூஜை எப்படி செய்வார்கள்,**" என்று கூறிக்கொண்டே அங்கே இருப்பவர்களில் கலந்து மறைந்து விட்டார். மக்கு கவுண்டர் எவ்வளவு நேரம் தேடியும் ஸ்ரீ சுவாமி அவர்கள் தென்படவில்லை. மக்கு கவுண்டர் மறுநாள் பூண்டிக்கு வந்து நடந்ததை எல்லாம் அன்பர்களுக்கு கூறியபொழுது, பூண்டியில் இருக்கும் அன்பர்கள் ஸ்ரீ சுவாமி அவர்கள் முன்தினம் இங்கே இருந்தார் என்றும், வெளியே செல்லவில்லை என்றும் சொன்னார்கள். மக்கு கவுண்டர் ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து கொண்டு எல்லாம் ஸ்ரீ சுவாமியின் திருவிளையாடல் என்று உணர்ந்து மெய் மறந்து, பிறகு புறப்பட்டுச் சென்று விட்டார்.





ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு ஆரத்தி அளிக்கும் சுப்பிரமணிய சுவாமி

**நேர் காணல்: 2**
**21.06.2005, பூண்டி**

**ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி** (பிரதான சீடர்), வயது: 82, பூண்டி.

*நான் ஜவுளி வியாபாரம் செய்துகொண்டு தையல்வேலையும் செய்து கொண்டிருந்தேன். ஸ்ரீசுவாமி நடமாடிக் கொண்டிருந்த காலத்திலிருந்து எனக்குத் தெரியும். ஸ்ரீசுவாமியின் பெற்றோர் மற்றும் ஊர் பெயர் எதுவும் யாருக்கும் தெரியாது. எப்போதும் எவரிடமும் கூறவில்லை. அன்ன ஆகாரமும், தாகத்திற்கு தண்ணீரும் எவரிடமும் கேட்டதில்லை. ஸ்ரீசுவாமியை மகானாக அறிந்த சிலர் சாப்பாட்டு நேரத்திற்கு உணவு எடுத்துச் சென்று ஊட்டுவார்கள். வழியில் தென்படும்பொழுது சுவாமியை அறிந்தவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு ஊட்டுவார்கள்.*

*ஸ்ரீசுவாமி கலசபாக்கம் ஆற்றில் அமர்ந்து இருந்தபொழுது திடீரென பெய்த மழையால் ஆற்றில் வெள்ளம் வந்தது. ஸ்ரீசுவாமி ஆற்று வெள்ளத்தில் அடித்துச் சென்றிருப்பார் என்று ஊர் மக்கள் நினைத்தனர். வெள்ளம் வடிந்தபின்பு சுவாமி அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்று பார்த்தபோது தலைமுடி தென்பட்டது. எல்லோரும் சேர்ந்து மணலை அப்புறப்படுத்திப் பார்த்தபோது அனைவரும் வியப்படையுமாறு, ஸ்ரீசுவாமி நித்திரையிலிருந்து எழுந்து செல்வது போல் எழுந்துச் சென்றார். அதுவரை அவரை பைத்தியமாக நினைத்து இருந்த சுற்றுவட்டார கிராம மக்கள், ஊர் பெயர் தெரியாத பெரிய மகான் என்று அறிந்தனர்.*

*ஒரு பக்தை பூண்டி மகானை தரிசனம் செய்வதற்காக சென்னையிலிருந்து புறப்பட்டு வரும் வழியில் திருடர்கள் அவரை பயமுறுத்தி தங்க நகைகளை அபகரித்துக் கொண்டனர். கலசபாக்கம் ஆற்றில் சுவாமி வீற்றிருக்கும் இடத்திற்குச் சென்று சுவாமியை தரிசனம் செய்து விட்டு நடந்தவற்றை மனவருத்தத்துடன் கூறி அழுதார். சுவாமிகள் அவர்மேல் கருணை கொண்டு கலசபாக்கம்*

*மாணிக்க நயினார் வீட்டிற்குச் சென்று ஒரு இரும்பு துண்டு வாங்கி வருமாறு அனுப்பினார். அவரும் மாணிக்க நயினார் வீட்டிற்குச் சென்று கம்பி வாங்கிக் கொண்டுவந்து சுவாமிகள் கையில் கொடுத்தார்கள். ஸ்ரீசுவாமி கையிலிருந்த இரும்புத் துண்டின் மேல் அருட்பார்வை பட்டவுடன் தங்கமாக மாறி விட்டது.* **"இந்தா! இத வச்சிகினு பிழைச்சுக்கோ,"** *என்று கூறி அந்த அம்மையாரிடம் கொடுத்தார். அந்த அம்மையார் சுவாமியின் ஆசிகளைப் பெற்று சென்று விட்டார். ஆனால் இதையெல்லாம் மறைந்திருந்து பார்த்த மாணிக்க நயினார், தனக்கும் தங்கமாக மாற்றித் தரும்படி வற்புறுத்தினார். ஸ்ரீசுவாமி* **"தங்கம் வேண்டினால் பங்கம் ஆயிடுவாய்,"** *என்று கூறினாலும் மூடர்கள் கேட்காமல் மேன்மேலும் பலவந்தம் செய்தார்கள். ஸ்ரீசுவாமி தங்கம் செய்து தரவில்லை என்ற கோபத்தில் மல்லவாடி காட்டிற்கு அழைத்துச்சென்று புண்படுத்தினார்கள். கைகளை காயப்படுத்தினார்கள். (அந்த சமயத்தில் நரிகள் ஊளையிட்டதாகவும், புலி உறுமியதாகவும் மயில்கள் குத்துவதற்கு வந்ததாகவும், இயற்கையே பயமுறுத்தி அவர்கள் பயந்து ஓடிப்போனதாக பலர் பல்வேறு கருத்துக்களை கூறுகின்றனர்). இரத்தம் சிந்துகின்ற கைகளுடன் நடுநிசியில் ஸ்ரீசுவாமிகள் பூண்டியில் டமாக்கு செட்டியார் மளிகைக்கடை அருகில் வந்தார். அந்த சமயத்தில் சுவாமியின் கைகளை பார்த்த டமாக்கு செட்டியார் பயந்து ஓடிவந்து என்னிடம் விஷயத்தைக் கூறினார். நான் சென்று* **''என்ன சுவாமி! கையெல்லாம் இரத்தமாய் இருக்கிறதே?''** *என்று கேட்டதற்கு,* **''ஆமாம், ஆமாம். அங்கே கையெல்லாம் காயங்கள் ஆனது"** *என்று கூறினார். அதற்கு மேல் எதுவும் கூறாமல் மௌனமாய் இருந்து விட்டார். நான் ஸ்ரீசுவாமியின் கைகளை சுத்தம் செய்து மருந்து வைத்துக் கட்டுக்கட்டினேன். அதன் பிறகு பூண்டியிலேயே இருந்துவிட்டார். கலசபாக்கம் வருமாறு அன்பர்கள் எத்தனையோ பேர் கேட்டுக்கொண்டாலும் ஸ்ரீசுவாமிகள் அங்கீகரிக்கவில்லை. ஸ்ரீசுவாமியை துன்புறுத்தியவர்கள் குடும்பத்தில் பெயர் சொல்ல எவரும் இல்லை. அழிந்து போனதாகக் கூறுகிறார்கள்.*

*சுவாமிகள் பூண்டியில் ஒரு வீட்டின் திண்ணை மேல் அமர்ந்த சில நாட்கள் கழித்து ஒரு தைப்பொங்கலன்று புதிய ஆடைகளைக் கொண்டு சென்று, அளித்து, பூமாலையை சுவாமியின் கழுத்தில் அலங்கரித்து தீபம் ஏற்றி வைத்து, பாதங்களை தொட்டு வணங்கி நின்றுகொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி,* **“என்ன, வேணும் சொல்லுப்பா!”** *என்று கேட்டார். நான் பேசாமல் மவுனமாய் நின்று கொண்டிருந்தேன். இரண்டாவது முறை கேட்டதற்கும் நான் பேசவில்லை. மூன்றாவது முறை கேட்டதற்கு,* **“சுவாமி! உங்களை விட்டுப் பிரியாமலிருக்க வரம் வேண்டும்”** *என்று கேட்டேன். எந்த ஜென்மத்தின் பந்தமோ என்னை அப்படிக் கேட்கச் செய்தது. ஸ்ரீசுவாமிகள் பரிபூரண அருள் வழங்கினார். அப்போதிலிருந்து சுவாமிகளுக்கு நெருக்கமானேன். பக்தி, அன்புடன் சேவைகள் செய்யத் தொடங்கினேன். விடியற் காலையில் எழுந்ததிலிருந்து கைக்குழந்தைக்கு செய்வது போல் மல ஜலங்களை நீக்கி சுத்தப்படுத்தி, குளியல் செய்வித்து, உடைகளை மாற்றி, அவரைச் சுற்றியிருக்கும் இடத்தை சுத்தப்படுத்தி, அவரை அலங்கரித்து பூஜை செய்து, தீபாராதனை செய்து பக்தர்களின் தரிசனத்திற்காக ஏற்பாடுகள் செய்து வேளைக்கு உணவூட்டி இரவு படுக்க வைத்து, குறிப்பாக சுவாமிகள் மஹாசமாதி ஆகும் வரை தினந்தோறும் நெருக்கமாக சேவை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மஹாசமாதி அடைந்த பிறகு கோவில் கட்டி சுவாமியின் உருவச்சிலை வைத்து தினந்தோறும் பூஜை, அபிஷேகங்கள் செய்து நைவேத்தியம் சமர்ப்பித்துக் கொண்டு சுவாமியின் சேவையில் நிரந்தரமாக அவர் நினைவில் இருக்கும்படி வரம் கொடுத்தார்.*

*சுவாமியின் திவ்ய சன்னதியில் ஒவ்வொரு நிமிடமும் எனக்கு பல அனுபவங்கள் ஏற்பட்டன. எங்கள் கிராமத்திலிருந்து சிலர் திருப்பதிக்குப் புறப்பட்டனர். நான் சுவாமிகளிடம்,* **“சுவாமி, நான் வருடந்தோறும் கிராம மக்களுடன் சேர்ந்து திருப்பதிக்குச் சென்று வருவேன். அனைவரும் புறப்பட்டுச்செல்கிறார்கள். ஆயினும் நான் செல்ல முடியவில்லை,”** *என்று மனவருத்தத்துடன் கூறினேன். “நீ*

**செல்லவேண்டிய தேவையில்லை. இருடா!"** என்று சுவாமிகள் கூறினார். நான் திருப்பதிக்குச் செல்ல முடியாத மன வருத்தத்துடன் அன்றிரவு சுவாமிகளின் திண்ணைக்கு பக்கத்தில் படுத்துக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி, வெங்கடேச பெருமாளாகக் காட்டி, "**அங்கேயும் நான்தான், இங்கேயும் நான்தான். எல்லாம் ஒன்றே,"** என்று கூறி அனைத்து தெய்வ உருவங்களும் தானே என்று உணர்த்தினார்.

திருவண்ணாமலையில் அருணாச்சலேஸ்வரர் ஆலயத் திருவிழாவிற்கு ஒவ்வொரு வருடமும் பூண்டியிலிருந்து மக்கள் செல்வார்கள். உற்சவமூர்த்திகளின் வீதிஉலா இரவில் நடைபெறும். நான் சுவாமிகளின் சன்னதிக்கு சென்று, "**சுவாமி, அனைவரும் திருவிழாவிற்குச் செல்கின்றனர். நானும் சென்று வரலாமா?"** என்று பணிவுடன் கேட்டேன். "**நீ போனா இங்க யார் இருப்பார்கள்"** என்று சொல்லி ஸ்ரீசுவாமிகள், "**உனக்கு தேவையில்லைடா, இங்கேயே படுத்துக்க,"** என்று ஆணையிட்டார். ஸ்ரீசுவாமிகளை எதிர்த்து பதில் பேசாமல் நின்று விட்டேன். வழக்கம் போல் அன்றிரவு திண்ணைக்கருகில் படுத்துக் கொண்டேன். ஸ்ரீசுவாமிகள் என்னை அவர் தோள் மேல் சிறு குழந்தைகளை அமர வைத்துக் கொள்வது போல் எடுத்துக் கொண்டு திருவிழாவிற்குச் சென்றார். அந்தத் திருவிழாவிற்குச் சென்ற கிராம அன்பர்கள், பூண்டி சுவாமிகள் என்னை தோள் மேல் அமரச் செய்து திருவிழாவை காண்பிக்கும் நிகழ்ச்சியை பார்த்து வியந்து நின்றனர். என்னை அப்படியே அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்கும் தூக்கிக் கொண்டு சென்றார். அங்கேயும் சில அன்பர்கள் பார்த்து வாயடைத்து நின்றனர். எனக்கு எல்லாம் கனவில் பார்ப்பது போல் இருந்தது. கடைசியில், "**வாடா போகலாம்"** என்று கூறினார். நான் அனைத்தையும் நேரடியாக கண்டது போல் உணர்ந்தேன். மறுநாள், அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திலும் மற்றும் திருவிழாவிலும் சுவாமிகள் என்னை தோள் மேல் அமர வைத்து உலா வந்ததை பார்த்தவர்கள் என்னிடம் கூறினார்கள். எனக்கு உடலும் மெய்யும் சிலிர்த்துப் போனது. ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் அற்புதங்களை வார்த்தைகளால் கூற முடியாது.

ஒரு நாள் இரவு நான் ஸ்ரீ பூண்டி சுவாமி அருகில் தூங்கிக்கொண்டிருக்கும்போது நடு இரவில் விழிப்பு வந்து எழுந்து பார்த்தேன். சுவாமியைக் கொலை செய்தது போல் உறுப்புகள் தனித்தனியாக துண்டிக்கப்பட்டுக் கிடந்தன. "**சுவாமியை கொன்றுவிட்டார்களே**'', என்று நினைத்து பயந்து நடுங்கினேன். ஸ்ரீபூண்டிசுவாமி வழக்கம்போல் திண்ணை மேல் அமர்ந்து தரிசனம் அளித்தார். கண்டயோகம் செய்ததாக அறிந்து மனம் அமைதியடைந்தேன்.

ஸ்ரீசுவாமி அவர்களுக்கு அன்பர்கள் புதிய சட்டையை தைத்துக் கொண்டு வந்து போட்டுக் கொள்ளுமாறு வேண்டியபொழுது ஏற்கனவே இருந்த சட்டையின் மேல் அணிந்து கொண்டார். பழைய சட்டைகளை அகற்றுவதில்லை. ஒரு சட்டை மேல் மற்ற சட்டைகளைப் போட்ட காரணத்தால் உடலோடு ஒட்டிக்கொண்டது. நான் சுவாமிகளிடம், "**சுவாமி, சட்டைகளையெல்லாம் கத்தரித்து அகற்றட்டுமா,**" என்று பணிவுடன் கேட்டதற்கு, "**இருக்கட்டும் இரண்டு நாளைக்குப் பிறகு பார்க்கலாம்,**" என்று கூறுவார். சிலநாள் கழித்து என் வேண்டுகோளை ஏற்று அங்கீகரித்தார். கத்தரிக்கோலால் சிறது சிறிதாக கத்தரித்து எடுக்கும் நேரத்தில் சட்டையோடு ஒட்டிக் கொண்டிருந்த தோலும் கூடவே வந்துவிட்டது. உள்ளே இருந்த எலும்புகள் தென்பட்டன. நான் உணர்விழந்து சுவமிகளின் மேல் சாய்ந்து விட்டேன். சிறிதுநேரம் கழித்து எனக்கு உணர்வு வந்தபிறகு சுவாமியின் உடலைப்பார்க்கும் போது காயமான சுவடு கொஞ்சம் கூட தெரியவில்லை. அனைத்துச் சட்டைகளையும் கத்தரித்து எடுக்க மூன்றிலிருந்து நான்கு நாட்கள் ஆனது.

ஸ்ரீசுவாமிகள் திண்ணை மேல் அமர்ந்திருந்த போது ஒரு கையை திண்ணைமேல் சிலநாட்கள் ஊன்றி வைத்திருந்தார். எத்தனை நாட்களாக கையை அசைக்காமல் வைத்திருந்தார் என்பது தெரியாது. உள்ளங்கையில் இருந்த தோல் திண்ணையோடு ஒட்டிக் கொண்டது. ஸ்ரீசுவாமியை வேண்டிக்கொண்டு கையை பலமாக மேலே இழுத்தோம். உள்ளங்கை தோல் திண்ணையோடு ஒட்டிக்

கொண்டு கையில் இரத்தக்காயம் ஆனது. சிலநாட்களில் காயம் ஆறிப்போனது.

ஸ்ரீசுவாமி அவர்களை திண்ணைமேல் படுக்கவைத்து நான் கீழே படுத்துக் கொள்வேன். ஸ்ரீசுவாமி வெளியில் செல்லும்போது திண்ணை மேல் வேறு ஓர் உருவம் எடுத்து இருப்பார். அந்த சமயங்களில் எத்தனையோ விதமான உருவங்களில் தரிசனம் அளிப்பார். ஒரு சிறுத்தைப் புலி உருவத்தில் தென்பட்டபோது நான் கையெடுத்து வணங்கி, **"எதற்கய்யா என்னை சோதிக்கிறீர்கள்?"** என்று நினைத்தேன். உடனே புலி உருவம் மறைந்து ஸ்ரீசுவாமிகள் காட்சி தந்தார். பிறகு உட்காரவைத்து பூஜை செய்தேன். அப்படி ஒரு நாள் ஈஸ்வரனாக கூட தரிசனம் அளித்தார்.

ஸ்ரீசுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கருகில் ஒரு டீக்கடை இருந்தது. அந்த டீக்கடை முதலாளி விடியற்காலையில் முதலில் போட்ட டீயை சுவாமிகளுக்கு அளித்துவிட்டு தன் வியாபாரத்தை தொடங்குவார். அவர் டீ கொண்டு வந்து வெளியில் நின்று சுவாமீ! என்று குரல் கொடுத்து, அனுமதி கிடைத்த பிறகு திரையை விலக்கி உள்ளே சென்று டீயைக் கொடுப்பார். ஒரு நாள் சுவாமியின் அனுமதி பெறாமல் உள்ளே நுழைந்த போது அதிர்ச்சியுற்றார். திண்ணைமேல் ஸ்ரீசுவாமிகள் இருந்த இடத்தில் ஒரு மலைப்பாம்பு படுத்து இருந்தது. டீ டம்ளரை கீழே போட்டுவிட்டு பயந்து போய் கத்திக் கொண்டே பின்னோக்கி ஓடிச்சென்று விட்டார். அதற்குள் நான் எழுந்து செய்தி அறிந்தேன். அந்த டீக்கடைக்காரர் நன்றாக பயந்ததால் காய்ச்சல் கண்டு படுக்கையானார். அதன் பிறகு ஸ்ரீ பூண்டிசுவாமிகளிடம் சொன்ன போது அவரை அழைத்து வருமாறு கூறி திருநீறு வைத்து, **"உள்ளே வருவதற்கு முன் அனுமதியில்லாமல் வரவேண்டாம்,"** என்று கூறி அனுப்பி வைத்தார். அதன் பிறகு அவருக்கு உடல் நலம் சரியானது.

ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்து அருள் பாலித்த இடம் எப்போதும் பக்தர்கள் நிறைந்து காணப்பட்டது. செல்வந்தர்கள், ஏழைகள் அனைவரும் சமமே. ஜாதி, மத பேதம் கிடையாது. கூலிவேலை செய்பவர்கள் சுவாமியின் தரிசனத்திற்கு வரும்போது

அன்புடன் காலணா, அரையணா காணிக்கையாக அளித்தபோது அன்புடன் கையில் வாங்கிக் கொண்டு இறுக்கமாக வைத்துக் கொள்வார். செல்வந்தர்கள் 50, 100 ரூபாய் நோட்டுகள் கொடுத்தாலும் அதை பின்னால் இருக்கும் அறையில் வீசி எறிவார். கடைசியில் அதையெல்லாம் நிலத்தில் பள்ளம் தோண்டி மூடிவிட்டனர்.

விஸ்வநாதன் என்பவர் சென்னையில் வருவாய்த்துறை அதிகாரியாக பணிபுரிந்து கொண்டிருந்தார். அவருக்கு நெற்றியில் பெரிய புறைக்குவியல் (பொறக்கோயில்) இருந்தது. மருத்துவர்கள் பரிசோதித்து ஆபரேஷன் செய்யக் கூடாது என்றும், செய்தால் உயிருக்கு அபாயம் என்றும் கூறினர். அமெரிக்காவுக்குச் சென்றும் குணமாகவில்லை. சினிமா நடிகர் S.V.சுப்பையா அவர்கள் விஸ்வநாதனை பூண்டிக்கு அழைத்து வந்தார். விஸ்வநாதன் அவர்கள், ஸ்ரீ பூண்டி மகான் பாதங்களில் வீழ்ந்து வணங்கி பக்தியுடன் தன்னை குணமாக்கும்படி வேண்டிக்கொண்டார். **"எதுவும் அவசியம் இல்லைப்பா,"** என்று கூறி விபூதி வைத்து கட்டிமேல் பூசினார். ஸ்ரீசுவாமிகளை மூன்று முறை வந்து தரிசனம் செய்து சுவாமிகள் விபூதி வைத்த பிறகு முழுவதும் குணமடைந்து விட்டது. விஸ்வநாதன் ஸ்ரீ பூண்டி மகானை வணங்கி, **''என் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்"** என்று கேட்டார். **"எனக்கு எதுவும் வேண்டாம். பக்கத்தில் இருக்கிற நிலத்திற்கு பட்டாப் போட்டுக் கொடுங்க,"** என்று சுவாமி கூறினார். உடனே விஸ்வநாதன் மாவட்ட ஆட்சியரை அழைத்து வரச்செய்து, பூண்டி மகான் பெயரில் பட்டா வாங்கிக் கொடுத்தார்.

பக்கத்து கிராமத்தில் ஒருவருக்கு பாம்பு கடித்தது. மருத்துவ சிகிச்சையும் பலன் அளிக்கவில்லை. கடைசியில் ஸ்ரீசுவாமி இடத்திற்கு வந்து, **"சுவாமி பாம்பு கடித்து விட்டது. அவர் பிழைப்பாரா? இல்லையா?"** என்று கேட்டனர். **"அதை வாளால் அறுத்து விட்டனர். கோடாலியால் நறுக்கிட்டாங்க, போங்கப்பா"** என்று சுவாமிகள் கூறினார். உடனே சென்று பார்த்தபோது அந்த மனிதர் இறந்து விட்டதாகத் தெரிந்தது.

*ஒரு பக்தை ஸ்ரீ பூண்டி மகானின் தரிசனத்திற்காக வருவார். அவர் பெயர் மார்க்கம்மா. அவருக்கு குழந்தை பிறந்த மூன்றாம் நாள் குழந்தையைத் தேள் கடித்தது. குழந்தை இறந்து விட்டது என்று அனைவரும் கண்ணீர் விட்டனர். இரவு 10 மணிக்கு அவரின் பெரிய பெண் அந்த குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து,* **“சுவாமி, இதோ குழந்தை செத்துவிட்டது,”** *என்று வேதனையுடன் மடியில் இட்டார்.* **“போட்டுவிட்டு போம்மா, இருக்கட்டும்,”** *என்று கூறினார். பூண்டி மகான். இரவு 12 மணிக்கு குழந்தை மேல் பார்வையை திருப்பினார். குழந்தையின் அழுகுரல் கேட்டது.* **“இனி எடுத்துகிட்டு போங்க, உயிர் வந்து விட்டது. பயமில்லை,”** *என்று கூறினார் பூண்டி மகான். எங்கும் வியாபித்திருக்கும் சுவாமிகளை பரவசத்துடன் வணங்கி, கைக்குழந்தையை எடுத்துச்சென்றனர்.*

*பக்கத்து கிராமத்தில் நரிக்குறவர்கள் கூடாரம் அமைத்து தங்கினர். ஒரு பெண்மணி பிரசவ வேதனையால் அவதிபட்டுக் கொண்டிருந்தார். அவளின் கணவர் வைத்திய சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல தெரிந்தவர்களிடம் பணம் கேட்டு முயற்சித்தும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் அவருக்குத் திண்ணை மேல் அமர்ந்திருக்கும் பூண்டிமகான் அபயம் அளிக்கும் கடவுள் போல் தென்பட்டார். உடனே அருகில் போய்,* **“சுவாமி, எல்லா இடங்களிலும் முயற்சித்தேன். எங்கேயும் பணம் கடனாக கிடைக்கவில்லை,”** *என்று பணிவுடன் கூறினார். ஸ்ரீ பூண்டி மகான்,* **“இங்கேவா,”** *என்று அருகில் அழைத்து கையில் விபூதி அளித்து* **“எடுத்துச் சென்று வயிற்றின் மேல் பூசு, எல்லாம் நன்றாக ஆயிடும்,''** *என்று ஆசீர்வதித்தார். வீட்டிற்குச் செல்வதற்குள் சுவாமி கையில் வீபூதி கொடுத்த நேரத்தில் இங்கே பிரசவம் முடிந்து விட்டது. மனதில் சுவாமிக்கு வணக்கத்தை தெரிவித்து விபூதி பூசி ஆனந்தத்துடன் திரும்பி வந்து கூறினார்.*

*எங்கள் ஊரில் ஒருவர் இரவு நேரத்தில் ஆறு பசுமாடுகளை திருட்டுத்தனமாக ஓட்டிக் கொண்டு சென்று விட்டார். அதில் எங்களுடைய ஒரு பசுமாடும் இருந்தது. நான் பூண்டி மகானிடம் சென்று,* **‘‘சுவாமி, இரவு திருடர்கள் பசுமாடுகளை திருடிச் சென்றுவிட்டனர்,’’** *என்று சொன்னேன்.* **“எங்கும் போகலை.**

**பென்னாத்தூர் அருகில் இருக்கு. போய் பாருங்க,"** என்று சுவாமிகள் கூறினார். எல்லோரும் சேர்ந்து அந்த இடத்திற்குச் சென்றோம். பசுமாடுகள் தென்பட்டன. அந்தத் திருடனை அடித்து பூண்டிக்கு கொண்டு வந்தோம். பிறகு விட்டுவிட்டோம். அவரவர் மாடுகள் அவரவர்களுக்கு கிடைத்தன.

பக்கத்து கிராமத்தில் ஸ்ரீசுயம்பு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கருகிலுள்ள ஆற்றில் தண்ணீர் நிரம்பி செல்லும் போது, ஸ்ரீ சுவாமிகள் அந்த ஆற்றில் இறங்கி நடந்து போகும்போது தண்ணீர் இருகூறாக பிளந்து வழி விட்டு விலகிச் சென்றது. அதை நேரில் கண்ட வேணுநாயுடு என்னிடம் சொன்னார். அந்த சமயத்தில் சுவாமியை பார்ப்பதற்கு பயமாய் இருந்ததாகவும் கூறினார். இது சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் நடந்த திருவிளையாடல்.

எங்கள் கிராமத்தில் உள்ள சிலர் பூண்டி மகான் பெயரில் ஒரு கமிட்டி அமைத்தனர். எனக்கு எதிராக வழக்குமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். மேலும் எனக்கு கடன் கொடுத்தவர்களை தூண்டி விட்டு அவர்கள் மூலமாகவும் வழக்குமன்றத்தில் வழக்கு தொடுக்கச் செய்தனர். நான் வழக்குமன்ற வாய்தாவுக்கு 3 முறை ஆஜர் ஆனேன். கடைசியாக தீர்ப்பு வரும் நேரத்தில் நான் பூண்டி மகானிடம் சென்று நின்றவுடன், **"அந்த ஜட்ஜ் எங்கே வரப்போறார். ஒன்றும் செய்ய மாட்டார். போடா,"** என்று கூறினார். நான் நீதி மன்றத்துக்குச் செல்லவில்லை. நீதி மன்றத்திலிருந்து ஒருவர் வந்து சுவாமியை தரிசனம் செய்துவிட்டு சென்று விட்டார். அந்த வழக்கும் ரத்தாகிவிட்டது.

ஒருமுறை ஸ்ரீபூண்டி மகான், **"9ம் நெம்பர் பூட்டு, 11ம் நெம்பர் சாவி எல்லா பொறுப்பும் என்னிடம் ஒப்படைத்தார்கள். பார்த்து பார்த்து என்னால் முடியாம எல்லாத்தையும் கொடுத்து விட்டு வந்துவிட்டேன்,"** என்று கூறினார். எனக்கு புரியவில்லை. திரும்பவும் கேட்டதற்கு சுவாமிகள் சென்னைக்கு அருகிலிருக்கும் திருப்போரூர் மடாதிபதியிடம் மேனேஜராகப் பணிபுரிந்தார் என்றும், பிடிக்காமல் வந்து விட்டதாகவும் கூறினார். சில அன்பர்கள் அந்த மடத்திற்குச் சென்று பதிவேடுகளை பரிசீலித்தபோது 700 அல்லது 800 ஆண்டுகளுக்கு

முன்பு நடந்ததாக சொல்லப்பட்டது என்றாலும் ஆதாரங்கள் கிடைக்கவில்லை.


திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயம் கட்டிய சமயத்தில் அங்கே காடுகள் இருந்ததாகவும் கோவில் மிகச் சிறியதாக இருந்ததாகவும், ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் ஆலய கர்ப்பகிரக கோயிலுக்கு கல் சுமந்ததாகவும் மேலும் சுவாமிகள், **"கல் சுமந்ததற்கு என் தாத்தா ஒரணா கொடுத்தால் பட்டாணியும், கடலையும் வாங்கிச் சாப்பிடுவேன்,"** என்று கூறினார்.

ஸ்ரீ பூண்டி மகான் திண்ணையில் அமர்ந்திருந்த காலத்தில் திரு.சரத்பாபுஜி அவர்கள் வந்து தீட்சை செய்தார். ஸ்ரீசுவாமிகளை வணங்கி திண்ணைக்குப் பக்கத்தில் அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்வார். அந்த சமயத்தில் ஸ்ரீசுவாமி கையை ஆசீர்வதிப்பது போல் அபய அஸ்த்தம் காண்பித்து, **"எல்லாம் நல்லதே நடக்கும்,"** என்று கூறுவார். அப்படி பலமுறை ஆசீர்வதித்தார். ஸ்ரீசுவாமிகள் அவருக்கு பரிபூரணமாய் அருள் வழங்கினார். ஸ்ரீ பூண்டி மகான் சமாதியடைந்த பிறகு திரு.சரத்பாபூஜி அவர்கள் பலமுறை நள்ளிரவில் கண்களுக்குத் தெரியாத உருவத்தில் வந்து ஸ்ரீசுவாமியை தரிசனம் செய்துவிட்டு சிறிது நேரம் சுவாமி சமாதியை சுற்றி வருவார். நான் அவரைப் பார்த்தால் ஆரத்தித் தட்டை அவர் கையில் கொடுப்பேன். கோயிலுக்குள்ளே சென்று ஸ்ரீபூண்டி மகானுக்கு தீபாராதனை செய்வார். பிறகு நடந்து கொண்டே வெளிவாசல்வரை தென்படுவார். அதன் பிறகு மாயமாய் மறைந்து விடுவார். அவர் பின்னே சென்று பார்த்தாலும் தென்படமாட்டார். சில நேரங்களில் என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்புவார். சில நேரங்களில் எழுப்ப மாட்டார்.

சென்னையிலிருந்து ஆறுமுகம் என்னும் அன்பர் பூண்டிக்கு வந்து ஸ்ரீபூண்டி மகானின் சமாதியை தரிசனம் செய்து கொண்டு பர்வத மலைக்குச் செல்வார். அவர் என்னிடம் திருமண அழைப்பிதழ் கொடுத்து சுவாமியை கல்யாணத்திற்கு அனுப்பி வையுங்க என்று சொல்லி சுவாமி தரிசனம் செய்து கொண்டு புறப்பட்டுச் சென்று விட்டார். கல்யாண நாளன்று பந்தியில் அனைவரும் உணவருந்தும்

*நேரத்தில் சுவாமிகள் ஒரு பைத்தியம் போல் சென்று காட்சி தந்த போது அவரை அறிந்து, உட்கார வைத்து உணவளித்தனர். வெளியே வந்தவுடன் "***ஸ்ரீபூண்டி மகான் வந்தார்***" என்று பிறரிடம் சொல்லும் போது சுவாமி மாயமாய் மறைந்து விட்டார். எவ்வளவு தேடியும் தென்படவில்லை. 4 வருடங்களுக்கு முன்பு இந்த திருவிளையாடல் நடந்தது.*





**நேர் காணல்: 3**

**21.06.2005 - 03.11.2005, பூண்டி**

**இராதாகிருஷ்ணன்,** **வயது: 65, நங்கிலிகொண்டா கிராமம், செஞ்சி வட்டம்.**

*1965ஆம் ஆண்டு நான் ஸ்ரீசுவாமி அவர்களை தரிசனம் செய்து கொண்டேன். என்னுடைய நண்பன் பூண்டிக்கு புறப்பட்டுச் செல்லும்பொழுது என்னைப் பிறகு வருமாறு சொன்னார். ஒரு வாரம் ஆனாலும் அவர் திரும்பி வரவில்லை. அவரைத் தேடிக்கொண்டு முதன் முறையாக பூண்டிக்குச் சென்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்களின் திவ்ய சன்னதிக்குச் சென்று நின்றவுடனே,* **"அவன் போயிட்டான் இராமஜெயத்திலே, இவன் வரான் கார்த்திகேயனிலே, நாம என்ன பண்றது,"** *என்று சொன்னார். பிறகு என் நண்பர் அன்றே இராமஜெயம் பேருந்தில் புறப்பட்டுச் சென்றதாகவும் நான் கார்த்திகேயன் பேருந்தில் வந்ததாகவும் விவரித்தார். அப்போதுதான் ஸ்ரீசுவாமிகளின் மகிமையை நான் அறிந்தேன். நான் சுவாமிகளின் திருவடிகளை வணங்கி அங்கேயே நின்றிருந்தேன். ஒரு பக்தை சுவாமியை வணங்கி முன் வைத்திருந்த மடலில் திருநீறு இல்லாததால் கையால் தடவிக் கொண்டிருந்தார். சுவாமி என்னை நோக்கினார். நான் சென்று இரண்டரையணா கொடுத்து திருநீறு பொட்டலம் வாங்கி வந்து மடலில் நிரப்பினேன். பக்கத்திலிருந்த எவர்சில்வர் குங்கும டப்பாவும் காலியாகத் தென்பட்டது. குங்குமத்தையும் வாங்கி வந்து நிரப்பினேன். பிறகு ஊதுவத்தி வாங்கி வந்து ஏற்றி சுவாமியின் பக்கத்தில் வைத்தேன். ஸ்ரீ சுவாமிகளின் உத்திரவு பெற்று புறப்பட்டுச் சென்றேன்.*

*நான் செஞ்சிக்கு செல்வதற்குள் என் நண்பர் என்னைத் தேடிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்து* **''எங்கே போனாய்''** *என்று கேட்டார். நான் பூண்டிக்குச் சென்று வந்ததாகக் கூறியவுடன்* **"அந்த மகானை தரிசனம் செய்து கொண்டாயா!"** *என்று மகிழ்ச்சியுடன் என்னைக் கட்டியணைத்தார். ஸ்ரீசுவாமிகள்* **"என்ன சொன்னார்"** *என்று கேட்டார்.*

நான் சுவாமி கூறிய அமுத மொழிகளைக் கூறினேன். "**அதுதாண்டா உலகம்! அதுதாண்டா உலகம்!**" என்று பக்தி பரவசமடைந்தார். அப்பொழுதே இரவு வெகுநேரமாகிவிட்டது. "**பசியாய் இருக்கு**" என்று கூறினார். அவல், வெல்லம், பொரிக்கடலை வாங்கிக் கொண்டு கோட்டைக்குச் சென்றோம். அன்றிரவு விடியற்காலை மூன்று மணிவரையில் ஸ்ரீசுவாமி அவர்களின் அற்புதங்களை கூறிக்கொண்டேயிருந்தார். ஸ்ரீசுவாமி அவர்களை விடாமல் பிடித்துக் கொண்டால் வாழ்க்கை எல்லாம் வழி காட்டுவார் என்று கூறினார். ஒரு வாரம் கழித்து என் நண்பர் ஹைதராபாத் சென்று விட்டார். ஸ்ரீசுவாமிகளின் திருநீறு அனுப்பச்சொல்லி கடிதம் எழுதுவார். நான் என் நண்பருக்காக பூண்டி சென்று மகானை தரிசித்து, திருநீறு பெற்று நண்பருக்கு அனுப்புவேன். சில நாட்கள் ஸ்ரீகாளஸ்தியிலிருந்து கடிதம் எழுதுவார். பிறகு நகரி, புத்தூரிலிருந்து எழுதினார். பிறகு காலமாகி விட்டார். அப்படி நான் சுவாமிமீது பற்றுடன் அடிக்கடி தரிசனம் செய்து கொண்டேன்.

ஒரு நாள் ஸ்ரீபூண்டிமகான் தரிசனத்திற்காக சுமார் பத்து பேர் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். "**கட்ட பஞ்சாயத்துக்கெல்லாம் போகாதீங்க**" என்று கூறினார். அங்கே நின்றுக்கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் என்னைப் பார்த்து "**இங்கே இருக்கிறவங்க வேலைகள் வேறு வேறு. நீ மட்டும் தான் கிராம மணியம். பணம் வாங்கிட்டு பஞ்சாயத்து செய்றீங்களா!**" என்று கேட்டார். நான் அப்படி பண்ணுவதில்லை என்று கூறினேன். ஸ்ரீபூண்டி மகான் சொன்ன ஒரு வாரம் கழித்து என் கிராமத்தில் பஞ்சாயத்து செய்யுமாறு வற்புறுத்திக் கூப்பிட்டார்கள். நான் குழப்பத்துடன் ஸ்ரீபூண்டி சுவாமியிடம் சென்று ஊதுவத்தியை ஏற்றி பக்கத்தில் வைத்து வணங்கி, "**சுவாமி நான் மணியமாக வேலைசெய்து கொண்டிருப்பதால் பஞ்சாயத்துக்கு கூப்பிடுகிறார்கள் தவிர்க்கமுடியவில்லை. நீங்களே வந்து தீர்ப்பைக் கூறுங்கள்**". என்று மனதில் வேண்டி புறப்பட்டுச் சென்றேன். அதற்குள்ளாக என் கிராமத்தில் என் வரவுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் போய் அமர்ந்து நூறு பேருக்கும் மேல் இருந்த மக்கள் கூட்டத்தை நோக்கிப் பார்த்தேன். அதில் நடுவில்

ஒருவர் அரை டவுசர், காக்கிச்சட்டை போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தார். கிழிந்துபோன துணியால் தலைப்பாகை கட்டியிருந்தார். கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தார். நான் அவரைப் பார்த்து, **''ஐயா இங்கு இருப்பவர்கள் எல்லாரும் இந்த கிராமத்தை சேர்ந்தவங்க. நீங்கள் பெரியவர் புதுசா இருக்கிறீங்க. யார் நீங்க?''** என்று கேட்டேன். அந்த அந்நிய மனிதர், **''நான் கலசபாக்கம், கலசபாக்கம் பக்கத்தில் பூண்டி, பூண்டி பக்கத்தில் பழங்கோயில், பழங்கோயிலிலிருந்து வந்திருக்கேன்''** என்று கூறினார். நீங்கள் எதற்கு உட்கார்ந்து இருக்கிறீங்க? என்று கேட்டதற்கு **''ஏதோ கும்பலா இருக்கிறாங்கன்னு நானும் வந்தேன்''** என்று கூறினார். நான் அவர் அருகில் சென்று அவரை அழைத்துக்கொண்டு சிறிது தூரம் சென்று **''ஐயா, என்ன இது''** என்று கேட்டதற்கு **''ஆமாம். வந்தேன், போனேன்''** என்று வேறு பாஷையில் பேசிக் கொண்டிருந்தார். நான் அவரை ஸ்ரீ பூண்டி மகான் என்று தெரிந்து கொண்டு பக்கத்திலிருந்த டீக்கடைக்கு அழைத்துச் சென்றேன். டீக்கடையில் டிபன் இருக்கிறதா என்று கேட்டதற்கு **''எட்டு இட்லி இருக்கு''** என்று சுவாமி கூறினார். அந்த டீக்கடையில் இருக்கும் பெண்மணி **''இன்று அமாவாசை. என் மாப்பிள்ளைக்காக எட்டு இட்லி எடுத்து வைத்திருக்கேன். யாருக்கும் கொடுக்க மாட்டேன்''** என்று சொன்னார். நான் மீண்டும் வாங்கி வந்து தருவதாகச் சொல்லி அந்த இட்லிகளை ஸ்ரீ சுவாமி அவர்களுக்குத் தருமாறு சொன்னேன். சுவாமி அவர்கள் டிபன் சாப்பிட்ட பிறகு, **''நான் மெதுவா போறேன்''**, என்று கூறிவிட்டு சென்று விட்டார். நான் மீண்டும் பஞ்சாயத்துக்கு வருவதற்குள் வழக்கு தொடுத்தவர், **''அந்த ஏழைக்கு ஏன் இவ்வளவு அபராதம் போடறீங்க. புள்ளகுட்டிக்காரன் ஏதோ தெரியாம தவறு செய்திட்டான். அபராதம் எப்படி கட்டுவான். விட்டுவிடுங்க''** என்று கூறி சமாதானமாக போய்விட்டார். சத்தியத்தை கடைப்பிடிப்பவர் என்று அறிந்து ஸ்ரீ பூண்டிமகானுக்கு மனதில் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை பஞ்சாயத்துக்கு செல்வதில்லை. நானே தவறு செய்தாலும் எனக்காக நீங்களே போகவேண்டும் என்று வேண்டிக் கொள்வேனே தவிர நான் போக மாட்டேன். நான் மற்றவர்களுக்காக பஞ்சாயத்து

செய்யும்போது ஒருவருக்கு நல்லதாக இருந்தாலும் இன்னொருவருக்கு கஷ்டமாக தோன்றலாம். பிறகு விளைவுகள் பலவாறு இருக்கும். அதற்காகவே ஸ்ரீசுவாமி என்னை பஞ்சாயத்துக்குப் போக வேண்டாம் என்று கூறி இக்கட்டிலிருந்து காப்பாற்றினார்.

ஒரு நாள் நான் படுத்துக் கொண்டிருந்தபோது கனவில் ஸ்ரீசுவாமி விடியற்காலையில் என் வீட்டின் வெளியில் நின்று உள்ளே எட்டிப்பார்த்தபடி காட்சி தந்தார். உடனே கிளம்பி ஏழு மணிக்கெல்லாம் பூண்டிக்கு வந்து, ஆற்றில் குளித்துவிட்டு சுவாமியின் அருகில் வந்து நின்றேன். அந்த சமயத்தில் அன்பர்கள் யாரும் இல்லை. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி மட்டும் இருந்தார். அவர் என்னை "**வாங்க செஞ்சியாரே**" என்றார். நான் ஸ்ரீசுவாமிக்கருகில் சென்று மௌனமாக நின்றேன். "**அது ஏங்க மல்லாட்ட தொலும்பு. நமக்கு வேண்டாம். எழுதி கடாசுங்க**" என்று கூறினார் ஸ்ரீசுவாமி. எனக்கு ஒன்றும் புரியவில்லை. சுவாமி என்னை உள்ளே அழைத்தார். வாசலில் வைத்திருந்த மரப்பலகையை தாண்டிச்சென்று சுவாமிகளை வணங்கி நின்றேன். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அப்பொழுது ஸ்ரீ பூண்டிமகான், "**நமக்கு வேண்டாங்க வேலை. ராஜினாமா பண்ணிடுங்க**" என்று கூறினார். அன்று அமாவாசை . நான் உடனே திருவண்ணாமலை தலைமைத் தபால் நிலையம் சென்று ராஜினாமா கடிதம் எழுதி தாசில்தார், மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிக்கும் பதிவுத்தபால் அனுப்பிவிட்டு, வீட்டிற்கு வருவதற்கு மூன்று நாட்கள் ஆகும் என்றும், தேடவேண்டாம் என்றும் கடிதம் எழுதி அனுப்பி விட்டேன். திருவண்ணாமலையில் அறை எடுத்துக்கொண்டு அங்கேயே தங்கி காலையில் பூண்டி சென்று விட்டு மாலையில் திரும்பிவருவேன். ஒரு வாரம் கழித்து வீட்டிற்குச் சென்றேன். அதற்குள்ளாக நான் அனுப்பிய கடிதங்கள் அனைவருக்கும் கிடைத்தது. எங்கள் அசோசியேஷன் தலைவர் தகவல் அறிந்து என்னைக் கூப்பிட்டுக் கேட்டார். "**எனக்கு ஹெட் ஆபீஸ் உத்திரவு ராஜினாமா செய்யச் சொல்லி இனிமே பைலைத் தொட மாட்டேன்**" என்று கூறி வந்துவிட்டேன்.

அதுவரை நான் வசூல் செய்த பணத்தை முன்கூட்டியே அலுவலகத்தில் செலுத்திவிட்டேன். என்னிடமிருந்த அனைத்து அலுவலகக் கணக்குகளை ஒப்படைத்து விட்டேன். அதன் பிறகு பக்கத்து கிராமத்து மணியத்திற்கு பொறுப்பை ஒப்படைத்தார்கள். இருந்தாலும் நான் மனதை மாற்றிக் கொண்டேன் என்று மூன்றுமாதம் வரை எதிர்பார்த்தார்கள். பிறகு தமிழக அரசு இரண்டு வருடம் கழித்து மணியம் பதவியை ரத்து செய்து விட்டது. ஸ்ரீ பூண்டி மகான் அவர்கள் என்னை முன்னதாகவே பதவியிலிருந்து விலகச் செய்தார்.

எனக்கு விவசாய வருமானம் குடும்பம் நடத்த போதவில்லை. நண்பருடன் சேர்ந்து கிரானைட் வியாபாரம் செய்யலாம் என்று நினைத்து புறப்பட்டு வந்தேன். விடியற்காலையில் மூன்று மணிக்கெல்லாம் ஸ்ரீசுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கருகில் சென்று தியானம் செய்தேன். அப்பொழுது ஸ்ரீசுவாமி **"ஊஹ்க்கும். நமக்கு எதுக்கு அந்த வேலை"** என்றார். நான் திரையை விலக்கி உள்ளே சென்று சுவாமியின் திருவடிகளை வணங்கிய போது, **"நஞ்சை செய்யலாம், புஞ்சை செய்யலாம். பிழைப்பு நடக்கும். உனக்கு ஏம்பா அந்த நினைப்பு"** என்றார். என்னை விவசாயம் தவிர வேறு எதையும் செய்ய அனுமதிக்கவில்லை என்று புரிந்து கொண்டேன். எப்பொழுதும் எனக்கு துணையாய் இருந்து நடத்தி வைக்கும் சுவாமியின் திருவடிகளுக்கு குடும்பபாரத்தை கவலையின்றி விட்டுவிட்டேன்.

ஒருமுறை பர்வதமலைக்குச் செல்ல சிலருடன் சென்று ஸ்ரீசுவாமிகளின் ஆசீர்வாதம் கேட்டேன். ஸ்ரீபூண்டி சுவாமி **"ஐப்பசி மாதம் 18ந் தேதி அன்னாபிஷேகம்பா"** என்று கூறினார். எங்களில் ஒருவர் **"சுவாமி நீங்கள் தேதி மாற்றி சொல்றீங்க'** என்றார். சுவாமிகள், **"இல்லைப்பா. எல்லாம் போய் சேர அந்த நாள் ஆகும்"** என்று கூறினார். அதன் பிறகு மூன்று வருடம் கழித்து சுவாமிகள் குறிப்பிட்ட தேதியில் மஹாசமாதி அடைந்தார்.

ஸ்ரீபூண்டி மகான் சில நாட்கள் இரவு நேரத்தில் பேசிக் கொண்டேயிருந்தார். ஒரு நாள் நான் அங்கேதங்கி இருந்தபோது நடு இரவில், **"ஞானம் நவரத்தினங்கள். ஆனால் காலணா கொடுத்து**

**கறிவேப்பிலை கேட்டா நான் எங்க போறது**'' என்று சுவாமிகளின் வார்த்தைகள் கேட்டன. ஆனால் யாரும் அங்கே இருப்பதாக தெரியவில்லை. ஸ்ரீசுவாமிகள் கூறுகின்ற வார்த்தைகள் புரியாத புதிராகத் தோன்றும்.

சுப்பிரமணிய சுவாமி ஸ்ரீசுவாமி அவர்களுக்கு உணவு கொண்டு வந்து சாப்பிடுமாறு வேண்டினார். அந்த சமயத்தில் நானும் அங்கே நின்று கொண்டிருந்தேன். ஸ்ரீபூண்டி சுவாமி, ''**அற்புதமான முருங்கைக்காய் சாம்பார் ஹைதராபாத்தில் சாப்பிட்டு வந்தேன்**'' என்று சொல்லி ஏப்பம் விட்டார். முருங்கைக்காய் சாம்பார் வாசனை கமகமத்தது. அந்த அன்பர் உணவிலிருந்து இரண்டு கவளம் வாங்கிக்கொண்டு போதுமென்றார் அந்த அன்பரும் மனத்திருப்தியுடன் சென்று விட்டார்.

ஒரு சமயம் ஸ்ரீ பூண்டி மகான் அருகில் நின்று கொண்டிருந்த போது என் மனதில் "**குருவுக்கு குரு இருப்பார்கள். உங்களுக்கு யார் குரு**" என்று நினைத்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரம் கழித்து ஸ்ரீ சுவாமி, ''**அருணகிரிக்கு யாருப்பா குரு?**'' என்று கேட்டார். அருணகிரிநாதருக்கு ஸ்ரீ முருகப் பெருமான் குரு. பூண்டி மகானுக்கும் அவரே குரு, என்று நினைத்து வணங்கிவிட்டு வந்து விட்டேன்.

ஓர் ஆசாமி பேண்ட், சர்ட் அணிந்து ஆடம்பரமாய் வந்து ***"What about my luck is?"*** என்று கர்வத்துடன் கேட்டார். ஸ்ரீசுவாமி, ***"Your luck is going and ....... who is checking?"*** என்று கூறி பாடம் புகட்டினார்.

ஸ்ரீசுவாமி அவர்களின் தரிசனத்திற்காக இரவு எட்டு மணியளவில் சென்றிருந்தபோது சுப்பிரமணிய சுவாமி என்னை சிறிது நேரம் அங்கே இருக்கச்சொல்லி வீட்டிற்குச் சென்று விட்டார். ஸ்ரீபூண்டி சுவாமி எனக்கு சந்தர்ப்பம் அளித்ததாக நினைத்து ஸ்ரீசுவாமி அவர்களை வணங்கி கை, கால்களை பிடித்து விட்டேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இரண்டு முறை இதுபோல் சேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது.

திண்டிவனம் மற்றும் செஞ்சியிலுள்ள சுவாமியின் அன்பர்கள் சேர்ந்து சித்ரா பௌர்ணமியன்று ஸ்ரீபூண்டி மகான் போட்டோவை பல்லக்கில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்று மகிழ்ச்சியாக

கொண்டாடினார்கள். பூண்டியிலுள்ள கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் ஸ்ரீசுவாமியிடம் சென்று "**சுவாமி செஞ்சி, திண்டிவனம் அன்பர்கள் உங்கள் பெயரைச் சொல்லி பணம் சேகரித்து அட்டகாசம் செய்தார்கள். நீங்களே பார்த்து அவர்களை ஏதாவது செய்யணும்**" என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமி, "**கடலில் இருந்து ஒரு சொம்பு தண்ணீர் மொண்டுக் கொண்டால் குறைந்திடுமா! உன் வேலை சரியா பாத்துக்க**" என்று சொல்லி அனுப்பி வைத்தார். ஒருவர் செய்து கொண்டிருக்கும் வேலையில் மற்றொருவர் தலையிடுவது நல்லதில்லை என்றும் அவரவர் வேலையை அவரவர் சரியாக செய்து கொள்வது சிறந்தது என்று போதித்தார் என்று எனக்குப் புரிந்தது.

பர்வத மலைக்குச் சென்று தீர்த்தம், திருநீறு, வில்வ இலை கொண்டுவந்து ஸ்ரீ சுவாமிகளுக்கு அளித்தால் தீர்த்தத்தை அருந்தி, திருநீறை வாயில் போட்டுக் கொண்டு வில்வ இலையை சாப்பிடுவார். அப்படியே மாரியம்மன் கோவிலுக்குச் சென்று பிரசாதம் கொண்டு வந்து கொடுத்தாலும் எதுவும் மீதம் வைக்காமல் முழுவதும் சாப்பிடுவார்.

ஸ்ரீசுவாமி அவர்களின் தரிசனத்திற்காக ஒரு மந்திரவாதி வந்தார். அவர் தலையில் மருதாணி அரைத்து பூசியிருப்பார். அதனால் அவரை "**கலர்சாமி**" என்றழைப்பார்கள். அவர் ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்துவிட்டு, தன்னை அழைத்தவர் வீட்டிற்குச் சென்றார். அங்கே தன் மந்திர திறமைகளைக் காட்ட நினைத்தும் ஒன்றும் பலிக்காமல், "ஐயா, என் மந்திரம் இங்கே பலிக்கவில்லை என்று சொல்லிச் சென்று விட்டார். பிறகு இரவு பனிரெண்டு மணியளவில் ஸ்ரீபூண்டி மகான் அமர்ந்திருந்த திண்ணைக்கருகில் வந்தவுடன் ஸ்ரீசுவாமி அவர்கள், "**நூற்று இருபது மைல் தொலைவுக்கு யாரும் ஆட முடியாது**" என்று கையை காட்டிச் சொன்னார். அப்போதிலிருந்து அந்த ஆசாமி மந்திர வேலையை விட்டு விட்டு, ஜோதிடம் கூறி வாழ்க்கை நடத்தினார்.

**நேர் காணல்: 4**
**20.06.2005, பூண்டி**

**சுப்பிரமணியம்,** வயது: 61, பூண்டி.

*ஒரு பெண்மணி ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்களுக்காக உணவு எடுத்துக் கொண்டு வேலூரிலிருந்து பூண்டிக்கு வந்தார். என் வீட்டருகிலிருந்த என்னைப் பார்த்து,* “**தம்பி, உங்களுடையது இந்த ஊர் தானா?**” *என்று கேட்டார்கள்.*“**ஆமாம்**” *என்றேன்.*“**சுவாமி தெரியுமா?**” *என்று திருப்பிக் கேட்டார்கள்.* “**தெரியும். மேற்கு திசையில் ஆற்றுக்குச் சென்றுள்ளார்**” *என்றேன். அந்த அம்மையார் கையிலிருந்து டிபன் பாக்ஸை என் வீட்டில் வைத்துவிட்டு, சுவாமியைத் தேடிச் சென்றார். சிறிது நேரம் கழித்து சுவாமி முன்னே வர அவரைப் பின்தொடர்ந்து அந்த பெண்மணி வந்தார். என் வீட்டின் அருகில் உள்ள சித்தப்பா வீட்டுத் திண்ணை மீது என் தகப்பனார், ஸ்ரீராமுலு செட்டி, பரமாத்ம உடையார் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அந்த பெண்மணி சுவாமியை உணவு உண்ணுமாறு வேண்டினார். சுவாமி,* “**பாரம்மா. அதைப் போய் பாரம்மா. அப்புறமா சாப்பிடறேன்**” *என்றார். பிறகு அந்த அம்மையார் வீட்டின் பின்புறம் டிபன்பாக்ஸை எடுத்துச் சென்று பார்த்தபோது அதிர்ச்சியுற்றார். எல்லாம் அடுப்புக்கரியாய் இருந்தது. அந்த பெண்மணி அசைவ உணவு கொண்டு வந்திருந்தார். கறிக்குழம்பு அடுப்புக் கரியாய் மாறி இருந்தது. செய்த தவறு உணர்ந்த அந்த பெண்மணி சுவாமியின் பக்தையானார்.*

*நான் இரண்டு வருடம் ஸ்ரீபூண்டிமகானிடம் காவலாளியாக பணிபுரிந்தேன். அந்த சமயத்தில் அவகாசம் கிடைத்த போது ஒரு நாள் சுவாமியிடம் சென்று,* “**சுவாமி எனக்கு திருமணம் எப்ப நடக்கும்?**” *என்று கேட்டதற்கு, சுவாமிகள்,* “**கூடிய சீக்கிரத்தில் முடியும்பா. வடக்கு பக்கம் இருக்கு போய் பாருப்பா**” *என்றார். அப்போது பக்கத்திலிருந்த ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியும்,* “**அவனுக்கு எங்க போனாலும் தடையாவுது. கல்யாணம் ஆகலையே**” *என்று குறைபட்டார். சுவாமி கூறியபடியே*

சிறிது நாட்கள் கழித்து பால்வார்த்து வென்றான் கிராமத்தில் பெண் இருப்பதாக கூறினார்கள். நானும் சுவாமியிடம் செய்தியைக் கூறினேன். “**நான் முன்னாடிபோய் இருக்கிறேன். நீங்க பின்னால வாங்க**” என்றார் சுவாமி. நான் பெரியவர்களுடன் சேர்ந்து சென்றேன். அந்த வீட்டில் ஒருவர் பேச்சினிடையே நாங்கள் செல்வதற்கு முன்பே ஒரு சாது காவியுடையணிந்து கையில் ஒரு டப்பா வைத்துக்கொண்டு உணவுக் கேட்டு வந்ததாகவும், எங்கிருந்து வருகிறார் என்றதற்கு “**என் ஊர் போஞூரப்பா. பசிக்குதப்பா**” என்றதாகவும். அங்கேயிருந்த திண்ணை மேல் உட்கார வைத்து இலைபோட்டு உணவு படைத்ததும், உணவு உண்டு ஆசீர்வதித்துச் சென்றதாகக் கூறினார். அதன் பிறகு பெண்ணை எனக்குத்தந்து திருமணம் செய்ய சம்மதித்தார்கள். ஆனால் பெண்ணின் அண்ணனுக்கு சிறிது நாள் முன்பே திருமணம் செய்த காரணத்தால் பணமில்லை என்றதால், நான் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து திருமணம் செய்து கொண்டேன்.

ஒரு நாள் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியிடம், “**எனக்குத் திருமணம் நடந்து மூன்று வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லை. சுவாமியின் ஆசீர்வாதம் கேட்க வேண்டும்**” என்று கூறினேன். உடனே ஸ்ரீபூண்டி மகான், “**மாங்காயா, தேங்காயா! அறுக்கறதுக்கு. நேரம் வரும்போது பழுக்கும். நேரம் வரும்போது விழும்**” என்றார். சுவாமி சொன்ன இரண்டு மாதம் கழித்து என் மனைவி கர்ப்பம் தரித்து, ஒரு ஆண் பிள்ளை பெற்றெடுத்தார். பிறகு நான்கு வருடம் வரை குழந்தை பிறக்கவில்லை. யாரும் இல்லாத சமயம் பார்த்து சுவாமியிடம் வேண்டினேன். ‘‘**உண்டாகும்பா. புத்திரன் உண்டாகும்பா**’’ என்று ஆசீர்வதித்தார். ஸ்ரீபூண்டி மகான் அருளால் இரண்டாவது மகன் பிறந்தான்.

ஸ்ரீபூண்டி மகான் அமர்ந்திருந்த வீட்டின் சொந்தக்காரரர் அபரஞ்சி என்னும் ஒரு மூதாட்டி ஆவார். சுவாமிக்கு அளித்த காணிக்கைகள் எல்லாம் பின்புறம் இருக்கும் அறையில் குவியலாய் நிரம்பி இருக்கும். அதிலிருக்கும் வேர்க்கடலை உருண்டையை பார்த்தவுடன் சாப்பிடும் எண்ணத்துடன் யாருக்கும் தெரியாமல் எடுத்து வைத்துக் கொண்டார். விடியற்காலையில் வீட்டின் வாசலில் தண்ணீர் தெளிக்க வந்தபோது ‘‘**சட்டியா? பானையா? எடுத்து**

**வைக்கறத்துக்கு. நான் எப்படி எடுத்து வைக்கறது?"** என்றார் பூண்டி மகான். தன் தவறு உணர்ந்து அந்த மூதாட்டி, அந்த சமயத்தில் அங்கே இருந்த என்னைப் பார்த்து "**யாருக்கும் சொல்ல வேண்டாம்**" எனக்கூறி வீட்டினுள் சென்று வேர்க்கடலை உருண்டைகளை இருந்த இடத்தில் போட்டு விட்டு போய் விட்டார்.

நான் இரண்டு வருடங்கள் ஸ்ரீபூண்டி மகானிடம் காவலாளியாக பணியாற்றும் பாக்கியம் கிடைத்தது. இன்று வரை என்னால் முடிந்த சேவைகளைச் செய்யும் பாக்கியத்தை அளித்து வருகிறார் ஸ்ரீபூண்டி மகான்.

**நேர் காணல்: 5**
**21.06.2005, பூண்டி**

**கோபால்சாமி,** **வயது: 80க்கு மேல், மேப்பத்துறை.**

*நான் கலசபாக்கத்தில் பூண்டி மகானை முதல் முறையாக தரிசனம் செய்து கொண்டேன். ஒரு சிறிய துணிமூட்டையை தோளில் தொங்கவிட்டுக்கொண்டு நடமாடிக் கொண்டிருந்தார். எனக்கு நேரம் கிடைக்கும் போது சுவாமி இருக்கும் இடத்திற்குச் சென்று தரிசனம் செய்து கொள்வேன். திண்ணைமேல் அமர்ந்த காலத்தில் ஒரு நாள் சுவாமியை வணங்கி, சுவாமி அவர்கள் பாதத்தின் மேல் இருந்த புண்ணின் மேலிருந்த சிற்றெறும்புகளை துடைக்க முயன்ற போது,* **"ஆ! தொடவேண்டாம். அதுவும் ஒரு ஜீவாத்மா. சாப்பிட்டு போகட்டும்"** *என்றார். என் முயற்சியை விட்டுவிட்டேன்.*

*எனக்கு ஐந்து ஏக்கர் நிலமிருந்தாலும் குடிக்க கஞ்சியில்லை. கிணற்றில் பாகம் இருந்தாலும் தண்ணீரில்லை. நான் பூண்டி மகானின் திருவடிகளை வணங்கி,* **"எனக்கு இருக்கும் நிலத்தில் எந்த மூலையில் கிணறு வெட்டுவது?"** *என்று கேட்டேன்.* **"கஞ்சி குடிச்சா போதும். போய்ட்டுவா"** *என்று சொன்னார் சுவாமி.*

*ஒரு நாள் என் மாமன் மகன் முருகேசப்பிள்ளை நிலத்தில் ஒரு மூலை பூலாப்பூ, ஒரு மூலை ஆவாரம்பூ, ஒரு மூலை பிரண்டைப் பூ மற்றொரு மூலை வேப்பஇலை வைத்துவிட்டு என்னுடன் பூண்டிக்கு வந்து சுவாமியை வணங்கி கிணறு எங்கே வெட்ட வேண்டுமென்று கேட்டார். பூலாப்பூ வைத்த இடத்தில் கிணறு வெட்டச் சொன்னார். அவர் பூண்டி மகான் சொன்ன திசையில் கிணறு வெட்டியதும் நன்றாக தண்ணீர் வந்தது.*





ஸ்ரீ ஆற்றுசுவாமி அடிக்கடி வந்து அமர்ந்திருந்த வில்வாரணி
நட்சத்திரக்கோவில்

**நேர் காணல்: 6**
**20.06.2005, பூண்டி**

**முனிரத்தின நாட்டார்**, வயது: 82, திருவண்ணாமலை.

*நான் திருவண்ணாமலையில் இரும்பு சாமான் வியாபாரம் செய்து வாழ்க்கை நடத்தி வருகிறேன். சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்திலிருந்தே நான் அவருடைய தரிசனம் பெறும் பேறு பெற்றேன். பலர் சுவாமியின் வெளியுருவம் பார்த்து அவரை பைத்தியம் என்றே நினைத்தனர். சிலர் மட்டுமே அவரைப் பெரிய மகானாக அறிந்து வணங்கினர். நான் இளைஞனாக இருந்தபோது தாடி, மீசையுடன் பார்ப்பதற்கு சாதுபோல் தோற்றம் அளிப்பேன். ஒரு நாள் நான் கலசப்பாக்கத்தில் இறங்கி போய்க் கொண்டிருக்கும் போது என் சித்தப்பா என்னைப் பார்த்து.*"**எங்கே செல்கிறாய்?**" *என்றார். நான் சுவாமியின் தரிசனத்திற்காக செல்வதாகக் கூறினேன். அவர் வெல்லம் காய்ச்சும் இரும்பு கொப்பரை தைத்துத்தரும் வேலைசெய்பவர். எங்கே வேலை செய்தாலும், வேலை முடியும் வரை அங்கேயே தங்கி பிறகு தான் மற்ற இடங்களுக்குச் செல்வார். கலசப்பாக்கத்தில் வேலை செய்யும்போது ஒரு நாள் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை பின்வருமாறு கூறினார்.*

*கலசபாக்கம் ஆற்றின் மறுகரையில் சிறிது தூரத்தில் பழங்கோயில் கிராமத்தில் கள், சாராயக் கடைகள் இருந்தன. பகலில் வேலை செய்தபிறகு மாலையில் எந்நேரமானாலும் மது அருந்துவேன். ஒரு நாள் வேலை அதிகமாக இருந்ததால் நேரமாகிவிட்டது. அன்று பௌர்ணமி. புறப்பட்டு ஆற்றில் போய்க் கொண்டிருந்தபோது, சிறிது தொலைவில் ஸ்ரீ சுவாமி சிம்மாசனத்தில் வீற்றிருக்க, வெள்ளையாடை தரித்த தேவகன்னிகள் சுவாமிக்கு பதினாறு பூஜை வகைகளை - (சோடச உபசாரம்) செய்து கொண்டிருந்தார்கள். அங்கிருந்து வந்த சுகந்த நறுமணம் மூக்கைத் துளைத்தது. எனவே மயங்கி விழுந்து விட்டேன். சிறிது நேரம் கழித்து*

உணர்வு வந்து பார்த்தபோது சுவாமி எப்போதும் போல் அமர்ந்திருந்தார். பார்ப்பதற்கும் எனக்கு பயமாக இருந்தது. இதற்கு முன் அந்த வழியில் செல்லும்போது சுவாமியைப் பார்த்து, "**வாங்க சுவாமி, கள் சாப்பிட்டு வரலாம்**" என்று கிண்டலாகக் கூறுவேன். சுவாமியின் மகிமையை நேரிடையாக பார்த்த பிறகு எப்போது அந்த வழியில் சென்றாலும் என்னால் முடிந்ததை வாங்கிச் சென்று சுவாமிக்கு தந்து வணங்கிச் செல்வேன் என்று அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறி சுவாமியை பக்தி, அன்புடன் அணுக வேண்டும் என்றும், வேறுபோல் எண்ண வேண்டாம் என்றும் எனக்கு நல்லது கூறினார்.

என் மகனுக்கு ஆறேழு வயதில் தலைமுடி எடுத்து மொட்டையடிப்பதற்காக அழைப்பிதழ் அச்சடித்து சுவாமியிடம் அளித்து, அந்நிகழ்வுக்கு வருமாறு வேண்டினேன். அதற்கு சுவாமிகள், "**அதற்கென்னப்பா! வரேன்**" என்றார். "**சுவாமி உங்களை நம்பியிருக்கேன். வராமல் விட்டுவிடாதீங்க**" என்று மேலும் வேண்டினேன். "**கண்டிப்பாக வரேன்**" என்று கூறினார் பூண்டி மகான். அங்கு இருந்த முக்கிய அன்பர்களுக்கு பத்திரிகை கொடுத்துவிட்டு திருவண்ணாமலை சென்று விட்டேன்.

நாங்கள் வசிக்கும் வீட்டிற்கு மூன்று பர்லாங் தூரத்தில் உள்ள சின்னாயியம்மன் குலதெய்வக் கோயிலில் தலைமுடி சமர்ப்பித்து பூஜை செய்துவிட்டு, எங்கள் வழக்கப்படி பம்பை, உடுக்கை அடித்துக் கொண்டு, ஆடிப்பாடிக் கொண்டே புறப்பட்டோம். என் மனைவியை வீட்டில் ஏற்பாடுகளை கவனிக்கும் படி முன்னதாகவே அனுப்பிவிட்டேன். அவர் வீட்டிற்குச் சென்று பூசையறையை சுத்தம் செய்து, இலை போட்டு படையல் போட்டார். வீட்டின் வெளியே இருந்து சுவாமிகள், "**நாடார், நாடார்**" என்று அழைத்தார். வெளியே வந்த என் மனைவி சுவாமியை வரவேற்றார். "**என்னை வரச்சொல்லிட்டு எங்கே போயிட்டார்**" என்றார் சுவாமி. பையனுடன் பின்னாடி வருவதாகக் கூறிய என் மனைவி, "**எல்லாம் தயாராய் இருக்கு. வாங்க சுவாமி**" என்றழைத்து அவரை அமரச் செய்து படையல் போட்டதிலிருந்து ஓர் இலை உணவு கொண்டு வந்து சுவாமிக்கு

அளித்து உபசரித்தார். கடைசியில் பாயசம் இலையில் ஊற்றினார். சுவாமி பாயசம் அருந்திய பிறகு "**இதோ வரேம்மா**" என்று வெளியில் வந்தார். என் மனைவி எனக்காக ஓடி வந்து, "**சுவாமி வந்தார். சாப்பிட்டார். சீக்கிரமா வாங்க**" என்றழைத்தார். நானும் வேகமாக ஆர்வத்துடன் வருவதற்குள் ஸ்ரீ பூண்டி மகான் வீட்டில் எங்கும் தென்படவில்லை.

உடனே நான் என் கடையில் வேலை செய்யும் பையன்களிடம் சைக்கிளில் சென்று திருவண்ணாமலைக்கு வந்து சேரும் ஒன்பது வழிகளிலும் சுவாமிகளைத் தேடுமாறும், அவரின் அங்க அடையாளங்களுடன் யாராவது தென்பட்டால் என்னை வந்து அழைத்துச் செல்லும் படியும் கூறினேன். மூன்று மணிநேரம் தேடியும் எங்கும் தென்படவில்லை என்று, அலைச்சல்பட்டு வீடு திரும்பினார்கள். வந்த சுற்றத்தாருக்கு விருந்தளித்து அனுப்பிவிட்டு, நான், என் மனைவி மகனுடன் பூண்டிக்குப் புறப்பட்டு வந்து சுவாமியின் தரிசனம் செய்து கொண்டு, "**என்ன சுவாமி, சொல்லாம வந்திட்டீங்க**" என்றேன். "**ஏம்பா. கொஞ்சமா பாயசம் ஊத்தினா தானே சாப்பிடறதுக்கு. மொண்டு மொண்டு பாயசம் ஊத்தினா நான் எப்படிப்பா சாப்பிடறது. குடிக்க முடியாம வந்திட்டேன்**" என்று கூறியவாறு ஏப்பம் விட்டார். வீட்டில் செய்த பாயச வாசனை அங்கே வந்தது. "**சுவாமி**" என்றேன் பரவசத்துடன். "**நல்லா நடந்தது. சந்தோஷமா நிறைய சாப்பிட்டு வந்தேன்பா**'' என்று கூறினார் பூண்டி மகான். சுவாமிகளின் திருவிளையாடலை கண்ட நான் அவரை முற்றிலும் கடவுளே என்று உணர்ந்து பக்தியுடன் வணங்கி புறப்பட்டுச் சென்றேன்.

ஸ்ரீபூண்டி மகான் அன்பர்கள் சிலர் திருவண்ணாமலை சிகரம் ஏறி சுற்றிப்பார்த்து விட்டு வருவதாக கூறினார்கள். நான் வீட்டில் உணவு செய்து வைக்குமாறு கூறினேன். அவர்கள் வருவதற்குள் நேரமாகிவிட்டது. அவர்களில் காங்கனூர் சுவாமி ''**எங்களுக்கு அனுமதி கொடுங்க. பூண்டிக்கு புறப்படுகிறோம்**" என்றார். "**வீட்டில் உணவு சமைத்திருப்பார்கள். நீங்கள் இப்படி செய்தால் சமைத்தது வீணாகி விடும்**" என்றேன். "**நாலு பேரை கூப்பிட்டு சோறு போட்டா சரி**" என்று கூறியவாறு பேருந்தில் ஏறினார்கள். நான் வீட்டிற்குச் சென்று தகவல் சொன்னதும் என் மனைவி கோபமடைந்தார். அவர் வேதனையை

பார்த்து, **"சாப்பாட்டு வடவம் செய்து, காய வைத்து பூண்டிக்குச் சென்று கொடுத்து வரலாம்"** என்று சமாதானப்படுத்தினேன். என் மனைவி அந்த உணவை வடவம் போடுவதற்கு தயார் செய்து, ஒரு துணியைப் பரப்பி ஒரு வடவம் வைத்தவுடன் புளிய மரத்தின் மீதிருந்த காகம் அந்த வடவத்தை கவ்விச் சென்று மரத்தின் கிளையில் அமர்ந்தது. உடனே என் மனைவி. **"ஏய்! இது யாருதுன்னு நினைத்து தூக்கிட்டு போனாய். வீணா ஏன் அழிஞ்சிப் போற. இது பூண்டி சாமியாருடையது. தொடாதே"** என்று சபித்தார். காகம் அந்த வடவத்தை சாப்பிடவும் இல்லை. கீழே போடவும் இல்லை. ஓடியும் செல்லவில்லை. என் மனைவி விரட்டினாலும், ஓடாமல் மரக்கிளையில் அசையாமல் உட்கார்ந்திருந்தது. நேராக கடைக்கு வந்து என்னிடம் நடந்தவற்றைக் கூறினார். நான் உடனே வந்து காகத்தைப் பார்த்தேன். காகம் என்னைப் பார்த்தது. நான் **"சுவாமி, ஏதோ தவறு நடந்துவிட்டது. வீணா ஒரு ஜீவன் சாகக்கூடாது. அதை நீங்க தான் காப்பத்தணும். மன்னிக்கக் கூடியதன்மை உங்ககிட்ட இருக்கு"** என்று மனதில் பூண்டி மகானை வேண்டினேன். காகம் அங்கிருந்து பறந்து சென்றது. அதன் பிறகு வடவம் போட்டு காய வைத்து பூண்டிக்குக் கொண்டு வந்து சுவாமியை தரிசனம் செய்துவிட்டு நடந்ததைக் கூறினேன். **"சாபம் கொடுத்திட்டாங்க உங்க வீட்டுக்காரம்மா. அது பாவமா மாறிப் போச்சு. மன்னிச்சு விடுங்க என்று நீங்க சொன்னதால மன்னிச்சி அனுப்பி வைத்தேன்,"** என்று சொல்லி உடனே **"உங்க வீட்ல குழம்பு வைச்சா சாமி இது நல்லாயிருக்க வேண்டுமென்று சொல்றாங்க. பூந்துடைப்பத்தால வீடு பெருக்கும்போது முள்ளு விழக்கூடாது என்று கும்பிடறாங்க. படுக்கை போடும்போது படுக்கை சரியாப்போடலைண்ணா, வீட்டுக்காரர் சண்டை போடறார். நீங்க தான் வந்து பார்த்துக்கணும் என்று கூப்பிடறாங்க. எது எதுக்குப்பா உனக்கு துணையாயிருக்கிறது. வீட்ல எது செய்தாலும், உப்பு கம்மியானாலும் நானே உப்பு பார்க்கணும். சோறு, குழம்பு கெட்டுப் போகாம இருக்கிறத்துக்கு கூட நானே காவல் இருக்கணும். இதுக்கெல்லாம் நானே எப்படிப்பா காவல் இருக்க முடியும்"** என்றார் சுவாமி. **"என்ன சுவாமி. எல்லாம் உங்க குடும்பம் தானே, நீங்கதான் பார்த்து செய்யணும்"** என்று வேண்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி, **"நாம தாம்பா புத்திசாலித்தனமா**

**நடந்துக்கணும். எல்லாம் ஆயிரம் பேர் வருவாங்க. போவாங்க. நாமதான் நல்லபடியா நடந்துக்கணும்”** என்று அறிவுரை கூறினார்.

ஸ்ரீ பூண்டி மகான் திண்ணை மேல் அமர்ந்த சில வருடங்கள் கழித்து, திண்ணைமேல் துணியை மடித்து ஆசனம் போல் செய்து அதன் மீது சுவாமிகளை அமர வைத்தனர். மல, ஜலங்கள் அங்கேயே கழிப்பார். கீழே இருக்கும் துணி ஈரமாகி காலின் மேல் தோல் சிவந்து புண்ணாகித் தெரிந்தது. ஒரு நாள் நான் “**சுவாமி, ஒரு மெத்தை தைத்துக் கொண்டு வரேன். அதன் மேல் உட்காறீங்களா?**” என்று கேட்டேன். “**ஊம்**” என்று சம்மதித்தார். நான் உடனே வீட்டிற்குச் சென்று பஞ்சு வாங்கி வந்து என் கையால் மெத்தை தைத்து, மெத்தை ஈரமாகாமலிருக்க மேலே போட ஒரு ப்ளாஸ்டிக் கவரையும் வாங்கிக் கொண்டு வந்தேன். காலையில் சுவாமிக்கு பூஜை முடிந்த பிறகு மெத்தையை போட்டு அதன் மேல் ப்ளாஸ்டிக் கவரை போட்டு அதன் மேல் சுவாமியை அமரச் செய்தோம். அதன் பிறகு மல ஜலம் கழித்தாலும் ஈரம் இல்லாமல் துணியால் சுத்தம் செய்தார்கள்.

சில அன்பர்கள் பூண்டி மகான் காலடியில் காணிக்கைகள் வைத்து தரிசனம் செய்து செல்வார்கள். சுவாமிகள் அவற்றை மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. ஒரு நாள் நான் சுவாமியின் சன்னதியில் நின்று கொண்டிருந்தபோது சுவாமி கழித்த சிறுநீரில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டு அடித்துச்சென்று தெருப்பக்கத்திலிருந்த பள்ளத்தில் விழுந்துவிட்டது. அதைக் கண்ட நான் கலக்கமுற்று உடனே “**சுவாமி! இந்த நோட்டெல்லாம் வீணாகுது. இதை எடுத்து சேர்த்துவைத்து உங்கள் ஞாபகார்த்தமாக ஏதாவது செய்யலாம்னு நினைக்கிறோம். சேமிக்க உங்கள் ஆட்சேபணை இல்லாம உங்கள் உத்திரவு குடுங்க**” என்று கேட்டேன். சுவாமிகள் “**அதுக்கென்ன, செய்தா போச்சு. செய்ங்க**” என்றுஅனுமதியளித்தார். உடனே சுப்பிரமணிய சுவாமி வீட்டிலிருந்த மரப்பெட்டியை கொண்டு வந்து ஆசாரியை அழைத்து வரச்செய்து, உண்டியல் தயார் செய்து அங்கே வைத்தோம். அன்பர்கள் காணிக்கைகளை அந்த உண்டியலில் போடுவார்கள். ஒன்று, இரண்டு வருடங்களில் அந்த பெட்டி நிரம்பி விட்டது. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி என்னிடம் கூறியவுடன் நான்

சிலருடன் சென்று அந்த மரப் பெட்டியிலிருந்த பணத்தை கோணிப்பையில் கட்டி காலையில் நானும், காங்கனூர் சுவாமி மற்றும் அண்ணாமலை சாமி மூவரும் கிளம்பி திருவண்ணாமலையிலிருந்த என் கடைக்குச் சென்று பணத்தைக் கணக்கிட்டு எல்லா விவரங்களையும் நோட்டு புத்தகத்தில் எழுதி எடுத்துக் கொண்டு வந்தோம். தங்கத்திலான ருத்திராட்சை மாலை செய்ய அனைவரும் சேர்ந்து முடிவெடுத்தனர். திருவண்ணாமலையிலுள்ள அண்ணாமலை செட்டியார் கடைக்குச் சென்று உண்டியலில் சேர்ந்த எல்லா பணத்தையும் அவர் கையில் கொடுத்து, **"இது செல்லுமா? இல்லை செல்லாதான்னு தெரியாது? பூண்டி சுவாமி உண்டியலில் சேர்ந்த பணம் எவ்வளவு தங்கம் வருதோ கொடுங்கள்"** என்றுக் கேட்டோம். தொன்னூற்று மூன்று கிராம் தங்கம் கொடுத்தார். தங்கத்தை எடுத்துச் சென்று பொற்கொல்லரிடம் கொடுத்து உருத்திராட்ச மாலை செய்யச் சொன்னோம். புதிய உருத்திராட்சை வாங்க வேண்டும் என்று அருணாச்சலேஸ்வரர் கோயிலுக்கருகில் உருத்திராட்சைகள் விற்கும் அண்ணாமலை சுவாமியிடம் சென்றோம். அங்கே அவரில்லை. சென்று விட்டார். ஆலயத்திற்குள்ளே சென்று திரும்பிவரும் நேரத்தில் மூப்பனார் தென்பட்டார். மூப்பனார் கிரிவலப்பாதையிலுள்ள, அஷ்டலிங்கங்கள் உள்ள இடங்களை சுத்தம் செய்து விளக்கேற்றுவார். நான் அவரிடம் விஷயத்தைக் கூறினேன். அப்போழுதே பத்து நிமிடத்திற்கு முன்பு நேபாளத்திலிருந்து வந்த அன்பர் கொண்டு வந்த தந்ததாக கூறி கழுத்திலிருந்த ஒரு புதிய உருத்திராட்சை மாலையை கழட்டி என் கையில் வைத்து, **"சுவாமி அவர்களுக்கு செய்யுங்க"** என்று கூறினார். நாங்கள் அவற்றை பொற்கொல்லரிடம் கொடுத்தோம். அவர் அதை தண்ணீரில் கழுவி சுத்தம் செய்து முப்பத்திரண்டு உருத்திராட்சைகளுக்கு தங்கத்தால் அலர் செய்து மாலையாய் கோர்த்து ஒரு மாதம் கழித்து இரவு பத்தரை மணிக்கு எங்கள் கையில் கொடுத்தார். மறு நாள் பங்குனி உத்திரம். நல்ல நாளில் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு அணிவிக்கலாம் என்று பூஜைப் பொருட்களை வாங்கிக் கொண்டு நானும் காங்கனூர் சுவாமி, எலுமிச்சம் பழ முதலியார்,

மகாலிங்கம் மற்றும் ஒருவரும் சேர்ந்து நடந்து புறப்பட்டோம். அந்த நேரத்தில் அந்த வழியில் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை. வேகமாய் நடந்தோம். வழியில் போகும் லாரிகளை நிறுத்தச்சொல்லிக் கைகாட்டியும் நிற்கவில்லை. காங்கனூர் சுவாமி, **"ஒரு வண்டி வருது. அதை நிறுத்து. அந்த வண்டியில் போகலாம்"** என்றார். பின் திரும்பி பார்த்தபோது ஒரு லாரி வந்தது. நாங்கள் கையைக் காட்டியவுடன் லாரியை நிறுத்திய டிரைவர், **''வழிமறித்து கொள்ளையடிக்க போறீங்களா. லாரியை ஏன் நிறுத்துனீங்க?''** என்று கேட்டார். **"நாங்கள் பூண்டிக்குச் செல்ல வேண்டும். கலசபாக்கம் வரை அழைத்துச் செல்லுங்கள். நடக்க கடினமாய் இருக்கிறது''** என்று கூறினோம். ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாயைக் கட்டணமாகக் கேட்டார். நாங்கள் ஒப்புக்கொண்டு நானும், காங்கனூர் சுவாமியும் முன்னிருந்த கேபினிலும், மற்றவர்கள் பின்புறமும் ஏறினார்கள். எங்களிடம் இருந்த மூட்டை முடிச்சுகளை பார்த்து என்னவென்று விசாரித்தார். **"நாளை பங்குனி உத்திரம். பாத பூஜை செய்யணும்"** என்றேன். அப்போது அந்த லாரி டிரைவர், **"ஆமாய்யா! நானும் கேள்விப்பட்டேன். பூண்டியில் ஒரு கிழவர் சாமியாராய் திண்ணைமேல் உட்கார்ந்திருக்காராம். பார்க்கணும் என்று ஆசைப்படுகிறேன். பார்க்கமுடியவில்லை ஐயா. நான் வேலூர்தான். இந்த வழியில் எத்தனையோ முறை போனாலும் பார்க்கமுடியவில்லை''** என்றுச் சொல்லி கிளீனரைக் கூப்பிட்டு **"அவங்ககிட்ட காசு வாங்க வேண்டாம்"** என்றார். எங்களை பூண்டி வரை வந்து இறக்கிவிட்டு **"என் பணி முடிந்துவிட்டது. நான் லாரியைக் கொண்டு போய் அங்கே விட்டு விட்டு குளித்து விட்டு நீங்கள் பூஜை செய்வதற்குள் வந்து விடுகிறேன்''** என்று சொல்லிச் சென்று விட்டார். நாங்கள் மடத்தில் படுத்துக் கொண்டோம். காங்கனூர் சுவாமி காலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து சுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கு அருகில் சென்றவுடன் **''எல்லாம் சூரப்புலிங்க. தெனாலி ராமனுங்க. சுவாமிக்கு அதைச் செய்யணும். இதைச் செய்யணும்ணு மனசில கோட்டைக் கட்டிக்கிட்டு தூங்கறாங்க"** என்றார் சுவாமி ஸ்ரீ பூண்டி மகான். அவர் என்னை எழுப்பி சுவாமிகள் கூறியதைச் சொன்னார். நான் எழுந்து பனை மரத்தின் பக்கத்தில் நின்றேன். **''எல்லாம் திண்ணைத் தூங்கி**

**தெனாலிராமனுங்க. சொல்றது ஒண்ணு. நிச்சயம் இல்லாதவங்க. உறுதி இல்லாதவங்க**'' என்று சுவாமிகள் கூறினார். நான் சுப்பிரமணிய சுவாமியிடம் பூஜைப் பொருட்களை கொடுத்தேன். அவர் பூண்டி மகானுக்கு பாதபூஜை செய்த பிறகு, கழுத்தில் உருத்திராட்சை மாலை அணிவிக்கும் நேரத்தில் பூண்டி மகான், “**ஹர ஹர என்றவனுக்கு பாரமா! அமுதம் அளிக்கிறவனுக்கு பாரமா! சும்மா இருக்காம திண்ணை மேல் இருக்கிறவனுக்கு கொண்டாந்து மாட்டிட்டீங்க! இதுக்கு காவல் யாரய்யா போடறது?**'' என்றார். உருத்திராட்ச மாலை அணிவித்த இரண்டு நிமிடத்தில் உருத்திராட்சைகளை கோர்த்த செம்பு கம்பி சுவாமியின் தேகத்தின் வெப்பம் தாங்காமல் கரைந்து ஒவ்வொரு உருத்திராட்சைகளாய் கீழே கொட்டிப்போனது அந்த உருத்திராட்சைகளைக் கொண்டு சென்று வெள்ளிக் கம்பியில் கோர்த்து எடுத்து வந்து அலங்கரித்தோம்.

ஸ்ரீ பூண்டி மகானை “**உங்களது எந்த ஊர்?**” என்று கேட்டதற்கு “**அ ஆ ஆமாம்பா. நான் இரயிலில் வந்தேன். மூன்று பேரு வந்தோம். நான் கலசபாக்கம் ஸ்டேஷனில் இறங்கிவிட்டேன். மிச்ச இரண்டு பேர் பொட்டி தூக்கிட்டு போயிட்டாங்க**” என்று சமாதானம் கூறுவார். உங்கள் பேர் என்னவென்று கேட்டால், ‘‘**பேரா. ரிப்பேர். எதுக்கு அது**'' என்று சொல்லுவார் சுவாமி. நான் சுவாமிகளின் சில அற்புத லீலைகளைக் கேட்டேன். சிலவற்றை அனுபவித்தேன். பூண்டி மகான் பரப்பிரம்ம சொரூபம் என்பதே என்னுடைய அனுபவம்.

சினிமா நடிகர் எஸ். வி.சுப்பையா மற்றும் சில நடிகர், நடிகைகள் பூண்டி வந்து ஸ்ரீ பூண்டி மகானின் தரிசனம் செய்து செல்வார்கள். ஒரு சமயம் எஸ். வி. சுப்பைய்யா அவர்கள் சுவாமியை வணங்கி நின்றார். கண்ணீருடன், “**சுவாமி என் மகளை மைத்துனருக்கு கல்யாணம் செய்து வைத்தேன். எந்நேரமும் பணத்துக்காக மகளை புண்படுத்துகிறார். அவர்களின் வாழ்க்கை நல்லபடியாக நடக்கவில்லை. நான் சில சினிமாக்களை எடுத்து நஷ்டப்பட்டேன். மனவருத்தம் அனுபவிக்கிறேன். ஒரு நண்பருடன் சேர்ந்து புது சினிமா எடுக்க நினைக்கிறேன். நீங்கள் என்ன கூறுவீர்கள் என்று தெரிந்து கொள்ள வந்தேன்**'' என்று வருத்தத்துடன் முறையிட்டார். “**நல்லது! செய்யுங்க!**” என்று சுவாமி ஆசீர்வாதம் அளித்தார். சுப்பையா

அவர்கள் "**சினிமாவுக்கு எந்த பெயர் வைக்கச் சொல்கிறீர்கள். நீங்களே கூறுங்க**" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார். சுவாமியும், "**அந்த சினிமாவுக்கு 'ஆதிபராசக்தி' என்று பெயரிடுங்கள்**" என்று கூறினார். சுப்பையா அவர்கள் ஆதிபராசக்தி சினிமா எடுத்து வெளியிட்டார். நாடெங்கும் மிகப்பெரிய வெற்றி பெற்றது.

ஒரு வருடத்திற்கு பிறகு சுப்பையா அவர்கள் ஸ்ரீ பூண்டி மகானின் ஆளுயர படத்திற்குச் சட்டம் போட்டு எடுத்து வந்து சுவாமி சன்னதியில் வைத்து தரிசனம் செய்து கொண்டார். அங்கேயிருந்த என் மனதில் இப்படி ஒரு பெரிய படத்தை வைத்து நாம் எப்போது பூஜை செய்யப் போகிறோம் என்ற எண்ணம் எழுந்தது. அந்த நினைவுடனே சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். ஒரு வாரம் கழித்து அந்தப் படத்தை எங்கள் கடைக்குக் கொண்டு வந்தார்கள். மழைத்தூறல் தண்ணீர் இறங்கியதால் படம் நனைந்து கண்ணாடியோடு ஒட்டிக் கொண்டது. ஸ்டுடியோவுக்கு கொண்டு சென்று காட்டினார்கள். இரண்டு கண்ணாடிக்களுக்கிடையில் போட்டோவை வைத்திருந்ததால் கண்ணாடியை பிரித்தால் போட்டோ கிழியும் வாய்ப்புள்ளது. எனவே அப்படியே வைத்தால் சிறிது நாளில் ஈரம் காய்ந்துவிடும் என்று சொன்னார்கள். அந்த படத்தைக் கொண்டு வந்து எங்கள் கடையில் வைத்தார்கள். நான் மனதில் நினைத்தபடியே ஸ்ரீ பூண்டி மகான் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி போட்டோவை அனுப்பி வைத்து எங்கள் கடையில் இருக்கும்படி அருள்பாலித்தார். நான் அந்தப்படத்திற்கு பூஜை செய்துகொண்டிருக்கிறேன். இது எல்லா உயிர்கள் உள்ளும் இருக்கும் ஸ்ரீ பூண்டி மகானின் திருவிளையாடல் என்று உணர்ந்தேன்.

பூண்டி கிராமத்திலிருக்கும் சிலர் சுப்பிரமணிய சுவாமிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்து, அவரை பூண்டி மகானுக்கு பூஜை செய்யக்கூடாதென்று தடை விதித்தனர். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பொறுமையுடன் சென்று பூண்டி மகானிடம் முறையிட்டார். "**அவங்க இருக்கட்டும்பா. நான் பாத்துக்கிறேன்**" என்று அபயமளித்தார். "**ஏதாவது ஆதாரம் வேணும் சுவாமி**" என்று பணிவுடன் கேட்டுக்

கொண்டார். அந்த சமயத்தில், சுவாமி சன்னதியில் நான்கைந்து பக்தர்கள் இருக்கின்ற போது, ''**ஆதாரம் வேணும்னு கேக்கறீங்க. அப்படியானால் நான் சொல்வது ஆதாரமில்லையா?**'' என்று கேட்டார் ஸ்ரீ பூண்டி மகான். ஸ்ரீ பூண்டி சுவாமி என்ன செய்யப்போகிறாரென்று பேராவலுடன் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு சுப்பிரமணிய சுவாமி, "**அவர்கள் கேட்டால் நான் என்ன ஆதாரம் காண்பிப்பேன்**" என்று மறுபடியும் வேண்டினார். அங்கேயிருக்கும் அன்பர்கள் கையிலிருந்த முத்திரைத்தாள்களை (இரண்டரை ரூபாய் (அ) ஐந்து ரூபாய்) கொடுத்தார்கள். "**இந்தா, உனக்கு ஆதாரம் வேணுமின்னு கேட்டுகிட்டு இருக்கிறாய். என்ன வேணுமின்னாலும் எழுதிக்கோ. உன் இஷ்டம்**'' என்று சொல்லி "**சண்முகானந்த சுவாமி**" என்று மூன்று, நான்கு தாள்களில் கையொப்பம் இட்டார். அதில் எதுவும் எழுதாமல் ஐந்தாறு வருடங்கள் என்னிடம் பத்திரமாக வைத்திருந்தேன். அதன் பிறகு நான் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடம் கொடுத்து விட்டேன்.

ஸ்ரீ பூண்டி மகானுக்கு அன்பர்கள் சமர்ப்பிக்கும் தானியங்கள், காய்கறிகள் முதலியவற்றை தனித்தனியாக போடுவதற்கு கூடைகள் ஏற்பாடு செய்தனர் கமிட்டியிலிருக்கும் அன்பர்கள். அந்தந்தக் கூடைகளில் போடுமாறு நிபந்தனை வைத்தனர். அன்பர்களும் அவ்வாறே போட்டனர். ஒரு நாள் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி "**சுவாமி, வருபவர்கள் பசிக்கிறதென்று என்னைக் கேட்கிறார்கள். நான் எங்கிருந்து கொண்டுவந்து சமைக்கமுடியும்**" என்று தன் மனவேதனையை ஸ்ரீ பூண்டி மகானிடம் தெரிவித்தனர். உடனே கமிட்டித் தலைவரை அழைத்து வரச்செய்து "**அரிசி கொடுங்கப்பா அவங்களுக்கு. வர்றவங்க அதிகம். எங்களது பெரிய குடும்பம். வந்து போறவங்க நிறைய பேருக்கு சாப்பாடு போடணும். அரிசி கொண்டு போகாதீங்க**" என்று ஆணையிட்டார் ஸ்ரீ பூண்டி மகான். அதன் பிறகு கமிட்டியாரின் அதிகாரங்களும், ஆர்ப்பாட்டங்களும் குறைந்து விட்டன.

ஸ்ரீ பூண்டி மகானிடம் காணிக்கையாக வரும் பணத்தையெல்லாம் சுப்பிரமணிய சுவாமி கொண்டு செல்கிறார் என்றும், இதற்கு மேல் சுப்பிரமணிய சுவாமியை, பூண்டி மகான்

*சன்னிதிக்கு வராமல் தடுப்பதற்காக, பிராமண ஐயர் ஏற்பாடு செய்து ஸ்ரீ பூண்டி மகானுக்கு பூஜைகள் செய்து உணவளிக்க வேண்டும் என்றும் கமிட்டியில் தீர்மானம் செய்து பூண்டி சுவாமியிடம் சொன்னவுடன்* **"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்பா. சுப்பிரமணியம் மட்டுமே என் விருப்பத்திற்கு பக்குவமா பண்றாரு. சாப்பாடு கூட அவங்களே பாத்துக்குவாங்க. மற்றவங்க கொண்டுவரும் சாப்பாடு எனக்கு வேண்டாம். மிச்ச பணத்தையெல்லாம் நீங்களே பாத்துக்குங்க"** *என்று சொன்னார். வந்த கமிட்டியார்கள் சுவாமிக்கு மனம் சரியில்லை என்று சென்று விட்டனர். ஒரு மணிநேரம் கழித்து மீண்டும் வந்து கேட்டதற்கு மீண்டும் அதே பதில் கூறியவுடன் கமிட்டியார் சென்று விட்டனர். அத்துடன் அந்த பிரச்சினை சிறிது சிறிதாக தீர்ந்து விட்டது. ஸ்ரீ பூண்டி மகான் அவர்களே, சுயமாக ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி அவர்களுக்கு, இரவில் அங்கேயிருக்கும் அன்பர்கள் முன்னிலையில் பணம் கொடுப்பார்.*

*நான் 57 வருடங்களாக இரும்புக்கடை வியாபாரம் செய்து கொண்டிருக்கிறேன். இப்போது வியாபாரம் சரியில்லாத காரணத்தால் கடந்த மூன்று வருடங்களாக வாடகைக் கூட செலுத்த முடியவில்லை. அந்த இடத்தின் உரிமையாளர் பெருந்தன்மையோடு நடந்து கொண்டாலும் சொல்வதற்கு எனக்கே கஷ்டமாக இருக்கிறது. ஸ்ரீ பூண்டி மகான் என்னை காப்பாற்றுகிறார். என் மனதில் வருத்தத்துடன் இருக்கும்பொழுது சுவாமிகளை நினைத்து படுத்துக்கொண்டால் எல்லா கஷ்டங்களும் மறைந்துவிடும். ஒரு சில சமயங்களில் ஸ்ரீ பூண்டி மகான் இலிங்க உருவத்துடனும் ஈஸ்வரனாகவும் முருகப் பெருமானாகவும் தரிசனம் அளிக்கிறார். நான், முகம் கழுவும்போது ஸ்ரீ பூண்டி மகானுக்கு கழுவுவதுபோல் தோன்றுகிறது. நான் தண்ணீர் குடிக்கும்போது சுவாமிகளே நீர் அருந்துவது போல் தோன்றுகிறது. இப்படி பலவிதமான அனுபவங்கள் தோன்றும்போது* **"எனக்கு பித்து பிடித்துவிட்டதா"** *என்று நினைப்பேன். என்னவென்று சொல்ல. எத்தனை சொல்ல? எல்லாம் முடிவும், முதலும் இல்லாத ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய லீலைகளே.*





நேர்காணல்: 7
20.06.2005, பூண்டி

**V.A. சொக்கலிங்கம்**, வயது:70,விலாப்பாக்கம், போளூர் தாலுக்கா.

*நான் இரண்டு வருடம் கிராம சேவக் பயிற்சி முடித்துவிட்டு 1963ஆம் ஆண்டு மே ஒன்றாம் தேதி கலசபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் (BDO) வேலையில் சேர்ந்தேன். வில்வாரணி எனது பணிக்குத் தலைமையிடமாக இருந்தது. நான் அங்கேயே வாடகைக்கு அறை எடுத்துக்கொண்டு அங்கேயே தங்கியிருந்து வாடகை சைக்கிளில் அலுவலகத்திற்குச் சென்று திரும்பிவரும் வழியில் திண்ணைமேல் வீற்றிருக்கும் ஸ்ரீ பூண்டி மகானின் அருட்பார்வை என் மீது பட்டவுடன் என்னுள் சொல்லமுடியாத அனுபவம் ஏற்பட்டது. இருந்தாலும் நான் அதை உணரவில்லை. யாரோ திண்ணைமேல் இருக்கிறார்கள் என்று நினைத்து என் வழியில் சென்று விட்டேன். அன்றிரவு நான் வீட்டில் சமையல் செய்யும் நேரத்தில் நாலாப் பக்கங்களிலிருந்தும் ஸ்ரீசுவாமியின் மகிமையை பேசிக்கொண்டிருந்தனர். நான் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்கே தெரியாமல் என் மனம் ஸ்ரீ பூண்டி மகான் மேல் லயித்தது. என் மனக்கோட்டைகள் எல்லாம் கலைந்து போய் எனக்குள் வைராக்கியம் வந்தது. எங்கள் அலுவலகத்தில் கிராம சேவக்காக பணியாற்றுபவர்கள் கதர் ஆடைகளை விற்க வேண்டுமென நிபந்தனை விதித்தனர். அன்றே பானாம்பட்டிலிருந்து என் நண்பர் வந்தார். அவரிடம் விஷயத்தைக் கூறினேன். அவர் உடனே* **“எங்கள் ஊரில் காங்கிரஸ் பிரமுகர்கள் இருக்கிறார்கள். நீ ஒன்றும் பயப்படவேண்டாம்”** *என்று கூறினார். நான் துணிகளை வாங்கி மூட்டைக் கட்டி சைக்கிள் மேல் வைத்துக்கொண்டு என் நண்பருடன் புறப்பட்டேன். பூண்டியில் கிருஷ்ணமூர்த்தி கடையில் டீ அருந்தி விட்டு எங்கு எங்கிருந்தோ வந்து சுவாமியை தரிசனம் செய்து கொள்கிறார்கள். இந்த வழியிலே*

தினந்தோறும் போய்க்கொண்டிருந்தாலும் இதுவரை சுவாமியை தரிசனம் செய்துகொள்ள முடியவில்லை என்று சொன்னேன். "**இதோ இப்பவே பார்க்கலாம். திண்ணைமேலேயே இருக்கிறார் இல்லையா**" என்றார் டீக்கடைக்காரர். "**சும்மா எப்படி போவது**" என்றேன். "**அதற்கென்ன உன் மனதுக்கு பிடித்ததை வாங்கிக் கொண்டு போ**" என்று கூறினார். நான் ஒரு கப் பாலை வாங்கிக் கொண்டு ஒரு பொட்டலம் மோட்டாசேவ் வாங்கிக் கொண்டு சுவாமியின் சன்னதிக்கு வந்தேன். பூண்டி சுவாமி நிஷ்டையில் இருந்தார். '**சுவாமி! சுவாமி!!**' என்று இரண்டு முறை கூப்பிட்டேன். அதற்குள் அந்த வீட்டின் சொந்தக்காரரான ஒரு மூதாட்டி வந்து "**என்னப்பா சுவாமிக்கு பால் வாங்கிக் கொண்டு வந்தாயா**" என்று கேட்டார். ஆமாம் என்றேன். அந்த அம்மையார் ஒரு பாத்திரம் கொண்டு வந்து, "**பாலை இதில் ஊற்று. சுவாமி தியானத்தில் இருக்கிறார். பிறகு நீங்கள் கொடுத்ததாகச் சொல்லி தருகிறேன். கொடுப்பார்களா, இல்லையா என்று யோசிக்க வேண்டாம்**" என்று கூறினார்கள். நான் "**உங்க விருப்பம். எப்படி வேண்டுமானாலும் செய்யுங்க**" எனக் கூறி வாங்கிவந்த பொட்டலத்தையும் அவர்கள் கையில் வைத்துத் திரும்பினேன். கல் மேல் பட்ட கண்ணாடி போல் என் மனம் உடைந்தது. "**உண்மையான பக்தியுடன் எதுகொடுத்தாலும் வாங்கிக் கொள்வார். இல்லையென்றால் வாங்கிக் கொள்ள மாட்டார்**" என்று வீட்டில் சமைக்கும் போது காதில் விழுந்த வார்த்தைகள் எதிரொலித்தது. சுவாமிகளுக்கு கொடுக்க முடியாமல் போய்விட்டதே என்று மனவேதனையடைந்தேன். மூன்றாம் நாள் அந்த வழியில் சென்று கொண்டு இருக்கும் போது வேலுப்பண்டிதர் தென்பட்டார். அவர் பேச்சினிடையே "**சுவாமி அவர்களுக்கு நாங்கள் முதல் சிஷ்யர்கள்**" என்று கூறினார். "**நீங்கள் எல்லாம் எந்த பிறவியில் புண்ணியம் செய்தீர்களோ. சிஷ்யர்கள் ஆகிவிட்டீர்கள். எங்களுக்கு இந்த பிறவியில் அந்த அதிர்ஷ்டம் இல்லை**" என்று வருத்தத்துடன் கூறினேன். "**எதற்காக அப்படி சொல்கிறீர்கள்**" என்று கேட்டார். நடந்தவற்றை விவரித்துக் கூறினேன். அவர் என்னை உட்கார வைத்து "**ஞானம் என்றால் ஒரு பிறவியில் வருவதில்லை. எத்தனையோ பிறவியில் செய்த புண்ணிய பலன்களால் பரிபூரணமாக வரக்கூடியது. ஞானம் என்றால்**

**கத்தரிக்காய், தேங்காய், மாங்காய், புளியங்காய் இல்லை. சுவாமி மடியில் இருந்து எடுத்துக் கொடுக்க. அவரவர்களுக்கு வேண்டியதை கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டும். நாம் செய்த புண்ணியபலன்கள் இந்த ஜென்மத்திலேயே கிடைக்கணும் என்று நினைப்பது சரியில்லை. அப்படி நமக்கு கிடைக்க வேண்டியதாக இருந்தாலும் நாம் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அருகே சேர்த்துவிடும். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பது போல் மன உறுதியானவர்கள், ஞானமார்க்கத்தில் இருப்பவர்கள் அந்த இடத்தைத் தேடி வருவார்கள். அப்படி வராமல் இருந்தாலும் அங்கேயிருக்கும் சக்தியை அவர்கள் கிரகித்து வருவது போல் செய்யும். நமக்கு (ப்ராப்தம்) கொடுப்பினை இருந்தால் நமக்கு கண்டிப்பாக கிடைக்கும்"** *என்று சொன்னார். அவரின் உருவில் ஸ்ரீ பூண்டி சுவாமியே போதித்தார் என்று கருதினேன். நம் மனதில் இருப்பவற்றை அறிந்து தெரியப்படுத்துபவர்கள் சித்தர்கள் என்று என் தகப்பனார் சிறிய வயதில் கூறியது ஸ்ரீ பூண்டி சுவாமி சன்னதியில் அனுபவித்தேன்.*

*ஸ்ரீபூண்டி மகான் சிலசமயம் கையை பலமாக அசைத்துக் கொண்டேயிருப்பார். இரண்டு, மூன்று நாட்களானாலும் தொடர்ந்து ஆட்டிக்கொண்டேயிருப்பார். அந்த சமயத்தில் கண்கள் சிவந்து பார்ப்பதற்கு பயமாக இருக்கும். சுவாமி ஒரு காலை திண்ணை மீதும், மற்றொன்றை கீழே தொங்கவிட்டிருப்பார். பாதம் நன்றாக வீங்கி, தோல் பிளந்து, எறும்புகள் கடித்துப் புண்ணாகி, பிளந்த இடத்திலிருந்து சீழ், இரத்தம் வழிந்துக் கொண்டிருக்கும். எறும்பு, கொசு மொய்த்துக் கொண்டிருந்தாலும் சுவாமி அதையெல்லாம் பொருட்படுத்தமாட்டார். உடற்பற்று இல்லாதவர். வில்வாரணியில் ஒவ்வொரு புதன்கிழமையும் நடக்கும் (லெப்ரஸி) தொழுநோய் முகாமுக்கு வரும் மருத்துவரில் ஒருவர் பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு, பாதத்தை சுத்தம் செய்து மருந்து போடலாம் என்று நினைத்து கையை பாதத்தின் மேல் வைத்தவுடன்,* **"தொட வேண்டாம். நம்ம பசிக்கு நாம சாப்பிடறோம். அதனோட பசிக்கு அது சாப்பிடுது. உங்க வேலையை நீங்க பாத்துக்கிட்டுப் போங்க"** *என்று அனைத்து உயிர்களிலும் இருக்கும் சைதன்யம் தானே என்ற ஆழ்ந்தக் கருத்தை தெரியப்படுத்தினார்.*

வேலூரம்மா தான் தியானிக்கின்ற மீனாட்சி அம்மனிடம் மன நிம்மதி வேண்டி எவ்வளவோ பிரார்த்தனை செய்தார். எத்தனையோ ஆலயங்களுக்குச் சென்றார். எத்தனையோ மகான்களின் சன்னதிக்கு சென்றாலும் மன நிம்மதி கிடைக்கவில்லை. ஒரு நாள் அவர் கனவில் "**தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம் என்றவனைப் போய் பாரடி**" என்று அசரீரி வாக்கு கேட்டது. அன்று காலையில் அவரது சீடரான வில்வநாதன் வந்தார். அவரிடம் தன் கனவை விவரித்துக் கூறி, "**எங்கே போய் தேடுவது. தெரியவில்லையே?**" என்று வருத்ததத்துடன் கூறினார். "**நான் நேற்றுதான் பூண்டிக்குச் சென்று வந்தேன். ஒரு மகான் திண்ணை மேல் வீற்றிருக்கிறார்**'' என்று கூறி தானறிந்த சுவாமியின் மகிமைகளை எடுத்துவைத்தார். அந்த வேலூரம்மா தன் குலதெய்வமான மலையனூர் ஆதிபராசக்தியை மனதில் வேண்டி தனக்கு வழிகாட்டுமாறு பிரார்த்தனை செய்தார். அந்த இரவு கனவில் பூஜைக்கு வேண்டிய பூஜை சாமான்கள் தோன்றியது. காலையில் சுவாமிக்கு வேண்டியவற்றை சமையல் செய்து எடுத்துக் கொண்டு, பூஜைப் பொருட்களை வாங்கிக் கொண்டு கணவர், மகளுடன் சேர்ந்து வில்வநாதனையும் துணையாக அழைத்துக் கொண்டு பூண்டிக்கு வந்தார். பக்கத்திலிருந்த கிணற்றில் குளியல் முடித்து விட்டு சுவாமியிடம் வந்து, "**சுவாமி, உங்கள் அடியாள் பாதபூஜை செய்ய வந்திருக்கேன்**" என்று வேண்டினார். "நல்லது" என்று சுவாமிகளும் ஆசீர்வதித்தார். அவர் சுவாமியின் பாதத்தின் அடியில் தட்டை வைத்து பாதங்களை தட்டில் வைத்து, பாத அபிஷேகம் செய்து ஆரத்தி கொடுத்து, தன்னை மறந்த நிலையில் நின்று கொண்டிருக்கும் நேரத்தில் பக்கத்திலிருந்த அபிஷேகம் செய்து மீதியிருந்த பாலை சுவாமி பார்த்துக் கொண்டேயிருந்தார். வில்வநாதன் "**அம்மா. பால் பாத்திரம் நோக்கி பார்க்கிறார். குடிப்பாரா என்னவோ**'' என்று கூறவே வேலூரம்மா பால் பாத்திரத்தை சுவாமிகளுக்கு கொடுத்தவுடன் சுவாமிகள் அதிலிருந்த பால் முழுவதையும் அருந்தி விட்டார். சுவாமிகளுக்கு எடுத்து வந்த நைவேத்திய உணவை ஊட்டி அனைத்தையும் சுத்தப்படுத்தினார். உடனே ஸ்ரீபூண்டி சுவாமி மல, ஜலம் கழித்தார். அந்த அம்மையார்

*ஒரு வாளியில் தண்ணீர் கொண்டு வந்து அனைத்தையும் சுத்தப்படுத்தி, சுவாமி பாதங்களை எடுத்து திண்ணை மேல் வைத்து அபிஷேகம் செய்த தட்டை சுத்தம் செய்யலாம் என எடுக்கும் சமயத்தில் சுவாமி,* "**நாப்பது ஆண்டு காலம் பாடுபட்டு சம்பாதிச்ச சொத்து அது**" *என்று கூறினார். அந்த அபிஷேக தீர்த்தத்தில் மலம், ஜலம், சீழ், இரத்தம் அனைத்தும் கலந்து இருந்தது. சுவாமி தனக்களித்த வரப்பிரசாதமாய் நினைத்து அந்த அபிஷேக தீர்த்தத்தை முழுவதும் அருந்தி விட்டார். வில்வநாதன்* "**எனக்கு ஒரு துளிகூட கொடுக்காமல் அருந்தி விட்டீர்களே**" *எனக் கேட்டதற்கு* "**அனுமதியில்லைப்பா. நான் என்ன செய்வது**" *என்றார் அந்த அம்மையார். உடனே பூண்டி மகான்* "**விட்ட குறையா, தொட்டுக்கிட்டாயா**" *என்றார்.* "**ஆமாம் சுவாமி, அடியாள் உள்ளம் கடைத்தேற மார்க்கம் உண்டா**" *என்று அந்த அம்மையார் வேண்டியதற்கு* "**உண்டு**" *என்று சொன்னார் ஸ்ரீபூண்டி மகான். பிறகு புறப்பட்டு சில அடிகள் சென்று மீண்டும் திரும்பி வந்து* "**சுவாமி, இடது கை இருக்கு. வலது கை காணவில்லையே. எங்கே**" *என்று கேட்டார். அதற்கு சுவாமி,* "**அது அவங்க அப்பா இருக்கும் போது லக்குவாய் அடிச்சிருச்சு**" *என்று கூறினார். வேலூரம்மா தூண் பின்னாடி இருந்த கையைப் பார்த்து* ''**இதோ இருக்கிறது. நான் முன்னாடி எடுத்து வைக்கட்டும்மா**" *என்று வேண்டினார்.* "**முடிஞ்சா எடுத்து வை**" *என்று சொன்னார் சுவாமி. அந்த அம்மையார் சுவாமியின் கையை எடுத்து வைக்க முயற்சி செய்தார்கள். இருந்தாலும் உள்ளங்கை தோல் திண்ணையில் ஒட்டிக்கொண்டிருந்தது. கையை பலமாகப் பிடித்து முன்னும், பின்னும் அசைத்தவுடன் கையில் இருந்த தோல் திண்ணையில் ஒட்டிக் கொள்ள கையெல்லாம் இரத்த காயமானது. இரத்த காயம் பார்த்து பயந்து போன அந்த அம்மையார் ஒரு துணியை மடித்து தொடைமேல் வைத்து அதன் மீது சுவாமியின் கையை வைத்து விட்டு* "**இதற்கு மேல என்னால் தாங்க முடியாது. நான் பெண். என்னை எவ்வளவோ சோதிக்கிறீர்கள்**" *என்று சொல்லிவிட்டு பிறகு புறப்பட்டு வேலூருக்குச் சென்று விட்டார்கள்.*

*மூன்றாம் நாள் வேலூரம்மா பூண்டி சுவாமியின் தரிசனத்திற்கு வந்தபோது இரண்டு மடல் வாங்கி வரச்செய்து சுவாமியின் முன்*

வைத்து ஒரு மடலில் விபூதியும், மற்றொரு மடலில் குங்குமத்தையும் நிரப்பி சுவாமியை வணங்கி, "**சுவாமி! இன்றிலிருந்து அன்பர்களுக்கு உங்கள் கையால் திருநீறு, குங்குமம் கொடுத்து அன்பர்களின் மனம் பளிங்குபோல் விபூதி, குங்குமம் மணக்கணும்**" என்று வேண்டினார். அன்றிலிருந்த ஸ்ரீபூண்டி மகான் கரங்களில் பட்டு நறுமணம் வீசும் விபூதி அன்பர்களின் இதயங்களில் நறுமணம் வீசுகிறது.

வடலூர் ஸ்ரீஇராமலிங்க சுவாமிகளுக்கு தைப்பூசம் சமயத்தில் அன்னதானம் நடைபெறும். 1967ஆம் ஆண்டு வேலூரம்மா ஸ்ரீபூண்டி மகானை விட்டுச் செல்ல மனமில்லாமல் அன்பர்களோடு சேர்ந்து கூழ் காய்ச்சியாவது அன்னதானம் செய்யலாம் என்று கூறினார். சில அன்பர்கள் அவர்களாகவே பணமளித்ததால் முதல் முறை வந்த பணத்தைக் கொண்டு தைப்பூச விழாவைக் கொண்டாடினோம். அடுத்த வருடம் அண்ணாமலை முதலியார், இந்த வருடம் இன்னும் விசேஷமாக நடத்தவேண்டும் என்றும் அதற்கு சந்தா வசூல் செய்யலாம் என்று ஆலோசனை கூறினார். பூண்டி மகானிடம் அனுமதி பெற இருவரும் சென்று அனுமதி கேட்டோம். "**அதெல்லாம் ஒண்ணும் வேணாம்பா. வருவதை எடுத்து சிறப்பாக செய்தால் போதும்**" என்று பூண்டி மகான் கூறினார். நாங்களும் அன்பர்களோடு கலந்து விழாவை நல்லபடியாக கொண்டாடினோம்.

1970ஆம் ஆண்டு தைப்பூசத்திருவிழாவிற்கு ரதம் செய்து, சுவாமிகளின் திருவுருவப்படத்தை வைத்து, பூ அலங்காரம் செய்து ஊர்வலமாக அழைத்து வந்தோம். 17 மூட்டை அரிசி சமையல் செய்தபோது மதியம் 2 மணிவரை அன்பர்கள் உணவருந்தியும் பாதி சாப்பாடு மீந்துவிட்டது. நானும், ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியும் சென்று பூண்டி மகானிடம் விவரத்தைக் கூறினோம். சிறிது நேரத்தில் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் எதிர்பாராமல் வந்தனர். இரவு ஏழு மணிக்கு எனக்கு பசியெடுத்ததால் சமையலறையை சென்று பார்த்தேன். சாதம் ஆறவைத்த துணியில் ஒட்டியிருந்த சாதத்தை எடுத்து ரசம் கலந்து என் கையில் வைத்து "**இதான்பா நமக்கு மிச்சமானது**" என்றார் சுப்பிரமணிய சுவாமி. ஸ்ரீபூண்டி மகான் அற்புதத்தை நினைத்து ஆனந்தமடைந்தேன்.

ஒரு சமயம் தைப்பூசத்திற்காக பல்லக்கு செய்து தரும்படி துரைசாமி ரெட்டியாருக்கு சொன்னார்கள். பூண்டியிலுள்ள திருஞானம் என்பவரை விமானம் அலங்காரம் செய்யும்படி கூறினார் காங்கனூர் சுவாமி/ தைப்பூசத்திற்கு பத்து நாட்களுக்கு முன் துரைசாமி ரெட்டியார் வீட்டிற்கு சென்று பார்த்த போது பல்லக்கு செய்யும் பணி அதுவரை ஆரம்பிக்கவில்லை. அவர் மனைவி கமலம்மா "**கொத்தந்தவாடி ரெட்டியார் வீட்டில் பூண்டி சுவாமிகளுக்கு பல்லக்கு செய்கிறார்கள் என்று ஊரெல்லாம் சொல்லிவிட்டார்கள். இதுவரை பணி ஆரம்பிக்கவில்லை. எனக்கு பயமாக இருக்கிறது. இந்த வேலை செய்து முடிக்காவிட்டால் இதைவிட பெரிய அவமானம் எதுவும் இல்லை**" என்று வருத்தப்பட்டார். நான் சுவாமியிடம் சென்று கமலம்மாவின் வருத்தத்தை கூறினேன். "**எல்லாம் நடக்கும்**" என்று ஆசீர்வதித்தார் பூண்டி மகான். மறு நாள் காலையிலேயே சுற்றுவட்டாரத்தில் உள்ள ஆசாரிகளை அழைத்து வந்து பணியை ஆரம்பித்தார். இரவு பகலாக செய்வித்தார். உணவை ரெட்டியார் வீட்டிலேயே ஏற்பாடு செய்தார்கள். தைப்பூசத்திற்கு மூன்று நாள் முன்பே பல்லக்கு தயார்செய்து முடித்து விட்டார்கள்.

ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு சேவை செய்து கொண்டு சாதனை செய்ய என் வேலை தடையாக இருப்பதாக நினைத்து ராஜினாமா கடிதம் எழுதி அலுவலகத்தில் வைத்தேன். என் வேலையெல்லாம் முடித்துவிட்டு மறுநாள் ஏழரை மணிக்கெல்லாம் சுவாமியின் அருகில் நின்று மனதில், "**சுவாமி! வேலூரம்மாவோடு சேர்ந்து மலையாளம் (கேரளா) செல்ல அனுமதி கொடுங்க**" என்று வேண்டினேன். மதியம் ஒரு மணியாகியும் சுவாமிகள் எனக்கு அனுமதி அளிக்கவில்லை. நான் மனதில் "**ஒன்று செல்ல அனுமதி தரணும். இல்லை வேண்டாம்னு சொல்லணும். எதுக்கு மௌனமாய் இருக்கறீங்க**" என்று வேண்டினேன். உடனே பூண்டி மகான் நிஷ்டைக்குச் சென்றார். இரு தொடைகளிலும் இரண்டு கைகளால் அடித்துக் கொண்டார். கண்கள் மிகவும் சிவந்து விட்டது. காலை 9.30 மணிக்கு சிவாஜி பஸ் வேலூரிலிருந்து செங்கம் செல்ல வந்து நின்றது. இன்னும் அனுமதிக்கவில்லையே என்று கோபமாக பேருந்து பக்கம் திரும்பிப்

*பார்த்தேன். வேலூரம்மா இரு கைகளிலும் பையுடன் பேருந்திலிருந்து இறங்கினார். நான் அதிர்ச்சியுற்றேன். என்னை கேரளா அழைத்து செல்வதாகக் கூறி, பூண்டிக்கு எதற்கு வந்தார்களோ என்ற எண்ணம் எழுந்தது. அந்த அம்மையார் கை, கால் கழுவிக்கொண்டு சுவாமியின் அருகில் சென்று வணங்கி சுவாமிக்கு உணவு ஊட்டி, தீபாராதனை செய்து விட்டு அங்கேயிருந்த என்னைப்பார்த்து,* **"இங்க இல்லாதது அங்கே என்ன போய் கற்றுக் கொள்ள போகிறாய்?"** *என்று கேட்டார். அன்று நான் மலையாளம் சென்று மந்திர, தந்திரம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், பகவதி ஆலயம் தரிசனம் செய்து கொள்ள வேண்டும் என்றும் கூறிய அந்த அம்மையார் இன்று இப்படி கேள்வி கேட்டால், கடைசியில் நான் என்ன சொல்வது என்று தெரியாமல் ஸ்தம்பித்துப் போனேன். மறு நாள் சுவாமிக்கு உணவு செய்து எடுத்து வந்து ஊட்டி, மீந்த அமிர்தத்தை எனக்கும் தந்து அவரும் சாப்பிட்டார்.*

*வேலூரம்மா சுவாமிக்கு பூஜை செய்ய பூக்கள் பறித்து வந்து என்னை எழுப்பினார். நான் முகம் கழுவி வந்தேன். வேலூரம்மா சுவாமிக்கு பூஜை செய்து, திருநீறு அணிந்து சென்றார். நான் சுவாமிகளிடம் திருநீறு வாங்கவில்லை. தெருப்பக்கத்திலிருந்த மின்கம்பி செல்லும் தூணில் சாய்ந்து கொண்டு முன்தினம் நடந்ததை நினைத்தவாறு சுவாமியை பார்த்துக் கொண்டு நின்றிருந்தேன். ஏழரை மணியளவில் சிலர் அந்த வழியில் நடந்து செல்லும்போது சுவாமி கண் அசைத்தவுடனேயே அவர்கள் நின்றுவிட்டனர். அவர்கள் பக்கம் பார்த்து,* **"ஏம்பா, இந்த காலத்தில உத்யோகம் வாங்கறதே குதிரைக் கொம்பா இருக்குது. கிடைத்த உத்யோகத்தை ராஜினாமா பண்ணலாம்னு பாக்கறாங்க"** *என்று கூறினார். எனக்கு எதுவும் புரியவில்லை. இரண்டாவது முறையும் சுவாமி அந்த வார்த்தைகளை கூறினார். நான் அங்கிருந்தவர்கள் பக்கம் சந்தேகத்துடன் பார்த்தேன். அனைவரும் விவசாயம் செய்பவர்கள் போல் தென்படுகிறார்கள். அவர்களில் ஒருவரும் உத்யோகம் செய்வது போல் தோன்றவில்லை. அப்போது நான் செய்த தவறு உணர்ந்தேன். மாதம் வருமானம் ரூ.90*

*கிடைக்கும் உத்யோகத்தை விட்டுவிடுவதற்கு ராஜினாமா கடிதம் எழுதி அலுவலகத்தில் வைத்து விட்டு வந்ததை எவரிடமும் கூறவில்லை. நான் செய்த பணி சுவாமிகளுக்கு இஷ்டமில்லையென தெரிந்து மனதில் என்னை மன்னிக்கும்படி வேண்டினேன்.* **"சுவர் இல்லாம சித்தரம் எழுதமுடியாதுன்னு சொல்றேன்"** *என்று ஸ்ரீபூண்டி மகான் எனக்கு சத்தியபோதனை செய்தார்.*

*ஒரு நாள் எங்கள் அலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர் வந்தார். நான் அன்று அலுவலகத்திற்குச் செல்லவில்லை. ஆட்சியர் வரும் விவரமும் எனக்குத் தெரியாது. அனைவரது கோப்புகளையும் சரிபார்த்துச் சென்றார். மறுநாள் நான் அலுவலகத்திற்கு சென்றவுடன்,* **''கலெக்டர் மீட்டிங் முடிந்தவுடனே கூப்பிட்டாலும் கவனிக்காமல் சென்று விட்டீர்களே"** *என்றனர் என் நண்பர்கள். ஸ்ரீபூண்டி மகான் என் உருவத்தில் மீட்டிங்கில் ஆஜராகி என்னைக் காப்பாற்றினார் எனத் தெரிந்து வியப்படைந்தேன்.*

*ஸ்ரீபூண்டி மகான் மஹாசமாதி முன்தினம் இரவு என் கனவில் சுவாமி திண்ணை மேல் தென்படவில்லை. நான் சுவாமியைத் தேடிச் சென்று கொண்டிருக்கும்போது சிறிது தூரத்தில் உள்ள குடிசை வீட்டின் திண்ணை மீது அமர்ந்து இருந்தார். நான் சுவாமிகள் இங்கு இருக்கிறாரே என்று சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து கொண்டேன். சுவாமி கண் அசைத்து சைகையால் என்னை அருகே வரும்படி கூப்பிட்டார். நான் ஒரு ஏழைக் குடும்பத்தை கண்களால் காண்பித்து காப்பாற்றும்படி கூறினேன். சுவாமி சரியென்று சம்மதித்தார் என்பது போல் தோன்றியது. நான் பூண்டிமகானின் சமாதியை முன்பே காண்பித்தார் என்று உணர்ந்தேன். 1980ஆம் ஆண்டு நான் இந்த பிளாக்கிலிருந்து (வட்டம்) மாறிய பிறகு ஒரு குடும்பத்திற்காக 20 வருடங்கள் கஷ்டப்பட்டேன். இப்போது ஸ்ரீபூண்டி மகான் அனுக்கிரகத்துடன் அவர் சேவையில், அவரது நினைவில் வாழ்க்கையை புனிதமாக்கிக் கொள்ளும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளேன்.*

**நேர்காணல்: 8**
**20.06.2005, பூண்டி**

**ஆ. ராமசாமி**, வயது: 60 க்கு மேல், கீழ்ப்புரம் கிராமம், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்.

*நான் சென்னை லயோலா கல்லூரியில் 1973ஆம் ஆண்டு பட்டப்படிப்பு முடித்துவிட்டு வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருக்கும் சமயத்தில் இராதாகிருஷ்ணன் அவர்கள் என்னை பூண்டி மகானை தரிசனம் செய்து கொள்ளும் படி கூறி பூண்டிக்கு அழைத்து வந்தார். அப்போது நான் பூண்டி மகானை மூன்று கேள்விகள் கேட்டேன்.*

**கேள்வி :** *சுவாமி, எனக்கு வேலை கிடைக்குமா?*

**பதில் :** *பூண்டி மகான் சிறிது நேரம் கழித்து,* **"கிடைக்கும்"** *என்று சொன்னார். எனக்கு சிறிது காலம் கழித்து வேலை கிடைத்தது. ஆனால் நிலைக்கவில்லை.*

**கேள்வி :** *சுவாமி, எனக்கு எப்போது கல்யாணம் நடக்கும்?*

**பதில் :** *பூண்டி மகான் சிறிது நேரம் கழித்து,* **"நடக்கும்"** *என்றார். நான் கல்யாணம் பண்ணிக்கொண்டேன். ஆனால் என் குடும்ப வாழ்க்கை நிம்மதியாக அமையவில்லை.*

**கேள்வி :** *சுவாமி என் கடன் எப்போது தீரும்?*

**பதில் :** *ஸ்ரீபூண்டி மகான் மீண்டும் சிறிது சமயம் கழித்து* **"தீர்ந்து விடும்"** *என்றார்.*

*1973ஆம் ஆண்டு என் சொத்துக்களை விற்று என் குடும்பக் கடனை அடைத்தேன்.*

*1995 ஆம் ஆண்டு மிகவும் கஷ்டத்தில் இருக்கும்போது ஸ்ரீபூண்டி மகான் கோவிலில் தரிசனம் செய்து கொண்டு கண்ணீருடன் ஒரு கோரிக்கையை வேண்டினேன். மறுநாளே அதை நிறைவேற்றினார் பூண்டி மகான்.*

*2004 ஆம் ஆண்டு ஜூனில் ஸ்ரீசுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு சுவாமியிடம், ''***நான் உங்களை செல்வம், வீடு, கார் போன்றவற்றை கேட்கவில்லை. என் வாழ்க்கைக்கு ஆதாரமாக ஒரு வேலை வாங்கிக் கொடுங்க***" என்று கண்ணீருடன் வேண்டியபொழுது எனக்கு மறுதினமே வேலை கிடைத்தது.*

*ஸ்ரீபூண்டி மகானை பக்தியோடு, நம்பிக்கையோடு எங்கிருந்து வேண்டினாலும் அவர் நமக்கு வழிகாட்டுவார். தன்னம்பிக்கை பெறச் செய்வார். அமைதியையும், ஆனந்தத்தையும் வரமாக அளிப்பார்.*

**நேர்காணல்: 9**
**21.06.2005, பூண்டி**

**முருகேசன்**, வயது: 66, காசிகுட்டை கிராமம், வேலூர் தாலுக்கா.

*நான் விவசாயம் செய்துகொண்டு எட்டாம் வகுப்பு வரை படித்தேன். பதினாறு வயதிற்குள் அருட்பா கற்றேன். எனது இடது கால் ஊனம். ஏர் உழுது விவசாயம் செய்ய நினைத்தாலும் என் கால் ஊனமாக இருந்ததால் செய்ய முடியாமல் போனது. அதனால் வாழ்க்கைமேல் விரக்தியுற்று தற்கொலைக்கு முயற்சி செய்தேன். அந்த சமயத்தில் ஒருவர் என்னை ஆன்மீக வழியில் சென்றால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னார். சிலர் விநாயகர் பூஜை செய்யுமாறும், அதனால் சூழ்நிலைகள் சரியாகிவிடும் என்றும் கூறவே, நான் பத்து வருடங்கள் விடியற்காலையில் மூன்று மணிக்கே எழுந்து பூஜை செய்வேன். காலை, மாலை எவ்வளவு வேலையிருந்தாலும் பூஜைக்கு பிறகே மற்ற வேலைகளை ஆரம்பிப்பேன். சிறிது காலத்திற்குள் எங்களுக்கு மின்சார இணைப்பு வந்ததால் நிலத்தில் மோட்டார் பம்ப் அருகில் குடிசை அமைத்து அதில் படம் வைத்து பூஜை செய்ய ஆரம்பித்தேன். ஒரு நாள் பூஜை செய்யச் சென்றபோது பீரோ சாவி காணவில்லை. என் தம்பிக்கு விஷயத்தை கூறியபோது என்னிடம் ஒரு மரத்துண்டு கொண்டு வந்து கொடுத்தார். அதற்கு பூஜை செய்ய நினைத்து சந்தனம் பூசி அலங்காரம் செய்து வைத்தேன். சிறிது நேரம் கழித்து வந்து பார்த்தபோது அந்த மரத்துண்டு தென்படவில்லை. பீரோ சாவி கிடைத்தது. பீரோவை திறந்து பார்த்தபோது சந்தனம் பூசிய கட்டை அதில் இருந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என்னுள் எதிர்பாராத சக்தி வந்தது. அதன் பலனாக என் ஊனமான காலும் சரியாகவே, ஏர் உழுவதற்கும் முடிந்தது.*

*எனக்கு இருபத்தியொன்று வயதாக இருந்த போது என் மனைவியை பிறந்த வீட்டிற்கு அனுப்பிவிட்டு மகாதேவமலை ஸ்ரீ*

*தேவானந்த சுவாமி தரிசனத்திற்காக சென்றேன். அவர் ஒரு பெரிய மகாத்மா. சித்து வேலைகள் தெரிந்தவர். ஆஜானுபாகுவான உருவம் உடையவர். பருத்த உருவம் உடையவர். ஒரு சமயம் அந்த மகான் பேருந்துக்காக காத்திருந்தார். பேருந்தில் இடமில்லாத காரணத்தால் நிற்காமல் சென்று விட்டது. அவர் அதை கவனித்து பேருந்து பக்கம் பார்த்து கை அசைக்கவே பேருந்து தானாகவே நின்று விட்டது. அவர் என்னிடம் "***உங்களுக்கு குடும்பம் இருக்கிறது. காலம் வரும் போது கிடைக்கும்***" என்று கூறி வீட்டிற்குத் திருப்பி அனுப்பினார்.*

*அங்கிருந்து வந்தபிறகு நான் வள்ளிமலை மௌனகுரு சுவாமியிடம் சென்றேன். அவர் திருவடிகளை வணங்கி, "***சுவாமி நான் வாழ்க்கை மீது வெறுப்படைந்து விட்டேன். நான் மாடு மேய்த்துக்கொண்டாவது உங்களிடம் இருக்கிறேன்*" என்று வேண்டினேன். அவர் "***இப்பொழுது உன் மனைவி கர்ப்பம் தரித்துள்ளார். பிறக்கப்போகும் குழந்தைக்கு ஐந்து வயது வரும்போது உனக்கு குரு கிடைப்பார்***" என்று எழுதிக்காண்பித்தார். எனக்கு அப்போது வரை என் மனைவி கர்ப்பவதி என்று தெரியாது. வீட்டிற்குச் சென்று என் மனைவியை கேட்டபொழுது, அவர் கர்ப்பம் தரித்து உள்ளார் என்று தெரிந்ததும், அந்த மகான் எல்லாம் அறிந்த ஞானி என்று உணர்ந்தேன். அப்போது எனக்குத் திருமணம் ஆகி மூன்றாண்டு முடிந்தது. மூன்றாண்டு கழித்து இரண்டு பெண், ஒரு மகன் பிறந்தார்கள். என் இருபத்தி ஏழாவது வயதில் நான் முதன் முறையாக பூண்டிமகானை தரிசனம் செய்து கொண்டேன். அப்பொழுது பூண்டி மகான் மலஜலங்களை பீடமாக அமைத்துக் கொண்டு திண்ணை மேல் வீற்றிருந்தார். ஸ்ரீ சுவாமியின் புகழைக் கேள்விப்பட்டு மீண்டும் இரண்டு மாதம் கழித்து மற்றும் இருவருடன் சேர்ந்து சுவாமி தரிசனத்திற்காக பூண்டிக்கு வந்தேன். என்னுடன் வந்தவர்கள் ஆற்றுக்குச் சென்றார்கள். நான் பூண்டி மகானிடம் தனியாக இருந்தபோது சுவாமியை வணங்கி, "***நான் சில மகான்களை தரிசனம் செய்து கொண்டேன். அவர்கள் எனக்குக் குழந்தை பிறந்த ஐந்து வருடங்கள் கழித்து குரு கிடைப்பார் என்று சொன்னார்கள். எனக்கு இப்போது இருபத்தியேழு வயதாகிறது. நீங்கள்தான் எனக்கு***

**வழிகாட்ட வேண்டும். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்''** என்று வேண்டினேன். பூண்டிமகான் என் மீது உமிழ்ந்தார். நான் இரண்டாவது முறை வேண்டியபோதும் மீண்டும் என் மீது உமிழ்ந்தார். நான் மிகவும் அவமானப்பட்டு வெட்கத்துடன் திரும்பிவிட்டேன். என்னுடன் வந்தவர்கள் அப்போது வந்துவிட்டனர். எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. முகத்திலிருந்த எச்சிலை துணியால் துடைத்துக் கொண்டேன்.

பிறகு நான் வேலூரிலிருந்த ஒரு சுவாமியிடம் சென்று **"சுவாமி! நான் பூண்டி சுவாமியிடம் எனக்கு உபதேசம் செய்யுமாறு வேண்டினேன். அவர் என் முகத்தில் உமிழ்ந்து விட்டார்"** என்று கூறினேன். அதற்கு அவர், **"வேலூரில் தோபா சாமி என்று ஒருவர் இருந்தார். அவர் வெல்ல மண்டி முன் துப்புவார். அப்படி செய்தபோது அந்த வியாபாரிகளுக்கு வியாபாரம் நன்றாக நடந்தது. நீ கோடீஸ்வரன். மீண்டும் சென்று அவரை தரிசனம் செய்து கொள். உன் முற்பிறவி பாவங்கள் நீங்கிவிடும்"** என்றார்.

மறுநாள் நான் பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டேன். சுவாமிகளிடம் சிறிது நேரம் நின்றிருந்த பிறகு **"போய் வருகிறேன்"** என்றேன். அவர் **"சரி, போய் வா"** என்றார். நான் கிளம்பி பேருந்தில் இரண்டாவது படிக்கட்டில் ஏறும் போது யாரோ கீழே இழுத்தார்கள். இனி நடந்து செல்லலாம் என்று முடிவு செய்து நடக்க ஆரம்பித்தேன். ஒரு அந்நிய மனிதர் என்னுடன் நடந்து கொண்டே தன் குடும்ப விஷயங்களை, சுக துக்கங்களை சொல்லிக்கொண்டிருந்தார். எனக்கு வியப்பாக இருந்தது. அவர் குடும்பத்தில் கூட, அதேவிதமான கஷ்டங்கள் போலும் என்று நினைத்தேன். அப்படி கலசபாக்கம் வரை வந்த பிறகு அவரிடம், **"பூண்டி சுவாமியிடம் உபதேசம் அளிக்குமாறு கேட்டேன். சுவாமி எப்போது எனக்கு உபதேசம் அளிப்பாரென்று தெரியாது"** என்றவுடனே **"ஆமாம்பா, உனக்கு அமாவாசையன்று உபதேசம் அளிக்க இருக்கிறார்"** என்றார் அந்த அந்நியர். இந்த விஷயம் இவருக்கு எப்படித் தெரியும் என்று ஆலோசித்தவாறு **''எந்த சமயத்தில் உபதேசம் அளிப்பார்"** என்று கேட்டேன். **"அமாவாசையன்று காலை ஏழு மணிக்கு"** என்றார். கலசபாக்கம் கூட்டுரோட்டுக்கு நடந்து சென்று கொண்டிருக்கிறோம். **"கார் வரும். நான் திருவண்ணாமலைக்குச் சென்று**

**வருகிறேன்**'' என்றார் அந்த மனிதர். அதற்குள் கூட்டுரோட்டுக்கு சென்ற பிறகு ஒரு கார் வந்தது. அதில் ஏறி அந்த மனிதர் சென்றுவிட்டார். அவர் சாதாரண மனிதரல்ல என்று நினைத்தேன். இதெல்லாம் ஸ்ரீ பூண்டி மகான் திருவிளையாடல் என்று நினைத்தேன்.

அமாவாசை முன்தினம் நான் பூண்டிக்கு வந்து இரவு இங்கேயே தூங்கிவிட்டு விடியற்காலையில் எழுந்து, கை, கால் கழுவிக் கொண்டு சுவாமியை தரிசனம் செய்து விட்டு, ''**போய் வருகிறேன்**'' என்று வேண்டினேன். “**சென்று வா**” என்றார் சுவாமி. அன்று அமாவாசை. ஏழு மணிக்கு உபதேசம் அளிக்கிறேன் என்று சொன்னவர் இன்றோ போய் வரச்சொல்கிறாரே! என்று நினைத்தேன். அப்படியானால் அவர் (எனக்குச் சொன்னவர்) பூண்டி சுவாமி கிடையாதோ! என்று சந்தேகத்துடன் நடந்து பூண்டி கிராமம் தாண்டி சென்று கொண்டிருந்தேன். அங்கு ஒரு மனிதர் தென்பட்டார். நான் அவரது ஊர், பெயர் கேட்டபோது பெயர் இராமலிங்கம் என்றும் ஊர் வடலூர் என்றும் கூறினார். அவர் வள்ளலார் அவதாரமே என்று தோன்றியது. அவர் சிறிது தொலைவிலுள்ள யாருமில்லாத இடத்தில் அமர்ந்தார். அப்போது சரியாக ஏழு மணியானது. நான் அவரிடம் பெண்ணாசை, உலகியல் எண்ணங்கள் அழிந்து போக வேண்டுமென வேண்டினேன். அவர் மண்ணில் மந்திரத்தை எழுதிக் காண்பித்து எனக்கு மந்திர உபதேசம் செய்தார். அவரை மீண்டும் எப்படி சந்திப்பது என்று கேட்டதற்கு தைமாதம் வருவேன் என்று கூறினார்.

தைமாதத்தில் எப்போது வருவார் என்று கூறவில்லை.

என் சித்தப்பாக்கள் இருவர் மற்றும் இன்னொருவரும் ஸ்ரீ பூண்டி மகான் நாளைவருவதாக அனைவரும் எண்ணுவதாக கூறினார்கள். மறுநாள் ஒருவர் வடக்கு திசையிலிருந்து மூன்று மணியளவில் கரும்பு தின்று கொண்டு எனக்கு எதிரில் வந்தார். வந்தவுடனே கரும்புத்துண்டை எனக்குக் கொடுத்தார். வந்தவர் ஸ்ரீ பூண்டி மகான் என்று தோன்றியதால் ஆனந்தம் அடைந்தேன். வீட்டில் சமையல் முடிவதற்கு இரவு ஒன்பது மணியானது. ஸ்ரீ சுவாமிகளுக்கு உணவை

வைத்துக் கொண்டே இருக்க, சாப்பிட்டுக் கொண்டேயிருந்தார். அதைப் பார்த்த என் சிற்றன்னை "**சுவாமிகளுக்கு நன்றாக பசிக்கிறது போலும்**" என்று சொன்னார். அந்த வார்த்தையோடு சுவாமிகள் போறும் என்று கூறி விட்டார். நான் சுவாமிகள் சாப்பிட்ட மிச்சத்தை (புக்தஷேஷம்) பிரசாதமாக நினைத்து சாப்பிட்டு விட்டேன். வீட்டின் அருகில் சிறிய ஆசிரமம் போல் கட்டிய இடத்தில் சுவாமிகளுக்கு படுக்கை விரித்தேன். இரவெல்லாம் சுவாமிகள் மௌனமாக இருந்தார். மறு நாள் விடியற்காலையில் சுவாமிகளுக்கு ஏதாவது குடிக்கத் தரலாம் என்று ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள டீக்கடைக்கு சுவாமிகளோடு கிளம்பினேன். சிறிது தூரம் நடந்து சென்ற பிறகு, "**நீ கட்டவும் முடியலை. விடவும் முடியலை. ஞானி எப்படி ஆகமுடியும்? மனசை கட்டினாத்தானே?**" என்று கூறினார். டீக்கடைக்குச் சென்ற பிறகு பால் வாங்கித் தந்தேன். சுவாமி பால் குடித்தவுடன் காலி டம்ளரை வாங்கி கடைக்காரரிடம் கொடுத்து விட்டு திரும்பிப் பார்த்தால் சுவாமிகள் அங்கே தென்படவில்லை. அப்படி சுவாமிகளின் தரிசன பாக்கியம் எனக்கு கிடைத்தது.

என் மகன் கர்ப்பத்தில் இருக்கும் போதே இராமலிங்கம் என்று பெயர் வைத்தேன். அவனுக்கு ஐந்து வயதாகும் போது உடல் நலக்குறைவால் உயிர் போகும் அபாயத்தில் இருந்தான். நான் பூண்டி சுவாமிகளின் அருள் பெறுவதற்காக மாலை ஆறு மணியளவில் பூண்டிக்குக் கிளம்பினேன். நான் வருவதற்குள் சுவாமிகள் முன் திரை போட்டிருந்தார்கள். திரை போட்ட பிறகு சுவாமியை அன்று தரிசனம் செய்ய முடியாது. ஆனாலும் நான் ஆவலுடன் திரையை விலக்கி சுவாமி சன்னதிக்கு வந்தேன். சுவாமிகள் எனக்காகவே அளிப்பதற்கு என்றபடி திருநீற்றை கையில் வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார். நான் சென்றவுடனே "**இந்தா திருநீறு வாங்கிக்கோ**" என்றார் சுவாமிகள். அப்போது இரவு ஒன்பது மணியானது. அந்த சமயத்தில் பேருந்து இல்லாமல் கலசபாக்கம் வரை நடந்து சென்று அங்கிருந்து லாரி மற்றும் வேனில் பயணம் செய்து ஊர் சென்றடைந்தேன். வீட்டைச் சென்று அடைந்தவுடன் என் மகனுக்கு சுவாமிகள் தந்த திருநீறு பூசினேன். காலைக்குள் உடல்நலம் சரியாகி

அவன் தாயிடம் பசிக்கிறது என்று கூறினான். இது சுவாமிகளின் திவ்ய அனுக்கிரகம் இல்லாமல் வேறென்ன?

ஒரு சமயம் நான் பூண்டி சுவாமியிடம் "**சுவாமி! நீங்கள் உபதேசம் அளித்து இரண்டு வருடம் ஆனாலும் எனக்கு பலன் எதுவும் தென்படவில்லையே?**" என்று கேட்டேன். உடனே சுவாமிகள், "**நாத்து நட்டவுடன் அரிவாள் எடுத்துக்கினு போக முடியுமா? அறுப்பு அறுக்க முடியுமா?**" என்று கூறினார். அன்றிலிருந்து என்னுள் பெண்ணாசை நீங்கி விட்டது. நான் (சதா) தியானம் செய்து கொண்டிருப்பேன். சிறிது காலத்தில் அசரீரி வாக்கு மூலம் எதிர்காலத்தை பற்றி அறிய முடிந்தது. அசரீரி வாக்கு மூலமாகவே என் தந்தையின் மரணம் குறித்து முன்கூட்டியே தெரிந்தது. சில சித்துகள் கிடைத்தன.

ஒரு முறை ஸ்ரீ பூண்டி மகான் "**நீ குடும்பத்தை நடத்த வேண்டும். நான்கு நாய்களுக்கு சோறு போடணும். நீ அதை கவனி**" என்று என்னிடம் சொன்னார். என் மனைவி, மற்றும் குழந்தைகளுடன் வாழ்க்கை நடத்துவதற்காக கூறினார் என்று எனக்கு புரிந்தது. "**நான் எத்தனை பிறவி எடுத்தேனோ? இந்த பிறவியில் நீங்கள் எனக்கு குருவாக கிடைத்தீர்கள். திரும்பவும் குடும்பத்தில் மாட்டி விடாதீர்கள்**" என்று வேண்டினேன். ஸ்ரீ சுவாமி எனக்கு அவர்களோடு பேசுவதற்கு ஐந்து நிமிடம் அவகாசம் அளித்தார்.

வேலூரில் வசிக்கும் ஒரு பெண்மணி அடிக்கடி பூண்டி வந்து பூண்டி மகானை தரிசனம் செய்வார். அவருக்கு என் குடும்ப நிலைமை தெரியும். அவர் ஆரணி பக்கத்திலிருக்கும் வலசித்தேரி என்னும் கிராமத்தில் உள்ள மூன்று ஏக்கர் நிலத்தை என் பெயரில் எழுதித் தருவதாகவும், அங்கேயே ஆசிரமம் அமைத்து என் குடும்பம் சுகமாக வாழ்க்கை நடத்தலாம் என்றும் தெரிவித்தார். நான் வலசித்தேரி சென்று நிலத்தைப் பார்த்தேன். எனக்கு பிடித்தது. முன்பு பூண்டி மகானிடம் சொல்லி, அவர் அனுமதி பெற்ற பிறகு ஒரு முடிவிற்கு வரலாம் என்று நான், என் மனைவி, மற்றும் வேலூரம்மாவோடு சேர்ந்து ஸ்ரீ பூண்டி மகான் சன்னதிக்கு வந்தோம். நான் வேலூரம்மாவிடம் முன்பே சுவாமிக்கு எதுவும் கூற வேண்டாம் என்றும் சுவாமி அவர்களாகவே அனுமதி அளித்தால் சரி,

இல்லையென்றால் வேண்டாம் என்றேன். நாங்கள் சுவாமிகள் எதிரில் நின்றவுடன் சுவாமி, ''**வலசித்தேரிக்கு எதுக்கு போறீங்க. வலசித்தேரிக்கு போகவேண்டாம்**'' என்றார். மீண்டும் சுவாமி, "**சமயம் வரும்போது போர் போட்டுக்கலாம். தண்ணீர் வரும். அதுக்கு ஏன் கவலைபடற**'' என்றார். ''**தண்ணீர் இல்லாமல் நிலத்தில் பயிர் செய்யமுடியலை. குடும்பத்தை நடத்துவதற்கு ஏதாவது ஒன்று செய்யணும் இல்லையா?**'' என்றேன் நான். ஸ்ரீ சுவாமி மீண்டும் "**போர் போட்டால் தண்ணீர் வரும், எல்லாம் தானாகவே நடக்கும்**" என்றார். பிறகு நாங்கள் சாப்பிட்டுவிட்டு ஆற்றின் பக்கத்தில் உள்ள விநாயகர் கோயிலில் படுத்துக் கொண்டு மறுநாள் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு கிளம்பி ஸ்ரீஇராமர் கோயிலுக்கருகில் வந்து கொண்டிருந்தோம். கோயிலுக்கு பக்கத்துத் தெருவில் ஸ்ரீபூண்டி சுவாமி உட்கார்ந்திருந்த வீட்டிலிருந்து 400 (நானூறு) அடி தொலைவில் இருந்தது. ஸ்ரீபூண்டி மகான் சுதர்சன சக்கரம் விட்டார். என் மனைவி, வேலூரம்மா ஜோதி சக்கரம் வருகிறதென சத்தம் போட்டனர். அது சூரியகாந்திப் பூ போலவும் அக்னிக் கோளம் போலவும் தென்பட்டது என்று சொன்னார்கள். எனக்கு எதுவும் தென்படவில்லை. அந்த சக்கரம் வந்து என் தலையில் பட்டது. அதற்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. நான் பயத்துடன் ஸ்ரீபூண்டி மகான் சன்னதிக்கு வந்தேன். சுவாமி என்னைப் பார்த்து புன் சிரிப்பு சிரித்தார். என்னுடன் கொண்டு வந்த பையை படுத்திருந்த இடத்திலேயே மறந்து வைத்துவிட்டேன். அது ஞாபகம் வந்ததால் திரும்பிச் சென்று பையை எடுத்துக்கொண்டு ஆற்றின் பக்கமாக வந்து கொண்டிருக்கிறேன். அங்கிருந்த ஆலமரத்தின் அருகே ஒரு மின்னல் ஒளி தோன்றியது. ஆகாயத்தில் மேகங்கள் இல்லை. இது பூண்டி மகான் லீலையே என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ சுவாமி அவர்கள் வேறு உருவத்தில் ஆலமரத்தினருகே அமர்ந்திருந்தார். நான் அவரை அந்த மின்னலைப் பற்றி கேட்டேன். ஸ்ரீ சுவாமி, ''**அது மாயையின் ஒளி**'' என்றார். "**அப்படியானால் நான் என்ன செய்ய வேண்டும் சுவாமி?**" என்று கேட்டேன். அப்போது "**நீ ஒரு பெரிய மகானாக ஆக வேண்டிய நேரத்தில் போன**

**ஜென்மத்தில் செய்த பாவங்கள் எதிர்நோக்கி இருந்தது. அது உன் தவத்தைக் கெடுக்கும். அதை அனுபவித்துதான் ஆகணும்**" என்றார். நான் ஸ்ரீ சுவாமிகளே என்னைக் காப்பாற்ற வேண்டுமென மனக்கவலையுடன் ஸ்ரீ பூண்டி மகான் சன்னதிக்கு வந்து நின்று கொண்டேன். "**உனக்கு முன்பாக நான் வருவேன் போப்பா**" என்றார்.

வேலூரம்மா, நான், என் மனைவியோடு கிளம்பினேன். வேலூரம்மா கண் மருத்துவமனைக்கருகில் இறங்கி சென்று விட்டார். நானும், என் மனைவியும் காய்கறி சந்தைக்குச் சென்றோம். அங்கே வெள்ளையாடை உடுத்தி, நரைத்த தாடியுடன் பொன்னிறத் தேகத்துடன் ஒளி வீசுகின்ற ஒருவர் அமர்ந்திருந்தார். "**ஏன் இவ்வளவு நேரம் கழித்து வர்றீங்க**"? என்று கேட்டார். உனக்கு முன்பாக வருவேன் என்ற சுவாமியின் வார்த்தைகள் நினைவிற்கு வந்து, அவரே இந்த உருவில் வந்துள்ளார் என நினைத்து, அவரை அழைத்துச் சென்று தேநீர் குடிக்கச் சொன்னேன். அவரே எனக்கு தேநீர் வாங்கித் தந்தார். நான் யோகா செய்யும்பொழுது என்னுள் ஏற்படும் மாற்றங்களை பற்றி கேட்டபோது உடலில் எந்த இடத்தில் என்று கேட்டுத் தெரிந்து கொண்டார். பிறகு இதற்கு முன்பு, "**உங்களுக்குள் கணவன், மனைவி உடலுறவு இருந்தது. பத்து வருடங்களாக இல்லை அல்லவா?**" என்றார். நானும் என் மனைவியும் ஆமாம் என்றோம். "**அது இன்றிலிருந்து வரும்**" என்றார் சுவாமி. நான் "**எனக்கு அந்த உறவு வேண்டாம்**" என்றேன். ஸ்ரீசுவாமி, "**இல்லை சிறிது காலத்திற்கு பிறகு நான் வாங்கிக் கொள்வேன்**" என்று சொன்னார். மேலும் அவர் தனக்கும் மனைவி, குழந்தைகள் இருப்பதாக கூறினார். நான் "**இருந்தால் எனக்குக் காட்டுங்கள்**" என்று சொல்லியவுடன் சந்தையின் உள்ளே சென்று, தூய வெள்ளையாடை அணிந்து, குழந்தையை வைத்திருந்த ஒரு பெண்மணியோடு வந்தார். பிறகு எங்களுக்கு விடை கொடுத்து விட்டு அவர்கள் சென்று விட்டார்கள்.

எனக்கும், என் மனைவிக்கும் மனக்கஷ்டம் வந்தது. ஒரு நாள் என் மனைவி வீட்டில் தென்படவில்லை. பிறந்த வீட்டிற்கும் செல்லவில்லை. தற்கொலை செய்து கொண்டாரோ என்று நினைத்தேன். எப்படியானாலும் சரி பூண்டி மகானின் தரிசனத்திற்கு

செல்ல வேண்டும் என்று கிளம்பி கலசபாக்கத்திற்குச் சென்றேன். அங்கே பூண்டிமகான் போலவே வேறு ஒரு சாமியார் இருப்பார். அவர் என்ன சொன்னாலும் அதையேதான் பூண்டிமகானும் கூறுவார். நான் அந்த சுவாமியிடம் நடந்ததை கூறியபோது "**நான்தான் செய்தேன்**" என்றார். பூண்டி மகானிடம் சென்று பார்க்குமாறு கூறினார். நான் பூண்டி வந்து வெளியே இருந்த காவலாளியிடம் நடந்த செய்திகளைக் கூறினேன். காவலாளி சென்று சுவாமியிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது சுவாமி, "**ஆமாம், நான் தான். அனுப்பிவிட்டேன்**" என்றார். "**ஏதோ புள்ளகுட்டிக்காரன். காப்பாத்துங்க**" என்று காவலாளி சுவாமியை வேண்டினார். இதை எல்லாம் பார்க்கின்றபோது நான் பொறுமையிழந்து "**சுவாமி! என் மனைவியை என்னிடம் ஒப்படைத்து விடு**" என்று கேட்டேன். "**சரி வரும்**" என்று சொன்னார் சுவாமி. நான் திரும்பி வீட்டிற்குச் செல்வதற்குள் மனைவி வீடு திரும்பி விட்டார். அவர் தற்கொலை செய்து கொள்ள கிணற்றின் அருகேசென்றாராம். அன்று அவர் வெள்ளைச்சேலை அணிந்து இருந்ததால் பள்ளிச் சிறுவர்கள் அவரைப் பார்த்து "**டீச்சர்! டீச்சர்!!**" என்று கத்தியதால் அவர் பக்கத்திலிருந்த வீட்டில் இருந்து விட்டு பிறகு திரும்பி வீட்டிற்கு வந்து விட்டார்.

நானும், காப்பலூர் சுவாமியும் நாயுடு மங்கலத்தில் உள்ள ஜெகதீச சாமியைப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டோம். வழியில் 2 கிராம் தங்க நாணயம் கீழே விழுந்து இருக்கிறதென காப்பலூர் சுவாமி காண்பித்த பொழுது நான் அதை எடுக்கக்கூடாதென்றேன். ஆனால் என் கவனம் காய வைத்திருந்த வேர்க்கடலை மீது சென்றது. அப்போது அவர் அதை எடுக்க வேண்டும் என்றார். நாங்கள் ஜெகதீச சாமியிடம் சென்று அமர்ந்தபோது அவர் எங்களுக்கு சாப்பிட வேர்க்கடலை அளித்தார். ஒரு பாத்திரத்தைக் காண்பித்து அதில் நான்கு வீட்டிற்குச் சென்று பிச்சை எடுத்து வருமாறு கூறினார். நான் பிச்சைக்கு செல்லவில்லை. பதினைந்து நிமிடங்களுக்கு பிறகு "**இதோ உங்களுக்கு சாப்பாடு வந்திருக்கு பாருங்கள்**" என்று கூறி அப்போதே வீட்டில் இருந்து எடுத்து வந்த உணவை வடை, பாயசத்துடன் எங்களுக்கு அளித்தார். பிறகு நான் பூண்டி மகானை தரிசனம் செய்ய

வந்தவுடன் சுவாமி என்னை பிச்சையெடுக்குமாறு ஆணையிட்டார். நான் வேலூரம்மாவிடம் சென்று ஸ்ரீசுவாமியின் ஆணைப்படி நான்பிச்சையெடுக்க நினைத்துள்ளேன் என்று கூறவே அவர் ஒரு பாத்திரம் மற்றும் பையைக் கொடுத்து முதல் பிச்சை அளித்தார்.

எங்களுடையது பேரும், புகழும் பெற்ற பெரிய குடும்பம். எங்களுக்கு முப்பது ஏக்கர் நிலம் உள்ளது. இருந்தாலும் ஸ்ரீ சுவாமியின் ஆணைப்படி நான் தினந்தோறும் கோணிப்பையை சுற்றிக்கொண்டு மவுனமாக பிச்சையெடுக்கச் செல்வேன். ஒவ்வொரு வீட்டு வாசலில் சென்று மணியடித்ததும் வந்து பிச்சை அளிப்பார்கள். எல்லோரும் தெரிந்தவர்களாக இருந்ததால் நான்கு வீடுகள் சென்றாலே பாத்திரம் நிறைந்துவிடும். அப்படிக் கொண்டுவந்ததை பூண்டி சுவாமிக்கு நைவேத்தியம் அளித்து, பிறகு குழந்தைகளுக்குத் தருவேன். உணவுக்காக சில நாய்கள் கூட வரும். அவற்றிற்கும் அளித்த பிறகு நான் உண்பேன். உறவினர்கள் எல்லாம் குடும்ப கௌரவம் குறைந்து விடும் என்று கோபித்தனர். என் தமக்கையார் எவ்வளவு தானியங்கள் வேண்டுமானாலும் அனுப்புவதாகவும், பிச்சை எடுப்பதை விட்டுவிடுமாறும் கூறினார். நான் என் குரு ஆணைப்படி செய்கிறேன் என்றும், இதில் யாரும் தலையிடவேண்டாம் என்று கூறினேன். என் மனைவி, பிச்சை உணவை தொடமாட்டார். அவள் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ள வேலூருக்குச் சென்று அங்கே ஒரு ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, பாலிடால் என்னும் விஷமருந்து புட்டி மற்றும் பழங்கள் வாங்கிக் கொண்டு பேருந்தில் கலசமங்கலத்தில் இறங்கி வீட்டிற்குச் செல்லும்போது ஸ்ரீபூண்டி மகான் என் உருவில் அவள் எதிரில் சென்று அவள் மடியில் என்னவென்று கேட்டு அவரிடமிருந்து விஷப்பாட்டில், பழங்களை வாங்கிக் கொண்டார். **“பிறகு பேசுகிறேன். நீ வீட்டிற்குச் செல்”** எனச்சொல்லிவிட்டு சென்று விட்டார். என் மனைவியும் வீட்டிற்குச் சென்றார்.

நான் அன்று பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு இரவு ஒன்பது மணிக்கு வீட்டிற்குச் சென்றேன். நடந்த விஷயங்கள் எனக்குத் தெரியாது. அவள் என்னிடம் எதுவும் பேசாததால், **“ஏன் இப்படி**

**இருக்கிறாய்**" என்று கேட்டேன். "**அந்த பாலிடால் மருந்து பாட்டில் எங்கு வைத்துள்ளாய்**" என்று கேட்டாள். "**எனக்கு அதன் விஷயம் எதுவும் தெரியாது. என்னை ஏன் கேட்கிறாய்?**" என்று கேட்டேன். என் மனைவி நடந்த விஷயத்தை கூறியவுடன் நான் "**பூண்டி மகான் சாட்சியாக அந்த மருந்தை உன்னிடம் இருந்து வாங்கவில்லை. நான் உன் எதிரிலும் வரவில்லை**" என்று கூறினேன். என் மனைவி ஒரு வேளை இது ஸ்ரீபூண்டி மகான் அற்புத லீலையாக இருக்கும் என்று நினைத்தார்.

மறுநாள் வீட்டிற்கு எதிரில் உள்ள கிணற்றின் அருகே பாட்டிலில் இருந்த விஷத்தை கீழே கொட்டிவிட்டு காலிபாட்டில் அங்கே கீழே போட்டது போல் இருந்தது. அந்த பாட்டிலை எடுத்து வந்து என் மனைவியிடம் அது எங்கு கிடைத்தது என்ற விவரத்தைக் கூறி, "**நீ என்ன செய்தாலும், இரயிலில் மோதிக் கொண்டாலும், பூண்டி மகான் உன்னை விட மாட்டார். உன் புத்தியை மாத்திக்கோ**'' என்றேன். அன்றிலிருந்து என் மனைவி நான் எடுத்து வந்த பிச்சை உணவை சாப்பிட ஆரம்பித்தார்.

சிறிது நாள் கழித்து ஒரு சுவாமி தென்பட்டு, "**உனக்கு நாளை மறுநாள் நல்ல காலம் வருகிறது**" என்றார். சிறிது நேரம் கழித்து அதே இடத்தில் மற்றொரு சுவாமி உட்கார்ந்திருந்த நிலையில் தென்பட்டு, "**பிச்சையெடுப்பதை நிறுத்திவிடு**" என்றார். "**எத்தனையோபேர் சொன்னாலும் நான் நிறுத்தவில்லை. நீங்கள் சொன்னால் நான் நிறுத்துவேனா?**" என்றேன். பிறகு அவர் என்னிடம் ஒரு செய்தியைச் சொன்னார். அதிலிருந்து அவர் பூண்டி மகான் என்று எனக்கு புரிந்தது. "**பிச்சை எடுத்தது போதும். நிறுத்தி விடு**'' என்று மீண்டும் கூறினார். சுவாமிகளை வீட்டிற்கு அழைத்து வந்து வீட்டின் முன் அமர வைத்தேன். ஸ்ரீ சுவாமிகள் கை நிறைய குங்குமம் அளித்து ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் படத்தை என் கையில் கொடுத்து, "**இதை வைத்துக் கொள். இது நாள் வரை எடுத்த பிச்சையை நிறுத்து**" என்றார். "**அப்படியே நிறுத்தி விடுகிறேன். உணவுக்கு வழிகாட்டுங்கள்**" என்று வேண்டினேன். "**வழி தானாகவே வரும்**" என்று கூறிவிட்டு என் தம்பியிடம் (என் தந்தைக்கு இரண்டாவது மனைவியின் மகன்) "**அவர்களுக்கு ஐந்து நாள் உணவு அளி**" என்றார். அதன் பிறகு யாரோ ஒருவர் மூலமாக உணவு கிடைத்தது. பிறகு

கிணற்றில் தண்ணீர் வந்தது. விவசாயம் நடந்தது. குடும்பம் நிம்மதியாக நிடைபெற்றது. வாழ்க்கையில் நிம்மதி ஏற்பட்டது.

என் மகன் மூன்றாவது வகுப்பு படித்து கொண்டிருந்தாலும் அ, ஆ, கூட தெரியவில்லை. ஒரு நாள் ஆரிசியர் அடித்தார் என்று பள்ளியில் இருந்து தலை மீது காயத்துடன், இரத்தம் வழிய வந்தான். இனி இவனுக்கு படிப்பு வராது என்று பீடிச் சுற்ற கற்றுக் கொள்ளச் சொன்னேன். அவனும் ஒரு வருடத்தில் நன்றாக கற்றுக்கொண்டான். அடுத்த படிப்பு ஆண்டு ஆரம்பிக்கும்போது நான் பூண்டி மகான் சன்னதிக்கு சென்று "**சுவாமி எனக்கு இருப்பது ஒரே ஒரு மகன். அவனுக்கு படிப்பு வரவில்லை**" என்றேன். ஸ்ரீபூண்டி மகான் "**படிக்கவை! நல்லது!**" என்றார்.முதல் வகுப்பில் மீண்டும் சேர்க்கலாம் என்று எண்ணி வீட்டிற்குச் சென்று எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டேன். அன்று விடியற்காலையில் '**பெருமாள்**' என்று அசரீரி வாக்கு கேட்டது. பையனை பள்ளிக்கு அழைத்துச் சென்றேன். பள்ளி தலைமையாசிரியர் மூன்றாவது வகுப்பு படித்த பையனை முதல் வகுப்பில் சேர்க்கணும் என்றால் பெயர் மாற்ற வேண்டும் என்றார். விடியற்காலையில் எனக்குக் கேட்ட பெருமாள் என்ற பெயருடன் பதிவேட்டில் பதிவு செய்தேன். என் மகன் வகுப்பில் முதலாவது வந்தான். இன்று இராணிப்பேட்டை '**சிப்காட்**'-ல் பணிசெய்து கொண்டு ஸ்ரீபூண்டி சுவாமி அனுக்கிரகத்தால் சொந்தக்காலில் நிற்கிறான்.

ஒரு சமயம் நான் பூண்டி மகானை தரிசித்து வரலாம் என்று பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீசுவாமிகள் என்னை பூண்டியிலேயே இருக்கச் சொன்னார்.,நான் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் வீட்டில் சாப்பிட்டுவிட்டு பூண்டியிலேயே இருந்துவிட்டேன். வீட்டிற்கு திரும்பி செல்லாததால் என் மனைவி என்னைத் தேடிக் கொண்டு வந்தார். அங்கிருந்த சாதுக்கள் அனைவரும் என்னை வீட்டிற்குச் செல்லச் சொன்னார்கள். நான் நாயுடுமங்கலம் ஜெகதீசன் அவர்களிடம் ஆலோசனை கேட்டேன். அவர் ஒவ்வொரு பௌர்ணமி, அமாவாசைக்கு தவறாமல் வருவதாக பூண்டி மகானிடம் வேண்டுமாறு கூறினார். நான் சுவாமியிடம் அப்படியே

வேண்டினேன். ஸ்ரீ சுவாமியும் அப்படியே வந்து கொண்டிருக்குமாறு வீட்டிற்கு அனுப்பிவைத்தார். அப்போதிலிருந்து ஒவ்வொரு பௌர்ணமி, அமாவாசையன்றும் தவறாமல் வந்து கொண்டிருக்கிறேன்.

ஒரு சமயம் நானும், சண்முகம் என்பவரும் ஸ்ரீபூண்டி மகான் சன்னதியில் இருக்கும் போது ஸ்ரீ சுவாமி,

'ஆட்டம் பார்க்கிற அண்ணாத்தே
அசந்து நிக்குற அண்ணாத்தே
அங்கேயும் இங்கேயும் பாக்குறத என்னாத்தே'
என்று பாடினார்.

ஸ்ரீபூண்டி மகான் எங்கள் இருவரையும் பார்த்து எதற்காக இப்படி பாடினாரோ தெரியவில்லை. எங்களுக்கு பெருத்த அவமானமாக இருந்தது. நான் சண்முகத்தை பார்த்து "**உனக்குச் சொன்னார்**" என்று சொல்லியபோது அவர் "**இல்லை உனக்குத்தான் சொன்னார்**" என்றார். ஸ்ரீபூண்டி மகான் பரிபாஷையில் சொன்னது எங்களுக்கு புரியவில்லை.

நான் பூண்டி மகான் தரிசனத்திற்காக வர நினைக்கும் போதெல்லாம் பூண்டிக்கு வருவதற்கான பேருந்து கட்டணம் சரியாக கிடைத்துவிடும். திரும்பிச் செல்லும் முன்பு சுவாமி சன்னதியில் மௌனமாக பேருந்து கட்டணம் இல்லையென்று மனதில் நினைப்பேன். ஸ்ரீ சுவாமிகள் பேருந்துக் கட்டணத்திற்கு ஏற்பாடு செய்வார். பசித்தால் நான் மனதில் நினைத்தவுடன் உணவும் கிடைக்கும். சுவாமிகளுக்கு வந்த பிரசாதக் குவியலில் இருந்து எடுத்துச் சாப்பிட நினைத்து மனதில் சுவாமியைக் கேட்டால் கண் அசைவிலேயே சாப்பிடச் சொல்வார். யாராவது சுவாமிகளுக்கு அளிப்பதற்கு இட்டிலி வாங்கி வந்தால் அச்சமயத்தில் நான் பசியாக இருந்தால் அவர்களிடம் பிறகு சாப்பிடுவதாக கூறிவிட்டு, அவர்கள் சென்ற பிறகு என்னைச் சாப்பிட சொல்லி சைகை செய்வார். பெற்றவர்களை விட அதிகமாக என் பசியைப் போக்கி எந்தக் குறையும் இல்லாமல் சமயத்திற்கு வேண்டிய பணம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வார்.

**"தியானமும் யோகமும் இல்லாவிட்டால் மழை எப்படி வரும்"** என்று கூறுவார் ஸ்ரீ பூண்டி மகான். நான் ஒரு மண்டலத்துக்கு தினந்தோறும் ஒரு டம்ளர் தண்ணீர் மட்டும் அருந்தி தீட்சையில் இருக்க நினைத்து எங்கள் ஊரிலுள்ள ஒரு ஆலமரத்தின் கீழே அமர்ந்தேன். நாற்பத்தியாறாவது நாள் யாரோ ஒருவர் ஒரு டம்ளர் பால் கொண்டு வந்து கொடுத்தார். நாற்பத்தியெட்டாவது நாள் தீட்சை முடிந்த பிறகு மழை பெய்தது. தீட்சை சமயத்தில் பசி, தாகம் எதுவும் என்னை பாதிக்கவில்லை.

தீட்சை முடித்து பூண்டிக்கு வரும் சமயத்தில் காங்கனூர் சுவாமி உருவத்தில் வந்து, **''சரியாக சூலத்தை பிடிச்சிக்கணும்பா. பச்சைக்கொடிபோல மனசு ஆடக்கூடாது"** என்றார்.

ஒரு நாள் நாயுடுமங்கலம் செல்ல சுவாமியை அனுமதி கேட்டேன். சுவாமி செல்லவேண்டாம் என்றார். அதுவரை வானில் கருமேகங்கள் இல்லை. ஆனாலும் அரைமணி நேரம் கழித்து காற்றுடன் கூடிய கல் மழை பொழிந்தது. ஸ்ரீ சுவாமி, **"போயிருந்தால் என்னாகும். தெரிஞ்சிதா!"** என்றார்.

ஸ்ரீ பூண்டி மகான் ஒரு மூலிகைக் குறித்து, **''அந்த மூலிகை சாப்பிட்டால் பத்து நாளானாலும் பசியெடுக்காது"** என்று கூறி அந்த மூலிகையின் வடிவத்தை விவரித்துக் கூறினார். நான் அந்த மூலிகை எங்கு கிடைக்கும் என்று கேட்டேன். **"அந்த மூலிகை திருமலையில் பாபநாசத்திற்கு போகும் வழியில் கிடைக்கும்"** என்றார் சுவாமி. நான் ஒருவரிடம் இதைக் கூறியவுடன் அந்த மூலிகையால் தங்கம் செய்யலாம் என்று பலவந்தம் செய்ததால் என் ஏழ்மைக் காரணமாக மனம் மாறி அவ்வாறு செய்ய சம்மதித்து திருப்பதிக்கு புறப்பட்டேன். பேருந்தில் என் பக்கத்திலிருந்த மனிதர் பேச்சினிடையே திருப்பதியிலிருந்து திருமலைக்கு நடந்து செல்லும் வழியில் சில அற்புத அனுபவங்கள் கிடைக்கும் என்றும், அப்படியே செல்லவும் வழிகாட்டினார். நான் அவர் சொன்னபடியே நடந்து செல்லும்போது காலி கோபுரம் அருகில் சென்றபோது, எதிரில் வந்து கொண்டிருந்த நாயை வைத்திருந்த ஒரு மனிதர் என்னைப் பார்த்து நிற்கச் சொன்னார். **"நீ யார்? இந்த இரவு நேரத்தில் என்னை நிற்கச்**

**சொல்கிறாய்?"** என்றேன். **"நான் பரபிரம்மன்"** என்று கூறினார். **"பரபிரம்மம் என்றால் என்ன?"** என வினவினேன். **"பரபிரம்மம் என்றால் எல்லாம் நிறைந்துள்ளது"** என்றார். **"அப்படி நிறைந்திருந்தால் எனக்கு வழி காட்டுங்கள்"** என்று கேட்டேன். அப்போது அவர் எனக்கு (காலி கோபுரம்)-ல் உபதேசமளித்து அந்த இரவு அங்கேயே படுத்துவிட்டு விடியற்காலையில் கிளம்பிச்செல்லுமாறு கூறிவிட்டு அந்த மனிதர் சென்றுவிட்டார். விடியற் காலையிலேயே கிளம்பினேன். பாபநாசத்திற்கு ஒரு கிலோமீட்டர் இருக்கும் போது ஒரு மூதாட்டி தென்பட்டு **"குழந்தாய்"** என்று கூப்பிட்டபோது திரும்பிப்பார்த்தேன். அவர் கைகளில் தொழுநோய் தாக்கியிருந்தது. அந்த மூதாட்டி, **"காட்டுக்குள் சென்றால் திருடன் என்று நினைத்து காவலாளிகள் (போலீஸ்) பிடித்துக் கொள்வார்கள்"** என்றார். நான் பெயர் கேட்டபோது அலமேலும்மா என்றார். **"வீடு எங்கே"** என்றதற்கு **"நான் எங்கு இருக்கின்றேனோ அங்கேயே"** என்றார். ஸ்ரீபூண்டி சுவாமி அவர்களே இந்த உருவத்தில் வந்தார் என்று நினைத்து **"நான் அந்த மூலிகையை உணவுக்காக உபயோகப்படுத்திக் கொள்கிறேன். ஆனால் ரசவாதம் செய்ய மாட்டேன்"** என்றேன். **"அப்படியானால் சென்று வா"** என்றார் அந்த மூதாட்டி. அவரை **"நான் திரும்பி வரும்வரை இருப்பீர்களா"** என்று கேட்டதற்கு **"இருப்பேன்"** என்றார். நான் காட்டுக்குள் சென்று ஸ்ரீபூண்டி மகான் கூறிய அடையாளங்களை நினைவில் வைத்து, அந்த இலையைத் தேடி எடுத்துக் கொண்டு ஒரு மணிநேரத்தில் திரும்பி அந்த மூதாட்டியிடம் வந்தேன். ஞானத்தை உபதேசிக்குமாறு அவரை வேண்டினேன். **"நீ என்றைக்கு ஆனாலும் கடவுள் பிள்ளைதானே!"** என்றார்.நான் வீடு திரும்ப போதிய பணம் இல்லை என்று சொன்னதற்கு **"இருப்பதில் வீடு போய் சேர முடியும்"** என்று சொன்னார். **"நான் திரும்ப வரும்போது காட்டில் இருப்பீர்களா?"** எனக் கேட்டதற்கு **"ஊம். இருப்பேன் கண்டிப்பாக"** என்றார் அவர்.

நான் புறப்பட்டு ஊர் திரும்ப, இரயில்வே நிலையத்தில், ப்ளாட்பாரம் (நடைபாதை)யில் நின்று கொண்டிருந்தேன். என்னிடம் இரண்டு, மூன்று ரூபாய்க்கு மேல் பணமில்லை. நான் என் மனதில், **"எனக்கு சாப்பாடு கொடுத்தால் உன்னை அலமேலு மங்கை என்று**

**நம்புகிறேன்**" என்றேன். நடைபாதையில் யாரோ ஒருவர் எனக்கு அளிக்க இரண்டு கைகளில் உணவு கொண்டு வந்தார். நான் "**பொட்டலம் கட்டியிருந்த சாப்பாடு என்றால் சாப்பிடுவேன்**" என்று எண்ணியவுடனே இன்னொரு மனிதர் வந்து இரண்டு பொட்டலம் உணவு கொடுத்து குடிதண்ணீர் இருக்குமிடம் காண்பித்து "**சாப்பிட்டு விட்டுச் செல்**" என்றார். அந்த உணவு சொல்ல முடியாதபடி (சுவையாக) இருந்தது. நான் பூண்டிக்குச் செல்ல பணம் அந்த சமயத்தில் ஏற்பாடு ஆகிவிடும். எப்போதும் தேவையான பணம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. ஸ்ரீ பூண்டி மகானின் கருணை, தயவு (தயை) எப்போதும் என்மேல் பொழிந்து கொண்டிருக்கிறது.

**நேர்காணல்: 10**
**15.7.2005, பூண்டி**

**பரமசிவன்**, வயது: 42, பழங்கோவில்.

*நான் பனிரெண்டு வயதில் சாராயம் காய்ச்சி விற்கும் சமயத்தில் காவல் துறை அதிகாரியிடம் பிடிபட்டேன். என் மீது வழக்கு தொடுத்தனர். நான் ஒன்பது மாதங்கள் சுவாமியை தரிசனம் செய்து கொண்டு வழக்கு விசாரணைக்குச் சென்றேன். என்னை காப்பாற்றும் படி வேண்டினேன்.* "**சென்றுவா**" *என்று கூறுவார் சுவாமி. ஒன்பதாவது மாதத்தில் மீண்டும் சுவாமியின் தரிசனம் செய்து கொண்டு* "**சுவாமி! நான் வழக்கு மன்றத்துக்கும், காவல்நிலையத்துக்கும் சுற்றி சுற்றி ஏழை ஆகி விட்டேன். இருந்த ஒரு பசுமாட்டை விற்று செலவு செய்து விட்டேன். எனக்கு ஏதாவது ஒரு வழி நீங்களே காட்டுங்கள்**" *என்று என் கஷ்டத்தை பக்தியோடு கூறினேன். ஸ்ரீபூண்டி மகான்* "**இன்று உன் வழக்கு முடிந்து விடும். சென்று வா**'' *என்று ஆசீர்வதித்து என் கையில் திருநீறு அளித்தார். நான் நீதிமன்றம் சென்றேன். செய்த தவறுக்கு ரூ.120 அபராதம் விதித்தார்கள். அபராதம் செலுத்திவிட்டு வந்துவிட்டேன். பிறகு நான் தவறுகள் செய்வதை விட்டுவிட்டேன். பூண்டி மகானை சாட்சாத் கடவுளாக நினைத்து பூஜை செய்து வருகிறேன்.*

**நேர்காணல்: 11**
**16.07.2005, பூண்டி**

**ஜெயக்கொடி**, போஸ்ட் மேன், வயது: 52, பூண்டி.

*நான் எப்போதும் எங்கேயாவது வேலையாக வெளியில் செல்ல வேண்டும் என்றால் ஸ்ரீபூண்டி மகான் தரிசனம் செய்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றுதான் செல்வேன். ஒரு நாள் திருவண்ணாமலைக்குச் செல்லும்போது சுவாமியின் தரிசனம் செய்துகொண்டு விவரம் தெரிவித்து ஆசிகள் பெற்றபோது,* **"இந்தக்காரில் போய், போன காரில் திரும்பி வராதே"**, *என்றார் சுவாமி. எனக்குப் புரியவில்லை. நான் TMR பேருந்தில் சென்றேன். என் வேலையை முடித்துக் கொண்டு உடனே பேருந்து நிலையத்திற்கு திரும்பி வந்தேன். TMR பேருந்து கிளம்பத் தயாராக இருந்தது. ஸ்ரீபூண்டி மகான் கூறியவை நினைவிற்கு வந்தது. அப்படியானால் இந்த விஷயமே சொல்லியிருப்பார் என்று நினைத்து அந்த பேருந்தில் நான் ஏறவில்லை. அந்த பேருந்து, வழியில் கலசபாக்கத்திற்கு அருகில் பிரேக் பிடிக்காமல் புளிய மரத்தில் மோதி எரிந்து ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இறந்து விட்டார்கள். சிலர் மட்டும் காயங்களுடன் தப்பினார்கள். ஸ்ரீபூண்டி மகான் அருளே என்னைக் காப்பாற்றியது.*

*ஸ்ரீபூண்டி மகானிடம் எத்தனையோ பக்தர்கள் வருவார்கள். அவர்கள் தன் துன்பங்களை பக்தி, நம்பிக்கையுடன் சொன்னவர்களுக்கு தவறாமல் பலன் கிடைக்கும். ஸ்ரீபூண்டி சுவாமி அளித்த திருநீறால் அன்பர்களின் நோய், மனோ வியாதி, உடல் ஊனம் அனைத்தும் நீங்கி ஆரோக்கியமான உடல்நலம் பெறுவார்கள். நான் ஒரு முறை உடல் நலக் குறைவால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது என் தாயிடம் கூறவே அவர் பூண்டி மகானின் திருநீறு பெற்று வந்து எனக்கு அளித்தார்கள். நான் அந்தத் திருநீறை அணிந்தேன். இரண்டு நாட்களில் நோய் நீங்கி ஆரோக்கியமான*

*உடல் நலம் பெற்றேன். இது ஸ்ரீ பூண்டி மகான் அளிக்கும் திருநீற்றின் மகிமை.*

*என் நண்பர் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து கிணற்றில் தண்ணீர் இல்லையெனக் கூறி, கடன் வாங்கி இன்னொரு இடத்தில் கிணறுதோண்ட ஆசிகள் கேட்டார். சுவாமி* **"இருக்கிற கிணற்றிலேயே ஆழம் வெட்டினால் தண்ணீர் கிடைக்கும்"** *என்று சுவாமி கூறினார். அவர் சென்று கிணற்றை ஆழமாகத் தோண்டிய பொழுது தண்ணீர் வந்தது. அதன் பிறகு அவர் நிலத்தில் நன்றாக விளைச்சல் கண்டது. ஸ்ரீ சுவாமி சன்னதியில் நடக்கும் திருவிழாக்களுக்கு அரிசி கொண்டுவந்து கொடுப்பார்.*

*இன்னொரு விவசாயி ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு,* **"ஏன் சுவாமி! இந்த வருடம் மழைப் பெய்யவில்லை"** *என்று கேட்டதற்கு,* **"மழை பெய்யும். ஆனா மரக்கா ரொம்பாது"** *என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். அந்த வருடம் மழை பெய்து பயிர் செய்தாலும் விற்பனைக்கு ஏற்ற விளைச்சல் கிடைக்காது என்று சுவாமி உள் கருத்துடன் கூறியது பிறகு அறிந்தோம்.*

**நேர்காணல்: 12**
**16.07.2005, பூண்டி**

**விஜயசுந்தரம்**, வயது: 51, பூண்டி.

*நான் சிறுவயதிலிருந்தே ஸ்ரீபூண்டி மகானின் பக்தன். மனிதனை விட உயர்ந்த சக்தி அவரிடம் உள்ளது என்பது என் நம்பிக்கை. அதனால் ஸ்ரீபூண்டி மகான் என்றால் எனக்கு மிகவும் விருப்பம். ஸ்ரீபூண்டி மகானின் அன்பரான தமிழ் வாத்தியார் ஆறுமுகம் என்பவர் என் நெருங்கிய நண்பராவார். ஸ்ரீ சுவாமிகளுக்கு நாங்கள் இருவரும் சேர்ந்து சேவைகள் புரிவோம்.*

*நானும், ஆறுமுகம் வாத்தியாரும் விடியற்காலையில் 4 மணிக்கு அங்கங்கே இருக்கும் பூச்செடிகளிலிருந்து பூவைப் பறித்து எடுத்து வந்து ஸ்ரீபூண்டி மகானுக்கு தினந்தோறும் நடக்கும் ஆறு கால பூஜையில் ஒரு பூஜையில் நாங்கள் எடுத்து வந்த பூக்களை மாலையாகக் கட்டி சமர்ப்பித்து விடுவோம். ஸ்ரீபூண்டி மகானுக்கு நடக்கும் ஆறு கால பூஜையில் நாங்கள் இருவரும் அருகிலேயே இருப்போம். பூஜை முடிந்த பின்பு ஸ்ரீபூண்டி மகான் எங்களுக்கு திருநீறு வைப்பார்.*

*என் தாத்தாவான ஸ்ரீ இராஜா செட்டியார் அவர்கள் எங்கள் சிவன்கோயில் மற்றும் பெருமாள் கோவில் தர்மகர்த்தாவாக இருந்தார். நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது தினந்தோறும் காலை நான்கு இட்லி வீட்டில் செய்ததை எடுத்துச் சென்று சுவாமிக்கு ஊட்டுமாறு என் தாத்தா சொன்னார். நானும் அவர் சொன்னபடியே செய்தேன். ஸ்ரீபூண்டி மகான் அவர் தன் கைகளால் உணவு உண்டதை நான் பார்த்ததேயில்லை. சிகரெட்டை பற்ற வைத்து கை விரலிடுக்கில் வைத்தால் சிகரெட் பிடிப்பார்.*

*நான் என் குடும்பப் பொறுப்புகளை ஏற்ற பிறகு நிறைய குடும்பக் கஷ்டங்கள் இருந்தன. இரண்டு தம்பிகள், ஒரு தமக்கை மற்றும் ஒரு தாய் இவர்கள் அனைவரையும் பாதுகாத்து வாழ்க்கை*

நடத்துவதற்காக விவசாயத்தில் வரும் வருமானம் போதவில்லை. எனக்கு உத்யோகமும் இல்லை. நான் ஸ்ரீபூண்டி மகானிடம் வேண்டினேன். ஸ்ரீ சுவாமிகள் அளிக்கும் பதில் மறைமுகமாக இருக்கும். நேராகச் சொல்லமாட்டார். சுவாமிகள் அவ்வாறு நேரிடையாகச் சொன்னால் அது ஒரு அபூர்வமான அனுபவமாகும், ஸ்ரீபூண்டி மகான் பரிபாஷையில் கூறினாலும், புரியும்படி சில வார்த்தைகளையும் கூறுவார்.

என் நண்பர் ஆறுமுகம் வாத்தியாரும் வேலையை ராஜினாமா செய்துவிட்டார். நான் சென்று பூண்டி மகானிடம் கூறிய பொழுது, **"நடக்கிற நேரம் வந்தால் எல்லாம் நடக்கும்"** என்றார் சுவாமிகள். அதற்கு மேல் எதுவும் கூறவில்லை. ஸ்ரீபூண்டி மகானின் பேரருளால் மீண்டும் சிறிது காலத்திற்கு பிறகு அதே வாத்தியார் வேலை சிறிது காலம் செய்த பிறகு தலைமையாசிரியராக பணி உயர்வு பெற்றார்.

ஸ்ரீபூண்டி மகான் தரிசனத்திற்கு ஸ்ரீ பூர்ணானந்தா சுவாமிகள் வந்தார். ஸ்ரீபூண்டி மகான் எதிரில் நின்று கண்ணீர் விட்டார். நான் ஒருநாள், **"சுவாமி, நீங்கள் பூண்டி மகான் எதிரில் நின்று ஏன் கண்ணீர் விடுகிறீர்கள். எனக்கு புரியவில்லை"** என்று கேட்டேன். அவர் பதிலாக ஒரு புன்சிரிப்பினைத் தந்தார். இரண்டு, மூன்று நாட்கள் கழித்து ஆற்றில் சந்தித்தபொழுது, **"ஐயோ! அவர் பெரியவரப்பா"** என்று கூறி மீண்டும் கண்ணீர் விட்டார். நான் **"சுவாமி நீங்கள் ஏன் அழுகிறீர்கள். பூண்டி சுவாமிகளிடம் உயர்ந்த சக்தி உள்ளது. அவ்வளவு தானே"** என்றேன். **"உனக்குத் தெரியாது. உனக்கு கொடுப்பினை உள்ளது. அதனால் நீ சுவாமிகளிடம் இருக்கிறாய்"** என்று கூறி அவர் மீண்டும் கண்ணீர் விட்டார். **"உங்களுக்கு என்ன குறை"** என்று கேட்டபோது **"இந்த உலக விஷயங்களில் இருப்பதால்!"** என்றார் பூர்ணானந்த சுவாமி. **"உங்களுக்கு மனைவி, குழந்தைகளால் கஷ்டமா! தாய், தந்தையால் இடைஞ்சலா! சொல்லுங்கள்"** என்று கேட்டேன். **"அதெல்லாம் இல்லை. நீ என்னவென்று நினைக்கிறாய். நான் எதற்காக துக்கப்படுகிறேன்! காரணம் வேறு! இந்த உலகம் எல்லாம் பிரளயம் வந்து அழிந்து விடும். எல்லாம் நிலையற்றவை. பூண்டி மகான் மட்டுமே நிலையானவர். நான் சில காரணங்களால் இங்கிருக்கிறேன். அவ்வளவு சீக்கிரமாக பெரியவர் கூறவில்லை"** என்றார்

பூர்ணானந்தா சுவாமி. ஸ்ரீ பூண்டி மகானை 'பெரியவர்' என்று கூறுவார் பூர்ணானந்த சுவாமி.

ஸ்ரீ பூர்ணானந்த சுவாமியை **"எங்கிருந்து வருகிறீர்கள் நீங்கள்?"** என்று கேட்டேன். வட இந்தியாவிலிருந்து வருவதாகக் கூறினார். **"என் குரு மஹாசமாதியடைந்த பிறகு நான் தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. அதற்கு வழி காட்டுமாறு அழுத போது ஸ்ரீ பூண்டி மகானை காண்பித்தார். பெரியவர் எனக்கு தர வேண்டியதை இன்னும் அளிக்கவில்லை. எனவே அழுது கொண்டிருக்கிறேன்''** என்றார் பூர்ணானந்த சுவாமி. அவர்களுக்குள் இருக்கும் மர்மம் என்னவென்று எனக்கு புரியவில்லை. எனக்கு பயம் வந்து விட்டது. என் தோளில் தட்டினார். **"கஷ்டங்களை தாங்கிக் கொள்ள முடியவில்லை சுவாமி!"** என்று நான் அவரிடம் கூறினேன். **"பகவான் இருக்கும்போது உனக்கென்ன கவலை. உனக்கு சிறிது நாட்களில் எல்லாம் நிறைவேறும். சுவாமிகளை பார்த்தால் போதும். நீ சொல்ல வேண்டிய அவசியமில்லை"** என்றார் பூர்ணானந்த சுவாமி. சிறிது காலம் கழித்து சந்தித்த பொழுது **"நன்றாக இருப்பாய் செல்"** என ஆசீர்வதித்தார்.

சோழவரத்தில் என் நண்பர் மகாதேவன் பூண்டி மகானின் பக்தராவார். என் குடும்ப கஷ்டங்களைப் பார்த்து ஒரு பால் கறக்கும் பசுவை வாங்கித் தருவதாகவும், அந்த பசு நாள் ஒன்றுக்கு ஐந்து லிட்டர் பால் கறப்பதாகவும், பால் விற்ற பணத்தில் சிறிது சிறிதாக திருப்பித் தரும்படி கூறினார். நான் ஒரு நாள் மாலைப் பொழுது ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று கேட்டேன். சுவாமி, **"அந்த பசுமாடு வேண்டாம். நாகவேலி வரும்டா"** என்றார். நாகவேலி என்றால் என்ன என்று எனக்கு புரியவில்லை. மறுநாள் காலையில் மகாதேவன் வந்தார். ஸ்ரீ பூண்டி மகான் கூறிய விஷயத்தை கூறி சிறிது காலம் கழித்து பார்க்கலாம் என்று கூறினேன். ஆனால் அவர் பலவந்தப்படுத்தியதால் இருவரும் சேர்ந்து சென்றோம். பசுவை பார்த்து விட்டு உரிமையாளரிடம் **"பசுவுக்கு நாகவேலி வருமாமே!"** என்று கேட்டேன். இந்த விஷயம் **"உங்களுக்கு எப்படித் தெரியும்?"** என்பது போல் எங்கள் பக்கம் பார்த்தார் அவர். **"யார் சொன்னார்கள்? சொன்னால் பசுவை இலவசமாகத் தருகிறேன்''** என்றார் அந்த

சொந்தக்காரர். அவர் எவ்வளவு கோரினாலும் நாங்கள் எதுவும் சொல்லாமல் திரும்பி வந்து விட்டோம்.

மூன்று, நான்கு மாதங்கள் கழித்து ஸ்ரீ பூண்டி மகான் "**பசுமாடு வாங்கிக்கலாம்பா**" என்றார். ஆனால் விவரங்கள் எதுவும் என்னிடம் கூறவில்லை. ஆறுமுகவாத்தியார் ஒரு மாடு வாங்கினார். அவருக்கு என்ன நடந்ததோ எனக்குத் தெரியவில்லை. "**சுவாமி பசுவை உன்னிடம் தரச்சொன்னார்**" என்று கூறி பசுவை எங்கள் கொல்லையில் கட்டிவிட்டு சென்றார். ஸ்ரீ பூண்டி மகான் அருளால் பசுமாடு வந்து சேர்ந்தது. இன்று இருபத்தி இரண்டு பசுமாடுகள் உள்ளன. தினந்தோறும் நான்கு லிட்டருக்கு குறையாமல் பால் தருகின்றன.

எங்கள் நிலத்தில் விவசாயம் செய்ய தண்ணீர் இல்லாமல் கிணற்றில் தூர் வாரினோம். இருந்தாலும் தண்ணீர் வரவில்லை. ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று "**சுவாமி, கிணற்றில் தண்ணீரும் இல்லை. எனக்கு வேலையும் இல்லை**" என்று வேண்டிய பொழுது, ஸ்ரீ பூண்டி மகான் புன்னகைத்து "**அந்த கிணற்றில் நல்ல தண்ணீர் இருக்குப்பா.**" "**நீங்கள் என்னவோ இப்படி சொல்றீங்க. கிணறு தோண்டுபவர்கள் மொறம்பு தட்டிவிட்டது என்கிறார்கள்**" என்றேன் சுவாமியிடம். அப்போது சுவாமி, "**இல்லைப்பா பழங்கோயில்ல அருணகிரிகிட்ட ஆறடி ஆக்கர் இருக்கு. வாங்கி வந்து கிணற்றில் போட்டுப்பார். அப்போது தண்ணீர் இருக்கிறது உனக்குத் தெரியும்**" என்றார்.

நான் அருணகிரியிடம் சென்று ஆக்கர் கேட்டேன். "**என்னிடம் ஆக்கர் இருப்பது உனக்கு எப்படித் தெரியும்**'' என்று கேட்டார். "**தெரிந்தவர்கள் கூறினார்கள் அதனால் வந்தேன்**" என்றேன். அவர் "**ஆக்கர் வாங்கிச் சென்றால் சீக்கிரம் திருப்பித் தரமாட்டார்கள். ஏதாவது பொருளை அடமானம் தந்தால் தருவேன்**'' என்றார். என் கையில் இருந்த கைக்கடியாரத்தை அடமானமாகத் தந்து, ஆக்கர் வாங்கி வந்து கிணற்றில் இறக்கினேன். இரண்டு, மூன்றடி கெட்டி மண் வந்தது. பிறகு மணல் வந்து, நல்ல தண்ணீர் ஊறி பொங்கி வந்தது. ஸ்ரீ பூண்டி மகான் திவ்ய அருளால் இன்றும் கிணற்றில் நீர் வேண்டிய அளவு உள்ளது. நிலத்தில் விவசாயம் செய்தோம். இரு தம்பிகளையும் நன்றாக படிக்க வைத்தேன். அவர்களும் உத்யோகம் செய்கிறார்கள்.

என் தமக்கைக்குக் கல்யாணம் செய்து வைத்தேன். எனக்கு தபால் அலுவலகத்தில் வேலை கிடைத்தது. குடும்பம் சந்தோஷமாக நடந்து கொண்டிருக்கிறது.

ஆறுமுகம் வாத்தியாருக்கு ஒரு நண்பர் ஜோதிடம் கூறுவார். அந்த ஜோதிடர் ஞாயிறு, அமாவாசை, திருவாதிரை நட்சத்திரம் இவை மூன்றும் சேர்ந்து வருவது மிகவும் சிறந்தது என்றும், திருவாதிரை நட்சத்திரம் ஈசுவரனுக்கு உகந்தது என்றும் பர்வத மலையில் இருக்கும் புற்றுக்கு அபிஷேகம் செய்தால் நல்லது என்றும் கூறினார். வாத்தியார் இவற்றை என்னிடம் கூறினார். "**மறுநாள் வாரம், திதி, நட்சத்திரம் மூன்றும் சேர்ந்து வருகிறது. ஸ்ரீ பூண்டி மகான் உத்தரவு தந்தால் செல்லலாம்**" என்றேன். ஸ்ரீ சுவாமி, "**கோயிலுக்கு போறது எப்ப வேண்டுமானாலும் போலாம்**" என்று ஆசீர்வதித்தார்.

அன்றிரவு எட்டு மணிக்கு கிளம்பினோம். நன்றாக இருட்டி விட்டது. பருவத மலை மேல் போகும் வழியில் '**கடப்பாரை நெட்டை**' இரவு பதினொரு மணிக்கு சென்றடைந்தோம். '**கடப்பாரை நெட்டு**' ஏற கடினமாக இருந்ததால் '**அரோகரா**' என்றோம். '**அரோகரா**' என்று மற்றொரு குரல் கேட்டது. நடு இரவு என்பதால் எங்கள் உடல் நடுங்கியது. சிறிது நேரத்தில் சமாளித்துக் கொண்டு அந்த குரல் தெரிந்தவருடையது போல் உள்ளது என அறிந்து '**விஸ்வநாதனா**' என்று கேட்டோம். அவரும் '**ஆமாம்**' என்று பதிலளித்தார்.,

விஸ்வநாதன் எங்களுக்கு முன்னால் கிளம்பினார். '**கடப்பாரை நெட்டு**' ஏறப்போகும் சமயத்தில் ஒரு மஞ்சள் நிற பருந்துப் பறவை அவர் தலை மேல் தாக்கியது. ஏதாவது ஆபத்து நேரும் என்று அங்கேயே இருந்து விட்டார். எங்களுக்கு அந்த விஷயத்தைக் கூறி, இரவு இங்கேயே இருந்து விட்டு காலையில் சேர்ந்து எல்லோரும் செல்லலாம் என்றார். நான் "**எங்களுக்காக உங்களை தடுத்து இருக்கலாம். ஸ்ரீ பூண்டி மகான் ஆசீர்வாதம் தந்தார். நான் முன்னாடி செல்கிறேன். நீங்கள் பின்னாடியே வாருங்கள்**" என்று கூறி கற்பூரம் ஏற்றி ஸ்ரீ பூண்டி மகானை மனதில் வேண்டி '**அரோகரா**' என்று ஒரு அடி எடுத்து முதல் படியில் வைத்தேன். நடு இரவு ஒரு மஞ்சள் நிற பருந்து பறவை பத்தாவது படியில் உட்கார்ந்து இருந்தது. பார்த்தவுடன் சொல்லொண்ணா

*பயம் பற்றிக்கொண்டது. சுவாமிகளை நினைத்துக் கொண்டு ஒவ்வொரு படியாக ஏறும்போது அப்பறவையும் ஒவ்வொருபடியாக மேலே பறந்து, பறந்து சென்றது. மேலே செல்லும் வரை அப்பறவை எங்களுடனே வந்தது. அதன் பின் அப்பறவை சென்று விட்டது. ஸ்ரீ பூண்டி மகானே பறவை உருவத்தில் வந்து எங்களுக்கு துணையாக வழி நடத்திச் சென்றார் என்பதையறிந்த நாங்கள் பதினைந்து நிமிடங்கள் ஆனந்தக் கண்ணீர் விட்டோம். நாங்கள் மலை மேல் இருந்த துறவியிடம் விவரத்தைக் கூறினோம். இப்படிப்பட்ட லீலை இதுவரை இங்கு நடக்கவில்லை என்று வியந்து கூறினார்.*

*இதுநாள் வரை ஸ்ரீ பூண்டி மகான் அருளால் முன்னேறிக் கொண்டிருக்கிறேன். பின்னோக்கிச் சென்றதில்லை. ஸ்ரீ பூண்டி மகானைநினைக்காமல் எந்த வேலை செய்யச் சென்றாலும் இடையூறு ஏற்படும். உடனே செய்த தவற்றை உணர்வேன். எனவே பூண்டி மகானிடம் சொல்லாமல் எந்தப் பணிக்கும் செல்ல மாட்டேன்.*

*சிறிது நாட்கள் கழித்து ஸ்ரீ பூர்ணானந்தா சுவாமி வந்தார். அவர் ஆற்றுப் பக்கம் செல்லவே நான் பின்னாலேயே சென்றேன். அவர் ஆற்றின் கரையில் உள்ள புதரில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் தியானத்தில் ஆழ்ந்தார். அவர் உடல் காற்றில் மிதக்கிறது. எனக்கு பயம் ஏற்பட்டது. சிறிது நேரம் கழித்து தியானம் முடித்து வந்தார்.* **“என்னைப் பார்த்து எதற்கு பயப்படுகிறாய்?”** *என்று முதுகில் தட்டினார். அச்சமயத்தில் ஸ்ரீ பூர்ணானந்தா சுவாமி அவர்கள் கூறியது என்னவென்றால்* **‘‘எல்லா கிராமங்களிலும் உள்ள சிவன் கோயில்களை விட பூண்டியிலுள்ள சிவன் கோயில் மிகவும் சிறந்தது. எல்லா கோயில்களிலும் சிவன் பக்கத்தில் பார்வதி தேவி நின்ற நிலையில் இருப்பார். ஆனால், பூண்டி ஆலயத்தில் பார்வதி தேவி தெற்கு முகமாக இருப்பார். இரண்டு தூண்களிலும் புலிச்சின்னங்கள் இருக்கின்றன. ஸ்ரீ பூண்டி மகான் இந்த இடத்தை எதற்காக தேர்ந்து எடுத்தார்”** *என்று நான் வினவினேன்.*

**“சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னர் இவ்விடம் காடாக இருந்தது. காட்டிலிருந்து தப்பி வந்த ஒரு சிறுத்தைப் புலி கிராமத்தில் புகுந்தது. ஊர் மக்கள் சிறுத்தைப் புலியை துரத்தவே, சிறுத்தை புலி ஓடிச்சென்று சிவன்**

**கோயிலுக்கருகிலுள்ள வில்வ மரத்தின் மேல் ஏறியது. அன்று சிவராத்திரியாதலால் சிறுத்தைப் புலிக்கு மோட்சம் கிடைத்தது. அச்சிறுத்தைப்புலி மானிட உருவில் மகானாக அவதரித்தது என்றும் காலப்போக்கில் சொல்லப்பட்டது''** என்று கூறினார். **"அக்காரணத்தினாலேயே ஒரு மகான் இங்கு இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு தெற்கு முகமாக வீற்றிருந்தார். தெற்கு பக்கம் இருப்பவர் ஸ்ரீ அருணாச்சலேஸ்வரரே"** என்று கூறினார். இன்னும் பல விவரங்கள் கூறினார். ஆனால் எனக்கு அந்த வயதில் முழுவதுமாக புரியவில்லை.

ஒரு நாள் பௌர்ணமியன்று விடியற்காலையில் ஆறுமுக வாத்தியார் வந்து என்னை எழுப்பிப் பூப் பறிக்க செல்லலாம் என்றார். நானும் எழுந்து பார்த்தேன். எங்கும் நிசப்தமாக இருந்தது. நேரம் இரவு ஒரு மணி இருக்கும். இனி தூக்கம் வரவில்லையென்று இருவரும் சேர்ந்து ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்றோம். அச்சமயத்தில் ஸ்ரீ பூண்டி மகான் திண்ணை மேல் அமர்ந்திருந்தார். முகம் நெருப்புக் கோளம் போல் ஜொலித்தது. நான் அருகே சென்று, **"சுவாமி உடம்பு எதாவது சரியில்லையா?''** எனக் கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான் கோபமாக **"எவ்வளவு தூரம் போய் வர்றது. வழியில் லாடம் விழுந்து கிடக்கிறதை பார்க்காமல் அவ்வளவு ஜனங்களை ஏத்திக்கிட்டு போகும்போது பட்டா என்னாகும். இது எல்லாம் பார்க்கணும் இல்லையா! நாம சும்மா இருந்தா சரியா போயிடுமா!''** என்றார். மேலும் ஏதேதோ பேசிக் கொண்டேயிருந்தார். ஸ்ரீ பூண்டி மகான் மடியில் இரண்டு லாடங்கள் இருந்தன. **"என்ன இதெல்லாம் சுவாமி"** என்று கேட்டேன். **"என்ன பண்றதுப்பா. டயருக்கு முள் குத்திகிட்டா எடுத்திடலாம்பா. லாடம் அடிச்சா என்னாகும் அதனால் தான்ப்பா நான் பொறுக்கிக்கிட்டு வந்திட்டேன்"** என்று கூறினார் சுவாமி. எங்களுக்கு வியர்த்துக் கொட்டியது. சிறிது நேரம் கழித்து சுவாமியின் முகம் சாந்தமானது. எங்கோ நடக்கவிருந்த ஆபத்திலிருந்து தன் பக்தர்களை காப்பாற்றினார் என்று புரிந்து கொண்டோம்.

ஒரு வயதான மனிதர் ஸ்ரீ பூண்டி மகானிடம் **"எல்லாருக்கும் குரு இருக்கணும். அப்படி பண்ணனும். இப்படி பண்ணனும் என்று சொல்றாங்க"** என்று அப்பாவியாகக் கேட்டார். ஸ்ரீ பூண்டி மகான், **"ஏம்பா. கடை**

வெச்சிட்டேன்பா அதில எல்லாப் பொருளும் இருக்குது. அவங்க அவங்களுக்கு எது எது வேணுமோ! அதை வாங்கிக்கிட்டு போறாங்கப்பா. அதுக்குண்டான பலன் அவங்க அடையறாங்கப்பா. விஷம் வாங்கிட்டு போனா அதுக்குண்டான பலன். கேக் வாங்கிட்டு போன அதுக்குண்டான பலன்" என்றார். மீண்டும் அந்த பெரியவர் சுவாமியைப் பார்த்து, "சுவாமி, நீங்கள் எல்லாம் இருக்கிறீங்க. சிலருக்கு அவர்கள் குரு ஆன்மீகமாக ஏதாவது சொல்வார்கள் என்கிறார்கள்!" என்றார் மெதுவாக. அந்த பெரியவர் வார்த்தைகளை கேட்டு உடம்பு புல்லரித்தது. "சுவாமியிடம் இப்படிப்பட்ட கேள்விகளை கேட்கிறீங்களே?" என்று அந்த பெரியவரைக் கேட்டேன். "அவர் பெரியவர் தெரிஞ்சதை கேட்டார்" என்று பூண்டி சுவாமி எனக்கு எடுத்துரைத்தார். அன்று ஸ்ரீ பூண்டி சுவாமி மிகவும் மலர்ச்சியாக ஆனந்தமாக தென்பட்டார்.

ஒரு முறை ஆறுமுக வாத்தியார் ஸ்ரீ பூண்டி மகானை தரிசிக்கச் சென்ற போது தன் விரலில் இருந்த மோதிரத்தை ஸ்ரீ சுவாமியின் விரலில் போட்டு விட்டு வந்து விட்டார். கல்யாண சீதனமாக போட்ட மோதிரத்தை சுவாமிகளுக்கு கொடுத்து விட்டார் என அவர் மனைவி மனம் கலக்கமடைந்தார். வாத்தியாரும் ஒரு முறை கொடுத்ததை திரும்ப வாங்கக் கூடாது என்று கண்டிப்பாக கூறிவிட்டார். அவர்களுக்கு இடையில் மனசஞ்சலம் அதிகரித்தது. நான் அவர்கள் வீட்டிற்குச் சென்ற போது அவர் மனைவி என்னிடம் கூறி வருத்தப்பட்டார். ஸ்ரீ சுவாமிகளுக்கு சமர்ப்பித்த பிறகு யாரும் திரும்ப வாங்கமாட்டார்கள். அந்தப் பொருளைக் கமிட்டியார் எடுத்து பத்திரப்படுத்தி வைப்பார்கள். நான் ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று, "சுவாமி, வாத்தியார் உங்களிடம் மோதிரம் கொடுத்தாராம். வாத்தியார் மனைவி கல்யாணத்துக்கு ஞாபகமாக போட்டது அது என வருத்தம் அடைந்தார்" என்று கூறினேன். "ஆமாம்பா. அப்பவே போடும் போது தேவையில்லைன்னு சொன்னேன்பா. இருக்கட்டும் இருக்கட்டும்ன்னு சொல்லி போட்டாரு. இப்ப என்னா எடுத்துக்கிட்டா போவுது" என்று சுவாமிகள் சொல்லுகின்ற சமயத்தில் கமிட்டித் தலைவர் கோவிந்தராஜுலு நாயுடு வந்து சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு நின்றார். "ஏம்பா. நேத்து மோதிரம் கொடுத்தேனே அதை இவர்

கிட்ட குடுத்திடுங்கப்பா" என்று சுவாமி சொன்னவுடன் அவர் அசந்து போயிட்டார். "சுவாமி நம் கமிட்டியின் கட்டுப்பாடு" என்று தலைவர் கூற ஆரம்பித்தவுடன் அப்போது ஸ்ரீ பூண்டி சுவாமி, "ஏம்பா நான் சொல்றேன்பா. குடுத்திடுப்பா'' என்று ஆணையிட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. "சாயந்திரம் தந்துவிடுகிறேன் சுவாமி" என்று கூறியவுடனே "இல்லை. இல்லை. சாயங்காலம் குடுத்திடுப்பா" என்று மற்றொரு முறையும் எச்சரித்தார். அன்று மாலையில் நான் பூண்டி மகானிடம் சென்று நின்றேன். கமிட்டி உறுப்பினர் திரு ஞானசம்பந்த முதலியார் வந்து சுவாமிகளை தரிசனம் செய்து விட்டு நின்றவுடன், "ஏம்பா. நேத்து மோதிரம் ஒண்ணு ஆசிரியர் போட்டாருப்பா. அவர் வீட்ல கேக்கறாங்க. தம்பி கேக்கிறாரு, எடுத்து குடுத்துடுங்கப்பா. நான் சொன்னதா என் பேரை போட்டு எழுதி கணக்கிலிருந்து அடிச்சிருங்க" என்று பூண்டி மகான் கூறியவுடனே சென்று மோதிரத்தை எடுத்து வந்து சுவாமிகளிடம் கொடுத்தனர். சுவாமி என்னிடம் தந்தவுடன் நான் வாத்தியார் மனைவியிடம் அளித்தேன். அதை அவர்கள் பூஜையறையில் வைத்தனர்.

ஸ்ரீ பூண்டி மகான் பெயரில் உள்ள நிலத்தின் அருகே எங்கள் நிலமும் உள்ளது. கமிட்டியார் ஒவ்வொரு வருடமும் அந்த நிலத்தை ஏலம் மூலம் குத்தகைக்கு விடுவார்கள். கமிட்டி உறுப்பினர்கள் அவர்களுக்கு அனுகூலமானவர்களுக்கே குத்தகைக்கு அளிப்பார்கள். நான் கேட்டாலும் எனக்குத் தரவில்லை. நான் ஸ்ரீ சுவாமியிடம் முறையிட்டேன். "வாங்கிக்கலாம். அதுல சிக்கல்" என்றார் பூண்டி மகான். ஒவ்வொரு வருடம் குத்தகைக்கு விடும் முன்பு பூண்டி மகான் அனுமதிபெற்று ஏலம் விட ஆரம்பிப்பார்கள். மறு வருடம் கமிட்டி உறுப்பினர்கள் சுவாமியிடம் வந்தவுடனே, "ஏம்பா. முதல்ல இருக்குற அந்த இருபது சென்ட்டை விட்டுட்டு மற்றதை ஏலம் விட்டுக்கலாம்" என்று கூறினார். கமிட்டி உறுப்பினர்கள் "யாருக்கு சுவாமி" என்று கேட்டதற்கு ''இருக்கட்டும்பா'' என்று சுவாமி விவரம் எதுவும் கூறவில்லை. ஏலம் முடிந்த பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமி, "அது என்னப்பா ஏலம் போச்சு. அந்த கணக்கில அந்த இருபது சென்ட்டுக்கு இவர்கிட்ட வாங்கிக்கங்கப்பா. ஏன்னா பக்கத்து கழனி. நம்ம கழனிக்கு தண்ணீர்

**எடுத்துக்கலாம்**” என்றார். யாருடைய தயவு, தாட்சண்யம் இல்லாமல் ஸ்ரீ சுவாமியின் அருளால் அந்த நிலத்தை எனக்கு குத்தகைக்கு அளித்தார்கள்.

சிவலிங்கம் என்பவர் ஸ்ரீ பூண்டி மகான் பக்தர். அவர் தபால் அலுவலகத்தில் பணி புரிந்து வந்தார். அவர் பழங்கோவிலுக்கு தபால் கொண்டு செல்லும் சமயங்களில் தினந்தோறும் இரண்டு முறை ஸ்ரீ பூண்டி மகானைத்தரிசனம் செய்து கொள்வார். வீட்டில் பூண்டி மகான் திருவுருவப் படத்திற்கு பூஜைகள் செய்வார். அவருக்குப் படிக்கத் தெரியாது. கையெழுத்து போடக் கற்றுக் கொண்டு பதவி உயர்வுக்காக தேர்வு எழுதி, ஸ்ரீ பூண்டி மகானிடம் வேண்டிக் கொண்டார். ஒரு நாள் நானும் சிவலிங்கமும் ஸ்ரீ பூண்டி மகான் சன்னதியில் இருக்கும்போது தபால் கண்காணிப்பாளர் ஸ்ரீ சுவாமியின் தரிசனத்திற்காக வந்தார். பூண்டி மகான், ‘‘**நம்மாள் நல்லவருப்பா. அவருக்கு ரிசல்ட் போட்டு குடுங்க**’’ என்றார். தபால் கண்காணிப்பாளரும் அவருக்கு பதவி உயர்வு வரும்படி செய்தார். ஸ்ரீ பூண்டி மகான் அருளால் அவருக்கு பதவி உயர்வு கிடைத்தது. இன்றும் ஓய்வு ஊதியம் வாங்கிக் கொண்டிருக்கிறார்.

தினந்தோறும் ஸ்ரீ பூண்டி மகானுக்கு பூஜைகள் செய்யும் போது கமிட்டியார் திரை போடுவார்கள். யாரும் உள்ளே வரக்கூடாது என்று எங்களுக்கு தடை விதித்தனர். ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்களின் அதிகாரத்தை அங்கீகரிக்கவில்லை. எங்கள் பக்கம் காண்பித்து ‘‘**இருக்கட்டும்பா**’’ என்றார் சுவாமி. அதன் பிறகு எங்களை கமிட்டியார்கள் தடை செய்ய முடியவில்லை. எங்களை ஸ்ரீ சுவாமிகளே அனுமதித்தார். நான் யார் விஷயத்திலும் தலையிட மாட்டேன். யாருடனும் போட்டியிட மாட்டேன். நான் எதற்காக பூண்டி மகானிடம் செல்கிறேன் என்று நினைவில் வைத்துக் கொண்டு பழகுவேன்.

ஒரு அன்பர் ஸ்ரீ பூண்டி மகானிடம் “**சுவாமி நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள்? எதையும் கண்டு கொள்வதில்லையே!**” என்று கேட்டார். ஸ்ரீ பூண்டி மகான் “**ஏம்பா பொறந்திட்டோம்பா. அடுத்ததுக்கு ரெடியா இருக்கணும். அதுக்கும் இருக்க வேண்டியதுதான்**’’ என்றார்.

கேட்டவருக்கு புரியவில்லை. அவர் சொத்து, சுகம் என்று நினைத்தார். ஆனால் பிறந்த மனிதர் இறக்காமல் இருக்க முடியாது. இதையே பூண்டி மகான் தெரிவித்தாரோ என்று எனக்குத் தோன்றியது.

இந்த உடம்பு நிரந்தரமானது அல்ல என்று நினைத்து எதையும் தைரியமாக எதிர் கொள்ளும்போது அவர்களுக்கு ஆபத்து அருகே நெருங்காது. அவர்களை பார்த்து ஆபத்து விலகிச் செல்லும். வந்த துன்பங்களை பெரியதாக நினைத்தால் அது மலை போல் ஆகிவிடும். அந்த துன்பங்களை நினைக்காமல் விட்டுவிட்டால் பஞ்சுபோல் பறந்துவிடும்.

ஒரு நாள் தேநீர் குடிக்கும் போது பூண்டி மகான் கைமேல் ஒரு பொட்டு விழுந்துவிட்டது. அந்த இடத்தில் எறும்புகள் மொய்த்து கடித்துக் கொண்டிருந்தன. நான் அந்த மாதிரியான காட்சிகளை பார்த்தாலும் சுவாமிகளிடம் எதுவும் கேட்கமாட்டேன். எங்களுக்கு பார்த்து பழகி விட்டது. ஒரு அன்பர், "**சுவாமி எறும்பு கையை கடிக்கிறதே**" என்று தன்கையால் துடைக்க முயற்சித்த போது சுவாமி, "**ஊம்! தொடாதேப்பா அந்த இனிப்பு இருக்கிற வரையிலும். அப்புறமா அதுக்கு என்ன வேலை**" என்றார். "**அந்த எறும்பு அப்படி கடிக்கும் போது வலியாக இருக்கும் இல்லையா சுவாமி**" என்று மீண்டும் வேண்டினார் அந்த அன்பர். "**ஆ! வலிக்கும். அது என்ன பண்றதுப்பா. கொஞ்ச நேரம் தெரியும்**" என்றார் சுவாமி.

நான் மூவருடன் சேர்ந்து, பர்வதமலைக்குச் சென்றேன். ஸ்ரீ பூண்டி மகானை யார் தாழ்த்திப் பேசினாலும் நான் அங்கீகரிக்க மாட்டேன். மலை மேலிருந்த துறவி தன்னைத் தானாக உயர்த்தி பேசிக் கொண்டு, ஸ்ரீ பூண்டி மகான் அவரை விட உயர்ந்தவரா? என்று அகங்காரமாக பேசினார். அந்தத் துறவி அவ்வாறு பேசியதை நான் அங்கீகரிக்கவில்லை. என்னுடன் வந்த மூவரும் அந்த துறவியின் பாதங்களில் பணிந்தனர். நான் அத்துறவியின் பாதங்களில் விழுந்து வணங்கவில்லையெனவும் '**மரியாதை தரவில்லை**' எனவும் கூறினார். அத்துறவி கோபத்துடன். "**மரியாதை கேட்டுப் பெறுவதில்லை. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை நம்புகிறேன். என் குரு அந்த மகானே. அவரை விட**

**உயர்ந்த குரு எனக்கு யாரும் இல்லை. அப்படி நான் நினைத்தால் என் வாழ்க்கைக்கு அர்த்தமில்லை."** *என உறுதியாகக் கூறினேன். எங்கள் இருவருக்கிடையில் வாக்குவாதம் நடந்தது.* **"உனக்கு என்னாகும் பார்"** *என்று பயமுறுத்தினார் அத்துறவி. நான் தைரியமாக சிரித்துக் கொண்டு,* **"அப்படி நடந்தாலும் கர்வப்படுகிறேன். எது நடந்தாலும் நான் கவலைப்படமாட்டேன். இந்த தேகம் நிலையானது அல்ல என்று அறிந்தவன். ஸ்ரீ மகானே உலகம் அனைத்திலும் நிறைந்து இருப்பவர். நாம் எல்லோரும் இறப்பை நோக்கி செல்வதைத்தவிர வேறு எதை நோக்கியும் செல்லவில்லை"** *என்று பதில் கூறி என்னுடன் வந்தவர்களிடம்* **"உடனே இங்கிருந்து கிளம்பலாம்''** *எனக் கூறினேன். ஆனால் அவர்கள் அத்துறவியின் வார்த்தைகளுக்கு பயந்தார்கள்.*

*யதேச்சையாகவோ அல்லது தெய்வாதீனமாகவோ எனக்குத் தெரியாது. இனி அங்கு இருக்கக்கூடாது என்று கிளம்பினேன். அவர்களும் என்னுடன் கிளம்பினார்கள். வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டு இடி, மின்னலுடன் மழை வருவதுபோல் இருந்தது. ஒரு கிலோமீட்டர் வருவதற்குள் மழை ஆரம்பித்தது. நாங்கள் நிற்கக் கூட இடம் இல்லை. என்னுடன் வந்தவர்கள்,* **"துறவி சொன்னதை காதில் வாங்காமல் சுவாமியை நம்பி கிளம்பலாம் என்று அழைத்து வந்தாய். ஆனால் நிலைமை இப்படி உள்ளது"** *என்று என்னைத் திட்டினார்கள்.* **"சுவாமியின் அருள் இருந்தால் எந்த ஆபத்தும் இல்லாமல் அழைத்துச் செல்கிறேன். அப்படி ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் சொர்க்கத்திற்கு போய்ச் சேருவோம். கவலைப்படவேண்டாம்"** *என்றேன் அவர்களிடம். நாங்கள் மலை இறங்கி பச்சையம்மன் கோயிலை அடையும் வரை எங்கள் பின்னால் ஒரு பர்லாங் தூரத்தில் மழை பெய்து கொண்டிருந்தாலும் எங்கள் மேல் ஒரு மழைத்துளி கூட விழவில்லை. நாங்கள் கோயிலுக்குள் நுழைந்தவுடன் பலமான மழை பெய்தது. அது ஸ்ரீ பூண்டி மகானின் திவ்ய அனுக்கிரகமாக நினைத்து ஆச்சர்யப்பட்டோம்.*

*இரண்டு, மூன்று நாட்கள் கழித்து விஸ்வநாதன் என்னிடம் வந்து* **''பர்வத மலையிலுள்ள துறவியை கட்டிப்போட்டு விட்டு அங்கேயிருந்தவற்றையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு சென்று**

**விட்டனர். ஸ்ரீ பூண்டி மகானைத் தரக்குறைவாக பேசியதால், தகுந்த பலன் கிடைத்தது என்று துறவி வருத்தப்படுகிறார். ஒரு முறை உங்களைப் பார்க்கவேண்டுமெனவும் உன்னுடன் பேச வேண்டுமென்றும் கூறினார். வா செல்லலாம்**'' என்று அழைத்தார். நான் '**வரமுடியாது**' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டேன்.

நான் பர்வதமலைக்கு சென்றபோது மலைமேல் உள்ள சுனையில் உள்ள தீர்த்தத்தையும் வில்வ இலையையும் எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி மகானுக்கு அளித்தால், சுவாமி தீர்த்தத்தை அருந்தி வில்வ இலையை சாப்பிடுவார்.

ஸ்ரீ பூண்டி மகானுக்கு அன்பர்கள் அளிக்கும் காணிக்கைகளான பழம் போன்றவை காய்ந்து போகுமே தவிர அழுகி துர்நாற்றம் வராது. ஒரு அன்பர் அங்கிருந்த பழக்குவியலில் இருந்து நல்லதாக இருப்பதை தேர்ந்தெடுத்து சாப்பிடுவார். ஒரு நாள் பூசை சமயத்தில் நானும் சென்றேன். அவர் எனக்கும் அளிக்க முயற்சித்தார். நான் வேண்டாம் என்றேன். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீ பூண்டி மகான் "**அவங்கவங்க பிரச்சினை நீங்கறதுக்கு என்கிட்ட கொடுக்கறாங்க. பாவம் தீர என்கிட்ட கொடுக்கறாங்க. அதை சாப்பிடறதுக்கு விரும்பலைன்னா விட்டுவிடுங்க. ஏன் வற்புறுத்தறீங்க**" என்றார் கோபமாக. எல்லாம் நிறைந்து இருக்கும் ஸ்ரீ பூண்டி மகான் காணிக்கை உருவில் பக்தர்களின் கர்மாக்களை வாங்கிக் கொள்கிறார் என்று புரிந்து கொண்டேன்.

ஒரு முறை ஸ்ரீ பூண்டி மகானுக்கு நன்றாக ஜலதோஷம் பிடித்து இருந்தது. இருமிக் கொண்டிருந்தார். நான் சுவாமியை பார்த்து, "**ஏன் சுவாமி இருமறீங்க. உள்ளே இருக்கிற சளி வெளியே வந்திட்டா கொஞ்சம் நிம்மதியாக இருக்கும்**'' என்றேன் பணிவுடன். "**ஆமாம்பா. எடுத்து விடணும்பா**" என்றார் சுவாமி. "**ஒரு முறை மூக்கை சிந்துங்கள். நான் புடிச்சிக்கிறேன்**" என்றேன். சுவாமி அங்கேயிருந்த காவலாளியான ஆறுமுகம் பக்கம் பார்த்தார். நான் அவரிடம் சொன்னவுடன் அவர் சுவாமியின் சன்னதிக்கு வந்தார். சுவாமி, "**எனக்கு இருமல் வர்றாப் போல இருக்குது**'' என்று கூறி இருமினார். ஆறுமுகம் இருகைகளை சேர்த்துப் பிடித்தார். ஒரு கிளாஸ் சளி கைகளில் விழுந்தது. சுவாமி

அதை பின்னறையில் உள்ள பிரசாத அறையில் விடச் சொன்னார். அவரும் பிரசாதத்தில் விட்டார். "**இப்போ நல்லாயிடுச்சு**" என்றார் சுவாமி. மகான்கள் இப்படிப்பட்ட துன்பங்களை நொடி நேரத்தில் சரியாக்கி கொள்ள முடிந்தாலும் பக்தர்களின் நன்மையைக் கருதி அப்படி துன்பப்படுகிறார்கள் என்று என் மனதில் இருந்த வேதனையை உணர்ந்து, எனக்காக சுவாமி அப்படி செய்து காண்பித்தார் என்று தெரிந்து கொண்டேன். இப்படிப்பட்ட எத்தனையோ அற்புதங்களை அனுபவித்தேன். எல்லாம் ஸ்ரீ பூண்டி மகான் ஏற்படுத்திக் கொடுத்த அவகாசம். அவர் கருணை எப்போதும் என் மீது பொழிந்து கொண்டிருக்கிறது.



பர்வதமலை



பர்வதமலை மீதுள்ள ஆலயம்



காக்கங்கரை
பிள்ளையார் கோவில்
கலசபாக்கம்



காக்கங்கரை பிள்ளையார் கோவிலின் பின்புறம்
ஸ்ரீ ஆற்றுசுவாமி அமந்திருந்த கல்பாறை

நேர்காணல்: 13
16.07.2005, பூண்டி

**சம்பந்தம்**, வயது: 62, கலசபாக்கம்.

*நான் ஏழு-பத்து வயதாக இருக்கும்போது சிறுவர்களுடன் சேர்ந்து சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ சுவாமிகள் அணிந்திருந்த ஆடை மிகவும் அழுக்காக இருந்தன. சுவாமிகள் தோளில் ஒரு சிறு மூட்டையை மாட்டிக் கொண்டு நடமாடிக் கொண்டிருப்பார். ஓரிடமும் நிலையாக அமரமாட்டார். யாரையும் பசிக்கின்றதென்று உணவும் கேட்கமாட்டார்.*

*என் உறவினர்களில் ஒரு பெண்மணி ஒரு நாள் ஸ்ரீ சுவாமிகளை வீட்டிற்கு அழைத்து வந்து தாழ்வாரத்தில் ஒரு நாற்காலி போட்டு உட்காரவைத்து உணவு ஊட்டியபிறகு ஸ்ரீ சுவாமிகளின் பாதத்தின் மேல் உள்ள புண்ணின் மேல் ஈ, எறும்புகள் மொய்ப்பது கண்டு* **"எண்ணெய்க் காய்ச்சி புண்மேல் விடட்டுமா?"** *என்று கேட்டார். அதற்கு* **"வேண்டாம்பா, அந்த எறும்பைக் கொல்ல வேண்டாம்"** *என்றார் ஸ்ரீ சுவாமி. அந்த நிகழ்ச்சி என் மனதில் ஆழமாக பதிந்து விட்டது.*

*கலசபாக்கத்திலிருந்து பூண்டிக்கு வரும் வழியில் பக்கத்தில் ஆறு இருக்கும். அந்த ஆற்றில் தண்ணீர் வரும் சமயத்தில் விவசாயிகள் ஏத்தம் மிதித்து தண்ணீர் பாய்ச்சுவர். ஒரு பக்தன் ஸ்ரீ சுவாமியை பலவந்தமாக ஏத்தம் மிதிக்கும் இடத்திற்கு அழைத்து வந்து போட்டிருந்த சட்டைகளை கத்திரித்து ஸ்ரீ சுவாமிகள் வேண்டாம் என்று மறுத்தாலும், கேட்காமல் மொட்டையடித்து, சீயக்காய் பொடி கொண்டு தலைக்குளியல் செய்வித்து, உடலில் ஓரிடத்தில் இருந்த புண்ணிலிருந்த புழுவை குச்சியால் எடுத்தார். அதன் பிறகு என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. சிறிது காலத்திற்கு பிறகு அந்த மனிதர் கை, கால் வீங்கி மரணமடைந்தார். அவர் மகன் என் கூட படித்தான். சிறிது காலத்தில் அந்த மகனும் மரணமடைந்தான். அந்த குடும்பம் வாரிசு இல்லாமல் அழிந்து விட்டது. அந்த பக்தன்*

*அன்புடன் செய்தாலும் ஸ்ரீ சுவாமிகளின் நிஷ்டைக்கு பங்கம் விளைவித்ததால் அதன் பலனை அனுபவித்தார்கள் என்று நினைத்தேன்.*

*கலசபாக்கத்தில் '**தம்பிடியான்**' என்று ஒருவர் இருந்ததாகவும், அவர் தென்படாமல் போய் விட்டாரென்றும், அவரே இவராக இருக்கலாமோ என்றும் என் தாயார் கூறுவார். ஆனால் உறுதியாகக் கூறவில்லை.*

*ஸ்ரீ பூண்டி மகானை "**உங்களுடையது எந்த ஊர்?**" என்று கேட்டபோது, "**அரசமரம், ஆலமரம், குளத்துமேடு**" என்று சொல்லுவார். ஸ்ரீ சுவாமிகள் கூறிய அடையாளங்கள் கலப்பாக்கத்தில் இருக்கின்றன. எனவே கலசபாக்கம் சுவாமிகளின் சொந்த ஊராக இருக்கலாமோ என்பது என்னுடைய கருத்து.*

*தங்கவேலு நயினார், மாணிக்கம் நயினார் ஆற்றில் பந்தல் போட்டு ஸ்ரீ சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்து பூஜைகள் செய்வார்கள் என்று கேள்விப்பட்டேன். அந்த சமயத்தில் அங்கிருந்த ஒரு அன்பர் சுவாமிகளுக்கு பூஜை முடிந்த பிறகு சந்தனம் சிறிது எடுத்துவந்து எனக்களித்தார். அதை நான் பத்திரமாக வைத்து இருக்கிறேன்.*

*மாணிக்கம் நயினார் இறந்த பிறகு ஈமக்கடன் செய்வதற்கு பணமில்லாமல் என்னிடம் வந்து கேட்டார்கள். என் மனைவி அங்கீகரிக்கவில்லை. நான் பூண்டி மகானின் தரிசனத்திற்காக வழக்கம் போல் பூண்டிக்கு வந்து காத்திருந்தேன். பூண்டி மகான், "**காத்துக்கொண்டு இருக்கிறாங்க. போய் கொடுத்திட்டு வா**" என்றார். என்னிடமா அல்லது பின்புறம் நின்றிருந்தவர்களுக்கு சொன்னாரா என்பது தெரியாமல் குழப்பமடைந்தேன். பிறகு எனக்கே சொன்னார் என்று நினைத்துக் கொண்டு அவர் வீட்டிற்குச் சென்று பணமளித்தேன். மறு நாள் அவர்கள் வேலைகளை பூர்த்தி செய்தனர். மகான்களுக்கு யார் எவ்வளவு துன்பமளித்தாலும், அவர்களுக்கு நன்மையே செய்வர் என்று புரிந்து கொண்டேன்.*

*என் வீட்டின் எதிரில் உள்ள ஒரு அன்பர் சுவாமிகளுக்கு உணவளிப்பதற்காக அன்புடன் சமைத்து பூண்டிக்கு எடுத்துவந்து*

*சுவாமிகளுக்கு உணவு ஊட்டினார். இன்று அவர் குடும்பத்தில் அனைவரும் சீரும், சிறப்புமாக ஆனந்தமாக வாழ்கின்றனர்.*

**நேர்காணல்: 14**
**17.7.2005 மற்றும் 4.11.2005, பூண்டி**

**சச்சிதானந்த சம்பத் சுவாமிகள்,** வயது: 67, சோழக்குப்பம் கிராமம்.

*நான் இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். பாகிஸ்தானோடு போர் முடிந்தபிறகு ஒரு மாத விடுமுறையில் வீட்டிற்கு வந்தேன். ஒரு நண்பர் என்னை வற்புறுத்தி ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக அழைத்து வந்தார். நாங்கள் வந்த சமயத்தில் நன்கு மழை பொழிந்து குளம், ஆறு, நீர் நிரம்பியிருந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி விட்டு திண்ணைக்குப் பக்கத்திலேயே சுமார் ஒரு மணி நேரம் அப்படியே உட்கார்ந்து இருந்தேன். என் நண்பர் திண்ணைக்கு எதிரிலுள்ள மின் கம்பத்திற் சாய்ந்து கொண்டு சுவாமியைப் பார்த்தவாறு நின்று கொண்டார். மாலை ஏழு மணியளவில் நான் மீண்டும் சுவாமியை வணங்கி புறப்பட்டேன். என் நண்பர் சுவாமியிடம் ஏதோ கேட்பதற்காக வந்து சுவாமியை வணங்கியபோது* **"ஈனனுக்கு இரு செலவு. போயா!"** *என்றார் சுவாமி. அவரது கஞ்சத்தனத்தால் ஏதோ அதிகம் செலவானது. பதினைந்து நாட்கள் கழித்து நான் மீண்டும் சுவாமியை தரிசித்தபோது* **"நீ மலைப்பிரதேசத்தில் தொலைவில் இருக்கிறாய். நீ இருக்கும் இடத்திற்கு வந்து பார்க்கிறேன்"** *என்று கூறினார் பூண்டி மகான்.*

*நான் வட இந்தியாவில் இராணுவத்தில் 28 வருடங்கள் பணியாற்றினேன். நான் பணிபுரியும் போது நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை முன்பே தெரியப்படுத்தி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கூட தெரியப்படுத்துவார். நான் எங்கு சென்றாலும் எனக்கு ஸ்ரீ பூண்டி மகான் தரிசனம் அளிப்பார். ஸ்ரீ சுவாமியின் ஆணைப்படி பதவி ஓய்வுபெற்ற பிறகு என் கடமைகளை முடித்துவிட்டு ஸ்ரீ சுவாமிகளிடம் முழு சரணாகதி அடைந்து பிரம்மசாரியாகி என் பூர்வீக கிராமத்தில் ஆன்மீக வாழ்க்கை நடத்திவருகின்றேன்.*

ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்த திண்ணை வீட்டின் உரிமையாளர் ஏழ்மையில் இருந்தார். சுவாமிகளுக்கு உணவு அளிப்பதற்கு கூட அவர்களால் முடியவில்லையென்று சுவாமிகளிடம் கூறியபோது அவர்கள் மதராஸ் சென்றால் எல்லாம் கிடைக்கும் என்று ஆசிர்வதித்தார். அவர்கள் சுவாமிகளின் அருளால் மதராஸ் சென்றார்கள்.

ஸ்ரீ பூண்டி சுவாமிஎனக்களித்த உபதேசத்தின்படி நான் தொடர்ந்து கடைபிடித்தேன். ஸ்ரீ சுவாமியிடம் ஏதோ தெரியாத சக்தி என்னை ஈர்த்தது. ஸ்ரீ சுவாமிகள் எனக்கு ஆன்மீக அனுபவங்கள் பல அளித்தார். நான் வெளிப்படையாக கூறமுடியாத அனுபவங்களை அளித்தார். இன்றும் எனக்கு துணையாக இருந்து வழி நடத்துகிறார். சுவாமிகளின் அனுக்கிரகத்தை நம்மால் வர்ணிக்க முடியாது. அவரவர்களே அறிந்து கொள்ள வேண்டியது தான். இந்த உலகத்தில் எந்த இடத்தில் என்ன நடந்தாலும் அறிந்து கொள்ளும் சக்தி சுவாமிகளுக்கு உள்ளது. அதுவே என் அனுபவம்.

நம் தேகத்தில் உள்ளதே ஆத்மா. அதுவே பரமாத்மா. அதவே பிரம்மம். நமக்குள் உள்ள ஆன்ம சொரூபத்தை தெரிந்து கொண்டால் கடவுள் அதை விட வேறு இல்லை என்ற உண்மையை அறியலாம். எல்லாம் நிறைந்துள்ள அந்த பரபிரம்மமே ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய சொரூபம்.

பூண்டியில் ஸ்ரீ சுவாமிகள் தெற்கு நோக்கி வீற்றிருப்பார். தெற்கு திசையில் இருப்பது திருவண்ணாமலை. அந்த அருணாச்சலேஸ்வர ஆலயத்திலுள்ள அருணாச்சலேஸ்வரனே எல்லா ஜீவன்களின் நன்மை கருதி ஸ்ரீ பூண்டி சுவாமிகளாக அவதரித்தார் என்பது என் நம்பிக்கை. அருணாச்சலேஸ்வரரே தட்சிணாமூர்த்தியாக பூண்டியில் வீற்றிருந்து மக்களுக்கு அருளும் பொருளும் வழங்கிவந்தார்.





**நேர்காணல்: 15**
**09.08.2005, பூண்டி**

**கிருத்துவ அன்பர்**, வயது: 70, வேலூர்.

*நான் வைதீஸ்வரன் கோயிலுக்கருகில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். பெரியவனாக ஆனதும் வேலூரில் நிரந்தரமாகத் தங்கினேன். எனக்கு தெரிந்த பிராமணர் ஒருவர் ஸ்ரீ சுவாமிகளின் மகிமைகளையும், லீலைகளையும் கூறி அந்த மகான் தரிசனம் செய்து கொள்ள என்னைத் துணையாக வரும்படி அழைத்தார். எனக்கு சுவாமிகள் மேல் நல்ல அபிப்பிராயம் கிடையாது. நான் வரமாட்டேன் என்றேன். சிறிது நாட்கள் கழித்து ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் திண்ணைமேல் அமர்ந்தார் என்று மீண்டும் அழைத்தார். மிகவும் வயதானவர், துணையாக வரச்சொல்கிறார் என்று அவரோடு சேர்ந்து வந்தேன். எனக்கு சுவாமியை பார்த்தவுடனே* "**ஒரு பயித்தியத்தை பார்த்து**" *சுவாமி என்று நினைக்கிறார்களே என்று மனதில் நினைத்துக் கொண்டு தெருவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடன் வந்த பெரியவர் சென்று ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு திருநீறு வைத்துக் கொண்டு சிறிது நேரம் கழித்து வந்தார். இருவரும் கிளம்பி வந்துவிட்டோம்.*

*சிறிது காலம் கழித்து என் நண்பர்* "**பூண்டி மகானிடம் சென்று வந்தாய் அல்லவா எனக்கு வழி தெரியாது**" *என்று கூறி துணையாக வருமாறு அழைத்தார்.* "**அங்கே ஒரு பைத்தியம் உட்கார்ந்து இருக்கிறது. எல்லாரும் வேடிக்கைப் பார்க்கிறார்கள்**" *என்று கூறினேன். அவர்* "**சுவாமிகளை பற்றி கேட்டேன். மிகவும் உயர்ந்த மகான் என்று கூறுகின்றனர்**" *என்று கூறி என்னை வற்புறுத்தினார். அதனால் அவருடன் சேர்ந்து வந்தேன்.*

*ஸ்ரீ சுவாமிகளுக்கு பக்தர்கள் அளித்த பழம் போன்ற காணிக்கைகள் திண்ணை மீதும், பின்புறம் உள்ள அறையிலும் குவியலாக இருந்தது. நான் அங்கு கூர்ந்து கவனித்தேன். வந்த பக்தர்களுக்கு சுவாமி திருநீறு அளிக்கிறார். யாராவது வற்புறுத்திக்*

கேட்டால் ஓரிரு வார்த்தைகள் பேசுகிறார். ஒருவர் வந்து **"சுவாமி நான் மாடு வாங்க போகிறேன். இலாபம் வருமா"** என்று கேட்டார். **"கிடைக்கும்"** என்று கூறினார் சுவாமி. **"எந்த விதமான மாடுகளை வாங்க சொல்றீங்க"** என்று மீண்டும் கேட்டார். அதற்கு சுவாமி, **"எந்த விதமான மாடு வேணுமின்னாலும் வாங்கு"** என்றார். **"எந்த திசையில் செல்லச் சொல்றீங்க"** என்று கேட்டதற்கு **"எந்த திசையில் வேணுமின்னாலும் போ"** என்று ஆசீர்வதித்தார் சுவாமி. அங்கேயிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடம் **"என்ன சுப்பிரமணியம். இவர் இங்கு உட்கார்ந்து கொண்டு நினைத்ததையெல்லாம் வாங்கி திண்ணை மீதும், அறையிலும் குப்பையாக போட்டிருக்கிறார். சுகாதாரத்துக்கு இது கேடு இல்லையா? இதையெல்லாம் நீக்கி அங்கே எங்கியாவது போட்டு எரித்து விடலாம் இல்லையா?"** என்று கேட்டேன். **"சுவாமிகளை நீயே கேள்"** என்றார் சுப்பிரமணியம். நான் தைரியமாக சுவாமிகளிடன் சென்று, **"என்ன சுவாமி, இதையெல்லாம் இங்கு போட்டிருக்கிறீங்க. அழுகி சுகாதாரக் கேடு வராதா. நெருப்பு வைத்து பத்த வைக்கலாம் அல்லவா"** என்று அங்கிருந்த பிரசாதங்களை காட்டிக் கேட்டேன். ஸ்ரீ சுவாமிகள் மிகவும் கோபமாக, **"எரிச்சிடுவியாடா! எரிச்சிடு பாக்கலாம். ஏதோ வச்சி சுகாதாரத்தை கண்டுபிடிச்சிட்டாங்க. ரேடியோ, மைக்ரோபோன் அது இது வச்சிக்கிட்டு சுகாதாரம் சுகாதாரம்னு பேசறாங்க. சுக-ஆதாரம் என்றால் என்னவென்று உனக்கு தெரியுமாடா?"** என்று சத்தமாக பேசிக் கொண்டேயிருந்தார். வேடிக்கை பார்ப்பதற்கென்றே என் பின்னால் சில அன்பர்கள் கும்பலாக கூடிவிட்டனர். எனக்கு மிகவும் அவமானமாக இருந்தது. எதற்கு கேள்வி கேட்டேனோ என்று நினைத்துக்கொண்டு **"தெரியாமல் கேட்டேன் சுவாமி! மன்னிச்சிடுங்க"** என்று மன்னிப்பு கோரினேன். **"ஊம்"** என்றார் சுவாமி. இனிமேல் இந்தப் பக்கம் வரக்கூடாதென்று முடிவு செய்து கிளம்பிச் சென்றேன்.

வெகுகாலம் கழித்து சுவாமி என் நினைவிற்கு வந்தார். பக்தர்கள் ஸ்ரீ பூண்டி மகானின் மகிமைகளை புகழ்வதை கேட்டேன். பல வருடங்களாக திண்ணை மீதே அமர்ந்து இருக்கிறார் என்று சொன்னார்கள். என்னுள் சுவாமிகளை பார்க்கவேண்டுமென்று ஆவல் ஏற்பட்டது. ஒரு நாள், சுவாமி சன்னதியில் என்ன

நடக்கிறதென்று ஆராய்வதற்காக கிளம்பி வந்தேன். காலை ஆறரை மணியிலிருந்து மாலை ஏழு மணிவரை தெருவில் நின்று பார்த்துக் கொண்டே இருந்தேன். ஸ்ரீ சுவாமிகள் யாரிடமும் தண்ணீர் கூட கேட்கவில்லை. அன்பர்கள் வாங்கி வந்து அளிக்கும் தேநீர், குளிர்பானம் போன்றவற்றை சிலர் அளிப்பதை அருந்துகிறார். சிலர் தருவதை அங்கேயே வைத்துச் செல்லுமாறு சொல்கிறார். சில சுவாமிகள் திரைக்குப் பின்னால் எத்தனையோ வேடங்கள் போடுகிறார்கள். ஆனால் ஸ்ரீ பூண்டி மகான் அப்படிப்பட்டவர் கிடையாது என்று எனக்குத் தோன்றியது. இரண்டு மூன்று முறை நான் வந்து ஆராய்ந்து பார்த்தபிறகு சுவாமிகள் பெரிய மகான் என்ற உண்மையை அறிந்தேன். பிறகு அடிக்கடி வர ஆரம்பித்தேன். ஸ்ரீ பூண்டி மகான் திருப்பாதங்களை வணங்கி திருநீறு அணிந்து கொள்வேன். சுவாமிகள் ஒவ்வொரு முறை பேசுவார். சில சமயம் பரிபாஷையில் சொல்லுவார். ''**அத்துவானமான காடுடா! நான் இராமஜெயம் பஸ்ல ஏறி போனேன். அந்த கண்டக்டர் என்னை ஏறச் சொல்லிட்டான் கொண்டு போய் ஒரு காட்டில் இறக்கிவிட்டுட்டான். அங்கு தொந்தியும், தொப்பையுமான ஒரு பிள்ளையார் உட்கார்ந்து இருந்தாரு. ஆடு மேய்க்கிறவன், மாடு மேய்கிறவன் போய்கிட்டு இருந்தான்**'' என்று பேசிக்கொண்டேயிருப்பார் சுவாமி. எதுவும் புரியாது. நமக்கு ஆன்மீகத்தில் தெரியாத விஷயங்களை கேட்ட போது சரியான பதிலை சொல்லுவார்.

நான் தியானம் செய்து எல்லா யோகாசனங்களும் செய்வேன். முப்பது, முப்பத்திரண்டு வயதிலேயே எல்லா பிராணாயாமாக்களையும் செய்வேன். பிராணாயாமம் செய்யும்பொழுது காதில் காற்று அடைத்துக் கொண்டு காதினருகில் வலியாக இருந்தது. ஒரு நாள் ஸ்ரீ சுவாமிகளை வணங்கி என் கஷ்டத்தை கூறினேன். "**உன்னை யாருடா அதெல்லாம் பண்ண சொன்னா? எல்லாத்தையும் நிறுத்துடா**" என்றார் பூண்டி மகான். நான் சுவாமிகளை பெரிய மகான் என்று உணர்ந்து அவர் கூறியபடியே அனைத்தையும் நிறுத்திவிட்டேன். இரண்டு வாரம் கழித்து வந்து ஸ்ரீ சுவாமிகளை வணங்கி "**சுவாமி நீங்கள் சொன்னபடியே பிராணாயாமம், யோகாசனம்,**

**தியானம் எல்லாத்தையும் நிறுத்திவிட்டேன்**" என்று கூறினேன். "**யார்டா தியானத்தை நிறுத்தச்சொன்னது தியானத்தை நிறுத்தினா நிர்மூலமா போயிடுவடா**" என்று கூறினார் பூண்டி மகான். அப்போதிலிருந்து தியானத்தை மட்டும் காலம் தவறாமல் செய்து கொண்டிருக்கிறேன்.

விடுமுறையில் குடும்பத்தினர் அனைவரும் எங்கள் சொந்த கிராமத்திற்குச் சென்றோம். என் சகோதரர்களும் அவர்கள் குடும்பத்தோடு வந்தார்கள். அனைவரும் சேர்ந்து பதினைந்து நாட்கள் விடுமுறையை உல்லாசமாக கழித்து விட்டு கிளம்பி திருவண்ணாமலைக்கு வந்தோம். மனைவி, மக்களை வேலூருக்குச் செல்ல பேருந்து ஏற்றிவிட்டு நான் பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் என்னைப் பார்த்தவுடனே "**உன்னை இத்தனை வேலி கட்டி வளர்த்தேனே. சிலுவை வேலி கட்டி வளர்த்தேன். மூங்கில் வேலி கட்டி வளர்த்தேன். எல்லாம் பறிபோனது போல ஆச்சுடா எனக்கு**" என்று கூறினார். எதற்கு அப்படிச் சொன்னார் என்பது எனக்கு புரியவில்லை. மீண்டும் '**ஒகட்டி, ரெண்டு, மூடு**' என்று தெலுங்கில் பேசினார். நானும் தெலுங்கு மொழியில் பேசிக் கொண்டிருந்தேன். "**உளுந்து போடலாமா? எள் போடலாமான்னு பேசிக்கிட்டு எல்லாத்தையும் விட்டியேடா**" என்றார் சுவாமி. எங்கள் கிராமத்திற்கு விடுமுறையில் சென்ற போது அனைவருடன் சேர்ந்து சந்தோஷமாக காலத்தை போக்கிக் கொண்டு தியானம் செய்வதை நிறுத்தி விட்டேன். தியானத்தை நிறுத்தியதற்கு ஸ்ரீ பூண்டி மகான் நான் செய்த தவற்றை எடுத்துக்காட்டுகிறார் என்று அறிந்து உடனே "**சுவாமி, மன்னிச்சிடுங்க. தப்பு செய்துவிட்டேன். இனிமேல் சரியாக செய்கிறேன்**" என்று மன்னிப்பு வேண்டினேன். பிறகு திருநீறு வைத்தார். அன்றிலிருந்து நான் எங்கு சென்றாலும் தியானம் செய்கிறேன். நான் எங்கு சென்றாலும் ஸ்ரீ பூண்டி மகான் என்னைப் பார்த்துக் கொள்கிறார் என்ற நினைவில் இருக்குமாறு எனக்கு அருள் புரிந்தார்.

நான் பூண்டிக்கு வரவேண்டுமானால் வேலூரில் இருந்து பேருந்தில் வந்து கலசபாக்கத்தில் இறங்கி அங்கிருந்து நடந்தே பூண்டிக்கு வருவேன். எனக்கு அப்போது அதற்கு மேல் வசதியில்லை. ஒரு நாள் கொளுத்தும் வெயிலில் நடக்க முடியாமல் இரண்டு

*சைக்கிள் கடைகளில் வாடகைக்கு சைக்கிள் கேட்டேன். ஆள் தெரியாது என்று சைக்கிள் தர மறுத்து விட்டார்கள். நான் நடந்து கொண்டே 'ஒவ்வொருத்தருக்கும் எப்படிப்பட்ட குரு எல்லாம் இருக்கறாங்க. நமக்கு இருக்கிற குரு சைக்கிள் கூட வாங்கித் தர முடியாமல் இருக்கிறாரே' என்று மனதில் திட்டிக் கொண்டேன். அப்போது ஒரு முகம் தெரியாத நபர் எனக்கு எதிராக சைக்கிளில் வந்து "என்ன சார்? நடந்து செல்கிறீர்களே?" என்று கேட்டார். "வேறு எப்படி செல்வது. ஒருவரும் சைக்கிள் கொடுக்கவில்லையே?" என்றேன். "யாரு உங்களுக்கு அப்படி சொன்னது. வாங்க என்னுடன்" என்று கூறி, என்னை உடன் அழைத்து சென்று கடை அருகில் வந்து* **"சார் ஒவ்வொரு மாதமும் பூண்டிக்கு வந்து கொண்டிருப்பார். வந்தால் நல்ல சைக்கிளை கொடுங்க"** *என்று இரண்டு சைக்கிள் கடைகளிலும் சொல்லிச் சென்று விட்டார். அன்றிலிருந்து வாடகை சைக்கிளைத் தருவார்கள். ஆனால் எனக்குச் சொன்ன அந்த அந்நிய மனிதரை எப்போதும் பார்த்ததில்லை. மீண்டும் எனக்கு தென்படவும் இல்லை. இது ஸ்ரீ பூண்டி மகான் திருவிளையாடல் என்றே நினைத்தேன்.*

*என் அண்ணன் மகன் வேலூர் இரயில் நிலையத்திற்கு வருவதாகவும் அங்கேயிருந்து வீட்டிற்கு வர வழி தெரியாது என்றும் இரயில் நிலையத்திற்கு வந்து அழைத்துச் செல்லும்படி கடிதம் எழுதினான். அன்று நான் பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு மாலையில் இரயில் வருவதற்குள் போய் சேர வேண்டும் என்று நினைத்தேன். மத்தியானம் பனிரெண்டு மணியளவில் ஸ்ரீ சுவாமிகள் தரிசனம் செய்து விட்டு விடை கொடுக்குமாறு வேண்டினேன். ஸ்ரீ சுவாமி எப்போதும் சரியென்றும் அல்லது* **'நல்லது சென்று வா'** *என்று கூறுவார். அன்று ஒன்றும் பதில் பேசவில்லை. ஒரு மணி நேரம் கழித்து விடை கேட்டாலும் பதில் சொல்லவில்லை. என் ஆலோசனை எல்லாம் அண்ணன் மகன் வருவதற்குள் வேலூர் சேர வேண்டும் என்று தவித்தேன். எத்தனை முறை கேட்டாலும் சுவாமிகள் பதிலளிக்கவில்லை. நான் கிளம்புகிறேன் என்று சுப்பிரமணியம் அவர்களிடம் கூறினேன்.* **"சுவாமி பதில் சொல்லலை அல்லவா. நீ போகணும்னு சொல்கிறாய். சுவாமி**

**அனுமதி பெற்றுச் செல்**" என்று நல்லது கூறினார். நான் நடப்பவை நடக்கட்டும் என்று அங்கேயே நின்றேன். இரண்டரை மணிக்கு இரயில் போளூர் வந்தடையும். அப்போது சென்று சுவாமிகளை வேண்டினேன். "**சரி போய்ட்டு வா. பஸ்ல போ**" என்று தெளிவாகக் கூறினார். சுவாமி எதற்கு அவ்வாறு கூறினார் என்பது புரியவில்லை. நான் கலசபாக்கம் வந்து பேருந்து ஏறினேன். இருக்கையில் அமர்ந்து திரும்பி பார்த்தபோது என் அண்ணன் மகன் அங்கே அமர்ந்திருக்கிறான். "**ஏண்டா பேருந்தில வருகிறாய். இரயிலில் வருவதாக கடிதம் எழுதினாய் அல்லவா**" என்று கேட்டதற்கு "**பேருந்தில் சீக்கிரம் செல்லலாம் என்றார்கள். எப்படியாவது முகவரி தெரிந்து கொண்டு வீட்டைச் சென்றடையலாம் என்று பேருந்து ஏறினேன்**" என்றான். என்னை சரியாக அதே சமயத்திற்கு அதே பேருந்தில் ஏறும்படி செய்தது ஸ்ரீ பூண்டி மகானின் அற்புதமே என்று அறிந்தேன்.

நான் பூண்டிக்குச் செல்ல கிளம்பினால் ஆரம்பத்தில் எத்தனையோ இடைஞ்சல்கள் தோன்றின. நான் செல்லாமல் நின்று விடுவேன். அவ்வாறு நின்று போவது சரியானதல்ல என்று நினைத்து எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும் நிற்காமல் பூண்டிக்கு செல்வதை வழக்கமாக்கிக் கொண்டேன். பிறகு அந்த இடைஞ்சல்கள் நீங்கி விட்டன. இவையெல்லாம் கூட ஸ்ரீ பூண்டி மகானின் அற்புதங்களே என்று புரிந்து கொண்டேன்.

நான் முதலில் வாடகை வீட்டில் இருந்தேன். என் மனைவி ஆசிரியராக பணியாற்றினார். நான் வியாபாரம் செய்து வந்தேன். வரும் வருமானம் ஐந்து குழந்தைகளின் படிப்புக்கும், வாழ்க்கை நடத்துவதற்கும் போதவில்லை. ஒரு முறை ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் என் கஷ்டங்களை சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஸ்ரீ சுவாமியின் சன்னதியில் உட்கார்ந்து கொண்டு சொல்லலாமா வேண்டாமா என்று யோசனை செய்து கொண்டே இருமனமாக சென்று விட்டேன். வீட்டிற்குச் சென்ற பதினைந்து நாட்களுக்கு எல்லாம் குடும்ப கஷ்டங்கள் தாங்க முடியாமல் பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ சுவாமிகளை தரிசித்து கொண்டு அவர் சன்னதியில் திண்ணைக்கு அருகில் அமர்ந்தேன். சொல்ல மனம் வரவில்லை. மவுனமாக

உட்கார்ந்து கொண்டேன். அச்சமயத்தில் எவரும் இல்லை. ஸ்ரீ பூண்டி மகான் என்னை பார்த்து;

**திருவருட்பா:**

“தொல்லைக் குடும்பத் துயரதனில்
தொலைத்தே னந்தோ காலமெலாம்
அல்லகற்றிப் பெரியோரை
யடுத்து மறியே னரும்பாவி
செல்வத் தணிகைத் திருமலைவாழ்
தேவா வுன்றன் சன்னிதிக்கு
வில்வக் குடலை யெடுக்காமல்
வீணுக் குடலை யெடுத்தேனே”

என்று பாடினார். நான் வேலூருக்குச் சென்று என் நண்பனை அந்த பாட்டின் பொருளைக் கேட்டேன். அவர் எல்லா நூல்களையும் நன்றாக படித்தவர். ‘**தெரியாது**’ என்று கூறினார். சிறிது நாள் கழித்து அந்த நண்பருக்கு தெரிந்தவர், திருவாரூரிலிருந்த ஒரு சாது வந்தார். அவரையும் கேட்டேன். ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் எழுதிய திருவருட்பாவில் உள்ளது என்று கூறினார். நான் சென்று அந்த புத்தகம் வாங்கிப் படித்து பொருள் தெரிந்து கொண்டேன்.

**பாட்டின் பொருள்:**

துன்பம் நிறைந்த குடும்பத் தொல்லைகளில் ஆழ்ந்து என்னுடைய காலத்தை வீணிற் போக்கினேன். அவற்றினின்றும் நீங்கிப் பெரியோர்களை யடுத்து நீக்குதற்கரிய பாவியாதலால் அவர் காட்டும் வழியிலும் நில்லா தொழிந்தேன். செல்வம் மிக்க திருத்தணிகை மலையில் எழுந்தருளும் தேவனே, உனது திருமுன்பு வில்வம் நிறைந்த பூக்குடலையைச் சுமக்கும் பணியையும் செய்யாமல் இவ்வுடம்பைச் சுமந்து வீணானேன்.

நான் மீண்டும் பூண்டிக்குச் சென்று ஸ்ரீ சுவாமிகளை வணங்கி, **“சுவாமி நீங்கள் பாடிய பாடலுக்கு பொருள் தெரிந்து கொண்டேன். நீங்கள்**

**சொன்னபடியே இனி என் வியாபாரம், குடும்பம் அனைத்தையும் உங்கள் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன். இனி நீங்களே எனக்கு கதி**" யென்று முழு சரணாகதி அடைந்தேன். "**சரிடா**" என்று அருள் புரிந்தார் சுவாமி. அதன் பிறகு எனக்கு வியாபாரத்தில் இலாபம் ஏற்பட்டது. குழந்தைகளும் நன்றாக படித்து உயர்ந்த நிலையை அடைந்தார்கள். இன்று என் கஷ்டங்கள் நீங்கி உன்னதமான நிலையில் இருக்கிறேன். இது ஸ்ரீ பூண்டி மகானின் திவ்ய அருளே ஆகும்.

ஒரு நாள் என் நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு பிராமணர் வந்தார். அவர் என் நண்பனின் நண்பர் ஆவார். பேச்சினிடையே நான் தியானம் செய்வது பற்றியும், ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று வருவது பற்றியும் கூறினேன். அந்த பிராமணர் ஏளனமாக "**உனக்கு குரு இல்லை. குரு இல்லாமல் ஆன்மீகத்தில் முன் செல்வது முடியாதது**" என்று கிண்டல் செய்தார். நான் அவர் பேச்சை கண்டு கொள்ளவில்லை. இரண்டு, மூன்று மாதங்களுக்கு பிறகு ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு திண்ணைக்கு அருகில் அமர்ந்தேன். அச்சமயத்தில் பிராமணர் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தது. "**அவர் எனக்கு குரு இல்லை என்று சொன்னார். உண்மையில் பூண்டி சுவாமி தானே என் குரு**" என்று மனதில் நினைத்து ஸ்ரீ பூண்டி மகானிடம் தீட்சை பெற வேண்டுமென்று அப்படியே முன் சென்று ''**சுவாமி எனக்கு உபதேசம் செய்யுங்கள்**'' என்று பிரார்த்தித்தேன். திண்ணை மீது அமர்ந்திருந்த ஸ்ரீ பூண்டி மகான் அப்படியே குனிந்து என் காதில் மந்திரத்தை உபதேசித்தார். "**சொல்லிக்கோடா**" என்று ஆசீர்வதித்தார். நான் மிகவும் ஆனந்தம் அடைந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் நேரிடையாக உபதேசம் அளித்து நான் யாரையும் பார்க்கவில்லை. இதை எனக்களித்த வரமாக பாவித்தேன்.

இலங்கையில் இருந்து ஒரு மடாதிபதி பூண்டிக்கு வந்தார். அவர் நல்ல தேஜஸான முகம். ஆஜானுபாகர். தலை முடி நன்றாக ஜடை விழுந்துவிட்டது. அவர் பூண்டியில் மற்றொரு துறவியைத் துணையாக அழைத்து வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து தரிசனம் செய்து கொண்டு உபதேசம் அளிக்குமாறு வேண்டினார்.

ஸ்ரீ சுவாமிகள் பதிலேதும் கூறவில்லை. கிராமத்துப் பெரியவர்கள் வந்து '**சுவாமி! ஒரு மடாதிபதி உங்களிடம் உபதேசம் வாங்க வேண்டும் என்று ஸ்ரீ இலங்கையிலிருந்து வந்திருக்கிறார்**' என்று வேண்டினாலும் சுவாமி மௌனமாக இருந்து விட்டார். சுவாமிக்கு இஷ்டமில்லை என்றால் யார் முயற்சி செய்தாலும் பலனில்லை என்று கூட வந்தவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர். அந்த மடாதிபதி திண்ணைக்கு அருகில் கொளுத்தும் வெயிலில் நின்று கொண்டு மணிக்கு ஒருமுறை வந்து சுவாமியிடம் வேண்டிக் கொண்டார். மாலை மூன்று மணி வரை முயற்சி செய்தும் கடைசியில் "**நான் சென்று வருகிறேன் சுவாமி**" என்று விடை பெற்ற போது "**நல்லது சென்று வா**" என்றார் சுவாமி. அந்த மடாதிபதி சென்ற பிறகு, "**சுவாமி, அவ்வளவு பெரியவர் வந்து கேட்டார். நீங்கள் உபதேசம் செய்யவில்லை. எனக்குச் செய்தீர்களே**" என்று கேட்டேன். "**அப்படி ஆயிடுச்சுடா**" என்றார் சுவாமி. இப்படி சுவாமியின் சன்னதியில் தினந்தோறும் எத்தனையோ நடந்து கொண்டிருந்தன.

எங்கள் குடும்பத்தில் என் மனைவிக்கு வெகு காலமாக நான் பூண்டி சுவாமியிடம் சென்று வருவது தெரியாது. தெரியாமல் வருவேன். காரணம் என்னவென்றால், எங்கள் மதத்தை விட்டு வேறு ஒரு மதத்தைச் சேர்ந்தவரை வணங்குகிறார் என்று பெரிய சண்டை நேரிடும். எனவே அதற்காக நான் தெரியப்படுத்தவில்லை. கடைசியில் சிறிது சிறிதாக தெரிய ஆரம்பித்தது. நான் பூண்டி சுவாமியிடம் வந்து விட்டு வீட்டிற்குச் சென்றால் உடனே என் மனைவி மறைமுகமாக திட்டுவார். ஆனால் நான் அதையெல்லாம் பொருட்படுத்தமாட்டேன்.

என் கடைசி மகள் இந்து மதத்தை சேர்ந்தவரை விரும்பி கல்யாணம் செய்து கொண்டார். அவர் மிகவும் நல்லவர். நான் "**உன் மாப்பிள்ளை மட்டும் என்னவாம்**" என்று என் மனைவியிடம் நகைச்சுவையாக பேசுவேன். அவரை தவறாகப் பேசுவது என் மனைவிக்குப் பிடிக்காது. என் மனைவிக்கு அவரை மிகவும் பிடிக்கும். அதன் பிறகு என் மனைவியிடம் மாற்றங்கள் ஏற்பட்டன. என் மேல் கோபப்படுவது கூட குறைந்து விட்டது. இப்போது நான் வீட்டில் சொல்லி விட்டு வெளிப்படையாக தைரியமாக பூண்டிக்கு வந்து

செல்கிறேன். ஸ்ரீ பூண்டி மகான் என் மனைவியின் மனப்போக்கினை கூட மாற்றினார்.

இல்லறத்தில் இருந்து கொண்டு ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் குருவின் அனுக்கிரகம் இருந்தால் தான் முடியும். இல்லையென்றால் முடியாது. தியானம் என்றால் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் செய்வது என்ற நிலையையை கடந்த பிறகு நான் ஒரு முறை ஸ்ரீ பூண்டி மகானைதரிசித்து கொண்டு "நான் தியானம் செய்கிறேன் சுவாமி" என்றேன். ஸ்ரீ பூண்டி மகான் பட்டினத்தார் பாடிய பாடலைப் பாடினார்.

**பட்டினத்தார் பாடல்**

"எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும்
முத்தர் மனம் இருக்கும் மோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதி மனம் நீர்க்குடத்தே தான்"

**பொருள்:**

ஒரு பெண்ணானவள் மற்றவர்கள் பார்த்து வியக்கும்படியாக தலையில் தண்ணீர் குடத்தை சுமந்து செல்லும்போது தன் நடை உடை பாவனைகளைக் காட்டி இரண்டு கைகளை வீசி வந்தாலும், அப்பெண்ணினுடைய மனமானது அவர் தலை மீது சுமந்து செல்லும் குடத்தின் மீதுதான் இருக்கும். அது போல ஜீவன் முத்தர்கள் எவ்வகையான தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும் எத்தகைய துன்பங்களை அனுபவித்தாலும் அவர்தம் மனமானது மோன நிலையை (சமாதி நிலை) நோக்கியே இருக்கும்.

ஸ்ரீ பூண்டி மகானின் தரிசனத்திற்காக வந்தபோது இரண்டு பாக்கெட் சார்மினர் சிகரெட் வாங்கித் தருவேன். உடனே தீப்பெட்டி தருமாறு கேட்பார். எனக்கும் சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருந்ததால் என்னிடம் இருந்த தீப்பெட்டியை கொடுத்து விடுவேன். சாக்லேட் வாங்கி வந்து வாயில் வைப்பேன். அதன் பிறகு திண்ணையின் கீழே அமர்ந்து ஒன்றிரண்டு மணி நேரம் தியானம் செய்வேன். கிளம்பும்

*முன்பு சுவாமியின் தரிசனம் செய்து கொண்டு சுவாமி எனக்கு திருநீறு வைத்த பிறகு விடை பெற்றுச் செல்வேன். ஸ்ரீ பூண்டி மகான் திவ்ய சன்னதியில் போக்கின நேரம் மிகவும் திருப்தியாக, ஆனந்தமாக இருந்தது. அதுவே சுவாமியின் திவ்ய அனுக்கிரகமாகும்.*

*சாதாரணமாக சிலருக்கு ஞானிகள் குருவாக அமைவார்கள். எனக்கு பரபிரம்ம சொரூபமான ஸ்ரீ பூண்டி மகானே எனக்கு குருவாக கிடைத்தார். ஸ்ரீ பூண்டி மகான் சமாதியடைந்த பிறகு கூட நான் ஒவ்வொரு மாதமும் வந்து சுவாமி சமாதியை தரிசனம் செய்து விட்டுச் செல்வேன். என் பிள்ளைகள் எல்லாரும் நன்றாக படித்து கல்யாணம் செய்து கொண்டு சிறப்பான முறையில் இருக்கின்றனர். நான்கு பேர் அந்நிய நாட்டிலும் கடைசி மகள் சென்னையிலும் இருக்கிறார்கள். இப்போது நான் வெளிநாடுகளுக்கு சென்று வருகிறேன். மாதம் ஒரு முறை வந்து சுவாமி சமாதி சன்னதியை தரிசனம் செய்து கொண்டாலும் அந்த மாதம் முழுவதும் சுவாமியிடம் இருந்தது போன்ற உணர்வு தோன்றுகிறது. ஸ்ரீ பூண்டி மகான் திவ்ய அருளால் என் மனதில் அமைதி, திருப்தி நிலவியது.*

**நேர்காணல்: 16**
**10.08.2005, பூண்டி**

**தியாகராஜன்**, வயது: 65, பூண்டி.

*நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்தேன். நான் சிறுவயதிலிருந்தே பூண்டி மகானை அறிவேன். சுவாமி அணிந்திருந்த ஆடை மிகவும் அழுக்காக இருக்கும். தோளில் ஒரு மூட்டையை மாட்டிக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்த போது, சுவாமிகள் வழியில் தென்பட்டால் நானும், என் சகோதரியும் சுவாமிகளின் கைப் பிடித்து வீட்டிற்கு அழைப்போம். சில சமயம் வருவார். சுவாமிகள் வீட்டிற்கு வந்தால் வீட்டில் எது இருக்கிறதோ அதை ஊட்டினால் உண்பார். சிறிது நேரம் திண்ணை மீது படுத்திருந்துவிட்டு பிறகு செல்வார்.*

*ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் திண்ணைமேல் அமர்ந்த பிறகு எங்கும் செல்லவில்லை. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, பூண்டி மகானுக்கு அபிஷேகம் செய்து பூஜைகள் செய்ய ஆரம்பித்த பிறகு அன்பர்கள் அதிகமாக வரத் தொடங்கினார்கள். பக்தர்கள் ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்கு வந்தபோது சிலருக்கு திருநீறு வைப்பார். சிலரை மடலிலிருந்து எடுத்துக் கொள்ளச் சொல்லுவார். ஒரு சமயம் நன்றாக பேசுவார். சில சமயம் மௌனமாக இருப்பார். சிலர் மனதில் நினைத்த உடனே அவர்களுக்கு பூண்டி மகான் பதில் கிடைக்கும். அப்படி எத்தனையோ முறை இந்த அனுபவம் பெற்றேன்.*

*திருவண்ணாமலையில் முருகையா என்பவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர், நன்றாகப் படித்தவர், மாவட்டத்தில் பெயரும், புகழும் பெற்றவர். எனக்கு மிகவும் நெருக்கமானவர். அவர்* **“கண்டசாரி சர்க்கரை ஆலை”** *ஆரம்பிக்க பங்குதாரராக என்னைச் சேரச் சொல்லி இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் முன்பணமாக எடுத்து வரச் சொன்னார். நான் பணம் ஏற்பாடு செய்து கொண்டு ஒரு நாள் விடியற் காலையில் குளித்துவிட்டு கிளம்பி ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்காக வந்தேன். ஸ்ரீ சுவாமிகள் திண்ணை மேல் படுத்துக்*

கொண்டிருந்தார். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கீழே படுத்திருந்தார். நான் அவரை '**மாமா**' என்று அழைப்பது வழக்கம்."**ஸ்ரீ பூண்டி மகானை எழுப்புங்கள் மாமா**" என்றேன். அவர் ஸ்ரீ பூண்டி மகானை எழுப்பி உட்கார வைத்து திருநீறு பூசி, குங்குமம் வைத்து "**தியாகராஜன் வந்திருக்கான் சுவாமி**" என்றார்."**நல்லது தெரியும்**" என்று கூறினார் பூண்டி மகான். நான் பூண்டி மகானை வணங்கி விட்டு "**சுவாமி, கண்டசாரி சர்க்கரை ஆலை ஆரம்பிக்க என் பங்கில் முன்பணமாக இருபத்தி ஐந்தாயிரம் கேட்கிறார்கள். எடுத்துக் கொண்டு செல்கிறேன். அதில் சேரலாமா!**" என்றுக் கேட்டேன். "**நமக்கு வேணாம்பா**" என்று சொன்னார் பூண்டி மகான். நான் திரும்பி வீட்டிற்கு சென்று என் தாயிடம் பணத்தை கொடுத்து "**சுவாமிகள் அனுமதிக்கவில்லை**" என்று கூறினேன். அந்த சர்க்கரை ஆலை ஒரு வருடம் கூட நடத்த முடியாமல் முதலீடு செய்தவர்கள் நஷ்டம் அடைந்தார்கள். ஸ்ரீ பூண்டி மகான் எனக்கு நஷ்டம் வராமல் காப்பாற்றினார்கள். இது என் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத அனுபவம்.

நான் எங்கு செல்ல வேண்டுமானாலும் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு தான் செல்வேன். நான் எந்த பணி செய்ய வேண்டுமானாலும் ஸ்ரீ பூண்டி சுவாமி அனுமதி கிடைத்தால் மட்டுமே செய்வேன். சில சமயங்களில் நான் மனதில் நினைத்தாலும் சுவாமிகளின் பதில் கிடைக்கும். சில சமயங்களில் ஸ்ரீ பூண்டி மகான் தனிமையில் இருக்கும்போது, நான் தரிசனம் செய்து கொள்ளும்போது சொல்லமுடியாத அனுபவங்களைத் தந்துள்ளார்.

நான் இருபத்தியொரு வயதாக இருக்கும்போது முதன் முறையாக கிராம பஞ்சாயத்துத் தலைவராக போட்டியிட்டேன். எனக்கு எதிராக நின்றவர் பெரிய நிலக்கிழார், பெரிய காங்கிரஸ் தலைவர், சுவாமியின் கமிட்டியில் உறுப்பினராகவும் இருந்தவர், அவர் பெயர் திருஞான சம்பந்தம். ஸ்ரீ பூண்டி மகானின் பேரருளால் அவரை தோற்கடித்து நான் வெற்றி பெற்றேன். நான் பூண்டிக்கு பக்கத்தில் குக்கிராமத்தில் இருந்தாலும் ஸ்ரீ சுவாமிகளின் அருளால் ஐந்து முறை போட்டியிட்டு வென்றேன்.

ஸ்ரீ பூண்டி மகானின் வலது பாதத்தில் புண் வந்து பெரியதாகி விட்டது. பூச்சி, எறும்பு, ஈ உள்ளே சென்று வந்து கொண்டிருக்கும். **நான் "சுவாமி! பாதம் இப்படி இருக்கிறது வைத்தியரை அழைத்து வந்து சரி செய்கிறேன்" என்று வேண்டினேன். "வேண்டாம்பா. சாப்பிடட்டும்"** என்றார் சுவாமிகள். பாதத்தில் இருந்த புண்ணை எப்போதும் சுவாமி பொருட்படுத்த மாட்டார்.

திருவண்ணாமலையில் ப.உ.சண்முகம் என்பவர் மாநில உணவுத்துறை அமைச்சராக இருந்தார். அவர் பூண்டி மகானின் பக்தர். பகலில் சுவாமி தரிசனத்திற்கு வர மாட்டார். இரவில் வந்து பூண்டி மகானை தரிசித்துச் செல்வார். அவருடன் இருந்தவர்கள் தானியங்களை விற்று விட்டதாக, ஊழல் வழக்கில் பிடிபட்டார்கள். ப.உ.சண்முகம் செய்தாரோ என்று முதலமைச்சர் கூட சந்தேகித்தார். ஒரு நாள் மந்திரி இரவில் பூண்டி மகானின் தரிசனத்திற்கு வருவதாகவும் என்னை அன்றிரவு வழியில் காத்திருக்கும்படியும் தகவல் அனுப்பினார். இரவு ப.உ.சண்முகம் வந்தபிறகு இருவரும் சேர்ந்து திண்ணைக்கருகில் சென்றவுடன் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி பூண்டி மகானை அமர வைத்து **"ப.உ.ச. வந்திருக்கார் சுவாமி"** என்று கூறியவுடன், **"தெரியும். தெரியும்"** என்றார் சுவாமிகள். **"இப்போது இருக்கும் அரசாங்கத்தில் ஆளும் கட்சியால் நம்ம ப.உ.ச.வுக்கு ஏதாவது நஷ்டம் வருமா? என்று கேட்க வந்தார் சுவாமி"** என்று கூறினேன்.

**"எதுவும் வராது. போங்கப்பா"** என்று ஆசீர்வதித்தார் பூண்டி மகான். ப.உ.சண்முகமும் சுவாமிகளை வணங்கி, விடைபெற்று சென்று விட்டார். சிறிது காலத்தில் தவறு செய்தவர்களுக்கு தண்டனை கிடைத்தது. ப.உ.ச.வுக்கு அரசாங்கத்தால் எந்த விதமான தீமையும் நடக்கவில்லை. இப்படி பல அனுபவங்கள் ஸ்ரீ பூண்டி மகான் சன்னதியில் அனுபவித்தேன்.

ஸ்ரீ பூண்டி மகான் பெயரில் கமிட்டி அமைத்து எவரெவர் தன் சொந்த இலாபத்திற்கு ஆசைப்பட்டார்களோ இன்று அவர்கள் குடும்பம் அனுபவிக்கும் துன்பங்கள் தெளிவாகத் தெரிகின்றது.

**நேர்காணல்: 17**
**19.08.2005, பூண்டி**

**அனுவெண்ணிலா**, வயது: 66, போளூர் கிராமம்.

*ஸ்ரீ பூண்டி மகானை நான் இரண்டு முறை தரிசனம் செய்துள்ளேன். ஸ்ரீ சுவாமிகளின் கண் தீட்சை (நயன தீட்சை) பெறும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. ஸ்ரீ சுவாமியின் சன்னதியில் திருப்புகழைப் பாடியுள்ளேன். நான் திருப்புகழ் பாடும் சமயத்தில் ஸ்ரீ சுவாமி இடையிடையே என்னைப் பார்த்து பாட்டு முடியும் வரை கேட்டுக் கொண்டேயிருப்பார். பாட்டைப் பாடி முடித்தவுடன் அங்கிருந்து செல்லத் தோன்றாமல் அங்கேயே நின்று கொண்டிருப்பேன். ஸ்ரீ சுவாமி என்னை நோக்குவார். அந்த பார்வையை தாங்க முடியாவிட்டாலும் ஸ்ரீ சுவாமி என்னை நோக்குவார். அந்த பார்வையை தாங்க முடியாவிட்டாலும் ஸ்ரீ சுவாமி என்னைப் பார்க்கவேண்டும் என்ற கோரிக்கை அதிகமாக இருந்தது. அந்த பார்வையிலுள்ள மகிமை அப்படிப்பட்டது. அந்த அனுபவத்தை எப்போதும் மறக்கமாட்டேன்.*

*ஓர் ஏழைப்பெண் விவசாயக் கூலிவேலை செய்து வந்தாள். அவள் தன் வீட்டில் அவரைச்செடி போட்டிருந்தாள். அது வளர்ந்து செழித்து பக்கத்து வீட்டிலும் படர்ந்து காய்த்தது. பக்கத்து வீட்டுப் பெண் தன் வீட்டுப் பக்கம் விளைந்த காய்களைப் பறித்துக் கொண்டாள். இதுபற்றி இரண்டு வீட்டுப் பெண்களுக்குள்ளும் பெரிதாக வாய்ச் சண்டை முற்றியது.*

*செடி வைத்தவள் வயல் வேலைக்குப் போன பின், பக்கத்து வீட்டுப் பெண் அவரைச் செடியின் வேரை அறுத்துவிட்டு கூலி வேலைக்கு போய் விட்டாள். நேரமாக ஆக செடியை அறுத்தவளுக்குத் தன் செயலை எண்ணி மனம் உறுத்தத் தொடங்கி விட்டது. வேலையை முடித்துவிட்டு மாலை வீடு திரும்பும் நேரம் வந்தது.*

ஆனால் அவள் வீட்டுக்குப் போகாமல் மகானிடம் வந்து தயங்கியபடி, “**சாமி, காலையில் ஒரு தப்பு பண்ணிட்டேன். இப்ப மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு**” என்றாள். மகான் பதில் ஏதும் சொல்லாமல் இருந்தார். “**நான் செஞ்சது தப்புதான் சாமி**” என்றாள் மறுபடியும். “**இப்ப வருத்தப்பட்டு என்ன பண்றது. அது எப்பவோ கெணத்து மேட்டுல எடுத்துப் போட்டாச்சு, போய் ஆக வேண்டியதைப் பாரு**” என்றார் சுவாமி அவள் முகத்தை பார்க்காமல். இதைச் சொல்லியதும் ஒன்றும் புரியாமல் அவள் வீட்டை நோக்கி நடந்தாள். எதிரே வந்த ஒரு பெண் இவளைப் பார்த்து “**உன்னோட மகன் கிணத்துல விழுந்து செத்திட்டான், கிணத்து மேட்டுல தூக்கிப் போட்டிருக்காங்க**” என்று சொல்ல அவளது ஏழு வயது மகனை நினைத்து அலறி அடித்தபடி ஓடினாள்.

அடுத்து, மகான் மீது பேரன்பு கொண்ட முஸ்லீம் பக்தர் ஒருவர் தோளில் துணி மூட்டையைச் சுமந்து ஊர் ஊராகக் கொண்டு சென்று விற்பவர். சுவாமிகளை மாதம் ஒருமுறை தவறாமல் வந்து தரிசனம் செய்து கொள்வார். சில சமயம் ஓரிரு நாட்கள் தங்கிச் செல்வதும் உண்டு.

ஒரு சமயம் பூண்டியில் இரண்டு நாள் தங்கிய அவர் ஊர் திரும்ப சுவாமிகளிடம் அனுமதி கேட்க, சுவாமிகள் மறுத்து “**நாளைக்குப் போகலாம்**” என்று சொல்லிவிட்டார். அவரது வார்த்தையை மீறி ஊருக்குப் புறப்பட மனமில்லாமல், இருக்கவும் முடியாமல் அரை மனத்தோடு பூண்டியிலேயே தங்கி விட்டார்.

மறுநாள் காலையில் தினத்தந்தி நாளிதழில் ‘‘**அரக்கோணம் அருகே ரயில் கவிழ்ந்தது,பல பேர் பலி**’’ என்று தலைப்புச் செய்தி வெளியாகியிருந்தது கண்டு முஸ்லீம் அன்பர் திகைத்து சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து மன்னிப்பு கேட்டு வணங்கி நன்றி கூறினார்.

இன்னொரு நிகழ்ச்சி என்னவென்றால், அந்த நாளில் முருகனைப் பற்றி மிகவும் சுவைபட ஆன்மீகச் சொற்பொழிவாற்றும் அடியார் ஒருவர் தனது பணக்கார நண்பர்களிடம், “**எனக்கு ஆற்றுச்சாமியை மிக நன்றாகத் தெரியும். நான் சொன்னால் உங்களின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார்**’’ என்று உறுதி படக்கூறி

*சென்னையிலிருந்து சிலரை அழைத்துக்கொண்டு பூண்டியை நோக்கி காரில் வந்து கொண்டிருந்தார்.*

*பூண்டியை அடைய அரை மணி நேரத்திற்கு முன்பாக மகான் தன் அருகிலிருந்தவர்களிடம்* **“என்னோட சிபாரிசுக்காக ஒருத்தன் தன்னோட பணக்கார சிநேகிதர்களைக் கூட்டிக் கொண்டு வந்துகிட்டிருக்கிறான். அவனை அப்படியே திரும்பிப் போகச் சொல்லு, யாருக்கு வேணும் பணம்”** *என்று கூறி,* **“ஆத்துக்கு அந்தாண்ட வந்துகிட்டிருக்கிறான், அப்படியே திருப்பி அனுப்பு”** *என்று கண்டிப்பாகக் கூறவும் அருகிலிருந்த அன்பர்கள் விரைந்து சென்று காரில் வந்து கொண்டிருந்தவர்களைத் தடுத்து நிறுத்தி, சுவாமிகளின் கட்டளையைக் கூற காரில் வந்தவர்கள் திகைத்துப் போய் திரும்பிச் செல்ல மனமின்றிக் காரை விட்டிறங்கி நடந்தே வந்து தாங்கள் கொண்டு வந்திருந்த பழங்கள், தின்பண்டங்களை தாம்பாளத் தட்டில் வைத்து மகானிடம் வேண்டி நிற்க,* **“சரி, சரி அப்படி வச்சிட்டுப் போ”** *என்றார் சுவாமி.*

*ஸ்ரீ பூண்டி மகானுக்கு ஏழை, பணக்காரர், என்ற பாகுபாடு கிடையாது. அவர் முன் எப்படிப்பட்டவராக இருந்தாலும் தலை வணங்கி நிற்க வேண்டியதே. அவரது அருள் அனைவரின் மீதும் பொழிகின்றது.*





நான்கு பக்கமும் வாயில் உள்ள ஸ்ரீ பூண்டிமகானின் சமாதி கோவில்

**நேர்காணல்: 18**
**19.08.2005, பூண்டி**

**சண்முகம்**, வயது: 72, ஆரணி.

*எனக்கு முப்பது வயதாக இருக்கும்போது பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ சுவாமிகளுடன் பதினைந்து வருடம் நேரிடையான அனுபவம் கிடைத்தது. நான் மின் வாரிய அலுவலகத்தில் வேலை செய்து கொண்டு இருந்தேன். சுவாமிகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்த போதெல்லாம் வந்து சுவாமிகளை தரிசித்து விட்டு பூண்டியில் இரவு தங்குவேன். என்னுள் உள்ள கெட்ட எண்ணங்களை போக்கி ஆத்ம சொரூபத்தை (ஆன்மாவை) தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் ஸ்ரீ பூண்டி மகானைஅணுகினேன்.*

*அலுவலகத்தில் வேலை பளு காரணமாகவோ, குடும்ப நிலைமை காரணமாகவோ, ஆரோக்கிய குறைவினாலோ எத்தனை இடைஞ்சல்கள் ஏற்பட்டாலும் நிற்காமல் இருபத்தியாறு வருடங்கள் பௌர்ணமி பூஜைக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பாத பூஜை செய்த பிறகு சுவாமி அளித்த திருநீறு, இருபத்தியாறு வருடங்கள் பௌர்ணமி பூஜைக்கு வரும்போது அளித்த திருநீறு ஆகியவற்றை பத்திரமாக வைத்துள்ளேன். அந்த திருநீற்றின் மகிமைகளை வர்ணிக்க இயலாது.*

*ஸ்ரீ சுவாமிகளை தரிசிக்கும் சமயத்தில் நான் என்றும் கோரிக்கைகளை கோரவில்லை. சுவாமியின் திருஷ்டி என் மேல் பட்டால் போதும். எல்லாம் சுவாமிகளுக்குத் தெரியும் என்று நினைப்பேன்.*

*சுக துக்கங்கள், முற்பிறவி பாவ, புண்ணிய பலன்கள் என்றும் சந்தோஷம் என்றால் ஸ்ரீ பூண்டி மகானின் தரிசன பாக்கியம் என்றும் அதைவிட உயர்ந்த ஆனந்தம் எதுவும் இல்லை என்றும் எல்லாவற்றையும் ஸ்ரீ சுவாமி நடத்துகிறார் என்றும் நினைப்பேன்.*

அமெரிக்காவிலிருந்து ஒரு மதகுரு வந்து சுவாமியின் எதிரில் உள்ள மண்டபத்தில் அமர்ந்து இருப்பார். ''**நீங்கள் எப்படி வந்தீர்கள்**'' என்று கேட்டேன். அவர் "**பகவான் கூப்பிட்டார். நான் வந்தேன்**'' என்று ஆங்கிலத்தில் சொன்னார். உங்களை "**எந்த விதமாக கூப்பிட்டார்**" என்று கேட்டதற்கு "**அவர் திண்ணைமேல் உட்கார்ந்து இருக்கிறார் என்றால் இந்த உலகத்தை எல்லாம் பார்க்கக் கூடிய ஆற்றல் பெற்ற ஞானி. உலகத்தை சுற்றி வரக்கூடிய மகான்**'' என்று கூறினார்.

ஸ்ரீ பூண்டி மகான் சிகரெட் பிடிக்கும் பொழுது புகை வெளியே வருவதை நான் பார்த்தது இல்லை. அப்புகை உள்ளேயே என்னாகுமோ தெரியாது.

ஸ்ரீ பூண்டி மகான் வெள்ளிக்கிழமை காலையில் மஹாசமாதி அடைவதற்கு முன்பு நான் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு கிளம்பி சைக்கிள் மேல் ஊதுவத்திகளை ஏற்றி வைத்து ஸ்ரீபூண்டி மகானை நினைத்துக் கொண்டே சென்றேன். மாலையில் வீட்டிற்கு திரும்பி வரும் நேரத்தில் சுவாமி மஹாசமாதியடைந்தார் என்ற தகவல் தெரிந்தது. நான் பூண்டிக்கு வந்து சுவாமிகளை சுமாதி செய்யும் வரை பூண்டியிலேயே இருந்தேன். இது எனக்கு நேரிடையாக ஸ்ரீபூண்டி மகான்அளித்த அனுபவம்.

ஸ்ரீ சுவாமிகளின் மஹாசமாதிக்கு பிறகு ஒரு பௌர்ணமி இரவன்று ஆற்றில் சென்று அமர்ந்து கொண்டேன். நான் தனியாக பன்னிரெண்டு மணியிலிருந்து இரண்டரை மணி வரை கழித்து விட்டு திரும்பி வரும் சமயத்தில் ஸ்ரீ சுவாமிகளின் கோயிலுக்கருகில் சிறிது தொலைவில் இரண்டு பெண்கள் இருந்தனர். நடு இரவு வேளையில் தெரு விளக்கு எரியும் மின் கம்பியின் அருகில் ஒரு பெண் கருப்பு சேலை உடுத்தி விரித்த தலை முடியுடன் குதித்து ஆடிக் கொண்டிருந்தார். மறுபுறம் வெள்ளை சேலை உடுத்திய பெண் இரண்டு கைகளில் வேப்பிலை வைத்து கொண்டு நின்று கொண்டிருந்தார். நான் யாரோ இருக்கிறார்கள் என்று நினைத்து பொருட்படுத்தாமல் என் வழியில் வந்து விட்டேன். காலையில் கிராமத்தில் இருந்தவர்கள் கருப்பு சேலை உடுத்தியிருந்தவர்

காட்டேரி என்றும் வெள்ளை சேலை உடுத்தியிருந்தவர் மாரியம்மன் என்றும் தெரிவித்தனர்.

ஒரு பௌர்ணமியன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு பிறகு ஆற்றில் உட்கார்ந்து தியானம் செய்கின்ற சமயத்தில் ஒரு பாம்பு தென்பட்டது. தியானம் முடிந்த பின்பு பார்த்த போது என் முன் பாம்பு உள்ளது. அந்த பாம்பு மறுநாள் அருணாசலத்தில் தென்பட்டது.

ஸ்ரீபூண்டி மகான்மஹாசமாதியடைந்து பிறகு நான் விஜயா ஸ்டுடியோவிற்கு சென்று அவர்களிடம் உள்ள ஸ்ரீ சுவாமிகளின் பதினைந்து போட்டோக்களை புகைப்படங்களை பிரிண்ட் போட்டு பத்திரப்படுத்தினேன். சுவாமிகளின் சமாதி கோயில் நிர்மாண சமயத்தில் என்னிடத்தில் இருந்த புகைப்படங்களை, (போட்டோக்களை) சில ஆயிரம் பிரிண்ட் போட்டு கொடுத்தேன். காணிக்கைகள் அளித்தவர்களுக்கு சுவாமிகளின் புகைப்படங்களைத் (போட்டோக்களை) தருவார்கள். மேலும் சுவாமிகளுக்கு நடக்கும் திருவிழாவிற்கு அழைப்பிதழ்களை அன்பர்களுக்கு அனுப்பும்போது சுவாமியின் புகைப்படத்தையும் வைத்து அனுப்புவார்கள். இது ஸ்ரீபூண்டி மகான் எனக்களித்த பாக்கியமாக கருதி சேவை செய்து வருகிறேன்.

**நேர்காணல்: 19**
**19.08.2005, பூண்டி**

**கணேசன்**, வயது: 62, பூண்டி.

*கலசபாக்கம் காக்கங்கரை பிள்ளையார் கோயிலில் முதன் முறை நான் சுவாமிகளை தரிசித்தேன். அப்போது எனக்கு பன்னிரெண்டு வயது. நான் கலசப்பாக்கம் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது தினந்தோறும் சுவாமிகளை தரிசனம் செய்து கொள்வேன். ஸ்ரீ சுவாமிகள் வழியில் தென்பட்டால் கையைப் பிடித்து அழைத்துச் சென்று வீட்டின் திண்ணை மீது அமர வைத்து உணவு ஊட்டுவேன்.*

*முதலில் சுவாமிகளை புகைப்படம் பிடிக்க மிகவும் கஷ்டப்பட்டோம். ஏனெனில் சுவாமி அனுமதி தரமாட்டார். டாக்டர் அண்ணாமலை அவர்கள் பூண்டியில் இருந்தார். அவர் விடாமுயற்சியோடு பிடிவாதமாக ஒரு நாள் பழங்கோயில் ஈஸ்வரன் கோயிலில் சுவாமிகள் அமர்ந்திருந்தபோது அவருக்கு தரிசனம் தந்து அருள் புரிந்தார். அதுவே சுவாமிகளின் முதல் புகைப்படம். அந்த சமயத்தில் நானும் அங்கு இருந்தேன்.*

*வில்வாரணியிலிருந்து ஒரு முஸ்லீம் பக்தர் வருவார். அவர் ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு பீடியோ அல்லது சிகரெட்டையோ வாயில் வைத்து பற்ற வைப்பார். அதன் பிறகு இட்டிலிகளை வாங்கி வந்து சுவாமிக்கு ஊட்டுவார். அந்த அன்பர் மிகவும் அன்புடன் செய்வார். சுவாமிகள் அவரிடம் எந்தத் தடையும் சொன்னதில்லை.*

*அந்த காலத்தில் தெருக்கூத்துக்கள் அதிகமாக நடக்கும். நான் இரண்டணா வைத்து டிக்கெட் வாங்கி தெருக்கூத்தை பார்பேன். ஒரு நாள் பழங்கோயிலில் தெருக்கூத்தை பார்த்து விட்டு நடு இரவு திரும்பி வரும்போது ஆற்றில் ஸ்ரீசுவாமிகள் உடலை துண்டித்தது போல் உறுப்புகள் எல்லாம் தனித்தனியாக விழுந்து கிடப்பதைப்*

*பார்த்து '**சுவாமி**' என்று கையெடுத்து வணங்கினேன். சுவாமி அவர்கள் வழக்கம் போல் உட்கார்ந்து கொண்டார். நான் சுவாமிகளை வணங்கிவிட்டு கிளம்பி வந்து விட்டேன்.*

*ஒரு நாள் நார்த்தாம்பூண்டியில் தெருக்கூத்தை பார்த்து விட்டு நண்பர்களுடன் சேர்ந்து நடு இரவில் திரும்பி வரும் போது ஆற்றில் பூண்டி மகானின் உறுப்புகள் துண்டித்ததுபோல் அங்கங்கே விழுந்து கிடந்தன. ஆனால் என்னுடன் வந்தவர்களுக்கு அப்படி தென்பட்டதா இல்லையா என்று நான் கேட்கவில்லை. இந்த அற்புதங்கள் 1954-58 இடையில் நான் பார்த்தவை.*

*திருவலம் திருவலத்து மௌனசாமி (கோணிப்பை சாமி) பூண்டிக்கு வந்தார். அப்போது நான் தையலாளியாக பணி செய்து கொண்டிருந்தேன். அவர் ஸ்ரீபூண்டி மகானை தரிசித்துவிட்டு சுவாமிகளின் பாதத்தின் மேலிருந்த புண்ணின் மேல் பச்சிலைச் சாறு ஊற்றினார். அதன் பிறகு திண்ணை மேலிருந்த பிரசாதத்தை எடுக்கச் சென்றார். அப்போது சுவாமி "***அதை யாரும் எடுக்காதீங்க. அவர்கள் பாவ புண்ணியங்களுக்கு தகுந்தபடி காணிக்கையளித்தார்கள். அவை கல், முள். எடுக்காதீங்க**" என்றார். மௌன சாமி சென்று விட்டார்.*

*வடலூரிலிருந்து சில அன்பர்கள் வந்தார்கள். 'ஸ்ரீ பூண்டி சுவாமி பெரிய ஞானி. பெரிய மகான் என்று தங்கத்தால் அபிஷேகம் செய்து பூஜை செய்தார்கள். நான் எங்கு கிளம்பினாலும் சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு கிளம்பினால் சென்ற வேலை வெற்றி பெறும் சுவாமிகளின் சன்னதியில் எத்தனையோ அனுபவங்கள். எல்லாம் சுவாமிகளின் அருள்.*

**நேர்காணல்: 20**
**19.08.2005, பூண்டி**

**கோதண்டபாணி**, வயது: 62, வேலூர்.

*நான் 1970ம் வருடத்தில் ஒரு அன்பர் மூலமாக ஸ்ரீ பூண்டி மகானை தரிசித்தேன். ''**நல்லது நடக்கும்**'' என்று ஆசீர்வதித்தார். நான் இராணுவத்தில் பணியாற்றிவிட்டு வந்த பிறகு வியாபாரம் ஆரம்பித்து முன்னேற்றம் அடைந்தேன். ஸ்ரீ பூண்டி மகானின் அருளால் வேலூர் முனிசிபல் கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.*

*எனக்குத் திருமணம் செய்ய பெரியோர்கள் மேட்டுப்பாளையத்தில் பெண்ணை பார்த்தனர். இரண்டு குடும்ப பெரியவர்கள் சம்மதம் தெரிவித்தனர். 1977 ஆம் ஆண்டு தாய், தந்தையருடன் சென்று பூண்டி மகானை தரிசித்து ஆசீர்வாதம் பெற்றேன். பெண் வீட்டில் நிச்சயத்தாம்பூலம் மாற்றிக் கொண்டோம். நாற்பத்தி ஐந்து நாட்களுக்கு பிறகு திருமணத்தை மேட்டுப்பாளையத்தில் செய்ய முடிவு செய்தனர்.*

*திருமண அழைப்பிதழ்களை அச்சடித்து உற்றார் உறவினர்களுக்கு அழைப்பிதழ் கொடுத்தேன். திருமணத்திற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பு பெண்ணின் தந்தை, "**கல்யாணத்தை நிறுத்துகிறோம். மீண்டும் சொல்கிறேன்**" என்று கடிதம் எழுதினார். எதற்கு அப்படிச் செய்தார்கள் என்று தெரியாமல் மன வருத்தம் அடைந்தேன். பிறகு பெரியவர்கள் சென்று பேசி வேறு ஒரு முகூர்த்தத்தை திருமணத்திற்கு நிச்சயித்தார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கு எதிரில் உள்ள மண்டபத்தில் சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் எங்கள் திருமணம் நடந்தது.*

*என் மனைவி புகுந்த வீட்டிற்கு வந்த பிறகு என் தாயாருக்கும், மனைவிக்கும் மனவேறுபாடு வந்தது. நான் என் மாமியார், மாமனாருக்கும் தகவல் தெரிவிக்கவே அவர்கள் வந்தார்கள். '**பெரியவர்களோடு எப்படி பேச வேண்டும் என்று கூட தெரியவில்லை**' என்று*

*கூறி அவர்களோடு அனுப்பி விட்டேன். என் மனைவி சென்ற பத்து நிமிடத்திற்குள் என் மனம் மாறி மாமியார் வீட்டிற்கு கிளம்பிச் சென்றேன். என் மாமியார் ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்தார் என்று கூறினார். நான் பூண்டிக்கு கிளம்பி வந்தேன். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, பூண்டி மகானுக்கு தீபாராதனை செய்து ஆரத்தித்தட்டை என்னிடம் தந்தார். நான் அனைவருக்கும் தீபத்தை காண்பித்து விட்டு ஸ்ரீ பூண்டி மகானை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. என் குடும்பத்தில் கலகத்தை ஏற்படுத்தி என்னை இப்படி அழைத்துக் கொண்டார். இல்லையென்றால் என்னால் வந்திருக்க முடியாது.*

*எனக்கு நேரம் கிடைக்கும் போது பௌணர்மியன்று ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து செல்வேன். எனக்கு இரண்டு மகன், ஒரு மகள். அனைவரும் நன்றாக படித்தார்கள். ஸ்ரீ பூண்டி மகானின் அருளால் என் குடும்பத்தில் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம்.*

**நேர்காணல்: 21**
**19-08-2005, பூண்டி**

**A. சம்பத்**, **வயது: 45க்கு மேல், ஆதமங்கலம் புதூர்.**

*பூண்டிக்கு மேற்கே இருபத்தி நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆதமங்கலம் புதூர் என்னும் கிராமம் என்னுடைய பூர்வீகமாகும். நான் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ பூண்டி மகான் எங்கள் கிராமத்திற்கு வந்தார். நான் அப்போது அவரை தரிசனம் செய்து கொண்டேன். நான் சிறுவயதில் சைக்கிளிலோ அல்லது நடந்தோ சென்று சுவாமியை தரிசனம் செய்து கொள்வேன். உணவு எடுத்து வந்து பூண்டியிலேயே சாப்பிட்டு விட்டு ஸ்ரீ பூண்டி மகானின் அருளாசிகளைப் பெற்று மாலையில் திரும்பிச் செல்வேன். வகுப்பில் நன்றாக படித்ததால் வகுப்புத் தலைவனாக இருந்தேன். இருந்தாலும் சுவாமிகள் கூறியபடி மேற்படிப்பு படிக்க முடியவில்லை. பள்ளி விடுமுறை நாட்களில் சிறுவர்கள் அனைவரும் ஸ்ரீ பூண்டி மகானின் தரிசனத்திற்காக பூண்டிக்கு வருவோம். நான் சில சமயங்களில் சுவாமிக்கு வாழைப் பழங்கள் சமர்ப்பித்துக் கொள்வேன். சிலர் ஏதாவது கொடுத்தால் வாங்கிக் கொள்வார். சிலர் தருவதை தொடவே மாட்டார்.*

*என் கிராமத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிறுவள்ளூரில் உள்ள சுவாமியை தரிசனம் செய்ய என் குடும்பம் சென்றது. என் குடும்பத்தினர் "***எங்கள் பையன் நன்றாகப் படிப்பானா சுவாமி?***" என்று கேட்டனர். ஸ்ரீ சுவாமி "***சிகப்பு நிறத்தில் அல்லது கருப்பு நிறத்தில் உள்ள புதிய அரைநாண் கயிறு உள்ளதா***" என்று கேட்டார். புதிய கயிறு வாங்கி வந்து தந்தவுடனே ஸ்ரீ சுவாமி அதை முடிச்சுப்போட்டு மாலை போல் என் கழுத்திலிட்டு "***சிறிது காலம் படித்த பிறகு விவசாயம் செய்வாய். அரசியலில் சென்று விடுவாய் போ***" என்றார். நான் S.S.L.C. படிக்கும் சமயத்தில் என் தந்தையார்*

மரணமடைந்ததால் என் படிப்பு நின்று விடவே விவசாயம் செய்ய ஆரம்பித்தேன்.

சிறிது காலம் கழித்து நான் ஸ்ரீ பூண்டி மகான் சன்னதிக்கு சென்ற போது அவர் எனக்கு திருநீறு வைத்து “**தந்தை சொத்து எல்லாம் விற்று விடுவாய். அரசியலில் செல்வாய்**” என்றார். நான் ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்) போட்டியிட்டு முதல்முறை தோற்றுவிட்டேன். இரண்டாவது முறை என் கையில் பணம் இல்லாவிட்டாலும் மக்களே என்னை வற்புறுத்தி போட்டியில் நிற்க வைத்து வெற்றி பெறுமாறு செய்தார்கள்.

பதினேழு வயதில் ஒரு சமயம் எனக்கு டைபாய்டு காய்ச்சல் கண்டது. திருவண்ணாமலையிலுள்ள மருத்துவரிடம் காண்பித்துவிட்டு திரும்பி வரும்போது ஸ்ரீ பூண்டி மகானை தரிசிக்க பூண்டி சென்றேன். ஸ்ரீ சுவாமிகள் எனக்கு திருநீறு வைத்து, ‘‘**ஹாஸ்பிடலுக்கு அவசியமில்லை. வீட்டிற்குச் செல்**’’ என்றார். மருத்துவர்கள் எனக்கு டைபாய்டு காய்ச்சல் என்றும் சீக்கிரமாக குணமாகாது என்றும் காரம் சாப்பிடக்கூடாதென்றும் சொன்னார்கள். ஸ்ரீ சுவாமிகள் எனக்கு திருநீறு வைத்த இரண்டு நாட்களில் எந்த பத்தியமும் இல்லாமல் குணமாகி விட்டது.

இக்கட்டான சூழ்நிலைகளில் நான் ஸ்ரீ பூண்டி மகானை மனதில் நினைத்தவாறு படுத்துக் கொள்வேன். கனவில் சுவாமிகளின் கைகளில் மலர்ந்த பூ இருந்தால் நன்மை நடக்கும் என்றும், பூ மொட்டு இருந்தால் தீமை நடக்கும் என்பது என் நம்பிக்கை. அது என் அனுபவமும் ஆகும். நான் எப்போதாவது வெளியே செல்ல நினைத்தால் சுவாமிகளை நினைத்து படுத்துக் கொள்வேன். சுவாமி அனுமதி தந்தால் கிளம்புவேன். இல்லாவிட்டால் போகாமல் நின்று விடுவேன். ஒரு சமயம் ஓரிடத்திற்குச் செல்ல நினைத்து சுவாமிகளின் அனுமதி வேண்டினேன். கனவில் சுவாமிகளின் கையில் பூ மொட்டு இருந்தது. நான் அதை பொருட்படுத்தாமல் கிளம்பினேன். வழியில் பேருந்து பெரிய விபத்திற்கு உள்ளானது. அந்தக் குழப்பத்தில் சட்டை பையிலிருந்த பணப்பை காணாம ல் போய் விட்டது. நான் அந்த

*ஆபத்திலிருந்து தப்பி உயிர் பிழைத்தது உண்மையில் ஸ்ரீ பூண்டி மகானின் அருளே ஆகும்.*

*1978ல் ஸ்ரீ பூண்டி மகான் என்னிடம்* **"உனக்கு சிறிது காலம் கழித்து குழந்தைகள் பிறக்கும். ஆனால் ஆண் வாரிசு கிடையாது. மகள் பிறப்பாள். அவளையே மகன் போல் பாவித்து பார்த்துக் கொள்"** *என்றார். நான் எத்தனை கோயில்களுக்குச் சென்றாலும் பலன் கிடைக்கவில்லை. ஸ்ரீ சுவாமி என்னிடம்* **"உன் வாழ்க்கை ஆரம்பத்தில் சுகமில்லை. கடைசியில் எல்லாம் நன்றாக இருக்கும்"** *என்றார். ஸ்ரீ பூண்டி மகான் கூறியபடியே நடந்து கொண்டிருக்கிறது.*

*என் பெரியப்பா மகன் இரு சக்கர வண்டியை வாங்கினார். அதை பச்சையம்மன் கோயிலில் பூஜை செய்யலாம் என்றார். நான் ஸ்ரீ பூண்டி மகான் சன்னதியில் பூஜை செய்யலாம் என்றேன். அவர் மனதில் சலனத்துடன் வந்தார். நாங்கள் மகானின் சன்னதியை அடைந்து அவர் முன் பழங்களை வைத்து பூமாலை அணிவித்தோம். ஸ்ரீ பூண்டி மகான் பூமாலையை கழட்டி கீழே போட்டு விட்டு பழங்களை முன்புறமாக தள்ளி விட்டார். எனக்கு மட்டும் திருநீறு வைத்தார். நாங்கள் புறப்படுவதற்கு (பைக்) இரு சக்கர வண்டியை கிளப்பினோம். ஸ்ரீ சுவாமிகள்* **"வந்து பிரசாதம் வாங்கிச் செல்"** *என்று என்னைக் கூப்பிட்டார். நான் பூண்டி மகான் அருகில் சென்றேன். ஸ்ரீ பூண்டி மகான்பிரசாதம் அளிக்கும் பொழுது நான் (பைக்கில்) இரு சக்கர வண்டியில் அமர்ந்து விட்டதாக நினைத்து என் பெரியப்பா மகன் வண்டியை கிளப்பி சிறிது தூரம் சென்று ஒரு வளைவில் கீழே விழுந்து விட்டார். கால்களில் நன்றாக அடிபட்டது. தகவல் தெரிந்தவுடனே நான் அவரை வில்வாரணிக்கு அழைத்துச் சென்று வைத்தியம் செய்தேன்.*

**நேர்காணல்: 22**
**19.08.2005, பூண்டி**

**ஆறுமுகம்**, வயது: 50, காசிகுட்டை.

*என்னுடைய தொழில் விவசாயம். எனக்கு திக்குவாய். எனவே என்னால் சரியாக பேச முடியாது. பதினைந்து வயதில் நான் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டேன். பிறகு ஸ்ரீ பூண்டி மகான் கனவில் தரிசனம் அளித்து எல்லாம் சரியாகிவிடும் என்று தெரியப் படுத்தினார். அப்போதிலிருந்து என் பேச்சு நாள் பட முன்னேற்றம் அடைந்து நன்றாக பேச்சு வந்தது.*

*நானும் என்னுடைய அண்ணனும் எங்கள் கிராமத்தில் நிலத்தின் அருகில் ஸ்ரீ பூண்டி மகான்ஆசிரமம் அமைத்து தினந்தோறும் பூஜைகள் செய்தோம். பூஜை சமயத்தில் மணியடிப்போம். ஒரு நாள் பூஜை சமயத்தில் மணி காணவில்லை. ஆனால், ஸ்ரீ சுவாமியின் திருவிளையாடலே என்று எண்ணும்படி மணியடிக்கும் ஓசை கேட்டது.*

*ஒரு நாள் நானும், என் அண்ணனும் ஸ்ரீ பூண்டி மகான்சன்னதியில் இருந்தோம். ஸ்ரீ சுவாமி* **"உங்கள் நிலத்தைச் சுற்றி பனைமரம் உள்ளது. புளியமரம் உள்ளது. கிணறு உள்ளது. உங்கள் நிலத்தையெல்லாம் பார்த்தேன். இப்போது தான் கூழ் குடித்து விட்டு வருகிறேன்"** *என்றார். சுவாமிகள் கூறியது எங்களுக்கு புரியவில்லை. வீட்டிற்குச் சென்றதும் எங்கள் தாயார் யாரோ ஒரு சாமியார் வந்து கூழ் குடித்துச் சென்றார் என்றதும் சுவாமி சொன்ன வார்த்தைகளுக்கு பொருள் எங்களுக்குப் புரிந்தது.*

*எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றை ஆழப்படுத்த வேண்டும் என்று நானும், என் அண்ணனும் நினைத்தோம். ஸ்ரீ பூண்டி மகானிடம் கூறிய போது,* **"பொறுத்திருந்து செய்யலாம்"** *என்றார். ஒரு வருடம் கழித்து பிறகு தூர்வாறுவதற்கு முடிவு செய்து எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு பூஜை செய்யும்போது*

*தேங்காய் உடைக்க அதை கையில் எடுத்தேன். தேங்காய் கையிலேயே உடைந்து விட்டது. எதற்கு இப்படி நடந்ததோ புரியவில்லை. ஸ்ரீ பூண்டி மகானின் அனுமதி பெற்று பிறகு ஆரம்பிக்கலாம் என்று அந்த பணியை நிறுத்திவிட்டு பூண்டிக்கு வந்தோம். ஸ்ரீ பூண்டி மகான்* **“என்னப்பா, நான் பொறுத்திருந்து பண்ணலாம் என்று சொன்னேன் இல்லையா? அதற்குள் எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு இவ்வளவு சீக்கிரம் உங்களை யார் செய்யச் சொன்னார்கள்”** *என்றார். ஸ்ரீ பூண்டி மகான் அனுமதி தராததால் கிணற்று வேலையை நிறுத்திவிட்டோம்.*



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த பிள்ளையார் கோவில், கலசபாக்கம்



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த கலசபாக்கத்திற்கு அருகே உள்ள ஆறு





ஸ்ரீ ஆற்றுசுவாமி
அமர்ந்திருந்த பெருமாள்
கோயில் - கொடிமரம்,
கலசபாக்கம்

**நேர்காணல்: 23**
**06.08.2005, பூண்டி**

**நாராயணன்**, வயது: 70, கங்காபுரம்.

*நான் கலசபாக்கத்தில் என் மாமா வீட்டில் இருந்து கொண்டு அங்கே ஆறு வருடங்கள் படித்தேன். மாலை வேளையில் எல்லோரும் மடத்தில் கூடுவார்கள். நானும் செல்வேன். வழியில் ஸ்ரீ பூண்டி மகான்தென்பட்டால் அவரை வணங்கி பேசுவேன். சுவாமிகள் சிறிது காலம் திரௌபதி கோயிலுக்கருகில் அமர்ந்து இருந்தார். நான் மாலையில் சென்று தரிசனம் செய்து கொள்வேன். ஸ்ரீ பூண்டி மகான் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் அவர் குளித்து யாரும் பார்த்தில்லை. அவர் போட்டிருந்த அழுக்குத் துணிகளை அவர் எப்போதும் பொருட்படுத்தமாட்டார்.*

*ஒரு நாள் என் மாமாவும், அத்தையும் இருவரும் பணி காரணமாக வெளியில் சென்றனர். அன்று எதிர்பாராமல் ஸ்ரீ பூண்டி மகான்தெருவில் நடந்து செல்லும் போது நான் அவர் கையைப் பிடித்து அழைத்து வந்து திண்ணைமேல் அமர வைத்து வீட்டில் சமைத்து வைத்திருந்த உணவில் தயிர் விட்டு கலந்து சுவாமிக்கு ஊட்டினேன். ஸ்ரீ பூண்டி மகான் சாப்பிட்டபிறகு தண்ணீர் குடிக்க வைத்து வாய் கழுவி சுத்தம் செய்தேன். சுவாமிகள் கிளம்பி சென்றுவிட்டார்.*

*சமைத்த உணவு எல்லாம் சுவாமிகளுக்கு ஊட்டி விட்டேன். அப்போதே நேரம் இரண்டு மணி. அத்தையும் மாமாவும் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குள் சாதம் சமைக்க வேண்டும் என்று சீக்கிரமாக பாத்திரங்களை சுத்தம் செய்ய சமையலறைக்குச் சென்று பயத்துடன் பாத்திரங்களை எடுக்கச் சென்றேன். பாத்திரங்களில் சமைத்த சாதம் அப்படியே உள்ளது. தயிர் வாங்கி வந்து வைக்கலாம் என்று தயிர் கிண்ணத்தின் அருகில் சென்றேன். தயிர் கூட நிரம்பி இருந்தது. நான் ஆச்சர்யப்பட்டு அப்படியே சிறிது நேரம் நின்றுவிட்டேன். ஸ்ரீ*

பூண்டி சுவாமிகளின் மகிமையே இது என்று நினைத்து பெருமகிழ்ச்சியுற்றேன்.

நான் படிப்பு முடித்த பிறகு பூண்டியில் பெருமாள் கோயிலில் பத்து வருடங்கள் பூசாரியாக பணி புரிந்தேன். அப்போதே சுவாமி திண்ணை மேல் அமர்ந்துவிட்டார். நான் தினந்தோறும் சுவாமிகளை தரிசித்துக் கொள்வேன். ஒவ்வொரு சமயம் நெற்றியில் திருநீறு வைப்பார். சிலசமயங்களில் கையில் கொடுப்பார். சில சமயங்களில் எதுவும் தராமல் சும்மா இருப்பார். இருபத்தாறு வயது வரை நான் கலசப்பாக்கத்தில் இருந்தேன். அதன் பிறகு என் பூர்வீக கிராமமான கங்காபுரம் சென்றேன். ஸ்ரீ பூண்டி மகானை தரிசிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தவுடன் கிளம்பி பூண்டிக்கு வந்து தரிசனம் செய்து கொண்டு செல்வேன். வழியில் உறவினர்கள் வீடு இருந்தாலும் செல்ல மாட்டேன்.

எத்தனையோ மகான்கள், சித்தர்கள் இரவு வேளையில் ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்காக வந்து செல்வார்கள். எந்த உருவத்தில் வருகிறார்கள் என்று நாம் ஊகிக்கமுடியாது. பாம்பாக, தேளாக, பறவையாக மற்றும் வேறு ஏதாவது உருவத்தில் கூட வருவார்கள். அப்படியே ஸ்ரீ பூண்டி மகான் கூட வெளியில் செல்லுவார். அந்த சமயத்தில் ஸ்ரீ சுவாமிகளின் உருவத்திற்கு பதிலாக திண்ணை மேல் புலி, பாம்பு, சிங்கம் மற்றும் வேறு உருவம் ஏதாவது இருக்கும். சில சமயம் சில இடங்களில் அன்பர்களுக்கு ஸ்ரீ பூண்டி மகான்உருவத்திலோ அல்லது வேறு உருவத்திலோ தரிசனம் தருவார். பிறகு அங்கிருந்து திரும்பிச் செல்வதை அன்பர்கள் பார்த்ததில்லை. மறைந்து மாயமாகி விடுவார். ஸ்ரீ பூண்டி மகான் நடமாடும் தெய்வம்.

ஸ்ரீ பூண்டி மகானிடம் இந்த வாழ்க்கையைக் கடந்து செல்ல ஏதாவது வழி காண்பிக்கும்படி கேட்டதற்கு **“சம்பா அறுத்தா கார், கார் அறுத்தா சம்பா, சம்பா அறுத்தா கார், கார் அறுத்தா சம்பா''** என்றார்.கர்மாக்கள் செய்து கொண்டிருந்தால் பிறவிகள் மாறி மாறி வந்து கொண்டிக்கும் என்று பரிபாஷையில் சொன்னதாக புரிந்து கொண்டேன். தியானம் பழகி மனதில் சலனம் இல்லாமல்

ஓரிடத்தில் நிலை நிறுத்த முடிந்தால் சுவாமிகளின் திவ்ய அனுக்கிரகம் தவறாமல் கிடைக்கும்.

நான் பூண்டி மகானின் தரிசனத்திற்காக வந்த சமயத்தில் ஐந்து நிமிடங்கள் தியானம் செய்து விட்டுச் செல்வேன். அதனால் எனக்கு மன அமைதி கிடைத்தது. ஏதாவது கஷ்டங்கள் வந்தால் ஸ்ரீ பூண்டி மகானை நினைத்தால் போதும். நீங்கிவிடும். மனம் நிம்மதியும் திருப்தியும் அடையும். பெரியவர்கள் செய்த புண்ணிய பலன்களால் எனக்கு ஸ்ரீ பூண்டி மகானின் தரிசன பாக்கியம் கிடைத்தது. ஸ்ரீ பூண்டி மகான்மஹாசமாதியான பிறகு கூட நான் பூண்டிக்கு வந்தால் சுவாமிகள் இருப்பது போன்ற அனுபவம் தோன்றுகிறது. தியானத்தில் அமர்ந்தபோது ஸ்ரீ பூண்டி மகான் என்முன் நின்றபடி தரிசனம் அளிப்பார். அதுவே எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஸ்ரீ பூண்டி மகான்சமாதியடைவதற்கு முன்தினம் மாலை சுமார் 5:30 மணியளவில் நான் பசுக்களை மேய்த்துக் கொண்டு வீட்டிற்கு திரும்பி வரும் சமயத்தில் என் கிராமத்திற்கு அருகில் வட்டம் போன்ற ஜோதி தரிசனம் கிடைத்தது. நான் சிந்தித்தவாறு பசுக்களை ஓட்டி வந்து கட்டிப்போட்டுவிட்டு கோயிலுக்கு சென்று பூஜை முடித்து பிறகு வீட்டிற்கு வந்தேன். இரவு பத்து மணியளவில் ஸ்ரீ பூண்டி மகானின் நினைவு வந்தது. மழை தூறிக் கொண்டிருந்தது. நான் என் வீட்டுத் திண்ணை மேல் படுத்துக் கொண்டேன். இரவு இரண்டு மணியளவில் எனக்கு தூக்கமும் இல்லாத விழிப்பும் இல்லாத நிலையில் இருந்தேன். "**நாளை காலை ஒன்பது மணிக்கு சமாதியடையப் போகிறார். அதுவே ஜோதி தரிசனம்**" என்றபடி கனவில் இருந்தது. உடனே எழுந்து குளித்து, பூஜைகள் செய்து விட்டு சைக்கிளில் கிளம்பி வந்து கொண்டிருந்தேன். எனக்கு தெரிந்த நபர் கையில் குடை பிடித்துக் கொண்டு எதிரில் வந்தார். ''**சுவாமி நீங்கள் பூண்டிக்குத் தானே போகிறீர்கள்? நானும் வருகிறேன்**'' என்றார்.அப்போது நான் என் சட்டைப்பையில் பார்த்தேன். பணம் எடுத்துக் கொள்ள மறந்து விட்டது நினைவிற்கு வந்தது. உடனே அவர் என் நிலைமையை பார்த்து "**என்னிடம் ரூ.50 உள்ளது. நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை**"

எனக் கூறி அந்தப் பணத்தை என்னிடம் தந்து அவர் சென்று குளித்து விட்டு வந்தவுடன்இருவரும் சேர்ந்து பூண்டிக்கு வந்தோம். ஸ்ரீ பூண்டி மகான் சன்னதியில் கோவிந்தன் என்ற பக்தர் இருந்தார். அவரை எனக்குத் தெரியும். என்னிடம் பேசினார். நான் இரவு நடந்த அனுபவத்தை அவரிடம் கூறினேன். அவர் போளூரிலிருந்து மருத்துவர்கள் வந்து சோதித்து “**எதுவும் செய்ய முடியாது**” என்று கூறிச் சென்றுவிட்டனர் என்றார். சுவாமிகள் அமர்ந்த நிலையிலேயே இருந்தார். சிறிது நேரத்தில் சுவாமி சமாதியடைந்தார்.

நான் வேதங்களில் படித்தது நினைவிற்கு வந்தது. மேல் நோக்கி உயிர் பிரிந்தால் கபால மோட்சம் அடைவார்கள் என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளது. சுவாமியை பார்க்க வேண்டும் என்றேன். கோவிந்தனும் என்னை பார்க்கச் சொன்னார். நான் சென்று ஸ்ரீ பூண்டிமகான் சிரசுமீது பார்த்தேன். ஒரு சின்ன பிளவு தென்பட்டது. ஆனால் இரத்தம் எதுவும் தென்படவில்லை. மறு பிறவி இல்லாதவர்களுக்கு உயிர் (ஜீவன்) மேல் நோக்கி பிரியும் என்பது சாஸ்திரம்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக ஒருவர் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு பூண்டிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எங்கள் கிராமத்திற்கு இரவு பதினொரு மணியளவில் காரில் வந்து என் வீட்டின் முன் நிறுத்தினார். திண்ணை மீது படுத்திருந்த நான் எழுந்து யாரோ வந்தார்கள் என்று விளக்கைப் போட்டேன். அவர் காரில் இருந்து இறங்கி வந்ததும் திண்ணை மேல் அமரச் சொன்னேன். அவர் “**பூண்டிக்குச் சென்று மகானை தரிசனம் செய்து கொண்டேன். அப்படியே உங்களை பார்த்துச் செல்ல வேண்டும் என்று வந்தேன்**” என்றார். “**நீங்கள் எதற்கு வந்தீர்கள்**” என்று கேட்டேன். “**எதற்காகவோ உங்களைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. வந்தேன்**” என்றார்.அவர் வந்தும் வராத தமிழ் மொழியில் பேசினார். “**நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்**” என்று கேட்டேன். அமெரிக்காவிலிருந்து வருவதாகக் கூறினார். இரண்டு நிமிடங்கள் அங்கேயே அமர்ந்து தியானம் செய்து பிறகு கிளம்பிச் சென்று விட்டார். எனக்கு எதுவும்

*புரியவில்லை. அனைத்தும் ஶ்ரீ பூண்டிமகான் திருவிளையாடல் என்று நினைத்தேன்.*

*எனக்கு இரண்டு மகள், ஒரு மகன். மகன் வேதங்கள் படித்து நல்ல நிலையில் இருக்கிறார். ஶ்ரீ பூண்டி மகானின் திவ்ய அருளால் குழந்தைகள் அனைவரும் சுகமாக இருக்கின்றனர். எனக்கு எந்த வேறு ஆலோசனையும் இல்லை. எப்போதும் ஶ்ரீ பூண்டி மகான்நினைவில் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.*

*ஶ்ரீ பூண்டி மகான் ஒரு கிணற்றில் குதிக்கச் சொன்னாலும் குதித்து விடுவேன். அவருக்கு இல்லாதது எனக்கு எதற்கு? இந்த தேகம் என்ற சட்டையை மீண்டும் அணியக் கூடாது என்பது என் கோரிக்கை. ஆத்மாவில் உறைந்து அந்த பகவானிடம் ஐக்கியம் ஆக வேண்டும் என்பது என் தவிப்பு.*





ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு உணவு ஊட்டும் சாந்தியம்மா

**நேர்காணல்: 24**
**19.08.2005, பூண்டி**

**திருமதி சாந்தி, வயது: 47க்கு மேல், பூண்டி.**

*எனக்கு பத்து வயதாக இருக்கும் சமயத்தில் இருந்து ஸ்ரீ பூண்டி மகானுக்கு நேரிடையாக சேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது. என் தந்தை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் ஆணைப்படி தினந்தோறும் காலை, பிற்பகல், மாலை, இரவு வேளைகளில் வீட்டிலிருந்து உணவு எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு ஊட்டிவிடுவேன். மாலை வேளை மட்டும் பழரசம் அருந்தத் தருவேன். நான் பூண்டி மகானுக்கு உணவு ஊட்டவில்லை என்றால் என்னை வீட்டில் உணவருந்தக்கூடாது என்ற கட்டளை போட்டார்கள்.*

*சில சமயங்களில் ஸ்ரீ பூண்டி மகான்உணவு அருந்தமாட்டேன் என்பார். எதற்கு சாப்பிடமாட்டீர்கள் என்று நான் அழுவேன். என் தாய், தந்தை என்னைத் திட்டுவார்கள் என்று சொன்னால் சில சமயம் சாப்பிடுவார். சில சமயம் திட்டுவார். நீங்கள் திட்டினாலும் உணவளிக்காமல் செல்ல மாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பேன். பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமிகள் சாப்பிடுவார்.* **“என்னாம்மா! நான் சாப்பிட்டேன். நீயும் கொஞ்சம் சாப்பிடு”** *என்று அன்புடன் ஸ்ரீ பூண்டி மகான் கூறுவார். மகான் எதிரிலேயே அமர்ந்து சாப்பிடச் சொல்வார்.* **“நான் எப்படி உங்கள் எதிரில் அமர்ந்து சாப்பிடுவது”** *என்று கேட்டால்* **“நீ என் குழந்தை போல. சாப்பிடு”** *என்று கூறுவார். சுவாமிகள் சாப்பிட்டு மீதி விட்ட அமுத உணவை நான் சாப்பிட்ட பிறகு சுவாமிகளை வணங்கினால் திருநீறு பூசி குங்குமமும் வைப்பார்.*

*ஸ்ரீ பூண்டி மகான் சில சமயங்களில் புன்னகையுடன் அன்போடு பேசுவார். சில சமயங்களில் திட்டுவார். திட்டியபொழுது சில சமயம் நான் பயப்படுவேன். சில சமயம் சிரித்துக் கொண்டு வந்து விடுவேன். சில சமயம் சாப்பிடவில்லையென்று வற்புறுத்தினால்* **“எப்பவும் தொல்லை தருகிறாயே அம்மா! எனக்கு கஷ்டமாக இருகிறதம்மா!**

**சாப்பிட்டேன் இல்லையா! மீண்டும் சாப்பிடு சாப்பிடு என்று தொல்லை தருகிறாயே''** என்று கூறுவார். நான் சாப்பிடுமாறு வேண்டிக் கொள்வேன். பிறகு சாப்பிடுவார். சில சமயம் சுவாமிகளுக்கு இரவு உணவு ஊட்டியபிறகு கால், கைகளை பிடித்து விடுவேன். மகான் சன்னதியில் தினந்தோறும் ஒரு புதிய அனுபவம் கிடைக்கும்.

நான் எப்போதாவது மனதில் கவலையாக இருக்கும்போது கனவில் "**நீ மனதில் கவலை கொள்ளாதே**" என்பார். "**நீ எப்போதும் இப்படியே சொல்கிறாய். நான் எப்போதும் இப்படி கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறேன்**" என்று கூறினால் "**நீ எதற்கும் பயப்படவேண்டாம். நான் இருக்கிறேன். நீ நன்றாக இருப்பாய்**" என்று ஆசீர்வதிப்பார்.

சில சமயங்களில் எனக்கு ஸ்ரீ பூண்டிமகான் பணம் தருவார். "**எனக்கு அவசியமில்லை. அம்மா, அப்பா இருக்கிறார்கள் அவர்களிடம் கொடுங்கள்**" என்று கூறுவேன். "**வாங்கிக்கோ அம்மா**" என்பார் அன்புடன் சுவாமி. ஒன்று, இரண்டு ரூபாய்களை வாங்கிக் கொண்டு போதும் என்பேன்.

என் தந்தை என்னைத் திருமணம் செய்து கொள்ளும் படி வற்புறுத்தினார். ஒரே நாளில் இரண்டு குடும்பத்தாரை பெண் பார்க்க அழைத்தார். எனக்கு இப்படி அனைவரும் வந்து செல்வது பிடிக்கவில்லை. "**யாரையாவது ஒருவரை அழைத்து வாருங்கள்**" என்று தந்தையிடம் கூறிவிட்டு ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று, "**சுவாமி! என் வீட்டில் கல்யாண வரன் பார்க்கிறார்கள். எப்படி கல்யாணம் பண்ணிக்கிறது**" என்று கேட்டேன். "**எதற்கம்மா. கல்யாணம் பண்ணிக்கோ!**" என்றார் சுவாமி. "**நீங்கள் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி சும்மா சொல்லிடறீங்க. நீங்கள் என் தந்தையை துறவி போல் மாற்றி விட்டீர்கள். யாரையாவது ஒருவரை வரச் சொல்லி நிச்சயம் பண்ணனும். எல்லோரையும் வரச்சொல்லி என்னை இப்படி கஷ்டபடுத்துவது தவறல்லவா! நான் உங்களிடமே கேட்டுக்கொண்டு இருக்கிறேன் சுவாமி!**" என்று என் மனவேதனையை சொல்லிக் கொண்டேன். "**சரி! விட்டு விடுங்கப்பா. அந்தம்மாவுக்கு பிடிச்ச இடத்தில் பண்ணலாம்**" என்று அருகில் நின்றிருந்த என் தந்தையிடம் கூறினார் பூண்டி மகான்.

சிறிது நாட்கள் கழித்து ஸ்ரீ பூண்டி மகான்அன்பர் ஒருவர் பக்கத்து கிராமத்தில் தெரிந்தவர் என்று கூறி ஒரு கல்யாணவரன் கொண்டு

வந்தார். நான் **“சுவாமியும், அப்பாவும் சொன்னால் செய்து கொள்கிறேன்”** என்றேன். நான் பூண்டி மகானிடம் சென்று கேட்டேன். **“நீ கல்யாணம் செய்து கொள். நல்லா இருப்பாய்”** என்று ஆசீர்வதித்தார். இரண்டு குடும்பப் பெரியவர்களும் ஒரு வாரத்தில் திருமணம் செய்ய நிச்சயித்தார்கள். ஸ்ரீ பூண்டி மகான்அருளாசியுடன் என் திருமணம் நடந்தது.

நான் ஏதாவது கோயிலுக்குச் செல்ல நினைத்தால் ஸ்ரீ பூண்டிமகான் கனவில் கோயிலுக்கு அழைத்துச்சென்று எல்லாவற்றையும் காண்பிப்பார். ஆலய மணி முழங்கும் ஓசையும் கேட்கும். ஆலயத்தின் உள்ளே நடக்கும் பூஜைகளையும் காண்பிப்பார். சிறிது நேரம் அங்கேயே இருந்து என்னை திரும்பி அழைத்து வரும்வரை மகான் என்னுடனே இருப்பது போல் தோன்றும். எனக்கு நேரிடையாக ஆலயத்திற்குச் சென்று வந்த அனுபவம் கிடைக்கும். ஸ்ரீ பூண்டிமகானின் திவ்ய அனுக்கிரகமாக உணர்ந்து மகிழ்வேன்.

ஸ்ரீ பூண்டி மகானுக்கு உடல்நலம் சரியில்லாத சமயத்தில் **“சுவாமி, உங்களுக்கு இப்படி உள்ளதே எதற்கு”** என்று கேட்டேன். **“எனக்கு சமயமும், சந்தர்ப்பமும் வரணும்மா”** என்று கூறினார். சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் ஊர் மேற்கே உள்ள அம்மன் கோயிலில் இருப்பார். அந்தக் கோயில் பாழடைந்து இடிந்து விழும் நிலையில் இருந்தது. ஒரு நாள் சுவாமிகள் அந்த ஆலயத்தில் படுத்து கொண்டிருந்தபோது **“நீங்கள் இங்கே படுக்க வேண்டாம், வாங்க”** என்றேன். சுவாமிகளின் பாதத்தில் புண் இருந்தது. **“எப்படி நடந்து வருவது”** என்றார். புண்மேல் ஆலயத்திலிருந்த திருநீற்றை பூசி, **“நடந்து போகலாம் வா”** என்று கூறி அழைத்து வந்துவிட்டேன்.

ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதி அடைந்தபிறகு கூட, எனக்கு நினைத்த போதெல்லாம் கனவில் தரிசனம் அளித்துக் கொண்டிருக்கிறார். ஏதாவது கஷ்டங்கள் குடும்பத்தில் இருந்தால், **“நீ எதுவும் கவலைப்படாதேம்மா. நான் இருக்கிறேன்”** என்று ஆறுதல் கூறுவார். எனக்கு கனவில் தரிசனம் தரவில்லை என்றால் திட்டுவேன். உடனே சுவாமி தரிசனம் தருவார். எனக்கு உடல்நலம் சரியில்லாமல்

*படுத்துக் கொண்டால் ஸ்ரீ பூண்டிமகான் வந்து தேகமெல்லாம் கையால் தடவி,* **“உனக்கு எதுவும் ஆகாது. பயப்படவேண்டாம். நான் இருக்கிறேன்”** *என்று கூறுவார். ஸ்ரீ சுவாமிகளின் அன்பு, என்னை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்தது.*

*எனக்கு மூன்று மகன்கள், ஒரு மகள். மகள் பெரியவள். என் தம்பி பாலமுருகனுக்கு திருமணம் செய்தோம். எல்லோரும் ஸ்ரீ பூண்டி மகான் அருளால் மகிழ்ச்சியாக உள்ளனர். ஒவ்வொரு நொடியும் எனக்குத் துணையாக இருந்து காப்பாற்றி, என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் பரபிரம்ம சொரூபமான ஸ்ரீ பூண்டி மகானுக்கு சேவை செய்ததை என் அதிர்ஷ்டமாக பாவிக்கிறேன்.*

**நேர்காணல்: 25**
**19.08.2005, பூண்டி**

**K. கணேசன்**, வயது: 54, காப்பலூர்.

*எனக்கு பதினான்கு வயதாக இருக்கும்போது ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்தேன். என் அத்தை ஒருவர் களாம்பாடியில் இருந்தார். அவர்களை பார்க்க வேண்டும் என்று சென்றபோது வழியில் புளியமரத்தின் அடியில் சுவாமிகள் அமர்ந்திருந்தபோது தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகானுக்கு பீடி கொடுத்தால் வாங்கிக் கொள்வார். பீடியை பற்றவைத்துத் தந்தால் புகைப்பிடிப்பார். சுவாமிகள் பீடித்துண்டுகளை கூட விட்டு வைக்க மாட்டார். மூட்டையில் வைத்து கட்டிக் கொள்வார்.*

*என் தந்தையார் அவரது அக்கா வீட்டிற்கு களாம்பாடி செல்லும்போது பழங்கோவிலுக்கருகிலுள்ள கால்வாய் மேடு மீது வெள்ளை எருக்கம் பூக்களை பறித்து வந்து சுவாமிகளின் திருவடிகளில் வைத்து வணங்குவார்.* **"படிக்கத் தெரியாதவன் பயன் அறியாதவன்".** *இப்படி பரிபாஷையில் சுவாமி கூறினாராம். ஒரு சமயம் சிகரெட் வாங்கிச் சென்று சுவாமிகளின் கையில் தந்து பற்ற வைக்க முயற்சித்தபோது தந்தையார் கைகள் நடுங்கியது. சுவாமி என் தந்தையார் கையிலிருந்த தீப்பெட்டியை வாங்கி சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார். அந்த சமயத்தில் சுவாமிகள் தந்தையிடம் ஏதோ கூறினார். ஆனால் நினைவில் இல்லை என்றார்.*

*என் கிராமத்தில் என் அத்தை (அப்பாவின் சகோதரி) இருந்தார். அவர் ஒவ்வொரு மாதமும் கிருத்திகையன்று உணவு சமைத்து மாட்டு வண்டியில் வில்வாரணிக்குச் சென்று மலைசுற்றி வந்த பிறகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு சென்று தரிசனம் செய்து கொண்டு, எடுத்து வந்த உணவை துறவிகளுக்கு தந்து பிறகு அவர் சாப்பிடுவார். ஒரு சமயம் நான் அவர்களுடன் சேர்ந்து சென்றபோது ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயத்திற்கு அருகிலுள்ள ஒரு மேடான இடத்தில்*

ஸ்ரீ பூண்டி மகான்அமர்ந்து இருக்க நான் இரண்டாவது முறை தரிசனம் செய்து கொண்டேன்.

நான் அடுத்த மாதம் கிருத்திகையன்று என் அத்தையுடன் சேர்ந்து வண்டியில் சென்றேன். வழியில் ஸ்ரீ பூண்டிமகான் தென்பட்டார். "**ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி இங்கேயே அமர்ந்து இருக்கிறார்**" என்று கூறிய என் மாமா வண்டியை நிறுத்தினார். அவர் பூண்டி மகானிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். அன்கு கிரிவலம் செல்லவில்லை. ஆலயத்திற்கும் செல்லவில்லை. அனைவரும் வண்டியை விட்டு இறங்கி விட்டனர். என் அத்தை உணவு எடுத்துச் சென்று சுவாமிகளுக்கு உணவு ஊட்ட முயற்சி செய்தார். சுவாமி சாப்பிடவில்லை. என் அத்தை பதினொரு மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை வேண்டிக் கொண்டாலும் சுவாமி சாப்பிடவில்லை. கடைசியில் என் மாமாவும், அத்தையும் கண்ணீர் விட்டனர். அதன் பிறகு சுவாமிகள் இரண்டு கவளம் உணவு சாப்பிட்டார். அதன் பிறகு அனைவரும் உணவருந்தினார்கள்.

1971ல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் மூத்த மகளான சாந்தியுடன் எனக்கு திருமணம் நடந்த பிறகு அடிக்கடி ஸ்ரீ பூண்டி மகானிடம் வந்து தரிசனம் செய்து செல்வேன்.

என் தந்தை நிலம் வாங்க வேண்டும் என்று ஸ்ரீ பூண்டி மகானிடம் கேட்டார். "**எதற்குப்பா. தேவையில்லாத கஷ்டங்கள் வரும். வேண்டாம்**" என்றார்.என் தந்தை பூண்டிமகானின் சொற்படி கேட்காமல் நிலம் வாங்கினார். அந்த நிலத்தை வாங்கியதால் பங்காளிச் சண்டை வந்தது. நான்கைந்து வருடங்கள் நீதிமன்றத்திற்கு அலைந்தோம். குடும்ப கஷ்டங்கள் அதிகரித்தது. பல பிரச்சினைகள் வந்தன. நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்தாலும் எதிர்தரப்பினர் உயர்நீதிமன்றத் தடை உத்தரவு வாங்கிக் கொண்டனர். அதன் பிறகு அந்த நிலத்தை என் பங்காளிகளுக்கே தந்து வழக்கில் சமரசம் செய்து கொண்டோம். சுவாமிகளின் சொற்படி கேட்காததால் தகுந்த பலனை அனுபவித்தோம்.

எனக்கு ஸ்ரீ பூண்டி மகானிடம் நம்பிக்கை வரவில்லை. எல்லோரும் சும்மா சொல்கிறார்கள் என்று அபிப்பிராயப் பட்டேன்.

*ஒரு சமயம் சித்திரை பௌர்ணமியன்று பல்லக்கை அலங்காரம் செய்ய பூக்கள் வாங்கி வர சிலர் மதராஸ் சென்றனர். திருவண்ணாமலைக்கு சிலர் சென்றனர். திருவண்ணாமலையிலிருந்து 30 பேர் பூக்களைத் தொடுக்க, பல்லக்கை அலங்காரம் செய்ய வந்தனர். திருவண்ணாமலையிலிருந்து எடுத்து வந்த பூக்களை சிறிது நேரத்தில் தொடுத்தனர். மதராஸிலிருந்து வாங்கி வரும் பூக்களுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். காலம் கடந்து சென்றது. ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று கேட்டனர். "***என்னப்பா! வரும் வழியில் கார் பஞ்சர் ஆகிவிட்டது. சரி செய்து வரவேண்டும் அல்லவா***" *என்றார் சுவாமி. என்னவோ சுவாமி இப்படி சொல்கிறார் என்று நினைத்தேன். சிறிது நேரத்தில் மதராஸ் சென்றவர்கள் திரும்பிவந்தார்கள். அவர்களைக் கேட்டேன். "***வழியில் கார் பஞ்சர் ஆனது. அதனால் தாமதம் ஆகிவிட்டது***" *என்றார்கள். அப்போதிலிருந்து எனக்கு ஸ்ரீ பூண்டி மகான்மீது மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது.*

*ஸ்ரீ பூண்டி மகான் என் மகளுக்கு மங்கள அபிராமி, பெரிய மகனுக்கு சுந்தர வடிவேலு, இரண்டாவது மகனுக்கு கமலக் கண்ணன் என்று பெயர் வைத்தார். கடைசி மகன் பூண்டி மகான் மஹாசமாதியடைந்த பிறகு பிறந்தான். ஸ்ரீ பூண்டி மகான் சாட்சாத் பகவானே என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினார்.*

**நேர்காணல்: 26**
**01.11.2005, பூண்டி**

**G. சந்தானகிருஷ்ணன்**, **வயது: 60க்கு மேல், தேவன்குடி கிராமம், தஞ்சாவூர் மாவட்டம்.**

*நான் தஞ்சாவூர் கிராமம் தேவன் குடி கிராமத்தில் பிறந்தேன். பதினாறு வயதில் தாய், தந்தை இயற்கை எய்தினார்கள். சென்னையில் உள்ள என் தாய் மாமன் வீட்டிலிருந்தபடி படித்து பத்தொன்பது வயதில் வேலையில் சேர்ந்தேன்.*

*வேலை செய்யும் தருணத்தில் எனக்கு கேந்திரவேலு அறிமுகம் ஆனார். அவர் கூறியதால் ஸ்ரீ பூண்டி மகான்பற்றி அறிந்து கொண்டேன். ஆனாலும் உடனே நான் தரிசனம் செய்யவில்லை. சென்னையில் உள்ள அசோக்நகரில் நான் இருக்கும் வீட்டிற்கு அருகிலுள்ள ஸ்ரீ மல்லிகேஸ்வர சுவாமி ஆலயத்தில் அபிஷேகம் செய்வது இல்லை என்று கேந்திரவேலு சொன்னதால் நான் சென்று பூஜாரியிடம்* **"அபிஷேகம் செய்யுங்கள். செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன்"** *என்றேன். பூஜாரி சாவியை என் கையில் தந்து* **"நீங்களே பண்ணுங்க"** *என்றார். கேந்திரவேலுவின் அக்கா பிள்ளைகள் மூவரும் என்னுடன் சேர்ந்து வரவே அனைவரும் சுத்தப்படுத்தி எங்களுக்கு தெரிந்தவரை அபிஷேகமும், பூஜையும் செய்து வீட்டிற்கு வந்தோம். அன்றிரவு விடியற்காலையில் கனவில் ஆஜானுபாகுவான, திடகாத்திரமான ஒரு மகான் நன்றாக வளர்ந்த தாடியுடன் தரிசனம் அளித்து ஏதோ கூறி தலைமேல் கை வைத்து ஆசீர்வதித்தார். அன்றிலிருந்து என் வாழ்க்கை ஊகிக்க முடியாதபடி மாறுதல் அடைந்தது. அப்போதிலிருந்து யாரிடம் பேச வேண்டும் என்றாலும் விருப்பம் இருக்காது.*

*கேந்திரவேலுவின் தந்தை ஒரு பௌர்ணமியன்று ருத்திர இராஜகோபாலிடம் செல்லச் சொன்னார். அவர் கூறியபடி நான் சென்றேன். ருத்திர இராஜகோபால் எனக்கு பிரணவத்தை உபதேசிக்கும் சமயத்தில் மெய் மறந்து போனேன்.*

நான் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொள்ள பூண்டிக்கு வந்தேன். மகானை பார்த்த மறு நொடியில் கனவில் தரிசனம் தந்தவர் ஸ்ரீ பூண்டி மகானே என்று தெரிந்ததால் மனம் ஆனந்த பரவசமடைந்தது. ஸ்ரீ பூண்டி மகான்அருட்பார்வை என் மீது பட்டவுடன் என் உடலில் விபரீதமான அனல் (வெப்பம்) ஏற்பட்டது. நான் சுவாமிகளை வணங்கிய பிறகு திருநீறு வைத்தார். இதுவே ஸ்ரீ ஸ்ரீ பூண்டி மகானிடம் எனக்கு ஏற்பட்ட அனுபவம்.

கேந்திரவேலு வற்புறுத்தியதால் நான் திருமணம் செய்து கொள்ள ஸ்ரீ காளஸ்தியில் ஒரு பெண் பார்த்து வந்தேன். நான் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு, "**சுவாமி! காளஸ்தியில் ஒரு பெண்ணைப் பார்த்து வந்தேன். பேரு அங்கம்மா**" என்று கூறினேன். "**நல்ல பெண். திருமணம் அடுத்த வருடம் நடக்கும்**" என்று பூண்டி மகான் ஆசீர்வதித்தார். ஸ்ரீ பூண்டி மகான் கூறியபடியே எங்கள் திருமணம் நடந்தது.

ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்ட பிறகு அசைவ உணவு சாப்பிடுவதையும், மதுபானம் அருந்துவதையும் நிறுத்திவிட்டேன். சுவாமிகளின் தரிசன பாக்கியத்தால் எனக்கு அலுவலகத்தில் பதவிஉயர்வு கிடைத்தது. என்னைவிட அனுபவம் வாய்ந்தவர்க்கு பதவி உயர்வு தராமல் எனக்கு தந்ததற்கு அவர் கோபப்பட்டார்., எனக்கு பதவி உயர்வு வேண்டாம் என்றேன். கம்பெனி நிர்வாகம் செய்த முடிவை மாற்ற முடியாது என்றார்கள். அவர் என் மீது பொறாமை கொண்டு வீட்டிற்குச் செல்லும் வழியில் ஒளிந்து கொண்டு என்னை தாக்க முயற்சித்தார். எனக்கு இந்த விஷயம் தெரியாது. நான் ஸ்ரீ பூண்டி மகானை மனதில் நினைத்தவாறு, "**மகான்களின் தரிசனம் நல்லது என்கிறார்கள். எனக்கு எதற்கு இடைஞ்சல் வந்தது. நான் பணம், பதவி உயர்வை வேண்டவில்லை அல்லவா?**" என்று ஆலோசித்துக் கொண்டு எதிர்பாராமல் வேறு வழியில் வீட்டிற்குச் சென்றேன். அந்த வழியில் வந்த சிலரை கம்பெனி நிர்வாகத்திற்கு அனுகூலமாக இருந்தார்கள் என்று அந்த நபர் அடித்தார். ஸ்ரீ பூண்டி மகான்அருளால் நான் அந்த நபரிடம் பிடிபடாமல் தப்பித்தேன். அந்த சுற்றுப் (ஷிப்ட்) பணி நேரத்தை

*மாற்றினார்கள். வேறு காரணத்தால் ராஜினாமா செய்து சென்று விட்டார்.*

*நான் சென்னையில் வீடு கட்ட வேண்டும் என்று ஸ்ரீ பூண்டி மகானை வேண்டினேன். அலுவலகத்தில் வரவேண்டிய நிலுவைப் பணம் வந்தது. ஆறு வருடங்களாக வராத மேலூதியப் பணம் (போனஸ்) அப்போது கிடைத்தது. எதிர்பாராத பணம் வரவே வீடு கட்டிக் கொண்டேன். ஒரு மகன், ஒரு மகள் பிறந்தார்கள். இருவரும் நன்றாக படித்தார்கள். வருடத்தில் ஒரு முறையாவது ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்துகிறோம்.*



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த கன்னிக்கோவில்



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த கன்னிக்கோவில் பின்புறமுள்ள ஆலமரம்



ஸ்ரீ ஆற்றுசுவாமி
அனுமதியளித்து எடுத்த
முதல் புகைப்படம்



ஸ்ரீ ஆற்றுசுவாமியை முதன்முதலில் புகைப்படம் எடுத்த இடம் -
பழங்கோவில் ஈஸ்வரன் கோவில் முன்புறம்

**நேர்காணல்: 27**
**01.11.2005, பூண்டி**

**நடராஜன்**, வயது: 63, பூண்டி.

*எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஸ்ரீ பூண்டி மகானைத் தெரியும். சுவாமிகளுடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பும் கிடைத்தது. நான் பள்ளியிலிருந்து வந்தவுடன் மகான் பின்னால் சுற்றிக் கொண்டிருப்பேன். ஸ்ரீ பூண்டி மகான் சில சமயங்களில் ஏதாவது பேசுவார். சில சமயம் மௌனமாக இருப்பார்.*

*என் வீட்டிற்கு எதிரில் ஸ்ரீ ஆஞ்சநேயரை ஸ்தாபித்த இடத்தின் அருகில், வழியில் வந்து கொண்டிருந்த ஸ்ரீ பூண்டி மகான் அங்கேயே அமர்ந்து கொண்டார். கால் நன்றாக புண்ணாகி இருந்தது. எறும்புகளும் பூச்சிகளும், புழுக்களும் புண்ணின் மேல் மொய்த்துக் கொண்டிருந்தது.* "**இதையெல்லாம் சுத்தப்படுத்தி எண்ணெய் பூசுகிறேன் சுவாமி**" *என்று கேட்டேன். அப்படியே செய்யுமாறு சுவாமி கூறினார். நான் வீட்டிலிருந்து எண்ணெய் எடுத்து வந்து பாதத்தின் மேலிருந்த எறும்பைத் தள்ள கையை எடுத்தவுடன்,* ''**எறும்பைத் தள்ள வேண்டாம்பா! அப்படியே இருக்கட்டும்**'' *என்றார்.நான் அப்படியே அவற்றை தள்ளாமல் எண்ணெய் தடவினேன்.*

*ஒரு சமயம் நான் சுவாமிகளின் பின்னால் சென்று கொண்டிருந்தேன். திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் இருந்து ஒரு குறள் சொல்லி என்னைச் சொல்லச் சொன்னார்.*

**குறள்:**

*"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
**துப்பாய தூஉம் மழை**" *(குறள்: 12)*

**பொருள்:**

*உண்பார்க்கு உணவாகிய உணவுப் பொருள்களை விளையச் செய்து, அருந்துவார்க்கும் உணவாக அமைந்ததும் மழை)*

**“எனக்கு வாயில் வரவில்லை சுவாமி. நான் உங்களுடன் வரமாட்டேன்”** என்றேன். **“இல்லை பரவாயில்லை வா!”** என்றார் சுவாமி. **“நீங்கள் எதுவரை படித்தீர்கள் சுவாமி!”** என்று கேட்டேன். **“நான் படிச்சேன். என்னை நம்பி பத்து பேர் டியூஷனுக்கு வருவாங்க. டியூஷன் முடிந்தவுடன் அவங்கவங்க வீட்டில விட்டுட்டு வருவேன்பா”** என்றார் சுவாமி. **“உங்களது எந்த ஊர் சுவாமி”** என்று கேட்டதற்கு **“அரசமரம், ஆலமரம், குளத்து மேடு”** என்று கூறினார் சுவாமி. அதன் பிறகு எதுவும் கேட்கவில்லை. கேட்கவும் தெரியாது. எனக்கு அவசியமும் இல்லை.

ஸ்ரீ பூண்டி மகான் வழியில் நடந்து செல்லும் போது என் தாய் சுவாமிகளை வீட்டிற்கு அழைத்தார். **“சாப்பிடலாமா சுவாமி”** என்று கேட்டேன். **“ஊம். சாப்பிடலாமே!”** என்றார் சுவாமி. ஸ்ரீ சுவாமிகளை திண்ணை மேல் அமர வைத்து உணவு ஊட்டினோம். அதன் பிறகு **“சுவாமி படுத்துக்கலாமா?”** என்று கேட்டேன். **“அப்படியே”** என்றார் சுவாமி. திண்ணை மேல் படுக்க வைத்தேன். சிறிது நேரத்தில் ஆற்றில் தரிசனம் தந்தார். **“சுவாமி! திண்ணைமேல் படுத்து இருந்தீர்கள். எப்போது சென்றீர்கள்”** என்று கேட்டதும், **“ஆமாம்பா. போயிட்டேன்”** என்றார் சுவாமி. எப்போது கிளம்பிச் சென்றாரோ தெரியவில்லை.

சுட்டெரிக்கும் வெயிலிலும், கொட்டுகின்ற மழையிலும் ஸ்ரீ சுவாமிகள் எதையும் பொருட்படுத்தாமல் ஆற்றில் அமர்ந்து இருப்பார். ஒவ்வொரு சமயம் ஆற்றில் இருக்கும்போது கர்ஜனை செய்வார். அந்த சப்தத்தை வைத்து ஸ்ரீ பூண்டி மகான்ஆற்றில் இருக்கிறார் என்று அறிய முடியும். இரவில் கர்ஜனை சப்தம் அதிகமாக கேட்கும். புதியவர்கள் அந்த ஓசையைக் கேட்டு பயப்படுவார்கள்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகான் என்னிடம் **“நாங்க மூன்று பேர் வந்தோம். இரண்டு பேர் எங்க போனாங்களோ தெரியவில்லை”** என்று கூறினார். **“உங்களுக்குத் தெரியாமல் இருக்குமா சுவாமி”** என்று கேட்டேன். புன்னகை செய்தாரே தவிர பதில் கூறவில்லை.

பூண்டியில் பங்காருசுவாமி வாத்தியாரும் ஸ்ரீ பூண்டி மகானின் பக்தர் ஆவார். நான் அவரிடம் டியூசனுக்காக செல்லுவேன். ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகான்அந்த வழியில் வரும்போது வாத்தியார்

மகானை அழைத்து அமர வைத்தார். பக்கத்திலிருந்த விநாயகர் கோயிலிலிருந்து திருநீறு தட்டை எடுத்து வந்து சுவாமிகளின் பக்கத்தில் வைத்து ஒவ்வொருவராக சுவாமிகளின் திருவடிகளை வணங்கி, "**சுவாமி இந்த வருடம் நாங்கள் தேர்ச்சி பெறுவோமா?**" என்று கேட்டோம். "**ஆம். ஆயிடும்**" என்று கூறி திருநீறு வைத்தார். அங்கு டியூசன் படித்துக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒரு பையனைத் தவிர மீதி அனைவருக்கும் திருநீறு வைத்தார். அந்த சிறுவன் எவ்வளவு வேண்டினாலும் திருநீறு வைக்க வில்லை. மறுநாள் அந்த சிறுவன் அமிலம் குடித்து இறந்து விட்டான். காரணம் எதுவும் தெரியாது.

பிராயம்பட்டு என்னும் கிராமத்தின் அருகில் முனுசாமி செட்டியார் தேநீர் கடை வைத்திருந்தார். அவர் மனைவி ஆற்றுக்குச் சென்று ஊற்றில் தண்ணீர் எடுத்து வருவார். ஒரு நாள் அவர் தண்ணீர் எடுத்து வரும் சமயத்தில் ஒரு ஆஜானுபாகுவான துறவி அவரை பயமுறுத்தினார். அவர் சென்று தன் கணவரிடம் கூறினார். முனுசாமி செட்டி நேராகச் சென்று அந்தத் துறவியை பலமாக அடித்தார். அச்சமயத்தில் ஸ்ரீ பூண்டி மகான் என் வீட்டிற்கு எதிரில் உள்ள கடைக்கு அருகில் அமர்ந்து இருந்தார். அந்தத் துறவி அங்கு வந்து ஸ்ரீ மகானுக்கு சிறிது தொலைவில் நின்று ஒரு மணி நேரம் மகானைப் பார்த்தபடி மௌனமாக நின்றார். நான் அப்போது சிறு பையன். சில சிறுவர்களுடன் சேர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் வீசிய பெரிய காற்றில் வைக்கோல் ஒன்று அடித்து வரவே துறவி அந்த வைக்கோலை கையில் எடுத்து, "சுவாமி உங்கள் கையால் ஆசீர்வதித்து தாருங்கள். அவனை நாசம் செய்கிறேன்'' என்றார் கோபமாக. அதுவரை மௌனமாக இருந்த பூண்டி மகான் சிங்கம் போல் கர்ஜனை செய்தார். "**போய்யா. இந்த இடத்தை விட்டு, தண்ணீர் மேலே நடப்ப. ஆகாயத்தில் பறப்ப, கிழிப்ப. போய்யா**" என்றார் பூண்டி மகான். அந்த துறவியும் சென்று விட்டார்.

ஒரு நாள் மாலையில் நான்கு, ஐந்து மணியளவில் யதேச்சையாக வீட்டின் முன் நின்று கொண்டிருந்தேன். அந்த வழியில் பூண்டிமகான் வந்து கொண்டிருந்தார். "**எர்ணாமங்கலம் போனேம்பா.**

**ஒரு சுமைதாங்கிக்கல் மேல் உட்கார்ந்தேன். ஒரு பாட்டி சுண்டல் கொடுத்தார்கள். சாப்பிட்டேன். நல்லா இருந்தது. அங்கே இருந்து சோமாசிமேடு வந்தேன். காலில் முள் குத்திக் கொண்டது. வந்திட்டேன்"** என்றார்.நான் "**எங்கே முள் குத்திக் கொண்டது காட்டுங்கள்?**" என்றேன். சுவாமியும் தன் பாதத்தை காண்பித்தார். பாதம் நன்றாக பழுத்து சிவந்த கோவைப்பழம் போல் மென்மையாக இருந்தது. காலில் குத்திய முள் நன்றாக தெரிந்தது. மீண்டும் ஸ்ரீ பூண்டி மகான் "**அப்படியே வந்தேன்பா. நாகேந்திரன் அப்படியே ஆடிக்கிட்டு இருந்தான். இருக்கட்டும் என்று சொல்லி இப்படியே வந்திட்டேன். அந்தப் பக்கம் போகவில்லை. எல்லாரும் அன்னதானம் பண்றாங்க. பண்ணட்டும்.... பண்ணட்டும்**" என்றார். சிறிது நாட்கள் கழித்து ஸ்ரீ பூண்டி மகான் கூறிய இடத்தில் ஒரு புற்றில் நாகப்பாம்பு உள்ளது என்று அங்கே சிறப்பு பூஜைகள் செய்து அன்னதானம் செய்தார்கள்.

ஸ்ரீ பூண்டிமகான் திண்ணை மேல் அமர்ந்த பிறகு நான் பள்ளி செல்வதற்கு முன்பு பூண்டி மகானின் திருவடிகளை வணங்கிச் செல்வேன். ஒரு நாள் திடீரென்று வாய்பாடு சொல்லும்படி கேட்டார். நானும் சொல்லுவேன். பிறகு பள்ளிக்கூடம் செல்வேன். மாலையில் பள்ளியிலிருந்து வந்து சுவாமிகளிடம் நிறைய நேரம் இருப்பேன். ஸ்ரீ பூண்டிமகான் ஒரு பக்தனிடம் அவரைப் பற்றி கூறுவதுபோல் இருக்கும். ஆனால் அது வேறு பக்தர் சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கும். அங்கே நின்றிருந்தவர்களின் மனதிலுள்ள எண்ணங்களுக்கு, அவசரங்களுக்கு அனுகூலமாக மகானின் பதில் இருக்கும். ஒரு நாள் நான் அங்கே நின்றிருந்தேன். "**கெடும் புக்தி கண்ணுக்குத் தோணாது**" என்றார் சுவாமி. யாருக்கு என்று அவரவர்கள் அறிந்து கொள்ள வேண்டியதே. மற்றவர்களுக்கு புரியாது. இப்படிபட்ட சந்தர்ப்பங்கள் நிறைய வந்தன.

நானும் என் நண்பர் திருஞானமும் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று திரும்பி வரும் வழியில் நோன்புக் கயிறு என் நண்பர் வாங்கினார். ஸ்ரீ பூண்டி மகான்கையில் கொடுத்து, "**நீங்கள் ஆசீர்வதித்து எங்கள் கையில் கட்டுங்கள் சுவாமி**" என்று வேண்டினார். ஸ்ரீ பூண்டி மகான் சிறிது நேரம் கயிற்றை உற்றுப் பார்த்து விட்டு,

திருஞானத்தின் வலது கையில் கட்டும் சமயத்தில், **"உன் விரல் எல்லாம் கரடு முரடா இருக்குப்பா"** என்றார். **"கரடுமுரடா இருந்தா உங்களுக்கே தெரியணும். அதை மென்மையாக செய்ய எங்களுக்கு எப்படித் தெரியும்?"** என்றேன். என் கையில் கட்டும் சமயத்தில் **"உனது எல்லாம் பின்னிக்கிட்டு போயியிருக்கு"** என்றார். **"எங்களுக்கு எதுவும் தெரியாது சுவாமி. அது பின்னிக்கிட்டு போயிருக்கோ! என்னவோ!"** என்றேன். **"இல்லை. இல்லை. நான் எடுத்து விடறேன்"** என்றார் சுவாமி. சிறிது நாட்களுக்கு பிறகு கயிறு மக்கி எங்களுக்கு தெரியாமல் கையில் இருந்து கழண்டு கீழே விழுந்து விட்டது. ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகான் **"கையில் கயிறு கட்டினேனே, எங்கே?"** என்று கேட்டார். அப்போது தான் கையைப் பார்த்தேன். **"வேறு கயிறு வாங்கி வரேன். கட்டுங்கள் சுவாமி"** என்று வேண்டினேன். **"வேறு கயிறு கட்டச் சொல்கிறாயா?"** என்று கோபமாகக் கூறினார் பூண்டி மகான். நான் பயத்துடன் ஓடி விட்டேன்.

ஸ்ரீ பூண்டி மகான்சன்னதியில் நான் நின்றிருந்தபோது ஒரு செல்வந்தர் தேநீர் வாங்கி வந்து சுவாமி அருந்துங்கள் என்று வேண்டிக் கொண்டு டம்ளரை வாய் அருகில் கொண்டு சென்றார். ஸ்ரீ மகான் முகத்தை திருப்பிக் கொண்டார். அவர் எவ்வளவு வேண்டினாலும் சுவாமி நிராகரித்தார். கடைசியில் தேநீரை வாங்கி முன் வைத்து இருந்த பாத்திரத்தில் ஊற்றிவிட்டார். ஒரு பூனை அதை குடித்து விட்டுச் சென்றது. அந்த செல்வந்தருக்குப் பின்னர், ஒரு குருவிக்காரர் கிராமத்தில் பிச்சை எடுத்து வந்து **"சுவாமி சாப்பிடுங்க"** என்று கூறி தகர டப்பாவிலிருந்து வடை, தோசை எல்லாவற்றையும் கலந்து வைத்தபோது சுவாமி ஆனந்தமாக ருசித்து சாப்பிட்டார். அதன் பிறகு குருவிக்காரர் சுவாமியை வணங்கி மனத்திருப்தியுடன் சென்று விட்டார்.

ஒரு நாள் பலமான காற்றுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்தது. ஆற்றில் வெள்ளம் வந்தது. மழைத் தூறல் படாமல் இருக்க திண்ணைக்கு முன்புறம் தாழ்வாரம் போட்டிருந்தார்கள். நான் **"காற்று மழைக்கு தாழ்வாரம் விழுந்து விடுமோ என்னவோ?"** என்றேன். **"நம்ம பக்கம் வராது விடுப்பா"** என்றார் சுவாமி. ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்து இருந்த வீட்டின் இருபுறமும் காற்று வேகமாக வீசி அடர்ந்த

மழை கொட்டிக் கொண்டிருந்தது. சுவாமிகள் இருந்த வீட்டின் அருகில் மட்டும் காற்று, மழையின் தீவிரம் சிறிது கூட இல்லை. பஞ்ச பூதங்களுக்கு அதிபதியான ஸ்ரீ பூண்டி மகானின் திருவிளையாடல் என்று நினைத்து மகானின் கை, கால்களை பிடித்து விட்டு அவரை வணங்கி வீட்டிற்குச் சென்றேன்.

கொத்தந்தவாடியில் தேர் செய்கிறார்கள். சென்று வேலை முடித்து வரும்படி ஸ்ரீ பூண்டி மகானே நேரிடையாக என்னிடம் கூறினார். நான், காங்கனூர் சுவாமி, மற்றும் சொக்கலிங்கமும் சேர்ந்து சென்றோம். அங்கேயே இருந்து பல்லக்கு வேலையை மேற்பார்வை செய்தோம். ஒரு நாள் நடு இரவில் எங்களை தூக்கத்திலிருந்து எழுப்பி பூண்டி புறப்படுமாறு காங்கனூர் சுவாமி கூறினார். **"எதற்கு வரச் சொன்னார். அங்கே ஏதோ நடக்கின்றது"** என்று கூறி வானத்தை காண்பித்து மின்னல் தென்பட்டால் போகலாம் இல்லை என்றால் வேண்டாம் என்றார். அவர் சொன்னபடியே ஆகாயத்தில் மின்னல் தோன்றியது. உடனே துணிமணிகளை எடுத்துக் கொண்டு வந்து விட்டோம்.

பூண்டியில் மகானின் சன்னதியில் பக்தர்கள் இடையே பிரச்சினை தோன்றியது. கமிட்டி உறுப்பினர்கள் **"ஸ்ரீ பூண்டி மகானுக்கு ஐயரை வைத்து பூஜை செய்யலாமா! இல்லை சுப்பிரமணிய சுவாமியை மகானுக்கு பூஜை செய்ய அனுமதிக்கலாமா?"** என்று இரண்டு நாட்களாக பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர். அன்று சில அரசு அதிகாரிகளும் வருவதாகக் கூறினார்கள்.

ஸ்ரீ பூண்டி மகானுக்கு காலையில் ஐந்து மணிக்கெல்லாம் அமர வைத்து பூஜைகள் செய்கின்றனர். மணியடிக்கும் ஓசை கேட்டதும் நான் வீட்டிற்குச் சென்று கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு வந்து ஸ்ரீ பூண்டி மகானை வணங்கினேன். திருநீறு வைத்தார். **"என்ன செய்யப்போகிறீர்கள் சுவாமி. பிராமணரை வைத்து பூஜை செய்யச் சொல்றீங்களா? இல்லை சுப்பிரமணிய அண்ணனை பூஜை செய்யச் செல்றீங்களா! நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்"** என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான் **"இரண்டு கண்ணும் நம்உடன் நெருங்கிதான்பா இருக்குது. ஒண்ணுக்கு ஒண்ணு நேரிடையா பார்த்துக்க முடியுமா. சாக்கடை**

**எல்லாம் எதிர்க்குது, கடல் இழுத்தா என்னாகும் தெரியுமா? கடை வைத்து இருக்கிறேன். சரக்கு வாங்க ஆள் இல்லை. பிள்ளைக் குட்டிக்காரன். பிழைக்கணும் என்கிறான். அவரே இருக்கட்டுன்னு சொல்றேன்பா**" என்றார். "**சரி சந்தோஷம் சுவாமி**" என்றேன். கிராமத்தில் இரண்டு பிரிவு ஏற்பட்டது. சிறிது நேரத்தில் (அற நிலையத் துறை) அதிகாரி, மற்றும் உயர் அதிகாரி மேலும் பிற அதிகாரிகளும், கமிட்டி உறுப்பினர்களும், ஊர் மக்களும் பக்கத்து கிராம மக்கள் அனைவரும் என்ன நடக்கப் போகிறதோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். கமிட்டித் தலைவர் ஸ்ரீ பூண்டி மகான் அருகில் வந்து வணங்கிக் கொண்டு, "**எப்படி செய்யச் சொல்றீங்க சுவாமி**" என்று கேட்டார். "**இருக்கட்டும்பா. அவரே இருக்கட்டும். வர்றவங்களுக்கு எல்லாம் சோறு போடறார். சுப்பிரமணியமே இருக்கட்டும். அப்புறமா பார்த்துக்கலாம்**" என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான் வந்த அதிகாரிகளும் சுவாமிகள் கூறியதையே தீர்ப்பாகக் கருதி அவரை வணங்கிச் சென்று விட்டனர். இன்று வரை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பூஜைகள் செய்து வருகிறார்.

ஸ்ரீ பூண்டிமகான் திண்ணை மேல் முதல் முதலாக அமர்ந்த பிறகு மகான் அருகில் விளக்கு ஏற்ற வேண்டும் என்று கார்த்திகை மாதத்தில் அனைத்தையும் தயார் செய்து கொண்டு ஸ்ரீ மகானை வணங்கிச் செல்ல வந்தோம். ஸ்ரீ பூண்டி மகான் கோபமாக "**மந்தைவெளி கிட்ட இருக்கிற இரண்டு கல்லுக்கு பூ வைத்து கும்பிட ஆள் இல்லை. இடுகாடு, சுடுகாடு எடு அதெல்லாம்**" என்றார். எங்களுக்கு விவரம் புரியவில்லை. ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்த திண்ணைக்கு எதிரில் உள்ள இடத்தில் ஏதோ ஒரு சக்தி உள்ளது. அங்கே எத்தனையோ முறை பாட்டுக் கச்சேரி நடந்தது. எத்தனையோ பாடகர், பாடகிகள் வந்து பாடினர். எத்தனையோ திருவிழாக்கள் நடந்தன. தற்போது அங்கே ஒரு பள்ளிக்கூடம் கட்டி உள்ளனர். அந்த இடத்தின் சக்தி எங்களுக்கு என்னவென்று புரியவில்லை.

ஒரு தைப்பூசத்தன்று சமையல் செய்து அனைவருக்கும் உணவு பரிமாறினார்கள். சில பெரியவர்கள் அங்கு நின்று கொண்டு அவர்களுக்கு வேண்டியவர்களை மட்டும் முன்பாக அனுப்பி மற்றவர்களை பொறுத்திருந்து சாப்பிடுமாறு அதிகாரம் செய்து

கொண்டிருந்தனர். அவர்களின் உயர்வு தாழ்வு குணத்தைப் பார்த்து மனதுக்குப் பிடிக்காமல் ஸ்ரீ பூண்டி மகானிடம் கூறினேன். "**என்னப்பா சோறு ஆக்கி போட்டு யாராவது நல்ல பெயர் எடுத்து இருக்காங்களா. நீ அங்கே போக வேண்டாம். இப்படி வந்திடு**" என்று கூறினார் பூண்டி மகான். நான் மீண்டும் அந்தப் பக்கம் செல்லவில்லை.

ஒரு நாள் மாலையில் நான் ஸ்ரீ பூண்டி மகானிடம் நின்று கொண்டிருந்தேன். அவ்வழியில் திருப்பதிக்குச் செல்பவர்கள் "**கோவிந்தா! கோவிந்தா!**" என்று பஜனை செய்து கொண்டு கால் நடையாக சென்று கொண்டிருந்தார்கள். "**சுவாமி! நான் இன்னும் திருப்பதி சென்றதில்லை**" என்று வழியில் போகிறவர்களை பார்த்து மனவருத்தத்துடன் கூறினேன். "**இன்னமும் பார்க்கவில்லையா**" என்று கேட்டார் சுவாமி. செல்லவில்லை என்று கூறியவுடன் "**சரி பார்க்கலாம்**" என்றார். அன்றிரவு கனவில் திருப்பதி அனைத்தையும் சுற்றிக் காண்பித்தார். மறுநாள் மாலையில் அதே நேரத்திற்கு பூண்டி மகான் சன்னதிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் "**இரவு திருப்பதியைப் பார்த்தாயா?**" என்று கேட்டார். "**அதுதானா சுவாமி திருப்பதி**" என்று கேட்டேன். "**அதுதான் திருப்பதி**" என்றார் சுவாமி. என் கோரிக்கையை நிறைவேற்றிய ஸ்ரீ பூண்டி மகான் சிறந்தவர்களில் சிறந்தவர் என்று அறிந்து கொண்டேன். அதன் பிறகு பலமுறை நான் திருப்பதிக்குச் சென்று வந்தேன்.

ஸ்ரீ பூண்டி மகானின் பக்தர் சிம்டா சுவாமி என்று ஒருவர் இருந்தார். சுவாமிகள் அமர்ந்திருந்த திண்ணைக்கு எதிரில் ஒரு குடிசை இருந்தது. அந்த குடிசையில் அமர்ந்து கொண்டு துறவிகளுடன் சேர்ந்து பஜனைகள் செய்து பாடல்கள் பாடிக் கொண்டிருப்பார். ஒவ்வொரு சமயம் நானும் அங்கு அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பேன். ஒரு நாள் நான் பர்வதமலைக்கு செல்லக் கிளம்பினேன். ஒரு பூனை குறுக்கே வந்தது. எத்தனை முறை முயற்சி செய்தாலும் பூனை குறுக்கே வந்தது. நான் போகாமல் அந்த குடிசையிலேயே அமர்ந்து கொண்டேன். அன்றிரவு சுமார் பன்னிரெண்டு மணியளவில் ஒரு மகான் ஸ்ரீ பூண்டிமகான் தரிசனத்திற்காக வந்தார். ஸ்ரீ பூண்டி மகான்திண்ணை மேல்

எழுந்து அமர்ந்து கொண்டார். அங்கிருந்த நாங்கள் அனைவரும் ஓடி வந்து அங்கு நின்று என்ன நடக்கின்றதென்று பார்த்துக் கொண்டிருந்தோம். இருவரும் பரிபாஷையில் பேசிக் கொண்டார்கள். கடைசியில் பூண்டி மகான் "**ஊம்**" என்று கூறி, வந்த மகான் நின்ற இடத்திலிருந்து அப்படியே பின்னோக்கி வந்து "**ஜோதி...ஜோதி**" என்று கூறி புறப்பட்டார். அங்கு நின்றிருந்த ஒரு பக்தர் அத்துறவியிடம் "**சுவாமி நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?**" என்று கேட்டார். அத்துறவி பதில் ஏதும் பேசாமல் சென்று விட்டார். ஸ்ரீ பூண்டி மகானை திண்ணை மேல் படுக்க வைத்த பிறகு ஸ்ரீ மகானே எழுந்து அமர்ந்து கொள்வதும் மீண்டும் படுத்துக் கொள்வதும் மிக மிக அரிதான செயலாகும். முக்காலமும் அறிந்த அனாகதுடு ஸ்ரீ பூண்டி மகானின் திவ்ய லீலை என்று தெரிந்து கொண்டேன்.

நான் திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சர்யம் வாங்கிக் கொண்டு துறவு வாழ்க்கை வாழவேண்டும் என்றும் சாதனைகள் செய்ய வேண்டும் என்ற சங்கல்பத்துடன் ஸ்ரீ பூண்டி மகானிடம் வந்து "**சுவாமி நான் துறவியாக வாழ்க்கை நடத்த நினைக்கிறேன். என்னை ஆசீர்வதியுங்கள்**" என்று வேண்டினேன். திருநீறு தட்டை எடுத்து தரச் சொன்னார். நானும் எடுத்துக் கொடுத்தேன். ஸ்ரீ பூண்டி மகான் திருநீறு வைத்து "**சமயம், சந்தர்ப்பம் வரும்போது செய்யறேன். பாதை வழுக்கிடும். வீட்டுக்குப் போ. அம்மா தேடிக்கிட்டு இருக்கறாங்க**" என்று கூறினார். நான் சுவாமியின் ஆணைப்படி வீட்டிற்குச் சென்றேன்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு நின்று கொண்டிருந்தேன். "**பெரிய ஆலமரம் சாயப்போகுதுப்பா**" என்று கூறினார் சுவாமி. "**எங்கே சுவாமி! எந்த ஊர்ல சாயபோகுதோ தெரியவில்லையே. நம்ம ஊரிலா அல்லது வெளியே வெறு கிராமத்திலா?**" என்று கேட்டேன். "**பெரிய ஆலமரம் சாயப் போகுது. பயப்படாதே! ஒண்ணும் இல்லை. வீட்டிற்கு போ**" என்று கூறி திருநீறு வைத்தார். மறுநாள் என் தாயார் இயற்கை எய்தினார். அந்த சமயத்தில் நான் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தேன். அதன் பிறகு என் கஷ்டங்களை எல்லாம் ஆத்ம சொரூபத்தை தெரிந்து கொண்ட ஸ்ரீ பூண்டி மகானிடம் சொல்லிக் கொள்வேன்.

நான் என் படிப்பை முடித்த பிறகு வேலைக்கு நேர்முக தேர்வுக்கு அழைப்பு வந்தது. ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று வணங்கி, "**சுவாமி! அனைவருக்கும் நீங்கள் வேலை வாங்கித் தருகிறீர்கள். எனக்கு மட்டும் வேலை வாங்கித் தரமாட்டீங்க. நான் நிறைய பிரச்சினைகளில் இருக்கிறேன்**" என்று கண்ணீருடன் வேண்டினேன். ஸ்ரீ சுவாமிகள் "**சரி நான் உனக்கு வேலை வாங்கித் தருகிறேன். செல்**" என்றார்.மறுநாள் நான் நேர்முகத் தேர்வுக்கு கிளம்பி ஸ்ரீ பூண்டி மகானை வணங்கி ஆசிகள் பெற்றுச் சென்றேன். வரிசையில் நின்று ஸ்ரீ பூண்டி மகானை நினைத்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் கைகளால் தரும் திருநீற்றின் வாசனை குப்பென்று மூக்கைத் தாக்கியது. நேர்முகத் தேர்வுக்கு சென்றேன். நான் தேர்வானதாக வேலைக்கான உத்தரவை என் கையில் தந்தார்கள். கல்வித் துறையில் எனக்கு வேலை கிடைத்தது. வேலை உத்தரவை எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி மகான்கையில் தந்தேன். படித்துப் பார்த்தார். ''**நல்லது**'' என்று ஆசீர்வதித்தார். மேல்பள்ளிப்பட்டு கிராமத்தில் வேலைக்கு அனுப்பினார்கள். ஸ்ரீ பூண்டி மகான் "**செங்கம் பக்கத்தில் இராமமூர்த்தி என்று மருத்துவர் இருக்கிறார். அவரிடம் சென்று சான்றிதழ் வாங்கிக் கொண்டு சென்று வேலையில் சேர்ந்துக்க**" என்று கூறினார். சுவாமி ஏன் அப்படிக் கூறினார் என்று எனக்கு புரியவில்லை. ''**நீங்களும் என்னோடு வரவேண்டும் எனக்கு எதுவும் தெரியாது**" என்று வேண்டிக் கொண்டேன். ''**சரி வருகிறேன்**'' என்று கூறினார். நான் கிளம்பி மருத்துவரிடம் சென்றேன். ஸ்ரீ பூண்டி மகான்அனுப்பினார் என்றவுடன் அன்புடன் பேசி அவர் உடற்தகுதிச் சான்றிதழ் எழுதி என்னிடம் தந்து அவர் காரிலே அழைத்துச் சென்று அலுவலகத்தில் விட்டார்.

ஒரு நாள் இரவு பள்ளிக் கூட கட்டிடத்தில் படுத்துக் கொண்டிருந்த போது ஸ்ரீ பூண்டி மகான் கட்டை வண்டியில் வந்தபடி இருந்தது. பூண்டிக்கு வந்தேன். சுவாமியை தரிசனம் செய்து கொண்டு, "**சுவாமி! இரவு வந்தீர்களே**" என்றேன். "**ஆமாம் வந்தேன்பா. நீ படுத்துகிட்டு இருக்கிறதை பார்த்தேன்**" என்று கூறி, "**நம்ம வீடு கட்டறாங்க (கல்யாண மண்டபம்) பணத்துக்காக வந்தேன்**" என்றார். என்னிடமிருந்த பணத்தை கொடுத்துவிட்டு அன்றிரவு அலுவலகத்துக்குச்

சென்றேன். சில நாட்கள் கழிந்து நான் பணியிடத்தை கலசபாக்கத்திற்கு மாற்றிக் கொண்டேன்.

நான் ஸ்ரீ பூண்டி மகானுக்கு சேவை செய்து கொண்டு வாழ்க்கை நடத்த எண்ணினேன். ஸ்ரீ பூண்டி மகான் "**பழைய கால்வாயை மூடாதே. புதுக் கால்வாயை தோண்டாதே. உன் அக்கா பெண்ணை கல்யாணம் பண்ணிக்கோ. நான் பாத்துக்கறேன். நல்லா இருப்பே**" என்று கூறினார். நான் சுவாமிகள் கூறியபடியே கல்யாணம் செய்து கொண்டேன். ஒரு மகன், இரு மகள்கள் பிறந்தார்கள். சந்தோஷமான வாழ்க்கை நடத்துகிறேன்.

ஸ்ரீ பூண்டி மகான் அன்பரான திருஞானத்திற்கு திருமணம் செய்து வைக்குமாறு கூறினார். திருவண்ணாமலைக்குப் பக்கத்திலுள்ள கிராமத்தில் பெண் பார்க்கச் சென்றோம். அவர்கள் திருஞானத்தின் ஜாதகம் வேண்டும் என்று கேட்டார்கள். நான் "**சுவாமிகளிடம் சொல்கிறேன். சுவாமி சொன்னால் சம்மதிக்கிறீர்கள்**" என்று கேட்டேன். சம்மதமே என்றனர். அனைவரும் வந்து ஸ்ரீ பூண்டி மகானை வணங்கினோம். ஜாதகம் கேட்டவரை சுவாமிகளுக்கு காண்பித்து "**சுவாமி இவர்தான் ஜாதகம் கேட்டார்**" என்றேன். ஸ்ரீ பூண்டி மகான்அவருக்கு திருநீறு வைத்து "**திருஞானத்துக்கு பெண்ணைக் கொடு. நான் பாத்துக்கறேன். நல்லா இருப்பே**" என்று ஆசீர்வதித்தார். சுவாமிகள் எங்களிடம் "**கல்யாணம் பண்ணி வையுங்கப்பா**" என்று கூறினார். என்னால் முடிந்த உதவி செய்தேன். ஸ்ரீ பூண்டி மகான் திவ்ய அருளால் திருஞானத்திற்கு திருமணம் நடந்தேறியது.

என் நண்பரான சொக்கலிங்கமும் ஸ்ரீ பூண்டி மகானின் பக்தராவார். கிராம சேவக் ஆக வேலை செய்து கொண்டிருந்தார். அவர் பர்வத மலைக்குச் செல்லலாம் என்று அழைத்தார். ஸ்ரீ பூண்டி மகானின் ஆசியை பெற்று நான், சொக்கலிங்கம், விஜயரங்கன், வேறு சிலருடன் சேர்ந்து இரவு ஒன்பது மணிக்கு மலைமேல் சென்று தரிசனம் செய்து கொண்டோம். நாங்கள் திரும்பிவர தாமதமாகி விட்டது. மறுநாள் காலையில் சொக்கலிங்கம் வேலைக்குச் செல்லமுடியவில்லை. அன்றே வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கிராம சேவக் அனைவரையும் அழைத்து மாவட்ட ஆட்சியர்

கூட்டம் நடத்தினார். சொக்கலிங்கம் எப்போதும் சுவாமிகளின் நினைவில் இருப்பார். மீண்டும் மீண்டும் எப்போதும் சுவாமியிடமே சுற்றிக் கொண்டிருப்பார். சொக்கலிங்கத்திற்கு பதிலாக ஸ்ரீ பூண்டி மகான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அன்று சொக்கலிங்கத்திடம் யார் பேசினாலும் பேசவில்லை. மறு நாள் சொக்கலிங்கம் அலுவலகத்திற்கு சென்றார். அவர் நண்பர் **"நேற்று கூப்பிட்டாலும் பதிலேதும் பேசாமல் போய் விட்டீர்களே ஏன்?"** என்று கேள்வி கேட்டார். சொக்கலிங்கம் அவர்களுக்கு எதுவும் புரியவில்லை. நானும் கலசபாக்கத்தில் என் அலுவலகத்திற்குச் சென்றேன். வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் என்னைப் பார்த்து **"உன் நண்பர் கூட்டத்துக்கு நேற்று சரியாக வந்தாரு"** என்று கூறினார். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. மாலையில் சொக்கலிங்கம் ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து கொண்டு நின்றவுடன் **"நம்ம வேலை நாம பார்க்கணும். சுத்திக்கிட்டே இருந்தா என்னாகும். நம்ம வேலையில் கண்ணும் கருத்துமா இருக்கணும்பா"** என்று கூறினார்.

உலக விஷயங்களில் இருந்தாலும் தன்னிலை அறிந்தவருமான ஆத்ம சொரூபத்தை தெரிந்தவரும் ஸ்ரீ பூண்டி மகானின் அற்புத லீலையை அறிந்து கொண்டேன்.

நான் ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று **"சுவாமி அனைவரும் ஆலயம் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். எப்படிக் கட்டுவது?"** என்று கேட்டேன். **"நமக்கு நாலு பக்கம் கருங்கல் தூண், நாலு பக்கம் வாசற்படி"** என்று கூறினார். அந்த சமயத்தில் சுவாமிகள் கூறியவார்த்தைகளின் பொருளை உணரவில்லை. ஸ்ரீ சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்கு நான்கு பக்கம் வாசற்படியும், கருங்கல் தூண்களும் இருக்கும் என்று முன்பே கூறினார் என்று பிறகு அறிய முடிந்தது.

தாங்கல் கிராமத்திலுள்ள பள்ளிக் கூட ஆசிரியப் பெண்மணி அவர் குழந்தைக்கு உடல்நலம் சரியில்லை என்று மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று காண்பித்து நேராக பள்ளிக்கு வந்தார். வீட்டிற்குச் செல்ல நேரம் இல்லாததால் அங்கேயே தூளி கட்டி கைக் குழந்தையை படுக்க வைத்து வகுப்பில் பாடம் நடத்தும் சமயத்தில் பள்ளி இயக்குநர் ஆய்வுக்கு வந்தார். அங்கிருந்து நேராக என்னிடம்

வந்து குழந்தையை அங்கேயே தூளியில் போட்டு பாடம் நடத்துகிறார்கள். நீ என்ன வேலை செய்கிறாய் என்று அவர் அதிகாரத்தை காண்பித்தார். நான் மனதில் ஸ்ரீ பூண்டி மகானை நினைத்தேன். மறு நொடியில், **"சரி விட்டு விடு"** என்று கூறி சென்று விட்டார்.

நான் ஸ்ரீ பூண்டி மகானுக்கு பூக்கள் பறித்து வந்து மாலை தொடுப்பேன். ஒரு சில சமயங்களில் சுவாமிகளின் ஆடைகளை சுத்தப்படுத்தும் சந்தர்ப்பமும் கிடைத்தது. ஸ்ரீ பூண்டி மகானின் மலம், பேரீச்சம்பழக் கொட்டை உருவில் கருப்பாக கரிபோல் இருக்கும். அந்த சேவையை அதிர்ஷ்டமாக நினைத்து போட்டியிட்டுச் செய்வோம்.

ஸ்ரீ பூண்டி மகானின் ஆசி பெற்று எந்த வேலைக்குச் சென்றாலும் வெற்றி நிச்சயம். நேரமில்லை என்று சென்று விட்டால் அது அவர்கள் அதிர்ஷ்டம். நான் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்யாமல் வேலைக்குக் கூட செல்ல மாட்டேன். அப்படி சென்றால் அன்று நிம்மதி இருக்காது. ஏதோ சிரமமும், வெறுப்பும், ஏற்படும். அச்சமயத்தில் சிறிது நேரம் மௌனமாக ஸ்ரீ பூண்டி மகானை மனதில் நினைத்தால் எல்லாம் சரியாகிவிடும். இப்போதும் என் அனுபவத்தில் இப்படி நடக்கின்றது.

ஸ்ரீ பூண்டி மகானுக்கு அன்பர்கள் அளித்த காணிக்கைகள் பின்புறம் அறையில் குவியலாக சேர்ந்து விட்டது. சுவாமி யாரையும் தொடவிடமாட்டார். ஒரு நாள் கோடைக்காலத்தில் பிரசாத குவியலில் நெருப்பு பற்றிக் கொண்டு புகை உண்டானது. அன்பர்கள் அனைவரும் வீடு நெருப்பு பற்றிக் கொள்ளும் என்று பயந்தார்கள். ஸ்ரீ சுவாமியிடம் சொன்னவுடன் கேட்டுக் கொண்டார். அந்தக் குவியலில் இருந்து நெருப்பு மேலே வராமல் அவை அப்படியே சாம்பலாகி விட்டது. பக்கத்திலிருந்த மரக்கதவு கூட கரியாகவில்லை. எந்தவித ஆபத்தும் நேரவில்லை. இது நெருப்பையே உணவாகக் கொள்பவரான ஸ்ரீ பூண்டி மகானின் அற்புத லீலையாகும்.

ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதி அடைந்த பத்து நாட்கள் கழித்து நான் அலுவலகத்திற்கு கிளம்பி செல்லும் சமயத்தில் எப்போதும்

போல் திண்ணை முன்பு சைக்கிளை நிறுத்தி வணங்க வேண்டும் என்று திண்ணைக்கருகில் செல்ல, வாசற்படி அருகே வந்தேன். இரண்டு திண்ணையின் மேலும் கீழும் நிறைய சிவலிங்கங்கள் இருந்தன. ஸ்ரீ பூண்டி மகான் பால்குடத்தை கையில் பிடித்துக் கொண்டு அனைத்து சிவலிங்கங்களுக்கும் அபிஷேகம் செய்து கொண்டிருக்கிறார். நான் சொல்லமுடியாத வியப்புடன் என்னையும் அறியாமல் வணங்கி நின்றேன். "**இப்படி வாப்பா**" என்று கூப்பிட்டார் சுவாமி. கால் வைக்க இடம் இல்லை. "**எப்படி வர்றது சுவாமி? எல்லாம் லிங்கமா இருக்கு சுவாமி**" **என்றேன்.** "**கால் எடுத்து வைத்து வா**" என்று கூறினார். நான் மிக முயற்சி செய்து உள்ளே சென்றவுடன் பூண்டி மகான் என் தலையைப் பிடித்துச் "**சொல்லிக்கோ!**" என்று மந்திர உபதேசம் செய்தார். ஸ்ரீ பூண்டி மகான்உயிருடன் இருக்கும்போது எப்படி இருந்தாரோ அப்படி காட்சியளித்து உபதேசம் அளிக்கவே என் மகிழ்ச்சிக்கு எல்லையில்லாமல் போய்விட்டது. ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதி அடைந்தாலும் எப்போதும் நம்முடன் இருக்கிறார் என்ற பாவனை தோன்றியது.

நான் ஸ்ரீ பூண்டி மகானிடம் அலுவலகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கூறுவேன். ஒரு நாள் ஸ்ரீ சுவாமியின் சன்னதியில் நின்று கொண்டிருந்தேன். "**வருபவன் குருடன். இங்கு இருக்கிறவன் திருடன்**" என்று கூறினார் பூண்டி மகான். அவர் பரிபாஷையில் கூறினால் பொருள் புரிந்து கொள்வது அவ்வளவு எளிதாக இருக்காது.

ஸ்ரீ பூண்டி மகான்ஆன்மீகமாக எத்தனையோ விஷயங்களைக் கூறினார். எப்படி நடந்து கொள்ள வேண்டும். எப்படி பண்ண வேண்டும் என்று போதித்தார். எனக்கு இன்னும் சமயம் வரவில்லை. ஸ்ரீ பூண்டி மகான் எப்போது அருள் தருகிறாரோ அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். ஆன்ம சொரூபத்தை அறிந்து கொண்ட ஸ்ரீ பூண்டி மகானின் திவ்ய அருளுக்காக எதிர்பார்த்து ஸ்ரீ பூண்டி மகானின் நினைவில் வாழ்க்கை நடத்தி வருகிறேன்.

**நேர்காணல்: 28**
**01.11.2005, பூண்டி**

**திருஞானம்,** வயது: 64, பூண்டி.

*நான் சிறுவயதில் பாலப்பாடி என்னும் கிராமத்தில் மூன்றாவதோ, நான்காவதோ படிக்கும் சமயத்தில் காந்தியடிகளை கொலை செய்தார்கள். 1957ல் நான் மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட்டி கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் தச்சுப் படிப்பை (பிளாக்சுமித்) முடித்துக் கொண்டு 1959ல் கலசபாக்கம் பஞ்சாயத்தில் ஒரு வருட பயிற்சியை முடித்துக் கொண்டு வேலையும் அங்கேயே கிடைத்தது. என் மாத சம்பளம் ரூ.77 ஆக நிர்ணயித்தார்கள். நான் கலசபாக்கத்தில் இருக்கும்போது நான் பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். ஒவ்வொரு சமயம் நான் பணி காரணமாக வெளியில் செல்லும் போது வழியில் பூண்டி மகான் தென்பட்டால் அவர் பின்னாடியே நடந்து செல்வேன். ஸ்ரீ பூண்டி மகான் பஞ்சகோசங்களைக் குறித்து பஞ்சேந்திரியங்களைப் பற்றியும் விவரமாக விளக்கிக் கூறுவார். எது நித்தியம். எது அநித்தியம் என்பதைத் தெளிவாக அறிந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறுவார். கண்ணுக்குத் தென்படுவது எல்லாம் அநித்தியம் என்று கூறுவார்.*

*ஸ்ரீ பூண்டி மகான்போதித்தது எல்லாம் உடலுக்கு சம்பந்தமாக இருக்காது. ஆத்மாவுக்கு சம்பந்தமானதாக இருக்கும். ஆத்மவிசாரணை செய்யும் போது சுவாமிகள் கூறுவது புரியும். ஸ்ரீ பூண்டி மகான்என்றும் வெளிப்படையாக உபதேசங்கள் அளித்தது இல்லை.*

*தங்கம் என்ற அன்பர் ஸ்ரீ பூண்டி மகானிடம்* **"சுவாமி! ஞானத்துக்கு கல்யாணம் செய்யணும்"** *என்று கூறினார்.* **"என்னப்பா ஏடாகூடம் பிடித்தவன்பா நம்ம பேச்சை எங்க கேட்கப் போகிறான்"** *என்றார் சுவாமி.* **"வயசாகிப் போகிறது. நாம பார்த்து ஏதாவது செய்யணும் அல்லவா"** *என்றதற்கு* **"ஆமாம்"** *என்றார் சுவாமி. பெண் எங்கு பார்க்க வேண்டும்*

என்று கேட்டதற்கு திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் போங்க. அமையும் என்றார். திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் பெண் பார்த்தோம். ஜாதகம் வேண்டும் என்றார்கள். அவர்களிடம் ஸ்ரீ பூண்டி மகான் "**நீங்க பெண்ணை கொடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். நல்லா இருப்பாய்**'' என்று கூறியவுடன் திருமணத்திற்கு சம்மதித்தார்கள். ஸ்ரீ பூண்டி மகான்திவ்ய அருளால் எங்கள் திருமணம் நடந்தது.

எனக்கு மகன் பிறந்தபோது "**சுவாமி என்ன பெயர் வைக்கச் சொல்றீங்க**" என்று கேட்டேன். தாமோதர் என்ற பெயர் வைக்கச் சொன்னார். ஒரு மகனுக்கு மட்டும் பெயர் வைத்தார்.

நான் தினந்தோறும் வேலைக்குச் செல்லும்போது ஸ்ரீ பூண்டி மகானை வணங்கி, "**என்னய்யா, புள்ளக் குட்டிக்காரன். கிழக்குப் பக்கமா போய்கிட்டு இருக்கேன். மறந்திடாதே**'' என்று கூறி எந்த திசையில் செல்கிறேனோ அந்த திசையைச் சொல்லி விட்டு செல்வேன். "**என்னப்பா ரோடுல போய் ரோட்ல வா**" என்று ஆசிகள் வழங்குவார். ஒரு நாள் வேலைக்கு செல்வதற்கு முன்பு வணங்கி நின்றவுடன், "**தார் ரோட்ல போயி தார் ரோட்ல வா**" என்றார்.இன்னொரு நாள் சென்ற போது, "**ரோட்ல ஜல்லி எல்லாம் இருக்குப்பா**" என்று கூறினார். ஒரு சமயம் ஸ்ரீ பூண்டி மகான் "**என்னாப்பா நான் உள்ளேயே இருக்கிறேன் இல்லையா. உனக்கே தெரியுது இல்லையா**'' என்று கூறினார் பூண்டி மகான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகக் கூறுவார். சுவாமிகளின் பரிபாஷையை பொருள்புரிந்து கொள்வது கடினமாகும்.

ஒரு நாள் பனைமரம் அறுத்து வர வேண்டும் என்று ஆற்றின் கரைக்கு சென்று மரத்தை அறுக்கும் போது வேறு திசையில் சாய்ந்து இருக்கும் மரங்கள் கூட ஆற்றின் கரையின் மேல் விழுந்தது. ஒரு மரத்தை கடைசி வரை வாளால் அறுத்து வாளை வெளியே எடுத்து விட்டோம். ஆனால் மரம் அப்படியே நின்று கொண்டிருந்தது. "**என்னய்யா எந்த பக்கமோ ஒரு பக்கம் தள்ளு. நாங்க எங்க ஓடறது**" என்று மனதில் நினைத்த மாத்திரத்தில் வடகிழக்கு பக்கம் மரம் சாய்ந்து விட்டது. ஸ்ரீ பூண்டி மகான்சன்னதியில் ஒவ்வொரு நொடியும் புது அனுபவமே.

எனக்கு சித்ரா பௌர்ணமியன்று சேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது. நான் ''**சுவாமி எது இருந்தாலும் நானும் நீங்களும் மட்டுமே பேச வேண்டும். நம்மிடையில் வேறு யாரும் வேண்டாம். நீங்களே நீதிபதி**'' என்று கூறினேன். நான் பூண்டி சுவாமியிடம் பேசும் சமயத்தில் எங்கள் இடையில் யார் தலையிட்டாலும் அங்கீகரிக்க மாட்டேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு எல்லா உயிர்களின் மீதும் இரக்கம் (ஜீவ காருண்யம்) அதிகம். காரணம் அவர் உடலை எறும்பும், புழுக்களும் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் எதையும் கண்டு கொள்ள மாட்டார். யாராவது அவற்றை அப்புறப்படுத்த நினைத்தாலும் ஒத்துக் கொள்ள மாட்டார்.

நான் ஒரு நாள் ஐந்து ரூபாய் நோட்டுக்கு சில்லறை கேட்டேன். "**இரண்டு ரூபாய் எடுத்துக்கிறேன்**" என்றார் சுவாமி. "**என்னய்யா நீயே இரண்டு ரூபாய் போட்டுக் கொடு**" என்று கேட்டேன். "**இல்லைய்யா. நீயே இரண்டு ரூபாய் கொடு**" என்று மீண்டும் கேட்டார் சுவாமி. "**சரி. உனக்கு வாங்கிக் கொள்கிற பழக்கம் போகாது. என் நோட்டு எனக்கு கொடுத்திடு**" என்று கேட்டேன். பிறகு சில்லறை கொடுத்தார். "**ஏன் சுவாமி இந்த நோட்டெல்லாம் வாங்கிக் கொள்கிறீர்கள். எதற்கு**'' என்று கேட்டேன். "**என்னய்யா. எனக்கு அக்கறையும் இல்லை. அவசரமும் இல்லை**" என்றார். "**வேண்டாம் என்றால் எதற்கு சுவாமி வாங்கிக்கிறீங்க**" என்று கேட்டேன். ''**பக்தர்கள் நோட்டை மடித்து கைவிரல் மத்தியில் வைக்கறாங்க. ஆனவங்களுக்கு**" என்றார் சுவாமி.

ஒரு நாள் நான் ஸ்ரீ பூண்டி சுவாமி சன்னதியில் இருந்தேன். ஸ்ரீ பூண்டி மகான்திண்ணை மேல் சுவற்றின் பக்கம் அமர்ந்து கொண்டு ஒரு கையை முன் புறமாகவும், ஒரு கையை பின்புறமாகவும் வைத்து "**ஊம்**" என்றார் கையை பலமாகத் திருப்பியவாறு. அச்சமயத்தில் ஒரு அன்பர் சுவாமியிடம் வந்து "**சுவாமி! சுவாமி!**" என்று அழைத்தார். ஸ்ரீ பூண்டி மகான் "**என்னய்யா அவர் லாரி விழுந்திடுச்சு என்று எழுப்பக் கூப்பிடறாரு. நான் லாரியை எழுப்பறதா, நீ கூப்பிடறதை கேக்கறதா. சொல்லு**" என்றார். அந்த அன்பருக்கு சுவாமி என்ன கூறுகிறார் என்று புரியவில்லை. எங்கும் நிறைந்து இருக்கும் ஸ்ரீ பூண்டி மகான் தன்

பக்தர்களின் யோக க்ஷேமங்களை ஒவ்வொரு நொடியும் கண்காணித்துக் கொண்டு இருக்கிறார் என்றும், நம்பியவர்களை கண் இமைபோல் காப்பாற்றுகிறார் என்றும் புரிந்து கொண்டு மௌனமாக மனதில் வணங்கினேன்.

**நேர்காணல்: 29**
**02.11.2005, பூண்டி**

**பண்டிட் கோவிந்தசாமி**, வயது: 69, கொரால்பாக்கம் கிராமம், போளூர், தாலுக்கா.

*நான் முதன்முறையாக காங்கனூர் சண்முகத்துடன் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். அதன் பிறகு கூட அவருடன் சேர்ந்து வந்து பலமுறை சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். என் அந்தரங்கத்தில் உள்ள கோரிக்கையை, குடும்ப கஷ்டங்களை சுவாமிகளுக்கு சொல்லிக் கொள்வேன். சுவாமிகள் திருநீறு வைத்து குங்குமம் வைத்து* "**ஊம். நல்லது நடக்கும். சென்று வா**" *என்று ஆசி வழங்கினார்.*

*ஒரு கிராமத்திலிருந்து நான்கைந்து பேர் சுவாமி தரிசனத்திற்கு வந்தார்கள். அச்சமயத்தில் நானும் அங்கு இருந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி,* "**என்னாப்பா இராத்திரி எதுக்கு அவங்க சண்டை போடறாங்க. அச்சாணி இருக்கிற வண்டியில நல்ல மாடு ஒண்ணா சேர்ந்து ஒற்றுமையா போனா தானே போய் சேர வேண்டிய இடத்துக்குச் சேரலாம். எதுக்குப்பா அப்படி சண்டை போடறது**" *என்றார்.அந்த சமயத்தில் அங்கு நின்றிருந்த பக்தர்கள் 20 மைல் தூரத்தில் தங்களுக்குள் வாக்குவாதம் செய்து கொண்டு அடித்துக் கொண்ட விஷயம் சுவாமி எடுத்துச் சொல்லவே செய்த தவற்றை உணர்ந்து சுவாமி பெரிய ஞானி என்று அறிந்து வணங்கிச் சென்றனர்.*

*நான் வாடகை வீட்டில் இருந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சொந்த வீடு வேண்டுமென்று வேண்டினேன்.* "**கிடைக்கும் போ**" *என்றார். என் நண்பனின் மூலமாக 3000 ரூபாய்க்கு ஒரு இடம் வாங்கி வீடு கட்ட ஆரம்பித்தேன். சிறிது சிறிதாக வேலைகள் செய்து கொண்டு வந்தேன். மேல் தளம் (மூர்ர்ச்) போட எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டேன். 5000 ரூபாய் பணமும், 50 மூட்டை சிமெண்ட்டும் இருந்தால் மேல் தளம் போட முடியும் என்று ஸ்ரீ*

சுவாமிகளிடம் சொல்லிக் கொண்டேன். “**கிடைக்கும் போ**” என்றார் சுவாமி. நான் வீட்டிற்குச் செல்வதற்குள் என் தூரத்து உறவினர் மாமா முறை ஒருவர் கையில் பழைய பை வைத்துக் கொண்டு திண்ணை மேல் அமர்ந்து கொண்டு எனக்காக எதிர்பார்த்து கொண்டிருந்தார். நான் அவரிடம் பேசிய உடனே என் பின்னாடியே வீட்டினுள் வந்து “**வேர்க்கடலை, வெல்லம் விற்ற பணம் 90,000 ரூபாய் என்னிடம் இருக்கிறது. இந்தப் பணத்தை வைத்துக் கொள். நான் தை மாதம் வீடு கட்ட நினைத்துள்ளேன். அப்போது தந்தால் போதும்**” என்றார். நான் ஸ்ரீ பூண்டி மகானிடம் காலை ஆறு மணியளவில் கேட்டேன். ஏழரை மணிக்கெல்லாம் எனக்கு பணம் கிடைக்குமாறு செய்த சுவாமிகளின் திவ்ய லீலைகளை என்னவென்று சொல்லுவது குடிக்க பால் வேண்டும் என்று கேட்டால் பாற்கடலையே என் முன்பு கொண்டு வந்து உனக்கு எவ்வளவு வேண்டுமானாலும் குடி என்பது போல் செய்தார். கருணைக் கடல், கடவுள் அவதாரமானவர் ஸ்ரீ பூண்டி மகான்.

அந்தரங்கத்தில் எண்ணங்கள் இரண்டாக இல்லாமல் பரிபூரணமாக நம்பியவர்களுக்கு ஸ்ரீ பூண்டி மகான் தவறாமல் உதவி செய்வார். எதைக் கேட்டாலும் செய்யக் கூடிய எல்லா வல்லமையும் பொருந்தியவர். மனம், சொல், செயல் (திரிகரணசுத்தி) எல்லாம் ஒன்றாக இருக்கும். சரணடைந்தவர்களுக்கு ஸ்ரீ பூண்டி மகான்அனுக்கிரகம் அனைத்து வேளைகளிலும் இருக்கும் என்பது தெளிவாக தெரிகின்றது.

நேர்காணல்: 30
நாள் 02.11.2005, பூண்டி

**திருமதி கஸ்தூரி, வயது: 60க்கு மேல், பாடியநல்லூர், சென்னை.**

*என் அண்ணன் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டார். என் அண்ணன் திருமணத்திற்கு முன்பாக ஸ்ரீ பூண்டி சுவாமி,* **"உனக்கு பர்வதத்தில் பெண் அமையும்"** *என்று சொன்னாராம். என் அண்ணனுக்கு பர்வத குமாரியோடு திருமணம் நடந்தது. என் அண்ணி பெயரை நகைச் சுவையாக கூறினார் என்று தெரிந்து கொண்டோம். என் பையன் திருமணத்திற்கு என் அண்ணன் சுவாமியிடம் கேட்டார்.* **"கடற்கரையில் இருக்கிறாள் மருமகள்"** *என்று கூறினார் சுவாமி. என் மருமகள் பிறந்த ஊர் சென்னையில் கடற்கரை அருகிலுள்ள கந்தன்சாவடி. ஸ்ரீ பூண்டி மகான்சொன்னபடியே நடந்தது.*

*ஒரு துறவி எங்கள் வீட்டிற்கு வந்தார். அந்த சமயத்தில் என் சிறிய மகளுக்கு உடல்நலம் சரியில்லை. அத்துறவி ஒரு சொம்பு தண்ணீர், இரண்டு ஊதுவத்திகளை வாங்கி வருமாறு கூறினார். நான் வாங்கி வந்து தந்தேன்.* **"நல்லாயிடும் பயப்படவேண்டிய அவசியமில்லை"** *என்று கூறி ரூ.50 தட்சணையாகக் கேட்டார்.* **"உங்களுக்கு தெரியாதது என்ன உள்ளது சுவாமி, என்னிடம் பணமில்லை"** *என்று கூறினேன்.* **"வண்ணான் மூட்டையில் துணி இருக்கும் ஆனால் அவன் போட்டுக்கறத்துக்கு துணி இருக்காது. அப்படிதான் உன் கதையும்"** *என்றார் சுவாமி. இவர் இப்படி ஏன் சொல்கிறார் என்று ஆலோசித்தேன்.* **"சரி அரிசியாவது கொடும்மா"** *என்று கேட்டார். நான் அரிசி எடுத்து வந்து கொடுத்தேன்.* **"இந்த அரிசி மூன்று பேர் சோறு சாப்பிட சரியா போயிடும். வாங்கிக்கவா, கொடுத்திடவா"** *என்று கேட்டார்.* **"வாங்கிக்கோங்க"** *என்று சொன்னேன். என் சிறிய மகளுக்கு திருமணம் நடந்து பல நாட்கள் ஆனாலும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை.* **"உனக்கு எந்த குழந்தை வேண்டும் அம்மா"?** *என்று என் மகளிடம் கேட்டார் அந்தத் துறவி. மகன்*

வேண்டுமென்று சொல்லவே, "**மகன் வேண்டாம். மகள் பிறந்தால் நன்றாக இருப்பாய்**" என்று ஆசீர்வதித்து சென்றார். என் மகளுக்கு உடல்நலம் சரியானது. ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்த அனுஷ நட்சத்திரத்தில் மகள் பிறந்தாள்.

என் அண்ணனிடம் வீட்டிற்கு வந்த துறவி கூறியவற்றைச் சொன்னேன். "**அப்படி பரிபாஷையில் பேசியவர் ஸ்ரீ பூண்டி மகானே. வேறு யாரும் அப்படி பேசமாட்டார்கள்**" என்றார். அப்போது தான் ஸ்ரீ பூண்டி மகானின் மகிமை தெரிந்தது. பதினெட்டு வருடங்களாக குருபூஜையன்று வந்து சுவாமிகளை தரிசனம் செய்து செல்கிறேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளை நான் நேரிடையாக தரிசனம் செய்து கொள்ளவில்லை. பனிரெண்டு வருடத்திற்கு முன் துறவி உருவத்தில் வந்ததால் அந்த சமயத்தில் நான் தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும் சுவாமிகளை தரிசித்துக் கொண்ட மன திருப்தியை அளித்தார்.

**நேர்காணல்: 31**
**02.11.2005, பூண்டி**

**பரமசிவம்**, வயது: 73, மகமாயி திருமணி வந்தவாசி.

*ஸ்ரீ பூண்டி மகான் திண்ணை மேல் நிரந்தரமாக அமர்ந்தபிறகு தரிசனம் செய்து கொண்டேன். என் இருபத்தியேழு வயதில் என் மனைவி இயற்கை எய்தினார் . என் தாயார் எனக்கு இரண்டவது திருமணம் செய்ய வேறு இருவருடன் சேர்ந்து நார்த்தாம்பூண்டி கிராமத்திற்கு பெண் பார்க்கச் சென்றார். அந்த கிராமத்தில் ஒருவர்* **“ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொள்ளுங்கள். சுவாமியிடம் உங்கள் பிரச்சினைகளைக் கூறாதீர்கள். ஒரு தேநீர் சமர்ப்பித்துக் கொள்ளுங்கள். சுவாமிகள் அவர் வரலாற்றை கூறி உங்கள் வாழ்க்கைக்கு வழி காட்டுவார்”** *என்றார்.*

*நாங்கள் அனைவரும் சேர்ந்து நார்த்தாம்பூண்டியிலிருந்து நடந்தே பூண்டிக்கு வந்தோம். நால்வரும் தேநீர் வாங்கி வந்தோம். ஸ்ரீ மகானுக்கு சமர்ப்பித்து வணங்கினோம். நான் ஒரு சிகரெட்டை சுவாமியின் கையில் வைத்து பற்ற வைத்தேன். அனைவரும் சுவாமியின் திண்ணைக்கு அருகில் கீழே அமர்ந்து கொண்டோம்.* **“ஆற்றில் உட்கார்ந்தேன். வெள்ளம் போச்சு. தண்ணீர் எல்லாம் குறைந்த பிறகு எழுந்து சென்று பக்கத்துத் திண்ணை மேல் உட்கார்ந்தேன். அந்த வீட்டில் சூடா கூழ் கலந்து கொடுத்தார்கள். குடிச்சேன். சுபம். சீக்கிரம் முடியும். செல்லு”** *என்று கூறி ஆசீர்வதித்தார்.*

*பெண்ணைப் பார்த்து நிச்சயத் தாம்பூலம் மாற்றிக் கொள்வதற்கு முன்பு என் தந்தை பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி மகானின் ஆசிகளைக் கேட்டார்.* **“நிச்சயத் தாம்பூலம் மாற்றிச் செல்லும்போது இரண்டு மாடு பிடித்து கொண்டு போய் வாழுங்க”** *என்று கூறி எங்களுக்கு வாழ்க்கை நடத்த வழி காண்பித்தார். நான் ஸ்ரீ பூண்டி மகானின் அருளால் இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன். இரண்டு ஆண், இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்தனர்.*

*ஒரு நாள் கனவில் சொக்கலிங்கம் அவர்கள் வேலூரம்மா மூலமாக 90 செண்ட் நிலம் எனக்கு வாங்கித் தந்ததாகவும், நான் சுவாமியிடம்* "**எதுக்கு சுவாமி அவர் பணத்தை எடுத்து வந்து நம்ம வீட்டில போடச் சொன்னீங்க. வேண்டாம் சுவாமி**" *என்று கூறியதற்கு* "**நீ போ. அது அவருடையதும் இல்லை. உன்னுடையதும் இல்லை**" *என்று பூண்டி சுவாமி சொன்னதாகவும் கனவு கண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி அனுக்கிரகத்தால் 90 செண்ட் நிலம் வந்தது.*

*மின் இணைப்புக்காக விண்ணப்பம் செய்த சில நாட்களுக்குப் பிறகு கிணற்றின் அருகே கம்பம் நட்டு மறுநாள் மின் இணைப்பு தருவதாகச் சொன்னார்கள். அன்று ஸ்ரீ பூண்டி மகானை தரிசித்து நடந்தவற்றைக் கூறினேன்.* "**மூன்றாவது மாதம் வரும்**" *என்றார் சுவாமி. மின்வாரிய அதிகாரிகள் மறுநாள் மின் இணைப்பு தருவதாகச் சொன்னார்களே, சுவாமி மூன்றாவது மாதம் என்கிறாரே என்று நினைத்துக் கொண்டே வீட்டிற்குச் சென்றேன். ஸ்ரீ பூண்டி மகான்சொன்னபடியே மூன்றாவது மாதம் மின் இணைப்பு கிடைத்தது. நான் அடிக்கடி வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து செல்வேன். சில சமயங்களில் சுவாமிகளை கேட்டுப் பயிர் செய்வேன். விளைச்சல் நன்றாக வரும்.*

*ஸ்ரீ பூண்டி மகானின் மஹாசமாதிக்குப் பிறகு நான் குருபூஜையன்று வந்து கொண்டிருக்கிறேன். மனதில் எந்த கள்ளம், கபடம் இல்லாமல் இருக்க வேண்டும். பஞ்சமாபாதகங்களைச் செய்யாமல் இருக்க வேண்டும். மகான்களை தரிசித்துக் கொள்ள வேண்டும். சரியான வழியில் நடக்க வேண்டும் என்று இன்றும் ஸ்ரீ பூண்டி மகானை எப்போதும் வேண்டிக் கொண்டிருக்கிறேன்.*



ஸ்ரீ பூண்டி சுவாமியின் சமாதி கோவில்



ஸ்ரீ பூண்டி சுவாமியின் சன்னதி





ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த வில்வாரணி நட்சத்திரக்கோவிலின்
தெப்பக்குளம் படி

**நேர்காணல்: 32**
**03.11.2005, பூண்டி**

**முத்து**, வயது: 67, திண்டிவனம்.

*1970ல் நான் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். பர்மாவிலிருந்து வந்த நாராயணசாமியோடு நான் நெருக்கமாகப் பழகி வந்தேன். ஒரு சைக்கிளைத் திருடிவிட்டார்கள் என்று பர்மாவில் இருந்து வந்த நாராயணசாமி என்ற பெயருள்ள பத்து பேரை காவலாளிகள் பிடித்துச் சென்றனர். அவர்களில் என் நண்பரும் இருந்தார். எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் கவலையோடு படுத்துக் கொண்டேன். என் நண்பர்கள் கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தன், வீரராகவன் அனைவரும் என் வீட்டிற்கு வந்து,* **"படுத்துக் கொண்டே இருந்தால் எப்படி? எழுந்து வா"** *என்று கூப்பிட்டார்கள்.* **"நீங்கள் செல்லுங்கள்"** *என்று வெறுப்புடன் கூறினேன். வந்தவர்களில் ஒருவர் சொத்து ஜாமீன் தருவதாக கூறினார். மற்றொருவர் ஜாமீன் தருவதாகக் கூறினார். என்ன உதவி வேண்டுமென்றாலும் செய்வதாகக் கூறினார்கள். என் மனைவி* **"அவர்கள் பலவந்தமாக கூப்பிடுகிறார்கள். சென்று வாருங்கள்"** *என்றார். அதற்குள் பிடித்தவர்களை காவலாளிகள் திருவண்ணாமலைக்கு அழைத்துச் சென்றனர். நாங்கள் கிளம்பி திருவண்ணாமலை காவல் நிலையத்திற்கு செல்வதற்குள் அவர்களை திருச்சி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டதாக கூறினார்கள். எனக்கு சொல்ல முடியாத வருத்தம் ஏற்பட்டது.*

*என்னுடன் வந்த வீரராகவன் ஸ்ரீ பூண்டி சுவாமியின் பக்தர். சுவாமிகளை கேட்டால் தெரியும் என்று கூறினார். எனக்கு நல்ல அபிப்ராயம் இல்லாததால்* **"இந்த காலத்தில் சுவாமிகள் வேண்டாம்"** *என்றேன்.* **"இப்போது இப்படி தான் பேசுவே. நீயே பூண்டிதாசன் ஆவாய். நீ வா"** *என்று வற்புறுத்தி அழைத்து வந்தார் வீரராகவன். அவர்கள் சென்று ஸ்ரீ பூண்டி மகானை வணங்கினார்கள். சுவாமிகளுக்கு*

*எதிரிலுள்ள மண்டபம் கட்டும் இடத்தில் நான் ஒரு தூண்மீது சாய்ந்து கொண்டு ஸ்ரீ பூண்டி மகானை நோக்கிப் பார்த்து கொண்டிருந்தேன். பணம் இருக்கிறவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறார், ஏழைகளிடம் எப்படி பழகுகிறார் என்று யோசனை செய்து கொண்டு சுமார் ஒன்றரை மணி நேரம் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். அனைவரும் சுவாமிகளை வணங்கிய பிறகு சுவாமியின் படத்தை வாங்கிக் கொள்ளுமாறு அங்கிருந்த அன்பர்கள் கூறினார்கள். நான் கை, கால்களை கழுவிக் கொண்டு வரிசையில் காத்திருந்தேன். என் முன்பு மூன்றுபேர் இருந்தனர். ஸ்ரீ பூண்டி மகான் கையில் திருநீற்றை எடுத்து வைத்திருந்தார். என் முன் இருந்த மூவருக்கும் திருநீறு வைக்கவில்லை. தட்டிலிருந்து எடுத்து கொள்ளச் சொன்னார். நான் சுவாமிகளின் பாதங்களை வணங்கினேன். எனக்கு திருநீறு வைத்தார். பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி* **''நீ என்ன அதிர்ஷ்டம் பண்ணாயோ. எல்லாரும் சுவாமிகள் திருநீறு வைப்பாரா என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் உனக்காக சுவாமி கையில் திருநீற்றை வைத்துக் கொண்டு எதிர்பார்த்து இருந்தார். என்ன புண்ணியம் பண்ணாயோ!''** *என்றார். நான் மீண்டும் ஸ்ரீ பூண்டி மகானின் திருவடிகளை பிடித்துக் கொண்டு பக்தியுடன் என் மனதிலிருந்த துன்பத்தைக் கூறினேன்.* **"நடக்கும் போ"** *என்றார் பூண்டி மகான்.*

*சரியாக அதே தருணத்தில் திருச்சிக்கு அழைத்துச் சென்ற காவலாளிகள் அவர்களை விசாரணை செய்கின்றனர். என் நண்பர் எட்டாவது ஆளாக நின்றிருந்தார். என் நண்பனுக்கு முன் இருந்தவர்களை காவலாளிகள் விசாரணை செய்வதை பார்த்து பயத்துடன் நடுங்கி விட்டார். அவரை கவனித்த காவல் அதிகாரிகள் பக்கத்தில் நிற்க வைத்தனர். தன்னைத்தான் திருடனாக சந்தேகப்படுகிறார்களோ என்று நினைத்து மேலும் பயந்து விட்டார். அனைவரையும் விசாரணை செய்த பிறகு காவல் அதிகாரிகள் என் நண்பனை காண்பித்து* **''இவரை யார் அழைத்து வந்தார்''** *என்று கேட்டார்கள். அங்கேயிருந்த காவலாளி நானே என்று கர்வத்துடன்*

முன் வந்தார். "**புத்தி இருக்கா உனக்கு. அவர் கை, கால் எப்படி நடுங்குது பார். அவரை அழைத்து வந்தாயே. முதலில் அவருக்கு உணவு வாங்கிக் கொடுத்து இரயிலுக்கு பயணச்சீட்டு வாங்கித்தந்து இரயில் ஏற்றி விட்டு வந்து என் கிட்ட சொல்**" என்று ஆணையிட்டவுடன் என் நண்பரை விட்டு விட்டனர். என் நண்பர் திண்டிவனம் அடைந்தவுடன் நான் சென்று சந்தித்தேன். ஸ்ரீ பூண்டி மகானின் திருவடிகளை சரணடைந்தேன். மறுநொடி ஸ்ரீ பூண்டி மகானின் அருளால் என் நண்பர் விடுதலையாகி வந்தார் என்று அறிந்து கொண்ட நான் "**பகவான் ஸ்ரீ பூண்டி சுவாமி கலியுக தெய்வம். நான் சென்றேன். நீங்களும் சென்று வாருங்கள்**" என்று கூறி அவருக்கு பணத்தைக் கொடுத்து பூண்டிக்கு அனுப்பினேன்.

ஒரு சமயம் நான் பூண்டி மகானின் தரிசனத்திற்காக சென்றேன். அனைவரும் பூண்டி மகானின் திருஉருவப் படத்தை வாங்கினார்கள். நான் வாங்கவில்லை. "**நீ சந்நியாசி. எங்கே வேண்டுமானாலும் உட்காருவாய். நான் சம்சாரத்தில் இருக்கிறேன். நான் எங்கே போய் அமர்வது. சம்சாரிக்கு ஒரு கூடு வேண்டும். நான் வாடகை வீட்டில் இருக்கிறேன். எனக்கு என்று ஒரு இடம் தந்தால் உனக்கும் ஒரு இடம் தந்து கும்பிடுவேன்**" என்று மனதில் நினைத்துச் சென்றேன். நான் சென்ற ஏழாவது நாள் என் நண்பர் பத்மநாபன் என் அண்ணனிடம் "**எத்தனை நாள் வாடகைவீட்டில் இருப்பார். அவருக்கு ஏதாவது ஒரு இடம் வாங்கி வீடு கட்டிக் கொடுத்தால் நல்லாயிருக்கும் அல்லவா!**" என்று கூறினார். என் அண்ணனும் எங்காவது இடம் இருந்தால் பார்க்கச் சொன்னார். ரூ.7000க்கு ஒரு இடம் பார்த்தோம். அந்த இடத்தின் உரிமையாளர் ஏதோ காரணமாக தாமதம் செய்ததால் வேறு ஒரு வீடு பார்த்து வந்து நான் அந்த வீட்டை வாங்க பணத்தை ஏற்பாடு செய்து கொண்டு அந்தப் பணத்தை எடுத்து வந்து சுவாமிகளின் கையில் வைத்து சுவாமிகளைக் கேட்டேன். சுவாமியும் ஆசிர்வதித்தார். "**நல்லாயிருக்குமா?**" என்று கேட்டேன். "**நல்லாயிருக்கும் போ**" என்று கூறினார் சுவாமி. பிறகு சுவாமிகளின் கையிலிருந்த பணத்தை எடுத்து வந்து அந்தப் பணத்திலிருந்து பத்து ரூபாயை ஸ்ரீ பூண்டி சுவாமியின் கையில் வைத்து விட்டு, பிறகு வீட்டை வாங்கினேன். மீண்டும் நான் பூண்டி

மகானிடம் வந்து "**சுவாமி வீட்டை வாங்கி விட்டேன். புதுமனை புகுவிழா செய்ய நினைக்கிறேன்**" என்று கூறி ஸ்ரீ பூண்டி மகானின் திரு உருவப் படம் ஒன்று வாங்கி வந்து சுவாமியின் கையில் தந்து ஆசிகள் பெற்று சென்று வாங்கிய வீட்டில் சுவாமிகளுக்கு பூஜையறையை தனியாக ஏற்பாடு செய்து சுவாமிகளின் திருஉருவப் படத்தை வைத்து பூஜை செய்தேன். நான் வாங்கிய வீட்டில் கிணற்றில் தண்ணீர் இல்லை என்று சுவாமிகளிடம் கூறினேன்."**தண்ணீர் இல்லையென்றால் கொஞ்சம் ஆழம் எடுக்க வேண்டியது தான்**'' என்றார் சுவாமி. கிணற்றை ஆழப்படுத்தியவுடன் எல்லாம் கருங்கல்லாக வந்தது. மீண்டும் வந்து ஸ்ரீ சுவாமிகளிடம் கூறினேன்."**போயி அதிலேயே ஆழப்படுத்து**" என்றார் பூண்டி மகான். மீண்டும் சிறிது ஆழப்படுத்தினேன். நல்ல தண்ணீர் வந்தது. ஆனால் கோடைக்காலத்தில் கிணறு வற்றி விட்டது. கிணற்றில் 70 அடி ஆழக் குழாய் போட்டோம். எல்லாம் கரும் பாறை வந்தது. தண்ணீர் வரவில்லை. இனி வேண்டாம் என்று நிறுத்தி விட்டோம். பௌர்ணமியன்று ஸ்ரீ பூண்டி மகானுக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தை என் மகன் ஆழ்குழாயில் ஊற்றினான். அதன் பிறகு ஒரு கயிற்றில் சிறிய கல்லை கட்டி போரில் விட்டு பார்த்த போது அதில் தண்ணீர் இருந்தது. இன்று வரை அந்த ஆழ் குழாயில் வந்த தண்ணீர் என் குடும்பத்தினர் அனைவருக்கும் தாராளமாக இருக்கின்றது.

ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணை மேல் அமர்ந்து கொண்டு தாடியை தடவிக் கொண்டு ஒவ்வொரு சமயம் சிரித்துக் கொண்டு இருப்பார். "**எதற்கு சிரித்துக் கொண்டு இருக்கிறீர்கள் சுவாமி**" என்று கேட்டால் "**சிரிப்பு வந்தா சிரிப்பாங்க**" என்று கூறி மீண்டும் "**கடை வெச்சிக்கிட்டு காத்துக்கிட்டு உட்கார்ந்து இருக்கிறேன். கண் தெரியாதவங்க எல்லாம் வந்து போய்கிட்டு இருக்காங்க**" என்றார் பூண்டி மகான்.

இரவு பன்னிரெண்டு மணியளவில் ஸ்ரீ பூண்டி மகானைப் பார்த்தால் சொல்ல முடியாத அளவு மகிழ்ச்சி வரும். அச்சமயத்தில் தலை முதல் பாதம் வரை தெய்வீக ஒளி வீசும். தேகம் எல்லாம் பொன்னிறத்தில் ஒளிரும். சுவாமிகள் திண்ணை மேல் அமர்ந்தது போல் தென்படாது. அச்சமயத்தில் ஓங்காரம் போல் பிரணவ

மந்திரம் கேட்கும். அனைவருக்கும் அப்படி தோன்றுமா என்று என்னால் கூற முடியாது. இது என் அனுபவம்.

ஸ்ரீ பூண்டி மகானிடம் நானும் சிவகாந்த முதலியார் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்தோம். சிவகாந்த முதலியார் கேள்விகளுக்கு பூண்டி மகான் கூறிய பதில்கள்:

"சி.மு : சுவாமி உங்களுக்குப் பிறகு இந்த இடம் எப்படி இருக்கும்?

**பூண்டி சுவாமி** : நன்றாக இருக்கும்.

சி.மு : கோயில் போல ஏதாவது வருமா?

**பூண்டி சுவாமி** : ஊம்

சி.மு. : அது எப்படி இருக்கும் சுவாமி?

**பூண்டி சுவாமி** : நடுத்தெரு நாராயணனுக்கு நாலு பக்கம் வாசற்படிப்பா

சி.மு. : அதன் பிறகு எப்படி இருக்கும் சுவாமி?

**பூண்டி சுவாமி** : ஏழு மதில் ஆகும்"

என்று கூறினார் பூண்டி மகான். ஸ்ரீ பூண்டி மகான் கூறியபடியே ஸ்ரீ பூண்டி மகானின் சமாதிக் கோயிலுக்கு நான்கு பக்கமும் வாயிற்படி உள்ளது. சுவாமிகளின் விருப்பப்படி நடத்திக் கொள்கிறார்.

ஒரு நாள் ஒரு குருவிக்காரப் பெண் பணத்தை ஸ்ரீ பூண்டி மகான் கையில் வைத்துக் கொள்ளுமாறு அன்புடன் கூறினாள். அப்பெண்மணி பத்து பைசா நாணயம் தந்தார். அந்த நாணயத்தை சுவாமி கையில் வைத்து தேய்த்தார். மீண்டும் பார்க்கிறார். தேய்க்கிறார். மீண்டும் பார்க்கிறார். அப்படி செய்து கொண்டே இருந்தார். அவர்கள் கஷ்டங்களை, கர்மாக்களை ஸ்ரீ பூண்டி மகான்அப்படி துடைத்து விட்டாரோ என்று எனக்குத் தோன்றியது.

நம் முன்னாள் பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு சென்றாராம். அவர் மீது உச்சநீதிமன்ற வழக்கு இருந்தது. சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு சொல்லும் நேரத்திற்கு ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணைமேல் அமர்ந்து கொண்டுக் கையை குவித்து கட்டைவிரலை மேல் நோக்கியவாறு காண்பித்து

“**அசைக்க முடியாது**” என்றார். அந்த சமயத்தில் தரிசனத்திற்கு வந்த பக்தர்களிடம் “**என்னாய்யா. நான் என்ன செய்துகிட்டு இருக்கிறேன். நீங்க என்ன கேக்கறீங்க போங்க**” என்று கூறி “**ஒரு பொம்பளையை எத்தனை பேர் எதிர்க்கிறாங்க. அவர்களை அசைக்க முடியாது**” என்றார். சரியாக அதே தருணத்தில் நீதிமன்றத்திலிருந்து வெளியான தீர்ப்பு அம்மையாருக்கு சாதகமாக வந்தது. எதிர்தரப்பினர் எதுவும் செய்ய முடியவில்லை.

ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு “**திருவண்ணாமலை**” என்றேன். உடனே ஸ்ரீ பூண்டி சுவாமி “**திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலை மூலஸ்தான கோயிலுக்கு கல் சுமந்தேன்**” என்று கூறினார்.

ஒருவர் ஸ்ரீ பூண்டி சுவாமியின் அனுமதி இல்லாமல் புகைப்படம் எடுத்தார். மூன்று முறை எடுத்தாலும் பிரிண்ட் விழவில்லை. அண்ணாமலை என்னும் அன்பர் “**சுவாமியைக் கேட்டு புகைப்படம் எடுய்யா. உன் விருப்பத்துக்கு எடுத்தா புகைப்படம் வருமா?**” என்றார். அவர் சென்று சுவாமிகளின் ஆசியுடன் புகைப்படம் எடுத்த பிறகு பிரிண்ட் விழுந்தது.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு நின்றிருந்தேன். “**அவன் அவன் வந்து அவங்கவங்க வேலைய பார்த்துகிட்டு போக மாட்டேன் என்றாங்க. எங்க இருக்கிறதையெல்லாம் இழுத்துக்கிட்டு வராங்க**” என்று கூறினார் சுவாமி. அதனால் நான் யாரையும் வற்புறுத்தி சுவாமிகளிடம் வரும்படி சொல்ல மாட்டேன். வருவதாகக் கூறினால் அழைத்து வருவேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்த பிறகு நானும் என் மனைவியும் பூண்டிக்கு வந்தோம். ஸ்ரீ பூண்டி சுவாமியின் சமாதியை தரிசனம் செய்து கொண்டு இரவு பதினொரு மணிக்கு திரும்பிச் செல்ல கிளம்பினோம். அச்சமயத்தில் பேருந்து இல்லை. ஸ்ரீ பூண்டி சுவாமியின் பக்தரான பெருமாள் அவர்களின் இரு சக்கர வண்டியில் நான் அமர்ந்து கொண்டேன். குமாரசாமியின் இருச்சக்கர வண்டியில் என் மனைவி அமர்ந்தார். ஸ்ரீ பூண்டி மகான் உருவில் ஒரு ஒளி என் மனைவியோடு பின்புறமாக கலசபாக்கம் வரை வந்தது. அன்று அந்த ஒளி பிறகு தென்படவில்லை. திண்டிவனத்தில் பேருந்து

ஏறினால் ஸ்ரீ பூண்டி சுவாமி நிழல் போல் எங்களோடு வருகிறார் என்று எனக்குப் புரிந்து விடும்.

ஸ்ரீ சுவாமிகளின் பாதுகைகள் எங்கள் வீட்டில் உள்ளது. ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணை மேல் வீற்றிருந்த சமயத்தில் ஒரு அன்பர் பூண்டி சுவாமியின் திருஉருவச் சிலையை செய்து எடுத்து வந்து ஸ்ரீ சுவாமிகளின் கைகளில் தந்து "**நல்லாயிருக்கிறதா என்று பாருங்கள் சுவாமி**" என்று கேட்டார். சுவாமியும் பார்த்து "**நல்லாதான் பண்ணியிருக்கிறே**" என்று கூறி திண்ணை மேலேயே வைத்துக் கொண்டார். தினந்தோறும் ஸ்ரீ பூண்டி சுவாமி எதிரிலேயே அந்த திருஉருவ சிலைக்கும் அபிஷேகம் செய்து நித்திய பூஜைகள் செய்தனர். ஸ்ரீ சுவாமிகள் மஹாசமாதி அடைந்த பிறகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் அவர்களின் கனவில் விக்கிரகத்தை வடக்குப் பக்கம் எடுத்துச் செல்லுமாறு பூண்டி மகான் கூறவே எங்கள் வீட்டிற்கு எடுத்து வந்து தந்தனர். எங்கள் வீட்டில் தினந்தோறும் தூப, தீப, நைவேத்தியங்களுடன் பூஜைகள் செய்து கொண்டிருக்கிறோம்.

நான் ஸ்ரீ பூண்டி மகான் திண்ணை மேல் இருந்த சமயத்தில் தரிசனத்திற்குச் சென்றால் எல்லையில்லா மகிழ்ச்சியடைவேன். சுவாமிகள் சமாதியடைந்த பிறகு இங்கு வந்து மிகுந்த வருத்தத்துடன் கண்ணீர் விடுவேன். ஆலமரத்தில் காய்களும், பழங்களும் இருக்கும்போது பறவைகள் கிளைகள் மீது அமர்ந்து பழங்களைச் சாப்பிடும். இப்போது இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தத்துடன். பரிதவித்தேன். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடம் ரூ.5 தந்து பூண்டி மகானுக்கு தீபம் ஏற்ற உபயோகமாக இருக்கும் என்றேன். அவர் உண்டியலில் போடச் சொன்னார். என்னால் முடிந்ததைச் செய்வேன். பூண்டி மகானுக்கு அபிஷேகம் செய்வதற்கு பால் கிடைக்கவில்லை என்றார்கள். உடனே சென்று ரூ.750க்கு ஒரு கறவை மாடு வாங்கி பூண்டிக்கு ஓட்டி அனுப்பி வைத்தேன்.

நான் முதலில் சிறிய கடைகளுக்கு சாக்லேட், பிஸ்கெட், வேர்கடலை உருண்டை மற்றும் பிற திண்பண்டங்களை விநியோகித்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்ட நான்கு வருடங்களில் வியாபாரத்தை

*மாற்றியமைக்கும் படி செய்தார் பூண்டி சுவாமி. மர இழைப்பகம் வைத்தேன்.*

*ஒரு சமயம் ஸ்ரீ பூண்டி சுவாமிகளை வணங்கிக் கொண்டிருந்தேன்.* **"மயிலம்"***கிட்ட என்றார் சுவாமி. எனக்கு எதுவும் புரியவில்லை. சிறிது நாட்களுக்கு பிறகு மயிலம் குருக்கள் பையன் கடைக்கு வந்து அங்கு இருந்த பெரிய மரத்தைப் பார்த்து* **"கோயில் கட்டி இத்தனை நாட்கள் ஆனாலும் ரதம் பண்ணவில்லை. இந்த மரம் எவ்வளவு பணமானாலும் வாங்க வேண்டும்"** *என்று கூட வந்தவருடன் பேசிக் கொண்டிருந்தார். என்னிடம் விலை பற்றி கேட்டார்கள். நான்* **"நீங்கள் ஆலயத்திற்கு என்று சொல்கிறீர்கள். நான் 21,000 ரூபாய்க்கு வாங்கினேன். அசல் தந்தால் போதும்"** *என்றேன். ரூ.101 முன்பணமாக கொடுத்துச் சென்றார்கள். மரத்தை அவர்கள் சொன்னபடி அறுத்து அனுப்பினேன். நான் மூன்று மாதம் கழித்து மயிலம் மடத்திற்குச் சென்றேன். மடாதிபதி என்னைப் பார்த்து,* **"நீ போன பிறவியில் செய்த புண்ணிய பலன்களால் உன்னை இப்படி செய்ய வைத்தது"** *என்றார். அங்கிருந்தவரை துணையாக அனுப்பி மடத்தை காண்பிக்கச் சொன்னார். அனைத்தையும் சுற்றிப் பார்த்தேன். அங்கே பாலயோகி சித்தர் சமாதி இருந்தது. எனக்கு ஸ்ரீ பூண்டி மகான் கூறியது பல நாட்களுக்குப் பிறகு தெரிந்தது.*

*நான் எங்கே நினைத்தாலும் சுவாமி அங்கேயே எனக்கு தரிசனம் அளிக்கிறார். ஒரு நாள் ஒரு மரத்தை வாங்கி வண்டியில் ஏற்றுவதற்கு மிகவும் கடினமாக உள்ளது என்று நான் ஸ்ரீ பூண்டி மகானை மனதில் வேண்டினேன். நான் இருந்த இடத்தில் 300 அடி தொலைவில் புளிய மரத்தின் கீழ் ஸ்ரீ பூண்டி மகான் தரிசனம் அளித்தார். என் மகனைக் கூப்பிட்டு சுவாமிகளைக் காண்பித்து இனி எளிதாக மரத்தை வண்டியில் ஏற்றலாம் என்று கூறினேன். இருபது பேர் சேர்ந்து ஏற்ற வேண்டிய மரத்தை மூன்று பேர் ஐந்து நிமிடத்தில் வேலையை முடித்து விட்டனர். வண்டியின் பின்னால் சுவாமி வந்து கொண்டே இருக்கிறார். நான் பேருந்து பிடித்து வீட்டிற்கு சென்று பிஸ்கெட் மற்றும் பூண்டி மகானுக்கு விருப்பமான திண்பண்டங்களை வாங்கிக் கொண்டு வண்டிக்கு எதிரில் சென்றேன். வண்டியின் பின்னால் வந்து கொண்டிருந்த சுவாமிகளுக்கு கற்பூரம் ஏற்றி சாஷ்டாங்கமாக*

விழுந்து வணங்கி எடுத்து வந்த பிரசாதங்களை சுவாமிகளின் கையில் தந்து "**இன்னும் ஏதாவது வேணுமா சுவாமி?**" என்று கேட்டேன். "**எல்லாம் இருக்கிறது இல்லையா?**" என்றார் அன்புடன். நான் வண்டியின் மறுபுறம் சென்று வருவதற்குள் ஸ்ரீ பூண்டி மகான் தென்படவில்லை.

மற்றொரு சமயத்தில் நான் மரம் வாங்கச் சென்றேன். ஒரு இலட்சம் என்று விலை கூறினார்கள். நான் ரூ.90,000க்கு கேட்டு விட்டு வந்து விட்டேன். என் மகன் அம்மரத்தை வாங்கினால் ஸ்ரீ பூண்டி சுவாமியின் கோயிலின் நான்கு நுழைவு வாயில்களுக்கு கதவுகள் செய்யலாம் என்றான். சுவாமிகளுக்கு அவசியமானால் அவர் வாங்கித் தருவார். வா போகலாம் என்று வீட்டிற்குச் சென்றேன். வேறு ஒரு வியாபாரி அந்த மரத்தை ரூ.1,03,000க்கு வாங்கி என்னிடம் வந்து கேட்டார். அவர் ஒரு டன் ரூ.1000க்கு குறைவாகத் தரமுடியாது என்று கூறி மூன்று மாதம் முயற்சி செய்தாலும் விற்க முடியாமல் மீண்டும் என்னிடம் வந்து டன்னுக்கு ரூ.850 தரும்படி கேட்டார். சரியென்று கூறி மரத்தை வாங்கினேன். சுவாமிகளுக்கு வேண்டும் என்றால் வாங்கித் தருவார் என்று நினைத்தேன். அப்படியே வாங்கித் தந்தார் என்று நினைத்து 8 அடி சுற்றளவு 8-1/2 அடி நீளத்திற்கு மரத்தை அறுத்து, ஸ்ரீ சுவாமிகளின் ஆலயக் கதவுகளுக்காக வைத்து விட்டு, மீதி மரத்தை என் மகன் விற்று விட்டான். அந்த மரத்தை 20 பேர் கூலியாட்கள் வண்டியில் ஏற்ற முடியாமல் மூன்றாவது நாள் என்னிடம் வந்து சொன்னார்கள். ஸ்ரீ பூண்டி மகானிடம் இருந்த ருத்திராட்சமாலை ஒன்று என்னிடம் உள்ளது. நான் அந்த ருத்திராட்சமாலையை எடுத்துச் சென்று மரத்தின் மீது வைத்து கற்பூரம் ஏற்றி வணங்கி "**புறப்படுங்க சுவாமி. போகலாம்**" என்று கூறி பக்கத்திலிருந்த தேநீர் கடைக்குச் சென்று டிரைவரும், நானும் தேநீர் குடித்து வந்தோம். என் மகனுடன் மூன்று பேர் சேர்ந்து அரைமணி நேரத்தில் மரத்தை சுமந்து (டிராக்டர்) வண்டியில் ஏற்றினார்கள். அந்த மரத்தை எங்கள் கடையில் இறக்கி வைத்து விட்டு மூன்று நாட்களாக அந்த மரத்தை ஏற்றமுடியாமல் வெறுத்து போனவர்களில் ஒரு கிறிஸ்தவர் அந்த மரத்தை காலால் உதைத்து "**இந்த மரம் இத்தனை நாள் என்னை ஆட்டுவித்தது. நான் இப்போது இதைத்**

**துண்டுத் துண்டாகச் செய்கிறேன் பார்**" என்றான் ஆவேசமாக. நான் மரத்தை அறுக்கச் சொல்லி வீட்டிற்குச் சென்றேன். பெரிய பெரிய மரத்தையெல்லாம் சுலபமா அறுக்கக்கூடிய திறமை வாய்ந்த அந்த கிறிஸ்தவர் மூன்று நாட்களாக எவ்வளவு முயற்சி செய்தாலும் ஒரு அங்குலம் கூட அசைக்க முடியவில்லை. அதன் பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் திருநீறு எடுத்துச் சென்று மரத்தின் மேல் வைத்து "**சுவாமி, வேலையை முடித்து விட்டால் நல்லாயிருக்கும்**" என்று மனதில் வேண்டினேன். மூன்று கூலியாட்கள் மரத்தை எடுத்துச் சென்று அறுத்தார்கள். மாலை ஏழு மணியளவில் பூண்டியிலிருந்து லாரி எடுத்து வந்தார்கள். நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. அந்த மழையிலேயே அறுத்த மரப்பலகைகளை ஏற்றிக் கொண்டு லாரி கிளம்பிச் செல்லும்போது வழியில் ஒரு இடத்தில் திடீரென நின்று விட்டது. மறு நொடி அந்த லாரியின் முன் காற்று, மழைக்கு ஒரு பெரிய புளிய மரம் சாலையில் குறுக்கே விழுந்தது. லாரியில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, செஞ்சி இராதாகிருஷ்ணன், முனிரத்தின நாடார், சிவகாந்த முதலியார் அனைவரும் அமர்ந்து இருந்தனர். பிறகு அந்த சாலையில் முன்னோக்கிச் செல்ல முடியாமல் வேறு வழியில் பூண்டிக்கு சென்றார்கள். எங்கும் நிறைந்திருக்கும் ஸ்ரீ பூண்டி மகான்அவர்களை காப்பாற்றினார் என்று அவர்கள் எண்ணினர்.

ஒவ்வொரு வருடமும் தைப்பூசத்திற்கு எங்கள் வீட்டில் சமையல்காரர்களை வைத்து உணவு சமைத்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு நைவேத்தியம் வைத்து உணவு சாப்பிடுவது வழக்கம். ஒரு வருடம் தைப்பூசத்தன்று உணவு சமைத்தவுடனே ஸ்ரீ பூண்டிமகான் வருவார் என்று மனதில் நினைத்துக் கொண்டேன். அதே தருணத்தில் ஸ்ரீ பூண்டி மகான் வருவது தென்பட்டது. என் மனைவியை அழைத்துக் கூறினேன். அவர் ஓடி வந்து "**வாங்க சுவாமி**" என்று அன்புடன், பக்தியோடு அழைத்தார். "**அதுக்குதான் வந்தேன்**" என்றார் சுவாமி. வீட்டின் முன் தாழ்வாரத்தில் அமரவைத்து சாப்பிடுமாறு வேண்டினேன். "**ஊம்**" என்றார் சுவாமி. வாழையிலை வைத்து உணவு படைத்தேன். "**உணவு போதுமா சுவாமி**" என்று கேட்டால் அதற்கு மேல் சுவாமி சாப்பிடமாட்டார் என்று தெரியும்.

எனவே கேட்காமல், சுவாமியே போதும் என்று சொல்லும் வரையில் உணவு பரிமாறிக் கொண்டிருந்தேன். அதன் பிறகு வீட்டில் இருந்த அனைவரும் சுவாமிகளின் திருவடிகளை வணங்கினோம். ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு விருப்பமான வேர்க்கடலை உருண்டை, எள் உருண்டைகளை வாங்கி வந்து சுவாமி கையில் வைத்தேன். "**அப்புறமா சாப்பிடலாம்**" என்றார் சுவாமி. "**இங்கேயே இருங்க சுவாமி. போகாதீர்கள்**" என்று வேண்டினேன். "**எவ்வளவு வேலை விட்டுவிட்டு வந்து இருக்கிறேன்**" என்றார் சுவாமி. "**குறைந்தது இன்று ஒரு நாளாவது இங்கேயே இருங்கள் சுவாமி**" என்று வேண்டினாலும் சுவாமி ஒத்துக் கொள்ள வில்லை. சுவாமிகள் வீட்டிலிருந்து வெளியே வந்தார். நான் தண்ணீர் குடித்து விட்டு வந்து பார்த்தால் சுவாமி சென்ற சுவடு தெரியவில்லை. எந்தப் பக்கம் போனாரோ தெரியவில்லை.

இன்று எங்கள் வீட்டில் யாருக்குத் திருமணம் நடந்தாலும் முதலில் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்த பிறகே எங்கள் குல தெய்வத்திற்கு பூஜைகள் செய்வோம். என் மகளுக்கு திருமணம் நடந்தது. அவர் கருவுற்றிருந்தபோது பிரசவ சமயத்தில் திண்டிவனத்தில் ஒரு சிறந்த மருத்துவரிடம் காண்பித்தோம். அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். உடனே பாண்டிச்சேரி அழைத்துச் செல்லுங்கள் என்றார். பாண்டிச்சேரியில் ஒரு மருத்துவமனையில் அனுமதித்தேன். மூன்று மருத்துவர்கள் பரிசோதனை செய்து மறு நாள் காலையில் கண்டிப்பாக அறுவை சிகிச்சை (சிசேரியன்) செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அன்றிரவு பணியிலிருந்த மருத்துவர்கள் மாறினார்கள். என் மகள் கையில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் ருத்திராட்ச மாலை இருந்தது. இரவு பன்னிரெண்டு மணியளவில் ஸ்ரீ பூண்டி மகான் மருத்துவமனைக்கு வந்தார். என் மகளுக்கு மட்டும் தெளிவாகத் தெரிகிறார். என் மகள் பிரசவ வேதனை அடைந்து கொண்டிருந்தாள். "பூண்டி சுவாமி" என்று சப்தமாகக் கத்தினாள் என் மகள். அங்கிருந்தவர்களுக்கு தூக்கம் கலைந்து விழிப்பு வந்தது. தாயும், குழந்தையும் வேறு வேறாக உள்ளனர். அங்கிருந்த மருத்துவர்கள் "**எதற்காக சப்தம் போட்டீர்கள்**" என்று கேட்டார்கள். "**ஆமாம். எங்கள் பூண்டி சுவாமி**" என்று என் மகள்

கூறினாள். அந்த மருத்துவமனையில் கிரிஸ்துவ மருத்துவர்கள் இருந்தார்கள். அனைவரும் ஆச்சர்யத்துடன் பார்த்தார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி பக்தர்களின் துன்பங்களை அதிகமாக்கி உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் சென்று நிறுத்துவார். நம்மை சோதனை செய்வார். தைரியமாக இருக்க வேண்டும். எல்லாம் அவரே என்று சரணாகதியடைய வேண்டும். அப்போது சுவாமிகளின் பரிபூரண அருள் கிடைக்கும். பிறப்பு இறப்பு இல்லாதவரான ஸ்ரீ பூண்டி மகானின் திவ்ய லீலையே இது என்று நினைத்தோம்.

என் அண்ணனின் மருமகன் பாண்டிச்சேரியின் மின்சாரத்துறையில் பணிபுரிந்து வந்தார். ஸ்ரீ பூண்டி மகானின் ஆலயத்திற்கு வரவேண்டும் என்று என் வீட்டிற்கு வந்தார். அவர் குழந்தை அழுது கொண்டே இருந்தது. ஸ்ரீ பூண்டி மகான்ஆலயத்திற்கு வரும் வரை அழுகையை நிறுத்தவில்லை. ஸ்ரீ பூண்டி மகானின் சமாதியை தரிசனம் செய்து சென்றனர். ஒரு நாள் அவர் மின்மாற்றி (Transformer) மேல் பணி புரிந்து கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கியது. அச்சமயத்தில் ஸ்ரீ பூண்டி மகானை மனதில் நினைத்தார். யாரோ கையைப் பிடித்து இறக்கி கீழே படுக்க வைத்தது போல் இருந்தது. ஆனாலும் அவர் உடல் எல்லாம் தீப்புண் ஏற்பட்டது. அரசு தரப்பில் சென்னை அப்போலோ மருத்துவமனையில் சேர்த்தார்கள். இனி பிழைக்கமாட்டார் என்று மருத்துவர்கள் கைவிட்டனர். அவர் உருவம் விகாரமாக மாறி விட்டது. இனி இப்படி பிழைத்து இருப்பதை விட உயிர் விடுவதே மேல் என்று நினைத்தார். மருத்துவமனையில் கட்டில் மேல் அசையமுடியாத நிலையில் படுத்துக் கொண்டு இருந்தார். அன்றிரவு எப்படியாவது தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தார். அன்றிரவு ஸ்ரீ பூண்டி மகான்அவரிடம் வந்தார். அவருக்கு தெளிவாகத் தெரிகின்றார். ஸ்ரீ பூண்டி மகான் திவ்ய கரங்களால் அவரின் தலையிலிருந்து பாதம் வரை தடவி "**எழுந்து உட்கார்**" என்று கூறி மறைந்து விட்டார். உடனே எழுந்து மனைவியை தூக்கத்திலிருந்து எழுப்பி "**சுவாமி வந்து சென்றார் பார்த்தாயா?**" என்று கேட்டார். அவர் "**தூங்கி விட்டேன். பார்க்க வில்லை**"

என்றார். மறு நாள் காலையில், முன்பு இருந்த பழைய தோற்றம் வந்து விட்டது. தீப்புண் அவர் முகத்தில் இருந்த ஒரு அடையாளம் கூட இல்லை. இது ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்த பிறகு நடந்த அற்புதம். விரைவில் குணமடையச் செய்த ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அனுக்கிரகத்தை என்னவென்று சொல்வது!

காப்பலூர் சுவாமி ஸ்ரீ பூண்டி சுவாமியின் பக்தராவார். ஒரு நாள் என்னைப் பார்த்து "**உனக்கு சனிதிசை நடக்கிறது. ஈஸ்வரன் கோயிலுக்குச் சென்று பூஜைசெய்து வந்து துறவிகளுக்கு அன்னதானம், வஸ்திரதானம் செய்து பாத நமஸ்காரம் செய்து கொள்ளுங்கள்**'' என்று கூறினார். சுவாமியின் பக்தர் கூறினார் என்று நினைத்து நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு துறவிகளை வரவேற்க சைக்கிளில் கிளம்பி திண்டிவனம் பஸ் நிலையத்திற்குச் சென்றேன். ஸ்ரீ பூண்டி மகான் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தார். வணங்கினேன். உடனே "**அதுக்கு தான் வந்தேன்பா**" என்றார். வீட்டிற்கு வந்து உணவு சாப்பிட்ட பிறகு புதிய ஆடை அளித்தேன். "**போதுமா சுவாமி**" என்று கேட்டேன். "**அமோகமா போதும்**" என்று கூறினார். ஸ்ரீ சுவாமிகளை பேருந்தில் ஏற்றி விட "**எங்கே போக வேண்டும் சுவாமி**" என்று கேட்டேன். ''**திருவண்ணாமலைக்குச் செல்லலாம் என்று நினைக்கிறேன்**" என்றார். நான் சிறிது பணமளித்து "**போதுமா சுவாமி**" என்று கேட்டேன். "**இவ்வளவு எதற்கு**" என்று கூறி சிறிது பணத்தை என்னிடம் திருப்பித் தந்து விட்டார். ஸ்ரீ சுவாமி தந்த பணத்தை வீட்டில் வைத்து விட்டு வந்து பார்ப்பதற்குள் ஸ்ரீ பூண்டி மகான் மாயமாய் மறைந்து விட்டார். நித்ய ஞானானந்த சொரூப பரபிரம்மமான ஸ்ரீ சுவாமி நாம் நினைத்தவுடனே தரிசனம் அளித்துக் கொண்டேயிருப்பார்.

ஆரணியிலிருந்து ஒரு அன்பர் வருவார். அவருக்கு சொந்தமாக பேருந்துகள் இருந்தன. கடன் இருந்தது. ஆனால் எந்தக் குறையும் இல்லை. "**பேருந்தை விற்றுவிடுகிறேன். கடன் இருக்கு சுவாமி**" என்றார். "**நடத்து. பின்னால இலாபம் வரும்**" என்று கூறினார் சுவாமி. அன்றிரவு வீட்டிற்குச் சென்று காலையிலேயே பேருந்தை ரூ.72,000 க்கு விற்றுவிட்டார்கள். இருபது நாட்களில் அதன் விலை மூன்று

இலட்ச ரூபாய்க்கு உயர்ந்தது. அரசு பேருந்துத் தடமதிப்பை (Bus Routes) மாற்றம் செய்த காரணத்தால் மதிப்பு உயர்ந்தது. சுவாமி சொற்படி கேட்காததால் நஷ்டம் அடைந்தார்.

ஸ்ரீ பூண்டிசுவாமி சமாதிக் கோவில் கட்டட வேலைகள் நடக்கும் சமயத்தில் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் திருவண்ணாமலையில் ஈசான்ய மடத்தில் ஒன்று கூடினார்கள். நான் கடைசியில் ஒரு மூலையில் அமர்ந்து இருந்தேன். அனைவரும் அவரவர் சக்திக்கு தகுந்தபடி கோவில் கட்டிட வேலையில் பங்கு கொள்ளுவதாகக் கூறினார்கள். கடைசியில் நான் கோபுர கலசம் செய்துத் தருவதாக கூறி பஞ்சலோகத்தில் கலசம் செய்து வைத்தேன். இதை ஸ்ரீ பூண்டி சுவாமி அளித்த வாய்ப்பாக நினைத்தேன்.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் இன்னது வேண்டும் என்று கேட்கவில்லை. சுவாமிகளுக்கு ஏதாவது இல்லை என்றால் என் மனம் வருத்தமடையும். ஸ்ரீ பூண்டி மகானை நம்பியவர்கள் எப்படிப்பட்ட ஈனப் பிறவியாக இருந்தாலும் ஸ்ரீ பூண்டி மகானால் காப்பாற்றப்படுவார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருள் அடர்ந்த மழை போல் பொழிந்து கொண்டே இருக்கும். எங்களுக்கு எது வந்தாலும் அதை ஸ்ரீ பூண்டி மகானின் அருளாக எண்ணுவோம்.

ஸ்ரீ பூண்டி சுவாமி தரிசனத்திற்காக முதல் முறை வந்தபோது நான் ஏழ்மையில் இருந்தேன். ஸ்ரீ சுவாமி இன்று எனக்கு எல்லாவற்றையும் தந்தார். இந்த உயர்ந்த நிலைக்குக் காரணம் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளே ஆகும். இன்று பூண்டி சுவாமி என்னை ஒரு கிணற்றில் குதிக்கச் சொன்னாலும் குதித்து விடுவேன். எதையும் யோசிக்கமாட்டேன். அப்படியே என் குடும்பத்தில் அனைவரும் செய்வார்கள்.என் வீட்டிலுள்ள ஸ்ரீ பூண்டி சுவாமியின் பாதுகைகளின் மீது உள்ள திருநீற்றை பூசிக் கொண்டால் எந்த வியாதி இருந்தாலும் இருந்த இடம் தெரியாமல் போய் விடும். இது எங்கள் நம்பிக்கை.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் அபாரமான சக்தியை, திவ்ய அருளை அளக்க எந்தக் கருவியும் இல்லை. அது ஒரு அற்புதமான, அபாரமான, பரிபூரண சுத்த சத்துவம்.

நேர்காணல்: 33
03.11.2005, பூண்டி

திருமதி. **முத்து இந்திராணி**, வயது: 55, திண்டிவனம்.

*என் பெரிய மகன் ஐந்து மாதக் குழந்தையாக இருக்கும் சமயத்தில் நிற்காமல் வயிற்றுப் போக்கு ஆகிறது என்று பூண்டிக்கு வந்து என் மகனை ஸ்ரீ பூண்டிமகான் மடியில் வைத்து வணங்கினேன். எனக்கு திருநீறு வைத்து என் மகனுக்கும் திருநீறு வைத்தார். எந்த மருந்தையும் உபயோகப்படுத்தவில்லை. என் மகனுக்கு வயிற்றுப் போக்கு நின்று விட்டது.*

*ஸ்ரீ பூண்டி மகான் இருந்த போது நான் ஒவ்வொரு பௌர்ணமிக்கும் வந்து தரிசனம் செய்து கொண்டு செல்வேன். ஒரு பௌர்ணமியன்று திருவிழா நடந்து கொண்டிருந்தது. எங்கும் பந்தல் போட்டு திருவிழா போல் உள்ளது. T.M. சௌந்தர்ராஜனின் பாட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. பேருந்து இறங்கிய உடனே நான் நேராக பாட்டுக்கச்சேரிக்கு சென்றேன். எல்லாம் முடிந்த பிறகு கை, கால்களை கழுவிக் கொண்டு ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று அவரை வணங்கினேன். திருநீறு கேட்டாலும் வைக்க வில்லை. கையிலும் கொடுக்கவில்லை. மூன்று, நான்கு முறை மீண்டும் மீண்டும் வந்து வணங்கினாலும் சுவாமி திருநீறு வைக்கவில்லை. நான் எப்போது வந்தாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கிச் செல்வேன். ஆனால் அன்று நான் நேராக பாட்டுக் கச்சேரிக்கு சென்றதால் நீங்கள் பாட்டுக் கச்சேரி கேட்க வந்தீர்கள். எனக்காக இல்லை அல்லவா என்றவாறு அவரது பதில் செய்கை இருந்தது. அவர் எனக்கு நல்ல பாடம் கற்பித்தார் என்று அறிந்தேன்.*

*அதன் பிறகு நான் எடுத்துச் சென்ற வந்த உணவை சாப்பிட்டேன். சிறிது மீந்து விட்டது. காலையில் சாப்பிடலாம் என்று எடுத்து வைத்தேன். யாரோ ஒரு பக்தர் உணவு சாப்பிடவில்லை என்று உணவு மீதியிருந்தால் தருமாறு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கேட்டாலும்*

*மீறவில்லை என்று பொய் கூறினேன். காலையில் மறைத்து வைத்த உணவை எடுத்துப் பார்த்தபோது கெட்டு விட்டது. சாப்பிட முடியாதபடி வீணாகி விட்டது. பகவான் சன்னதியில் ஒரு சிறிய பொய் சொல்ல முயற்சி செய்தாலும் அது தவறு என்று அறிந்து அன்றிலிருந்து சுவாமிகளின் சன்னதியில் பொய் சொல்லக் கூடாது என்று முடிவு செய்தேன்.*

**நேர்காணல்: 34**
**04.11.2005, பூண்டி**

**முனுசாமி கவுண்டர்**, வயது: 70, சின்னகண்ணாம்பாடி.

*1951ஆம் ஆண்டிலிருந்து நான் குறும்பேரி ஸ்ரீ சதானந்த சுவாமியை வழிபட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி வில்வராணி கிராமத்தில் அமர்ந்திருந்தபோது கடலாடி சிவானந்த முதலியார் என்னை முதன்முறையாக ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக அழைத்து வந்தார். துறவிகளிடம் வெறும் கையில் செல்லக் கூடாதென்று இலவங்கம் வாங்கி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு இலவங்கங்களை சுவாமிக்கு அளித்தேன். சுவாமிகள் அதில் பாதியை சாப்பிட்டு மீதியை எனக்களித்தார். "நீ* **நல்லாயிருப்பாய்**" *என்று ஆசிர்வதித்தார்.*

*சிறிது நாட்கள் கழித்து ஸ்ரீ சதானந்த சுவாமிகள் இருபத்தைந்து சீடர்களுடன் சேர்ந்து கிளம்பி கன்னம்பாடியில் ஒரு மகானின் சமாதியை தரிசித்துக் கொள்வதற்காக சென்று கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீ சதானந்த சுவாமி, ஸ்ரீ ஆற்று சுவாமி எங்கு அமர்ந்திருப்பார்? என்றும், என்னை காண்பிக்கும்படியும் கேட்டார். எனக்கு தெரியாது என்றேன். கலசபாக்கத்திற்கு வரும் வழியில் ஐந்து காப்பி* (Coffee) *வாங்கி வரும்படி சதானந்த சுவாமி கூறினார். நான் சென்று ஐந்து காப்பி ஒரு பாத்திரத்தில் ஊற்றி வாங்கி வந்தேன். ஸ்ரீ ஆற்று சுவாமி கலசபாக்கம் கூட்டு ரோட்டில் அமர்ந்திருந்த நிலையில் தென்பட்டார். நாங்கள் சுவாமியை நெருங்கியவுடன் சதானந்த சுவாமி வருவதாகவும், அதனால் அங்கு அமர்ந்து இருப்பதாகவும் ஆற்று சுவாமி கூறினார். நாங்கள் அனைவரும் தரிசனம் செய்து கொண்ட பிறகு ஐந்து காப்பியை அப்படியே தந்தோம். எல்லாவற்றையும் குடித்தார். நாங்கள் கிளம்பிச் சென்றோம்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி பூண்டியில் திண்ணை மீது அமர்ந்தபிறகு மலம் மேல் அப்படியே அமர்ந்திருப்பார். ஆனால் மலம் நன்றாகப்*

பழுத்த மாம்பழ வாசனை வீசும். சுவாமிகளின் காலில் எறும்புகளும், கொசுக்களும் மொய்த்துக் கொண்டிருக்கும். அதைத் துடைக்க முயற்சி செய்தால், **"அது பசிக்கு அது சாப்பிடுது. அதை எதுக்குத் துன்பப் படுத்தறீங்க"** என்று கூறினார்.

என் கிராமத்தில் தலைவர் பதவிக்கு தேர்தலில் போட்டி யிட்டேன். என்னோடு சேர்ந்து சாமண்ண கவுண்டர் உறுப்பினராகப் போட்டியிட்டார். அவரோடு சேர்ந்து நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்து மாலை நான்கு மணிக்கு வரிசையில் நின்றோம். சுவாமியை தரிசனம் செய்து நின்றவுடன், **"தெப்பக்குளத்தில மீன் விட்டுட்டு ஜோசியம் கேக்க வந்தாங்கப்பா"** என்றும் **"எங்கியும் இருக்க மாட்டேன்கிறான். ஒண்ணும் செய்ய மாட்டேன்கிறான். என்னய்யா வேலை இது. இவருக்கு குரு இருந்தாலும் உங்களுக்கு எல்லாம் எதுக்கப்பா"** என்றார் சுவாமி. அப்போதே இரவு மணி ஏழானது. திருவண்ணாமலையில் கோயிலுக்குச் சென்று பூஜை செய்ய நேரம் போதாது என்று மனதில் நினைத்தவுடனே **"என்னாப்பா வந்த வேலை கவனிக்க மாட்டேன்கிறாங்க. எந்த வேலைக்கோ யோசிக்கிறாங்க"** என்றார் சுவாமி.

எங்களுக்கு ஸ்ரீ சுவாமி ஆசிகள் தராததால் நாங்கள் அன்றிரவு பூண்டியிலேயே தங்கி விட்டோம். அன்றிரவு சுவாமி அடிக்கடி எங்கள் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். விடியற்காலையில் நான்கு மணிக்கு ஆற்றுக்குச் சென்று கை, கால் சுத்தம் செய்து கொண்டு தேநீர் கடையில் நின்று கொண்டிருந்தோம். **"நேற்று வந்தோம். ஸ்ரீ ஆற்று சுவாமி எங்களுக்கு ஆசிகள் தரவில்லை. தேநீர் தந்தால் வாங்கிச் சென்று சுவாமிக்குத் தந்து தரிசனம் செய்து கொள்கிறோம்"** என்று தேநீர் கடை உரிமையாளரிடம் கூறவே அவர் தேநீர் போட்டுத் தந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று தேநீர் சமர்ப்பித்துக் கொண்டோம். சுவாமி தேநீர் குடித்த பிறகு எங்கள் பக்கம் பார்த்து **"சென்று வா"** என்று விடை கொடுத்தார். சுவாமிகளை வணங்கி விட்டு கிளம்பி எங்கள் கிராமத்திற்குச் சென்றவுடனே என்னுடன் போட்டியிட்டவர்கள் எல்லாரும் பின் வாங்கி (வாபஸ்) விட்டார்கள். என்னை ஒரு மனதாக (Unanimous) தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

பத்து வருடம் நான் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தேன். நான் அடிக்கடி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து செல்வேன்.

ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் கடலாடியில் ஸ்ரீ சுவாமியை ஒரு புறமும், ஸ்ரீ சதானந்த சுவாமியை ஒரு புறமும் அமர வைத்து மாணிக்க வாசகர் குரு பூஜை செய்தோம். ஸ்ரீ பூண்டி சுவாமியை அமர வைத்து பூஜை செய்த இடத்தில் ஒரு தென்னங்கன்றும் சதானந்த சுவாமி அமர்ந்த இடத்தில் ஒரு தென்னங்கன்றையும் அவர்களின் நினைவாக நட்டோம். அந்த இரு தென்னங்கன்றுகள் பெரிய மரமாகி காய்கள் காய்க்கின்றன.

ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து தரிசனம் செய்து சென்றால் மனதுக்கு அமைதி கிடைக்கும். அதுவே ஆனந்தம். எல்லோரும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் இன்று மகிழ்ச்சியாக இருக்கின்றோம்.





ஸ்ரீ பூண்டிசுவாமி
வீற்றிருந்த திண்ணை
மேல் சுவாமியின்
பஞ்சலோக விக்கிரகம்

**நேர்காணல்: 35**
**04-11-2005, பூண்டி**

**சக்கரவர்த்தி**, வயது: 68, செஞ்சி.

*1971-ல் நான் திரு இராதாகிருஷ்ணன் அவர்களோடு சேர்ந்து வந்து முதல்முறையாக ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். எத்தனையோ சுவாமிகளிடம் ஏமாந்துபோன நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை சோதித்துப் பார்த்த பிறகு நம்பினேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் ஒரே வேளையில் மூன்று, நான்கு சிகரெட்டுகளை விரலிடுக்கில் வைத்துப் பிடிப்பார். ஆனால் புகை வெளியே வராது.*

*எத்தனையோ பக்தர்கள் பலவிதமான காரணத்துடன் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வருவார்கள். ஒரு அன்பர் வயிற்றுவலி என்றால் ஸ்ரீ சுவாமி அவருக்கு திருநீறு வைத்து* "**சென்று வா**" *என்றால் அந்த வலியை ஆணையிடுகிறார் என்று பொருள். அப்படி இல்லாமல் அவர் சிறிது காலம் அந்த வலியை அனுபவிக்க வேண்டும் என்று இருந்தால்* ''**சென்று ... வா**'' *என்பார். இது ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் என் அனுபவத்தில் பார்த்த உண்மை.*

*ஒரு ஆடு மேய்க்கிறவன் தன் இரண்டு மனைவிகளையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீ பூண்டி சுவாமி தரிசனத்திற்காக வந்தான். அந்த இரண்டு பெண்களைப் பார்த்து,* "**இரண்டையும் அந்த ஆட்டு மந்தையில் அடைச்சி வச்சிட்டு வரவேண்டியதுதானே. அந்த இரண்டுத்தையும் எதுக்கு கூட்டிக்கிட்டு வந்த**'' *என்றார் சுவாமி. மனைவிகள் இருவரும் தலை குனிந்து கொண்டனர். பிறகு விசாரித்த போது அந்த இரு பெண்களும் மிகவும் முரட்டுத்தனம் வாய்ந்தவர்கள் என்று தெரிந்தது. அதற்காகத் தான் ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்களை அப்படிக் கூறினார் என்று தெரிந்தது.*

*எனக்கு முப்பத்து மூன்று வயதானாலும் திருமணம் செய்து கொள்ளவில்லை. சித்த வைத்தியம் என் தொழில். சாதனை, மந்திரம், யோகா என்று சோதனை செய்து கொண்டிருந்த என்னைத்*

*திருமணம் செய்யுமாறு தாயார் வற்புறுத்தினார். என் உறவினர்களில் ஒருவர் எனக்கு பெண்ணைத் தருவதாகக் கூறினார். என் நண்பர்கள், உறவினர்களோடு சேர்ந்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்து,* **“சுவாமி! நான் கல்யாணம் பண்ணிக்கலாமா?”** *என்று கேட்டேன்.* **“இப்ப என்ன அவசரம்”** *என்றார். அப்போது அங்கிருந்தவர்கள் எனக்கு இரண்டாவது திருமணம் என்று நினைத்து நகைத்தார்கள். எனக்கு திருமணம் ஆகாத விஷயம் அவர்களுக்குத் தெரியாது.*

*இரண்டு மாதம் கழிந்த பிறகு வீட்டிலும், உறவினர்களும் வற்புறுத்தியதால் நான் மீண்டும் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து* **“சுவாமி, தொல்லை அதிகமாக உள்ளது. நான் திருமணம் செய்து கொள்ளவா, வேண்டாமா?”** *என்று கேட்டேன். அது வரை எனக்கு கையில் திருநீறு அளிப்பார். ஆனால் அன்று என் நெற்றியில் திருநீற்றை வைத்து, குங்குமமும் வைத்து* **“நல்லது பண்ணிக்கோ”** *என்று ஆசீர்வதித்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி ஆசி வழங்கிய பிறகு முப்பத்திஒன்று நாள் கழித்து என் திருமணம் நடந்தது. மூன்று மகன், இரு மகள் பிறந்தார்கள்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி அமர்ந்த திண்ணைக்கு எதிரில் மண்டப வேலை ஆரம்பித்து நின்று விட்டது. அந்த சமயத்தில் ஒரு செல்வந்தர்* **“சுவாமி! இந்த மண்டபத்தை நான் கட்டி வேலையை முடிக்கிறேன்”** *என்று வேண்டினார்.* **“அது கட்டிக்கும்”** *என்றார் சுவாமி. அவரை வேண்டாம் என்றும் கூறவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமி செய்து தருகிறேன் என்றும் கூறவில்லை. அவருக்கு அந்த வேலை செய்யும் அதிர்ஷ்டம் கிடைக்க வில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்த பிறகு இரண்டு வருடங்களில் அந்த மண்டப வேலை நிறைவடைந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி முக்காலமும் அறிந்த மகா சித்த புருஷர்.*

*நான் அடிக்கடி பர்வத மலைக்குச் சென்று வருவேன். என்னோடு என் உறவினர் ஒருவரும் மூன்று, நான்கு வயது சிறு குழந்தையை எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு* **“சுவாமி பர்வத மலைக்குச் சென்று வரலாமா?”** *என்று கேட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமி* **“சென்று வா”** *என்று கூறி திருநீறு வைத்து, குங்குமமும் வைத்து ஆசிர்வதித்தார். அச்சிறுவனோடு சேர்ந்து மிகவும் மகிழ்ச்சியாக*

*சென்று வந்தோம். மறு நாள் மீண்டும் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்து விட்டு வீட்டிற்குச் சென்றோம்.*

*ஒரு அன்பர், ஸ்ரீ பூண்டி சுவாமி வாயில் சிகரெட்டை வைத்து தீக்குச்சியை பற்ற வைக்கும் சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி சிகரெட்டை கையில் எடுத்துக் கொண்டு* **"கம்பங்களை நட்டுட்டு ஒயரை எல்லாம் இழுத்து விட்டுட்டு சர்வீஸ் வாங்க இங்க வந்திடறாங்கப்பா. ஒரு சிகரெட்டை வாயில வச்சிட்டு வத்திக்குச்சி கிழிச்சி வச்சி கேக்கறாங்கப்பா"** *எனறார். எனக்கு புரியவில்லை. சுவாமி சொன்னது யாருக்கு பொருந்துமோ அது அவர்களுக்கே புரியும்.*

*ஒருவர் பத்து ஆடுகளை திருடர்கள் ஓட்டிச்சென்று விட்டனர் என்று சுவாமியிடம் கூறினார்.* **"ஆடு போனா என்ன. உனக்கு வேறு ரூபத்தில நல்லது நடக்கும்''** *என்றார் பூண்டி சுவாமி. சுவாமி கூறியபடியே அவருக்கு சில நன்மைகள் நடந்தன. நல்லது நடந்தது என்று அந்த அன்பரே கூறினார். ஒரு வருட காலத்தில் அவர் வாழ்க்கையில் நிறைய மாற்றங்கள் வந்தது என்று கூறினார்.*

*ஒரு ஆங்கிலேயர் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு எதிரில் உள்ள மண்டபத்தின் அருகே அமர்ந்து இருப்பார். நான் சிலரோடு சேர்ந்து பர்வத மலைக்குச் செல்ல சுவாமிகளின் ஆசி பெற்றுக் கொண்டு அவரையும் எங்களோடு வருமாறு அழைத்தோம். அவர் ஸ்ரீ பூண்டி சுவாமியை நிலையாக நோக்கிப் பார்த்து* **"No ஈஸ்வரா. No விஷ்ணு No பிரம்மா. All in all gurudeva"** *என்றார். வைராக்கியத்துடன், அவர் சுமார் மூன்று வருட காலம் யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிட்டு இங்கேயே இருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் அவரில் மாற்றம் ஏற்பட்டு நல்ல உயர்ந்த நிலையில் உள்ளார் என்று கேள்விப் பட்டேன்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி இருந்தபோது மாதமிருமுறை வந்து சுவாமியை தரிசித்துக் கொள்வேன். ஸ்ரீ பூண்டி சுவாமி கலியுக சித்த புருஷர் என்று சொல்லலாம்.*

**நேர்காணல்: 36**
**04.11.2005, பூண்டி**

**சுப்பிரமணியம்**, வயது: 80, வீரானந்தல் கிராமம்.

*ஸ்ரீ பூண்டி மகான் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் வில்வாரணியில் தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகான் பிராயம்பட்டு கிராமத்தில் ஒரு விவசாயியின் மோட்டார் பம்ப் செட் திண்ணை மேல் படுத்துக் கொள்வார். நான் சுவாமியை தரிசனம் செய்து கொண்டு சில சமயம் இரவில் திண்ணைக்கருகில் கீழே படுத்துக் கொள்வேன். நடு இரவில் சுவாமி எழுந்து அமர்ந்து கொண்டு பட்டினத்தார் கூறியதை எனக்குக் கற்பித்தார். "***காடு, மரம், ஓடம், உடம்பு***" இருக்கின்றது என்று பரிபாஷையில் கூறுவார். ஸ்ரீ பூண்டி மகானின் பரிபாஷையை புரிந்து கொள்வது சில சமயத்தில் கடினம். நான் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பூண்டி மகான் எங்கிருந்தாலும் தேடிப் போய் தரிசனம் செய்து கொள்வேன்.*

*ஸ்ரீ பூண்டி மகானிடம் "***என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?***" என்று கேட்டேன். "***இராமலிங்க சுவாமியை விட வேண்டாம். அது மூலமா உனக்கு எல்லாம் தெரியும்***" என்று கூறினார். நான் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டு சித்த மருத்துவமும் செய்தேன். ஸ்ரீ பூண்டி மகானின் திவ்ய அருளால் நான் சித்த மருத்துவத்தில் எத்தனையோ நோய்களை குணமாக்கும் மருந்துகளைக் கண்டு பிடித்தேன். அறுவை சிகிச்சை இல்லாமல் இதயத்தில் உள்ள ஓட்டைகளை அடைக்கவும், இதயத்தில் இரத்தக்குழாயில் உள்ள அடைப்புகளை நீக்கவும், குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்குமாறு செய்யவும் மேலும் பல விதமான நோய்களை குணமாக்கும் புதுவிதமான மருந்துகளைக் கண்டு பிடித்தேன்.*

*தினந்தோறும் விடியற்காலையில் மூன்று மணிக்கெல்லாம் எழுந்து மருத்துவ பரிசோதனை, யோகா, சாதனை என்று என் வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. காயத்ரி மந்திரம் என்றால்,*

**"காயம் என்றால் தேகம். த்ரி என்றால் மனது, வாக்கு, கர்மா"** ஒன்றாக இருக்கும் படி பார்த்து கொள்ளுதல். வேறு வேறு விதமான எண்ணங்கள் மனதில் வரவிடாமல் கட்டுப்படுத்தவேண்டும்.

எத்தனையோ துறவிகள், மருத்துவர்கள், ஜோசியர்கள் மேலும் பிற தொழிலை மேற்கொண்டவர்கள் ஸ்ரீ பூண்டி மகானை தரிசித்துச் செல்வார்கள். நான் சுவாமிகள் கூறியவாறு நடந்து கொள்வேன். கோடைகாலத்தில் ஒரு நாள் என்னிடம் பணம் இல்லாததால் என் கிராமத்திலிருந்து நடந்தே வந்தேன். திண்ணை மேலிருந்த பூண்டி சுவாமி என்னைப் பார்த்தவுடனே **"வாங்க புதுப்பாளையத்தாரே. ரொம்ப நேரமா நடந்தே வர்றீங்க போல இருக்கு"** என்றார். ஆமாம் என்றேன். நான் பூண்டி மகானை வணங்கி ஸ்ரீ சுவாமிகளுக்கு வாங்கி வந்த ஓமப்பொடி பொட்டலத்தை தந்தேன். நான் வாங்கி வந்தது சிறியதாக இருந்தாலும் அன்புடன் சாப்பிடுவார். சாப்பிடும் சமயத்தில் ஒரு சிறிய துண்டு திண்ணை மேல் விழுந்தது. அந்தத் துண்டை கையில் எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். **"எதுக்கு சுவாமி அதை எடுத்து சாப்பிடறீங்க. போனால் போயிட்டு போகுது"** என்றேன். **"அது இல்லைங்க. ஆற்று மணலுக்கு வேற்று மணல். அது உங்களுக்குத் தெரியாது"** என்று கூறினார். சுவாமி ஆற்று மணலை ஆத்மாவாகவும், வேற்று மணலை ஆகாரமாகவும் வர்ணித்து கூறினார் என்று நான் பொருள் உணர்ந்தேன்.

ஸ்ரீ பூண்டிமகான் அணிந்திருந்த சட்டை மிகவும் அழுக்காக இருந்தது. புதிய சட்டை தைத்து அணிவிக்கிறேன் என்று சுவாமியை வேண்டிய பொழுது சம்மதித்தார். அந்த சமயத்தில் தையல் வேலை செய்து கொண்டிருந்த சுப்பிரமணிய சுவாமியிடம் சென்று ஸ்ரீ பூண்டி மகானுக்கு புதிய சட்டை தைத்துத் தருமாறு கூறி, தைத்தவுடன் சட்டையை எடுத்து வந்து சுவாமிகளுக்கு சமர்ப்பித்தேன். **"உனக்கு அனந்த கோடி புண்ணியம் வரும்"** என்று ஆசீர்வதித்தார்.

ஸ்ரீ பூண்டி மகான் ஒரு பெரிய மகான். முதலில் கலசபாக்கத்தில் இருந்ததால் கலசபாக்கம் சுவாமி என்றும் ஆற்றில் வெள்ளம் வந்தபோதும் அமர்ந்திருந்ததால் ஆற்று சுவாமி என்றும், கடைசியில்

*பூண்டியில் திண்ணை மேல் அமர்ந்தபிறகு பூண்டி சுவாமி என்றும் அழைத்தனர். தமிழில் பூண்டு என்றால் ஆபரணங்களை அணிவது என்று பொருள். பூ என்றால் ஆபரணம். பூண்டி என்றால் அணிவது. பூண்றது என்றால் தீயவற்றை விட்டு நல்லவற்றை கைப்பிடித்தல் என்ற பொருளும் உள்ளது.*

*ஸ்ரீ பூண்டி மகானிடம் சாந்தம், அன்பு, கருணை, உண்மை அனைத்தும் அவரிடம் இயற்கையாகவே இருந்தது. சுவாமிகள் இரவில் எப்போதும் தூங்கமாட்டார். விடியற்காலையில் பார்த்தால் கண்கள் சிவந்து காணப்படும். ஓம்காரத்தை ஜெபித்துக் கொண்டிருப்பார். ஸ்ரீ பூண்டி மகான் யாருக்காவது உபதேசம் செய்தார் என்றால் அவர்கள் புண்ணியம் செய்த பாக்கியசாலிகள். கலசபாக்கத்தை சேர்ந்த 96 வயதைக் கடந்த பட்டாபி நயினார், ஸ்ரீ சுவாமிகள் நாயுடு குலத்தைச் சேர்ந்தவர் என்று கூறினார். பட்டாபி நயினார் எனக்குத் திருமணம் செய்து வைத்தவர் ஆவார்.*

*ஸ்ரீ பூண்டி மகான் ஒரு கையில் ஐந்து விரல்களையும் காண்பிக்கிறார் என்றால் பஞ்ச பூதங்களில் எல்லாம் நிறைந்து உள்ளது என்று பொருள்.*

*ஒரு நாள் நான் வைராக்கியத்துடன் வீட்டை விட்டு ஸ்ரீ பூண்டி மகானிடம் வந்து விட்டேன். வீட்டிற்குச் செல்லக் கூடாதென்று தீர்மானித்தேன். ஸ்ரீ பூண்டி மகான் என்னைப் பார்த்து* **"ஒரு சாலை கிழக்கு மேற்காக போகுது. ஒரு சாலை வடக்குத் தெற்காக போகுது. இரண்டும் ஓர் இடத்தில் சந்திக்கும். அந்த இடத்தில் ஒரு பள்ளிக்கூடம். அந்த பள்ளிக்கூடத்தில் ஒரு தலையாரி வந்து ஒரு மூலையில் நின்று சொல்றவங்க இருப்பாங்க. கேட்கிறவங்க இருக்கமாட்டாங்க என்று தண்டோரா அடித்தார். அவனே மறுபடியும் வந்து கேட்கிறவங்க இருப்பாங்க. சொல்றவங்க இருக்கமாட்டாங்க என்று தண்டோரா அடித்தார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் வந்திட்டீங்க. உனக்கு அனந்த கோடி புண்ணியம் வரப்போகுது"** *என்றார்.*

*1960ல் நான் ஐந்து மாத படிப்பு ஒன்று படித்துக் கொண்டிருந்த சமயத்தில் சொத்துப் பிரிவினையில் எங்கள் வீட்டில் பிரச்சினைகள் எழுந்தன. முத்திரைத் தாள்களை வாங்கி எழுதி விட்டார்கள். நான்*

பூண்டி சுவாமியிடம் வந்தேன். **"இப்ப ஒண்ணும் நடக்காது. இப்ப எதுக்கு போறீங்க"** என்று கூறினார். நான் வீட்டிற்கு இப்போது வரமாட்டேன் என்று கூறினாலும் என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்றார்கள். **"நான் கட்டியிருக்கிற துணியோடு வெளியே போயிடறேன். நீங்கள் எங்கு கையெழுத்து போடச் சொன்னாலும் அங்கே கையெழுத்து போடறேன்"** என்று கூறினேன். ஆனால் ஸ்ரீ பூண்டி மகான் சொன்னபடி அந்த சமயத்தில் பாகப்பிரிவினை நடக்கவில்லை.

ஒரு கம்பெனியின் பங்கு என்னிடம் இருந்தது. அப்பங்கில் எனக்கு இலாபம் வந்து கொண்டிருந்தது. சில நாட்கள் பங்குலாபம் வரவில்லையென்று அந்த பங்கை விற்று விட நானும் என் மனைவியும் ஸ்ரீ பூண்டி மகானிடம் வந்து வணங்கினோம். **"நீங்கள் போகிற வேலை நடக்காது"** என்று கூறினார் சுவாமி. அன்று எங்கள் வேலை முடியவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு அந்த கம்பெனிப் பங்குகளை விற்று விட்டேன்.

ஸ்ரீ பூண்டி மகானின் காலில் இருந்த புண்களுக்கு ஒரு சமயம் மருந்து அளித்தேன். ஒரு வேளை மட்டும் சாப்பிட்டார். **"நீங்க இப்போது கொடுத்து விட்டீர்கள். நாளைக்கு யார் கொடுப்பார்கள்"** என்று கூறி பிறகு வாங்கிக் கொள்ள வில்லை.

**நேர்காணல்: 37**
**04-11-2005, பூண்டி**

**சின்னராஜ்**, வயது: 71, சென்னை.

*நான் தமிழ் நாட்டில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் நடத்துனராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனக்கு 44 வயதில் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைத்தது.*

*திருவண்ணாமலையில் என் உறவினர் வீட்டு சுபச்சடங்கில் கலந்து கொள்ள வந்தேன். அங்கே நண்பர்கள் கூறவே ஸ்ரீ பூண்டி மகானின் மகிமைகளை கேட்டு இரு நண்பர்களுடன் சேர்ந்து பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்ய வரிசையில் நின்றேன். நான் வீடு கட்ட கடகால் போட்டு பிறகு பணம் இல்லாமல் வேலை நின்று விட்டது. கடன் கேட்ட இடத்தில் எல்லாம் ஏதோ ஒரு தடை வந்து கொண்டிருந்தது. என் மனதிற்கு வருத்தமாக இருந்தது. ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு ஒரு சிறிய ஓடு எடுத்து அதன் மேல் கற்பூரம் வைத்து ஏற்றி ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு ஆரத்திக் கொடுத்தேன். நான் ஆரத்தி தரும் சமயத்தில் ஸ்ரீ பூண்டி மகான் சிவன் தாண்டவம் செய்வது போல் அந்த ஜோதியில் எனக்கு தரிசனம் அளித்தார். "**நல்லது நடக்கும்**" என்று கூறி ஸ்ரீ பூண்டி மகான் என் பக்கம் பார்த்த பார்வை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. அந்த நிகழ்ச்சி இன்றும் எனக்கு மறக்க முடியாத இனிமையான நிகழ்ச்சியாக உள்ளது. இன்றும் ஆரத்தி தரும் சமயத்தில் நான் அந்த ஜோதியை நினைவில் கொள்கிறேன்.*

*நான் வீட்டிற்குச் சென்ற பிறகு இரண்டு மாதத்தில் வீட்டு வேலை ஆரம்பித்தேன். கடன் தராதவர்கள் எல்லாம் பணம் அளித்தார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் வீட்டு வேலையை முடித்தேன். நான் மனதில் நினைத்த உடனே என் வீட்டு வேலையை முடித்து தந்த ஸ்ரீ பூண்டி மகானின் மகிமைகளை எவ்வாறு கூறுவது.*

வெகுகாலம் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்கு வரவில்லை. ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்த பிறகு எனக்குத் தகவல் தெரிந்தது. இப்போது மீண்டும் அடிக்கடி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துச் செல்கிறேன்.

**நேர்காணல்: 38**
**04.12.2005, பூண்டி**

**S. மணி**, வயது: 54, ஊத்தங்கரை.

*1968ல் நான் வாணியம்பாடி கல்லூரியில் P.U.C. படித்துக் கொண்டிருந்தேன். கடைசியில் தேர்வுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு என் வாழ்க்கையில் ஊகிக்க முடியாத மாற்றங்கள் நடந்தன. அந்த வருடம் தேர்வு எழுதி தோல்வி உற்றேன். வீட்டின் சூழ்நிலைகள் அனுகூலமாக இல்லாததால் படிப்பு அத்துடன் நின்றுவிட்டது.*

*தினந்தோறும் என் கிராமத்திலுள்ள நூலகத்திற்குச் செல்வேன். நூலகத்தில் பணியாற்றும் சந்தானத்துடன் நட்பு ஏற்பட்டது. அவருக்கு பக்தி அதிகம். ஒரு சமயத்தில் '**அருட்பா படி**' என்று கூறி ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை அளித்து அசைவ உணவு சாப்பிட வேண்டாம். மதுபானம் அருந்தக்கூடாது என்றும், பொய் சொல்லக்கூடாது என்றும், மகான்கள் கூறிய மேலும் சில அறிவுரைகளைக் கூறி என்னை முயற்சி செய்யச் சொன்னார். நானும் முயற்சி செய்வேன் என்றேன்.*

*நான் அசைவ உணவு சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன். மதுபானத்தை விட்டுவிட்டேன். விவசாய வேலை பார்த்துக் கொண்டு மாலையில் நூலகத்திற்குச் செல்வேன். சந்தானம் அவர்கள் ஆனந்த விகடன் வாரப்பத்திரிகையை அளித்தார். அதில் பயணக் கட்டுரையாளர் பரணிதரன் '**அருணாசல மகிமை**' முதல் அத்தியாயத்தை எழுதி இருந்தார். அதில் ஸ்ரீ பூண்டி மகானின் மகிமைகளை, அவரின் லீலைகளை எழுதி பூண்டிக்கு செல்வதற்கு பேருந்துத் தட வழி போன்ற விவரங்களையும் அதில் குறிப்பிட்டு இருந்தார். ஸ்ரீ மகானின் திருஉருவப்படத்தை அந்த புத்தகத்தில் பார்த்தவுடனே என் மனதில் ஏதோ தெரியாத ஒரு ஆனந்தம் ஏற்பட்டது. நான்கு நாட்கள் கழித்து ஸ்ரீ பூண்டி மகானின் படத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு வாரப்பத்திரிகையை எடுத்து*

வந்து சுவாமியின் படத்தைப் பார்த்தேன். சந்தானம் "**எதற்கு வாரபத்திரிகையை அடிக்கடி பார்க்கிறாய்?**" என்று கேட்டார். நான் ஸ்ரீ பூண்டி மகானின் புகைப்படத்தை காண்பித்து தரிசனம் செய்ய முடியுமா? என்று கேட்டேன். முகவரி இருப்பதால் செல்ல முடியும் என்றார். நான் ஒரு வாரம் கழித்து கிளம்பி திருவண்ணாமலையில் அருணாச்சலேஸ்வர சுவாமியை தரிசனம் செய்துவிட்டு பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு வாழைப்பழம், சிகரெட் வாங்கி கையில் வைத்து விட்டு சுவாமியின் திண்ணைக்கு எதிரில் உள்ள குடிசையில் அமர்ந்து கொண்டேன். சுவாமியின் தரிசனத்திற்காக அன்பர்கள் அனைவரும் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். ஸ்ரீ பூண்டி மகான் அன்பர்களுக்கு திருநீறு வைத்து அருள் பாலித்தார். எனக்கு மகான்களை தரிசனம் செய்து கொண்ட அனுபவம் இல்லை. வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி மகானை நோக்கினேன். சுவாமிகளின் பார்வை ஒரு மின்னல் போல் மின்னியது. அந்த மகானின் அருள் பார்வை என் மேல் விழுந்தது. தலை அசைத்து என்னை நோக்கிப் பார்த்தார்.அந்தப் பார்வை என்னை ஊசிபோல் குத்தியது. நான்கைந்து முறை அவ்வாறே என்னைப் பார்த்தார். எனக்கு பயமும், நடுக்கமும் ஏற்பட்டது. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. என்னுடம்பிலிருந்து வெளியேறிய சிறுநீர் மற்றும் விந்து ஆகியன என்னுடைகளை நனைத்தன. இதற்கு மேல் அங்கிருந்தால் ஏதாவது அபாயம் வருமென்று நினைத்து ஆற்றுக்குச் சென்று சுத்தப்படுத்திக் கொண்டு இனி இந்தப் பக்கம் வரக்கூடாதென்று மனதில் வருத்தத்துடன் வில்வாரணி சென்று ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சென்று வணங்கி விட்டு வீட்டிற்குச் சென்றேன்.

பத்து நாட்கள் கழித்து நூலகத்திற்குச் சென்றேன். "**ஆனந்தவிகடன் ஒரு புத்தகம் அதிகமாக உள்ளது. இதில் ஸ்ரீ பூண்டிமகான் புகைப்படம் உள்ளது. உன்னிடம் வைத்துக் கொள்**" என்று கூறி சந்தானம் அந்தப் புத்தகத்தைத் தந்தார். நான் ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்காக சென்று வந்த விஷயத்தை எல்லாம் அவரிடம் கூறினேன். அவர் அன்புடன் "**பயித்தியகாரா! சுவாமி அப்படி பார்த்தால் ஏதோ ஒரு காரணம்**

**உள்ளது. அது எல்லாம் சித்தர்களின் மொழி. உனக்குத் தெரியாது. உன்னில் உள்ள தீயவற்றை நீக்குவதற்காகக் கூட சுவாமி அப்படிப் பார்த்திருக்கலாம். மீண்டும் சீக்கிரம் செல். உனக்கு ஸ்ரீ பூண்டி மகானோடு ஏதோ முற்பிறவித் தொடர்பு உள்ளது**" என்று கூறினார்.

ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணை மேல் அமர்ந்த பிறகு எழவில்லை என்றும், உணவைக் குழந்தைகளுக்கு ஊட்டுவது போல் ஊட்டுகிறார்கள் என்றும், மலஜலத்தில் சுகந்த வாசனை வீசுகிறது என்றும் அன்பர்கள் கூறுவதைக் கேட்டு அவர்கள் சொல்வது உண்மையா? பொய்யா? என்று சோதிக்க மீண்டும் ஒரு முறை ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொள்வதற்காக ஒரு மாதம் கழித்து வந்தேன். ஸ்ரீ பூண்டி மகானுக்கு சமர்ப்பிக்க வாழைப்பழம், சிகரெட்டை கையில் வைத்துக் கொண்டேன். சுவாமியை வணங்கி, சிகரெட்டை வாயில் வைத்து, பழத்தை அவர் திருவடிகளில் வைத்தேன். சிகரெட்டை பற்ற வைக்கச் சொன்னார். நானும் பற்ற வைத்தேன். புன்னகையுடன் பார்த்தார். திருநீறு வைத்தார். பின்னால் இருந்தவர்கள் அவசரப் படுத்தியதால் முன் சென்று விட்டேன்.

என் குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றின. மனது உடைந்து விட்டது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை வந்து வணங்கினேன். சிறு புன்னகை செய்து திருநீறு வைத்தார். "**பயப்படாதேப்பா. எதற்கும் பயப்படக்கூடாது**" என்று கூறினார். எனக்கு எதுவும் புரியாமல் சென்று விட்டேன். இருபது நாட்களுக்குள் என் தாயார் இயற்கை எய்தினார். 70ரூபாய் வாங்கிக் கொண்டு வீட்டில் யாரிடமும் சொல்லாமல் கிளம்பி விட்டேன். கேரளா சென்று ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலயம் உள்ள இடத்திற்குச் சென்று துறவு வாழ்க்கை வாழ நினைத்தேன். கிளம்பி செல்லும்முன் ஸ்ரீ பூண்டி சுவாமியின் ஆசிகள் பெற்று செல்ல பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் என்னைப் பார்க்காமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். நான் அந்த பக்கம் பார்த்தால் இந்தப் பக்கம், இந்தப் பக்கம் பார்த்தால், அந்தப் பக்கம் என்று தலையை திருப்பி விட்டார். என் பின்னால் இருந்தவர் "**நீ தப்பு செய்தவர் போல் இருக்கிறாய். உன்னைப் பார்க்க சுவாமி விரும்பவில்லை. சீக்கிரம் சென்று விடு**" என்று முன்னாடி தள்ளி

விட்டார். என் கண்களில் கண்ணீர் பெருகியது. நான் மௌனமாக சென்று சுவாமி எதிரில் அமர்ந்தேன். சுவாமிகள் என் பக்கம் பார்க்கவே இல்லை. நான் வீட்டை விட்டு செல்ல வேண்டுமென்ற நினைப்பு நீங்கி விட்டது. சந்நியாசத்தை பற்றி நினைக்கவே இல்லை.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகானை தரிசிக்க வரிசையில் வந்து நின்றேன். யாரோ திருப்பதிக்குச் சென்று வந்த அன்பர் ஏழெட்டு கருப்புக் கயிறு வாங்கி வந்து சுவாமியின் எதிரிலுள்ள திருநீறு தட்டில் போட்டார். ஸ்ரீ சுவாமிகள் அந்தக் கயிற்றை கையில் பிடித்துக் கொண்டு திருநீற்றை அந்தக் கயிற்றில் பூசிக் கொண்டிருந்தார். என் முன் சுவாமியை தரிசித்த பக்தர்கள் அந்த கயிற்றைத் தருமாறு வேண்டினாலும் தரவில்லை. நான் சென்று சுவாமியை வணங்கியவுடன் அந்தக் கயிற்றை திருநீறுடன் சேர்த்து **'வாங்கிக்கோ'** என்று கூறி எல்லா கயிற்றையும் என் கையில் தந்தார். நான் அந்தக் கயிற்றை பத்திரமாக வைத்தேன். இன்றும் அப்படியே உள்ளது என்றாலும் எல்லாம் பொடிப்பொடியாக ஆகி விட்டது. ஸ்ரீ சுவாமி அளித்த திருநீறு, மலர்கள், சுவாமியளித்த வாழைப்பழம், ஒரு சமயம் சுவாமி திருவடிகளில் விழுந்த எலுமிச்சைப்பழத்தை பார்த்து **"சுவாமி எடுத்துக் கொள்ளவா?"** என்றபோது **"உனக்கே! அதை எடுத்துக்கோ"** என்றார். அந்த எலுமிச்சைபழம், ஸ்ரீ சுவாமி திருக்கரங்களால் அளித்த அவரது திருவுருவப்படம், ஸ்ரீ சுவாமி அன்பர்கள் அளித்த சுவாமியின் தலைமுடி, மலம் எல்லாவற்றையும் நான் பத்திரப்படுத்தினேன்.

சில நாட்கள் கழித்து வந்து பூண்டி சுவாமியை தரிசித்தேன். **"நல்லது", "நல்லது நடக்கும். செல், நல்லது"** என்று ஆசிர்வதித்தார். எனக்குத் திருமணம் நிச்சயமானது. திருமணம் செய்தபிறகு கூட ஸ்ரீ சுவாமியின் தரிசனத்திற்காக வந்தேன். 1969ல் நான் மது, மாமிசங்களை விட்டுவிட்டேன். 1974ல் சில தீயவர்கள் நட்பால் மீண்டும் மது, மாமிசம் சாப்பிட்டேன். அப்போதிலிருந்து ஸ்ரீ பூண்டி சுவாமி சன்னதிக்கு வரமுடியாமல் போனது.

ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்தார் என்று செய்தித்தாளில் வந்த தகவலைப் பார்த்து அழுதேன். 1986ல் மீண்டும்

ஸ்ரீ பூண்டி சுவாமி ஆலயத்திற்கு வர ஆரம்பித்தேன். நான் விவசாயம் செய்து கொண்டு பாறைகள் உடைக்கும் இயந்திரம் வாங்கி வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். ஒரு நாள் இரவு ஸ்ரீ பூண்டி பகவான் கனவில் காட்சி அளித்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி செய்யாறு ஆற்றில் முழங்கால் அளவு தண்ணீரில் அமர்ந்து கொண்டிருந்தார். தண்ணீர் நன்றாக சுத்தமாக இருந்தது. மணல் நன்றாக தெளிவாகத் தெரிகின்றது. நான் ஸ்ரீ சுவாமிகளிடம் நின்று கொண்டிருந்தேன். ஸ்ரீ சுவாமி, "**தண்ணீர் ஊத்துடா, தண்ணீர் ஊத்துடா எனக்கு மேலெல்லாம் எரியுது. தண்ணீர் ஊத்துடா. மொண்டு மொண்டு ஊத்துடா**" என்று கூறினார். '**நான் வெறும் கையில் எப்படி சுவாமி மொண்டு ஊத்தறது**' என்று கூறி திரும்பி பக்கத்தில் பார்த்தேன். ஸ்ரீ சுவாமிகள் "**அதோ பார். ஆலமரத்தின் இலை. அதிலே மொண்டு மொண்டு ஊத்துடா**" என்று கூறினார். நான் சென்று பெரிய ஆலமர இலையை எடுத்து வந்தேன். "**மொண்டு மொண்டு பின்னால ஊத்துடா. தேய்ச்சி தேய்ச்சி ஊத்துடா**" என்றார். முதுகு எல்லாம் தேய்த்து விட்டேன். தலைமுடி கொத்துக் கொத்தாக வந்தது. "**சுவாமி தலைமுடி ஜடை, ஜடைகளாக உள்ளது**" என்றேன். "**அது இருந்தா இருந்துவிட்டு போகட்டும். ஊத்துடா. முன்னால வந்து ஊத்துடா**" என்று கூறினார் சுவாமி. சுவாமி கூறியபடியே ஊற்றினேன். தலைமீது கூட ஊற்றினேன். இதற்குள் விழிப்பு வந்துவிட்டது. இரண்டு, மூன்று நாட்கள் கழித்து பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடம் கனவை விவரித்துக் கூறினேன். "**எத்தனையோ பக்தர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த அதிர்ஷ்டம் சுவாமி உனக்களித்தார். கோவிலுக்கு மோட்டார் கூட வாங்கித்தந்தார்கள் பக்தர்கள், ஆனால் இன்னும் போர் போடவில்லை. போர் போடும் வேலையை நீ செய்து வை**" என்றார் சுப்பிரமணிய சுவாமி. அவர் கூறியபடியே போர் போட்ட செலவை நான் ஏற்றேன். ஸ்ரீ பூண்டி மகான் எனக்களித்த வாய்ப்பாக நான் நினைத்தேன்.

ஒரு பௌர்ணமியன்று பூஜை முடிந்த பிறகு சில அன்பர்களுடன் சேர்ந்து நான் ஆற்றிற்குச் சென்று அமர்ந்து கொண்டு ஸ்ரீ பூண்டி மகானின் அற்புத லீலைகள் குறித்து பேசிக் கொண்டிருந்தோம். அச்சமயத்தில் ஓர் அன்பர் ஒரு வருடம் மழையில்லாமல், குடிக்கக்

*கூட தண்ணீர் இல்லாமல் பற்றாக்குறை ஏற்பட்டது. அச்சமயத்தில் சித்ரா பௌர்ணமியன்று அன்பர்கள் சுவாமியிடம் கூறினார்கள். மழையில்லாத காரணத்தால் பசுக்களுக்கு வைக்கோல் இல்லாமல் பனைஇலைகளை வெட்டித் தருகிறோம் என்றும், குடிக்கத் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது என்றும் தங்கள் குறைகளைக் கூறி வேண்டினார்கள். சுவாமி "***பார்க்கலாம்***" என்றார். அடுத்த மாதம் பௌர்ணமி முன்பு சிறிது மழை பெய்தது. ஆனால் கோடை வெயிலுக்கு அந்தத் தண்ணீரை பூமிஇழுத்துக் கொண்டது. ஒரு அன்பர் "***சுவாமி மழை பெய்தது, ஆனால் திருப்தியாக இல்லை***" என்று கூறவே ஸ்ரீ பூண்டி மகான். "***என்னப்பா பண்றது. நான் எங்கு எங்கியோ போய் கேட்டேன். எங்கியும் கிடைக்கவில்லை. கடைசியா தீர்த்தமலைக்கு போயி தீர்த்தகிரீஸ்வரர் கிட்ட கேட்டேன். அவர் அரை கொட்டாங்குச்சி கொடுத்தாரு. அதை கொண்டு வந்து கொடுத்தேன்பா***'' என்றாராம். சுவாமிகளின் அன்பர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அறிந்த லீலை இது.*

*"***நீ தீர்த்தமலைக்கு செல்வாய் அல்லவா. தீர்த்தகிரீஸ்வரர் தீர்த்தம் ஸ்ரீ சுவாமிகளுக்கு மிகவும் விருப்பம். எடுத்து வந்து கொடு***" என்றார் ஒரு அன்பர் என்னிடம். நான் சில நாட்கள் பௌர்ணமியன்று தீர்த்தம் எடுத்து வந்து தந்தேன். அந்த தீர்த்தத்தால் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு அபிஷேகம் செய்தார்கள். அப்படி நான் 108 முறை தீர்த்தம் எடுத்து வந்தால் எனக்கு சாப விமோசனம் கிடைக்கும் என்று நினைத்தேன். அந்த விஷயத்தை பாலமுருகனிடம் கூறினேன். அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டார். அந்த சமயத்தில் ஆறுமுகம் என்ற அன்பர் ஸ்ரீ பூண்டி சுவாமியின் சமாதியை சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார். அவரைக் காண்பித்து "***அவர் 108 முறை சுற்றி வலம் வருவதற்குள் எனக்கு இங்கு கருடதரிசனம் வேண்டும்***" என்றேன். அப்போது ஸ்ரீ சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்கு மேல்தளம் போடவில்லை. ஆறுமுகம் 108 முறை சுவாமியை வலம் வந்தபோது கருடப் பறவை பறந்து வந்து கத்திக் கொண்டே எனக்கு தரிசனம் அளித்தது. நான் என் மனதில் 108 முறை அந்த தீர்த்தத்தை எடுத்து வந்து ஸ்ரீ சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற திடமான எண்ணத்துடன் இப்போதைக்கு*

76 முறை கொண்டு வந்தேன். குடும்ப நிலைமை என்னை போக விடவில்லை. என் கோரிக்கை நிறைவேற வேண்டுமென மனதார ஸ்ரீ பூண்டி மகானை வேண்டிக் கொள்கிறேன்.

1969லிருந்து ஒவ்வொரு வருடமும் தவறாமல் கார்த்திகை தீபத்தை தரிசனம் செய்து கொள்கிறேன். ஒரு நாள் கார்த்திகை தீபத்திற்குக் கிளம்பி செங்கம் பேருந்து நிலையத்திற்கு வந்தேன். பேருந்துக்காக காத்திருந்தேன். அங்கே பக்கத்தில் ஒருவர் அகல் விளக்குகளை ஒழுங்கு படுத்திக் கொண்டு இருந்தார். அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது பேருந்து வந்தது. அதில் ஏறினேன். பேருந்து கிளம்பும் சமயத்தில் அவர் **"பூண்டி சுவாமியை தரிசிக்க செல்ல வேண்டும் என்றாய். "இன்று கார்த்திகை தீபம் அல்லவா. பத்து, இருபது அகல் விளக்குகளை வாங்கிச் சென்று அங்கே தீபம் ஏற்றிச் செல்லலாம் அல்லவா?"** என்றார். சரியென்று கூறி முப்பது அகல் விளக்குகள் வாங்கி வந்தேன். பூண்டியில் பேருந்திலிருந்து இறங்கியவுடனே ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் ஆறுமுகம் என்ற அன்பரிடம் **"உன்னை நம்பி அகல்விளக்கு வாங்கி வரவில்லை. மாலை மூன்று மணியாகிறது. இந்த சமயத்தில் எங்கே தேடுவது"** என்று கூறிக்கொண்டு இருந்தார். நான் அகல்விளக்குகளை எடுத்துச் சென்று அவர் கையில் தந்தேன். மிகவும் மகிழ்ச்சியுற்றார். அந்த வருடத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் அகல் விளக்கு, திரி முதலியவற்றை வாங்கிச் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு சமர்ப்பித்த பிறகு கிரிவலம் செல்வேன். இப்படி ஸ்ரீ பூண்டி சுவாமிகள் எனக்கு எத்தனையோ அனுபவங்களை அளித்து அவர் நினைவில், அவர் சேவையில் இருக்குமாறு அருள் புரிந்தார்.

**நேர்காணல்: 39**
**16.06.2006, பூண்டி**

**பங்காரு சுவாமி**, வயது: 72, பூண்டி.

*நான் இருபத்தியொரு வயதிலிருந்து முப்பத்தாறு வயது வரை விடியற்காலையில் மூன்று மணிக்கெல்லாம் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்கள் நிறைய இடங்களில் நடமாடினார். அஷ்ட சித்துக்களும் ஸ்ரீ சுவாமிகளுக்கு கட்டுப்பட்டு இருந்தன. சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் யாராவது அன்பர்கள்* '**பேருந்தில் ஏறுங்க சுவாமி**' *என்று கூற அந்த பக்தர் அந்த இடத்திற்குச் செல்வதற்குள் ஸ்ரீ பூண்டி சுவாமி அங்கு தோன்றி தரிசனம் அளிப்பார்.*

*ஸ்ரீ பூண்டி மகானிடம் பரிபூரண நம்பிக்கையோடு சரணடைந்தவர்கள் வெற்றி பெற்றார்கள். நம்பிக்கை இல்லாதவர்களுக்கு அவர்களின் பாக்கியம் எங்கேயாவது வெளியே செல்லும் போது, சுவாமியை தரிசனம் செய்யும் போது* "**நல்லது போய்ட்டு வா**" *என்று கூறினால் போன வேலை நிச்சயம் வெற்றி.* "**எதற்கு அது எல்லாம். கல்லும் மண்ணும் இருக்கும்**" *என்று கூறினால் போன வேலை நடக்காது என்று தெளிவாக தெரிந்துவிடும்.*

*ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த போது ஒரு நாள்* "**நம்மவீட்ல சாப்பிடலாம் வாங்க சுவாமி**" *என்று அழைத்தேன். நான் வீட்டிற்குச் சென்று* "**உணவிருக்கா?**" *என்று கேட்டேன். வீட்டில் உணவில்லை என்றார்கள். நான் மீண்டும் சுவாமியிடம் வந்தபோது,* "**என்னாப்பா இல்லைன்னு சொல்றாங்க நீ எதுக்கு வந்தே**" *என்றார் சுவாமி. ஸ்ரீ பூண்டி சுவாமி முக்காலமும் உணர்ந்த சுவாமி. நம்பியவர்களுக்கு வரங்களை மழையாகப் பொழிந்த மகான்.*

*ஸ்ரீ சுவாமி அமர்ந்து ஓங்காரத்தை ஜெபித்தால் அந்த நாதம் சுற்றுவட்டாரம் எல்லாம் எதிரொலிக்கும். ஆற்றில் அமர்ந்து இரவில்*

*சிங்கம் போல் கர்ஜிப்பார். மூன்று நாளானாலும் தொடர்ந்து செய்வார். தெரியாதவர்கள் பயப்பட வேண்டியதே.*

*சுவாமிகள் எப்போதும் யாரிடமும் கோபப்பட்டதில்லை. எந்தப் பாவியானாலும் அருள் பொழிந்தார். ஆனால் பேய், பிசாசை ஓட்டுகிறோம் என்று உடுக்கை வாசிப்பது பிடிக்காது. ஸ்ரீ சுவாமிகள் ஆற்றில் அமர்ந்திருந்திருந்தபோது ஒருவருக்குப் பேய் பிடித்தது என்றும், ஓட்டுகிறேன் என்றும் ஒரு மந்திரவாதி உடுக்கை வாசித்து ஒலி எழுப்பியபோது* **"என்னப்பா உடுக்கை சப்தம்"** *என்று கேட்டார் சுவாமி. நான் விவரத்தைக் கூறினேன். ஒரு சிறிய துரும்பு (வைக்கோல் துண்டு) என் கையில் கொடுத்து* **"கொண்டு போய் அவங்க வாசற்படியில் போட்டுவா''** *என்று கூறினார். நான் எடுத்துச் சென்று அவர்கள் வாசற்படியில் போட்டுவிட்டுச் சென்றேன். அந்த மந்திரவாதி எல்லாவிதங்களில் முயற்சி செய்தாலும் நான்கு நாட்கள் ஆனாலும் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. பலனில்லை. அதன் பிறகு பூண்டி மகானை பார்க்குமாறு கூறவே அந்த மந்திரவாதி சுவாமியிடம் வந்தார்.* **"நான் இருக்கிற பிரதேசத்தில் இதை எல்லாம் பண்ணக்கூடாது. பம்பை, உடுக்கை எங்க அடிக்கணும்? அம்மனிடம் அடிக்கணும். இங்க அடிக்கக்கூடாது"** *என்று கூறினார் சுவாமி. அவர் என் வாழ்க்கை ஆதாரம். இது தான் என்று வேண்டிக் கொள்ளவே,* **"சரிபோ"** *என்றார். அந்த மந்திரவாதி சென்றவுடன் ஒரு துண்டை சுவாமிகள் என் கையில் தந்து* **"சென்று போட்டுவிட்டு வா"** *என்றார். நான் சென்று அந்த துண்டை அங்கு போட்டவுடன் அந்த மந்திரவாதியின் வேலை நடந்தது.*

*மற்றவர்கள் அளிப்பதை வாங்கக்கூடாது என்பதைப் பற்றி சுவாமி என்னிடம்* **"யார் எது கொடுத்தாலும் வாங்க வேண்டாம். அவர்களின் குணங்கள் நமக்கு விளைவுகள் காண்பிக்கும். அப்படியே பசித்தாலும் சும்மா இரு. ஆனால் யாரிடமும் எதுவும் வாங்கிச் சாப்பிடாதே"** *என்றார்.*

**''ஒருவர் கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தால் அவர்களுக்கு உதவி செய்யக்கூடாது. ஏன் என்றால் அவர்கள் செய்த பூர்வ ஜென்ம பாவ பலன்களை அனுபவிக்கிறான். அந்த பாவத்தை நீ ஏன் வாங்க வேண்டும். அப்படி நீ செய்தால் அந்த பாவப்பலனை நீ வாங்கியவன் ஆகிவிடுவாய்"** *என்று கூறி*

**''நல்லவர்களுக்கு தருமம் செய்தால் அது நல்லது. தூய மனம் படைத்தவர்களுக்கு தானம் செய். அது நல்லது''** என்று உபதேசம் செய்தார் சுவாமி.

ஸ்ரீ பூண்டி மகான் ஆற்றில் அமர்ந்திருந்த போது இரண்டு மூன்று முறை அமர்க்களமாக ஆங்கிலத்தில் பேசினார். ஆங்கில இலக்கியம் படித்தவர் போல் பேசினார். நான் கையெடுத்துக் கும்பிட்டு **"சுவாமி எனக்கு அவ்வளவு அறிவு இல்லை"** என்று கூறினேன். **"சரி"** என்று கூறி கீழ்வரும் திருக்குறளைக் கூறினார்.

**குறள்:**

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

**பொருள்:**

எத்தகைய அறத்தை அழித்தவர்களுக்கும் வாழ்வு உண்டு. செய்த நன்றியைக் கொன்றவனுக்கு வாழ்வு இல்லை.

இந்தக் குறளின் பொருளை அரைமணி நேரம் விவரித்து தெளிவாகக் கூறினார். செய்த நன்றியை மறந்தவர்களுக்கு விமோசனமே இல்லை என்று கூறினார்.

ஸ்ரீ சுவாமி திண்ணைமேல் அமர்ந்த பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமி பெயரில் சுயநலம் கருதியவர்கள் சுய இலாபம் அடைந்தவர்கள் ஒருவரும் முன்னேற முடியவில்லை. எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தார்கள். ஒவ்வொரு சமயம் ஸ்ரீ பூண்டி மகான் கூறுவது அங்கு இருப்பவர்களின் சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்காது. அந்த சமயத்தில் அங்கு நின்று குழப்பம் அடைந்தவர்கள் ஏராளம். அங்கு நின்றிருந்தவர்களின் சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தால் அவர்களுக்கு புரிந்துவிடும். ஸ்ரீ பூண்டி மகானுக்கு பக்தர்கள் அளித்த காணிக்கைகளை வேறு யாராவது எதிர்பார்த்தால் **"அதைத் தொட வேண்டாம். கொடுக்கிறவன் அவங்க பாவ கர்மங்களை எனக்கு கொடுக்கிறாங்க. அவற்றை நான் ஜீரணிக்க முடியும். உன்னால் ஜீரணிக்க முடியாது"** என்று சுவாமி கூறுவார்.

நான் பிரணாயாமம் செய்வேன். ஒரு நாள் நான் சுவாமியிடம் கூறினேன். "**உனக்கு இந்தப் பிறவியில் இல்லை. மனைவி, மக்களோடு இருக்கிறாய். இனிச் செய்யாது நிறுத்திவிடு மறு ஜென்மத்தில் தான்**" என்றார் சுவாமி. நானும் அத்துடன் நிறுத்தி விட்டேன்.

எனக்கும், என் அண்ணனுக்கும் சொத்து விஷயத்தில் பெரிய தகராறு வந்தது. நான் ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு நடந்தவற்றைக் கூறினேன். "**சொன்ன பேச்சு கேட்கிறாரு உன் அண்ணன். இங்கே வரச் சொல்லு நான் சொல்றேன்**'' என்றார் சுவாமி. என் அண்ணனிடம் கூறவே அவர் ஸ்ரீ சுவாமிகளிடம் வந்தார். "**எதுக்கு தம்பியை கஷ்டப்படுத்தறே**" என்று கேட்டார் சுவாமி. இல்லை சுவாமி என்றார் என் அண்ணன். உடனே ஸ்ரீ பூண்டி மகான் "**இல்லை! இல்லை! கஷ்டப்படுத்தாதே. இரண்டு பேர் இருக்கிறீங்க. அன்னியோன்யமா அன்புடன் இருங்க**" என்று அறிவுரை கூறினார்.

அன்றிலிருந்து எங்களுக்கிடையில் விவாதங்களும், பிரச்சினைகளும் எழவில்லை. என் அண்ணன் மரணமடையும் வரை என்னுடன் சேர்ந்து அன்புடன் இருந்தார். அந்த மகானின் வாக்குக்கு இருந்த சக்தி அது.

என்னிடம் பணம் இல்லாத சமயத்தில் ஸ்ரீ சுவாமிகளை காலையில் தரிசனம் செய்து கொண்டு "**சுவாமி! இன்று பணமில்லை**'' என்று வேண்டுவேன். "**வரும் போ**'' என்று ஆசி கூறுவார். அன்று யார் மூலமாகவோ, எந்த உருவத்திலோ எனக்குத் தேவையான பணம் கிடைத்துவிடும்.

ஒருவர் நான் எழுதிக் கொடுத்த கடன் பத்திரத்தை வைத்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. நான் ஸ்ரீ பூண்டி மகான் அருளாசி பெற்று கிளம்பி சென்னை உயர்நீதிமன்றத்துக்குச் சென்றேன். ஒரு அந்நிய வக்கீல் என்னிடம் வந்து "**விஷயத்தை சொல்லுங்க**" என்று கேட்டார். "**நான் சிறிது நிலம் வாங்கினேன். அந்த நிலத்துக்கு அவர்கள் கேட்ட பணம் கொடுத்து விட்டேன். பதிவு செய்யும் சமயத்தில் ரூ.5000 கொடுத்தால் ஒழிய கையெழுத்து போட மாட்டோம் என்று எதிராகக் கூறினார்கள். அச்சமயத்தில் என்னிடம் பணமில்லாததால் பணியை முடிக்க கடன் பத்திரம் எழுதிக்**

*கொடுத்தேன். அந்தப் பணத்தை தரவில்லையென்றதால் வழக்கு* **போட்டிருக்கிறார்கள்**" *என்று விவரமாகக் கூறினேன். நீதிமன்றத்தின் உள்ளே சென்றவுடன்* "**பணம் வாங்கிக் கொண்டாயா? என்ன விஷயம்**" *என்று கேட்டார் எதிராளியின் வக்கீல். நான் பணம் வாங்கவில்லை என்று கூறி நடந்தவற்றை விவரமாகக் கூறினேன். என்னைப் பக்கத்தில் அமரும்படி கூறி அவரையும் கூப்பிட்டு விசாரித்தார்.* "**பணம் கொடுத்தாயா?**" *என்று என் வக்கீல் அவரைக் கேட்டார். அவர் உறுதியான பதில் கூறவில்லை.* "**பணம் கொடுக்காமல் கையெழுத்து வாங்குவது குற்றமாகும் தெரியுமா?**" *என்று கேட்டவுடனே அவர் சிறிது பயந்தார். கடைசியில் அந்த கடன் பத்திரம் செல்லாது என்று கூறினார்கள்.*

*அந்த வக்கீல்* "**எந்த ஊர் உன்னுடையது**" *என்று கேட்டார். நான் பூண்டி என்றேன்.* "**ஊருக்குச் செல்ல பணம் இருக்கா?**" *என்று கேட்டார். பணமிருக்கு என்றேன். அந்த வக்கீல் என்னிடம் தொகை (பீஸ்) வேண்டாம் என்று கூறி எதுவும் வாங்காமல் சிறிது தூரம் முன் சென்று மாயமாய் மறைந்து விட்டார். ஸ்ரீ பூண்டி மகானே எனக்காக அந்த உருவத்தில் வந்து அந்த சமயத்தில் என்னைக் காப்பாற்றி எந்த துன்பமும் இல்லாமல் செய்தார் என்று உணர்ந்தேன். இது என் வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவம் ஆகும்.*

*பர்வத மலையிலிருந்து சப்தரிஷிகளும் வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசித்துச் செல்வார்கள். ஒரு நாள் நான் பூண்டி சுவாமி சன்னிதியில் நின்றிருந்தபோது* "**என்னமோ ஒருத்தர் வரலப்பா!**" *என்றார் சுவாமி.* "**என்ன சுவாமி**" *என்றேன்.* "**என்னவோப்பா. ஆறு பேர் சித்தர்கள் வந்தாங்க. ஒருத்தர் வரலை. காரணம் என்னவென்று தெரியவில்லை**" *என்றார் சுவாமி.* "**காரணம் என்னவென்று உங்களுக்குத் தான் தெரியணும் சுவாமி. எங்களுக்கு என்ன தெரியும்?**" *என்றேன். யாருமில்லாத சமயத்தில் நன்றாக பேசுவார். இன்னும் எவ்வளவோ கூறினார். இனி நடக்கப் போகின்றவற்றை முன்பே அறிந்து அவசியமானால் ஜாக்கிரதையாக இருக்குமாறு எச்சரிப்பார்.*

*ஒரு அன்பர் மோட்டார் சைக்கிளை புதியதாக வாங்கி வந்தார். ஸ்ரீ சுவாமி அவரிடம்* "**பார்த்து போ. புதுசுப்பா**" *என்றார். ஸ்ரீ மகான்*

அப்படி சொன்னபோது அந்த அன்பர் செல்லக்கூடாது. ஆனால் அவருக்குப் புரியவில்லை. கிளம்பி சென்றார். விபத்தில் மரணமடைந்தார்.ஸ்ரீ பூண்டி மகான் சில சமயங்களில் "**போ! நான் பாத்துக்கிறேன்**" என்று கூறுவார். ஸ்ரீ சுவாமி கூறினாலும் சில சமயம் புரிந்து கொள்வது கடினம்.

ஸ்ரீ பூண்டி மகான் காலில் புண் இருந்தது. அப்புண்ணில் புழுக்கள் இருக்கும். அவற்றை சுத்தப்படுத்த முயற்சி செய்தால் "அவற்றைத் தொடாதே. என் கர்மாக்களை இப்போது அனுபவிக்கிறேன்'' என்றார் சுவாமி.

ஒரு முறை எனக்கு கடன் அளித்தவர்கள் என் சொத்துக்களை ஏலம் விடவேண்டும் என்றனர். நான் பூண்டி மகானிடம் சரணடைந்து வேண்டினேன். ''**அது நடக்காது போ**'' என்று அபயமளித்தார். மறுநாள் அந்த அதிகாரி மருத்துவ விடுமுறையில் சென்றார். அதோடு அந்த ஏலம் நின்றுவிட்டது. நான்கு மாதங்கள் கழிந்து விட்டது. நான் பணம் ஏற்பாடு செய்து கடனை அடைத்து விட்டேன்.

ஸ்ரீ பூண்டி மகானைவணங்கி மனதில் ''**என் குரு யாரு, யாருமில்லையே**" என்று நினைத்தேன். ஸ்ரீ பூண்டி மகான் கனவில் தோன்றி, "**ஓம் குரு நமச்சிவாயா! அதுவே குரு. வாங்கிக்கோ!**" என்று கூறினார். அப்படியானால் ஈஸ்வரனே என் குரு என்று கூறினார். இது ஸ்ரீ பூண்டி மகான் எனக்களித்த வரமாக பாவித்தேன்.

ஒரு அன்பர் பௌர்ணமி பூஜைக்கு வந்தார். ஸ்ரீ பூண்டி மகான் அவரிடம் ''**என்னாப்பா கருவாடு சாப்பிட்டு பூஜைக்கு வர்றது தான் வேலையா**" என்றார் சுவாமி. அவர் அப்படியே சென்று விட்டார். ஒவ்வொரு சமயம் ஸ்ரீ பூண்டி மகான் "**வந்த வேலையை விட்டுவிட்டு பந்தக்கால் ஏன் பிடிக்கிறீங்க! வந்த வேலை எதுன்னு உனக்குத் தெரியுதா?**" என்று அடிக்கடிக் கூறுவார்.

நான் குடும்ப கஷ்டங்களில் இருந்தபோது ஒரு நாள் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, "**பையன் கஷ்டப்படுகிறான். இவனுக்கு ஏதாவது செய்யுங்க**" என்று பூண்டி மகானிடம் கூறினார். ஸ்ரீ பூண்டி மகான் என்னை அழைத்து உபதேசித்தார். அதுவே எனக்கு மகானின் அருள்.

ஸ்ரீ பூண்டி மகான் எனக்கு உபதேசித்த மந்திரத்தை மனதில் ஜெபித்தவாறு எந்த காரியத்திற்குச் சென்றாலும் வெற்றியடையும். ஸ்ரீ சுவாமி உபதேசித்த நாளிலிருந்து வாழ்க்கை நடத்துவதற்காக நான் ஜாதகம் சொல்லக் கற்றுக் கொண்டேன்.

ஒருவர் இரவு ஏழு மணியளவில் ஜாதகம் பார்க்க வந்தார். அவர் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் கூறினேன். கடைசியில் அவர் **"நான் சிவில் கேஸ், கிரிமினல் கேஸ் என எத்தனை கேஸில் வெற்றி பெற்றேன். சொல்லுங்கள்"** என்று கேட்டார். நான் ஸ்ரீ பூண்டி மகானை மனதில் வேண்டினேன். எனக்கு வேறு வழி காண்பித்தார். **"உன் ஜீவனாம்சமான ஜீவ ஸ்தானத்தில் வீட்ல தோற்று போய் விட்டாய். இனி நீ எத்தனை கேஸ் ஜெயித்தாலும் எதற்கு"** என்றேன். பிறகு அந்த மனிதர் எதுவும் பேசாமல் சென்று விட்டார். ஸ்ரீ பூண்டி மகான் இப்படி என்னைக் காப்பாற்றினார் என்று மனதில் வணங்கினேன்.

ஒரு அன்பர் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து **"சுவாமி லக்னத்திற்கும், ராசிக்கும் கேது பன்னிரெண்டாம் வீட்டில் இருந்தால் மறுபிறவியில்லை என்று சொல்கிறார்கள். நீங்க என்ன சொல்கிறீர்கள்"** என்று கேட்டார். **"பக்கத்து தெருவுல நம்ப ஆளு ஜோசியம் சொல்றாரு. அங்கபோயி கேளுங்க"** என்று சுவாமி அவரிடம் கூறி அனுப்பி வைத்தார். அவர் என்னிடம் வந்து கேட்டார். **"பன்னிரெண்டாவது வீட்ல கேது இருக்கின்ற பட்சத்தில் மறுபிறவியில்லை என்று சொல்லியிருப்பார்கள். அவ்வளவுதானே? அஷ்டமாதிபதி லக்னத்தை சரிபார்ப்பதால் மறுபிறவி இருக்கும்"** என்று கூறினேன். அவர் ஸ்ரீ சுவாமியிடம் சென்று கூறினார். **"சொன்னது சரியா இருக்கு. கிளம்புங்க"** என்றார் பூண்டி மகான்.

ரிஷிகேஷிலிருந்து ஒரு சாது ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்காக வந்தார். அவர் பெயர் ஸ்ரீபாத். **"இந்த மகானைப் போல் பாரததேசத்தில் யாரும் இல்லை''** என்று கூறினார். ஸ்ரீபாத் அவர்கள் கிளம்பி இமாலயத்திற்குச் செல்லும் நேரத்தில் இங்கே இருந்த சுவாமியின் அன்பரான புருஷோத்தம நாயுடுவும் சேர்ந்து சென்றார். புருஷோத்தம நாயுடுவின் பூர்வீகம் குடியாத்தம். 60 ஏக்கர் நிலமும் உள்ளது. எல்லாவற்றையும் துறந்து சென்றார். அச்சமயத்தில் ஸ்ரீமதி இந்திராகாந்தி, திரு.வெங்கட்ராமன் அவர்களும் ஸ்ரீபாத் துறவியின்

தரிசனத்திற்காக சென்றபோது திரு.வெங்கடராமனிடம் "**நீங்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர் அல்லவா. திருவண்ணாமலை பக்கத்தில் ஒரு மகான் இருக்கிறார். தெரியுமா உங்களுக்கு**'' என்று கேட்டாராம். திரு. வெங்கடராமன் அவர்கள் காஞ்சி காமகோடி பீடாதிபதியான ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பெயரைக் கூறினார். "**அவரில்லை. அங்கே சென்று பார். ஒரு பெரிய மகான் இருக்கிறார்**" என்று கூறி அனுப்பி வைத்தார் ஸ்ரீபாத் அவர்கள். அச்சமயத்தில் அங்கே இருந்த புருஷோத்தம நாயுடு இதைக் கேட்டு இங்கு வந்த சமயத்தில் இந்த விஷயத்தை தெரியபடுத்தினார்.

ஸ்ரீமதி இந்திராகாந்தி திருவண்ணாமலையில் ஒரு கூட்டத்திற்கு வந்து ஸ்ரீஇரமண மகரிஷி ஆசிரமத்தை தரிசனம் செய்து கொண்டு நடுஇரவு பூண்டிக்கு வந்து ஸ்ரீ சுவாமிகளை தரிசித்து ஆசி பெற்றுச் சென்றார்.

ஸ்ரீகிருபானந்த வாரியார் ஒரு கிராமத்தில் சொற்பொழிவு ஆற்றும் போது சபையில் ஒருவராக அமர்ந்து கொண்டு சொற்பொழிவை கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீ பூண்டி மகானைப் பார்த்த கிருபானந்த வாரியாருக்கு ஒன்றும் புரியவில்லை. சுவாமிகள் இங்கு இருக்கிறாரே என்னவோ'' என்று பெருமகிழ்ச்சியுற்ற ஸ்ரீகிருபானந்த வாரியார் உடனே கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டார்.

நான் ஒரு நாள் கலசபாக்கத்திலிருந்து நடந்து வரும் சமயத்தில் "**இன்று சாப்பாட்டுக்கு ஒண்ணும் இல்லை சுவாமி**'' என்று மனதில் நினைத்தேன். வழியில் ஒரு விதமான '**புஸ் புஸ்**' என்ற சப்தம் கேட்டது. திடீரென காற்று அடித்தது. என் கண்ணுக்கு எதுவும் தென்படவில்லை. மனதில் வருத்தத்துடன் ஸ்ரீ பூண்டி சுவாமியை நினைத்து'' என்னைக் கொண்டு போயிடுங்க சுவாமி'' என்றேன். தெருவில் ஒரு பக்கமாக நடந்து வரும்போது ஒரு பாம்பு முன்பு சென்றது. இந்த உருவத்தில் ஸ்ரீபூண்டி சுவாமி தரிசனம் அளித்தார் என்று நினைத்தேன்.

இன்று என் கிராமத்தில் நான் இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் ஸ்ரீ பூண்டி மகானின் அனுக்கிரகத்தால் தான். எத்தனை

*கஷ்டங்கள், நஷ்டங்கள் வந்தாலும் எல்லா சமயத்திலும் எனக்கு துணையாக இருந்து காப்பாற்றி நான் குடிக்கும் கூழுக்கு நாலு ரூபாய் சம்பாதித்துக் கொள்கிறேன் என்றால் அது ஸ்ரீ பூண்டி மகான் எனக்களித்த பிச்சை ஆகும். நான் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு ஸ்ரீ பூண்டி மகான் அருளால் ஜாதகம் சொல்லிக்கொண்டு என் குடும்பத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மூன்று மகன்கள், மூன்று மகள்கள். அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர். அனைவருக்கும் நல்ல வழி காண்பித்தார். இதுவே என் குடும்பத்திற்கு ஸ்ரீ பூண்டி மகான் அளித்த பாதுகாப்பு. அந்த பகவானே ஸ்ரீ பூண்டி சுவாமி உருவத்தில் இறங்கி வந்தார்.*



ஸ்ரீ ஆற்றுசுவாமி
அமர்ந்திருந்த
ஈஸ்வரன்
கோவில்
(பழங்கோவில்)



பூண்டிகிராமத்தின் அருகே உள்ள ஆறு (செய்யாறு)

**நேர்காணல்: 40**
**11.02.2006, பூண்டி**

**S. பாபு**, வயது: 59, தோட்டபாளையம், வேலூர்,

*என் நண்பர் சொன்னதால் 03-02-1977 அன்று தைப்பூசத்தன்று பூண்டிக்கு வந்தேன். 04-02-1977 அன்று பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டேன். நான் குமாஸ்தாவாக போளூரில் நீதிமன்றத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். பிறகு அடிக்கடி வந்து ஸ்ரீ பூண்டி மகானைதரிசித்துக் கொண்டு என் கஷ்டங்களை சொன்னபோது* **"நல்லது போய்ட்டு வா"** *என்று கூறுவார்.*

*என் பையனுக்கு காதில் சீழ் வடிந்து கொண்டு இருக்கிறதென்று ஸ்ரீ பூண்டி சுவாமியிடன் அழைத்து வந்து தரிசனம் செய்து கொண்டேன்.* **"நல்லது சென்று வா"** *என்று ஆசிர்வதித்தார். காதில் சீழ் வருவது நின்று விட்டது. குழந்தைகளுக்கு காது குத்துவதற்கு கையில் பணம் இல்லாமல் பூண்டி மகானிடம் வேண்டிக் கொண்டேன். சுவாமி ஆசி வழங்கினார். எல்லாம் நல்லபடியாக நடந்தது.*

*நான் ஒருமுறை ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு அங்கேயே நின்றிருந்த சமயத்தில்* **"நல்ல வழியில நடக்கணும் என்று சொல்லி நான் நல்ல வழி காட்டிக்கிட்டு இருக்கிறேன். அவங்கவங்க விருப்பத்திற்குத் தான்தோன்றித் தனமா நடந்துக்கிட்டு இருக்காங்க"** *என்று பூண்டி சுவாமி கூறினார். எனக்கு கஞ்சா அடிப்பது, மதுபானம் குடிப்பது, பெண்களின் தொடர்பு போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாகி அந்த கெட்டப் பழக்கங்களிலிருந்து வெளியேற முடியாமல் இருக்கின்ற என்னைப் பார்த்து இப்படிக் கூறினார் என்று புரிநது கொண்டேன். நான் எத்தனை செய்தாலும் அந்த மகான் என்னை அரவணைத்து காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்.*

*ஒரு அன்பர் சிகரெட்டில் கஞ்சாவை வைத்து ஸ்ரீ பூண்டி மகானுக்கு அளித்தார். எனக்கு கஞ்சா பழக்கம் இருப்பதால் நானும்*

அப்படியே செய்தேன். ஒரு நாள் விருப்பமாக பிடித்தார். இரண்டாவது முறை உணவு சமயம் "**ஏதோ தடங்கல்**" என்று கூறி பக்கத்திலிருந்த மரப்பெட்டி மீது வைத்து, "**செய்யடா! செய்யடா! செய்யடா! ஜல்சா பண்ணுடா! பண்ணுடா!**" என்று சினிமாப்பாட்டு போல் பாடினார். சுவாமி கூறுவது எனக்குப் புரிந்தது. ஆனால் கடைபிடிக்க முடியவில்லை.

ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்திருந்தத் திண்ணைக்கு முன்பு கற்பூரம் ஏற்ற ஒரு தட்டை உரி போல் கட்டி வைத்திருந்தனர். அது கொஞ்சம் இறங்கி இருந்தது போல் இருந்தது. நான் கயிற்றை சரிசெய்து கட்டும் சமயத்தில் ஸ்ரீ சுவாமி, "**நல்லா இழுத்துக் கட்டு**" என்று கூறினார். கட்டுகின்ற தட்டை நன்றாக இழுத்துக் கட்டும்படியும் பொருள் கொள்ளலாம். மனதை அலைபாயவிடாமல் நிலையாக வைக்கும்படி பொருள் வருமாறு கூறினார் என்றும் அறிந்தேன்.

நான் எத்தனை பாவம் செய்தாலும் என்னை ஒவ்வொரு நொடியும் நடத்தி வந்தவர் கருணைக்கடல் ஸ்ரீ பூண்டி மகான்.

ஸ்ரீ பூண்டி மகான் நவம்பர் 3, வெள்ளிக்கிழமை 1978 அன்று மஹாசமாதியடைந்த விஷயமறிந்து உடனே கிளம்பி பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் எப்போதும் போல் திண்ணையில் அமர்ந்த நிலையிலேயே இருந்தார். சனிக்கிழமை மாலை ஸ்ரீ சுவாமி மூக்கிலிருந்து சிறிதளவு இரத்தம் வழிந்தது. மூன்றாவது நாள் சமாதி செய்தார்கள்.

**நேர்காணல்: 41**
**11.02.2006, பூண்டி**

**K.C. தன்சிங்**, வயது: 65, 55/2 பெங்களூர் ரோடு, வேலூர்.

*எனக்கு முப்பது வயதாக இருக்கும்போது என் மனைவி, மகனுடன் சேர்ந்து வந்து முதல்முறை ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். வீட்டில் சமைத்து எடுத்து வந்த உணவை உண்டு மாலை வரை இருந்து கிளம்புவதற்கு முன்பு மீண்டும் சுவாமியை தரிசனம் செய்துவிட்டு* **'போய் வருகிறோம் சுவாமி'** *என்று விடைபெற்றோம்.* **'நல்லது போய் வா'** *என்று ஆசிர்வதித்து திருநீறு வைத்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அன்பர்கள் சொன்னதைப் கேட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் வந்து சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். நான் எதாவது வேண்டும் என்று எப்போதும் ஸ்ரீ பூண்டி மகானை வேண்டியதில்லை. நம் மனதில் உள்ளது ஸ்ரீ பூண்டி மகானுக்குத் தெரியும். ஆதலால் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைத்தேன்.*

*என் மனதில் ஸ்ரீ பூண்டி சுவாமியை பார்க்க வேண்டும் என்று எண்ணியபொழுது வந்து தரிசனம் செய்து செல்வேன். ஏதோ ஒரு சக்தி என்னை ஈர்த்து அடிக்கடி வருமாறு செய்தது. வியாபாரமும், குடும்பமும் முன்னேற வேண்டுமானால் சுவாமிகள் செய்வார் என்ற நம்பிக்கை இருந்தது. நான் வேலூரில் கோணிப்பை மண்டி வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். சில வியாபாரிகள் கூட என்னோடு ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்காக வந்தார்கள். அனைவரும் வாரத்தில் ஒன்றிரண்டு முறை சுவாமிகளை தரிசித்துச் செல்வோம். ஒரு சமயம் என் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது. மருத்துவரிடம் சென்றேன். எல்லா பரிசோதனையும் செய்து சர்க்கரை வியாதி உள்ளது என்று முடிவு செய்து உணவுக் கட்டுப்பாடு வைத்து மருந்துகளை சாப்பிடச் சொன்னார். மருத்துவர்கள் கூறியபடி நான் மருந்துகளை உபயோகித்தேன். ஒரு*

நாள் என் நண்பர்களோடு சேர்ந்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்தேன். ஒரு நண்பர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடம் '**என்ன சுவாமி! நம்ம கோணிப்பை மண்டிகாரருக்கு சர்க்கரை வியாதி வந்திருக்காம். அதை சரி பண்ணக் கூடாதா**' என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமி என்னை நோக்கிப் பார்த்து "**அட அவருக்கு சர்க்கரை வியாதி இல்லைப்பா**" என்றார். அங்கிருந்த அனைவரும் குழப்பம் அடைந்தனர். எனக்கு மருத்துவர்கள் எல்லா பரிசோதனையும் செய்து சர்க்கரை வியாதி உள்ளது என்று முடிவு செய்து மருந்துகள் கூட தந்தார்கள். ஸ்ரீ சுவாமி இல்லை என்கிறார் என்று சுப்பிரமணிய சுவாமிக்கு சந்தேகம் வந்து மீண்டும் சுவாமியிடம் வந்து "**சுவாமி மருந்து ஏதாவது சாப்பிடலாமா என்று கேட்கிறார்கள்**" என்று கேட்டார். மீண்டும் ஒருமுறை பூண்டி சுவாமி என்னைப் பார்த்து "**அது எல்லாம் ஒண்ணும் இல்லைப்பா. அவருக்கு சர்க்கரை வியாதியே இல்லைன்னு சொல்றேன்**" என்றார். எனக்கும் என் நண்பர்களுக்கும் வியப்பு ஏற்பட்டது. சிறிது நேரம் பின்பக்கம் சென்றோம். எங்களுக்கு எதுவும் புரியவில்லை. மீண்டும் மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்து கிளம்புவதற்கு முன்பு பூண்டி சுவாமியிடம் விடைபெற்றோம். "**நல்லது போய்ட்டு வா**" என்று ஆசி வழங்கினார்.

நான் வீட்டிற்குச் சென்றவுடனே Dr. கிருஷ்ணமூர்த்தியிடம் சென்று "**என் சுவாமி எனக்கு சர்க்கரை வியாதியில்லை என்று சொன்னார்**" என்றேன். அவர் சிறிது நேரம் சிரித்து பிறகு "**என்னங்க, இந்த காலத்தில் சுவாமி, பூதம் என்று சொல்கிறீர்கள். விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறி விட்டது. உணவு சாப்பிடும் முன்பு, சாப்பிட்ட பின்பு பரிசோதனை செய்தோம். எல்லா பரிசோதனை முடிவும் உள்ளது. மீண்டும் இப்படி சொல்றீங்க**" என்று என்னை சமாதானப் படுத்தப் பார்த்தார். "**இல்லை. என் சுவாமி சர்க்கரை வியாதி இல்லைன்னு சொன்னாரு**" என்று நம்பிக்கையுடன் கூறினேன். சரியென்று அடுத்த நாள் காலையில் உணவு சாப்பிடும் முன்பு, சாப்பிட்ட பிறகு பரிசோதனை செய்து கொண்டு மண்டிக்குச் சென்றேன். முடிவு மருத்துவருக்கு தெரிந்தவுடன் அவர் எனக்கு போன் செய்து "**சீக்கிரமா வாங்க. அவசியம் உங்களோடு பேசணும்**" என்றார். ஏதோ நடந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டே

சென்றேன். மருத்துவர் ‘‘**மாத்திரையெல்லாம் எழுதிக்கொடுத்தேன் இல்லையா? என்ன செய்யறீங்க**” என்று கேட்டார். “**தவறாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்**” என்று கூறினேன். அந்த மருந்துகளை உடனே எடுத்து வருமாறு கூறினார். வீட்டிற்குச் சென்று எல்லா மருந்துகளையும் எடுத்து வந்து காண்பித்தேன். மருத்துவர் எல்லா மருந்துகளையும் கையில் எடுத்து “**இவற்றிற்கு இனி வேலையில்லை. என்னிடமே இருக்கட்டும். நீங்க நேராக மணிஷ் கேப் சென்று இரண்டு இனிப்பு சாப்பிட்டு பிறகு நன்றாக சர்க்கரை போட்டு காப்பி சாப்பிடுங்கள். நீங்கள் சர்க்கரை போட்ட காப்பி சாப்பிட்டு நிறைய நாட்கள் ஆகிவிட்டது. பிறகு வாருங்கள். நாம் பேசணும்**” என்று கூறி அனுப்பி வைத்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி அனுக்கிரகம் இப்படி செய்தது என்று மகிழ்ச்சியாக சென்று அங்கூர் பூந்தி, ஜாங்கிரி சாப்பிட்டு காப்பி குடித்து மீண்டும் மருத்துவரிடம் சென்றேன். “**நாம் பார்த்தது நல்லதாப் போனது. சர்க்கரை உங்களுக்கு மிகவும் குறைந்து விட்டது. பார்க்காமல் இருந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். அதனால் இப்போது சர்க்கரை நிறைய சாப்பிடுங்கள்**” என்று கூறியவுடனே என்னில் பெருமகிழ்ச்சி வெள்ளம் எழுந்தது. சர்க்கரை சாப்பிடக் கூடாது என்று சொன்ன மருத்துவரையே சர்க்கரை நிறைய சாப்பிடுமாறு சொல்லும்படிச் செய்தார். எல்லையில்லாதவர் ஸ்ரீ பூண்டி மகான் எனக்கு சர்க்கரை வியாதி இல்லாமல் செய்து நல்ல ஆரோக்கியத்தை வரமாக அளித்தார்.

நான் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி பூஜைக்கு வந்து சுவாமிகளை தரிசனம் செய்து கொள்வேன். ஒரு முறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பூஜை செய்யும் சமயத்தில் “**என்ன சுவாமி இவர் கடைக்கு எல்லாம் நீங்க போறதில்லையாம்**” என்று கேட்டார். எனக்கு அப்படி எந்த எண்ணமும் இல்லை. ஆனால் சுப்பிரமணிய சுவாமி கேட்டதற்கு பூண்டிமகான் “**யாரு சொன்னாங்கப்பா. அவர் கடைக்கு நான் போகலைன்னு சொல்லிட்டு. நான் இங்கிருந்து நேரா காட்பாடிக்கு போனேன். அப்படி போயி இரயில்வே ஸ்டேஷனுக்கு போனேப்பா. அங்க நமக்கு வேண்டியவங்களையெல்லாம் பார்த்திட்டு உள்ளேயே சென்று அங்க இருக்கிற நம்ப அன்பர்களையெல்லாம்**

**பார்த்திட்டு அங்கிருந்து நேரா மார்க்கெட்டுக்கு உள்ள வருவேன்ப்பா அப்படி வந்து இவர் கடையில உட்கார்ந்து அப்புறமா வரேன்பா. யாரு சொன்னாங்கப்பா. நான் போகாமா இருப்பேனா”** என்று கூறினார். நான் என்றும் மார்க்கெட்டின் உள்ளே கடை இருப்பதைச் சொன்னதில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்களே எல்லாவற்றையும் அடையாளங்களுடன் கூறி வழிகூட சொன்னார் என்றால் சுவாமி தவறாமல் கடைக்கு வந்து போகிறார். ஆனால் நான் அடையாளம் கண்டு கொள்ள வில்லை என்று அறிந்து கொண்டேன்.

நான் மண்டிக்குச் சென்று அங்கிருந்த சாதுக்களிடம் கூறினேன். ஒரு சாது “**ஸ்ரீ சுவாமி பல உருவங்களில் வருவார். உங்களுக்குத் தெரிவதில்லை. இனிமேல் எந்த உருவத்தில் வந்தாலும் ஸ்ரீ பூண்டி சுவாமி அந்த உருவத்தில் வந்தார் என்று வணங்கு!!**“ என்றார். அப்போதிலிருந்து எங்கள் கடைக்கு சாதுக்கள் வர ஆரம்பித்தார்கள். வந்தவர்களை உபசரித்து வணங்குவேன். கடைக்கு வந்து போகும் சாதுக்களை பார்த்தவுடன் ஸ்ரீ பூண்டி சுவாமி புகைப்படம் வைக்க வேண்டும் என்று நினைத்தேன். என் கடைக்கு எதிரில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருவுருவப்படத்தை வைத்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து மயிலை குருஜீ சுவாமிகளைக் கொண்டு பூஜை செய்தோம். இன்று எத்தனையோ பக்தர்கள் சுவாமிகளை வணங்கி கொண்டு இருக்கின்றனர். ஸ்ரீ பூண்டி சுவாமி ஏதோ ஒரு உருவத்தில் அங்கு வந்து செல்கிறார் என்று தெரிந்து அப்படி ஏற்பாடு செய்தேன். இப்போது ஓர் ஆலயம் போல் அமைக்கப்பட்டுள்ளது.

வேலூரில் காளாம்பட்டு சுவாமி என்று ஒரு துறவி இருக்கிறார். அவர் இளம் வயதில் அங்கங்கே நடமாடிக் கொண்டிருந்தார். யாராவது உங்கள் வயது என்னவென்று கேட்டால் “**எனக்கு 18**” என்று கூறி தாடியை கோதிக் கொண்டே ஆனந்தமாகக் கூறுவார். அவர் சிறு வயதிலிருந்து சந்நியாச வாழ்க்கை வாழ்கிறார். அவரை “**மணி சுவாமி**” என்றும் ஜடை சுவாமி என்றும் அழைத்தனர். அவர் வயது சுமார் 80 வயதிருக்கும். அவர் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்து எதிரில் நின்றவுடன் “**18, 18 என்று சொன்னால் வயசு கூடும். பார்க்க வேண்டியதை பார்க்கணும். அடைய வேண்டியதை அடையணும்**”

என்றார் ஸ்ரீ பூண்டி மகான். அவர் ஆச்சர்யமும்., ஆனந்தமும் அடைந்தார். வேலூரில் நண்பர்களோடு பேசியது இங்கு சுவாமிகள் கூறுகிறார் என்றால் முக்காலமும் உணரக் கூடிய ஞானி. சாதாரணமானவர் கிடையாது. **“இவரே என் குரு”** என்று மனதில் நினைத்துக் கொண்டு கைகளை கட்டிக் கொண்டு மௌனமாக ஸ்ரீ பூண்டி சுவாமி எதிரில் நின்று கொண்டார். ஸ்ரீ சுவாமி, **“உனக்கு ஊருக்குப் பக்கத்தில் இடம் கிடைக்கும். அங்க உட்காரு. எல்லாம் அங்கேயே கிடைக்கும் எங்கும் நீ தேடத் தேவையில்லை”** என்று ஆசிர்வதித்தார். அதையே குருதேவரின் ஆணையாகப் பாவித்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் ஆசியைப் பெற்று கிளம்பி வேலூருக்கு வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி சொன்னபடியே அவருக்கு காளாம்பட்டு கிராம மக்கள் மலைப் பக்கத்தில் இடம் அளித்து **“ஆசிரமம் அமைத்துக் கொள்ளுங்கள். உணவுக்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்''** என்று கூறினார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி கூறியது அந்த இடமே என்று முடிவு செய்து ஆசிரமம் ஏற்பாடு செய்து கொண்டார். ஒரு அறையைப் பூட்டி அதிலேயே இருந்தார். பக்தர்கள் யாராவது வந்தால் உள்ளயிருந்தே பார்ப்பார். வந்தவர் பக்தியுடன் வந்தால் பூட்டைத் திறக்கச் சொல்லி அவருக்கு தரிசனம் அளிப்பார். இல்லையென்றால் வெளியே இருந்து வணங்கிச் செல்ல வேண்டியதுதான். ஸ்ரீ பூண்டி சுவாமி அனுக்கிரகத்தால் இப்படி இருக்கிறேன் என்று ஸ்ரீ காளாம்பட்டு சுவாமிகள் நேரிடையாக என்னிடம் கூறினார்.

ஸ்ரீ காளாம்பட்டு சுவாமிக்கு ஒரு சீடர் இருந்தார். அவர் பெயர் குலசேகரன். தமிழ் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டு மணி சுவாமிக்கு சேவைகள் செய்து வந்தார். அவரும் சந்நியாச வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். மணி சுவாமி எண்ணங்கள் ஒருவிதமாக இருந்தது என்றால் குலசேகரன் அவர்களின் எண்ணங்கள் வேறுவிதமாக இருந்தது. ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் போல் அங்கங்கே சென்று ஆலயங்களில் பக்தி பிரச்சாரம் செய்ய வேண்டும்.ஆன்மீகத்தை அனைவருக்கும் போதிக்க வேண்டும் என்பது அவரது எண்ணங்கள். குலசேகரருக்கு ஒரு நாள் நன்றாக பசியெடுத்தது. பசியால் எங்கேயாவது சென்று சாப்பிடவேண்டும்

*என்ற எண்ணம் எழும். எதற்கு இப்படி? பசியெடுத்தால் உண்வு சாப்பிடாமல் இருக்க முடியாதா? ஸ்ரீ பூண்டி சுவாமியைத் தேடி உணவு அளிக்கிறார்கள் அல்லவா. அப்படி நமக்கும் எடுத்து வந்து தரமாட்டார்களா? எதற்கு தரக்கூடாது? நான் துறவி போல் இருக்கிறேன். சாதனை செய்கிறேன். ஆன்மீக வாழ்க்கை நடத்துகிறேன். உண்மையைக் கடைப்பிடிக்கிறேன். வேறு ஆலோசனை இல்லாமல் இருக்கிறேன். தன்னைத்தானே பரீட்சை செய்ய வேண்டுமென்று மனதில் நினைத்து நேராக திருவண்ணாமலை சென்று ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் ஆலயம் கிழக்கு கோபுரத்துக்கு அருகில் நின்று கொண்டார். இங்கேயே நின்று கொண்டு இருக்க வேண்டும். யாரையும் கேட்கக் கூடாது. யாராவது உணவு எடுத்து வந்து தரவேண்டும் என்று மனதில் நினைத்து அப்படியே நின்றார். பக்தர்கள் அவ்வழியில் வந்து போய்க் கொண்டிருந்தாலும் ஒருவரும் அவரைக் கண்டுகொள்ளவில்லை. குலசேகரருக்கு நன்றாக பசிக்கிறது, ஒருவரும் கேட்கவில்லையென்று கோபம் ஏற்பட்டு நேராக ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் செல்லக் கிளம்பினார். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று* **"என்ன உங்கள் கதை? எனக்கு எதற்குத் தரமாட்டேன் என்கிறீர்கள்?"** *என்று இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டும் என்று எண்ணி நடந்தே பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணைக்கு அருகில் நின்று கொண்டார். உடனே ஸ்ரீ பூண்டி சுவாமி,* **"இவன் எங்கு எங்கோ போயி சுத்திட்டு வர்றானாம். என்கிட்ட வந்து இரண்டுல ஒண்ணு பார்க்கணும்னு! நான் என்ன பாக்கெட்லயா வச்சிருக்கேன். வாங்கிக்கோன்னு குடுக்கறத்துக்கு"** *என்று கூறினாராம். குலசேகரருக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்கள் தன் மனதில் உள்ள எண்ணங்களை கூறுகிறாரே. ஆனால் எனக்கு எதுவும் தெரியாது அல்லவா? யாராவது வந்தாலும் நீங்கள் யார் என்று கேட்டு எல்லா விவரமும் அறிகிறோம். நான் வந்து இங்கு நின்றவுடன் என் மனதில் எழுந்த எண்ணங்களைக் கூறினார். நான் யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால் நான் சாதிக்க வேண்டியது இன்னும் நிறைய உள்ளது. எல்லாம் தெரிந்து கொண்டு முன்னோக்கிச் சென்றால் அப்போது எல்லாம்*

கிடைக்கும். என்னிடமே குறை உள்ளது என்ற உண்மையை உணர்ந்தவுடன் ஸ்ரீ பூண்டி சுவாமி, **“நீ சும்மா எதிர்பார்த்துக்கிட்டு சுத்த வேண்டாம். மனசை அலைபாயவிடாமல் நீ இருக்கும் இடத்திலேயே ஓரிடம் கிடைக்கும். அந்த இடத்தில் இரு. உனக்கு எல்லாம் பலிக்கும். அப்போது உனக்கு எது கிடைக்கணுமோ, அது கிடைக்கும். அது வரையிலும் நீ பொறுமையா இரு”** என்று கூறி ஆசிர்வதித்தார். அப்படியே வேலூரில் ஒரு அன்பர் இடம் அளித்தார். அந்த இடத்தில் அவர் ஆசிரமம் ஒன்றை ‘‘**இராமகிருஷ்ணாஸ்ரமம்**’’ என்ற பெயரில் அமைத்தார். இப்போது ஸ்ரீ பூண்டி சுவாமி அருளால் அவர் குலசேகர சுவாமியாக இருக்கிறார்.

திருவண்ணாமலையிலிருந்து ஒரு துறவி ஸ்ரீ பூண்டிசுவாமியின் தரிசனத்திற்காக வருவார். அந்தத் துறவி வேலூரில் உள்ள என் கடைக்கும் வருவார். அத்துறவி சுவாமியிடம் எந்தக் கோரிக்கைகளையும் வேண்டமாட்டார். ஏதாவது மனதில் நினைத்து சுவாமிகளுக்கு எதிரில் உள்ள மண்டபத்தில் அமர்வார். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் யாருக்கோ மறைமுகமாகக் கூறுவது போல் பரிபாஷையில் கூறுவார். அத்துறவிக்கு சமாதானம் கிடைக்கும். அதன் பிறகு அத்துறவி கிளம்பிச் செல்வார். ஒரு நாள் அத்துறவி மனதில் ‘‘**இத்தனை நாள் உங்களை தரிசனம் செய்து செல்கிறேன். திருவண்ணாமலையில் மலை மீது ஒரு குடிசை போட்டு அமர்ந்து உள்ளேன். ஞானம் என்றால் என்ன என்று தெரியவில்லை. வீடு, வாசல் விட்டு வந்து இத்தனை நாட்கள் துறவி வாழ்க்கை வாழ்ந்தும் பலனில்லை. ஏன் சுவாமி கொடுக்கக்கூடாது. அதற்கு ஒரு வழி சொல்லலாம் இல்லையா சுவாமி**” என்று எண்ணியவாறு சுவாமிகளையே பார்த்தவாறு அமர்ந்திருந்தார். **“விழிப்புறம் போய் பார்”** என்று கூறினார் சுவாமி. அதையே பதிலாகப் பாவித்து விழுப்புரத்தில் யாரையோ பார்க்கச் சொல்கிறார் என்று நினைத்து உடனே கிளம்பிச் சென்றார். விழுப்புரத்தில் எவ்வளவு தேடியும் அங்கு யாரும் மகான் இருப்பதாக தெரியவில்லை. மகான்களின் சமாதி கூட இருப்பதாக தெரியவில்லை. மறுநாளும் தேடிப்பார்த்துவிட்டு சோர்ந்து போய் திருவண்ணாமலைக்கு திரும்பி விட்டார். பிறகு பூண்டி சுவாமியிடம் வந்து மண்டபத்தில்

அமர்ந்து கொண்டு மனதில் "என்னை விழுப்புரம் போகச் சொன்னீர்கள். நீங்க வந்து எனக்கு காண்பிக்கணும் அல்லவா. நீங்கள் இங்கேயே உட்கார்ந்து கொண்டு என்னை மட்டும் போகச் சொன்னீர்கள். எனக்கு எதுவும் தெரியவில்லை. என்னோடு நீங்களும் வாங்க'' என்று எண்ணினர். "என்னாப்பா. விழிப்புறம் போய் பார்க்கச் சொன்னால் இவர் விழுப்புரம் போறார். இவங்க எல்லாம் எங்கே உருப்பட போறாங்க" என்றார் பூண்டி மகான். அப்போது அதிர்ச்சியுற்று ஸ்ரீ பூண்டி மகான் கூறியதற்குப் பொருள் புரியாமல் புத்திக் குறைந்து சென்றேன் என்று எண்ணியவுடன் விழிப்புறம் என்றால் நம் பார்வை உள்நோக்கி பார்க்கிறது என்று அறிந்தேன். உடனே சுவாமிகளிடம் சென்று வணங்கி ஆசி பெற்று சென்றவுடன் தியானத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டதாக என்னிடம் அத்துறவி கூறினார். இப்போது அவரை அருணாச்சலஸ்வாமி என்று அழைக்கிறார்கள். அவரது குலம் நாவிதர் (மருத்துவ குலம்). சிறிய வயதில் குடும்பத்தைத் துறந்து வந்து விட்டார். என் கடைக்கு வந்த போது "ஸ்ரீ பூண்டி சுவாமி அனுக்கிரகத்தால் எனக்கு எல்லாம் கிடைத்தது. நாம் பிறர் சொத்தை எதிர்பார்க்கக் கூடாது. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் முதலிய ஆறினையும் ஜெயிக்கணும். அப்படி இருந்தால் தியானம் கைகூடும். தியானம் கைக்கூடிய பொழுது எல்லாம் கிடைக்கும். உலகியல் பொருள் மீது பற்று வைக்காமல் ஸ்ரீ பூண்டி சுவாமியை சரணடைந்தால் ஞானத்தை அளிப்பார். ஞானத்தை பெற்ற பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் உலகம் என்றால் என்னவென்று பொருள் புரியும்".

கருமாரப்பட்டியில் ஒரு சுவாமி இருக்கிறார். அவர் கூட ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டார். அவர் பெயர் கருமாரப்பட்டி வெள்ளையானந்த சுவாமி. அவர் தையல்வேலை செய்து கொண்டிருந்தார். அவர் மனைவியோடு சேர்ந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்தார். "நீ ஏன் இங்கு வருகிறாய். நீ போய் உங்க வீட்ல உட்காரு. நான் வர்றேன்" என்று கூறி அவருக்கு அருள் புரிந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி. அவர் வீட்டிற்குச் சென்றவுடனே ஸ்ரீ பூண்டி சுவாமி உட்கார சொன்னதால் அவர் வீட்டு திண்ணை மீதே

அமர்ந்து கொண்டார். அதன் பிறகு அவர் எழவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமியை ஒவ்வொரு நொடியும் நினைத்து அவர் முகம் எல்லாம் ஸ்ரீ பூண்டி மகான் முகத்தோற்றம் போலவே மாறிவிட்டது. தலைமுடி கூட ஜடைவிழுந்து நீளமாக வளர்ந்து விட்டது. ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் பரிபூரண அனுக்கிரகம் அவருக்கு கிடைத்ததால் அவர் பேச்சு இனிமையாக மிருதுவாக இருக்கும். எத்தனையோ பக்தர்கள் வந்து செல்கின்றனர். அவர் சொன்னது நடக்கின்றது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் எத்தனையோ பேர் மகான்கள் ஆனார்கள்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு தினந்தோறும் ஆறுகால பூஜை செய்வார்கள். காலை ஏழுமணிக்கு முன்பு, பத்து மணிக்கு, பிற்பகல் பன்னிரெண்டு மணிக்கு, மாலை நான்கு மணிக்கு, சூரியன் மறையும் நேரம் ஏழுமணிக்கு, இரவு சுமார் ஒன்பது மணிக்கு சுவாமிகளை படுக்க வைக்கும் முன்பு பூஜை செய்வார்கள். ஸ்ரீ பூண்டி மகானுக்கு அபிஷேகம் செய்யும் சமயத்தில் திரை போடுவார்கள். அச்சமயத்தில் நான் உள்ளே இருக்கும் பாக்கியத்தை பூண்டி சுவாமி அளித்தார். அபிஷேகம் செய்து ஆடைகளை மாற்றியபிறகு ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு கிருஷ்ணர் கொண்டை போட்டு பூ மாலையால் அலங்காரம் செய்து ஆரத்தித் தருவார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் மல ஜலங்களை நீக்கி சுத்தப்படுத்திய நீரை அபிஷேக தீர்த்தத்தோடு கலந்து உள்ளே இருந்த அனைவரும் உள்ளங்கையில் பிடித்து போட்டியிட்டு அருந்துவோம். பவித்ர தீர்த்தமாக பாவித்து அனைவரும் அருந்துவோம். அத்தீர்த்தம் நல்ல வாசனை வீசும். அத்தீர்த்தத்தை அருந்துவதை தேவரகசியமாக வைத்திருந்தோம். இதுவரை யாரிடமும் கூறியதில்லை. வெளிப்படையாக சொன்னதில்லை. ஸ்ரீ சுவாமிகளின் ஆடைகளை சுத்தப்படுத்த வெளியே இருக்கும் பக்தர்கள் போட்டியிடுவார்கள். வெளியே வரும் சமயத்தில் யார் கைக்கு கிடைக்கிறதோ அதை அவர்கள் அதிர்ஷ்டமாக பாவித்து அந்த ஆடைகளை சுத்தம் செய்த நீரைக் கூட தீர்த்தமாக அன்பர்கள் அருந்துவார்கள். ஆடைகளில் இருந்த மலத்தை பத்திரமாக எடுத்து பத்திரப்படுத்தினார்கள். அதை ஒரு பெரும் பாக்கியமாக கருதினார்கள்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு கைக்குட்டையால் முகம் துடைக்கும் போது இருமினார். அங்கே துப்புவதற்கு முடியாததால் துப்ப முடியவில்லை என்று நினைத்து “**என்ன சுவாமி. உங்களுக்கு ஏதாவது ஒரு பாத்திரம் வாங்கி வந்துத் தருகிறேன்**” என்று கேட்டேன். “**அட எனக்கு ஒண்ணும் வேண்டாம்பா. எனக்கு எதுக்கு. வாங்க போங்க**” என்றார் பூண்டி சுவாமி.

ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கோவிந்தராஜீலுநாயுடு மிகவும் நெருக்கமாக இருப்பார். நான் சென்று அவரிடம் ‘‘**சுவாமிகள் இருமியபொழுது சளியை துப்புவதற்கு கஷ்டப்படுகிறார். நான் பாத்திரம் வாங்கி வருகிறேன் என்றாலும் சுவாமி வேண்டாம் என்கிறார்**” என்றேன். அவர் ‘‘**என்னப்பா! சுவாமி இருமுவதைப் பார்த்தாய் துப்புவதைப் பார்த்தாயா?**” என்று கேட்டார். இல்லை என்றேன். பிறகு அவரே “**ஒரு வேளை சுவாமி துப்பினாலும் பக்தர்கள் அதையும் விட்டு வைக்கமாட்டாங்கன்னு தெரியும். அதற்காக அவர் அப்படி செய்ய மாட்டார்**” என்று கூறினார்.

தைப்பூசத்தன்று ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு செய்யும் பூஜைகளை திருவிழாபோல் உற்சாகமாக வேடிக்கையாகச் செய்வோம். ஒரு சமயம் தைப்பூசத்தன்று நான் வேலூரில் இருந்து புறப்பட்டேன். பேருந்தை தவறவிட்டேன். அந்தப் பேருந்து பூண்டியை சேர்ந்தவுடன் பூஜையை தொடங்குவார்கள். நான் வேறு ஒரு பேருந்தில் கலசபாக்கம் வந்து சைக்கிளுக்காக முயற்சி செய்தேன். சைக்கிள் கிடைக்கவில்லை. வேகமாக நடந்து வருகிறேன். என் பின்னாடி ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டு இன்னொரு கையில் வேறு ஒரு சைக்கிளை பிடித்துக் கொண்டு பக்கத்தில் எடுத்து வந்து “**சார்! சார்!**” என்று கூப்பிட்டார். யார் என்று பின்னாடி திரும்பி பார்த்தபோது, “**இந்த சைக்கிளை கொஞ்சம் பிடிங்க. பின்னாடியே வாங்க**’’ என்று கூறி என்னிடம் சைக்கிளைத் தந்து முன்னாடி சென்று விட்டார். அந்த சமயத்தில் எனக்கு சைக்கிள் கிடைத்ததால் மகிழ்ச்சியுற்று பின்னாடியே வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஅமர்ந்திருந்த வீட்டிற்கு சிறிது தொலைவு முன்பே அவர் எனக்காக எதிர்பார்த்து நின்றிருந்தார். நான் வந்தவுடன் என் கையிலிருந்த சைக்கிளை வாங்கிக் கொண்டு

*முன் சென்று விட்டார். நான் பூஜைக்கு நேரம் ஆகிவிட்டது என்ற நினைவில் இருந்தேன். சைக்கிள் தந்தவரை கவனிக்கவில்லை. அப்போது பூஜை ஆரம்பிக்கவில்லை. எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் பூண்டி சுவாமிகளுக்கு எதிரில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் என்னைப் பார்ப்பது போலவே இருந்தது. அதன் பிறகு பூஜை ஆரம்பித்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி ஏதோ ஒரு உருவத்தில் வந்து எனக்கு சைக்கிள் தந்து உதவி செய்தார் என்பதை அறிந்தேன்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு அன்பர்கள் காணிக்கையாகப் பணத்தை மடித்து கைவிரல் இடுக்கில் வைப்பார்கள். சிலர் சிகரெட் வாங்கி வந்து வாயில் வைத்து பற்ற வைப்பார்கள். அன்பர்கள் அவரவர் விருப்பப்படி சுவாமிகளுக்கு காணிக்கைகளை சமர்ப்பித்துக் கொள்வார்கள். ஒரு அன்பர் தன் கை விரலில் இருந்த மோதிரத்தை ஸ்ரீ பூண்டி சுவாமி கை விரலில் போட்டு விட்டுச் சென்றார். அந்த மோதிரம் சிறியதாக இருந்ததால் விரலில் இரத்தம் கட்டி விரல் வீங்கி விட்டது. கையை மேலே எடுத்து அப்படியே வைத்துக் கொண்டார். அந்த மோதிரத்தை கழட்ட முயற்சித்தாலும் சுவாமி சம்மதிக்கவில்லை.* ***''இருக்கட்டும்பா! அது ஆசைப்பட்டது. அனுபவிக்கட்டும்''*** *என்றார் சுவாமி. பக்தர்கள் எதுவும் செய்ய முடியாத நிலைமை முழங்கையை தொடைமேல் ஊன்றி கையை மேல் நோக்கி வைத்தவாறு இருந்தார். எங்கிருந்தோ வந்த ஒரு கிளி ஸ்ரீ பூண்டி சுவாமியை சுற்றி வந்து சுவாமியின் தோளின் மேல் அமர்ந்து செல்லும். சுவாமியின் மடியில் பூனைகள் படுத்து இருக்கும். ஒவ்வொரு சமயம் சுவாமி அப்பூனைகளை அன்புடன் தடவிக்கொடுப்பார். அப்பூனைகள் எகிறி எகிறி ஓடிவிளையாடும். சாதாரணமாக பூனை இருக்கும் இடத்திற்கு கிளி வராது. கிளியைப் பார்த்தால் பூனையும் சும்மா இருக்காது. தோளில் இருக்கும் கிளி பூனையைப் பார்க்கின்றது. மடியிலுள்ள பூனை கிளியைப் பார்க்கின்றது. அந்த சமயத்தில் நான் அங்கேயே நின்றிருந்தேன். கிளி வந்து வெளியே சென்று விட்டது. சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்தது. இரண்டு மூன்று முறை அப்படி வந்து போனதால் யாரும்*

அதை பொருட்படுத்தவில்லை. ஏதோ கிளி சுவாமியிடம் வந்து செல்கிறது என்று நினைத்தனர். சுவாமியின் தோளில் அமர்ந்த கிளி திடீரென மோதிரம் போட்டிருந்த விரலை மூக்கால் கொத்தியது. உடனே விரலில் இருந்த சீழும், இரத்தமும் கொட்டியது. அனைவரும் பயந்து ஸ்ரீ சுவாமியின் கையை பிடித்துக் கொள்ளவே விரலில் இருந்த மோதிரம் தானாகவே விழுந்து விட்டது. ஸ்ரீ சுவாமிகளின் விரலை சுத்தப்படுத்தியபிறகு மீண்டும் கிளி வந்து ஸ்ரீ பூண்டி மகானை ஒரு முறை வலம் வந்து அங்கேயே உயிரை விட்டது. அந்தக் கிளியை சுவாமியின் திண்ணைக்கு அருகிலேயே சமாதி செய்து பூசை செய்தார்கள். ஒரு மகான் அந்த உருவில் வந்து பாபவிமோசனம் அடைந்ததாகவும், ஸ்ரீ பூண்டி சுவாமிஅவரை அனுக்கிரகித்ததாகவும் அங்கிருந்த சாதுக்களும், பக்தர்களும் கூறினார்கள். அஞ்ஞானத்தை அகற்றும் ஸ்ரீ பூண்டி மகானின் மகிமைகள் ஒவ்வொரு விநாடியும் நடந்து கொண்டே இருக்கின்றது.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் பாதத்தில் புண் இருந்தது. அப்புண் சீழ் பிடித்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. அப்புண்ணுக்கு மருந்து போட சுவாமி அங்கீகரிக்கவில்லை. யாராவது அன்பர்கள் வேண்டினாலும் "**அது ஒண்ணும் வேண்டாம்பா**" என்று கூறுவார். அப்புண்ணில் புழுக்களும், ஈக்களும், கொசுக்களும் மொய்த்துக் கொண்டிருக்கும். அப்புண்ணின் உள்ளேயும் சில புழுக்கள் இருந்தன. அப்புழுக்கள் நகர்ந்து முன் செல்ல முயற்சித்தபோது கீழே விழுந்துவிடும் கீழே விழுந்த புழுக்களை கையால் மெதுவாக எடுத்து அப்புண்ணில் மீண்டும் விட்டுவிடுவார். "**என்ன சுவாமி இப்படி செய்யறீங்க**" என்று யாராவது கேட்டால் "**அதுல கூட ஈஸ்வரன் இருக்காரு**" என்று கூறுவார் பூண்டி சுவாமி. எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறார் என்று நேரிடையாக அனைவருக்கும் தெரியபடுத்திய அரிய நிகழ்ச்சி இது.

ஸ்ரீ சுவாமியிடம் யாரும் இல்லாத சமயத்தில் நான் தரிசிக்க வந்தால் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தாடியை கையால் தடவி முகம் எல்லாம் துடைத்து சுத்தப்படுத்துவேன். ஸ்ரீ சுவாமியின் கையில் சிகரெட் எரிந்து கடைசி வரை வந்தாலும் விடமாட்டார். கையில்

*தீப்படும் என்று எடுத்து எறிய வேண்டும். அப்படிப்பட்ட சமயத்தில் நான் பார்த்தால் எரிந்த சிகரெட் துண்டுகளை எடுத்து பக்கத்தில் போடுவேன்.*

*முக்கியமாக நாம் ஸ்ரீ பூண்டி சுவாமி கூறிய வழியில் நடக்கிறோமோ என்று அவரவர் யோசிக்க வேண்டியதே. ஸ்ரீ பூண்டி சுவாமிபெயரைக் கூறி தவறான வழியில் நடந்தால் விடமாட்டார். அனைவரும் அவருடைய குழந்தைகளே. ஸ்ரீ பூண்டி சுவாமி கூறிய வழியில் நடந்தால் நம்மில் உள்ள அறியாமை நீங்கி ஞானம் கிடைக்கும். எல்லா தெய்வங்களையும் வழிபடுவது போல் ஸ்ரீ பூண்டி சுவாமியை வழிபட்டு அக்கடவுளோடு இவரையும் கடவுளாக சேர்த்தால் அது அவர்களது அதிர்ஷ்டம். ஸ்ரீ சுவாமிகளுக்கு நெருக்கமாக வேண்டுமானால் எல்லாவற்றையும் அவர் பாதங்களில் அர்ப்பணித்து சரணாகதி அடைந்தால் தவறாமல் இரட்சிக்கப்படுவார்கள். இது என் அனுபவத்தில் சில அன்பர்களைப் பார்த்து அறிந்து கொண்டேன்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைவதற்கு முன்தினம் வியாழக்கிழமையன்று நான் தரிசனத்திற்காக வந்தேன். காரணம் என்னை ஒரு சங்கத்துக்குத் தலைவராகத் தேர்ந்து எடுக்க வரச் சொன்னார்கள். முதலில் சுவாமிகளிடம் சென்று ஆசிபெற பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ சுவாமிகளுக்கு சமர்ப்பிக்க தேங்காய்ப் பூமாலை வாங்கி வந்தேன். ஒரு அன்பர் தேங்காய் சரியாக உடையவில்லையென்றால் சுவாமி நம்மை அனுக்கிரக்கவில்லை என்ற ஆலோசனை வருகிறது என்றார். அதன் பிறகு நான் தேங்காய் வாங்கி வருவதை நிறுத்தி விட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி ஆரோக்கியம் மிகவும் சீர்கெட்டு இருந்ததுபோல் தோன்றியது. ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்களுக்காக காத்திருந்தேன். அவர் வந்த பிறகு விஷயத்தைக் கூறி,* **"ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்ய வேண்டும்"** *என்று கூறினேன்.* **"அதற்கென்ன நம்ப சுவாமி இருக்கிறார்"** *என்று கூறி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி என்னை உள்ளே அழைத்துச் சென்றார். நான் மாலையை அணிவிக்கும் சமயத்தில் சுவாமி குனிந்து அந்த மாலையை ஏற்றுக் கொண்டார். எனக்கு மிகவும் ஆனந்தமாக*

இருந்தது. திருநீறு வைத்து குங்குமம் வைத்தார். **"ஸ்ரீ சுவாமிகள் இரண்டு நாட்களாக யாருக்கும் திருநீறு வைக்கவில்லை. பேசாமல் இருக்கிறார். உங்களுக்கு வைத்தார் என்றால் நினைத்தது எல்லாம் வெற்றியாகும். சுவாமியை பிரார்த்தனை செய்து செல்லுங்கள்"** என்றார் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி அவர்கள். அச்சமயத்தில் என் மனதில் ஒரு எண்ணம் வந்தது. **"என் சகலபாடி ஆம்பூரில் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். அவருக்கு எப்படியாவது ஸ்ரீ சுவாமிகள் ஆரோக்கியமாக இருக்கச் சரிசெய்தால் நன்றாக இருக்கும். அவரை அழைத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பாதபூஜை செய்யலாம். எனக்கு ஆரோக்கியம் சரியானது போல் அவருக்கும் உடல் நிலை சரியானால் நன்றாக இருக்கும்"** என்று ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்களிடம் கூறி, **"சுவாமிக்கு பாதபூஜை செய்ய வேண்டும். கேட்டுச் சொல்லுங்கள்"** என்றேன். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, **"பாத பூஜை செய்யணும்னு சொல்றாங்க. எப்போது செய்யலாம்னு கேட்கிறாங்க"** என்று பூண்டி மகானைக் கேட்டார். ஸ்ரீ பூண்டி மகான் ஒரு நிமிடம் யோசித்து **"அதுவா ஞாயிற்றுக்கிழமை முடிச்சிடுங்கய்யா"** என்று கூறினார். சுவாமிகளுக்கு பாத பூஜை செய்ய அனுமதி தந்தார் என்று எனக்கும் மிகவும் ஆனந்தமாக இருந்தது. உடனே ஸ்ரீ சுவாமி சன்னதியில் சுப்பிரமணியம் அவர்களிடம் **"பாத பூஜைக்கு எவ்வளவு செலவாகும்"** என்று கேட்டேன். அவர் கொடுங்க என்று ரூ.70 கேட்டவாறு ஞாபகம். அங்கேயே பணத்தைத் தந்து **"நான் வர நேரமானாலும் பாத பூஜை, செய்யும் சமயத்திற்கு நீங்கள் செய்து கொண்டே இருங்கள். என் சகலபாடியை அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்"** என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஎல்லாவற்றிற்கும் தலையாட்டினார். நான் மிகவும் மகிழ்ச்சியுற்று மீண்டும் பூண்டி மகானின் அனுமதி பெற்று வணங்கி கிளம்பி வேலூருக்குச் சென்றேன்.

மறுநாள் ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதி அடைந்த செய்து அறிந்து அதிர்ச்சியுற்றேன். உடனே கிளம்பி பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிதிண்ணை மேல் அமர்ந்த நிலையிலேயே இருந்தார். ஆனால் அன்பர்களை சோகக் கடலில் மூழ்கடித்தார். எனக்கு மனவருத்தமும், துக்கமும் எழுந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருகில்

*சென்று ஓவென்று அழுதேன். ஒரு அன்பர் வந்து ஆறுதல் கூறி பக்கத்திற்கு அழைத்துச் சென்று* “**ஸ்ரீ பூண்டி மகான் ஆனந்தத்தில் மூழ்கி இருக்கிறார். இனி சுவாமிகள் வந்த காரியம் பக்தர்களுக்குத் தெரியும்**” *என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமி கடைசியில் என்னிடம் கூறியபடியே ஞாயிற்றுக்கிழமை பூஜை செய்து மஹாசமாதியில் அமர வைத்தோம். எனக்கு முன்பே தெரியப்படுத்தினாலும் புரிந்து கொள்ள இயலவில்லை.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி இருந்தவரை பக்தர்களுக்கு மலையளவு துணையாக இருந்தார். சுவாமிகளிடம் ஆசி பெற்றுச் சென்றால் தவறாமல் வேலை நடக்கும் என்பது நம்பிக்கை. ஸ்ரீ பூண்டி சுவாமி* “**நடக்கும்போ**” *என்றும்* “**நான் பாத்துக்கிறேன் போ**” *என்றும் ஆசிர்வதித்த பிறகு எதுவும் நடக்கவில்லை என்று நான் கேட்கவில்லை. வரும் பக்தர்கள் அனைவரையும் தன் குழந்தைகள் போல் பாவித்து அன்பு காட்டுவார்.*

*இன்று ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் ஆலய நிர்வாக கமிட்டியில் நான் தலைவராக இருக்கும் பாக்கியத்தை ஏற்படுத்தி சேவை செய்யும் அவகாசத்தை அளித்தார். அன்று அந்த மகான் போட்ட விதை இன்று வளர்ந்து பெரியதாகி அவருக்கு சேவை செய்யும்படி செய்தார். ஸ்ரீ பூண்டி மகான் அருள் இருக்கும் வரை நான் இந்த சேவையை செய்து கொண்டிருப்பேன்.*





ஸ்ரீ பூண்டிசுவாமி
தோளின் மேல்
அமர்ந்திருக்கும் கிளி

நேர்காணல்: 42
11.02.2006, பூண்டி

**S. குப்புசாமி**, வயது: 64, ஆற்காடு.

*1969 செப்டம்பர் மாதத்தில் நான் பூண்டி சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு* "**சுவாமி என் குழந்தை ராகு காலத்தில் பிறந்தான். பலரும் பலவிதமாக சொல்கிறார்கள். எப்படி சுவாமி**" *என்று என் மனதிலிருந்த வருத்தத்தை தெரியபடுத்தினேன்.* "**என்னாப்பா எல்லாம் நல்லது நடந்துகிட்டு இருக்கு. போய்ட்டு வா**" *என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். ஞான சொரூபமாய் பிரகாசிக்கும் ஸ்ரீ பூண்டி மகானின் பார்வை உள்ளேயே ஆழ்நிலையில் இருப்பது போல் தோன்றியது. அவர் விருப்பப்படி ஏதோ கூறி கொண்டிருந்தார். நான் சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு கிளம்பிச் சென்றுவிட்டேன். தைப்பூசத்தன்று என் மகனை அழைத்து வந்து ஸ்ரீ சுவாமிகளை தரிசித்து ஆசி பெற்றோம்.*

*நான் ஒவ்வொரு மாதமும் வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொள்வேன். என் தங்கைக்கு கல்யாணம் நிச்சயம் ஆனது. நான் பூண்டி மகான் சன்னதியில் திருமணம் செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து பூண்டியில் திருமணம் செய்ய நிச்சயித்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி தன் திருக்கரங்களால் தாலி எடுத்துத் தந்தார். என் சகோதரியின் திருமணம் மகிழ்ச்சிகரமாக நடந்தேறியது.*

*ஒரு சமயம் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி* "**சுவாமி பூவிலிருந்து பூவுக்குத் தாவும் தும்பி போல் இருக்கிறேன். என் மனம் நிலையாக இல்லாமல் சலனத்துடன் இருக்கிறேன்**" *என்று என்னுள் உள்ள காம விகார எண்ணங்களை கூறிக் கொண்டேன்.* "**அது ஒண்ணும் இல்லை. நல்லா அனுபவி**" *என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான்.* "**எதற்கு அப்படிச் சொல்றீங்க. காரணம் என்ன?**" *என்று கேட்டேன்.* "**வெறுப்பு வரணும்னா அது அப்படியே இருக்கணும். அதிகமாக ஒன்றை அனுபவித்த பிறகு அதில் என்ன இருக்கிறது என்ற விரக்தி வரும்வரை நீ இப்படி**

**இருக்கிறதைப் பற்றி யோசிக்க வேண்டாம்"** என்று கூறினார் சுவாமி. அவர் சொன்னவற்றை அடிக்கடி யோசனை செய்வேன். ஏதோ காரணத்தால் அப்படி கூறினார் என்று எண்ணினேன். ஸ்ரீ பூண்டி மகான் ஏன் அப்படிக் கூறினார் என்று இன்று என்னால் அறிய முடிந்தது.

பெண் சுகமே உன்னதமானது என்று பாவித்தவரை, நான் அனுபவித்துக் கொண்டு மாய வலையில் மூழ்கி விட்டேன். **"இனியாவது எனக்கு உன் கிருபையால் உண்மையை போதியுங்கள் கிருபாநிதி முருகா. என் மனதிலுள்ள துர்குணங்களை போக்கிக் காமத்தை உங்கள் அனுக்கிரகத்தால் நீக்குங்கள் சுவாமி"** என்று வேண்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அனுக்கிரகத்தால் பகவானின் எண்ணத்தில் இருக்கும் போது என் மனம் ஆனந்தம் அடைகின்றது.

ஒரு பெண்மணி ஆரணி தபால் நிலையத்தில் பணியாற்றிக் கொண்டு ஆற்காட்டில் வசித்து வந்தார். என்னுடன் சேர்ந்து பூண்டிக்கு வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு, **"சுவாமி எனக்கு திருமணம் நடந்து முப்பது வருடம் ஆனது. பிள்ளைப்பேறு இல்லை. குழந்தைகள் இல்லாத கவலையில் இருக்கிறேன்''** என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமி **"தவறாமல் பிள்ளைப்பேறு கிடைக்கும்"** என்று ஆசிர்வதித்தார். ஸ்ரீ பூண்டி மகான் அருளால் அவருக்குப் பிள்ளைப்பேறு உண்டாயிற்று.

ஒரு அன்பர் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு **"சுவாமி நான் மருத்துவ வேலை செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்"** என்று வேண்டினார். **"சரி அப்படியே செய்"** என்றார் பூண்டி சுவாமி. அந்த அன்பருக்கு மருத்துவ வேலையில் எந்த அனுபவமும் இல்லை. சில புத்தகங்களைப் படித்து மருத்துவ வேலை செய்யக் கற்றுக் கொண்டார். அவர் எத்தனையோ பேருக்கு வைத்தியம் செய்து வியாதிகளை குணப்படுத்தினார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் பரிபூரண திவ்ய அருளால் எத்தனையோ அன்பர்கள் அவர்கள் வாழ்க்கையை முன்னேற்ற பாதையில் நடத்தினார்கள்.

**நேர்காணல்: 43**
**11.02.2006, பூண்டி**

**ரங்கசாமி**, வயது: 75, பழங்கோயில்.

*ஸ்ரீ பூண்டி மகான் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் இருந்து அவரை நான் அறிவேன். என் அக்கா பிரசவ வேதனையோடு கட்டைவண்டியில் சென்றபோது நானும், என் அம்மாவும் பின்னாடி நடந்து சென்றோம். பூண்டியில் பெருமாள் கோயிலுக்கருகில் ஸ்ரீ பூண்டி சுவாமி தோளில் ஒரு மூட்டையை மாட்டிக்கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தார். என் அம்மா ஸ்ரீ பூண்டி சுவாமியைப் பார்த்து* **"சுவாமிகள் வருகிறார். சென்று அவர் பாதங்களில் வணங்கு"** *என்று கூறினார். உடனே நான் சென்று ஸ்ரீ சுவாமிகளின் திருவடிகளை வணங்கினேன். ஸ்ரீ சுவாமி குனிந்து தெருவில் இருந்த மண்ணை எடுத்து நன்றாக உள்ளங்கையில் தேய்த்தார்.* **"இந்தா திருநீறு நீயும் வச்சிக்கோ. உன் அக்காவுக்கும் வை. ஆஸ்பிடலுக்கு போய் வாங்க. நல்லாயிடும்"** *என்று ஆசிர்வதித்தார். ஸ்ரீ சுவாமிகள் தந்த திருநீறு நன்றாக பரிமளித்தது. நான் திருநீறு வைத்துக் கொண்டு என் அக்காவுக்கும் வைத்தேன். ஆஸ்பிடலுக்கு சென்றவுடன் என் அக்காவுக்கு சுகப்பிரசவம் நடந்தது. திரும்பி வீட்டிற்கு வந்தோம். அப்போது தான் ஸ்ரீ சுவாமிகளின் மகிமை தெரிந்தது.*

*ஒரு செல்வந்தர் குடும்பத்தை சேர்ந்தவர் வடை, பாயசத்தோடு எல்லா உணவையும் சமைத்து ஸ்ரீ சுவாமியை அழைத்தார். ஸ்ரீ சுவாமிகளும் வந்தார். இலையில் எல்லாம் படைத்து தயாராக வைத்து* **"சுவாமி சாப்பிடுங்க"** *என்று வேண்டினார். ஸ்ரீ சுவாமிகள் உடனே அவசர அவசரமாக வெளியே வந்துவிட்டார். என்ன சுவாமி என்றதற்கு* **"குழந்தைகள் இல்லா வீட்டில் நான் சாப்பிட மாட்டேன்"** *என்று கூறி அங்கேயிருந்து கிளம்பி என் கிராமத்திலுள்ள ஒரு தெருவில் செல்லும் சமயத்தில் ஒரு அன்பர்* **''சுவாமி சாப்பிடுங்க''** *என்று வேண்டினார்.* **"அதற்கென்ன பரவாயில்லை சாப்பிடுகிறேன்"** *என்றார்*

சுவாமி. உடனே கூழை நன்றாகக் கரைத்து ஒரு செம்பில் ஊற்றித்தந்து ஊறுகாய் தந்தார். மகிழ்ச்சியாக குடித்துவிட்டு கிளம்பிச் சென்றார்.

என் மேல் ஒருவர் கேஸ் தந்தார். நான் காவல் நிலையத்திற்குச் சென்றேன். உதவி ஆய்வாளர் இரவு பதினொரு மணிக்கு வந்து **"எதற்கு அவரோடு தகராறு வைத்துக் கொண்டாய். நீ அபராதம் கட்டணும். வழக்கு மன்றம் மூலமாக தாலுக்கா அலுவலகத்தில் செலுத்த வேண்டும் "** என்றார். **"நான் அபராதம் கட்ட முடியாது. நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கூலியில் குடும்பத்தை காப்பாற்றுவதா? இல்லை அபராதம் கட்டுவதா?"** என்று கேட்டேன். **"தவறாமல் கட்ட வேண்டும். தப்பிக்க முடியாது"** என்றார். நான் கடைசியில் ஒப்புக் கொண்டேன்.

கடைசி நாள் சொல்லி அன்று வரவேண்டும் என்று கையெழுத்து வாங்கிக் கொண்டு அனுப்பி விட்டார்.

கடைசி நாளன்று விடியற்காலையில் எழுந்து குளித்து விட்டு கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கினேன். திருநீறு அளித்தார். நான் நடந்தே போளூருக்குச் சென்றேன். நீதிபதி அவர்கள் ரங்கசாமி என்று என் பெயர் வைத்து கூப்பிட்டவுடனே நான் ஓரடி எடுத்து முன் வைத்தேன். எங்கேயிருந்து எப்படி வந்ததோ தெரியவில்லை. என் முன் ஒரு பத்துரூபாய் நோட்டு விழுந்து இருந்தது. நான் எடுத்து சட்டைப் பையில் வைத்துக் கொண்டேன். **"என்னய்யா வழியில் தகராறு செய்தாயாம். அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. கட்ட முடியுமா?"** என்று கேட்டார். சரியென்று கூறி, **"எவ்வளவு கட்ட வேண்டும்?"** என்று கேட்டேன். **'பத்து ரூபாய்'** என்றார். என் சட்டைப்பையிலிருந்து பத்து ரூபாயை எடுத்துத் தந்தேன். பணமில்லாமல் நடந்தே வந்தேன் எனக்கு அச்சமயத்தில் அபராதத்திற்கு தேவையான பணத்தை அளித்து அங்கே ஸ்ரீ பூண்டி மகானே காப்பாற்றினார்.

எனக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் மருத்துவமனைக்கு இரண்டாவது முறை சென்று வந்தபிறகு காயம் சீக்கிரம் ஆறி விட்டால் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு இரண்டு ரூபாய் காணிக்கை அளிப்பேன் என்று பிரார்த்தனை செய்து கொண்டேன். மூன்று மாதத்தில் காயம் நன்றாக ஆறிவிட்டது. என் பிரார்த்தனையை மறந்து விட்டேன். ஸ்ரீ

*பூண்டி சுவாமியை தரிசனம் செய்து செல்கிறேனே தவிர பிரார்த்தனை நினைவிற்கு வரவில்லை. ஒரு நாள் வீட்டில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தபோது கனவில் ஸ்ரீ பூண்டி சுவாமி கையை பிடித்து இழுத்து எழச் சொன்னார்.* "**என்ன சுவாமி?**" *என்று கேட்டேன்.* "**நீ கொடுக்கிறேன் என்றும் சொன்னாயே அந்தப் பணத்தைக் கொடுத்து விடு**" *என்றார். என்னிடம் பணமில்லை சுவாமி என்றேன்.* ''**நாலணா, நாலணாவா கொடுத்து தீர்த்துவிடு**" *என்றார். படுக்கையிலிருந்து எழுந்து பார்த்தேன். ஸ்ரீ சுவாமிகளே எனக்கு ஞாபகப்படுத்தினார் என்று எண்ணினேன். காலையில் எழுந்து குளித்து விட்டு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து என் உள்ளங் கையில் பணத்தை வைத்துக் கொண்டு ஸ்ரீ பூண்டி சுவாமிமுன்பு கையை மூடியவாறே நீட்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஎன் கைவிரலை இழுத்து பணத்தை வாங்கிக் கொண்டார். திருநீறு வைத்து* "**சென்று வா**" *என்று ஆசீர்வதித்தார். என் குடும்பத்தில் நடக்கும் எந்த நிகழ்ச்சியானாலும் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு சொல்லிவிட்டுத்தான் செய்வேன்.*

*நான் தினந்தோறும் மாலையில் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து செல்வேன். ஸ்ரீ பூண்டி சுவாமி வியாழக்கிழமை மாலை* "**நீ, சுப்பிரமணியம், கோவிந்தராஜுலு நாயுடு நாளைக் காலை எட்டு மணி வரை என்னுடன் இருங்கள்**'' *என்று கடைசியாக என் பக்கத்தில இருந்தவர்களை காண்பித்து கூறினார். மறு நாள் காலை ஸ்ரீ பூண்டி சுவாமி கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. சுமார் ஒன்பது மணியளவில் மஹாசமாதி அடைந்தார்.*

*ஒரு வாரமாக என்னிடம் சல்லிக்காசு கூட இல்லை. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை நினைத்து கொண்டு என் கிராமத்தில் இருந்து நடந்து வரும் வழியில் ஒரு சிறிய பொட்டலம் தென்பட்டது. வழியில் என்னவென்று எடுத்துப் பார்த்தேன். ஒரு 100 ரூபாய் நோட்டு, 50 ரூபாய் நோட்டு, 20 ரூபாய் நோட்டுகள் மற்றும் சில்லரைகள் இருந்தது. நான் நேராக வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி கிடைத்த பணத்திலிருந்து காணிக்கை அளித்தேன். எங்கும் நிறைந்திருக்கும் ஸ்ரீ பூண்டிமகான் தன்னுடைய பக்தர்களை நடத்தும் அவரின் மகிமைகளை எவ்வளவு என்று எடுத்துச் சொல்லுவது!*






அபயம் அளிக்கும்
ஸ்ரீ பூண்டி மகான்

**நேர்காணல்: 44**
**11.02.2006, பூண்டி**

**பாண்டுரங்கசுவாமி** **(எ) புண்டரிக்காச்சலு, வயது: 79, பூண்டி.**

*ஸ்ரீ சுவாமியை நடமாடிக் கொண்டிருந்த காலத்திலிருந்து தெரியும். நான் சென்னையிலிருந்து சென்று பூண்டியில் நிரந்தரமாக வசித்தேன். ஸ்ரீ சுவாமிகளோடு நான் அடிக்கடிப் பேசுவேன். எனக்கு சில விஷயங்களைக் கூறி ஆன்மீக வழியில் நடத்த முயற்சித்தார். எனக்கு குற்றாலத்திற்கருகிலுள்ள பொதிகை மலைக்குச் செல்ல வேண்டுமென்ற ஆவல் இருந்தது. நான் ஸ்ரீ சுவாமியை கேட்டு கொண்டிருந்தேன். ஒரு நாள் இரவு கனவில் ஸ்ரீ சுவாமிகள் என்னைப் பொதிகை மலைக்கு அழைத்துச் சென்று அங்கு விட்டார். அங்கிருந்த சித்தர்கள் அனைவரும் எதற்கு அழைத்து வந்தார் என்று சுவாமியை கேட்டதற்கு "***ஆம் கூட்டிகிட்டு வந்தேன்***" என்று அவர்களிடம் கூறி எனக்கு அந்த இடங்களை எல்லாம் காண்பித்தார். அச்சமயத்தில் அங்கிருந்த ஒரு மகான் என் தலையில் மண்டையோட்டை நீக்கி உள்ளே ஏதோ எழுதி மீண்டும் பழையபடி மூடி விட்டார். உடனே எனக்கு விழிப்பு வந்துவிட்டது. எப்போது விடியுமோ என்று ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தேன். ஸ்ரீ சுவாமியிடம் சென்று உடனே பேச வேண்டும் என்று தோன்றியது. காலையில் வந்து ஸ்ரீசுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். "***எல்லா வழியும் clear ஆயிடுச்சு***" என்று சுவாமி கூறினார். இரவு கனவில் காண்பித்தவற்றை தெளிவாக கூறியபொழுது என்னுள் இருந்த சந்தேகங்கள் நீங்கிவிட்டது.*

*நான் தினந்தோறும் காலையில் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொள்வதை வழக்கமாக கொண்டிருந்தேன். நான் தவறாமல் பிராணாயாமம் செய்வேன். எனக்கு சில திவ்ய அனுபவங்கள் ஏற்பட்டன. ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அனுக்கிரகத்தால் சில சித்துக்களும் வந்தன. அதன் பிறகு என் நண்பர்கள் அவர்கள் ஊருக்கு*

வருமாறு அழைத்தார்கள். நான் சுவாமியின் அனுமதி இல்லாமல் வரமாட்டேன் என்றேன். ஒவ்வொரு சமயம் ஸ்ரீ பூண்டி சுவாமி சென்றுவர சொல்லுவார். அச்சமயத்தில் நான் செல்வேன். என் நண்பர் ஒருவருக்கு குழந்தைப்பேறு இல்லை என்று வந்தார். அவர் வில்வாரணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அமர்ந்து அழுதார். நான் அவருக்கு ஆறுதல் கூறி ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் அழைத்து வந்து சுவாமிகளிடம் நண்பருடைய கோரிக்கையைக் கூறினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி என்னை சென்னையிலுள்ள நண்பருடைய வீட்டிற்குச் சென்று வரச் சொன்னார். நான் சென்னை வரும் சமயத்தில் வருகிறேன் என்று நண்பரை அனுப்பி வைத்தேன்.

சிறிது நாட்கள் கழித்து ஸ்ரீ பூண்டி சுவாமி எனக்கு சில விஷயங்களை கூறி அனுப்பினார். நண்பருடைய வீட்டிற்குச் சென்று 48 நாட்கள் தீபம் வைத்து பூஜை செய்தேன். உடனே என்னை மதுரைக்கு போகச் சொன்னார் ஸ்ரீ சுவாமி. நான் முடியாது என்றேன். காரணம் எனக்கு தொழுநோயால் கை, கால்கள் முடங்கி போனதால் என்னை ஆலயத்திற்குள்ளே அனுமதிக்கமாட்டார்கள் என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி **சுவாமி "அந்த விஷயத்தை எல்லாம் நான் பார்த்துக்கிறேன்"** என்று கூறினார். ஸ்ரீ சுவாமியின் ஆணைப்படி நான் கிளம்பிச் சென்றேன். அன்று ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயிலில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று கொண்டிருந்தது. நான் சென்றவுடன் ஆலய வாசல் அருகே என்னை உள்ளே செல்லக்கூடாது என்று தடுத்தார்கள். உடனே நான் கோயிலின் மேல்புறம் பார்த்தேன். எனக்கு ஒரு ஜோதி தரிசனம் கிடைத்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி அனுக்கிரகம் கிடைத்தது என்று மீண்டும் சென்றேன். என்னை வாசலில் யாரும் தடுக்கவில்லை. நான் கோயிலில் உள்ளே சென்று நின்றவுடனே ஒரு குருக்கள் என்னிடம் வந்து **"நீங்கள் ரசீது வாங்கிக் கொண்டு வாருங்கள். அபிஷேகம் செய்கிறேன்"** என்றார். எனக்கு ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருஉருவச் சிலையிலிருந்து பூசாரி உருவத்தில் வந்து என்னைக் கேட்பது தெளிவாகத் தெரிகின்றது. நான் சென்று ரசீது வாங்கி வந்தேன். இதற்குள் எனக்குச் சொன்ன பூசாரி தென்படவில்லை என்று தேடும் சமயத்தில் மீண்டும் அவரே வந்து

பூஜை செய்து அனுப்பினார். வந்த வேலை முடிந்தது என்று கிளம்பி இரயில்வே நிலையத்திற்கு வந்தேன். ஆனால் என் மனதில் ஓர் இரவு அங்கேயே தூங்கினால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. பயணச்சீட்டு வாங்க வரிசை நீளமாக இருந்ததால் ஓய்வுக்காக அங்கேயே ஹாலில் படுத்துக் கொண்டேன். விழிப்பு வந்து பார்த்த போது விடிந்து விட்டது. என் மனதிலுள்ள கோரிக்கையை ஸ்ரீ பூண்டி சுவாமி நிறைவேற்றினார் என்று எண்ணினேன்.

நான் கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு சென்னைக்குச் சென்று அக்குடும்பத்தில் கணவன், மனைவிக்கு இரண்டு மாம்பழங்கள் தந்து யாருக்கும் தராமல் அப்பழத்தை அவர்களை மட்டும் சாப்பிடும்படி கூறி விட்டு வந்தேன். அவர்களும் அப்படியே செய்தார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகிருபையால் அவர்களுக்கு குழந்தைப்பேறு உண்டாயிற்று. அந்த தம்பதியர் குழந்தையை எடுத்து வந்து பெயர் வைக்கும்படி மடியில் வைத்து வணங்கினார்கள். "**ஆம். முருகா என்று பெயர் வையுங்க**" என்று கூறினார் பூண்டி மகான்.

சிறிது நாட்கள் செங்கல்பட்டுக்கு அருகில் வாடகைக்கு வீட்டை எடுத்து அங்கேயே மருத்துவமனையில் சிகிச்சை செய்து கொண்டு இருந்தேன். எனக்கு தெரிந்தவர்கள் வந்து சமையல் செய்து வைத்தனர். அக்கிராமத்தில் ஒரு ஆலயம் கட்டியது போல் அனுபவம் கிடைத்தது. அக்கிராமத்தில் உள்ளவர்களுக்கு கூறியபோது அம்மக்கள் ஆலயத்தைக்கட்டி எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்தார்கள். அக்கிராமத்தில் மருத்துவமனைக்குச் சொந்தமான ஆசிரமம் ஒன்று என் பெயரில் எழுதி தருவதாகக் கூறினார்கள். நான் பூண்டி சுவாமியை கேட்டுச் சொல்கிறேன் என்று கூறி நான் பூண்டிக்கு வந்தவுடன் சுவாமியிடம் கூறினேன். "**என்னாப்பா உனக்கு ஆசிரமத்து மேல கோரிக்கை வந்திடுச்சா**" என்று கேட்டார். "**இல்லை. சுவாமி. அங்கே எல்லா வசதிகளும் இருக்கின்றது**" என்றேன். "**வேணாம்பா. அரசுக்கு எல்லா கணக்கும் காட்டணும். அந்த சிக்கல் எல்லாம் உனக்கு எதுக்கு**" என்று கூறினார் பூண்டி மகான். நான் அந்த எண்ணத்தை விட்டு விட்டேன்.

நான் திருவண்ணாமலை கிரிவலத்துக்குச் செல்வேன். "**ஒரு அடிக்கு 108 சிவாலயங்கள் உள்ளன என்று ஆதிசங்கரர் கூறினார்**'' என்று கூறுவார்கள். அதற்காக அந்த பிரதேசத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட கால்களால் மிதித்துக் கொண்டு நான் ஏன் செல்ல வேண்டும் என்று அப்போதிலிருந்து கிரிவலம் செல்வதை நிறுத்திவிட்டேன். நான் பூண்டி சுவாமியை தரிசனம் செய்ய வேண்டுமென்றால் யாராவது ஒருவரை துணைக்கு அழைத்து வந்து தரிசனம் செய்து கொண்டு வீட்டிற்குச் செல்ல வேண்டியதாயிற்று.

ஆன்மீகமாக எனக்கு ஏதாவது வேண்டும் என்று ஸ்ரீ பூண்டி சுவாமியை வேண்டியபொழுது அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறுவார். ஒவ்வொரு சமயம் பரிபாஷையில் கூறுவார். அந்த சமயத்தில் பூண்டி சுவாமியின் அருகில் நால்வர் இருந்தால் சுவாமி சொன்னது அனைவருக்கும் பொருத்தமாக இருக்கும்.

வட இந்தியாவிலிருந்து ஒரு துறவி வந்தார். அவர் ஆன்மிகத்தில் ஒரு நிலையில் இருந்தார். சில சித்துக்களும் அவருக்கு கைகூடியது. அவர் பெயர் ஸ்ரீபாத். அவர் அருணாச்சலம் வந்து அங்கு அவருக்கு திவ்ய அனுபவம் ஏற்பட்ட பிறகு ஆகாச மார்க்கத்தில் வந்து கலசபாக்கத்துக்கு அருகில் தர்மராஜர் கோயிலுக்கு அருகில் இறங்கினார். அச்சமயத்தில் நானும், B.D.O. அலுவலகத்தில் வேலை செய்யும் ஒரு குமாஸ்தாவும் நடந்து செல்லும் போது அவர் இறங்குவதை பார்த்த நாங்கள் யாரோ ஒரு சித்த புருஷர் செல்கிறார் என்று அறிந்து நாங்களும் பின்னாடியே பூண்டிக்கு வந்தோம். அவர் ஸ்ரீ பூண்டி சுவாமியை பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியும் அவரை நோக்கியே பார்த்துக் கொண்டிருந்தார். மனதிலேயே பேசிக் கொண்டார்கள். அவர் சில நாட்கள் இங்கேயே இருந்து ஸ்ரீ பூண்டி மகான் அவர்கள் எங்கெங்கு எல்லாம் அமர்ந்திருந்தாரோ அங்கெல்லாம் சென்று தியானம் செய்தார். இரவில் எங்கு இருப்பார் என்பது யாருக்கும் தெரியாது. அவர் முகத்தோற்றம் தேஜஸ்மயமாக, பிரகாசமாக தோன்றியது. "**சுவாமிகளை வேறு யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். அவர் சித்தரும் இல்லை. மகானும்**

**அல்ல. ஈஸ்வரனே"** என்று கூறி சில ஆதாரங்களைச் சொன்னார். பிறகு சில நாட்கள் இருந்து அவர் கிளம்பிச் சென்று விட்டார்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகான் "**எனக்கு மதராஸிலிருந்து குழந்தைகள் வருவாங்க அனுக்கிரகத்துக்காக**" என்றார். சுவாமி கூறியபடியே நால்வர் வந்தார்கள். என் வீட்டில் ஒரு மாதம் இருக்கவேண்டும் என்று வந்தார்கள். ஒரு வாரத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி அவர்களை அழைத்து அனுக்கிரகித்து அவர்களுக்கு தரவேண்டியதை அளித்து அனுப்பினார். அந்த நால்வரும் அவர்களைப் பற்றி, யார், எதை, எங்கு பேசினாலும் கிரகிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இப்போது சென்னையிலுள்ள கோட்டூர்புரத்தில் இருவர், மாதவரத்தில் ஒருவர், மும்பையில் ஒருவரும் உள்ளார்கள். அவர்கள் எப்போதும் தியானத்தில் லயித்து இருப்பார்கள். அவர்கள் பெயர் ஸ்ரீ பாலாஜி, ஸ்ரீராஜேஷ், ஸ்ரீசௌந்திரராஜன், இன்னொருவர் பெயர் ஞாபகத்தில் இல்லை.

ஒரு நாள் நான் சென்னையில் வைத்தியநாதன் வீட்டில் இரவு படுத்துக் கொண்டிருந்தேன். எமதர்மராஜா தன் வாகனத்தில் வந்து என் முன் நின்றார். அவர் எனக்காகவே வந்தார் என்று தோன்றியது. என் முன் சிவலிங்கம் ஒன்று தென்பட்டது. நான் உடனே அந்த சிவலிங்கத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மார்க்கண்டேயன் போல் சிரஞ்சீவியாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். எமதர்மராஜர் சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு பிறகு சென்று விட்டார். ஸ்ரீ பாலாஜி சத்சங்கம் செய்ய அந்த வீட்டிற்கு வந்தார். நான் "**எமதர்மராஜாவை பார்த்தீர்களா**" என்று கேட்டேன். "**அது உங்களுக்காகக் கிடையாது. வைத்தியநாதனுக்காக வந்தார். அதற்காகவே உங்களை இங்கே அனுப்பி தப்பிக்க வைத்தார் சுவாமி**" என்று கூறினார்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் பரிபூரண அனுக்கிரகம் பெற வேண்டும் என்று நான் அவரையே தியானித்து அமர்ந்து இருப்பேன். எனக்கு பூண்டி சுவாமி சித்துக்கள் அளித்தார் என்றால் நான் அவற்றை உபயோகித்து பார்த்து அதன் பிறகு நம்பிக்கை கொள்வேன். வேறு ஒருவர் உடலில் சூட்சம உருவத்தில் பிரவேசிக்கும் சித்தியையும் எனக்களித்தார் பூண்டி மகான். அவற்றையெல்லாம் செய்து

பார்த்தேன். ''**இது நல்லதுக்கும் உபயோகப்படும். கெட்டதுக்கும் உபயோகப்படும். அப்படி துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. இது யோகசித்தி. அப்படி பிரயோகித்தால் சக்தி குறைந்து விடும். ஞான சித்தியானால் அந்த சக்தி குறையாது. அவசியமானபோது தருகிறேன்**" என்று கூறி ஸ்ரீ பூண்டி சுவாமி எனக்களித்த சித்துக்ளை திருப்பி வாங்கிக் கொண்டார். "**உன் சேவை என்னைச் சேருவதே முக்கியம். அது வெகு காலமாகாது**" என்றார்.

ஒரு அன்பர் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் "**நீங்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறீர்கள் என்கிறார்களே, சினிமா போஸ்டரில் இருக்கிறீர்களா?**" என்று கேட்டார். ஸ்ரீ பூண்டி மகான் இருப்பதாகக் கூறினர். அந்த அன்பருக்கு ஸ்ரீ பூண்டி சுவாமி அந்த அனுபவத்தையும் அளித்தார். அந்த அன்பர் வந்து என்னிடம் கூறினார். என் கனவில் ஒரு எண்ணம் வந்தது. ஒரு மலைக்கு உள்ளேயும் இருக்கிறாரா என்று தோன்றியது. "**இருக்கிறேன்பா**" என்ற சப்தம் நன்றாக கேட்டது. "**அப்படி இருந்தால் வெளியே வாருங்கள் சுவாமி. பார்க்கவேண்டும்**" என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் ஒரு பாறையிலிருந்து வெளியே வந்து அப்படியே படுத்துக் கொண்டார். ஸ்ரீ பூண்டி சுவாமிக்குத் துணையாக சுப்பிரமணிய சுவாமி கூட இருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் நினைத்தால் போதும் உடனே பதில் கிடைக்கும். எல்லாம் நிறைந்த சைதன்யம் தானே என்று பரபிம்ம சொரூபமான ஸ்ரீ பூண்டி மகான் இந்த அனுபவத்தைத் தந்தார்.

ஒரு பையன் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த சமயத்தில் சிறுவர்கள் ஒருவருக்கொருவர் தள்ளிக் கொண்டு அந்த பையன் கிணற்றில் விழுந்துவிட்டான். அப்பையனை கிணற்றிலிருந்து மேலே கொண்டு வந்த பிறகு எழுந்து நிற்க முடியாமல் போனது. அச்சமயத்தில் அச்சிறுவனை பாலாஜியிடம் எடுத்து வந்தார்கள். அங்கேயே படுக்க வைத்து வலிஇருக்கும் இடத்தில் கையை வைத்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளை வேண்டினார். அச்சிறுவன் அப்போதே எழுந்து நிற்க ஆரம்பித்தான். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருள் இருந்தால் கர்மாக்கள் எப்படி நீங்கிவிடும் என்று செய்து காண்பித்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி சாட்சாத் ஈஸ்வரனே என்று எங்களை உணரச் செய்தார்.

சென்னையில் ஞானப்பிரகாசம் என்று ஒருவர் இருந்தார். அவர் பூண்டி மகானின் பக்தர். சென்னையில் அவர் வழியில் செல்லும்போது விபத்தில் சிக்கினார். அவர் மீது பேருந்து சக்கரம் ஏறாமல் காப்பாற்றினார் ஸ்ரீ பூண்டி மகான். மறுநாள் அவர் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு ஆசி பெற்றுச் சென்றார்.

ஒரு நாள் என் கனவில் ஸ்ரீ பூண்டி சுவாமி ஒரு நொடி தோன்றி மறைந்து விட்டார். ஒரு பாழடைந்த வீட்டைக் காண்பித்து அந்த வீட்டின் திண்ணை மேல் அமர்ந்து தியானம் செய்யுமாறுக் கூறினார். அந்த இடம் எனக்கு இதுவரை தென்படவில்லை. எப்போது அருள் புரிவாரோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஸ்ரீ பூண்டி சுவாமி தருவதற்கு எப்போதும் சித்தமாக இருக்கிறார். பெறும் பாக்கியம் நமக்கு இருக்கணும். ஆன்மீகமாக எதையும் செய்யக்கூடிய வல்லமை படைத்தவர் ஸ்ரீ பூண்டி மகான். இந்த உலகியல் வாழ்க்கையிலுள்ள கோரிக்கைகளை அவர்களின் தேவையை பொறுத்து நிறைவேற்றலாம் அல்லது நிறைவேற்றாமல் இருப்பார். ஸ்ரீ பூண்டி மகான் என்னை தாய் தன் குழந்தையை காப்பாற்றுவது போல் காக்கிறார்.

ஒரு சமயம் நான் செங்கல்பட்டு மருத்துவமனையில் பரிசோதனை செய்து கொள்ளச் சென்றேன். இரண்டுமுறை (X-ray) எக்ஸ்ரே எடுத்தார்கள். அதில் ஒன்றும் வரவில்லை. ஸ்ரீ பூண்டி மகானை நினைத்துக் கொண்டு மீண்டும் எடுக்கச் சொன்னேன். மூன்றாவது முறை நன்றாக வந்தது. மருத்துவர் எக்ஸ் ரேவைப் பார்த்து "**உங்களுக்கு மருத்துவத்தால் குணமாக்க முடியாது. நீங்கள் சுவாமியின் அனுக்கிரகத்தை வேண்டுங்கள். சுவாமிகள் மட்டுமே செய்ய முடியும்**" என்றார். நான் உடனே திரும்பி வந்துவிட்டேன். நான் கவலையின்றி எல்லா பாரத்தையும் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் விட்டுவிட்டேன்.

நான் வேலூரில் பக்கத்தில் கரிகிரி மருத்துவமனையில் சேர்ந்தேன். எனக்கு மாரடைப்பு வந்தது. அந்த சமயத்தில் எனக்கு ஸ்ரீ இராகவேந்திர சுவாமி கோயிலுக்குச் சென்று வந்த நினைவு வந்தது. நான் எனக்கு வலியாக உள்ளது என்று ஸ்ரீ இராகவேந்திரசுவாமியை மனதில் வேண்டினேன். ஸ்ரீ இராகவேந்திர சுவாமி ஸ்ரீ பூண்டி

சுவாமியை உடன் அழைத்து வந்து இருவரும் தரிசனம் அளித்தார்கள். நான் பெருமகிழ்ச்சியுற்றேன்.

ஒரு சமயம் நான் ரிஷிகேஷ் சென்றேன். ஸ்ரீ சிவானந்த சுவாமியின் சமாதிக்கு சென்று தரிசனம் செய்து கொண்டேன். பக்கத்திலிருந்த திண்ணைமேல் படுத்துக் கொண்டேன். ஒரு நாள் இரவு கனவில் கங்காஜலத்தை கொண்டு என் உடலைத் தூய்மைபடுத்தினார். காலையில் அங்கு இருந்த காரியதரிசி வந்து "**நீங்கள் வந்த வேலை முடிந்துவிட்டது. கிளம்பலாம் என்று சுவாமி கூறினார். நீங்கள் எப்போது கிளம்புகிறீர்கள்?**" என்று கேட்டார். நான் "**இரயிலில் பயணம் செய்த சோர்வு தீரவில்லையென்று வியாழக்கிழமை கிளம்பிச் செல்கிறேன்**" என்று கூறினேன். என்னிடம் பயணச்சீட்டுக்கு தேவையான பணம் மட்டுமே இருந்தது. நான் வியாழக்கிழமை பயணச்சீட்டு வாங்காமல் இரயிலில் ஏறினேன். வழியில் செலவுக்கு வேண்டும் என்று பயணச்சீட்டு வாங்கவில்லை. இரயிலில் ஒரு சிறிய பையன் என்னுடன் சேர்ந்து கொண்டான். அந்தப் பையனுக்கு உணவுக்கு ஆன செலவையும் நான் செய்தேன். விஜயவாடா வருவதற்குள் என்னிடம் இருந்த பணம் தீர்ந்துவிட்டது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் அனுக்கிரகத்தால் நான் எந்தத் தடங்கலும் இல்லாமல் வர முடிந்தது.

திருவண்ணாமலையில் கிரிவலப் பாதையில் பஞ்சமுக தரிசனத்தினருகில் ஒரு சுவாமி நின்று கொண்டு கிரிவலம் வருபவர்களை "**நீங்கள் பத்து நாட்கள் கிரிவலம் செய்யுங்கள். நீங்கள் மூன்று மாதம் கிரிவலம் செய்யுங்கள்**'' என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக கூறிக் கொண்டிருந்தார். நான் கிரிவலம் செய்யும்சமயத்தில் அந்த சுவாமிகள் என்ன சொல்வாரோ? என்று நினைத்துக் கொண்டே வரிசையில் சென்றேன். என்னை 108 நாட்கள் கிரிவலம் செய்யச் சொன்னார் அச்சுவாமிகள். இது எனக்கு சாத்தியமாகாது என்று நினைத்து பூண்டிக்கு வந்து விட்டேன். ஸ்ரீ பூண்டி மகானைதரிசனம் செய்த பிறகு "**என்னாப்பா எங்க போனாலும் தேர் இருந்த இடத்துக்கே வந்து சேரணும்**" என்றார். "**நான் போகணும்னு போகலை. கிரிவலம் செய்யும் சமயத்தில் அரோகரா என்ற சத்தம் கேட்டதால் சென்றேன்**" என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி அங்கீகரிக்கவில்லை.

குடியாத்தம் அருகிலிருந்து மூன்று துறவிகள் வந்தார்கள். ஸ்ரீ பூண்டி மகானிடம் "சுவாமி நீங்கள் முன்பு இருந்த நிலைக்கும் இப்போது இருக்கும் நிலைக்கும் என்ன வித்தியாசம்" என்று கேட்டார்கள். **"என்னாப்பா உனக்கு மேளம் வாசிக்கத் தெரியுமா?"** என்று கேட்டார் பூண்டி சுவாமி. வந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. விடைபெற்று சென்று விட்டனர்.

ஸ்ரீபாத் ஒரு நாள் விருந்துக்குச் சென்றார். அவர் பக்கத்தில் ஒரு தொழுநோயாளி வந்து அமர்ந்து கொண்டார். அவரிடமிருந்து கெட்ட துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. யாரோ ஒரு மகான் தன்னைச் சோதிக்கிறார்கள் என்று நினைத்து அங்கேயே அமர்ந்து ஸ்ரீபாத் உணவருந்தி வந்தார்.

ஒரு நாள் வழியில் வரும் ஸ்ரீபாத் அவர்களுக்கு காலில் முள் குத்தி இரத்தம் வழிந்துக் கொண்டிருந்தாலும் அதை பொருட்படுத்தாமல் வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டார். உடல்மேலிருந்த ஆசையை எது வரை வென்றார் என்று பார்க்க மகான்கள் இப்படி சோதிப்பார்கள் என்று தெரிந்து கொண்டு இப்படி ஸ்ரீபாத் நடந்து கொண்டார்.

சென்னையில் ஞானப்பிரகாசம் என்று ஒரு பக்தர் இருந்தார். அவர் வீட்டில் சொல்லாமல் கிளம்பிச் சென்று விட்டார். அவர் மனைவி ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து அவர் கணவர் வீட்டிற்குத் திரும்பி வரவில்லை என்று கூறினார். **"நீ வீட்டிற்குப் போவதற்குள் வந்துவிடுவார்"** என்ற கூறி என்னைத் துணையாக வைத்து சென்னையில் அப்பெண்மணியை விட்டுவரக் கூறினார். நாங்கள் வீட்டிற்குச் செல்வதற்குள் புட்டபர்த்தி சென்ற அவர் திரும்பி வந்துவிட்டார்.

ஒரு வேளை உணவு சாப்பிடாவிட்டாலும் ஸ்ரீ பூண்டி மகான் அன்பர்கள் பசியோடு இருப்பதைத் தாங்க மாட்டார். ஸ்ரீ பூண்டி மகானின் அபாரமான அன்பு எப்போதும் அவர்கள் மேல் பொழிந்து கொண்டேயிருக்கும்.

**நேர்காணல்: 45**
**24.10.2006, பூண்டி**

**ராஜாமணி**, வயது: 75, சென்னை.

நான் இரயில்வேயில் (I.C.F.) பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனக்கு மகான்களை தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் அதிகமாக இருந்தது. என் நண்பர் சொல்லியதால் ஸ்ரீ பூண்டி மகானைதரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ சுவாமியின் கீழேயிருந்த மலம் கருப்பாக தார் நிறத்தில் இருந்தது. அம்மலத்திலிருந்து மல்லிகைப்பூவின் நறுமணம் வீசிக் கொண்டு இருந்தது. நான் மூன்று நாட்கள் சுவாமியின் சன்னதியிலிருந்து சென்னைக்குச் சென்றேன். அதன் பிறகு மாதம் ஒரு முறை வந்து மூன்று நாட்கள் இருந்து செல்வேன். ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு அன்பர்கள் கற்பூரம் எடுத்து வந்து ஆரத்தி தருவார்கள். கற்பூரம் எடுத்து வந்த காகிதத்தை கீழே போட்ட போது அந்த காகிதத்தை வேறு ஒரு அன்பர் எடுத்தபோது "**ஊம்**" என்று கர்ஜித்தார் ஸ்ரீ பூண்டி மகான். நான் அந்த மாதிரி சப்தத்தை வேறு எங்கும் கேட்கவில்லை.

நான் கால் நடையாக வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் எழுந்ததால் முதல் முறையாக திருவண்ணாமலையிலிருந்து கிளம்பி பாதயாத்திரையாக வந்து தைப்பொங்கலன்று ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு தீபம் ஏற்றி வைத்து பழம், பூக்களை சமர்ப்பித்து தேங்காயை உடைத்து வைத்தேன். என் பாதங்களில் வெடிப்பு ஏற்பட்டதால் ஸ்ரீ சுவாமியிடம் கூறினேன். திருநீறு அளித்தார். பாதங்களில் திருநீற்றை பூசியவுடன் சிறிது நேரத்தில் வலி வேதனை குறைந்தது. இரண்டாவது முறை செஞ்சியிலிருந்து கிளம்பி நடந்து வரும் பாதையில் நாயுடுமங்கலம் அருகில் ஒரு பையன் இளநீர் காய்களை பறித்துக் கொண்டு இருந்தான். அந்த பையன் என்னைப் பார்த்து எங்கே செல்கிறீர்கள் என்று கேட்டான். நான் பூண்டிக்குச்

செல்வதாக கூறினேன். "**நீங்கள் ஒரு இளநீர் சாப்பிட்டு இன்னொன்றை பூண்டி சுவாமிக்கு சமர்ப்பியுங்கள்**" என்றான் அந்த பையன். நானும் அவ்வாறே ஒன்றை குடித்துவிட்டு மற்றொன்றை தலைமீது வைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தேன். பூண்டியில் தினந்தோறும் காலையில் சுமார் பத்து மணிக்குள் ஸ்ரீ பூண்டி மகானுக்கு பூஜைகள் செய்வார்கள். அன்று பூஜை ஆரம்பிப்பதற்கு முன்பு ஸ்ரீ சுவாமியிடம் அனுமதி கேட்ட போது, ''**இருப்பா. பையன் வர்றான்**'' என்று கூறினாராம். அங்கிருந்த பக்தர்களுக்கு புரியவில்லை. யார் வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கிவிட்டு தீபம் ஏற்றி பூஜை செய்தேன். சிறிது நேரம் கழித்து பூஜை செய்ய பூண்டி சுவாமியை அனுமதி கேட்டனர். "**ஊம். பண்ணுங்க**" என்றார். மீண்டும் பூஜை செய்தனர். மூன்றாவது முறை நான் திண்டிவனத்திலிருந்து நடந்து வந்தேன். நான்காவது முறை நான் சென்னையிலிருந்து நடந்து வரவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்தார்.

நான் தினந்தோறும் தியானம் செய்வேன். சிறிது நாட்களுக்குள் எதிரில் உள்ளவர்களை பார்த்தவுடனே அவர்கள் மனதில் உள்ள எண்ணங்களை தெரிந்து கொள்ளும் ஆற்றல் வந்தது. என்னுடன் பணியாற்றுபவர்கள் என்னிடம் வந்து அவர்கள் துன்பங்களை கூறியபோது அவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளைக் கூறுவேன். இந்த விஷயம் எனக்கு பத்து வருடங்களாக தெரிந்த நண்பரிடம் கூறினேன். அவரும் தியானம் செய்வார். அவருக்கு என் மீது பொறாமை ஏற்பட்டு ஒரு நாள் அவர்கள் வீட்டிற்கு அழைத்து, அங்கு பூஜை செய்த பிறகு படுத்து வணங்கி கொண்டிருந்தபோது ஏதோ மந்திரம் ஜெபித்தவாறு குறுக்கே சென்றார். உடனே என் கபாலத்தில் உள்ள சக்தியை யாரோ இழுப்பது போல் தோன்றியது. அரை மணி நேரம் நான் உணர்விழந்து விழுந்து விட்டேன். இனி நான் இறந்து விடுவேன் என்ற பயத்தில் அவர் என்னை எழுப்பி மெதுவாக சைக்கிளில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பினார். நான் மிகவும் கடினப்பட்டு வீட்டிற்கு வந்தேன். அன்றிலிருந்து என்னுள் வெறுப்பு,

*கோபம், ஆத்திரம், எதிரில் உள்ளவர்களை கடிந்து கொள்வது, வேலைக்குச் சென்று சம்பளத்தை வீட்டில் தருவது போன்றவை இயந்திரகதியில் நடந்தது. அதன்பிறகு யார் என்ன கேட்டாலும் ஆலோசனை சொல்லக்கூடிய சக்தி போய்விட்டது. நாகூர் பாபாவிடம் சென்றேன். என்னைப் பார்த்தவுடன்,* **"கழுதை, கழுதை, போடா கழுதை"** *என்றார். எதற்கு அப்படி திட்டினார் என்று புரியவில்லை. அதன் பிறகு கஸ்மூர் பாபாவிடம் சென்றேன். என்னில் எந்தவித மாற்றமும் வரவில்லை. ஒரு நாள் நான் வீட்டில் இருந்தபோது கஸ்மூர் பாபா சூட்சும உருவத்தில் வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியும் என் பக்கத்தில் வந்து நின்றார். கஸ்மூர் பாபா கதவை மூடியது போல் மறைந்து விட்டார். ஸ்ரீ பூண்டி மகான் என்னுடனே இருப்பது போன்ற அனுபவம் தோன்றியது.*

*நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து எனக்கு நேர்ந்த அனுபவங்களைக் கூறினேன். என் நண்பர் செய்ததையெல்லாம் கூறி நீங்கள் தான் வழிகாட்டவேண்டும் என்று வேண்டினேன். ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகான் என் கனவில் தரிசனம் அளித்து தலை மீது ஒரு பெல்ட் போட்டது போன்ற அனுபவம் ஏற்பட்டது.*

*ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்கு நான் வந்த போது விநாயக தோத்திரம், கந்தர் சஷ்டி கவசம் போன்றவற்றைப் படிப்பேன். நான் படிக்கும் சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி புன்சிரிப்புடன் பார்ப்பார். பின்புறம் உள்ள அறையிலிருந்த பிரசாதங்களிலிருந்து கருப்பு நிறத்தில் ஒருவிதமான சப்தத்துடன் ஒரு புகை வேகமாக செல்லும். நான் படித்து முடித்த பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனம் செய்துகொண்டு வந்துவிடுவேன்.*

*என் பையனும், நானும் கன்னியாகுமரியில் உள்ள மாயி அம்மனை தரிசனம் செய்து கொண்டு பூண்டிக்கு வந்தோம். ஸ்ரீ பூண்டி மகானைதரிசனம் செய்தவுடனே அன்று மாயி அம்மா பூண்டிக்கு வருவதாக கூறிகொண்டிருந்தார். நானும், என் மகனும் விழித்திருந்து பார்த்தோம். அந்த அம்மையார் வந்ததாக எங்களுக்கு தெரியவில்லை. காலையில் ஆறுமணிக்கு பிறகு குளித்து விட்டு வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு,* **"சுவாமி, மாயி அம்மா வருவதாக**

கூறினார்கள். இரவு எதற்கு வரவில்லை'' என்று கேட்டேன். "வந்து போயிட்டாங்கப்பா'' என்றார் ஸ்ரீ பூண்டி மகான். என் கண்களில் கண்ணீர் வந்தது.

**நேர்காணல்: 46**
**25.10.2006, பூண்டி**

**சண்முகம்**, வயது: 69, முருக்கம்பாடி.

*என் பூர்வீகம் பர்வதமலைக்குப் பக்கத்திலுள்ள ஆர்பாக்கம் என்னும் கிராமம். என் சிறு வயதிலேயே என் தாயார் இயற்கை எய்தினார். நான் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் (முருகர்) பக்தன். போளூரிலிருந்து கலசபாக்கம் வழியாக சாத்தனூர் அணைவரை சண்முகானந்தா பேருந்து செல்லும். நான் கலசபாக்கத்தில் பேருந்து ஏறினேன். காலியாக இருந்த சீட் பக்கத்தில் மிகவும் அழுக்கான துணிகளோடு ஒன்றுக்கு மேல் ஒன்றாக கிழிந்த சட்டைகளை அணிந்து கொண்டு பார்ப்பதற்கு பயித்தியக்காரர் போல் ஒருவர் அமர்ந்திருந்தார். நான் அந்த காலி சீட்டில் அமர வெட்கப்பட்டுக் கொண்டே சங்கோஜத்துடன் அமர்ந்து* **"முருகா இவர் குளித்து எத்தனை நாளானதோ! இவர் பக்கத்தில் கொண்டு வந்து உட்கார வைத்தாய்!"** *என்று மனதில் நினைத்தேன். மறுநொடியில்* **"தம்பி"** *என்றார் பக்கத்தில் இருந்தவர். அவர் முகம் தேஜோமயமாக ஜொலித்தது. எனக்கு ஒரு நொடி பயம் ஏற்பட்டது.* **"வெளிய சுத்தப்படுத்தி புண்ணியம் இல்லைப்பா. உள்ளே சுத்தப்படுத்தணும்"** *என்றார். அதன் பிறகு அவர் பெரிய மகான் என்று அறிந்தேன்.*

*என் சகோதரியின் மாமியார் ஊர் மாதிமங்கலம். சைக்கிளில் என் தங்கை வீட்டிற்கு சென்று வந்து கொண்டிருந்தபோது பூண்டி வழியாக செல்வேன். நான் அந்த வழியில் செல்லும்போது பூண்டியில் திண்ணை மேல் பூண்டி மகான் வீற்றிருந்ததைக் கண்டேன். அதன் பிறகு வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து செல்வேன்.*

*என் சிறு வயதில் நண்பர்களோடு சேர்ந்து தான்தோன்றித் தனமாகச் சுற்றுவேன். என் வீட்டில் 45 பவுன் நகைகளை ஒரு பவுன் ரூ.30க்கு விற்று விட்டு நண்பர்களோடு சேர்ந்து ஓட்டலில் சாப்பிட்டு*

செய்யக்கூடாத தவற்றைச் செய்தேன். ஒரு பெண்ணோடு தகாத உறவு கொண்டு எத்தனையோ சிக்கல்களில் மாட்டிக் கொண்டேன். எனக்கு திருமணம் செய்ய வேண்டுமென "**நன்றாக பணம் உள்ள பெண் இருக்கிறாள். பெண் பார்க்க காரில் போகணும்**" என்று கூறினார்கள். நான் பெண்ணைப் பார்ப்பதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து நின்றேன். "**நான் இருக்கிற பணத்தை எப்படி போக்கடிக்க வேண்டும் என்று யோசிக்கிறேன். இலட்சாதிபதி வீட்ல பொண்ணு பார்க்கறத்துக்கு போறாங்கப்பா**'' என்றார் பூண்டி மகான். என்னை தவறு செய்ய வைத்தது கூட நீங்களே சுவாமி என்று மனதில் நினைத்தேன். நான் பெண் பார்க்க செல்லக் கூடாது என்று நினைத்தேன். பெரியவர்களின் வற்புறுத்தலால் சென்றேன். ஒரே பெண், நன்றாக பணம் படைத்தவர்கள். என்னைத் திருமணம் செய்ய சம்மதம் தெரிவித்தாலும் நான் செய்த தவற்றை உணர்ந்து மீண்டும் வாழ்க்கையில் எந்தத் துன்பங்களும் வரக்கூடாது என்று திருமணம் வேண்டாம் என்று முடிவு செய்து பிறகு சிறிது காலம் கழித்து வேறு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்தேன்.

நான் திருவண்ணாமலையில் குடித்தனம் வைத்தேன். பூ விற்று வாழ்க்கை நடத்தினேன். ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்தேன். "**நல்ல வியாபாரம் இருக்கு. நல்ல இலாபம் வரும். நீ பண்றியா**'' என்று கேட்டு என் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கூறி "**உனக்கு சம்பாதிப்பதன் மேல் விருப்பம் இருக்கு**'' என்றும் கூறினார். நான் அந்த சமயத்தில் பதிலேதும் கூறவில்லை. திருவண்ணாமலைக்குச் சென்ற பிறகு இன்னொரு நண்பரிடம் சொல்லவே அவர் "**ஸ்ரீ பூண்டி சுவாமிகள் யாருக்கும் இதுவரை இப்படிப்பட்ட வார்த்தைகளை கூறவில்லை. எதற்கு அப்படி வந்தாய். நான் பணம் தர்றேன். இப்பவே பேருந்து பிடித்து பூண்டிக்குச் செல்**" என்று கூறினார். நான் வந்து ஸ்ரீ பூண்டி மகான் எதிரில் நின்றேன். ஸ்ரீ சுவாமி ஒரு பாட்டு பாடினார்.

**பாடல்:** *வெண்ணிலாக்கண்ணி - சிந்து*

*(1) தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே ஒரு*
*தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே!*

**விளக்கம்:** *வெண்மையான நிலவே, தனக்குத் தலைவனாகிய முதல்வனை உணர்ந்து இன்பம் எய்துவதற்கு நீ ஓர் உபாயத்தை எனக்குச் சொல்லும்!*

*(2) நாதர்முடி மேலிருக்கு வெண்ணிலாவே - அங்கே*
*நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே!*

**விளக்கம்:** *சிவ தத்துவத்திற்கு மேலே உள்ள நிலவே, அவ்விடத்திற்கு வந்தடைய நானும் விரும்புகிறேன்.*

*(3) சச்சிதானந்தக் கடலில் வெண்ணிலாவே - நானும்*
*தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே!*

**விளக்கம்:** *சத்தும் சித்தும் ஆனந்தமுமாகிய சிவபோகக் கடலில் மூழ்கி இன்புற வேண்டுகிறேன்.*

*(4) இராப்பகல் இல்லாவிடத்தே வெண்ணிலாவே - நானும்*
*இருக்க எண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே!*

**விளக்கம்:** *வெண்ணிலாவே, இரவு பகல் என்ற காலப்பாகுபாடு இல்லாத பரவெளியை அடைந்து அங்கேயே இருக்க விரும்புகிறேன்.*

*(5) தேசு நிறமாய் நிறைந்த வெண்ணிலாவே - நானும்*
*சிவமயமதாய் விழைந்தேன் வெண்ணிலாவே!*

**விளக்கம்:** *வெண்ணிலாவே, சூரியன் ஒளி நிறமாய் எங்கும் நிறைந்த சிவத்தின் ஒளிமயமாக விரும்புகிறேன்.*

*(6) போத நடு ஊடிருந்த வெண்ணிலாவே - மலப்*
*போதமற வேண்டுகிறேன் வெண்ணிலாவே!*

**விளக்கம்:** *ஞான வானின் நடுவே திகழும் வெண்ணிலாவே, என்னை மறைக்கும் மல ஞானங்கள் கெட வேண்டுகிறேன்.*

(7) ஆருமறி யாமலிங்கே வெண்ணிலாவே - அரு
ளாளர் வருவாரோ சொல்லாய் வெண்ணிலாவே!

**விளக்கம்:** வெண்ணிலாவே, யாரும் அறியாத நிலையில் திருவருள் ஞானத்தை எனக்குச் சிவபிரான் வந்து அருள் செய்வாரோ, கூறுக.

(8) அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலாவே - எங்கள்
ஐயர் வருவாரோ சொல்லாய் வெண்ணிலாவே!

**விளக்கம்:** வெண்ணிலாவே, அகக் கண்ணில் கண்டு வழிபடுதற்குத் தலைவனாகிய சிவபெருமான் காட்டித் தருவாரோ சொல்லுக.

(9) வேத முடி மேலிருந்த வெண்ணிலாவே - மல
வேதையுள வேது சொல்லாய் வெண்ணிலாவே!

**விளக்கம்:** வேதங்களின் முடிமேல் இருக்கும் வெண்ணிலாவே மலப்பிணிப்பால் உண்டாகும் வேதனைகளைப் போக்குதற்கு உபாயம் ஒன்றை எனக்குச் சொல்லுக.

(10) குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலாவே - அந்தக்
குண்டலிப்பால் வேண்டுகிறேன் வெண்ணிலாவே!

**விளக்கம்:** குண்டலியால் தூண்டப்பட்டுத் துவாத சாந்தத்தில் நின்றொளிரும் அமுத சந்திரனே, குண்டலினி சத்திமுடிவில் எய்தப்பெறும் ஞான அமுதத்தைப் பெற விரும்புகிறேன்.

பாட்டுப் பாடி முடித்தவுடன் **“கால நேரம் வரட்டும் சொல்றேன்”** என்று கூறி இரண்டு வருடம் கழித்து வேறு ஒரு பக்தர் மூலமாக சிவராஜயோகம் உபதேசித்து என்னைச் செய்ய வைத்தார். ஒவ்வொரு சமயம் யாராவது உபதேசம் அளிக்குமாறு பூண்டி மகானை வேண்டினால் **“ஆசாரி இல்லைப்பா சட்டம் இழைக்க”** என்பார். குருவுக்கு நம்மை அர்ப்பணிப்பதே குரு பூஜை. நம்மால் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்பதும், என்னால் முடிந்த அளவு அன்னதானம் செய்ய வேண்டுமென்பதும் என் கோரிக்கை.

நான் பூண்டிக்கு வந்தபோது இரவு இங்கேயே படுத்து உறங்குவேன். ஸ்ரீ பூண்டி சுவாமி அமர்ந்திருந்த திண்ணைக்கு அருகில் கஜா என்பவர் ஒரு சிறிய தேநீர்கடை வைத்திருந்தார். ஒரு நாள் இரவு நான் காங்கனூர் சண்முகம், வேலூரம்மா, சொக்கலிங்கம் சாமி,

துர்க்கா மற்றும் சிலரும், தலை மட்டும் கஜா தேநீர் கடையில் வைத்து கால்களை தெருவில் நீட்டி படுத்துக் கொண்டோம். படுத்தவுடனே நன்றாக தூக்கம் வந்தது. அந்தத் தெருவில் லாரி வந்தது. திண்ணைக்கு சிறிது தொலைவில் பள்ளிக் கூடம் அருகில் லாரிக்கு குறுக்கே கை வைத்தது போல் தோன்றியதே தவிர ஆள் யாரும் தென்படவில்லை. லாரியை அங்கேயே நிறுத்தி "**ஸ்ரீ பூண்டி சுவாமி எதற்கு கையை குறுக்கே வைத்தாரோ தெரியவில்லை**" என்று நினைத்து டிரைவரும், கிளினீரும் கீழே இறங்கி திண்ணைக்கு அருகில் செல்கின்றனர். எங்கள் முதுகு மேல் யாரோ அடித்தது போல் இருந்தது. யார் என்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டோம். டிரைவரும், கிளீனரும் பூண்டி மகானிடம் சென்று வணங்கினார்கள். சுவாமி திருநீறு வைத்தார். அவர்கள் பூண்டி சுவாமியின் கையைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டு "**இந்த கைதானே தெருவில் குறுக்கே வைத்தது போல் தெரிந்தது**" என்று அவ்விருவரும் பேசிக் கொண்டே திரும்பி செல்லும் போது அவர்கள் பேச்சை நாங்கள் கேட்டோம். பிறகு லாரி சென்று விட்டது. ''**நல்லா சாப்பிட்டு நல்லா தூங்கறாங்கப்பா ரோட்ல படுத்துகிட்டு. இவங்களையெல்லாம் யாருப்பா காப்பாத்திறது? இவங்களுக்கு எல்லாம் யாரு காவல் இருப்பாங்க**" என்றார் ஸ்ரீ பூண்டி மகான். அப்போதுதான் நாங்கள் செய்த தவற்றை உணர்ந்தோம். ஸ்ரீ பூண்டி மகான்தான் எங்களைக் காப்பாற்றினார்.

ஒரு வருடம் தீபாவளி சமயத்தில் 22 நாட்கள் மழைப் பெய்தது. மழைக் காலத்தில் பூ விற்பனை நன்றாகக் குறைந்து விட்டது. என் மனைவியிடம் பூக்கூடையை தந்து பக்கத்து கிராமத்தில் பூ விற்று வருமாறு கூறி நான் பூ எடுத்துக் கொண்டு சைக்கிளில் வேறு பக்கம் சென்றேன். கடைசியில் இருவரும் சேர்ந்து என் பூர்வீக கிராமத்திற்குச் சென்றோம். உறவினர் வீட்டில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அன்று இரவு என் உறவினர்கள் வீட்டில் சாப்பிட்டு படுத்து காலையில் எழுந்தவுடனே ஒரு வேளை அவர்கள் வீட்டில் சாப்பிட்டதற்கு பதிலாக அவர்களுக்கு காலையில் எங்கள் செலவில் டிபன் செய்ய வேண்டுமென்று என் மனைவியை ரவை வாங்கி வருமாறு கடைக்கு அனுப்பினேன். அக்கடைக்காரர்

*ரவையில்லை என்று திருப்பி அனுப்பினார். நான் அவர் மகளிடம் கேட்குமாறு மீண்டும் அனுப்பினேன். அவளிடம் என் மனைவி ரவை வாங்கி வந்தார். அனைவருக்கும் டிபன் செய்து வைத்தோம். என் சட்டைப்பையில் பத்துரூபாய் குறைவாக உள்ளது என்று என் மனைவியைக் கேட்டேன்.* **"அவள், சும்மா ரவை எப்படி தருவாங்க? பணம் வாங்கிக் கொண்டு தான் தந்தார்கள்"** *என்று ஆவேசமாக கூறி தகராறு (வாக்குவாதம்) செய்தாள். அக்கடை பெண்மணியால் தான் என் வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. அப்பெண்மணி எவ்வளவோ பணம் தந்தாள். ஆனால் அவளுக்கு நான் என்றும் செலவு செய்யவில்லை. என் அகங்காரத்தின் மேல் அடி விழுந்தது. ஸ்ரீ பூண்டி மகானிடம் சென்று அந்தப் பணம் யார் எடுத்தார்களோ என்று கேட்டு தெரிந்து கொள்ள வேண்டுமென்று உடனே சைக்கிளில் கிளம்பினேன். என் மனைவி பின் சீட்டில் அமர்ந்து கொண்டார். அடைமழை பெய்து கொண்டிருந்தது. ஆனால் எங்கள் மேல் மழைத் துளி விழவில்லை. கலசப்பாக்கம் ஆற்றின் அருகே வந்த உடனே ஆற்றில் வெள்ளம் புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. பேருந்து, லாரி மற்றும் பிற வாகனங்களும் செல்லாமல் நின்று விட்டது. ஆற்றில் இறங்கவும் பயந்தார்கள். ஆற்றின் இருபுறமும் மக்கள் இறங்க வேண்டாம் என்று சப்தம் போட்டார்கள்.* **"இந்த உயிர் இருந்தால் இருக்கட்டும். இல்லாவிட்டால் போகட்டும்"** *என்று வைராக்கியமாக ஆற்றில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டே இறங்கினேன். என் மனைவி பின்னாடியே வருகிறார். ஆற்றைக் கடந்து வந்து நேராக ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து நின்று கொண்டோம்.* **"ஆத்துக்கு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் இறங்க வேண்டாம்னு சொல்றாங்க. பஸ்சும் லாரியும் இறங்கலை. மனுஷங்க யாரும் ஆத்துல இறங்கலை. என்ன சாகசம், தைரியம். தைரியம் இருந்தாலும் எதுக்குப்பா இறங்கணும். நான் கிட்ட இருந்ததால சரியாப்போச்சு. நான் எங்காவது தொலைவா போயிருந்தா யார் அதுக்கு** responsibility **(பொறுப்பு)"** *என்றார் பூண்டி மகான். நான் மனதில்* **''அது எல்லாம் எனக்கு இப்போது அவசியமில்லை. என் சட்டைப்பையிலிருந்து பத்து ரூபாய் போன வழி என்னவென்று எனக்குத் தெரியவேண்டும்"** *என்று எண்ணினேன்.* **"பத்து ரூபாய் நான் தான் எடுத்துக்**

**கொண்டேன். ஒருத்தர் கேட்டாரு. நான் தான் எடுத்து குடுத்தேன். தேவைப்படும்போது திருப்பி தர்றேன்"** என்று கூறினார் ஸ்ரீ பூண்டிமகான். அதோடு எங்கள் பிரச்சினை தீர்ந்து விட்டது.

திருவண்ணாமலையில் கிருஷ்ணா சினிமா தியேட்டரில் சைக்கிளுக்கு டோக்கன் தரும் வேலையில் சேர்ந்தேன். எனக்கு சைக்கிள் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. என்னிடம் பணம் இருந்தபோது பத்து, பத்து ரூபாயாக சேர்த்து வைத்தேன். நான் சேர்த்து வைத்த பணத்திற்கு இன்னொரு பத்து ரூபாயும் இருந்தால் சைக்கிள் வாங்கிவிடலாம். நான் வீட்டிற்குத் தேவையான வெங்காயம் வாங்கச் செல்லும்போது பூண்டி சுவாமியிடம் வேண்டிக் கொண்டேன். "**நீ வெங்காயம் வாங்கிக் கொண்டு திரும்பி வா. அப்போது சொல்கிறேன்**" என்று கூறுவது போல் என் மனதிற்கு தோன்றியது. நான் வெங்காயம் வாங்கிக் கொண்டு திரும்பி வரும் போது "**நீ சைக்கிளுக்கு டோக்கன் தரும் சமயத்தில் கிடைக்கும். எடுத்துக் கொள்**" என்று என் மனதில் எனக்கே தெரியாமல் பதில் வந்தது. அன்று இரண்டாவது சினிமாக் காட்சிக்கு டிக்கெட் தந்தபிறகு கடைசியிலிருந்த சைக்கிளின் அருகில் ஒரு பத்து ரூபாய் கிடைத்தது. யாராவது பணம் தொலைத்து விட்டிருந்தால் கஷ்டப்படுவார்கள், யாராவது கேட்டால் தந்து விடலாம் என்று கடைசி வரை பார்த்தேன். யாரும் கேட்கவில்லை. அந்த பத்து ரூபாயை ஏற்கனவே உள்ள பணத்தோடு சேர்த்து சைக்கிள் வாங்கிக் கொண்டேன்.

ஆடிக் கிருத்திகைக்கு மூன்று நாட்கள் முன்பே பூக்களை வாங்கி வந்தேன். வில்வாரணி கோயிலுக்கருகில் விற்க வேண்டுமென்று மறுநாள் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கிவிட்டு "**ஆடிக்கிருத்திகைக்கு பூவிற்கச் செல்கிறேன்**" என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார். பதிலேதும் கூறவில்லை. இனிச் சென்றாலும் பலனில்லை என்று தோன்றியது. வேலூரம்மா காய்ந்த மிளகாய்களை எடுத்து வந்து மந்திரித்து 'சென்று வா' என்றார். நான் சென்று வில்வாரணி கோயிலுக்கருகில் கடை வைத்தேன். மறுநாள் மாலை வரை ஒரு முழம் பூவைக் கூட விற்க முடியவில்லை. அனைவரும் பூ விற்றுக் கொண்டிருந்தாலும்

ஒருவரும் என்னிடம் வந்து வாங்கவில்லை. வேலூரம்மாவின் மகள் துர்க்காவும், சொக்கலிங்கமும் வந்தார்கள். என்னிடம் இருந்த பூக்கள் வாடி விட்டது என்று பக்கத்திலிருந்தவரிடமிருந்த பூக்களை வாங்கி வந்துத் தந்தேன். அவர்கள் பூண்டிக்குச் சென்று திருவண்ணாமலை சண்முகத்துக்கு பூ விற்பனை ஆகவில்லையென்று அனைவரிடமும் கூறினார்கள். வேலூரம்மாவுக்கும் கூறினார்கள். வேலூரம்மாவுக்கு கோபம் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று "**சுவாமி, அவர் உண்மையான பக்தியுள்ளவர். உண்மையானவர். அவர் பூவை எல்லாம் விற்று மாலைக்குள் இங்கு வரவில்லையென்றால் உங்கள் தாடியை எடுத்து விடுவேன். இது உண்மை**" என்றார். சிறிது நேரம் பூண்டி மகான் பக்தர்களுக்கு திருநீறு அளிப்பதை நிறுத்தி விட்டார். சரியாக அதே நேரத்தில் என்னிடம் பூ வாங்க ஒருவர் பின் ஒருவர் வந்தார்கள். முதலில் வந்தவருக்கு முழம் ஐந்து பைசாவுக்கு தந்தால் பின்னால் வந்தவர்கள் முழம் பத்து பைசா என்றாலும் வாங்கிச் சென்றனர். அதன்பிறகு நான் ஒவ்வொருவருக்கும் ஐந்து பைசா ஏற்றி விற்றேன். சிறிது நேரத்தில் பூக்கள் எல்லாம் விற்று விட்டது. ஸ்ரீ பூண்டி சுவாமி அருளால் அந்த வாடிய பூக்களை எல்லாம் விற்க முடிந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு காரம், இனிப்பு, சிகரெட் வாங்கிக் கொண்டு கிளம்பி வந்தேன். வேலூரம்மா என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். என் கையில் இருந்தவற்றையெல்லாம் வேலூரம்மா கையில் தந்தேன். அவர் எடுத்துச் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு சமர்ப்பித்தார். விருப்பமாக சாப்பிட்டார். சிகரெட்டும் வாங்கிக் கொண்டார்.

ஒவ்வொரு முறை கல்யாணத்திற்கு பூகட்ட சம்மதிப்பேன். பூண்டியிலிருந்து கிளம்புவதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்கு சென்றவுடன் "**நீயெல்லாம் ஒரு மனுஷனாடா இந்த நேரத்திற்குப் போனால் பூ எப்படி கிடைக்கும்**" என்று திட்டுவார். பிறகு திருநீறு அளிப்பார். நான் தாமதமாகச் சென்றாலும் வேலை முடித்து வருவேன். வேலூரம்மாவின் மகள் திருமணத்திற்கு நான் பூ வாங்கிக் கொண்டு திருவண்ணாமலையிலிருந்து வந்த பேருந்து நடுவழியில் நின்று விட்டது. தாமதமாக பூண்டி வந்து சேர்ந்து காலைக்குள்

அவர்கள் திருமணத்திற்கு வேண்டிய பூக்களை தொடுத்துத் தந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் எல்லாம் நன்றாக நடந்தது.

நான் பூஜைக்கு முன்பு பூக்களை வாங்கி வந்து சக்தி பூஜை செய்தபிறகு மீதி வேலைகளை தொடங்குவது என் வழக்கம். பூஜை சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி அங்கேயே இருப்பது போல் பாவித்து நான் பூஜை செய்வேன். சில சமயம் ஸ்ரீ பூண்டி சுவாமி கிளம்பி வெளியே செல்லும் முன்பு என் மனதில் தங்கரதம் தோன்றும். அதில் பூண்டி மகான் ஏறுவது போல் அனுபவம் தோன்றும். அந்த சமயத்தில் ஸ்ரீ பூண்டி மகான் திண்ணை மேல் அமர்ந்திருந்தாலும் உணவு சாப்பிடமாட்டார். கையையும், கால்களையம் ஆட்டிக் கொண்டேயிருப்பார். திரும்பி வரும் சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி சில சங்தேகங்களோடு திரும்பி வந்து விட்டதைக் கூறுவார்.

ஒரு நாள் பெரிய மாலை கட்ட வேண்டும் என்று அதிகமாக பூக்கள் வாங்கிவந்தேன். கஜா டீக்கடையில் மாலை கட்டிக் கொண்டிருந்தேன். அன்று பூண்டி சுவாமி மிகவும் கோபமாக இருந்தார். பழங்கோயில் ஈஸ்வர ஆலய தர்மகர்த்தா அந்தப் பக்கமாக சென்றுக் கொண்டிருந்தார். ஸ்ரீ பூண்டி மகான் ''**என்னாப்பா பழங்கோயில் கோவில் தர்மகர்த்தா இப்படிவா**" என்று அருகே அழைத்து ''**அங்கே ஈஸ்வரன் கோயில்ல தண்ணீர் கூட ஊத்தலைன்னு சொல்றாங்கய்யா என்னாச்சு**'' என்று கேட்டார். உடனே அந்த தர்மகர்த்தா ''**ஊத்தறேன் சுவாமி**'' என்றார். இன்னொரு பக்தர் பயத்துடன் வந்தார். அவரிடமும் கோபமாகப் பேசினார். வந்தவர்கள் அனைவரிடமும் கோபமாகப் பேசினார். ஒரு அன்பர் தன் கணக்கில் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு டிபன் அளிக்குமாறு கிருஷ்ணமூர்த்தியின் தேநீர் கடையில் சொன்னார். "**என்னாப்பா. மக்கள் பணத்தை மோசம் பண்ணி சாமிக்கு டிபன் வாங்கிக் கொடுத்தா சரியா போயிடும்னு நினைச்சிக்கிட்டு இருக்கறியா**'' என்றார். வேறு ஒரு அன்பர் தேநீர் வாங்கித் தர எண்ணினார். "**டீ வேண்டாம் நிறுத்து**" என்றார் பூண்டி சுவாமி. அச்சமயத்தில் வேலூரம்மா வந்து "**தம்பி பூ மாலை கட்டுகிறாய். ஸ்ரீ பூண்டி சுவாமி மிகவும் கோபமாக இருக்கிறார். எந்தச் சமயத்தில் என்ன**

நடக்குமோ தெரியவில்லை" என்றார். **"எனக்கு எதுக்கம்மா பூக்களும் அவரே; கட்டச் சொன்னதும் அவரே! கட்டுவதும் அவரே! அவர் என்ன பண்ணுவாரோ எனக்கு என்னத் தெரியும்? நான் மாலை கட்டி எடுத்து போயி சுவாமிக்குப் போடுவேன். அப்படி போட்டுக்கவில்லையென்றால் சுவாமியிடம் வைத்துவிட்டு வருகிறேன்"** என்று கூறி மாலை கட்டி முடிந்தவுடன் எடுத்துச் சென்றேன். **"எதுக்கய்யா. பச்சை தண்ணியில தாமரை கொதிக்குது. வாழையிலை வேணுமாம் வாழையிலை... எதுக்கய்யா"** என்றார். முகம் நன்றாக சிவந்து இருந்தது. நான் பயந்து போயி மாலையை அங்கேயே போட்டுவிட்டு ஓடி வந்து விட்டேன். **"ஈஸ்வரன் மூன்றாவது கண்ணை திறந்தால் தீப்பொறி பறக்கும் என்று சொல்கிறீர்களே அப்படியிருந்தது ஸ்ரீ பூண்டி சுவாமியின் பார்வை".** நான் எப்போதும் ஸ்ரீ பூண்டி மகானை அப்படி பார்த்ததில்லை. வந்து படுத்துக் கொண்டேன். உணவும் சாப்பிடவில்லை. தண்ணீரும் அருந்தவில்லை. எத்தனை பேர் வந்து கூப்பிட்டாலும் நான் செல்லவில்லை. மாலை மூன்று மணிக்கு **"நீங்கள் இனிமேல் இவ்வளவு கோபமாக இருக்க மாட்டேன் என்று கூறினால்தான் நான் சாப்பிடுவேன்"** என்று அமர்ந்து கொண்டேன். கருணையுள்ளம் கொண்ட ஸ்ரீ பூண்டி மகான் **"போயி சாப்பிட்டு வா"** என்றார். அதன் பிறகு நான் சாப்பிட்டேன்.


நான் திருவண்ணாமலையிலிருந்து முருக்கம்பாடிக்கு சென்று அங்கு குடித்தனம் வைத்தேன். அங்கு எனக்கு ஒரு நாள் கனவில் **"அந்த ஊர் ஆற்றின் கரையில் உள்ள புற்றில் ஒரு பாம்பு உள்ளதாகவும் பெயர் இராஜ ராஜேஸ்வரி அம்மன் என்றும் அங்கு பூஜை செய்யுமாறு"** வந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று கனவில் வந்த அனுபவத்தைக் கூறவே ஆலயம் கட்ட ஆசிகள் வழங்கினார். அங்கு ஆலயம் அமைத்து ஸ்ரீ ராஜராஜேஸ்வரியம்மன் என்று பெயரமைத்து கும்பாபிஷேகம் செய்தேன். சிறிது நாட்கள் கழித்து இந்த பூஜை செய்ய இஷ்டமில்லை. நிஜமான பூஜை செய்ய வேண்டுமென்ற எண்ணம் வந்தது. எங்களுடையது பண்டார ஜாதியை சேர்ந்த குடும்பம். எங்களுக்கு சங்கு ஊதும் பழக்கம் உண்டு. **"ஓம் முருகா எனக்கு உண்மையான சங்கை காட்ட வேண்டும்"** என்று வேண்டினேன். அப்படி சில நாட்கள் கழிந்தது.

ஸ்ரீ பூண்டி சுவாமி சமாதியடைந்த விஷயமறிந்தவுடனே இரண்டாவது நாள் பூண்டிக்கு வந்தேன். வரிசை மிகவும் நீளமாக இருந்தது. நான் வேலூரம்மாவோடு சேர்ந்து நேராக உள்ளே சென்று விட்டேன். நான் ஸ்ரீ பூண்டி மகானுக்கருகில் சென்று அவர் உடலை தொட்டுப் பார்த்தேன். உள்ளே நாடி சப்தம் கேட்டது. கண்கள் கால் பாகம் திறந்த நிலையில் இருந்தது. முதல் நாள் கண்கள் அரைபாகம் திறந்த நிலையில் இருந்ததாகக் கூறினார்கள். நான் "**இப்போது ஸ்ரீ பூண்டி சுவாமி இந்த உடலில் இருக்கிறார். எது கேட்டாலும் இல்லை என்று கூறாமல் தருவார். உங்களுக்கு ஏதாவது வேண்டுமென்றால் கேளுங்கள்**" என்று வேலூரம்மாவிடம் கூறினேன். இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டார். "**இந்த விஷயத்தை உங்களுக்கு விவரித்துக் கூற முடியாது. வேண்டுமென்றால் கேட்டுப் பார். இல்லையென்றால் வேண்டாம்**" என்றேன். மூன்றாவது நாள் ஸ்ரீ பூண்டி மகானின் கண்கள் முழுவதுமாக மூடிக் கொண்டது. ஸ்ரீ பூண்டி மகானின் உடலை திண்ணையில் இருந்து எடுத்துச் செல்லும் சமயத்தில் ஒரு சாண் அளவு நீளம் நாக்கை வெளியே நீட்டினார். தாம்பூலம் போட்டது போல் சிவந்து காணப்பட்டது. என் கண்களால் நன்றாக பார்த்தேன். என்னை பாடச் சொன்னார்கள். எனக்கு துக்கம் தாங்கவில்லை. மூன்றாவது நாள் நாக்கை வெளியே நீட்டக்கூடிய நிலையிலுள்ள அந்த மகான் உடல் துறந்தார் என்று எப்படி எண்ணுவது. அந்த உயர்ந்த மகானின் செயல்கள் நம்மால் அறியமுடியாதவை. இங்கு ஸ்ரீ சுவாமியின் சமாதி அருகில் பிரார்த்தனை செய்தவர்களுக்கு சகலமும் கிடைக்கும் என்றும், அந்த மகான் இங்கு எப்போதும் இருக்கிறார் என்பதும் என் நம்பிக்கை.

இந்த பூமியில் ஞானசூரியனாக பிரகாசித்து, நல்ல உயர்ந்த சிறந்த வழியை காண்பித்து எங்களை வழி நடத்துகின்ற பரப்பிரம்ம சொரூபம் ஸ்ரீ பூண்டி மகான். சிலரை ஞான மார்க்கத்தில் நடத்துகிறார். கோடானுகோடி பக்தருக்கு அருள் பாலித்த கருணைக்கடல் ஸ்ரீ பூண்டி மகான் ஆவார்.



வேலுடன்
ஸ்ரீ பூண்டிமகான்





ஜடாமுடியுடன்
ஸ்ரீ பூண்டிமகான்



ஸ்ரீ ஆற்றுசுவாமி முதன்முதலில் அமர்ந்திருந்த குன்னடிமேடு
(நாகதாளி முட்புதர்கள் இருந்தஇடம்)

**நேர்காணல்: 47**
**25.10.2006, 11.11.2007, பூண்டி**

**குமாரசுவாமி**, வயது: 65க்கு மேல், வேலூர்.

*1953ஆம் ஆண்டில் நான் சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். வேலூரில் ஒரு கடையில் ஸ்ரீ சுவாமிகளின் திருஉருவப்படத்தை பார்த்தவுடனே ஸ்ரீ சுவாமிகளை தரிசிக்க வேண்டுமென்று என் மனதில் மிகுந்த ஆவல் ஏற்பட்டது. அக்கடைக்காரரிடம் விவரங்களை கேட்டறிந்து கிளம்பி கலசபாக்கம் வந்து அங்கிருந்தவர்களை கேட்டேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கூறினார்கள். நான் தேடிக் கொண்டு சென்றேன். கலசபாக்கத்திற்கு மேற்கு திசையில் சிறிது தொலைவில் முட்புதரில் அமர்ந்து இருந்தவாறு தென்பட்டார். நான் சென்று வணங்கினேன். அச்சமயத்தில் பாதங்களிலிருந்து சிரசு வரை குளிர்ந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. உடனே நான் சுவாமி ஒரு பெரிய மகான் என்று தெரிந்து கொண்டேன். நான் திருப்பதி ஸ்ரீ வெங்கடேச பெருமாளின் தரிசனத்திற்கு சென்றபோது கூட இதே அனுபவம் ஏற்பட்டது. எனக்குத் திருமணம் நடந்தபிறகு மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கு சென்று அம்மனை தரிசிக்கும் சமயத்தில் ஒரு பாட்டு பாடினார்கள். அந்த சமயத்திலும் எனக்கு அதேபோல் மெய் சிலிர்த்தது.*

*வெளி நாட்டு தட்டச்சு இயந்திரம் ஒன்றை வாங்கிய பிறகு சுவாமிகளிடம் வந்து ஆசி பெற்றேன். அதே போல் புதிய ஸ்கூட்டர் வாங்கி பூண்டிக்கு எடுத்து வந்து சாவியை ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கொடுத்தேன். "***நல்லது***" என்று ஆசீர்வதித்துத் தந்தார். நான் ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்ட பிறகு கிளம்பி செல்வதற்கு முன்பு விடைபெற்று செல்வேன். அன்று ஸ்கூட்டர் வாங்கிய மகிழ்ச்சியில் சுவாமிகளிடம் அனுமதி பெறாமல் கிளம்பினேன். சிறிது தூரம் சென்றவுடன் வந்தேன். என்னைப் பார்த்தவுடன் சிறு*

*புன்சிரிப்பு செய்தார். நான் கண்ணீர் விட்டேன். புது ஸ்கூட்டர் வாங்கி வந்தேன். சுமார் 100 அடி சென்றதும் நின்று விட்டது என்று வருத்தப்பட்டேன். சிறிது நேரம் கழித்து* **"போய் வாங்க"** *என்று சுவாமி ஆசிகள் வழங்கினார். மீண்டும் கிளம்பி ஸ்கூட்டரிலே வேலூர் சென்றேன்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் திருப்பாதங்களை வணங்கியபிறகு திருநீறு வைத்து குங்குமத்தை நெற்றியில் வைக்கும் சமயத்தில் புருவ மத்தியில் அழுத்தியவாறு வைத்தார். அச்சமயங்களில் என்னை நான் மறந்துவிடுவேன். கடைசியாக திருநீற்றை கையில் தருவார். வாங்கிக் கொண்டு செல்வேன். ஒரு முறை எனக்கு முன்பாக தரிசனம் செய்து கொண்ட பக்தருக்கு சுவாமிகள் திருநீறு அளிக்கவில்லை. எனக்கு அளித்த திருநீற்றை அவரையும் எடுத்துக் கொள்ளும்படி கையைக் காண்பித்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி,* **"யார் கொடுத்தது அவங்களுக்கு"** *என்றார் மிகவும் உரத்தகுரலில். உடனே கையை மூடிக்கொண்டேன். அந்த திருநீற்றை எடுத்து சென்று வெள்ளி குங்குமச்சிமிழில் பத்திரப்படுத்தினேன். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்தபோது அளித்த திருநீற்றை எடுத்து வந்து சேர்த்து வைத்தேன். என் குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டும் உபயோகப்படுத்துகிறோம்.*

*ஒரு நாள் நான் நீதிமன்றத்தில் ஒரு கொலையாளிக்கு ஜாமீன் தரவில்லையென்று மனதில் நினைத்தவாறு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளை வணங்கி நின்றேன். அன்று ஸ்ரீ சுவாமிகள் எனக்கு திருநீறு வைக்கவில்லை கையிலும் தரவில்லை.* **"ஊம்"** *என்று எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். நான் திருநீறு எடுத்துச் சென்றேன்.*

*1964ல் நான் வழக்கறிஞராக தொழிலை ஆரம்பித்தேன். முதலில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி பிறகு வேலூருக்கு மாற்றிக் கொண்டேன். ஒரு நாள் திருவண்ணாமலை துணை நீதிமன்றத்திற்கு* (Sub Court) *சென்று திரும்பிவரும்போது ஸ்ரீ பூண்டி சுவாமிகளிடம் வந்து வணங்கிவிட்டு அங்கேயே இருந்தபோது* I.G.*யாக இருந்த பரமகுரு ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு அங்கேயே நின்று இருந்தார்.* **"நான் வணங்கும் குருவை விட இங்கு இருக்கும் பூண்டி மகான் மிகவும் சிறந்தவர்"**

என்று மனதில் எண்ணம் வந்தவுடனே சரியாக அதே சமயத்தில் தெருவில் ஒரு சிறுவன் மாட்டை கயிறு கட்டி ஓட்டிச் சென்று கொண்டிருந்தான். அச்சிறுவனை பார்த்து சொல்வது போல் "**ஒண்ணை புடிச்சிக்கிட்டாலும் கெட்டியா புடிச்சிக்கடா பையா**" என்று சப்தமாக கூறினார் பூண்டி மகான். உடனே கன்னத்தில் போட்டுக் கொண்டார். I.G. அவர் வெளியே வந்தவுடன் "**எதற்கு அப்படி கன்னத்தில் போட்டுக் கொண்டீர்கள்?**" என்று கேட்டேன். அவர் மனதில் எண்ணம் வந்தவுடனே பூண்டி சுவாமியின் பதில் அவர் அறியாமை நீங்கி கண்களை திறந்துவிட்டது. அதனால் அப்படி செய்ததாகக் கூறினார்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வீட்டிலிருந்து புறப்பட்டதிலிருந்து சுவாமிகளின் நினைவில் வருவேன். சாக்லேட், பழம் அல்லது இனிப்பு பண்டங்கள் அல்லது வீட்டில் ஏதாவது சமைத்து எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி மகானுக்கு ஊட்டுவேன். ஒவ்வொரு முறை பக்கத்தில் வைக்குமாறு கூறுவார். அப்படிப்பட்ட சமயத்தில் என் பக்தியில் ஏதோ குறையுள்ளது என்று எண்ணுவேன். ஒரு முறை வேலூரில் ஆப்பிள் பழம் நன்றாக உள்ளது என்று கடைக்குச் சென்றேன். விலை அதிகமாக கூறியதால் அக்கடைக்காரரிடம் பேரம் பேசினேன். அவர் ஏளனமாக பேசியதால் என் அகங்காரத்தின் மேல் அடி விழுந்து வேறு ஒரு கடைக்குச் சென்று பழம் வாங்கி வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து தரிசனம் செய்த உடனே "**வாங்க வாங்க நினைச்சது ஒண்ணு. வாங்கிட்டு வந்தது ஒண்ணு**" என்று கூறினார். நான் வேலூரில் பேரம் பேசிய விஷயத்தைதான் சுவாமி கூறுகிறார் என்று அறிந்தேன். எப்போது எங்கு எதைப் பேசினாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியால் கேட்க கூடிய சக்தி வாய்ந்தவர் என்று அறிந்தேன்.

நான் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமியை நினைத்து தேர்வுக்குச் செல்வேன். ஒவ்வொரு சமயங்களில் நான் படிக்காத கேள்வி வந்தாலும் அச்சமயத்தில் பதில் தெரிந்தது போல் விடையளித்த சந்தர்ப்பங்களும் இருந்தன. நீதிமன்றத்திலும் சில கடினமான வழக்குகளிலும் ஸ்ரீ பூண்டி சுவாமியை மனதில் நினைத்து

வழக்காடுவேன். சில சமயங்களில் சுப்ரீம் கோர்ட் வழக்குகளிலும் உயர்நீதிமன்ற வழக்குகளிலும் சில சட்டரீதியான உதாரணங்களை வேண்டிய சமயத்தில் எடுத்துக் கூறுவேன். எதிர்வாதியின் வழக்கறிஞர் வியப்படைந்து நிற்பார். நீதிபதி கூட மகிழ்ச்சியடைவார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அனுக்கிரகத்தால் நான் வழக்கில் வெற்றி பெற்றேன். எத்தனையோ வழக்கறிஞர்கள் அவர்களுக்கு பரம்பரையாக வந்த பெயர், புகழோடு தொழிலை ஆரம்பித்தார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் கருணையால் பெயர், புகழ் அடைந்தேன்.

ஒவ்வொருமுறை எனக்கு மனநிம்மதி இல்லாத சமயத்தில் பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி அவர் சன்னதியில் அமர்ந்து இருப்பேன். ஒரு நாள் இரவு பூண்டியிலேயே இருந்தேன். சுமார் இரவு பன்னிரெண்டு மணியளவில் ஸ்ரீமதி இந்திராகாந்தி (Ex. PM) வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு சுமார் 20 நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு ஆங்கிலமும், ஹிந்தியும் தெரியாது என்று நினைத்தேன். அவர்கள் இருவரும் சரளமாக பேசிக் கொண்டார்கள். எந்த மொழியில் பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அப்படிக் கேட்பது தவறு என்று நான் கேட்கவில்லை.

ஸ்ரீமதி இந்திராகாந்தி வெளியே வந்தவுடன் என்னை நான் அறிமுகம் செய்து கொண்டு நானும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் பக்தன் என்றேன். அவர் “**எனக்கு மனநிம்மதி கிடைத்தது. பூஜையறையில் வைத்து பூஜை செய்து கொள்வதற்கு ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருஉருவப்படம் வேண்டும்**” என்று கேட்டார். அச்சமயத்தில் முயற்சி செய்தேன். ஆனால் எங்கும் கிடைக்கவில்லை. நான் டெல்லிக்கு எடுத்து வந்து தருகிறேன் என்று கூறினேன். அவர் எனக்கு தொலைபேசி எண்ணை அளித்து கிளம்புவதற்கு முன்பு போன் செய்தால் தகுந்த ஏற்பாடுகளை செய்வதாகச் சொல்லிச் சென்றார். மறுநாள் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் படத்தை எடுத்துக் கொண்டு விமானத்தில் டெல்லி சென்று போன் செய்தவுடனே எனக்கு சில அடையாளங்களை கூறி கார் அனுப்பி வைத்தார். நான் அவர் வீட்டிற்கு சென்றவுடனே பூஜையறையில் ஸ்ரீ பூண்டி சுவாமியின்

படத்தை வைத்து முதல் ஆரத்தியை என்னை செய்ய வைத்தார். பூண்டி சுவாமியை நம்பினால் உங்களுக்கு எல்லாம் நல்லதே நடக்கும் என்று கூறி வழக்குமன்றத்தில் வேலை உள்ளது என்று கூறி வந்து விட்டேன்.

பாராளுமன்றத்தை சிறிது நாட்களுக்குள் ரத்து செய்தனர். அச்சமயத்தில் ஸ்ரீமதி இந்திராகாந்தி கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று தனக்காக பிரார்த்தனை செய்யும்படியும், வரப்போகிற தேர்தலில் வெற்றி பெற ஆசிகள் பெறுமாறும் எழுதினார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீமதி இந்திரா காந்தி கடிதத்தில் எழுதிய விவரங்களைக் கூறி ஆசிகள் கேட்டேன். "**நல்லது**" என்றார் சுவாமி. அப்போது நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீமதி காந்தி மூன்றில் இரண்டு பங்கு இடங்களில் வெற்றி பெற்றார். அந்த வெற்றியைக் கண்ட ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு ஸ்ரீ பூண்டி சுவாமி மீது அதிகமான பக்தி ஏற்பட்டது. பூண்டிக்கு வந்து தரிசனம் செய்யும் சந்தர்ப்பம் இல்லாததால் நல்லவர்களை நாடு என்ற வார்த்தைகளுக்கு தகுந்தபடி நிறைய மகான்களிடம் சென்றார். நிறைய ஆலயங்களை தரிசனம் செய்து கொண்டார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிஅணிந்திருந்த சட்டை கிழிந்து இருந்தது. "**சுவாமி, உங்களுக்கு பட்டுச்சட்டை போட்டால் எப்படி இருக்கும்?**" என்று சுவாமி சன்னதியில் மனதில் நினைத்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி சிரித்தார். நான் கிளம்பிச் சென்றேன். என் பணியில் மூழ்கி மறந்து விட்டேன். தைப்பூசத்துக்கு முன் நாள் விடியற்காலையில் வண்ணான் எங்கள் வீட்டிற்கு வந்து, "**நீங்கள் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு ஏதோ செய்வதாக கூறினீர்களாம். செய்யவில்லையென்று வருத்தப்படுகிறார்**" என்று கூறிச் சென்றார். அவர் எப்போதும் பூண்டி மகானை பார்த்தது இல்லை. உடனே என் நினைவிற்கு வந்து நான் பட்டுத் துணி வாங்கிச் சட்டை தைத்து பட்டு வேஷ்டி, அங்கவஸ்திரம் வாங்கிக் கொண்டு தைப்பூசம் அன்று பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக பக்தர்கள் வரிசையில் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு காத்திருந்தார்கள். சுவாமிகளை எப்படி தரிசனம் செய்வது என்று

நினைத்துக் கொண்டிருந்தபோது ஒரு காவலாளி (S.I.) வந்து அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் நின்றிருந்தவர்களை சரியாக நிற்க வைக்குமாறு காவலாளிகளிடம் கூறி என்னிடம் வந்து என்னையும் என் தாயாரையும் பூண்டி சுவாமியிடம் அழைத்துச் சென்றார். அதை ஸ்ரீ பூண்டி சுவாமியின் ஏற்பாடாக நினைத்து நான் வாங்கி வந்ததை சுவாமிகளுக்கு காண்பித்தேன். "**அப்படியே போடு**" என்று கூறினார். நான் சட்டையை அணிவிக்க முயற்சி செய்தேன். ஆனால்முடியவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமி தன் உருவத்தை பெரியதாக்கி காண்பித்தார். என் கண்களில் கண்ணீர் வந்தது. பக்தியோடு வேண்டிக் கொண்டேன். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி என் வேதனையைப் பார்த்து "**எனக்கு தையல் வேலை தெரியும். நான் சரி செய்கிறேன்**" என்றார். உடனே அங்கவஸ்திரத்தை பூண்டி சுவாமிக்கு அணிவித்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி தன் கழுத்திலிருந்த பூமாலையை கழட்டி என் கழுத்தில் போட்டார். நான் இதற்கு தகுந்தவன் இல்லை சுவாமி என்றேன். "**நல்லது சென்று வாருங்கள்**" என்று ஆசிர்வதித்தார்.

நான் வாடகை வீட்டில் குடியிருந்தேன். வாடகைக்கு இருந்த வீடு விற்பனைக்கு வந்தது. நான் சிறிது பணம் முன்பணமாக அளித்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து வணங்கி நின்றேன். "**நல்லது சென்று வா**" என்றார். "**சுவாமி நாங்கள் குடியிருக்கும் வீடு விற்பனைக்கு வந்துள்ளது. அந்த வீட்டை வாங்க நினைக்கிறேன். ஆனால் அந்த வீட்டின் மீது சில வழக்குகள் உள்ளன" என்று கூறினேன். "பொறுத்திருந்து செய்**" என்றார் உரத்தக் குரலில். நான் தந்த முன்பணத்தை திருப்பி வாங்க மிகவும் கஷ்டப்பட்டேன்.

எனக்கு கன்னமங்கலத்தில் அரிசி ஆலை (mill) இருந்தது. நான் அரிசி ஆலைக்கு பேருந்தில் சென்று வருவேன். ஒரு நாள் அரிசி ஆலைக்கு சென்று நான் வீடு திரும்பி வருவதற்கு பேருந்துக்காக காத்திருந்தேன். ஒரு பெண்மணி நூறு ரூபாய் நோட்டை கையில் வைத்துக் கொண்டு சில்லரைக்காக கடைகடையாக திரிந்து கொண்டு இருந்தார். யாரும் அவருக்கு சில்லரை தரவில்லை. அங்கே நின்றிருந்த நான் அவர் நிலைமையை கவனித்து மளிகைக்கடைக்காரரிடம் கூறினேன். அவரும் சில்லரை மாற்றித்

தந்தார். இதற்குள் பேருந்து வந்ததும் ஏறினேன். அதே பேருந்தில் அப்பெண்மணியும் ஏறினார். நான் வேலூரில் இறங்கினேன். அப்பெண்மணியும் அங்கே இறங்கி என் பின்னால் வந்தார். வழியில் என்னிடம் பேசியவாறு **"வீடுவிற்க நினைக்கிறேன். நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள்"** என்றார். நான் முன்பு நடந்ததையெல்லாம் கூறி ஸ்ரீ பூண்டி சுவாமிகளை கேட்டுச் செய்ய வேண்டுமென்று அவரிடம் கூறி வீட்டிற்குச் சென்று என் மனைவியிடம் விவரங்களைக் கூறினேன். மறுநாள் காலை கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கினோம். **"நல்லது"** என்றார். வீட்டைப் பற்றிய விவரங்களைக் கூறினேன். **"நல்லது! நல்லது! நல்லது!"** என்று மூன்று முறைக் கூறினார். **"பணமில்லை எப்படி வாங்கச் சொல்கிறீர்கள்"** என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி புன்னகைத்து **"நல்லது நடக்கும்"** என்று ஆசிகள் வழங்கினார். நாங்கள் மீண்டும் சுவாமிகளின் திருவடிகளை வணங்கி **"எங்களுக்கு எதுவும் தெரியாது சுவாமி. நீங்கள் தான் வழி நடத்த வேண்டும்"** என்று வேண்டிக் கொண்டு கிளம்பி வந்தோம்.

அந்த இடத்தை நான் வாங்கிக் கொள்கிறேன் என்று கூறி மூன்று மாத காலத்தில் பத்திரப்பதிவு செய்து கொள்கிறேன் என்று ஒப்பந்தப்பத்திரம் (Agreement) போட்டேன். எனக்கு பணம் கிடைக்கவில்லை. கால அவகாசம் முடியும் தேதி வந்து விட்டது. நான் வீட்டில் சொல்லாமல் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து **"சுவாமி! வீடு வாங்க பணம் கிடைக்கவில்லை"** என்றேன். **"நல்லது போயிட்டு வாங்க"** என்றார் சுவாமி. நான் வீட்டிற்குச் செல்வதற்குள் என் நண்பர்கள் ஒவ்வொருவராக பணம் எடுத்து வந்து வீட்டில் அளித்தார்கள். 52000 ரூபாய்க்கு வீட்டை வாங்கினேன். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்துகொண்டு **"அந்த வீட்டை என்னை வாங்க வைத்து கடனாளி ஆக்கி விட்டீர்களே சுவாமி. குழந்தைகள் படிப்புக்கு செலவு செய்யணும். கடன் கட்ட வேண்டும்"** என்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார். எதுவும் கூறவில்லை. எனக்கு இருந்த நிலத்தின் மீது விவசாயக் கடன் வாங்கி பாதி கடனை அடைத்து விட்டு என் நண்பனின் நிலத்தின் மீது விவசாயக்கடன் வாங்கி மீதி கடனையும் அடைத்துவிட்டேன். ஒரு வருடம் கழித்து

பேங்க் லோன் கட்ட வேண்டும். அந்த மறுவருடம் அப்போதைய அரசு விவசாயிகளுக்கு அளித்த கடனை ரத்து செய்தார்கள். நான் வாங்கிய இரண்டு விவசாயக்கடனும் ரத்தாகிவிட்டது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் எனக்கு சொந்தவீடு கிடைத்தது.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்தபோது நான் கேட்காமல் பூண்டி சுவாமியிடமிருந்து பதில் கிடைக்கும். ஒவ்வொரு முறை யாருக்கோ கூறுவதுபோல் மறைமுகமாகக் கூறுவார். அந்த சமயத்தில் புரிந்து கொண்டால் பதில் கிடைக்கும்.

என் நண்பரான அக்பர் பாஷா காதர் மாவட்ட நீதிபதியாக இருந்தார். அவர் சட்டப்படிப்பு படித்து இரண்டு தங்கப்பதக்கம் பெற்றவர். அவர் பெயர் உயர்நீதிமன்ற நீதிபதியாக தேர்ந்தெடுக்கும் பட்டியலில் இருந்தாலும் தேர்வாகாமல் திரும்பி வந்துவிடும். அந்த விஷயத்தை என்னிடம் கூறினார். நான் "**ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் ஜாதி, மத, பேதமில்லை. முஸ்லீம்களும், கிறிஸ்துவர்களும் கூட அவர் தரிசனத்திற்காக வருகிறார்கள். நான் சில கிறிஸ்தவர்களுக்கு சுவாமியின் படத்தைக் கூட, அளித்துள்ளேன். அவர்களும் பெற்றனர். ஆனால் உங்கள் விருப்பம் என்னவோ எனக்குத் தெரியாது**" என்று கூறினேன். "**எனக்கு அப்படிப்பட்ட பாகுபாடு எண்ணங்கள் இல்லை**" என்று கூறினார் அக்பர் பாஷா காதர். எங்கு வேண்டுமென்றாலும் வருவதாகக் கூறினார். என் காரில் அவரை அழைத்துக் கொண்டு வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கினேன். அக்பர் பாஷா காதரும் பூண்டி சுவாமியின் திருவடிகளை வணங்கினார். சுவாமிகளின் பாதங்களை பிடித்துக் கொண்டு "**சுவாமி! நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்**" என்று வேண்டினார். ஸ்ரீ பூண்டி சுவாமி கையில் திருநீறு எடுத்துக் கொண்டார். அக்பர் பாஷா காதர். வாயை திறந்து காண்பித்தார். அவர் வாயில் திருநீற்றை போட்டார் பூண்டி மகான். அவரும் அதை அப்படியே முழுங்கி விட்டார். "**நல்லது போயிட்டு வாங்க**" என்றார் பூண்டி மகான். நான் அவரை அவரது வீட்டில் விட்டுச் சென்றேன்.

சிறிது நாட்கள் கழித்து அக்பர் பாஷா காதர் என்னை அழைத்தார். நான் சென்றவுடனே உயர்நிதிமன்றத்தில் விண்ணப்ப படிவத்தில் ஏதோ மாற்றங்கள் செய்ய என்னைத் துணைக்கு

அழைத்துச் சென்றார். விண்ணப்பப் படிவத்தில் மாற்றம் செய்து டில்லிக்கு அனுப்பினார்கள். அக்பர் பாஷா காதருக்கு உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு கிடைத்தது. அவர் மீண்டும் பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து விட்டுச் சென்று அதன் பிறகு பதவியேற்றார். அவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக வந்தபிறகு கூட முக்கியமான வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால் என் காரில் சென்றால் எல்லாம் வெற்றியடையும் என்பது அவரது நம்பிக்கை. நான் கார் வாங்கியவுடனே பூண்டிக்கு எடுத்து வந்து சுவாமிகளின் ஆசி பெற்றேன். என் காரில் சென்றால் உங்களுக்கு நல்லது நடக்கும் என்ற பிரச்சாரத்தை நான் விரும்பவில்லை. நீங்கள் அப்படி விளம்பரப்படுத்தாமல் இருந்தால் எடுத்துச் செல்லுங்கள் என்றேன். அப்படியே என்று கூறி முக்கியமான வேலைகளுக்கு செல்லும்போது என் காரை எடுத்துச் செல்வார்.

ஸ்ரீ பூண்டி சுவாமியை பிராணாயாமம் கற்றுத் தருமாறு பலமுறை கேட்டு ஒன்றிரண்டு மணி நேரம் அங்கேயே நின்று அழுது கொண்டிருந்தேன். "**நல்லது. போய்ட்டு வாங்க. காலம் நேரம் வரணும் இல்லையா**" என்று கூறி அனுப்பினார். ஒருநாள் வீட்டில் அனைவரும் சுப காரியத்திற்குச் சென்றார்கள். நான் தனியாக படுத்திருந்த சமயத்தில் தூக்கமும், விழிப்பும் இல்லாத நிலையில் இருந்தேன். யாரோ மூன்று பலசாலிகள் வந்து இப்படி செய்யணும், அப்படி செய்யணும் என்று யோகாசனம் கற்றுத் தந்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை ஒரு கிலோமீட்டர் எவ்வளவு வேகமாக ஓடினாலும் எனக்கு அலுப்பு வராது. ஸ்ரீ பூண்டி சுவாமியை வேண்டிக் கொண்டதற்கு எனக்கு இந்த நிலையைத் தந்தார்.

ஒரு சமயம் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் சன்னதியில் "**எல்லோரும் இறந்து விடுவார்கள் என்கிறார்கள். நான் இப்போது இறந்து பார்க்க வேண்டும். அது எப்படி இருக்கும்**'' என்று எண்ணினேன். ''**விஷபரீட்சையெல்லாம் செய்யக்கூடாது**'' என்று கூறினார் பூண்டி மகான். "**உடல் வேறு, ஆத்மா வேறு என்று சொல்கிறார்கள் அல்லவா. தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல்**" என்றேன். பிறகு சென்று விட்டேன். வீட்டில் படுத்திருந்த சமயத்தில் நான் என்னுடல் போலவே உருவம்

எடுப்பது எனக்கு மட்டும் தெரிகிறது. ஆனால், இந்த உடலை விட்டு வேறாக மேலே செல்வது போல் உள்ளது. உடனே நான் "**போதும் சுவாமி**" என்றேன். பிறகு வழக்கம்போல் என் உடலில் சேர்ந்து விட்டேன். அச்சமயத்தில் கூட மூன்று பலசாலிகள் தரிசனம் அளித்தார்கள்.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பூஜை செய்யும் சமயத்தில் முதலில் என் மனதில் இன்று செய்ய வேண்டிய வேலைகள், முன்பு செய்த வேலைகள் எண்ணங்களாக சூழ்ந்து கொள்ளும். என் மனம் நிலையாக ஒரு நிமிடமும் நிற்காது. ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வேண்டிக் கொண்டேன். மூன்று, நான்கு நாட்கள் கழித்து முதலில் வந்த மூன்று பலசாலிகள் வந்து சில ஸ்லோகங்களைக் கூறி இதை நினைத்துக் கொண்டே தியானம் செய்தால் மனம் நிலையாக இருக்கும் என்று கூறி சென்றுவிட்டார்கள். அவர்கள் கூறியவாறே அந்த ஸ்லோகங்களை மனதில் நினைத்த பிறகு என் மனதில் உள்ள சலனங்கள் நீங்கி நிலையானது. இன்று அவர்கள் கூறியபடியே தியானம் செய்து கொள்கிறேன்.

என் வாழ்க்கையில் ஸ்ரீ பூண்டி மகான் ஒவ்வொரு விநாடியும் எனக்குத் துணையாக இருந்து வழி நடத்தி என்னையும், என் குடும்பத்தையும் எல்லா காலங்களிலும் காப்பாற்றிக் கொண்டு எங்களுக்கு வழிகாண்பிக்கும் ஸ்ரீ பூண்டி மகானே எங்களுக்கு தெய்வம்.

**நேர்காணல்: 48**
**25.10.2006, பூண்டி**

**ஆதிகேசவலு**, வயது: 75, மதுராந்தகம்.

*எனக்கு சுமார் 40 வயதாக இருந்தபோது ஒரு நாள் கனவில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி (முருகப் பெருமான்) தரிசனம் அளித்து ஒரு இடத்தை காண்பித்து அந்த இடத்திற்குச் செல்லுமாறு கூறினார். ஆனால் ஊர், பெயர் கூறவில்லை. நான் எத்தனையோ இடங்களுக்குச் சென்றேன். ஆனால் என் கனவில் கடவுள் காண்பித்த இடம் எங்கும் தென்படவில்லை. என் நண்பர் ஒருவர் பேச்சினிடையே அவர் கலசபாக்கம் அருகில் பூண்டியில் ஒரு மகானை தரிசனம் செய்து கொண்டதாகக் கூறினார். பக்கத்தில் ஆறு இருக்கிறதா என்று கேட்டேன். உள்ளது என்றார். தென்னை மரங்கள் உள்ளனவா என்று கேட்டேன். உள்ளது என்றார். எனக்குத் தேவையான ஆதாரம் கிடைத்தது என்று நினைத்தேன்.*

*நான் கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு என் கனவில் வந்த அனுபவத்தைக் கூறினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி கண்களை மூடி சிறிது நிமிடங்கள் தியானத்தில் இருந்தார். அதன் பிறகு ''***ஷேமமா** இரு'' என்று ஆசி வழங்கினார். அப்போதிலிருந்து நான் அடிக்கடி வந்து சுவாமிகளை தரிசனம் செய்து கொள்வேன். இங்கு வந்த ஒவ்வொரு முறையும் எத்தனையோ பக்தர்கள் பல்வேறு விதமாக அவரவர் அனுபவங்களை கூறுவார்கள்.*

*ஒரு பையன் P.U.C. தேர்வில் தோல்வியடைந்து வாழ்க்கைகக்கு வழி தெரியாமல் துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது நான் அப்பையனை அழைத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு அப்பையனுக்கு வாழ்க்கைக்கு வழி காண்பிக்குமாறு வேண்டிக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஅப்பையனை உற்று நோக்கினார். அந்தப் பையன் வீட்டிற்குச்*

சென்ற மறுநாளிலிருந்து தந்தையார் செய்து கொண்டிருந்த கடிகாரம் பழுது பார்த்தல் வேலையை செய்ய ஆரம்பித்தான். அப்பையனுக்கு எந்த அனுபவமும் இல்லாவிட்டாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அனுக்கிரகத்தால் அவனுள் மாற்றம் ஏற்பட்டு அப்படி செய்ய முடிந்தது. இன்று மகிழ்ச்சியாக இருக்கிறான்.

போளூரிலிருந்து சில அன்பர்கள் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக கிளம்பி பேருந்து நிலையத்திற்கு வந்தார்கள். அதில் ஒரு பெண்மணியின் உறவினர் எதிரில் வரவே இருமனமாக திரும்பி வீட்டிற்குச் சென்று அவருக்கு காப்பி தந்து மீண்டும் பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு எதிரில் உள்ள மண்டபத்தில் அமர்ந்து கொண்டார். திருநீறும், குங்குமமும் அனைவரும் நெற்றியில் அணிந்திருந்ததை பார்த்து தனக்கு சுவாமி அவ்வாறு வைக்கவில்லையென்று மீண்டும் வந்து ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து கொண்டார். "**வரணும்னு புறப்பட்டபிறகு வரணும். இருமனமா வரக்கூடாது**" என்று கூறி திருநீறும், குங்குமமும் அளித்து அனுப்பினார் ஸ்ரீ பூண்டி மகான்.

ஒரு வாத்தியார் தன்னிடமிருந்த இடத்தில் வீடு கட்ட ஸ்ரீ பூண்டி சுவாமியை கேட்டார். "**கட்டலாம்**" என்று ஆசி வழங்கினார் பூண்டி சுவாமி. அதன் பிறகு அவரது குடும்ப சூழ்நிலையால் அந்த இடத்தை விற்க முயற்சி செய்தாலும் முடியவில்லை. அதன் பிறகு அங்கேயே வீடு கட்டிக் கொண்டார்.

ஒரு அன்பர் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு எனக்கு இரு மகள்கள் பிறந்தார்கள். பிறகு ஒரு பையன் பிறக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். "**பிறப்பான்**" என்று ஆசி வழங்கினார் பூண்டி மகான். அப்படியே அவருக்கு மகனும் பிறந்தான். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வரும்போது திருநீறு வாங்கிச் செல்வேன். ஒரு பையனுக்கு சீதபேதி ஆகிக் கொண்டிருந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை மனதில் நினைத்து அவர் அளித்த திருநீற்றை வைத்தேன். பேதியும் நின்று விட்டது. மீண்டும் அந்தப் பையனுக்கு மருந்துகளை உபயோகப்படுத்தியதும் சீதபேதி மீண்டும் வர ஆரம்பித்தது. எத்தனை மருந்துகளை

உபயோகப்படுத்தியும் நிற்கவில்லை. நான் மீண்டும் ஸ்ரீ பூண்டி சுவாமியை பிரார்த்தனை செய்து சுவாமி அளித்த திருநீற்றை அளித்தேன். நன்றாகி விட்டது.

ஒரு பையனுக்கு சாப்பிடும் நேரத்தில் விக்கல் வரும். மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஸ்ரீ சுவாமிகளை நினைத்து திருநீறு வைத்தேன். அப்பையனுக்கு நன்றாகி விட்டது. இன்று வரை அந்த சிக்கல் வரவில்லை.

ஸ்ரீ பூண்டி சுவாமிஇருந்த வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் ஒரு அம்மையார் தினந்தோறும் பூக்களை எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு சமர்ப்பணம் செய்வார். ஸ்ரீ சுவாமி அவருக்கு சில பூக்களைத் தருவார். அப்பெண்மணி வீட்டிற்குச் சென்றவுடனே அப்பூக்களை குழந்தைகள் பிய்த்து போட்டுவிடுவார்கள். குழந்தைகள் செய்வது பிடிக்காமல் அப்பெண்மணி மனதில் "**சுவாமி ஒரு பூ தந்தால் தலையில் வைத்துக் கொள்ளலாம். நிறைய தருவதால்தான் குழந்தைகள் இப்படிச் செய்கிறார்கள்**" என்று நினைத்தார். மறுநாள் அப்பெண்மணி பூக்களை எடுத்துச் சென்று ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டார். ஸ்ரீ சுவாமி அன்று அவருக்கு ஒரே ஒரு பூவை அளித்தார். இது எங்கும் நிறைந்த ஸ்ரீ பூண்டி சுவாமியின் லீலை என்று அறிந்தார்.

ஒருவர் தன் மகனுக்கு திருமணம் செய்ய நினைத்து இரு பெண்களை பார்த்து விட்டு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு எந்தப் பெண்ணை மகனுக்கு திருமணம் செய்யலாம் என்று கேட்டார். "**முதல் பார்த்த பெண்ணை பையனுக்கு செய்யுங்க**" என்று கூறினார் பூண்டி மகான். சுவாமி கூறியபடியே திருமணம் செய்தார்.

நான் ஸ்ரீ பூண்டி மகானிடம் ஒரு முறை ஞானத்தை அளிக்குமாறு பிரார்த்தனை செய்தேன். "**சென்று வாருங்கள்**" என்று கூறினார். இன்று கூட ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் பிரார்த்தனை செய்து கொண்டு சுகமாக வாழ்கிறேன்.





ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த பிள்ளையார் கோவில், கலசபாக்கம்

**நேர்காணல்: 49**
**25.10.2006, பூண்டி**

**K.V. ராஜாராமன்,** வயது: 60, அனியாலக்காம்பட்டு கிராமம், கலசபாக்கம் அருகில்.

*கலசபாக்கத்திற்கு ஆறு கிலோமீட்டர் தொலைவிலுள்ள அனியாலக்காம்பட்டு கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். என் கிராமத்தில் இருந்த ஒரு சாது ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தார். அவர் பெயர் வெங்கடாசலபதிசாமி. ஸ்ரீ பூண்டி சுவாமி நடமாடிக் கொண்டிருந்து போது எங்கிருந்தாலும் தேடிக் கண்டு பிடித்து பழம், சாக்லேட் வேறு எதையாவது ஊட்டி விட்டு வணங்கி வருவார். வெங்கடாசலபதிசாமி கடப்பை சச்சிதானந்த சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் எந்தெந்த இடங்களில் அமர்ந்து இருந்தாரோ அந்த இடங்களுக்குச் சென்று அமர்ந்து தியானம் செய்வார்.*

*என் சிறுவயதில் பசுக்களையும், ஆடுகளையும் மேய்த்து வந்தேன். நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்தேன். வெங்கடாசலபதி சாமி என் பக்கத்து வீட்டிற்கு வருவார். அவர் பெரியவர்களோடு பேசிக் கொண்டிக்கும்போது நான் கவனமாகக் கேட்பேன். என் மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கும். அவர் உரையாடலில் ஆன்மீக விஷயங்களை நிறையக் கூறுவார். சிறிது நாட்களுக்கு பிறகு அவர் பின்னாடியே செல்வேன். ஒரு நாள் அவர் கலசபாக்கம் சென்றபோது பிடிவாதம் பிடித்து நானும் அவருடன் சென்றேன். கலசபாக்கத்தில் சந்தை நடக்கும் இடத்தில் ஒரு பெரிய ஆலமரத்தின் கீழே ஸ்ரீ சுவாமி அமர்ந்து கொண்டு ஒரு ஆலமர இலையில் ஓட்டை போட்டு வைக்கோலால் திரித்த கயிறு கொண்டு கட்டி வாய்க்கு குறுக்கே கட்டி இருந்தார். வெங்கடாசலபதிசாமி சாக்லேட்டை ஊட்டினார். ஸ்ரீ சுவாமி அவரை அப்படியே உற்று நோக்கினார். பிறகு*

சாத்துக்குடி பழத்தையும் உரித்து சுவாமிக்கு ஊட்டினார். சிறிது நேரம் அவர்கள் இருவரும் உரையாடிய பிறகு நாங்கள் கிளம்பிச் சென்றோம்.

என் சிறிய வயதில் தாய், தந்தையர் இயற்கை எய்தினார்கள். சொல்ல முடியாதத் துன்பங்களை அனுபவித்தேன். வாழ்க்கை நடத்துவதற்காக வேலூருக்குச் சென்று கூலி வேலை செய்து பிழைத்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணை மேல் அமர்ந்தபிறகு வெங்கடாசலபதிசாமியும் வேலூரில் நிரந்தரமாக வசித்தார். அவருடன் சேர்ந்து மீண்டும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்தேன். ஒரு வருடம் (1975 என்று நினைவு) பெரிய சூறாவளி வந்து நஷ்டம் வந்தது. அச்சமயத்தில் நானும் வெங்கடாசலபதி சாமியும் பூண்டிக்கு வந்தோம். அடை மழை பெய்து கொண்டிருந்தது. சூறாவளிக் காற்று அடித்தது. ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடியது. மாலை சுமார் 4 மணியளவில் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு "**கிளம்புவதற்கு விடை கொடுங்கள் சுவாமி**'' என்று கேட்டோம். ஸ்ரீ பூண்டி சுவாமியின் முகம் கம்பீரமானது. "**ஓட்டேரி அறுத்துகிட்டு போச்சு. ஒருத்தர் செத்துட்டாரு. சாவுக்கு போகலையா**" என்றார் சுவாமி. நான் "**எதற்கு சுவாமி? நீங்கள் இருக்கும்போது இப்படி நடந்தால் எப்படி சுவாமி?**" என்று கேட்டேன். "**நான் ஒண்ணா, இரண்டா புடிச்சிக்கறத்துக்கு**" என்றார் சுவாமி. எங்களுக்கு எதுவும் புரியவில்லை. நாங்கள் கிளம்பி சென்று பேருந்து நிலையத்தில் இறங்கியவுடனே மாலை நாளிதழில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சூறாவளியால் ஏரிக்கரை உடைந்து சுமார் 600 பேர் உயிரிழந்தார்கள் என்றும், ஆந்திராவில் கடற்கரையோர பகுதிகளில் சூறாவளி மழையால் கிராமங்கள் நீரில் மூழ்கி மக்கள் கூட்டம் ஸ்தம்பித்து விட்டார்கள் என்றும், உயிருக்கும், உடைமைகளுக்கும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது என்ற செய்தியை படித்தவுடன் ஸ்ரீ பூண்டி சுவாமி கூறியதை புரிந்து கொண்டோம். "**இப்படிப்பட்ட மகான்கள் உலகில் எங்கும் தென்படமாட்டார்கள். முக்காலமும் உணர்ந்த ஞானி. இப்படிப்பட்ட ஞானியை தரிசனம் செய்து கொள்வது நம்முடைய அதிஷ்டம்**" என்றார் வெங்கடாசலபதிசாமி.

*நான் திருமணம் செய்ய நினைத்தேன். பூண்டிக்குப் பக்கத்தில் பிராயம்பட்டில் ஒரு பெண்ணின் தந்தை எனக்கு தகவல் அனுப்பினார். நாங்கள் கிளம்பி செல்வதற்குள் அவர் வேறு ஒரு வரனுக்காக கிளம்பிச் சென்று விட்டார். என் மனதிற்கு வருத்தம் ஏற்பட்டது. நான் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி,* **"சுவாமி, எங்களைப் பெண் பார்க்க வரச் சொல்லிட்டு வேறு ஒரு பையனை பார்க்கச் சென்று விட்டார். அந்தப் பெண்ணை கல்யாணம் செய்யச் சொல்றீங்களா? இல்லை வேண்டாமா? நீங்களே எங்களுக்கு வழி காட்டுங்கள்"** *என்று வேண்டினேன்.* **"கீழ்ப்பத்துறையிலிருந்து வந்தாங்க. மேப்பத்துரைக்கு போனாரு. வருவாரா இல்லையா என்று பார்த்துகிட்டு போ"** *என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். மாலை வரை காத்திருந்தோம். அவர் வந்து பெண்ணிற்கு வேறு ஒரு பையனோடு திருமணம் நிச்சயம் ஆனதாக கூறினார். நாங்கள் கிளம்பிச் சென்று விட்டோம். அதன்பிறகு சிலர் தெரிந்தவர்கள் பெண்ணை காண்பிக்கிறோம் என்று பணம் வாங்கிச் செல்வார்கள். திரும்பி வரமாட்டார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து* **"சுவாமி, எனக்கு பெண் எங்கும் அமையவில்லை"** *என்று வேண்டினேன்.* **"ஆடு கேழ்வரகுப் பயிரை மேயத்தான் பாக்கும். பயிறு வைச்சவங்க காவல் இருக்கணும். தூங்கினா ஆடு மேய்ஞ்சிட்டு போயிடும்"** *என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். என்னை ஏமாற்றி பணம் வாங்கி செல்கிறார்கள். ஜாக்கிரதையாக இருக்குமாறு எச்சரித்தார் என்று நினைத்தேன்.*

*சிறிது நாட்கள் கழித்து மூன்று பெண்களைப் பார்த்துவிட்டு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து* **"இரண்டு, மூன்று இடத்தில் பெண் தருவதாகச் சொல்கிறார்கள் சுவாமி. என்னை எந்தப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளச் சொல்கிறீர்கள்"** *என்று கேட்டேன்.* **"இரண்டாவது வாட்டி பாத்தியே அந்த பெண்ணை கல்யாணம் பண்ணிக்கோ"** *என்று கூறினார் பூண்டி மகான். நானும் அப்படியே திருமணம் செய்தேன்.*

*1974ல் பெண் பிறந்தாள். ஒரு வாரத்தில் குழந்தைக்கு போலியோ தாக்கி, கால், கை சலனம் இல்லாமல் போய்விட்டது. வேலூர் C.M.C. மருத்துவமனையில் காண்பித்தேன். பணம் செலவு செய்தும் பலனில்லை. ஆயுர்வேதம் உபயோகித்தும் பலனில்லை. பிறகு வேலூர்*

C.M.C.யில் வைத்தியம் செய்தும் சரியாகவில்லை. குழந்தையை சுவற்றில் சாய்த்து உட்கார வைத்தால் பொம்மை போல் அமர்ந்து கொள்ளும். நடக்கும் வயது வந்தும் நடக்க முடியவில்லை. இனி ஸ்ரீ பூண்டி மகானே வழி காண்பிக்க வேண்டும் என்று வந்து தரிசனம் செய்து கொண்டு "சுவாமி நீங்கள் சொல்லியபடி திருமணம் செய்தேன். எனக்குக் குழந்தை இல்லையென்று உங்களைக் கேட்டேனா? எனக்களித்த குழந்தையை ஆரோக்கியமாக தந்து இருக்கலாம் அல்லவா, வாழ்க்கையெல்லாம் கண்ணீர் விடுமாறு செய்தீர்களே. இது தர்மமா? உன்னை பூஜை செய்ததற்கு இப்படித்தான் செய்வீர்களா? இப்படி செய்வது நியாயமா?" என் மனதிலுள்ள வேதனைகளை கண்ணீருடன் முறையிட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஎன்னையே பார்த்துக் கொண்டிருந்தார். நான் மவுனமாக நின்று கொண்டேன். "நேத்துதான் கதைக் கேட்டீங்க. கர்மாக்களை அனுபவிக்க வேண்டும்தான் என்று, கதை கேட்டு என்னை இப்படிக் கேட்டால் நான் என்ன பதில் சொல்றது" என்றார் ஸ்ரீ பூண்டி மகான். வேலூரில் நேற்று ஸ்ரீ வெங்கடாசலபதிசாமி ஒரு கதை கூறினார். "அகஸ்திய முனிவர் ஈஸ்வரனுக்கு சமமானவர். ஈஸ்வரனுக்கு திருமணம் செய்யும் சமயத்தில் திருமணத்திற்கு வந்தவர்களின் பாரத்தால் பூமி ஒரு பக்கமாக தாழ்ந்து போய்க் கொண்டிருந்ததால், அகஸ்திய முனிவரை மறுபக்கம் நிற்க வைத்தார்கள். பூமி மீண்டும் சமமாக நின்றது. அந்த அளவு சக்தி வாய்ந்த அகஸ்திய மாமுனிவருக்கு தியானத்தில் அமரும் சமயத்தில் வயிற்று வலி ஏற்படுமாம். அதனால் தியானத்தில் நிஷ்டையாக அமரமுடியவில்லை. ஈஸ்வரனுக்கு திருமணம் முடிந்த பிறகு ஈஸ்வரனிடம் சென்று சுவாமி எனக்கு தியானம் செய்யும் சமயத்தில் வயிற்று வலி தாங்கமுடியவில்லை. உங்கள் மீது என் மனத்தை முழுமையாக நிலைநிறுத்த முடியவில்லை. தியானம் செய்யும் சமயத்தில் என் வலியைப் பெற்று வெளியே விடுவதற்கு நீங்கள் அனுமதியுங்கள் சுவாமி என்று கேட்டாராம். அப்படியே செய்யுமாறு ஈஸ்வரன் சொல்லவே அகஸ்திய முனிவர் தியானத்திற்கு முன்பு வயிற்றுவலியை எடுத்து வாழையிலை மீது வைத்து தியானம் முடிந்தவுடன் அந்த வயிற்றுவலியை எடுத்து உள்ளே விடுவாராம். அந்த வலி இல்லாமல் செய்யக்கூடிய தவவலிமை இருந்தாலும் பூர்வ ஜென்ம கர்மாக்களை அனுபவிக்க வேண்டும் என்ற தர்மத்தை தாண்டவில்லை. மகான்கள்,

**ஞானிகள், யோகிகள் படைத்தல், காத்தல், அழித்தல் போன்றவற்றை செய்யக்கூடிய சக்தி இருந்தாலும் எதிர்மறையாக செய்யமாட்டார்கள்".** இந்த கதையைத் தான் ஸ்ரீ பூண்டி சுவாமிஎன் நினைவிற்கு வரும்படி செய்தார்.

**"சுவாமி மாயப்பிறவியெடுத்து மானிடர்கள், நல்லது கெட்டது தெரியாத நாங்கள் உங்கள் பாதங்களை சரணடைந்தோம். நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். நீங்கள் கண்கள் திறந்து பார்த்தால் கயிலாயத்தில் உள்ள ஈஸ்வரனையே பார்க்க முடியும். உங்களுக்கு அந்த சக்தி உள்ளது. அதற்காகத் தான் உங்களை சரணடைந்தோம்"** என்று வேண்டினேன். சிறிது நேரம் கழித்து திருநீறு அளித்து **"எடுத்து போயி திருநீறு வை"** என்றார் சுவாமி. அச்சமயத்தில் C.M.C. மருத்துவமனையில் மருத்துவர்கள் கூறியபடி குழந்தைக்கு இரண்டு பக்கமும் மணல் மூட்டை கட்டி வைத்து படுக்க வைத்தனர். பக்கத்தில் புரண்டாலும் கீழே விழாமல் இருக்க அப்படி செய்யச் சொன்னார்கள். நான் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமியளித்த திருநீற்றை வைத்து உடல் எல்லாம் பூசினேன். இத்தனை நாளாக எந்த மருந்துகளாலும் சரிசெய்ய முடியாத போலியோ வியாதியை ஸ்ரீ பூண்டி சுவாமி அளித்த திருநீற்றை பூசிய ஒரு மணி நேரம் கழித்து மகள் எழுந்து உட்கார்ந்தாள். அப்போதிலிருந்து ஸ்ரீ பூண்டி சுவாமியைத் தவிர வேறு கடவுள் இல்லை என்று எண்ணினேன். சிறந்த மகிமைகளை உடைய ஸ்ரீ சுவாமியின் அருளால் குழந்தைக்கு தேவையானவற்றை செய்து கொள்ளக்கூடிய சக்தியை அளித்தார். இன்று M.A. படித்து ஆசிரியராக பணியாற்றிக் கொண்டு சமுதாயத்தில் ஒரு மனுஷியாக நிற்குமாறு செய்தார்.

அனியாலக்காம்பட்டு கிராமத்தில் இருந்து ஒரு பெண்மணி ஒரு வருடம் எல்லா அமாவாசைக்கும் வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்துச் செல்வார். நான் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்த சமயத்தில் அவரும் வந்து தரிசனம் செய்து கொண்டு **"சுவாமி எனக்கு குழந்தைப்பேறு இல்லை. குழந்தைப்பேறு பெறும் பாக்கியம் அளியுங்கள்"** என்று வேண்டினார். **"இலாபம் இருக்கும். முதலுக்கே மோசம் வரும்"** என்றார் பூண்டி சுவாமி. இன்னும் ஏதோ சுவாமி

கூறினாலும் அப்பெண்மணியால் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பெண்மணி பிரசவித்தவுடன் மரணமடைந்தார்.

1973ஆம் ஆண்டு வேலூரில் நான் வெல்லம் மண்டி ஆரம்பிக்க நினைத்தேன். சிறிது பணம் சேர்த்து வைத்தேன். வியாபாரம் ஆரம்பிப்பதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டுஆசிகள் கேட்டேன். **"நேரம் வரட்டும். போய்ட்டு வாங்க"** என்றார் பூண்டி மகான். என்னிடமிருந்த பணத்தோடு இன்னும் சிறிது சம்பாதிக்கலாம் என்ற ஆசையோடு சுமார் பத்து முறை வந்து கேட்டாலும் அதே பதிலைத்தான் கூறினார். மார்கழி மாதம் 1ம் தேதி ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்யும் பழக்கம் இருந்தது. அன்று நான் வெங்கடாசலபதி சாமியோடு வந்தேன். நான் அவரிடம் வியாபாரத்தைப் பற்றி கூறினேன். அவர் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டுசிறிது நேரம் உரையாடிய பிறகு **"ராஜா ஏதோ மண்டி ஆரம்பிக்கணும் என்கிறார். அதற்கு நீங்கள் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லுங்கள்"** என்று கேட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமி சிறிது நேரம் மவுனமாகப் பார்த்து **"பூட்டு, சாவி தொலைவா இருக்கு. கொண்டு வந்து கொடுக்கறத்துக்கு நேரமாகும். அவர் அவசரப்படறாரு"** என்றார்.என் ஆசையால் மீண்டும் ஒரு முறை கேட்கச் சொன்னேன். சிறிது நேரம் கழித்து வெங்கடாசலபதிசாமி **"நீங்கள் சொன்னது சரி, ஆனால் பையன் அவசரபடறான். ஏதாவது ஒன்றை உங்கள் வாயால் கூறுங்கள்"** என்று சுவாமியிடம் கேட்டார். **"சரி சென்று ஆரம்பியுங்கள்"** என்று ஆசி வழங்கினார். **"நான் எப்போது ஆரம்பிக்கட்டும் சுவாமி"** என்று கேட்டேன். **"எப்ப வேணுமின்னாலும் ஆரம்பிக்கலாம்"** என்று கூறினார் பூண்டி சுவாமி. **"நீங்கள் இருக்கும்போது நான் எதற்காக வேறு இடத்தில் சென்று பஞ்சாங்கம் பார்க்கணும். நான் எப்போது ஆரம்பிக்க வேண்டும் என்று உங்கள் வாயால் கூறுங்கள்"** என்று கேட்டேன். **"இந்த மாசத்தில ஆரம்பியுங்கள்"** என்று கூறினார் சுவாமி. **"இந்த மாதம் என்றால் தமிழ் மாதம் பின்பற்றி ஆரம்பிக்கச் சொல்கிறீர்களா?"** என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி **"தமிழ் மாதத்தில் 28ந் தேதி ஆரம்பியுங்க"** என்று கூறினார். **"எந்தப் பெயர் வைக்கச் சொல்றீங்க சுவாமி"** என்று வேண்டினேன். **"தத்தக்கா புத்தக்கான்னு ஏதோ ஒரு பெயர் வையுங்க"** என்று கூறினார் பூண்டி

மகான். "நான் எதுக்கு தத்தக்கா புத்தக்கான்னு ஒரு பெயர் வைக்கணும். உங்கள் வாயிலிருந்து ஏதோ ஒரு பெயர் சொல்லுங்க. நீங்கள் இருக்கும் போது ஏன் வேறு ஒருவரை கேட்கணும்" என்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "முருகன் என்று ஆரம்பிச்சிக்கோ" என்று கூறினார். நானும் மிகவும் மகிழ்ச்சியாக சென்றேன்.

வேலூருக்கு சென்றபிறகு "மார்கழி மாதம் எந்த நல்ல வேலையும் ஆரம்பிக்கக்கூடாது" என்று கூறினார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகூறிய 28ந் தேதி கிருத்திகை நட்சத்திரம் வருகிறது. "கிருத்திகையன்று வியாபாரம் ஆரம்பம் செய்வார்களா" என்று கேலியாகப் பேசினார்கள். எனக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை. எது நடந்தாலும் நல்லதுக்கே என்று நினைத்து ஸ்ரீ பூண்டி சுவாமிகூறிய தேதிக்கே வியாபாரம் ஆரம்பிக்க அழைப்பிதழ்களை அச்சடித்து எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து பிறகு ஒரு பத்திரிகையை கையில் வைத்து "சுவாமி! அன்று நட்சத்திரம் நன்றாக இல்லையென்று ஊர்ல எல்லாரும் பலவிதமாக கூறினார்கள். நான் அந்தப் பேச்சை பொருட்படுத்தவில்லை. என்னை நன்றாக வாழ வைத்தாலும், கெடுத்தாலும் அந்த இரண்டிற்கும் காரணம் நீங்களே. என் கையால் பிச்சையெடுக்க வைத்தாலும் நான் தயாராக இருக்கிறேன். அப்போதுகூட கோவணம் கட்டிக் கொண்டு தினந்தோறும் உங்களிடம் வந்து நிற்பேனே தவிர வேறு ஓர் இடத்திற்கு செல்லமாட்டேன். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் சென்று மண்டி ஆரம்பித்துக் கொள்ளவா?" என்று கேட்டேன். "நல்லது பண்ணுங்க" என்று ஆசீர்வதித்தார் ஸ்ரீ பூண்டி மகான். எத்தனை பேர் எத்தனை கூறினாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருள் என்னை இந்த சமுதாயத்தில் ஒரு வியாபாரியாக நிலை நிறுத்தியது. மகான்களின் தரிசனம் பாப விமோசனம் என்பார்கள். இந்த ஜென்மத்திற்கு ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனமே என் பாக்கியம்.

1978ல் நான் ஒரு புத்தகம் படித்தேன். ஒரு மானிடன் எவ்வாறு ஞானத்தை பெறமுடியும், பிரணாயாமம் எப்படி செய்வது, தினம் எத்தனை முறை தியானம் செய்ய வேண்டும் என்ற விவரங்கள் அதில் தெளிவாக இருந்தது. தினம் 4 முறை காலம் தவறாமல் மூன்று மாதங்கள் தியானம் செய்ய முடிந்தால் போதும் என்று

எழுதியிருந்தது. நானும் அப்படியே செய்தேன். என் உடலில் வெப்பம் அதிகமாகி இரத்த வயிற்றுப் போக்கானது. வியாபாரத்தின் மேல் விருப்பம் குறைந்து விட்டது. எப்போதும் கடவுளின் நினைவில் இருந்தேன். என் நண்பர்கள் கூறினாலும் பொருட்படுத்தவில்லை. என் நண்பர்கள் ஒரு நாள் என்னை ஸ்ரீ பூண்டி மகான் சன்னதிக்கு அழைத்து வந்து என் நிலைமையை எடுத்து கூறினார்கள். “**சமயம் சந்தர்ப்பம் பின்னால நிறைய இருக்கு. இப்ப அவசரப்படவேண்டாம்**” என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். இனி அப்போதிலிருந்து நானும் என் அலுவல்களில் மூழ்கிவிட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி சொன்ன சமயம் எப்போது வரும் என்று காத்திருக்கிறேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமி சமாதியடைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வந்து தரிசனம் செய்து கொண்டேன். அன்று ஸ்ரீ பூண்டி சுவாமியின் முகத்தில் ஜொலிக்கின்ற தேஜஸ் இதற்கு முன்பு எப்போதும் பார்த்தது இல்லை. மிகவும் ஆனந்தமாக தென்பட்டார். “**உனக்கு என்ன வேண்டுமோ கேளுடா**” என்றபடி இருந்தது அவரது மௌன மொழி. என் அறியாமையால் கேட்கவில்லை. ஒன்று மட்டும் கேட்டேன். “**சுவாமி! கடைசிவரை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்**”. “**காப்பத்தறேன். விடமாட்டேன்**” என்று அபயமளித்தார். அந்த வார்த்தை தினந்தோறும் ஸ்ரீ பூண்டி சுவாமி சொல்வது போல் உள்ளது. நினைக்கும் பொழுது ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது.

ஒரு சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி இருந்தபோதே ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஒரு நூறு பேருக்கு அன்னதானம் செய்யச் சொன்னார். அப்போதிலிருந்து வருடத்திற்கு நூறு பேராக ஆரம்பித்து ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்த பிறகு குருபூஜையன்று ஆயிரம் பேருக்கு மேல் பிற்பகல் உணவு அன்னதானம் செய்கிறோம். அதே அன்று குமாரசுவாமி அவர்கள் சாதுக்களுக்கு வஸ்திரதானம் செய்கிறார். இருவரும் சேர்ந்து செய்கிறோம். இதை சுவாமிகள் எனக்களித்த வரமாக பாவித்து சேவை செய்து கொள்கிறேன்.



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த திரௌபதியம்மன் கோவில், கலசபாக்கம்



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த திண்ணை
(திரௌபதியம்மன் கோவில் உள்புறம்) கலசபாக்கம்





ஸ்ரீ பூண்டி சுவாமி அமர்ந்திருந்த திண்ணை - பூண்டி

**நேர்காணல்: 50**
**11.11.2007, பூண்டி**

**சுந்தரமூர்த்தி**, வயது: 57, குன்னத்தூர் கிராமம்.

*நான் விவசாயக்குடும்பத்தில் பிறந்தேன். என் சிறிய வயதில் நட்சத்திரக் கோவிலில் ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ சுவாமிகளை எங்கு பார்த்தாலும் வணங்கிச் செல்வேன். திண்ணை மீது அமர்ந்த பிறகு அடிக்கடி வந்து பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு பூக்களைப் பறித்து வருவேன். ஸ்ரீ சுவாமிகளின் ஆடைகளை ஆற்றுக்கு எடுத்துச் சென்று சுத்தப்படுத்தி காயவைத்து எடுத்து வந்த பிறகு சுவாமிகளை தரிசனம் செய்த போது சிறு புன்னகையோடு திருநீறு வைப்பார். என் வீட்டில் உள்ளவர்கள் நான் வேலை செய்யாமல் சோம்பேறித்தனமாக சுற்றுகிறேன் என்று நினைத்தார்கள். வீட்டிற்குச் சென்றவுடனே திட்டுவார்கள்.*

*என் தந்தையார் திருப்பதிக்குச் சென்று வந்து உடல்நலம் சரியில்லாமல் பக்கவாதம் வந்து கால்களும், கைகளும் உணர்விழந்து படுக்கையானார். அந்த சமயத்தில் மைசூரிலிருந்து ஒரு துறவி எங்கள் பக்கத்து கிராமமான தாமரைப்பாக்கத்திற்கு வந்தார். கிராமத்திலுள்ள பலர் சென்று அத்துறவியை தரிசனம் செய்து வந்தார்கள். அத்துறவி என் தந்தையின் உடல்நிலையை சரி செய்வார் என்று ஒரு பெரியவர் என்னை அழைத்துச் சென்றார். நான் சென்றவுடனே அத்துறவியின் கையில் ஒரு சிறிய டப்பா வைத்திருந்ததை பார்த்தேன். எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அத்துறவி* **“உன் தந்தைக்கு பங்காளிகள் செய்வினை செய்துள்ளார்கள். 1100 ரூபாய், விதம் விதமான பூக்கள், விதமான எண்ணெய் வாங்கி வந்தால் சரி செய்கிறேன்”** *என்றார். எல்லாரும் சென்று அவர் பாதங்களில் வணங்கினார்கள். நான் ஒரு பக்கமாக நின்று கொண்டு ஸ்ரீ பூண்டி சுவாமியை மனதில் வேண்டினேன். என்னிடம் பணமில்லை.*

மனதுக்கும் பிடிக்கவில்லை. சூழ்நிலை இப்படி உள்ளதே என்று அழுதேன். அத்துறவியிடம் நாளை வருவதாக கூறி கிளம்பி வந்து விட்டேன். வீட்டிற்குச் சென்றவுடனே "**சென்றாயா? பார்த்தாயா?**" என்று ஆவலுடன் என் தாயார் கேட்டார். "**உங்களுக்கு வருத்தம் வேண்டாம். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் செல்வேன். என்னை நீங்கள் திட்டினாலும் கஷ்டமில்லை**'' என்று மறுநாள் காலை கிளம்பி ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து நின்றேன். "**அப்பா அவர் வந்திருக்காரு. வயிற்றுச் சோறுக்காக ஏதோ சொல்லி பிழைக்கிறான். அதுக்காக எதுக்கு. பங்காளிங்க செய்து வைக்கட்டும். நீ வர வேண்டிய இடத்துக்கு வந்தாச்சு இல்லையா. அது நல்லாயிடும். நீ எதுக்கு அழுகிறாய்?**'' என்று கூறி என்னைத் தேற்றினார். அங்கேயே நின்று எல்லாவற்றையும் கேட்ட ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கேட்டார். நானும் விஷயத்தை விவரமாகக் கூறினேன். என் மனதில் தந்தைக்கு உடல்நிலை சரியாகிவிடும் என்றால் என் கையில் சுவாமி திருநீறு அளிக்க வேண்டும் என்று எண்ணினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி என் கையில் நிறைய திருநீற்றை கொடுத்தார். சரியாக அதே சமயத்தில் என் தந்தையின் உடல் நிலை சரியாகி என் அம்மாவை அழைத்து மகன் எங்கு சென்றிருக்கிறான்? என்று கேட்டார். பூண்டிக்கு சென்றுள்ளான் என்று கூறினாலும் அவருக்கு நம்பிக்கை வரவில்லை. என் தந்தை கட்டை வண்டியில் சென்று தாமரைபாக்கம் துறவியை பார்க்க வேண்டும் என்று கூறவே என் தாயார் அத்துறவியிடம் போக வேண்டாம் என்று நான் கூறியதாகச் சொன்னார். நான் வீட்டிற்குச் சென்றவுடனே என் தாயார் என்னைப் பார்த்து சிரித்தார். "**தந்தைக்கு ஆரோக்கியம் எப்படி உள்ளது?**'' என்று கேட்டேன். சுமாராக இருப்பதாக கூறினார். "**அப்படியிருந்தால் நீங்கள் உடனே வண்டி கட்டிக் கொண்டு பூண்டிக்கு சென்று ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடம் சொல்லுங்கள். உங்களுக்கு உணவளித்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் அழைத்துச் செல்வார். நான் காலையில் கிளம்பி வருகிறேன்**" என்று கூறி அனுப்பி வைத்தேன். என் தாய், தந்தையார் சென்றவுடன் பூண்டி மகான் சிறு புன்னகைத்து "**பையனை எதுக்கு திட்டறீங்க. திட்டினாலும் பரவாயில்லை. அவன் என்கிட்ட தான் வந்து இருக்கிறான்**'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

அன்றிலிருந்து நான் பூண்டிக்குச் சென்றாலும் திட்டுவதை விட்டுவிட்டார்கள். சில நாட்களில் என் தந்தையார் உடல்நிலை முழுவதுமாக குணமாகிவிட்டது.

ஒரு சமயம் நான் வீட்டில் யாரிடமும் கூறாமல் நண்பர்களோடு சேர்ந்து ஷிமோகோ (சிவமுகை) சென்றேன். வீட்டில் சொல்லாமல் சென்றதால் வருத்தத்துடன் திரும்பி வந்து விட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று தரிசனம் செய்தேன். **''என்னாப்பா! புதுப்பாளையம்போன செங்கம் பார்த்துவிட்டு வரவேண்டியது தானே"** என்று கூறினார். சுவாமி கூறியதைப் புரிந்து கொண்டேன். **"சென்று எனக்கு கிராமத்தில் கெட்ட பெயர் வாங்கித் தராதே எனக்கு கெட்ட பெயர் வரும். போயி நல்லவனா, ஒழுங்கா இருந்து நல்ல பெயர் வாங்கிக் கொடு"** என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் எந்த தீயப்பழக்கங்கள் இல்லாமல் நல்ல வழியில் நடக்க முடிந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் பரிபூரண திவ்ய அருள் எனக்கு கிடைத்தது.

சிறிது நாட்கள் கழித்து என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாமல் பாண்டிச்சேரியில் மருத்துவமனையில் சேர்த்தோம். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து **"அப்பா. எங்களுக்கு என் தாய் திருமணம் செய்து பார்க்கவில்லை''** என்று மனதில் எண்ணினேன். **"என்னாப்பா! அது போய் விட்டதப்பா! எதுவும் மனசில வச்சிக்காதே. உன் புத்தியை திடம் பண்ணிக்கோ!''** என்று ஆறுதல் கூறினார். திருநீறு கேட்டாலும் தரவில்லை. நான் வீட்டிற்குச் சென்றேன். என் அம்மாவை மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். புற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தார்கள்.

எனக்குத் திருமணம் செய்ய பெண்ணைப் பார்த்தார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து **"அப்பா. எனக்கு எதற்கு திருமணம். அம்மா போய்விட்டார்கள். நான் உங்களுடன் இருக்கிறேன்''** என்று வேண்டினேன். **"அதெல்லாம் சரியில்லை. நீ போயி குடும்பத்தில் இரு"** என்று கூறினார் பூண்டி மகான். என் அம்மா உயிரோடு இருந்தபோது ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டு வந்து கூறினார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று **"அப்பா! தாய், தந்தை ஒரு பெண்ணைப் பார்த்து விட்டு வந்து திருமணம் செய்ய சொல்றாங்க. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"**

என்று மனதில் வேண்டினேன். “**என்னாப்பா! கூழ் பானை எடுத்துக்கிட்டு போகாது. ஆறு தாண்டாது. அது உனக்குத் தேவையில்லைபோ. அம்மா, அப்பா இஷ்டபடறாங்க. அது உனக்கு தகுந்த இடமில்லை. வேண்டாம்**” எனறு கூறினார். “**சரி எனக்குத் தகுந்த இடம் எது? பெண் எங்கு உள்ளது?**” என்று மனதில் வேண்டினேன். “**அது இப்ப நடக்காது. நடக்க வேண்டிய நேரத்தில் நடக்கும்**” என்றார்.

சிறிது காலம் கழித்து வேறு ஒரு பெண்ணை பார்த்துவிட்டு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்தேன். “**அது தாமரைபாக்கம். வெளியே சம்பந்தம். மழை பெய்ஞ்சா கால் வழுக்கும். அது வேண்டாம்**” என்றார்.நான் எதிர் பேசாமல் சென்று விட்டேன். பிறகு மருத்துவாம்பாடியில் பெண்ணைப்பார்த்தார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து “**அப்பா. எனக்குப் பெண் பார்த்தார்கள். எனக்கு பெண் பிடிக்கவில்லை. நீங்கள் தான் சொல்ல வேண்டும்**” என்று மனதிலேயே கூறிக்கொண்டேன். “**ஏண்டா. குடிசை வீடு, அது தாண்டா உனக்கு தகுந்த இடம்**” என்றார். “**நீங்கள் சொன்னால் திருமணம் செய்து கொள்கிறேன்**” என்று எண்ணினேன். ‘‘**பார்க்கிறத்துக்கு அப்படித்தான் இருக்கணும். உன் குடும்பத்துக்கு அதுதாண்டா**” என்றார்.ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் அந்த பெண்ணோடு என் திருமணம் நடத்த நிச்சயமாயிற்று.

என் திருமணத்திற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து “**அப்பா, நீங்கள் திருமணத்திற்கு தவறாமல் வர வேண்டும்**’’ என்று வேண்டிக் கொண்டேன். ‘‘**வரேன்**’’ என்று கூறினார். சுவாமி என் திருமண நாளன்று வந்ததாக எனக்குத் தெரியவில்லை. திருமணம் முடிந்தவுடன் நான் கோபமாக வந்து பூண்டி சுவாமி முன் நின்று கொண்டு “**திருமணத்திற்கு வருவதாக சொன்னீர்கள். ஆனால் நீங்கள் வரவில்லை**” என்று மனதில் நினைத்தேன். “**என்னப்பா. சனி மூலையில் நட்ட தூண் கிட்ட உட்கார்ந்து உன் கிட்ட சாப்பாடு கேட்டேன். நினைவிருக்கா. நீதானே கொண்டு வந்து சாப்பாடு வைச்ச. வந்து என்னை பேசிக் கொண்டிருக்கிறாயே. சாப்பாடு சாப்பிட்டு கல்யாணம் பார்த்து வந்தேன்பா. நல்லா நடந்ததுப்பா கல்யாணம்**” என்று கூறினார் பூண்டி சுவாமி. ஸ்ரீ சுவாமிகள் அந்நிய மனிதர் உருவில் வந்ததை தெரிந்து கொள்ள முடியாமல் போனதே என்று மனவருத்தம் அடைந்தேன்.

என் திருமணம் நடந்த பத்து நாட்களுக்கெல்லாம் என் மனைவி உடல் நலம் சரியில்லாமல் படுக்கையானார். கால், கை வராமல் படுக்கையில் வீழ்ந்தார். அவளது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள மற்றொருவர் உதவியும் தேவைப்பட்டது. நான் எவரிடமும் சொல்லவில்லை. கிருத்திகையன்று கிளம்பி காங்கனூர் சண்முகம் சுவாமியிடம் சென்று அங்கு நின்றவுடனே என்னைப் பார்த்து **"என்னாப்பா! ஏதோ சோகத்தில் வந்து இருக்கிறாயே?"** என்று கேட்டார். **"போதும் நீங்கள் பேசியது. நீயும், சுவாமியும் சேர்ந்து திருமணம் செய்து வைத்தீர்கள். அவள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள என் துணை தேவைப்படுகிறது. நான் உங்களிடம் திருமணம் வேண்டுமென்று கேட்டேனா? அவரும், நீங்களும் செய்த வேலை என்னை அவஸ்தைபட வைக்கின்றது"** என்றேன் ஆவேசமாக. **"இப்போது எதுவும் பேசாதே. பூஜை முடிந்தபிறகு இரவு பூண்டிக்குச் செல்லலாம்"** என்றார். நாங்கள் மாலை ஆறு மணிக்குக் கிளம்பினோம். பூண்டிக்கு வருவதற்குள் சுவாமியை படுக்க வைத்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் வீட்டிற்குச் சென்று விட்டார். நாங்கள் பூண்டி சுவாமியின் சன்னதியில் வந்து நின்றவுடனே, **"என்னாப்பா சண்முகம் வந்தாயா?"** என்றார். **"ஆம் வந்தேன். இருவரையும் சேர்த்து திட்டுகிறார் நம் சிஷ்யன்"** என்றார் சண்முகசுவாமி. உடனே ஸ்ரீ பூண்டி சுவாமி **"அது வரவேண்டியது வந்ததுப்பா. அது போக வேண்டிய நேரத்தில் போயிடும்பா. பையன் கஷ்டப்படுகிறான். உன்னோடு கூட்டிக்கிட்டு வந்த"** என்று கூறினார். அப்போதே இரவு ஒன்பது மணி ஆகி இருந்தது. இரவு பூண்டியிலேயே இருந்து காலையில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் ஆடைகளை சுத்தப்படுத்தி எடுத்து வந்தேன். பூஜை முடிந்த பிறகு **"சுவாமி! இப்படி உள்ளதே"** என்று மனதில் எண்ணினேன். **"அது இருந்தா இருக்கட்டும். நீ போ"** என்றார் பூண்டி சுவாமி. **"என் மனைவிக்கு உடல்நலம் சரியாகும் என்றால் திருநீற்றை என் கையில் தர வேண்டும்"** என்று மனதில் எண்ணினேன். ஸ்ரீ பூண்டி சுவாமியும் திருநீறு அளித்தார். வீட்டிற்கு சென்று என் மனைவியை அழைத்து வந்து பூண்டி சுவாமியின் சன்னதியில் விட்டு விட்டு, **"சுவாமி, என்று செல்ல வேண்டும் என்கிறாரோ அன்றுதான் வீட்டிற்கு வரவேண்டும்"** என்று கூறி சென்று விட்டேன்.

என் மனைவிக்கு ஒரு நாள் இரவு "**சுடுகாட்டிற்கு சென்றது போலவும், எழுந்து அமர்ந்தது போலவும், அங்கே பட்டென்று கன்னத்தில் அடித்தது போலவும்**" கனவு வந்தது. உடனே கை, கால் வலி குறைந்து இலேசாக ஆனது போல் உள்ளதென்று கூறினார். ஆரோக்கியம் சரியானது. அன்றிலிருந்து இன்று வரை எந்த வியாதியும் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்கிறார். அன்றிலிருந்து அவரும் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் பக்தி, விசுவாசத்துடன் இருந்தார்.

சிறிது காலம் கழித்து மகன் பிறந்தான். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் தான் பெயர் வைக்க வேண்டுமென்று கூறினேன். என் மாமியார் வீட்டில் எள்ளி நகையாடினாலும் பொருட்படுத்தவில்லை. ஏழாவது மாதத்தில் குழந்தையை எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் மடியில் வைத்தோம். ஸ்ரீ பூண்டி சுவாமி மந்தகாசம் செய்தார். நான் "**அப்பா! உங்கள் பேரன் வந்து இருக்கிறான். பாத்துக்க**" என்று மனதில் நினைத்தேன். திருநீற்றை குழந்தை மேல் தெளித்து நெற்றியில் பொட்டு வைத்தார். நான் கேட்பதற்கு முன்பே "**கமலக்கண்ணன்பா**" என்று பெயர் வைத்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் நின்றிருந்த சுப்பிரமணிய சுவாமி, "**என் மகனுக்கு கமலக்கண்ணன் என்று பெயர் வைத்தீர்கள். இந்தப் பையனுக்கும் அதே பெயரை வைக்கிறீர்களே சுவாமி!**" என்று கேட்டார். "**அவன் அந்த நட்சத்திரத்தில பிறந்தான். அவனுக்கு அந்த பெயர் தான் வைக்கணும்**" என்று கூறினார் ஸ்ரீ பூண்டி சுவாமி. அங்கிருந்த அனைவரும் மகிழ்ச்சியோடு புன்சிரிப்பு சிரித்தனர்.

T.M. சௌந்திரராஜனின் பாட்டுக் கச்சேரி ஏற்பாடு செய்தார்கள். நானும் காங்கனூர் சண்முகமும் ஓரிடத்தில் அமர்ந்து இருந்தோம். "**சுவாமிக்கு தண்ணீர் தாகமாக இருக்கிறது. ஒரு சோடா வாங்கி போயி கொடுத்து விட்டுவா**" என்றார் சண்முக சுவாமி. நான் சோடா வாங்கிச் சென்றேன். அங்கிருந்த காவலாளிகள் என்னைக் கூப்பிட்டார்கள். நான் சென்றவுடனே ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் அனுப்பினார்கள். சுவாமிக்கு சோடா அருந்தச் செய்து வந்தேன். முன்புறம் செல்லமுடியாமல் அங்கேயே நின்று விட்டேன். மணல் போட்டால் கீழே விழாத அளவு மக்கள் கூட்டம். சரியாக அதே சமயத்தில் T.M.S. வந்தார். அவர் பின் நான் செல்லும்போது என்னை நிறுத்தி

விட்டார்கள். உடனே “**தம்பி இல்லாமல் நான் மேடைக்கு செல்ல மாட்டேன்**” என்று கூறி என்னையும் அழைத்து சென்று அவர் பக்கத்திலேயே அமரச்செய்தார். பாட்டுக்கச்சேரி ஆரம்பித்தவுடனே எல்லோரும் சினிமாப்பாட்டு பாடச் சொல்லி சத்தம் செய்தார்கள். அவர் வருத்தத்துடன் இங்கு சினிமாப்பாட்டு வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் மக்கள் கேட்கவில்லை. அதன் பிறகு சண்முகம் அவர்கள் மக்கள் விருப்பத்திற்கு பாடுமாறு கூறி மேடையிலிருந்து கீழே இறங்கினார். நானும் அவர் பின்னாடியே வந்து விட்டேன். T.M. சௌந்திரராஜன் சுவாமிகளை மனதில் வேண்டி மக்கள் விருப்பத்திற்குப் பாடினார்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் ஆடைகளை துவைத்துக் கொண்டிருந்தேன். ஒரு புதிய இரண்டு ரூபாய் நோட்டு, இரண்டு சாக்லேட்டும் கிடைத்தது. எடுத்து பத்திரப்படுத்தி விட்டு துணிகளை சுத்தப்படுத்தி எடுத்து வந்த பிறகு பணத்தையும், சாக்லேட்டையும் பூண்டி சுவாமியிடம் தந்து “**அப்பா! இது துணியில் கிடைத்தது**” என்றேன். “**பிழைக்கத் தெரியாதவன்**” என்றார் பூண்டி சுவாமி. “**எனக்குத் தேவையில்லை அப்பா. உங்கள் அருள் தான் வேண்டும்**” என்றேன். சிலசமயம் பூண்டி மகான் “**ஏண்டா! பஸ் சார்ஜுக்கு என்ன பண்ற**” என்று கேட்பார். நான் நடந்தே செல்வேன் என்று கூறினேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிஒரு நாள் ‘‘**எல்லாம் பணத்துமேல் ஆசைப்படறாங்கப்பா. என்னோட பாரத்தை யாரும் வாங்கிக்க மாட்டேன் என்கிறார்களே. என் தலைமேல இருக்கிற மூட்டையை யாரும் வாங்கிக்க மாட்டேன் என்கிறார்களே. பக்தி, நம்பிக்கையை யாரும் கண்டுக்கலையே**” என்றார். சுவாமிகளின் மகிமையையும், பெருந்தன்மையையும் சிலரே அறிந்து கொண்டார்கள்.

என் கிணற்றில் பங்குதாரர்கள் இருந்தார்கள். மின்சார இணைப்பு இல்லை. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு, “**அப்பா! நான் எத்தனை நாள் இப்படி கவலை (நீர் இறைக்கும் கருவி) ஒட்டி கஷ்டப்பட்டு பயிர் செய்வது**” என்று மனதில் எண்ணினேன். “**ஆம் சரி! இப்பதான் சமயம் வந்தது**” என்றார் பூண்டி மகான். “**மின் வாரியத் துறையிலிருந்து வந்த எவரும் லஞ்சம் வாங்க மாட்டோம் என்றார்கள். நான்**

**எப்படி மின் இணைப்பு பெறுவது"** என்று எண்ணினேன். **"அவன் வருவான். போடா. சர்வீசும் வந்திடும்"** என்று ஆசிர்வதித்தார் பூண்டி சுவாமி. மூன்றாவது நாளே மின் இணைப்பு வந்தது. என் தாயார் சர்க்கரைப் பொங்கல் செய்தார்கள். சிறிது சர்க்கரை பொங்கலை எடுத்துக் கொண்டு நான் கிளம்பி பூண்டி சுவாமியிடம் வந்தேன். இரவு எட்டு மணியாகிவிட்டது. என்னைப் பார்த்தவுடனே புன்னகைத்தார். **"அப்பா! இணைப்பு கொடுத்தீர்கள்"** என்றேன். **"ஆம். நல்லது"** என்றார் சுவாமி. **"வீட்டிலிருந்து சர்க்கரைப் பொங்கல் எடுத்து வந்தேன் அப்பா"** என்றேன். வாயைத் திறந்தார். ஒரு கவளம் ஊட்டினேன். **"இனி போதும். கீழே வைத்து விடு. பூனை சாப்பிடும்"** என்றார். அன்று இரவு நான் பூண்டியிலேயே உறங்கி காலையில் பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். **"நீ போறதுக்குள்ளே மோட்டார் போயிகிட்டு இருக்கும்"** என்றார். சுவாமிகளின் அருளால் எல்லாம் நல்லபடியா நடந்தேறியது.

ஸ்ரீ பூண்டி மகான் ஒவ்வொருமுறை பேசிக் கொண்டே இருப்பார். **"புதுப்பாளையம் போனா ஒரு அம்மா இடியாப்பம் கொடுப்பாங்க. அது தாண்டி செங்கம் போனால் நல்ல ஸ்பெஷல் தோசை போடுவாங்க. அப்படி எல்லாம் திரும்பி வந்தேன்பா"** என்றார். சுவாமிகளின் வார்த்தைகள் சில சமயங்களில் புரிந்து கொள்ள முடியாது.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் மஹாசமாதிக்கு முன் நாள் 4 மணிக்கு வந்து பூண்டி சுவாமிகளின் முன் நின்றேன்.

''சென்று வா'' என்று கூறி திருநீறு அளித்தால்தான் நான் வீட்டிற்குச் செல்வது வழக்கம். ஸ்ரீ பூண்டி சுவாமி கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக கொட்டியது. நான் அங்கவஸ்திரத்தால் கண்ணீரைத் துடைத்தேன். அங்கேயே இருந்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் **"காலையிலிருந்து யாருக்கும் திருநீறு தரவில்லை. கண்ணீர் விடுகிறார்"** என்றார். **"அப்பா! நீங்க அழுதா நான் என்ன செய்ய முடியும். நாங்க அழுதா நீங்க என் கண்ணீரைத் துடைக்க முடியும். நான் கண்ணீரைத் துடைத்து என்ன பார்க்க முடியும். என்ன அப்பா இது''** என்று வருத்தத்துடன் மனதில் நினைத்தேன். அப்போதைக்கே பத்து, பதினைந்து முறை கண்ணீரை துடைத்தாலும் கண்களிலிருந்து

கண்ணீர் தாரையாக கொட்டிக் கொண்டிருந்தது. "**அப்பா! நான் வீட்டிற்குச் சென்று காலையிலேயே ஏர் உழணும். உங்களிடம் திருநீறு வாங்காமல் என்று சென்றேன்?**" என்று மனதில் நினைத்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் முன் இருந்த திருநீற்று தட்டிலிருந்து துடைத்து எடுத்து என் கையில் கொடுத்தார். நான் இரு கைகளையும் நீட்டிப் பெற்றுக் கொண்டேன். மனதிலேயே விடை பெற்றேன். தலையசைத்தார். ஸ்ரீ சுவாமிகளின் முகத்தை நன்றாக துடைத்து சுத்தப்படுத்தி விட்டு கிளம்பிச் சென்றேன். மறுநாள் காலை ஏர் உழும் சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி சமாதியடைந்தார் என்று தெரிந்தது. உடனே கிளம்பி வந்து சமாதி செய்யும்வரை இங்கேயே இருந்து சென்றேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளிடம் ஒரு இளைஞன் காவியுடை அணிந்து வந்து "**சுவாமி! நீங்க வெள்ளையாடை அணிந்து உள்ளீர்கள். நாங்கள் காவியுடை அணிய வேண்டுமா?**" என்று கேட்டான். "**காவியெல்லாம் போலியப்பா. தேங்காயை உடைத்தால் உள்ளே வெள்ளையா இருக்கிறபடி நம் உள்ளம் வெண்மையா இருக்கணும்.காவி நமக்கு தேவையில்லை**" என்றார் ஸ்ரீ பூண்டி மகான்.

**நேர்காணல்: 51**
**11.11.2007, பூண்டி**

**R. ராஜாராம்**, **வயது: 60, தெனாலிபாக்கம்.**

*நான் சிறுவயதிலிருந்தே இராமலிங்க சுவாமியின் பக்தன். ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் போன்ற மகான்களை தரிசித்துக் கொள்ள வேண்டுமென்று மிகுந்த ஆவல் இருந்தது. 1976-77ல் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்தேன்.*

*மின்வாரியத்தில் திண்டிவனத்தில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு* "**சென்னைக்கு மாற்றல் வேண்டும்**" *என்று வேண்டினேன்.* "I.T."*யா என்று கேட்டார் பூண்டி சுவாமி. ஆமாம் என்றேன். ஸ்ரீ சுவாமிகளிடம் பேச வேண்டுமென்றாலும் அவர் கண்களைப் பார்க்க வேண்டுமென்றாலும் எனக்கு பயம் ஏற்படும். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் சென்னையிலுள்ள பூந்தமல்லி அலுவலகத்திற்கு பணி மாற்றம் பெற்றேன். அங்கு சென்ற பிறகு அடிக்கடி வந்து தரிசனம் செய்து கொள்ள முடியவில்லை. ஒரு சமயம் என் குடும்பத்தோடு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பாதபூஜை செய்யும் பாக்கியம் கிடைத்தது. முழு மனதுடன் சுவாமியை வேண்டினால் தவறாமல் காரியம் நடக்கும்.*

*என் அலுவலகத்தில் ஒருவர்* (J.E.) *இளநிலை பொறியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் பூண்டி சுவாமி பக்தன் என்று அவருக்குத் தெரியாது. ஒரு நாள் அவர் எனக்கு போன் செய்து ஸ்ரீ பூண்டி சுவாமி சமாதியடைந்தார் என்று கூறினார். நான் பூண்டிக்கு வந்து ஸ்ரீசுவாமிகளை வணங்கும் பாக்கியத்தை அளித்தார். ஒவ்வொரு முறை எனக்கு திருநீற்றின் வாசனை வரும். அப்படிப்பட்ட சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி வந்துள்ளார் என்று எண்ணுவேன். வேறு சிலரும் அப்படியே கூறினார்கள்.*

*ஒரு சமயம் என் மீது* (Vigilance) *ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் வந்து தணிக்கை செய்தார்கள். சொத்து விவரங்களைக் கேட்டார்கள்.*

விவசாயத்தில் வந்த வருமானத்தை காண்பித்தேன். சில முக்கியமான ரசீதுகளை பையில் வைத்துக் கொண்டு வெளியே சென்று வரும் வழியில் தொலைத்துவிட்டேன். மீண்டும் சுவாமியை வேண்டிய போது அந்த பை கிடைத்தது. ஊழல் ஒழிப்பு அதிகாரிகளின் பிரச்சினையில் இருந்து வெளி வரமுடிந்தது.

**நேர்காணல்: 52**
**31.10.2008, பூண்டி**

**பெருமாள்**, வயது: 63, பழங்கோவில்.

*1959ல் பழங்கோவிலில் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஆற்றில் அமர்ந்திருந்தபோது சூறாவளி காற்றைக்கூட பொருட்படுத்தாமல் அப்படியே அமர்ந்து இருந்தார். அன்று இரவு பெய்த மழைக்கு ஆற்றில் தண்ணீர் வந்தது. மறுநாள் காலை ஒரு அன்பர் சென்று பார்த்தபோது ஸ்ரீ சுவாமி தண்ணீரில் சலனமற்று அமர்ந்திருந்தார்.* "**சுவாமி நன்றாக வெள்ளம் வருகிறது. இங்கேயே அமர்ந்து இருக்கிறீர்களே. வாங்க போகலாம்**" *என்று அவரை அழைத்துச் சென்று அந்த அன்பரின் வீட்டில் அமர வைத்து உணவு ஊட்டினார். ஸ்ரீ சுவாமிகள் சாப்பிட்ட மிச்சத்தை அந்த சமயத்தில் அங்கிருந்த அனைவரும் பிரசாதமாகச் சாப்பிட்டோம்.*

*வில்வாரணி நட்சத்திரக்கோயில் அருகில் ஸ்ரீ சுவாமிகள் நடந்து வரும்போது அந்த வழியில் வந்த பேருந்து சுவாமிகளை கடந்து சென்று நின்றுவிட்டது. அப்பேருந்து டிரைவர் சுவாமியை அடையாளம் அறிந்து பேருந்தில் ஏற்றிக் கொண்டபிறகு பேருந்து கிளம்பி சென்றது. பிறகு சுவாமி வழியில் எங்கு தென்பட்டாலும் பேருந்தை நிறுத்தி சுவாமியை ஏற்றிச் செல்வார்கள்.*

*தினந்தோறும் காலையில் பூண்டிக்கு வந்து அனைவரோடு சேர்ந்து பூ கட்டுவேன். ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்த போது பழங்கோவிலில் சிலர் பெயரை குறிப்பிட்டு* "**அவங்க எல்லாம் எப்படி வாழறாங்களோ அவங்களை பார்த்து நீயும் வாழ வேண்டும்**" *என்றார்.*

*ஒரு முறை என் தாயாருக்கு உடல் நலம் சரியில்லாத போது சுவாமியிடம் சென்று சுவாமி,* "**அம்மாவுக்கு ஆரோக்கியம் நன்றாக இருக்கணும்**" *என்று வேண்டினேன்.* "**அப்படியே**" *என்றார் பூண்டி*

*சுவாமி. என் தாயாருக்கு உடல்நிலை சரியானது. சில சமயங்களில்* **"நல்ல வழியில் நடக்கணும். நல்ல புத்தி இருக்கணும்"** *என்று எனக்கு உபதேசம் செய்வார். ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் சன்னதியில் எல்லாருக்கும் மன அமைதி கிடைத்தது.*

**நேர்காணல்: 53**
**31.10.2008, பூண்டி**

**சுந்தரேசப்பிள்ளை**, வயது: 81, பூண்டி.

*ஸ்ரீ பூண்டி சுவாமி நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் இருந்து நான் அறிவேன். பூண்டிக்கு பக்கத்திலுள்ள வன்னியனூர் கிராமத்தில் குடித்தனம் இருந்தோம். சிறிது காலம் கழித்து பூண்டி வந்து சேர்ந்தோம். ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமி வன்னியனூரில் எங்கள் வீட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தார். அன்று ஸ்ரீ சுவாமி உணவு உண்ட பிறகு திருநீறு வைத்து கிளம்பிச் சென்றார். ஒவ்வொரு முறை செங்கம் செல்லும் பேருந்து ஏறிச் செல்வார். வேறு ஒரு பேருந்தில் திரும்பி வருவார். ஸ்ரீ சுவாமிகள் எப்போது எங்கு இருப்பார் என்று ஊகிக்க முடியாது. எங்கள் வீட்டுப் பெரியவர்களோடு நன்றாகப் பேசுவார். என் தந்தையை நன்றாகத் தெரியும். ஸ்ரீ சுவாமி என்ன சொன்னாலும் நடக்கும்.*

*நான் ஆசிரியராக பழங்கோவிலில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது பழங்கோவில் ஊர் தலைவர் எனக்கு கடிதம் எழுதி அனுப்பினார். "***ஸ்ரீ பூண்டி சுவாமிஅமர்ந்த வீட்டிற்கு மேற்கு திசையில் உள்ள என் பெரியவர்களின் இடத்தில் என் பங்கு சுவாமிகளுக்கு வேண்டும்***" என்பது அக்கடிதத்தின் சாராம்சம். நானும், என் மனைவி இருவரும் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி, "***சுவாமி பக்கத்திலுள்ள இடம் உங்களுக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்***" என்று கேட்டேன். சிறிது நேரம் என் பக்கம் பார்த்து ''***சரி பண்ணுங்க***'' என்று கூறி திருநீறு வைத்தார். நானும், என் மனைவியும் பதிவு அலுவலகத்திற்குச் சென்று பத்திரங்களில் கையெழுத்து இட்டு மீண்டும் பூண்டி சுவாமியிடம் வந்து நின்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமி என் நெற்றியில் திருநீறு வைத்து "***நல்லது சென்று வா***" என்று ஆசிர்வதித்தார். அதன் பிறகு நான் எதுவும் கேட்கவில்லை. நான் இரண்டு தூலம் பூரி வீட்டில் குடியிருந்தேன். அந்த வீட்டின்*

மேல் கூரை போட வைக்கோல் வாங்குவதற்குக் கூட என்னிடம் பணமில்லை. ஏழ்மையில் இருந்தேன். நான் அந்த இடத்தை அளித்ததற்கு 1000 ரூபாய் பணம் தந்தார்கள். அச்சமயத்தில் குடும்பப் பிரச்சினையில் இருந்ததால் வாங்கிக் கொண்டேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகள் என் நெற்றியில் திருநீறு வைத்ததிலிருந்து என் குடும்ப நிலைமை வளர்ச்சியடைந்தது. சிறிது நாட்கள் கழித்து நான் இருந்த வீட்டை என் அண்ணனுக்கு அளித்துவிட்டு பூண்டிக்கு வந்து வசித்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி ஆலயத்தின் வடக்கு திசையில் எங்கள் பெரியவர்களின் சொத்து இருந்தது. என் பங்காளிகளின் பங்கை வாங்கி ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் அருளால் அங்கேயே வீடு கட்டி நிரந்தரமாக வசிக்க ஆரம்பித்தேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமி கோவிலுக்குப் பக்கத்தில் என் பெரியவர்களின் சொத்தில் என் பங்கில் வந்த நிலத்தோடு, வாங்கிய நிலத்தையும் சேர்த்து இரண்டு ஏக்கர் நிலம் உள்ளது. அந்த வீடும், நிலமும், ஸ்ரீ பூண்டி சுவாமிஅளித்த பிச்சையாக எண்ணுகிறேன்.





**நேர்காணல்: 54**
**31.10.2008, பூண்டி**

**இராதாகிருஷ்ணன்**, வயது: 60, புதுநெல்லிமேடு.

*என்னுடைய சிறுவயதில் என் தாத்தாவோடு சேர்ந்து செல்லும்போது கலசப்பாக்கம் ஆற்றில் ஒரு பாறையின் அருகில் உட்கார்ந்திருந்த ஸ்ரீ சுவாமியைக் காட்டி வணங்குமாறு கூறினார். நான் சுவாமிகளின் உருவத்தைப் பார்த்து நினைத்துக் கொண்டே கையெடுத்து வணங்கினேன். ஸ்ரீ சுவாமிகளின் இதயத்தில் என் உருவம் தெளிவாகப் பிரதிபலித்தது. மீண்டும் சுவாமிகள் எங்கு தென்பட்டாலும் வணங்கினேன்.*

*ஸ்ரீ சுவாமி திண்ணைமேல் அமர்ந்தபிறகு* **"சுவாமி கவலை ஒட்ட முடியவில்லை''** *என்று வேண்டினேன்.* **''ஆகட்டும்பா நடக்கும்''** *என்றார்.ஒருநாள் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று* **"ஆட்டுக்கடா காணவில்லை"** *என்று கூறினேன்.* **"சாவடிப் பக்கம் போயிப்பாரு"** *என்று சுவாமி கூறினார். என் தந்தை அந்த ஆட்டுக்கடாவை காளிதேவிக்கு பலியிடுவதாக வேண்டியிருந்தார். அந்த ஆட்டுக்கடா காளிகாதேவி ஆலயத்திற்கு எதிரில் உள்ள கால்வாய் பக்கத்திலுள்ள கரும்புத் தோட்டத்தில் இறந்து விழுந்து இருந்தது. மறுநாள் ஸ்ரீ சுவாமியிடம் விஷயத்தைக் கூறினேன்.* **"இருக்கிறது ஒன்பதாகும் போ. நல்லாயிருப்பாய்!"** *என்று ஆசிர்வதித்தார். அந்த வருடம் எங்கள் ஆடுகள் ஒன்பது குட்டி போட்டது. இதை முன்பே ஸ்ரீ சுவாமிகள் கூறினார் என்று புரிந்து கொண்டோம்.*

*என் தாயார் எனக்குத் திருமணம் செய்ய ஸ்ரீ பூண்டி சுவாமியை கேட்க வந்தார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திண்ணைக்கு எதிரிலுள்ள கம்பை பிடித்துக் கொண்டு நின்றிருந்தேன்.* **"108 பேர் போட்டி போடறாங்க. 108 உடையாருங்ககிட்ட போயி சொல்லிட்டு வந்தேன். நீங்க போயி பாத்துட்டு வாங்க எந்தத் தடையும் இல்லை. சோழவரம் வழியா காலையில போயி பாத்துட்டு வாங்க, தை மாதம் 29ந் தேதி கல்யாணம்**

**நடக்கும்**" என்று கூறி திருநீறு வைத்தார் பூண்டி மகான். மறுநாள் காலை பெண் பார்த்து வந்தோம். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் எல்லாம் நன்றாக அமைந்து எங்கள் திருமணம் நடந்தது.

ஒரு முறை மழை இல்லாமல் நெற்பயிர் பயிரிட பக்கத்தில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை பாய்ச்சி நிலத்தை உழுது தயார் செய்தோம். நிலத்தில் நிறைய தண்ணீர் இருந்ததால் மீதி வேலையை அடுத்த நாள் பார்க்கலாம் என்று நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்துவிட்டேன். "**வந்தான் பாருப்பா. வந்த வேலையை விட்டுட்டு பந்தக்கால் புடிச்சிட்டு உட்கார்ந்தான். என்னை பாத்துக்கிட்டு உட்கார்ந்துக்கிட்டு இருக்கிறான். கழனியில மடை வரப்பு உடைந்து தண்ணீர் எல்லாம் பில்லூர் ஏரிக்கு போகுது. இவன் எல்லாம் எப்படி பிழைப்பான்**" என்று கூறினார் சுவாமி. நான் உடனே நிலத்தை நோக்கி ஓடினேன். மடை உடைந்து தண்ணீர் எல்லாம் பில்லூர் ஏரிக்குச் சென்று விட்டது. மறுநாள் தண்ணீர் பாய்ச்ச கிணற்றில வேறு ஒருவரது பாகம். நான் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் திருவடிகளை வணங்கி, "**ஐயா மன்னிச்சிடுங்க**" என்று மனதில் வேண்டினேன். "**இன்னும் ஐந்தாறு நாள்ல நல்ல மழை இருக்கு. அப்புறமா நாத்து நட்டுக்கலாம். வீட்டுக்கு போய்ட்டு வா**" என்று கூறினார் பூண்டி மகான். சுவாமி கூறியபடியே மழை பெய்தது. எல்லாவற்றையும் தயார் செய்து நாற்றை கழனியில் போட்டு நடுவதற்கு கூலிஆட்களை வைத்து, வீட்டிற்குச் சென்று கூலி ஆட்களுக்கு மதிய உணவிற்கு களி செய்து எடுத்துச் சென்று மாமரத்தின் கீழே வைத்து உடனே நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்தேன். "**சாப்பாடு முக்கியமா. என்கிட்ட வர்றது முக்கியமா. பதினைஞ்சு, இருபது பேர் நாத்து நடறாங்க. களி அவங்களுக்கு வச்சிட்டு வராம அங்க வச்சிட்டு வந்திட்டான் பாரய்யா**" என்றார் சுவாமி. நான் எங்கு எந்த வேலை செய்து கொண்டு இருந்தாலும் என் நினைவு எல்லாம் இங்கேயே இருக்கும். எங்கள் கிராமம் பக்கத்திலேயே இருந்ததால் நான் அதிகமாக இங்கு ஓடி வந்து விடுவேன். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் தேவையான வேலைகளை செய்து கொண்டு பூக்கட்டிக் கொண்டு இருப்பேன்.

வேறு ஒரு வருடமும் மழை இல்லாமல் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிஅமர்ந்த

திண்ணைக்கு முன்பு தெருவில் பக்தர்கள் நின்று கொள்ள நிழல் வேண்டும் என்று பந்தல் போடச் சொன்னார்கள். "**மனிதர்கள், மிருகங்கள் குடிக்க தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால் பந்தல் போடணுமா?**" என்று மனதில் வேதனையோடு வீட்டிற்குச் சென்று விட்டேன். நான் அன்று எந்த வேலையும் செய்யவில்லை. அன்று இரவு, மின்னலுடன் நிற்காமல் தொடர்ந்து அடைமழை பெய்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி கருணை கொண்டு மழையை அளித்தார்.

எனக்கு மகன் பிறந்தவுடன் குழந்தையை எடுத்துச்சென்று "**சுவாமி! மகனுக்கு நீங்கள் பெயர் வையுங்கள்**" என்று வேண்டினேன். "**சரவணன் என்று பெயர் வைங்கப்பா**" என்றார் சுவாமி. எனக்கு இருமகன், இரு மகள்கள் பிறந்தார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிஅருளால் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர்.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து "**சுவாமி! நான் மாடு வாங்கப் போகிறேன். உங்கள் ஆசிகள் வேண்டும்**" என்றேன். "**போயி இன்னைக்கே பிடிச்சிக்கிட்டு வந்துடுங்க. நாளைக்கு மழை பெய்யும்**" என்றார் சுவாமி.சுவாமி சொன்னபடியே அன்றே மாடுகளை பிடித்து வந்தேன். மறுநாள் மழையும் பெய்தது.

1963ல் என் நிலத்தில் தர்ப்பூசணி பழம் காய்த்தது. என் தாயார் ஒரு பழத்தில் பாதியை அறுத்து பூண்டிக்கு எடுத்துச் சென்றார். "**என்னம்மா நீங்கள் செய்த வேலை. சுவாமிக்கு தர பாதி அறுத்து எடுத்து வந்தீர்களே. ஒரு பழம் தரலாம் அல்லவா**" என்று வழியில் என் தாயாரை திட்டிக் கொண்டே வந்தேன். சுவாமியின் முன் வந்து நின்றவுடனே "**போதும்பா. உடம்புக்கு நல்லது. இவ்வளவு பழம் இருக்கு இல்லையா. எல்லாருக்கும் கொஞ்ச கொஞ்சமா கொடு**" என்று கூறினார். முதலில் சுவாமிக்குச் சிறிது ஊட்டி மீதியை அனைவருக்கும் அளித்தேன். எங்கள் நிலத்தில் எந்தப் பயிர் விளைந்தாலும் முதலில் சுவாமிக்கு எடுத்து வந்து தருவோம்.

நான் வீட்டிற்கு கிளம்புவதற்கு முன்பு "**சுவாமி! நான் போயிட்டு வரேன்**" என்று கூறுவேன். "**ஆம். போயிட்டு வா**" என்பார் ஸ்ரீ பூண்டி சுவாமி. ஏதாவது வேலை செய்வதற்கு முன்பு மனதில் அதை

*நினைத்து பூண்டி சுவாமி முன் வந்து நின்ற உடனே* “**ஆம். நாளைக்குப் போகலாம்**” *என்று ஆசியளிப்பார். நான் வாய் திறந்து பேசமாட்டேன். எல்லாற்றையும் ஸ்ரீ பூண்டி சுவாமியே கூறுவார். எனக்கு எத்தனையோ அவகாசம் அளித்தார். எத்தனையோ கூறினார். எல்லாம் சுவாமிகளின் அனுக்கிரகம்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமியிடம்* “**கிணறு தோண்டனும். பயிர் வைக்க தண்ணீர் இல்லை சுவாமி!**” *என்று கேட்டேன்.* “**என்னாப்பா! உலக்கடம் வைக்கணும், உமி, கரி வேணும், கடப்பாரை வேணும், சம்மட்டி வேணும், சுத்தறத்துக்கு ஆள் வேணும், அடிக்கறத்துக்கு பலம் வேணும், மாடு வேணும் கிணறு வெட்டணும்னா சும்மா ஆயிடுமா! ஆம் போ! மடையை கால்ல தள்ளூற நாள் வரும் போ**” *என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் சிறிது நாட்கள் கழித்து கிணறு தோண்டினேன். நன்றாக தண்ணீர் வந்தது.*

*ஒரு சமயம் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி,* ‘‘**சுவாமி! வீடு கட்டவில்லை!**” *என்று நினைத்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி* “**என்னாப்பா! நீ ஆத்துல கோடு கிழிச்சியே. அதே போல் கட்டு. நாலு பக்கமும் வாசற்படி வைத்து நல்லா கட்டு. எல்லாம் முடிஞ்சிடும். கொஞ்சம் அவசரப்படாமக்கட்டு**” *என்று கூறினார். நான் சிறுவயதில் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு வீடு கட்டினால் எப்படி இருக்கணும் என்று யோசனை செய்து இப்படி கடகால் போடணும், இப்படி வீடு கட்டணும் என்று மணல் மீது கோடு கிழித்து பார்த்துக் கொண்டேன். அந்த விஷயத்தை ஸ்ரீ பூண்டி சுவாமி இப்போது கூறினார் என்று அறிந்து அப்படியே வீடு கட்டி முடித்தேன்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமிகள் என் வாழ்க்கையில் எத்தனையோ செய்தார். நான் அனைத்தையும் ஸ்ரீ சுவாமிகளே செய்விக்கிறார் என்று நம்பினேன்.* ‘‘**சுவாமி! நான் இப்படி இருக்கிறேனே!**’’ *என்று கேட்டேன்.* “**இருக்கட்டும். நல்லது**” *என்றார். தினந்தோறும் பூண்டி மகானை தரிசனம் செய்து கொள்வேன். பூண்டி சுவாமியை முழு மனத்துடன் நம்பி வேண்டினால் தவறாமல் துணையாக இருந்து வழி நடத்துவார். ஸ்ரீ சுவாமிகளின் சன்னதியில் எனக்கு ஒவ்வொரு நொடியும் அனுபவங்களே.*

நான் சுவாமியின் சன்னதியில் நின்று கொண்டு "என்ன சுவாமி. பக்தர்கள் கேட்பதை அளித்தால் சரியா இருக்கும் அல்லவா. உங்க வேலையை காட்றீங்களே. கேட்டாலும் தர மாட்டேன் என்கிறீர்கள். நீங்களாகவும் தரமாட்டேன் என்கிறீர்கள்" என்று மனதில் நினைத்தேன். "ஒரு பீடி வாங்கிட்டு வந்து கொளுத்தி வச்சிட்டு எல்லாம் கேக்கறாங்கய்யா. நானே இந்தக் கணவாயை தாண்டுவேனா இல்லையா என்று உட்கார்ந்துகிட்டு இருக்கிறனே. நான் என்னா பண்றது. நான் எங்கயோ போயி கஷ்டப்பட்டு பாடுபட்டுக்கிட்டு இருக்கிறேன். உட்கார்ந்த இடத்திலேயே இருக்கிறேனே. என்கிட்ட மட்டும் எங்க இருக்கு வாரி வாரி கொடுக்கறத்துக்கு" என்றார் ஸ்ரீ பூண்டி சுவாமி.

கோவாவிலிருந்து ஒரு துறவி வந்தார். நான் வெல்லம் வாங்கி வந்து புதுப்பானையில் போட்டு தண்ணீர் நிரப்பி வைப்பேன். அதில் துளசி இலைகளைப் போடுவேன். இருவரும் தண்ணீர் குடித்துக் கொண்டு, சுவாமியை பார்த்துக் கொண்டே அமர்ந்து இருப்போம். அத்துறவி, ''என்னாப்பா. அந்த பெரியவரையே பார்த்துக்கிட்டு அமர்ந்திருந்தால் எப்படி. சென்று இரண்டு இட்லி, வடை சாப்பிட்டு எனக்கும் வாங்கி வா'' என்று கூறினார். ஒரு நாள் அத்துறவி திருவண்ணாமலைக்குச் சென்று வருவதாகக் கூறினார். "எனக்கு பணம் தரலாம் இல்லையா" என்று கேட்டேன். "நீ ஸ்ரீ பூண்டி சுவாமியை கேட்டு வாங்கிக்கோ. எனக்கும் அவர் தான் தந்தார்" என்றார் அத்துறவி. ஸ்ரீ பூண்டி சுவாமி சன்னதிக்கு எத்தனையோ துறவிகள் வந்து செல்வார்கள்.

எனக்கு உடல்நலம் சரியில்லாமல் வேலூரில் மருத்துவமனையில் சேர்ந்தேன். நான் துன்பத்தை தாங்கமுடியாமல் கண்ணீரோடு ஸ்ரீ பூண்டி சுவாமியை வேண்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி மருத்துவமனைக்கு வந்து தரிசனம் அளித்துச் சென்றார். அதன் பிறகு எனக்கு உடல்நிலை சரியாகி வீட்டிற்கு வந்தேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்த பிறகு கூட தன்னுடைய பக்தர்களுக்கு அடிக்கடி தரிசனம் அளிக்கிறார். ஒரு நாள் என் பேரனை சமாதிக் கோவிலுக்கு அழைத்து வந்து கோயில் உள்ளே சென்று வணங்கிவரச் சொன்னேன். என் பேரன் சென்று சுவாமியை வணங்கி வந்து "தாத்தா! தாத்தா என்னை உற்று உற்று பார்க்கிறார். தாடியை

**தடவிக்கொண்டு இருந்தார் தாத்தா".** ஒரு வருடம் முன்பு நடந்த நிகழ்ச்சி இது. நம்பிக்கை இல்லாதவர்களுக்கு எதுவும் தெரியாது. ஆனால் சுவாமிகளை முழுமனதோடு நம்பி வணங்கினால் இப்போதும் சுவாமி பதில் அளிக்கிறார்.

ஒரு நாள் நான் சுவாமி சமாதிக் கோவிலில் பூஜைகள் முடிந்த பிறகு வழியில் நடந்து செல்கிறேன். வழியில் ஏதோ சப்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தேன். அங்கு பூண்டி சுவாமி அமர்ந்த நிலையில் தரிசனம் அளித்தார். பதினைந்து நாட்களுக்கு முன்பு நேர்ந்த அனுபவம் இது. ஸ்ரீ பூண்டி சுவாமி இங்கேயே இருக்கிறார். நம்பியவர்களுக்கு அனுபவத்தை அளித்துக் கொண்டே இருக்கிறார்.

நான் வீட்டில் இருக்கும் சமயத்தில் ஒரு பெரியவர் வெள்ளை வேட்டி அணிந்து கப்னி போட்டுக் கொண்டு தலையில் துணியை கட்டிக் கொண்டு பார்ப்பதற்கு சீரடி (ஷிர்டி) சாயிபாபா போல அவரது ஆடை அலங்காரம் இருந்தது. தினந்தோறும் காலையில் **"திருவண்ணாமலைக்குச் சென்று வருகிறேன்"** என்று கூறி அந்தப் பக்கம் செல்வார். **"எங்கே பெரியவரே திருவண்ணாமலை? எனக்கு என்ன தெரியும். விவரமாகச் சொன்னால்தானே தெரியும்"** என்று கேட்டேன். **"பூண்டிக்குச் சென்று பார்த்து திருவண்ணாமலை சென்று வருகிறேன்"** என்று கூறினார். அப்பெரியவர் செல்லூர்மலைமேல் கோயிலில் இருப்பார். நான் அவரைப் பார்த்த போது **"ஏதாவது சாப்பிடுங்க. சிறிது நேரம் நிழலில் அமருங்கள்"** என்று கூறி இளநீர் வெட்டித் தருவேன். குடித்த பிறகு கிளம்பிச் செல்வார். ஆனால் எப்படிச் சென்று வருவார் என்று யாருக்கும் தெரியாது. காலையில் சென்றால் மாலை நான்கு மணிக்கெல்லாம் திரும்பி வந்து விடுவார். பார்ப்பதற்கு சீரடி சாயிபாபா போன்ற தோற்றம் கொண்டவர்.

**நேர்காணல்: 55**
**31.10.2008, பூண்டி**

**N. எத்திராஜன்**, வயது: 68, போளூர்.

*1965ல் எனக்கு ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. என் தாயார் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்வார். என் தாய், தந்தையின் சஷ்டியப்த பூர்த்திக்கு (60ம் கல்யாணம்) ஸ்ரீ பூண்டி சுவாமி சன்னதியில் மாலை மாற்றிக் கொண்டார்கள். அது எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம்.*

*நான் நான்காம் வகுப்பு வரை படித்தேன். ஆரம்பத்தில் நாங்கள் வெற்றிலைப்பாக்குக் கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டு இருந்தோம். அதன் பிறகு ஓரிடம் வாங்கி ஹோட்டல் வைத்தோம். அந்த ஹோட்டலுக்கு முருகபவன் என்று பெயர் வைத்தோம். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் "**சண்முகானந்த பவன்**" என்று பெயர் மாற்றி வைத்தார்.*

*நாங்கள் பத்து பேர் சேர்ந்து ஐயப்பசுவாமி மலைக்குச் செல்வதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்வோம். ஒரு முறை எங்களோடு வந்த ஒருவர் "***நாங்கள் ஐயப்பசுவாமி ஆலயத்திற்குச் சென்று வருகிறோம். ஆசிர்வதியுங்கள் சுவாமி***" என்று கேட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமி "***ஆம். போய்ட்டு வாங்க நல்லது. நாலு இடத்துக்குப் போனா தானே நல்லது கெட்டது தெரியும். வியாபாரம், வியாபாரம்னு ஒரே இடத்திலே உட்கார்ந்து இருந்தா எப்படி?***" என்றார். கேட்டது மற்றொருவர் என்றாலும் எனக்கும் பதில் கிடைத்தது. அது என் வாழ்க்கையில் மறக்கமுடியாதது. என் நண்பர் ஜெயராமனும், அவர் நண்பர் மந்திரி செட்டியும் சேர்ந்து ஸ்ரீ பூண்டி சுவாமி தரிசனத்திற்கு செல்வார்கள். ஜெயராமனுக்கு பூண்டி சுவாமியிடம் அபார நம்பிக்கை இருந்தது. அவர் அமில ஆலையில் மேனேஜராக பணியாற்றிக் கொண்டிருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி சொன்ன பிறகு தான்*

திருமணமும் செய்து கொண்டார். சுவாமிகளை கேட்காமல் எந்த வேலையும் செய்ய மாட்டார். ஒரு நாள் ஜெயராமன், கிருஷ்ணமூர்த்தி செட்டியோடு சேர்ந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு **''சனிக்கிழமை திருப்பதிக்குச் சென்று வருகிறோம்''** என்றனர். **"ஆம். சென்று வாருங்கள்"** என்று ஆசிகள் அளித்து திருப்பதிக்கு பாரதிவேலு சர்வீஸ் பேருந்தில் செல்லுமாறு கூறினார். இருவரும் போளூர் பஸ் நிலையத்திற்கு வந்தவுடன் அன்று அந்தப் பேருந்து, பேருந்து நிலையத்தில் நிற்காமல் சென்றுவிட்டது. ஜெயராமன் நம்பிக்கையை விடவில்லை. கிருஷ்ணமூர்த்தி செட்டி **"என்னய்யா சுவாமி சொன்னாரு. தினம் நிற்கிற பஸ் இன்று சீட் காலி இல்லாமல் நிற்காமல் சென்று விட்டது"** என்றார். ஜெயராமன் பதில் பேசவில்லை. பின்னால் வந்த பேருந்தில் வேலூருக்குச் சென்றோம். வேலூரில் இறங்கிய பிறகு பாரதி பேருந்து கண்டக்டர் இரண்டு சீட் மட்டும் காலி உள்ளது என்று கையில் இரண்டு விரல்களை காண்பித்து ஜெயராமன் பக்கம் கை காட்டினார். அங்கே பலர் பேருந்துக்காக காத்திருந்தாலும் அவர்கள் இருவரை மட்டும் பேருந்தில் ஏற்றினார். அச்சமயத்தில் கிருஷ்ணமூர்த்தி **"அவசரப்பட்டு சுவாமியை குறை சொன்னேன்"** என்று வருத்தப்பட்டார். திருப்பதிக்கு சென்று வந்த பிறகு எனக்கு இந்த விஷயத்தைக் கூறினார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் ஏதாவது கூறினால் ஒரு காரியத்திற்கு காரணம் இருக்கும் என்று அறிந்தார்கள்.

என் நண்பர் ஜெயராமன், பசுபதி, மகாதேவன் மூவரும் ஸ்ரீ பூண்டி சுவாமியை பார்த்துக் கொண்டு நின்றிருப்பார்கள். சுவாமி **"போங்கள்"** என்று கூறிய பிறகுதான் தேநீர் அருந்தச் செல்வார்கள். பசுபதி மருந்துகடையைத் திறந்தபிறகு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வருவார். ஜெயராமனும் வருவார். ஆனால் கம்பெனியிலும் ஜெயராமன் இருப்பார். அவர் பணிகள் அங்கே நிற்காமல் நடந்து விடும். இதை நான் அனுபவத்தில் பார்த்த உண்மை. அது எப்படி சாத்தியமோ ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்குத் தான் தெரியும்.

ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வரும் பக்தர்கள் விதவிதமாக காணிக்கைகள் எடுத்து வருவார்கள். ஒரு அன்பர் பலவிதமான

*இனிப்புப் பண்டங்களை வைத்துக்கொண்டு சுவாமி முன் நின்று சாப்பிடுமாறு வேண்டினாலும் தொடவில்லை. அவர் பின் ஒரு பக்தை பயந்துகொண்டே சந்தேகத்துடன் பின்னால் நின்று ஸ்ரீ பூண்டி சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தார்.* "**எதுக்கம்மா பயந்துகொண்டு அப்படி நின்னுக்கிட்டு இருக்கிற. எனக்குன்னு சுட்டுக்கிட்டு வந்த வடையை கொடுக்கலாம் இல்லையா**" *என்று அந்த பக்தையிடம் கேட்டு வாங்கி சாப்பிட்டார் ஸ்ரீ பூண்டி மகான்.*

*பூண்டியில் கண்ணம்மநாயுடு என்று ஒருவர் இருந்தார். அவருக்கு இரு மகள்கள். ஒரு பெண்ணுக்கு மாமியார் ஊர் போளூர் மற்றொருவருக்கு சென்னை. சென்னையிலுள்ள மகள் பூண்டிக்கு வந்து மீண்டும் சென்னை செல்லும் சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து வணங்கி* "**எங்கள் ஊருக்கு எல்லாம் நீங்கள் வரமாட்டீர்களா?**" *என்று கேட்டார்.* "**அதுக்கென்ன இருக்கும்மா வரேன்**" *என்றார் சுவாமி. சென்னையில் திருவொற்றியூர் வடிவுடையம்மன் திருக்கோயிலில் திருவிழா நடந்து கொண்டிருந்த சமயத்தில் எல்லா பக்தர்களோடு சேர்ந்து ஸ்ரீ பூண்டி சுவாமியும் கோவிலை வலம் வந்தவாறு அப்பெண்மணிக்கு தரிசனம் அளித்து விருப்பத்தை நிறைவேற்றினார்.*

*நான் எப்போது வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டாலும்* "**அம்மாவை பார்த்திட்டு அப்புறமா என்னை வந்து பார்**" *என்று ஆணையிடுவார். பூண்டிக்கு அரை கிலோமீட்டர் தொலைவிலுள்ள* '**எட்டுக்கியம்மன்**' *ஆலயத்திற்குச் சென்று தரிசித்த பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொள்வேன். அதற்குக் காரணம் சக்திக்குப் பிறகு சிவன் என்று கூறுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.*

*எனக்கு ஆறு மகள்கள். ஒரு பெண்ணை என் தாயார் சிறு வயதிலேயே எடுத்துச் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமி மடியில் வைத்த போது* '**மீனாட்சி**' *என்று பெயரிட்டார். மீனாட்சிக்குத் திருமண வயது வந்தவுடன் எத்தனை வரன் வந்து பார்த்தாலும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. 28 வயதானாலும் திருமணம் நடக்கவில்லை. தாமதத்திற்கு ஏதோ காரணம் உள்ளதென்று*

*நினைத்தாலும் என் மனம் வருத்தம் அடைந்தது. என் நண்பரான ஆரணி சிவகாந்த முதலியார் அவர் மகளுக்கு 35 வயதானாலும் இன்னும் திருமணம் ஆகவில்லையென்று ஆறுதல் கூறினார். நான் ஸ்ரீ சுவாமியிடம் என் பாரத்தை விட்டுவிட்டேன். 30 வயதில் என் மகளுக்கு திருமணம் நிச்சயமானது. பையனுக்கு தாய் வழி பாட்டி வீடு பூண்டி. கடைசியில் நான் நினைக்காத முறையில் திருமணம் நடத்தி வைத்தார்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமியைப் பற்றி எத்தனையென்று சொல்ல. ஒவ்வொரு இடத்திலும் சுவாமிகளின் லீலைகளே. பிரதி நொடியும் அவர் சன்னதியில் மறக்கமுடியாத அனுபவங்கள் எத்தனையோ நடந்தன. அனைவரின் மீதும் அன்பு மழை பொழிந்த கருணைக் கடல் ஸ்ரீ பூண்டி மகான்.*



ஸ்ரீ பூண்டி மகான்
மடி மேல் தவழும்
பூனை



ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்திருந்த எட்டிக்கியம்மன் கோவில் - பூண்டி

**நேர்காணல்: 56**
**31.10.2008, பூண்டி**

**சத்தியமூர்த்தி**, வயது: 59, போளூர்.

*1961லிருந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை அறிவேன். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து வணங்கினால் திருநீறு வைப்பார். நான் சிறு வயதாக இருந்ததால் எந்தக் கோரிக்கைகளையும் வேண்டியது இல்லை. ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்த பிறகு என் நண்பர்களோடு சேர்ந்து ஒவ்வொரு பௌர்ணமிக்கும் வந்து இரவு உறங்கி மறு நாள் கிளம்பிச் செல்வேன். ஒரு நாள் நான் தனியாகக் கிளம்பி சுமார் பத்தரை மணியளவில் பூண்டிக்கு வரும் வழியில் ஏதோ பலமாக தள்ளுவது போல் தோன்றியது. சந்தேகத்துடன் வந்து விட்டேன். பௌர்ணமி இரவு 12 மணி பூஜை முடிந்த பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமி இருக்கும் வரை பயப்பட தேவையில்லையென்று கிளம்பினேன். கலசப்பாக்கத்தில் தேநீர் அருந்திச் செல்லும்போது ஒரு லாரியில் கட்டப்பட்டக் கயிறு அறுந்து தெருவில் இழுத்துக் கொண்டே சென்றது. யாராவது வேறு வாகனத்தில் செல்பவர்களுக்கு அதனால் ஆபத்து ஏற்படும் என்று டிரைவரிடம் கூற லாரி பின்னால் சென்றேன். என் பைக்கில் லாரியை கடந்து செல்ல முடியவில்லை. முயற்சி செய்து கொண்டே போளூர் வரை சென்றேன். நான் வீட்டிற்குச் சென்று பூண்டி சுவாமியை வணங்கி படுத்துக் கொண்டேன். அப்போதுதான் நினைவிற்கு வந்தது. நான் பூண்டிக்கு செல்லும் வழியில் நான் பயந்ததால் என்னை அந்த எண்ணத்திலிருந்து மறக்க வைத்து லாரி மீது கவனத்துடன் பைக்கை ஓட்டச் செய்து என் பயத்தை மறந்து விடச்செய்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிதான் எனக்குத் துணையாக இருந்து வழி நடத்தினார் என்று அறிந்தவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.*

**நேர்காணல்: 57**
**31.10.2008, பூண்டி**

**மன்னன்**, வயது: 65, வேடந்தவாடி.

*16 வயதில் நான் பூண்டி சுவாமியை தரிசனம் செய்தேன். எங்களுடையது விவசாயக் குடும்பம். நான் கவலை ஓட்டி நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிய பிறகு எங்கள் கிராமத்திலிருந்து நடந்து வந்து சுவாமிகளை தரிசனம் செய்தேன். 16 வருடம் பூண்டி சுவாமியை தரிசனம் செய்தாலும் எந்த நாளும் சுவாமி பேசியதில்லை. அதன் பிறகு சுவாமிகளுக்கு நெருக்கமானேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு குளிப்பாட்ட காலையில் வெந்நீர் தேவைப்படும். வெந்நீரை காய்ச்சுவதற்கு அடுப்புக்கு விறகு கட்டைகளை எடுத்து வந்து தருவேன். பக்கத்து கிராமத்தில் எங்கியாவது கரும்பிலிருந்து வெல்லம் காய்ச்சி கொண்டிருந்தால் அங்கு சென்று கூலி வேலை செய்து வேலை முடிந்த பிறகு கரும்புச் சக்கையை எடுத்து வந்து தருவேன். நான் எத்தனை நாட்கள் இருந்தாலும் கிளம்புவதற்கு முன்பு சென்று வருகிறேன் சுவாமி என்று விடை பெற்றால்* "**காலையில் போகலாம் இல்லையா?**" *என்பார். நான் வீட்டுக்குச் சென்று நிலத்தினருகில் சென்று பார்த்தால் நிலம் காய்ந்து போயிருக்கும். காலையில் கவலை கட்டி தண்ணீர் பாய்ச்சினாலும் பாதி நிலம் நனையும். அதன் பிறகு கிளம்பி பூண்டிக்கு வந்து ஸ்ரீ சுவாமியை வணங்கினேன்.* "**ஆமாம்பா. புருஷன் இருக்கிற பூக்காரிக்கு ஒரு மழை பெய்தால், நீதியா இருக்கிற மன்னனுக்கு ஒரு மழை பெய்தால், அரிசி விக்கிற ஐயருக்கு ஒரு மழை பெய்யும்பா. கழனியில விதை போடு. மழை பெய்தா முளை விடும். காக்கா சாப்பிடும். குருவி சாப்பிடும். பையன் பொறந்தா என் மாதிரி இருப்பான்பா**" *என்று கூறினார். நான் நிலத்தில் பயிர் செய்து இது வரை நஷ்டம் அடைந்தது இல்லை. ஸ்ரீ சுவாமிகளின் அனுக்கிரகத்தால் பக்கத்து கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சியாவது பயிர் செய்வேன்.*

ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் பஞ்சலோக சிலையை செய்ய எண்ணினார்கள். அந்தப் பொறுப்பை பத்மநாபனிடம் ஒப்படைத்தார்கள். நானும் ஆரணி நமச்சிவாயமும் அவருக்கு உதவி செய்தோம். நான் சுற்று வட்டார கிராமங்களைச் சுற்றித் திரிந்து வெண்கலம், செம்பு, பித்தளை, முதலியவற்றை 60 கிலோ சேகரித்துத் தந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருஉருவத்தை அரக்கினால் செய்ய சிற்பி முயற்சி செய்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி தலையை ஆட்டிக் கொண்டே இருந்த காரணத்தினால் அச்சிற்பி இரவும் பகலும் கஷ்டப்பட்டார். நாங்கள் மூவரும் சுவாமியை வணங்கி, **"உங்களுக்காக இல்லையென்றாலும், எங்களுக்காக நீங்கள் சிறிது நேரம் அசையாமல் அமருங்கள்"** என்று வேண்டினோம். ஸ்ரீ சுவாமி அரை மணி நேரம் உற்று நோக்கினார். ஸ்ரீ பூண்டி சுவாமியிடமிருந்து ஒரு ஒளி கிளம்பி அரக்கினால் செய்து கொண்டிருந்த உருவத்தினுள் சென்றது. அதன்பிறகு சிற்பி உருவத்தை தயார் செய்து கொண்டிருந்தபோது கண்ணிடத்தில் விரலால் அழுத்தியபோது திண்ணை மேல் அமர்ந்திருந்த பூண்டி சுவாமி **"அவன் என் கண்ணை குத்தறான்"** என்றார். அரக்கினால் உருவம் செய்து முடித்தவுடனே ஸ்ரீ பூண்டி சுவாமியிடமிருந்து ஒரு தீப ஒளி அந்த உருவத்தினுள் சென்றது. அதன்பிறகு அந்த சிற்பி சுவாமிமலைக்கு எடுத்துச் சென்று பஞ்சலோக விக்கிரகத்தை செய்து எடுத்து வந்தார்.

ஸ்ரீ பூண்டி சுவாமி ஒருமுறை என்னிடம் **"முந்நூறு மைலுக்கு அந்த பக்கமா என்னை வந்துபாரு"** என்று கூறினார். எனக்கு புரியவில்லை. சுவாமிகளை விவரம் கேட்கவில்லை. நான் பூண்டி சுவாமியின் பூஜைக்காக பக்கத்திலுள்ள கிராமத்திற்குச் சென்று பூக்களைப் பறித்து வருவேன். பூண்டியில் ஈஸ்வரன் ஆலயத்திற்குப் பக்கத்தில் ஒரு குளம் இருந்தது. குளத்துக் கரையில் வெள்ளை அலரிச் செடி இருந்தது. அதில் கொத்துக் கொத்தாகப் பூக்கள் இருந்தது. எல்லா பூக்களையும் பறித்துக் கொண்டேன். கடைசியில் ஒரு பெரிய பூங்கொத்து செடியிலேயே இருந்தால் நன்றாக இருக்கும் என்று பறிக்கவில்லை. காரணம் அந்த கிளையில் பறிக்க, குளத்தில் இறங்கி பறிக்க வேண்டும். அந்தப் பூ, **"நான் பூத்துச் செடியிலேயே இருந்தால்**

**என்ன புண்ணியம் வரும். ஸ்ரீ பூண்டி சுவாமி மடியிலிருந்தால் புண்ணியமாவது கிடைக்கும்**" என்று என்பக்கம் ஆவலுடன் பார்த்தது. நான் நீரில் இறங்கி அந்த பூங்கொத்தை அறுத்து வந்து தனியாக வைத்தேன். நான் பூக்களை எடுத்து வரும் சமயத்திற்குள் பூண்டி சுவாமிக்கு பூஜை செய்து ஆரத்தி தந்தார்கள். நான் கடைசியாக பறித்தப் பூக்கொத்தை எடுத்து வந்து பூண்டி சுவாமி தலைமேல் சூட்டினேன். சுவாமி அப்பூக்கொத்தை கையில் எடுத்து அன்புடன் நோக்கி "**ஆ.... ஆங்! ஊம்....ஊம்! ஊம்... உம்... ஆஹாங்...**" என்றவாறு மீண்டும் பூக்கொத்தை தலைமேல் வைத்துக் கொண்டார்.

எனக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. திருமணப்பத்திரிகை அச்சடித்து முதலில் ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு தரவேண்டும் என்று ஒரு திருநீறு பொட்டலம், தக்ஷிணையும் சமர்ப்பித்துக் கொண்டேன். ஸ்ரீ சுவாமிகள் "**என்னாப்பா! ஒண்ணும் ஒண்ணும் பதினாறா? ஒரே வாட்டி பதினாறா? நல்லதுப்பா**'' என்று ஆசிர்வதித்தார். திருமணத்திற்கு தவறாமல் வர வேண்டும் என்று வேண்டி வணங்கி விட்டு கிளம்பிச் சென்றேன்.

திருமண நாளன்று இரண்டு கைகளிலும் இரும்புச் சங்கிலியோடு உடலில் இரும்பு சங்கிலியால் பிணைக்கப்பட்டு வழியில் நடந்து வருகிறார். கல்யாணத்துக்கு வருகின்ற ஐய்யரை "**என்னாப்பா! எங்க போறீங்க?**" என்று கேட்டார். அவர்கள் திருமணத்திற்கு செல்வதாக கூறவே "**நானும் வரேன்**" என்று கூறி அவர்களோடு சேர்ந்து வந்தார் பூண்டி சுவாமி. எனக்கு விஷயம் தெரிந்து யாரென்று வந்து பார்த்தேன். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை அறிந்து உணவளித்து தண்ணீர் அளித்தேன். ஸ்ரீ சுவாமி உண்ட பிறகு அங்கிருந்த ஒரு மனிதர் ''**உங்களுடையது எந்த ஊர் சுவாமி?**'' என்று கேட்டார். "**என்னாப்பா திருநெல்வேலி மாவட்டம், காசி நாயக்கம்பட்டி, மதுரை ஜெயில்ல இருந்து வரேன்பா**'' என்றார் சுவாமி. அதற்குள் யாரோ என்னை கூப்பிடவே சென்றேன். யாரோ போக்கிரி சிறுவர்கள் கட்டையால் அடிக்கச் செல்லவே சுவாமி எழுந்து சென்று விட்டார். நான் வந்து பார்த்த போது சுவாமி தென்படவில்லை. விஷயம் தெரிந்து பின்னாடியே சென்றேன். அன்றிரவு நன்றாக நிலா காய்ந்து

கொண்டிருந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் உருவத்தை நினைவிற்கு கொண்டு வந்து தூரத்தில் செல்பவர் பின்னாடியே செல்ல முயற்சித்தேன். பக்கத்திலிருந்த ஆற்றில் இறங்கினார். பிறகு தென்படவில்லை. திருமணம் முடிந்தவுடன் நான் பூண்டிக்கு வந்தேன். பூண்டி சுவாமியை தரிசனம் செய்து நின்றேன். **"என்னாப்பா! அந்த அத்துவானமான ஊர்ல என்ன இருக்கு. வந்து வரணும்னாலும் எந்த வசதியும் இல்லைப்பா. என்னை வரச் சொன்னியே"** என்றார்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் தோளின் மீது ஒரு கிளி அமர்ந்து இருக்கும். மடியில் பூனை அமர்ந்து இருக்கும். ஒவ்வொரு முறை எலி, பாம்பு ஆகியன வரும். ஆனால் ஒன்றையொன்று விரட்டாது. அவற்றினுள் விரோதம் இருந்தாலும் ஜீவன்களானாலும், ஸ்ரீ சுவாமிகளின் சன்னதிக்கு வந்து சேர்ந்து தோழமையாக இருக்கும்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு பக்தர்கள் மூன்று விரல்களிலும் மோதிரங்கள் போட்டார்கள். விரல் நன்றாக வீங்கி மோதிரத்தை கழட்ட முடியவில்லை. **"சுவாமி! உங்கள் கை விரல்கள் வீங்கியுள்ளது. எனக்கு வருத்தமாக இருக்கிறது"** என்று கூறி மஞ்சள் தடவினேன். மஞ்சள் பூசும் வரை ஸ்ரீ சுவாமி அவர் கைகளை என் தோளின் மீது வைத்துக் கொள்வார். மூன்று நாள் மஞ்சள் பூசவே வீக்கம் குறைந்து மோதிரத்தை கத்தரித்து எடுத்தோம். அப்படியே மூன்று விரல்களிலும் போட்டதை கழட்டினார்கள். மோதிரத்தை கழட்டிய பிறகு கூட மஞ்சள் பூசினேன். சிறிது நாள் கழித்து வீக்கம் குறைந்து விட்டது.

என் கிராமத்திலிருந்து இரவு 11 மணிக்கு கிளம்பி நடந்து வந்தேன். அன்று ஸ்ரீ பூண்டி சுவாமிசன்னதியில் யாருமில்லை. இதை நல்ல சந்தர்ப்பமாக நினைத்து நான் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு கால், கை, உடல் அனைத்தையும் பிடித்து விட்டேன். அந்த சமயத்தில் விஜயரங்கம், கோவிந்தராஜுலு இருவரும் வந்தார்கள். விஜயரங்கம் என் சட்டையை பிடித்துக் கொண்டு **"யாருப்பா அது. திறந்த வீட்டில நாய் நுழைஞ்சா போல"** என்றார்.ஸ்ரீ பூண்டி சுவாமி எழுந்து அமர்ந்து கொண்டு கண்களால் சைகை செய்து சும்மா இருக்குமாறு சொன்னார். நான் அங்கேயே ஒரு மூலையில் நின்று கொண்டேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமி **"என்னாப்பா! அவன் என் பேச்சையே கேட்காமல் போனவன். போன்னு சொல்லி நீ என்ன செய்யப் போற?"** என்று கேட்டார். அவர்கள் இருவரும் தூரமாகச் சென்று விட்டார்கள்.

கொத்தந்தவாடி ரெட்டி, நாட்டார், வேலூரம்மா, நான் அனைவரும் பர்வத மலைக்குச் சென்று இரவு எட்டு மணிக்குத் திரும்பி வந்தோம். வேலூரம்மா ஒரு பாத்திரம் எடுத்துச் சென்று தெரிந்த வீட்டிற்குச் சென்று அங்கு இருந்ததை வாங்கி வந்து கலந்து வைத்தார். நாடார் **"நாம் இப்படி பண்ணணும். சாப்பிடுவது இல்லை"** என்றார்.ஆடிக் கிருத்திகையன்று ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பூஜை முடிந்த பிறகு திண்ணைக்கு எதிரில் ஒரு துணியைப் பரப்பினோம். அந்த வழியில் செல்பவர்கள் காசு போட்டார்கள். சிலர் பணம் தந்தார்கள். அனைத்தையும் சேர்த்து 12 மரக்கால் அரிசி வாங்கி உணவு சமைத்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் முதல் முறையாக அன்னதானம் ஆரம்பித்தோம்.

ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொள்ள மதுரையிலிருந்து இரண்டு வேனில் வந்தார்கள். நடு இரவில் ஒரு வேன் பூண்டியை தாண்டி வில்வாரணி குன்றை நோக்கிச் சென்றது. வழி தெரியாமல் சென்று கொண்டிருந்த அவர்களிடம் ஸ்ரீ பூண்டி சுவாமிசென்று **''என்னாப்பா! பூண்டி சுவாமியை பார்க்கிறத்துக்கு போறீங்களா?"** என்று கேட்டார். அவர்களும் ஆமாம் என்றனர். ஸ்ரீ பூண்டி சுவாமி **"பூண்டி ரோட்ல பந்தல் போட்டு இருக்காங்க. அங்க போங்க"** என்று வழியைக் கூறி வேனைத் திருப்பி அனுப்பினார். முதலில் வழி தெரியாமல் முன் சென்ற வேன் திரும்பி பூண்டிக்கு வந்தது. அதே சமயத்திற்கு இரண்டாவது வேனும் வந்து நின்றது. **"என்னாப்பா வழி தெரியாம போயிகிட்டு இருக்காங்கப்பா. நான் போயி குறுக்கே திருப்பி அனுப்புற நேரத்தில கால்ல முள் குத்திக்கிடுச்சு பாரு"** என்றார் பூண்டி சுவாமி. நான் உடனே எழுந்து சுவாமியின் பாதங்களில் பார்த்தேன். பெரிய முள் காலில் குத்தியிருந்தது. நான் அந்த முள்ளை எடுத்தேன். அதன் பிறகு வந்தவர்கள் சுவாமியை ஏதேதோ கேட்டார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி **''என்னாப்பா. உங்களுக்கு வாத்து கூண்டு இறக்கி வைக்கிறத்துக்கு ஆளுங்க இல்லை. உங்களுக்கு பால் காய்ச்சறத்துக்கு**

**பாத்திரம் இல்லை. நீங்க போயிட்டு வரலாம். போயிட்டு வாங்க**" என்று கூறினார். வந்தவர்கள் தரிசனம் செய்து கொண்டு சென்று விட்டார்கள்.

ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பூஜை முடிந்த பிறகு நான் ஆற்றின் கரையிலுள்ள ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்று அபிஷேகம் செய்து தீர்த்தம், திருநீறு வாங்கி வந்துத் தந்தேன். அந்தத் தீர்த்தத்தை அருந்தி திருநீற்றை வாயில் போட்டுக் கொண்டார். நான் மறுமுறை பர்வதமலைக்குச் சென்று வரும் சமயத்தில் பெரிய பாட்டிலில் தீர்த்தம் எடுத்து வந்து பூண்டி சுவாமிக்கு அளித்து, "**சுவாமி நீங்கள் அருந்தி சிறிது இருந்தால் நான் வாங்கிக் கொள்கிறேன்**" என்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் பாட்டிலில் இருந்த தீர்த்தத்தை ஒரு சொட்டு கூட மீதம் வைக்காமல் குடித்து விட்டார். அந்த சமயத்தில் ஒரு அன்பர் தேநீர் எடுத்து வந்து ஸ்ரீ சுவாமிமுன் நின்றார். "**கொடுப்பா இப்படி**" என்று டம்ளரை சுவாமி கையில் வாங்கிக் கொண்டு "**என்னாப்பா! தானமா, தர்மமா, நல்லதா, மரியாதையா, பாசமா, பந்தமா, உபசாரமா, என்னா இருக்குப்பா இதுல. வெறும் கண்ணாடி டம்ளர். என்னை குடிக்கச் சொல்றீயே**" என்றார். வந்தவர் வணங்கி விட்டு பதில் பேசாமல் சென்று விட்டார்.

சிலசமயம் அன்பர்கள் யாராவது அரிசி, எண்ணெய் தருவதாகக் கூறினால் அங்கிருப்பவர்கள் என்னை அவர்களிடம் சென்று வாங்கி வருமாறு அனுப்புவார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி "**என்னாப்பா! வந்தா சாமியை கும்பிட்டமா, பாத்தமா என்று இல்லாம வந்த வேலையை விட்டுட்டு எதுக்கய்யா பந்தக்கால் புடிச்சிகிறது**'' என்றார். மண்டபம் கட்டும் சமயத்தில் நான் அங்கிருந்த சிறுவர்களை அழைத்துச் சென்று வண்டியில் மணலை நிரப்பி இழுத்து வந்து கொட்டுவேன். அந்த சமயத்தில் ஸ்ரீ சுவாமி "**ஆம். கத்தரிக்காய் அறுக்கறாங்களாம். ஏதோ கட்டறாங்களாம். இவரு போனாராம். மணல் எடுத்துக்கிட்டு வர்றத்துக்கு** " என்றார். சிறுவர்களை அழைத்துச் சென்றதற்கு "**என்னாப்பா நீ வேலை வாங்கிகிட்டு இருக்கிற**'' என்றார் சுவாமி. ஆனாலும் நான் என் வேலையை செய்து கொண்டு இருப்பேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமியை குளிக்கவைத்த பிறகு கழட்டிய துணியை சந்தர்ப்பம் கிடைத்தபோது நான் ஆற்றுக்கு எடுத்துச் சென்று

சுத்தமாக துவைத்து ஆற வைத்து மடித்து எடுத்து வருவேன். ஒவ்வொரு சமயம் சில்லரைக் காசு துணியில் கிடைக்கும். எடுத்து சென்று சுவாமியிடம் தருவேன். ஒரு நாள் மூன்று மோதிரங்கள் கிடைத்தன. நான் என் விரல்களில் மூன்று மோதிரங்களை போட்டுக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி என்ன சொல்வார் என்று பார்க்க ஆறு நாட்கள் இங்கேயே இருந்தேன். ஒரு நாள் "**சுவாமி ஊருக்குச் சென்று வருகிறேன்**" என்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமி முகத்தை திருப்பிக் கொண்டு ''**ஆம். நான் தானேப்பா திண்ணை மேல இருக்கிறேன். கொடுத்தவங்க கேட்டா பதில் சொல்லணும்பா**" என்றார். அப்போதும் நான் ஒன்றும் தெரியாதது போல் சும்மா இருந்தேன். என்ன நடக்கிறது என்று பார்க்க என் கையில் மோதிரங்கள் தெரியுமாறு கையை முன் வைத்து நின்றிருந்தேன். கோவிந்த ராஜுலு நாயுடு, விஜய ரங்கமும் வந்து "**சுவாமி. ஒருவர் மோதிரம் எடுத்து வந்து போட்டாரே. எங்க சுவாமி தென்படவில்லையே**'' என்று கேட்டனர். ''**இங்கேயே எங்கியோ இருக்கணும். பார்க்கலாம்**" என்றார் பூண்டி சுவாமி.சிறிது நேரம் கழித்து நான் மீண்டும் "**சுவாமி! ஊருக்குச் சென்று வருகிறேன்**" என்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமிமுகத்தை கீழே குனிந்து கொண்டார். மேலே பார்க்கவில்லை. அதன்பிறகு என் கையிலிருந்த மோதிரத்தை கழட்டி, "**சுவாமி இதோ**" என்று தருவதற்கு சென்றேன். "**என்கிட்ட எதுக்கு குடுக்கற. அவங்ககிட்ட கொடு**" என்றார் சுவாமி. நான் அந்த மோதிரங்களை எடுத்துச் சென்று "**இங்கேயே இருந்தது நாயுடு, பார்க்கலையா?**" என்று கூறி கையில் மோதிரங்களைத் தந்து விட்டேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக என் கிராமத்தில் இருந்து கிளம்பி முதல் முறை வந்து கொண்டிருந்த சமயத்தில் ஆற்றங்கரையில் செருப்பைக் கழட்டி வைத்தேன். இன்று வரை செருப்பு போடவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமியின் அனுக்கிரகத்தால் எனக்கு எப்போதும் வயிறு நிறைந்தது போல் இருக்கும். சாப்பிட வேண்டும் என்ற எண்ணமும், சாப்பிடவில்லையென்ற சங்கடமும் ஏற்பட்டதில்லை. தினம் ஒருமுறை காலை பதினொரு மணிக்கு ஏதாவது ஒன்றை சாப்பிட்டால் போதும். பிறகு மறுநாள் பதினொரு மணிக்கு சாப்பிடுவேன். என் பசிவேதனையை நீக்கினார் ஸ்ரீ பூண்டி

மகான். அந்த ஒரு வேளையும் சாப்பிடவில்லையென்றாலும் கவலைப்படமாட்டேன். ஆரோக்கியம் கெட்டுவிடும் என்கிறார்கள். ஆனால் நான் இன்று வரை முழு ஆரோக்கியத்துடன் இருக்கிறேன்.

சித்ரா பௌர்ணமியன்று நானும் என் மனைவியும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்கு வந்தபோது ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் ஸ்ரீ பூண்டி மகானின் திருஉருவப்படத்தை எனக்கு அளித்தார். அந்த சமயத்தில் "**சுவாமிகளின் கையில் தாருங்கள்**" என்றார் என் மனைவி. நான் அந்தப் படத்தை ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் கைகளில் தந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஅப்படத்தை என் மனைவியிடம் அளித்தார். அந்தப் படம் எங்கள் பூஜையறையில் உள்ளது. ஸ்ரீ சுவாமிகளின் படுக்கையில் வைத்த சூலம் ஒன்று எங்கள் வீட்டில் உள்ளது. தினந்தோறும் பூஜை செய்கிறோம்.


நான் சில நண்பர்களோடு சேர்ந்து பர்வத மலையில் நடக்கவுள்ள அன்ன அபிஷேகத்திற்கு கிளம்பி ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்து ஆசிகள் கேட்டோம். ஸ்ரீ பூண்டி சுவாமி "**ஆமாங்க. நானும் வரேன். ஐப்பசி மாசம் 18ம் தேதி சரியா போயிடும்**" என்றார். மழைத் தூறல் விழுந்து கொண்டிருந்தாலும் மலைமேல் ஏறினோம். ஆலயத்தில் கந்தர் சஷ்டி பாடிக் கொண்டிருந்தனர். ஒரு பெரிய கருப்பு நிற நாய் விநாயகர் சிலை பக்கத்தில் வந்து நின்றது. நான் இன்னொரு அன்பருக்கு காட்டினேன். யாருக்கும் சொல்ல வேண்டாம் என்றார். பூஜை முடிந்த பிறகு அந்தப் பக்கம் பார்த்தால் நாய் தென்படவில்லை. எங்களுக்கு சுவாமியே அந்த உருவத்தில் காட்சியளித்தார் என்று எண்ணினோம்.


இரண்டு வருடம் கழித்து ஒரு நாள் பள்ளியில் பெஞ்ச் மீது படுத்துக் கொண்டிருந்தேன். என்னோடு சிலரும் படுத்து இருந்தனர். திடீரென யாரோ என்னை கீழே தள்ளிவிட்டது போல் சிறிது தூரத்தில் போய் விழுந்தேன். உடனே நான் எழுந்து பர்வதமலையில் அன்ன அபிஷேகத்திற்கு கிளம்பினேன். அவலூர்பேட்டை பேருந்து நிலையத்திற்குச் சென்றவுடனே ஸ்ரீ பூண்டி சுவாமிசமாதியடைந்த விவரம் தெரிந்தது. நான் பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஇரண்டு வருடங்களுக்கு முன்பே தெரியபடுத்திய ஐப்பசி

*மாதம் 18ந்தேதி சமாதியடைந்தார் என்று பிறகு அறிந்து கொண்டோம்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமியின் சமாதி நேரத்தில் சுவாமிகளை வெண்ணிற ஆடையில் அமர வைத்தவாறு அப்படியே இறக்கினார்கள். சமாதியில் சரியாக இரக்க முடியாததால் இரங்க அனைவரும் பயந்தார்கள். நான்* **"என்ன செய்தாலும் நீங்களே சுவாமி"** *என்று மனதில் வேண்டி ஸ்ரீ பூண்டி சுவாமியின் இரு தொடைகள் மீதும் இரண்டு பாதங்களை வைத்து அப்படியே அமர்ந்து திருநீறு, வில்வஇலை, உப்பு மற்றும் பிற வாசனை திரவியங்களை போட்டு செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்து நான் மேலே ஏறிய பிறகு சமாதியை மூடினார்கள்.*

*ஸ்ரீ சுவாமிஉபயோகப்படுத்திய படுக்கை, மெத்தை ஆடைகள் அனைத்தையும் எடுத்துச் சென்று ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் வீட்டில் வைத்து ஸ்ரீ பூண்டி சுவாமிசொன்னபடி மூன்று பேர் சேர்ந்து பர்வத மலைக்கு கிளம்பி மலை மேல் பாதி தூரம் ஏறுவதற்குள் இரவு மழையில் ஏற முடியாமல் அங்கேயே படுத்துக் கொண்டோம். என்னுடன் வந்த இருவரும் நன்றாக தூங்கினார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி எங்களுடன் அங்கேயே படுத்திருப்பது போல் தரிசனம் அளித்து* **"என்னாப்பா மலை மேல போயி இரவு அங்க தங்காம திரும்பி வந்திடுங்க"** *என்றார். நான் எழுந்து பார்த்தபோது ஸ்ரீ பூண்டி சுவாமிதென்படவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமிகூறியபடியே மலைமேல் சென்று தரிசித்து விட்டு அன்றே திரும்பி வந்துவிட்டோம். அதற்கு மறு நாள் அங்கு ஏதோ தீய நிகழ்ச்சி நடந்ததாக தெரியவந்தது. அதற்காகத் தான் ஸ்ரீ பூண்டி சுவாமி எங்களுக்குத் தெரியப்படுத்தி காப்பாற்றினார். எப்போதும் அவரது பாதுகாப்பில் உள்ளோம் என்ற நம்பிக்கை எங்களை முன்னோக்கி வழி நடத்துகின்றது.*





**நேர்காணல்: 58**
**31.10.2008, பூண்டி**

**காளிதாஸ் (Rtd. Judge), வயது: 59, பழனி.**

*1975ல் நான் சென்னை சட்டக் கல்லூரியில் படித்து கொண்டிருந்தபோது என் தாய், தந்தையர் சஷ்டியப்த பூர்த்தி நடத்திக் கொள்ள முன்பே கிளம்பி திருத்தலங்களை தரிசித்துக் கொண்டு திருவண்ணாமலைக்கு வந்தோம். திரு அருணாச்சலேஸ்வர சாமியை தரிசனம் செய்து கொண்ட பிறகு சிதம்பரம் செல்ல வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. நாங்கள் ஆலயத்தினுள் சென்று பூஜைகள் செய்து வெளியே வந்தவுடனே ஒரு அந்நியர் எங்களிடம் வந்து* **“இவ்வளவு தூரம் வந்தீர்கள். பக்கத்தில் பூண்டியில் ஒரு பெரிய மகான் இருக்கிறார். அனைவரும் சென்று தரிசனம் செய்து கொள்கிறார்கள். நீங்களும் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து செல்லுங்கள். உங்களுக்கு நல்லது’’** *என்று கூறினார். என் தந்தைக்கு அப்போதே உடல்நலம் சரியில்லை. சிதம்பரம் போக வேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தோம். அந்த மனிதர் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே இருந்தார். ஒரு வேளை விட்டால் அவர் பூண்டிக்கு எங்களை அழைத்துச் சென்று விடுவார் போல் இருந்தது. அவர் அப்படி வற்புறுத்தி கொண்டிருந்ததால் போய் பார்க்கலாம் என்று கிளம்பி பூண்டிக்கு வந்தோம்.*

*ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு சேவைகள் செய்கிறார். நாங்கள் பிற்பகல் உணவு வேளைக்கு வந்தோம். ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு உணவு ஊட்டிப் படுக்க வைத்தார்கள். திரைப் போட்டிருந்தது. நாங்கள் வெளியே அமர்ந்து இருக்கவே பூண்டி சுவாமியின் பாதங்கள் வெளியே தென்பட்டது. எங்களுக்காக சுவாமிகள் பாதங்களை வெளியே வைத்தது போல் தோன்றியது. சுவாமிகளின் பாதங்களை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு வா என்று கூப்பிடுவது போல் இருந்தது. உடனே நான் சென்று ஸ்ரீ பூண்டி*

*சுவாமிகளின் பாதங்களை பிடித்து என் தலை மீது வைத்துக் கொண்டேன். அந்த சமயத்தில் சுவாமியின் பாதங்கள் பனிக்கட்டி போல் சில்லென்று இருந்தது. அந்த குளர்ச்சியில் சாதாரண மனிதன் உயிர் வாழ்வது கடினம். இது சுவாமி எனக்களித்த அனுபவம். என் மனதில்* **“இந்த உலக வாழ்க்கை எனக்கு பிடிக்கவில்லை. இந்த உலகம் எனக்கு புரியவில்லை. எல்லாம் மாயை‘‘** *என்று பலவிதமாக எண்ணினேன். அச்சமயத்தில் நான் ஒரு ஆசிரியராக தேர்வில் வெற்றியடைய வேண்டும் அல்லது முதல் இடம் வரவேண்டும் என்றோ அல்லது நல்ல வேலை வேண்டும் என்றோ கேட்கவில்லை.* **“நான் உண்மையில் இங்கு இருக்கவேண்டியவன் கிடையாது. எங்கேயோ இருக்க வேண்டியன் என்றபடி என் ஆலோசனைகள் வருகின்றன. (I seems to be elsewhere really I have to be somewhere else. But I feel myself to be elsewhere)** *நான் எங்கேயோ இருக்கக்கூடாத இடத்தில் இருப்பது போல் நினைத்து கொண்டே இருந்தேன். அந்த சமயத்தில் எனக்கு சந்தேகமும் தோன்றியது.* **“இத்தனை எண்ணுகிறோம். ஸ்ரீ பூண்டி சுவாமி இதையெல்லாம் தெரிந்து கொண்டு இருப்பாரா? கேட்டிருப்பாரா?”** *என்று திரையை சிறிது விலக்கிப் பார்த்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி மீசையை தடவியவாறு படுத்து இருந்தார்.* **“ஊம்... ஊம்.... ஊம்...”** *என்கிறார். கண்கள் திறந்து பார்க்கவில்லை.* **“நீ மனதில் நினைத்தாலும், வாய் திறந்து சொல்லாவிட்டாலும் எனக்கு தெரிந்து கொண்டே இருக்கும். நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருக்கிறேன்’’** *என்பது போல் இருந்தது அவர் முகம்.*

*சுவாமியின் பாதங்களை வணங்கும் சமயத்தில் நான் யார் என்று பார்க்கும் சந்தர்ப்பம் இல்லையென்றாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியை எழுப்பி அமர வைத்து பிறகு திரையை விலக்கியதும் அங்கிருந்த நூறு பேரில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய பார்வை என் மீது விழுந்தது. ஸ்ரீ சுவாமியின் பார்வை என்னையே பார்ப்பது போல் இருந்தது. நானும் அவரையே பார்த்தேன்.* **“இவனா என் பாதங்களின் அருகில் இத்தனை உளறினான்”** *என்று என்னை அடையாளம் கண்டது போல் இருந்தது. சுவாமிகளின் பார்வை என் மேல் பட்டதும் என் உள் மனத்தை தொட்டது போல் இருந்தது. அந்தப் பார்வை*

மகான்களுக்கே சாத்தியம். சிறிது நொடியில் என் வரலாற்றை முழுவதும் அறிந்த பூண்டி மகான் நயன தீட்சையால் எனக்கு அருள் புரிந்தார். இவ்வளவு தான் எங்களுக்கு இடையில் நடந்தது. நானே குரு என்று சுவாமி கூறவில்லை. நானே சிஷ்யன் என்று நானும் கூறவில்லை. ஆனால் அன்றிலிருந்து என் வாழ்க்கையில் மாற்றம் வந்தது. என் நடவடிக்கைகளில் மாற்றம் வந்தது. என் ஆன்மீக வாழ்க்கையில் எதிர்பாராத மாறுதல்கள் ஏற்பட்டன. எவரிடமிருந்தும் எதிர்பார்க்கக்கூடாது என்றும் என்னால் யாருக்கும் எந்த துன்பங்களும் நேரக்கூடாது என்றும் எண்ணினேன்.

என் படிப்பு முடிந்த பிறகு வழக்கறிஞர் தொழிலை ஆரம்பித்த பிறகு காலையில் குளித்தவுடனே ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கிவிட்டு நீதிமன்றத்திற்குச் செல்வேன். ஒரு நாள் பூண்டி சுவாமியை வணங்கிக் கொண்டிருந்த சமயத்தில் சுவாமியின் திருஉருவப்படம் இருட்டு கவ்வியது போல் மாயமானது. எப்போதும் வெளிச்சமாக உள்ள இடம் அன்று ஏன் அப்படி தரிசனம் அளித்தார் என்று தெரியாததால் **"எனக்கு ஏதாவது தீங்கு ஏற்படப்போகின்றது என்று சுவாமி முன்பே தெரியப்படுத்துகிறாரா?"** என்று சந்தேகத்துடன் நீதிமன்றத்துக்குச் சென்றேன். மாலையில் ரேடியோ செய்தியில் ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்தார் என்று கேட்டு மிக அதிர்ச்சியுற்றேன். என்னில் இத்தனை மாற்றங்களை கொண்டு வந்த மகான் என்னை அவர் குழந்தையாக பாவித்து, சமாதியடைந்த செய்தியை முன்பே எனக்கு தெரியப்படுத்தினாலும், புரிந்து கொள்ள முடியாமல் பயந்தேன். அந்த சச்சிதானந்த சொரூப மூர்த்தி எல்லா உயிர்களிலும் நிறைந்துள்ளார் என்று போதித்த ஸ்ரீ பூண்டி சுவாமியின் மிகுந்த அன்புக்கு மனதிலேயே வணக்கங்களை தெரிவித்தேன்.

நான் மாவட்ட நீதிபதியாக பதவியிலிருந்தாலும் எவருக்கும் தலைவணங்காமல் உண்மையாக இருந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் எல்லாவற்றையும் சூழ்ந்து பரிசீலித்த பிறகு உண்மை, தர்மம், நியாயத்திற்கு கட்டுபட்டு சட்டரீதியானதற்கு மட்டும்

முக்கியத்துவம் அளித்து தீர்ப்பு கூறுவேன். அது என் வாழ்க்கைக்கு ஆத்ம திருப்தியை அளித்தது.

என் அண்ணன், அண்ணிக்கு குழந்தைகள் இல்லை. நாங்கள் பூண்டி சுவாமியை தரிசனம் செய்த போது என் அண்ணன் அண்ணி தங்களுக்கு பிள்ளைப் பேறு வேண்டும் என்று கேட்டார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி "**குழந்தை கிடைக்கும்**" என்று ஆசிர்வதித்தார். அந்த வார்த்தைகளுக்கும் அன்று பொருள் விளங்கவில்லை. சிறிது நாட்கள் கழித்து எனக்கு திருமணம் நடந்து குழந்தைகள் பிறந்த பிறகு என் குழந்தையை என் அண்ணன் தத்து எடுத்துக் கொண்டார். ஸ்ரீ பூண்டி சுவாமிகூறிய வார்த்தைகளின் உட்பொருளையும், சுவாமியின் மகிமையையும் அறிந்து கொள்ள நிறைய நாட்கள் பிடித்தது.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமி பெயரில் "**சித்தர்கள் அருள் ஞானப் பேரவை**" ஆரம்பித்தேன். நான் திருப்பத்தூரில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது சிலர் உறுப்பினர்களாக சேர்ந்தார்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஆன்மீகச் சொற்பொழிவுக்கு நூறு பேருக்கு மேல் வந்தனர். நாங்கள் எங்கள் சொற்பொழிவில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருஉருவப்படமும், மற்றும் எனக்கு விருப்பமான சீரடி சாயிபாபா திருஉருவப்படத்தையும் வைத்து சத்சங்கங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

**நேர்காணல்: 59**
**24.04.2009, பூண்டி**

**S. சையது கவுஸ்**, வயது: 71, எள்ளுப்பாறை கிராமம்.

*நான் ரோடு இன்ஸ்பெக்டராக கலசப்பாக்கம் பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அலுவலகத்திலிருந்து வீட்டிற்குச் செல்லும் சமயத்தில் ஸ்ரீ சுவாமிகள் நட்சத்திரக் கோவில் அருகில் இருந்து வந்து கொண்டிருந்த போது பார்த்து அச்சமயத்தில் என்னிடமிருந்த வெல்லக்கட்டியை சுவாமிக்குத் தந்து வணங்கினேன். எனக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் ஜாதி, மத, பேதங்களை பொருட்படுத்தமாட்டேன். சுவாமிகள் பூண்டியில் திண்ணை மேல் அமர்ந்த பிறகு கூட தினந்தோறும் காலை, மாலை ஸ்ரீ சுவாமியை தரிசிக்கும் பாக்கியத்தை ஏற்படுத்தினார். நான் செய்யும் வேலையை கடவுள் அளித்த சந்தர்ப்பமாக நினைத்து பொறுப்பாக செய்வேன். நான் சுவாமியை தரிசனம் செய்து கொண்டு "***உங்கள் இருதயத்தில் இடம் இருந்தால் போதும்***" *என்று வேண்டுவேன்.*

*நான் ஒரு ஒப்பந்தப் பணிக்குச் செல்ல முயற்சி செய்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கேட்டேன். சுவாமி அனுமதிக்கவில்லை. நானும் செல்லவில்லை. நான் பர்வத மலைக்குச் சென்று வர ஆசிகள் கேட்டேன். "***நல்லது போய்ட்டு வா***" *என்றார்.பர்வத மலைக்குச் சென்று வந்தேன். ஒருமுறை நாகூர் சென்று வர வேண்டுமென்று கூறினேன்.* "***நானும் வரேன்***" *என்றார் பூண்டி சுவாமி.வாருங்கள் சுவாமி என்றேன். நான் கிளம்பி நாகூருக்குச் சென்றேன். தர்க்காவின் அருகில் யாரோ ஒரு துறவி எனக்காக காத்திருப்பது போல் தோன்றியது. நான் அவரை பார்த்தாலும் வேறு உருவத்தில் அவர் இருந்ததால் அடையாளம் தெரிந்து கொள்ள என்னால் முடியவில்லை. என் வழியில் சென்றேன். அந்த சமயத்தில் வேறு எண்ணம் எனக்கு வரவில்லை. அன்று அந்த உருவத்தில் தரிசனம் அளித்தது ஸ்ரீ பூண்டி மகானே.*

ஒவ்வொரு நாளும் உறங்குவதற்கு முன்பு எங்கள் மத வழக்கப்படி கடவுளை வணங்கி விட்டு உறங்குவேன். அச்சமயத்தில் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை **"உங்கள் அருள் எப்போதும் எனக்கு இருக்க வேண்டும்"** என்று வேண்டுவேன். ஒரு சமயம் சுவாமியை தரிசனம் செய்து விட்டு நின்று கொண்டிருந்தேன். **"மண் ரோடு, ஜல்லி ரோடு, தார் ரோடு, சிமெண்ட் ரோடு"** என்றார். சுவாமிகளின் பரிபாஷையில், சிறிது சிறிதாக முன்னேற முடியும் என்று கூறியது போல் புரிந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி மீதுள்ள நம்பிக்கையில் உண்மையாக நடந்து கொள்வேன்.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு எப்போது எதைத் தந்தாலும் அருந்துவார், சாப்பிடுவார். ஒரு அன்பர் பிரசாதத்தை என் கையில் தந்து சுவாமிகளுக்குத் தருமாறு கேட்டுக் கொண்டார். நான் எடுத்துச் சென்று சுவாமிக்கு தர முயற்சி செய்தேன். அச்சமயத்தில் மிகுந்த கோபத்துடன் பார்த்தார். **"நான் இனிமேல் இப்படிப்பட்ட வேலை செய்யமாட்டேன். மன்னியுங்கள்"** என்று வேண்டினேன். அப்போதிலிருந்து அப்படிப்பட்ட தவறை எப்போதும் செய்யவில்லை.

கலசப்பாக்கம் பஞ்சாயத்து யூனியனில் எனக்கு அதிகமான வேலை தந்தார்கள். 384 மூட்டை அரிசி தந்து வேலைக்கு உணவு திட்டம் கீழ் வேலையை செய்யச் சொன்னார்கள். எல்லாரும் நான் எப்படி இந்த வேலையை நிறைவேற்றுவேன் என்று சந்தேகப்பட்டார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் வேலையை முடித்து நல்ல பெயர் எடுத்தேன். ஒரு நாள் பூண்டி சுவாமியை தரிசனம் செய்த சமயத்தில் **"நம்பினவனுக்கு நடராஜன். நம்பாதவனுக்கு யமராஜன்"** என்றார். எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் வராத ஆனந்தம் நான் ஸ்ரீ சுவாமியை நினைத்தவுடனே என்னுள் ஒவ்வொரு அணுவும் புல்லரித்து மகிழ்ச்சிக்கடலில் மூழ்கி விடுவேன்.

என் சிறிய வயதில் எங்கள் பூர்வீக கிராமமான தோப்பாங்குடி கிராமத்தில் பூங்குடி சுவாமி என்று ஒரு சாது இருந்தார். நான் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயத்தில் பள்ளியிலிருந்து வீட்டிற்குச் சென்றவுடனே சுவாமியிடம் சென்று கதவை தட்டியதும் **"யார் கவுஸா?"** என்று கேட்பார். ஆமாம் என்றவுடனே கதவை திறப்பார். அந்தத் துறவி **"விசுவாசம்"** பற்றி மிகவும் நன்றாகக் கூறுவார். எஜமானி,

*நாய் கதை மூலமாக வர்ணித்து கூறுவார். ஹிந்தி புத்தகத்திலிருந்து சில வார்த்தைகளுக்குப் பொருள் கேட்பார். எனக்கு ஹிந்திமொழி தெரியும். ஆதலால் பொருள் சொல்லுவேன். எனக்கு அப்போதும், இப்போதும் ஒரு மகானின் சன்னதியில் இருக்கும் பாக்கியம் கிடைத்தது. அதுவே என் பூர்வ ஜென்ம புண்ணிய பலன். நான் என் தாய், தந்தை, என் பாட்டி, தாத்தா அனைவரும் இந்து ஆலயங்களுக்கு சென்று தரிசனம் செய்து வருவோம். அது கடவுள் எங்களுக்கு அளித்த வரம்.*

**நேர்காணல்: 60**
**26.04.2009, பூண்டி**

**சிவாஜி**, **வயது: 50க்கு மேல், ஊர்: புதுநெல்லிமேடு.**

*ஸ்ரீ பூண்டி சுவாமி தோளில் ஒரு சிறு மூட்டையை மாட்டிக் கொண்டு நடந்து செல்லும் சமயத்தில் என் சிறு வயதில் நான் பின்னாடியே செல்லுவேன். அதுவரை எனக்கு நினைவு உள்ளது. சுவாமி வந்து எங்கள் வீட்டுத் திண்ணை மேல் அமர்ந்தபோது கூழ் கலந்து தந்ததாகவும், சுவாமி குடித்த பிறகு "*__நல்லது__*" என்று ஆசி வழங்கினார் என்று எங்கள் வீட்டுப் பெரியோர்கள் கூறினார்கள். நான் எப்போது சுவாமியை பார்த்தாலும் என்னை ஒரு மாதிரியாக பார்ப்பார். "*__ஏன் சுவாமி என்னை அப்படிப் பார்க்கறீங்க. என் மீது உங்களுக்கு என்ன கோபம்__*" என்று மனதில் நினைப்பேன். சாக்லேட் வாங்கி சுவாமிக்குத் தருவேன்.*

*பூண்டியில் திண்ணை மேல் அமர்ந்த பிறகு ஒரு நாள் நானும், என் தந்தையும் கிளம்பி வரும்போது வடை வாங்கி வந்து பூண்டி சுவாமிக்கு ஊட்டி வணங்கினோம். நான் என் தந்தை பின்னாலேயே நின்று கொண்டேன். "*__நல்லது! நல்லது! நீங்க எது வேணுமின்னாலும் செய்யலாம். மனசுக்கு திருப்தி__*" என்றார் சுவாமி. சித்ரா பௌர்ணமிக்கு வேடிக்கையாய் செய்ய வேண்டும் என்று பல்லக்கில் சுவாமி திருஉருவப்படத்தை வைத்து ஊர்வலமாக வரவேண்டும் என்பது என் கோரிக்கை. நான் டெய்லராக பணி செய்துகொண்டிருந்ததால் எனக்கு அந்த அளவு பணவசதி இல்லாமல், அப்படிச் செய்ய முடியாமல் போயிற்று. எல்லாரையும் போல் நானும் நன்றாக இருக்க வேண்டும் என்று வேண்டுவேன். என் சிறு வயதிலிருந்து நான் தனிமையில் இருக்க விரும்புவேன். நான் நண்பர்களோடு கூட வெகுவாகப் பழக மாட்டேன். எனக்கு யார் மீதும் பகையோ, வெறுப்போ இல்லை. இந்த தேச மக்கள் எல்லாரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது என் கோரிக்கை. ஒரு நாள் ஸ்ரீ பூண்டி*

*சுவாமி* “**பார்க்கிறத்துக்கு கண் பழசுதான். ஆனால் நாடகம் தான் புதுசு**” *என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமி நடமாடிய கிராமங்கள் எல்லாம் இன்று செழுமையாக உள்ளது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் மகிமையை வர்ணிக்க இயலாது.*

*ஒரு நாள் கனவில்* “**கூடு விட்டு கூடு பாய்றது**” *என்றார் சுவாமி. அப்படி என்றால் ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திற்கு சூட்சும உருவத்தில் பிரவேசம் செய்து அவர்களின் உள்மனதை தெரிந்து கொள்வது. எனக்கு எதற்குச் சொன்னாரோ தெரியாது. ஸ்ரீ பூண்டி சுவாமிசொன்னது நடக்கிறது.*

**நேர்காணல்: 61**
**27.4.2009, பூண்டி**

**மகாதேவன்**, **வயது: 64, சோழபுரம் கிராமம்.**

*நான் வில்வாரணி உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டு இருந்தபோது ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். நான் என்றும் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் எதையும் கேட்டதில்லை. என்னை சுவாமிகளே வழி நடத்துகிறார் என்று எண்ணுவேன். நான் பூண்டிக்கு வந்து தியானம் செய்து, சேவைகள் புரிவேன். இப்படிப்பட்ட பெரிய மகானை வேறு எங்கும் பார்க்க முடியாது. பகவான் என்றால் ஸ்ரீ பூண்டி மகான் என்பது என் நம்பிக்கை.*

*நான் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியிருந்தேன். கடனைத் திருப்பிக்கட்டுமாறு அவசரப்படுத்தினார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமிகளை வணங்கிவிட்டு,* "**நிலைமை இப்போது கடன் திருப்பி தர முடியாமல் இருக்கிறது அல்லவா? நான் என்ன பண்ணுவது?**" *என்று மனதில் நினைத்துக் கொண்டேன். வீட்டிற்குச் செல்வதற்குள் என் பிரச்சினை தீர்ந்து விட்டது. அதிகாரி வீட்டிற்கு வந்து* "**முடிந்தவரை சீக்கிரமாகக் கடனைக் கட்டி விடுங்கள்**" *என்று கூறிச் சென்றார். அதன் பிறகு கடனை அடைத்து விட்டேன்.*

*என் நண்பர்களோடு சேர்ந்து பைக்கில் பூண்டிக்குக் கிளம்பினேன். நட்சத்திரக் கோவிலுக்கு வந்தவுடன் என் நண்பர் சினிமாவுக்கு போகலாம் என்றார். இருவரும் சேர்ந்து போளூருக்கு சென்று சினிமா பார்த்துவிட்டு பைக்கின் அருகில் வந்தவுடன் டயர் பஞ்சர் ஆகியிருந்தது. இரவு ஒன்பது மணிக்குக் கடை எல்லாம் மூடிவிட்டார்கள். சுவாமிகளின் தரிசனத்திற்கு கிளம்பி வந்து சினிமாவிற்கு வந்ததற்கு இதுதான் தண்டனை என்று நினைத்து ஒரு கடைக்காரரை வேண்டி பஞ்சர் போட்டுக் கொண்டு வீட்டிற்குச் சென்றோம். மறு நாள் நான் பூண்டிக்கு வந்து ஸ்ரீ சுவாமிகளை*

வணங்கி நின்றவுடனே "**போளூர் பஜார் எல்லாம் சுத்தினாப்போல இருக்கே!**" என்றார். எனக்கு வியர்த்துக் கொட்டியது.

ஒரு அன்பர் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி அவர் நண்பரின் பெயரைக் கூறி அந்த நண்பர் இப்போது என்ன செய்கிறார் என்று கேட்டார். "**அமெரிக்காவில் பான்டா (Fanta) குடிக்கிறார்**" என்று கூறினர் ஸ்ரீ பூண்டி மகான். கேட்டவர் சென்று நண்பருக்கு போன் செய்து தான் பூண்டி சுவாமியின் சன்னதியிலிருந்து நேரத்தைக் கூறி 'அந்த சமயத்தில் என்ன செய்து கொண்டிருந்தாய்?' என்று கேட்டவுடன் பான்டா குடித்துக் கொண்டிருந்ததாக கூறினார்.

ஒரு துறவி தன்னிடமிருந்த சித்துகளை ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு காண்பிக்க வேண்டும் என்று மிளகாய்ப் பொடியை நீரில் கலந்து உடல் மேல் ஊற்றிக் கொண்டு காண்பிக்க வேண்டும் என்று கிளம்பி வந்தார். அவர் பூண்டியில் எட்டிக்கியம்மன் ஆலயத்தை கடந்து வருவதற்குள் அவர் காண்பிக்க நினைத்த சித்துகள் எல்லாம் நீங்கிவிட்டன. அவர் எதுவும் செய்யமுடியாமல் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று வணங்கி மன்னிக்குமாறு வேண்டினார். அவரிடம் நல்லது செய்ய நினைத்தால் பலன் இருக்கும். சித்துகளை துஷ்பிரயோகம் செய்தால் அவர்களுக்கே தீமை விளைவிக்கும்.

**நேர்காணல்: 62**
**27.4.2009, பூண்டி**

**சின்னதம்பி**, வயது: 50க்கு மேல், நெல்லிமேடு.

*நான் சிறு வயதில் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தேன். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் எங்கள் நிலத்தின் பக்கத்தில் நிலம் வாங்கினார். அப்போது ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியோடு அறிமுகமாகி அவரோடு சேர்ந்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வருவேன். எனக்குத் தெரிந்தவரை பூக்கட்டுதல், டீ, காபி வாங்கி வந்து தருதல் மற்றும் பிற வேலைகள் கூறினாலும் முடியாது என்று கூறாமல் செய்வேன்.*

*ஒரு அதிகாரி ஸ்ரீ பூண்டி சுவாமிபெயரில் சிறிது நிலம் பட்டா செய்து தந்தார். அந்த நிலத்தில் எந்த வேலை இருந்தாலும் செய்து விட்டு மாலையில் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி மறுநாள் நிலத்தில் செய்ய வேண்டிய வேலை பற்றி கூறுவேன்.* **"செய்! செய்! நல்லது உனக்கு"** *என்று கூறுவார் ஸ்ரீ பூண்டி சுவாமி. மாலையில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கேட்டு பணம் வாங்கித் தருவார். ஸ்ரீ பூண்டி சுவாமிகள்,* **"கொடு! கொடு! சாயங்காலம் ஆனால் பொழுதுபோனால் எங்கியாவது போற இடத்துக்கு போவாங்க. போகட்டும்"** *என்று கூறுவார். கூலி வாங்கிக் கொண்டு இங்கேயே சிறிது நேரம் இருந்து வீட்டிற்குச் செல்வதற்கு முன்பு மீண்டும் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு* **"சுவாமி! சென்று வருகிறேன்"** *என்று விடைபெற்றால்,* **"போ! போ! போயிட்டு விடியறத்துக்குள்ள வந்திடு. அங்கேயே நின்னுடாத" என்று கூறுவார். "வந்திடறேன் சுவாமி" என்று கூறுவேன். ஒவ்வொரு சமயம் "சரி கொஞ்சநேரம் பார்த்துட்டு போலாம். கொஞ்சம் இரு"** *என்று கூறுவார் சுவாமி. சிறிது நேரம் கழித்து பார்த்தால் ஏதோ ஒரு வேலை செய்ய வேண்டி இருக்கும். அப்போது அந்த வேலையை முடித்துவிட்டுச் செல்வேன். ஒவ்வொரு நாளும் மாலைக்குள் ரூ.200க்கு குறைவில்லாமல் வாங்கிச் செல்வேன். நான்*

என்றும் பணம் கிடைக்காது என்று எண்ணியதில்லை. தேவையானால் என்னோடு பத்து பேரை அழைத்து வந்து நிலத்தில் வேலை செய்யவைத்து கூலிப் பணம் வாங்கித் தந்து அனுப்பி வைப்பேன்.

விடியற்காலையில் கிளம்பி பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் சன்னதியில் வேலைகளை முடித்துவிட்டு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று அவரை தரிசித்துக்கொண்டு திருநீறு வைக்குமாறு கேட்பேன். "**இப்பதான் வச்சிகிட்டு போனாய். திரும்ப திரும்ப ஓடி வந்து கேட்கிறாய். நான் என்ன செய்வது. சரி வைத்துக்கொள்! போயி இருக்கிற வேலையைப் பார்! உன்னைப்போல எத்தனை பேர் வர்றாங்க. அவங்களை எல்லாம் பார்க்கணும் இல்லையா!**" என்று கூறி திருநீறு வைத்து சிறிது கையிலும் தருவார். நான் சிரித்துக் கொண்டே வெளியே வருவேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிஅமர்ந்திருந்த திண்ணைக்கு எதிரில் கமிட்டியார்கள் காவலாளியை நியமித்தார்கள். நான் அவர்களை உறவுக்காரர்களிடம் பழகுவது போல் மாமா, மச்சான் என்று கேலி செய்வேன். "**நீங்கள் என்ன இங்கு காவல் இருந்து கொண்டு அன்பர்கள் வாங்கி வரும் பழங்களை எல்லாம் நீங்களே சாப்பிட்டு விடுகிறீர்களா?**" என்று கேட்டேன். உடனே ஸ்ரீ பூண்டி மகான் ''**என்னாப்பா! அவங்க சாப்பிடமாட்டாங்க**" என்றார். "**சரி, மீதம் இருக்கிறதை நான் எடுத்துக்கவா?**" என்று கேட்டால் ''**வேண்டாம். வேண்டாம். தொடாதே. வருவாங்க, வருவாங்க**" என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். அங்கு பின் அறையில் போட்ட பூ, பழங்கள், பணம் இன்னும் பலவிதமான பொருட்களையும் எடுத்துச் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமியின் நிலத்தில் அங்கங்கே பள்ளம் தோண்டி புதைத்து வைத்தோம். அந்தச் சமயத்தில் எனக்கு சிறிது பணம் கிடைத்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து "**சுவாமி! சிறிது பணம் கிடைத்தது**" என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் "**நல்லது. வைத்துக்கொள்**" என்றார். அப்போது நான் நன்றாக செலவழிப்பேன். மாலையில் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டால் "**ஆம். வந்திட்டியா! வந்திட்டியா!**" என்று கூறுவார். "**ஆமாம் சுவாமி!**" என்றால் "**சரி நல்லது. சென்று வா**" என்பார் பூண்டி மகான்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு **"சுவாமி! வீட்டில் பெரியவர்கள் எனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்கிறார்கள். பெண் பார்க்கச் செல்லவேண்டும்"** என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் **"கல்யாணம் பண்ணிக்க போறியா! மேற்கு திசையா போ. அமையும் போ! கொடுப்பாங்க. நல்லது நடக்கும். சென்று வா"** என்று ஆசிர்வதித்தார். நான் சென்று பெண்ணைப் பார்த்துவிட்ட மூன்றாவது நாளே திருமணத்திற்கு நாள் குறித்தார்கள். நான் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் விவரத்தைக் கூறினேன். **"நல்லது நடக்கும். சென்று வா"** என்று ஆசி வழங்கினார். **"சுவாமி! பணம் நெருக்கடியா இருக்கு. வெளியே கடன் கேட்டிருக்கேன். வருமா! வராதா!"** என்று கேட்டபோது, பூண்டி மகான், **"தருவாங்க! தருவாங்க! சென்று வா. பார்க்கலாம். நடக்கும் போய்ட்டு வா"** என்று கூறினார். ஸ்ரீ சுவாமியின் ஆசிகளுடன் திருமணம் நடந்தது.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் சன்னதியில் எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் யோசிக்காமல் வேலை செய்ய ஓடுவேன். ஒரு சமயத்தில் ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்த திண்ணைக்கு எதிரில் தெருவில் பந்தல் போடச் சொன்னார்கள். வெயில் அதிகமாக இருந்ததால் அன்பர்களுக்கு கஷ்டமாக இருப்பதால் உயரமாக பந்தல் போடவேண்டுமென்று தெருவுக்குப் பக்கத்தில் இருந்த பனைமரத்தை வெட்டி எடுத்து வந்து நான்கு பக்கமும் தூண்கள் போல நிறுத்தினோம். மறுநாள் போலீஸ் வந்து **"சாலை ஓரம் பனைமரத்தை அறுத்து எடுத்து வந்தீர்கள் என்று புகார் வந்துள்ளது"** என்றார்கள். நான், இராதாகிருஷ்ணன் மற்றும் சிலரும் சென்று பனைமரத்தை வெட்டி எடுத்து வந்தோம். போலீஸ் என்ன செய்வார்களோ என்று எனக்கு பயம் ஏற்பட்டது. அதற்குள் ஒருவர் எங்களிடம் வந்து **"நீங்கள் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சொல்லுங்கள்"** என்றார். நான் சுவாமியிடம் சென்று **"சுவாமி! நிழலுக்காக பந்தல் போடணும் என்று பனை மரம் வெட்டி எடுத்து வந்தோம். போலீஸ் வந்துள்ளது"** என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் **"சரி அவங்க வரட்டும். நீபோ!"** என்று கூறினார். நான் சென்றவுடனே சிறிது நேரம் கழித்து போலீஸ்காரர் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து நின்றார்கள்.

“**என்னாப்பா!**” என்று கேட்டார் சுவாமி. “**சுவாமி! தெருவுல பனைமரத்தை வெட்டியெடுத்துக் கொண்டு வந்திட்டாங்க**” என்றார் போலீஸ்காரர். ஸ்ரீ பூண்டி மகான் “**சரி! நான் வரேன். போங்கள்**” என்று கூறினார். போலீஸ் சென்று விட்டது. பிறகு யாரும் எங்களிடம் வரவில்லை. மறுநாள் பந்தல் போட்டோம். அந்த சமயத்தில் எந்த வேலை செய்ய வேண்டும் என்றாலும் அன்பர்கள் போட்டி போட்டுக் கொண்டு முன் வருவார்கள். சீக்கிரமாக வேலைகள் நடந்துவிடும். கிராமத்தார் போலீஸ் ஸ்டேஷன் சென்று விவரத்தைக் கூறி புகாரை இரத்து செய்தார்கள்.

எங்கள் கிராமத்தில் ஒரு குடும்பத்தில் கணவன், மனைவிக்குள் தகராறு ஏற்பட்டது. கணவன் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொள்ளவேண்டுமென்று விஷம் வாங்கிவந்து வீட்டில் மறைத்து வைத்து விட்டு நன்றாக சாராயம் குடித்துவிட்டு மயக்கத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்தான். சுவாமியிடம் வந்து திருநீறு வைத்துக் கொள்ள பயந்துகொண்டே பக்கத்தில் இருந்தவரிடம் ஸ்ரீ பூண்டி மகானிடம் திருநீறு வாங்கித்தருமாறு கேட்டான். உடனே பூண்டி மகான், “**அவன் பயந்துகிட்டு இருக்கான். விட்டுடுங்க. போகட்டும். அவன் எதுக்கு இங்க இருக்கிறது. அவன் இங்க இருக்கமாட்டான். அவன் போக வேண்டிய இடத்துக்கு போகட்டும். விட்டுடுங்க**” என்றார். அவன் வீட்டிற்கு சென்று விஷம் அருந்தி இறந்துவிட்டான். ஸ்ரீ பூண்டி மகான் கூறிய வார்த்தைகளுக்குப் பொருள் பிறகு தெரிந்தது.

ஸ்ரீ பூண்டி மகான் சமாதியடைந்தபிறகு, சுவாமியின் பௌதிக உடலை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, கண்ண கவுண்டர், கணேசன் மற்றும் நான் உள்பட சேர்ந்து எடுத்து வந்து சமாதியில் உட்காரவைக்கும் வரை பணி செய்தோம். அது ஸ்ரீ பூண்டி மகான் எங்களுக்கு அளித்த பாக்கியம்.

ஸ்ரீ பூண்டி மகான் சமாதியடைந்தபிறகு, சமாதிக்கோவில் அமைக்க, கடைக்கால், (Basement) தோண்டுவதிலிருந்து, ஆலயம் கட்டுவதற்கும் என்னால் இயன்ற அளவு பணிகள் புரிந்தேன். இன்றும் நான் காலையில் வந்து பூ தொடுப்பது, பூஜைக்கு உதவிகள்

*செய்வது, பூஜை முடிந்த பிறகு கிளம்பி செல்கிறேன். இன்றும் என் வீட்டில் ஸ்ரீ பூண்டி மகானின் திருஉருவப் படத்திற்கு காலையில் பூ வைத்து வணங்கி விட்டு என் வேலைக்கு கிளம்பிச் செல்வேன். எனக்கு கடந்த காலத்தை நினைத்துக் கொண்டால் மனதுக்கு அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கிறது. இதுவே ஸ்ரீ பூண்டி மகான் எனக்களித்த வரம்.*





ஸ்ரீ பூண்டி மகான்
பௌதிக உடல்

**நேர்காணல்: 63**
**28.4.2009, பூண்டி**

**அருணாச்சலம்**, வயது: 81, கலசபாக்கம்.

*நான் விவசாயக்குடும்பத்தில் பிறந்தேன். ஸ்ரீ பூண்டி மகானை எங்கள் கிராமத்தில் முதன் முதலில் தரிசித்துக் கொண்டேன். என் மாமாவின் பெயர் மாணிக்க நயினார். ஸ்ரீ பூண்டி சுவாமி என் மாமா வீட்டுத் திண்ணை மேல் அமர்ந்து கொண்டு தங்கவேலு நயினாரிடம் எதிரில் உள்ள வீட்டைக் காண்பித்து* "**ஏம்பா அவங்க வீடு காலியா இருக்கு? யாரும் இல்லையா?**" *என்று கேட்டாராம். அதற்கு மேல் எதுவும் கூறவில்லை.*

*ஈஸ்வரர் ஆலயத்திற்குப் பின்னால் உள்ள காளிகோயிலுக்கு அருகில் பெரிய ஆலமரம் இருந்தது. அங்கு ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்து இருப்பார். அங்கு ஒரு பாறை இருந்தது. அப்பாறை மீது வெயில், மழை பார்க்காமல் ஸ்ரீ பூண்டி மகான் படுத்திருப்பார். பக்கத்தில் நாகதாளி முட்புதர் இருந்தது. சில சமயங்களில், அந்த புதர்மேல் ஸ்ரீ சுவாமி படுத்து இருப்பார். அந்த சமயத்தில் யாரிடமும் பேசமாட்டார். இதை நான் நேரிடையாக என் கண்களால் கண்டேன். அந்த முட்கள் மேல் சுவாமி எப்படிப் படுத்து இருப்பாரோ? அது எப்படி சாத்தியமோ? அது சுவாமிக்கே தெரியும்.*

*ஆலமர பொந்தில் இரண்டு, மூன்று பெரிய மூட்டைகளை வைத்து இருப்பார். அவை எடுக்க முடியாத அளவு பாரமாக இருக்கும். அந்த மூட்டைகளில் தெலுங்கு, ஹிந்தி, கன்னட புத்தகங்கள் நிறைய இருந்தன. அந்தப் புத்தகங்களோடு,* "**பத்தாசு கல்கண்டு**" *(இரண்டு அங்குல அகலம், மூன்று அங்குல நீளம் பிஸ்கெட் போல கனமாக இருக்கும்) நிறைய வைத்து இருப்பார். நாங்கள் சிறுவர்கள் சிலர் சேர்ந்து சென்று சுவாமி இல்லாத சமயத்திலோ அல்லது சுவாமி கவனிக்காத சமயத்திலோ* "**பத்தாசு கல்கண்டை**" *எடுத்து வந்து சாப்பிடுவோம்.*

நான் சிறுவயதில் சில சிறுவர்களோடு சேர்ந்து வீடுவீடாகச் சென்ற பிச்சையெடுத்து வந்து ஸ்ரீ சுவாமிகளுக்கு இலை போட்டு சுவாமி சாப்பிடுங்கள் என்று கூறினால் சுவாமி சாப்பிடுவார். ஆனால் சுவாமி எதுவும் எங்களைக் கேட்டதில்லை. இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒரு முறை சிறுவர்கள் அனைவரும் சேர்ந்து அவ்வாறு செய்தோம். சுவாமி உணவு உண்டபிறகு ஒரு சொம்பு தண்ணீர் தந்தால் அருந்துவார்.

ஸ்ரீ சுவாமிகள் கலசபாக்கத்தில் உள்ள கங்கையம்மன் ஆலய நான்கு சுவர்கள் மேலும் கரியால் தெலுங்கில் எழுதி வைப்பார். அப்போது சுவாமி என்ன எழுதினார் என்று சரியாகத் தெரியாது. அந்த மொழி எங்களுக்குத் தெரியாத காரணத்தால் யாரும் பொருட்படுத்தவில்லை.

கோவிலுக்கு எதிரில் உள்ள வீட்டில் ஒருவர் ஸ்ரீ சுவாமியைப் பார்த்து **"என்ன சுவாமி! உடல் எல்லாம் அழுக்காக உள்ளது. மலம் எல்லாம் பூசிக்கொண்டு இருக்கிறீர்களே"** என்று கூறி சுவாமிகளை ஊர்ப் பக்கத்திலுள்ள கால்வாய் அருகே அழைத்துச் சென்று அங்கே அமர வைத்து குளிப்பாட்டுவார். அந்த சமயத்தில் சிறுவர்களான நாங்கள் வைக்கோல் எடுத்து வந்து உடல் எல்லாம் தேய்ப்போம். சுவாமியின் உடலில் ஒட்டியிருந்த மலத்தை நீக்கி சுத்தப்படுத்துவோம். அனைத்தையும் சுத்தப்படுத்தியபிறகு ஆடை அணிவித்து விடுவோம். ஸ்ரீ சுவாமியும் அப்படியே சென்றுவிடுவார். இரண்டு, மூன்று நாட்களுக்குத் தென்படுவார்.

ஒவ்வொரு முறை தாடி நன்றாக வளர்ந்து இருந்தால் முடி வெட்டுபவரை அழைத்து வந்து தலைமுடி, தாடியை எடுக்கச் சொல்வோம். ஸ்ரீ பூண்டி மகான் உடனே சம்மதிக்கமாட்டார். வற்புறுத்தி அமரவைக்க வேண்டும். எல்லா வேலையும் முடிந்தபிறகு தாடி மழித்தவருக்கு சுவாமி புதிய ஐந்து ரூபாய் நோட்டைத் தருவார். அது எப்படி வந்ததோ, எங்கே மறைத்து வைத்திருந்தாரோ தெரியாது. அது சுவாமிகளுக்குத் தான் தெரியும்.

எனக்குத் திருமணம் செய்ய நிச்சயித்து மாணிக்க நயினாரின் மகளை எனக்களித்து திருமணம் செய்ய நினைத்து என் தந்தை

அவர்களை கேட்டார். மாணிக்கம் நயினார் அங்கு ஒரு பெண்ணைத் தந்து உள்ளோம். இன்னொரு பெண் அதே வீட்டில் எதற்கு என்று நிராகரித்தார். தங்கவேலு நயினார் மகளை என் அண்ணன் திருமணம் செய்திருந்தார். அதனால் அவருக்கு விருப்பமில்லை. ஒரு நாள் சுவாமிகள் தங்கவேலு நயினாரிடம் "**என்னாப்பா தங்கவேலு, மாணிக்கத்திற்கு மூன்று பெண்கள். ஒரு பெண் மட்டும் தான் நன்றாக இருக்கும். அவருக்கே கொடுங்கள். நன்றாக இருக்கும்**" என்று கூறினார். அதன் பிறகு அவர் பெண்ணை எனக்கு தருவதற்கு சம்மதித்தார். என் மனைவி சிறு வயதாக இருக்கும்போது ஸ்ரீ பூண்டி சுவாமிவந்து வீட்டுத் திண்ணை மேல் அமர்ந்தால் அழைத்து உணவு படைப்பார். அவர் பெயர் பஞ்சவர்ணம். ஸ்ரீ பூண்டி சுவாமிஎன் திருமணத்தன்று வந்து திண்ணை மேல் அமர்ந்து ஆசி வழங்கிச் சென்றார்.

கண்ணமங்கலத்தில் இருந்து கணவன் மனைவி இருவரும் பூண்டி மகான் தரிசனத்திற்காக சேர்ந்து வந்தனர். அப்போது மகான் சுடுகாட்டில் இருந்தார். அந்த ஆண், வயிற்று வலியால் மிகவும் அவதியுற்று இருந்தார். அவர்கள் சுவாமியை தரிசனம் செய்து கொண்டு "**சுவாமி! எத்தனை மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்று காண்பித்தாலும் வயிற்றுவலி குறையவில்லை. என்ன செய்யச் சொல்கிறீர்கள்?**" என்று அந்தப் பெண்மணி கவலையுடன் வேண்டினார். ஸ்ரீ பூண்டி மகான் அவருக்கு திருநீறு வைத்து "**என்ன தருவே?**" என்று கேட்டார். அந்த பெண்மணியும் "**சுவாமி! நீங்கள் எதைக் கேட்டாலும் தருகிறேன்**" என்று கூறினாள். ஸ்ரீ பூண்டி மகான் "**காதில் உள்ள கம்மலைத் தருவாயா?**" என்று கேட்டார். அந்த பெண்மணி காதில் உள்ள கம்மலை கழட்டி தருவதற்குச் சென்றாள். ஸ்ரீ சுவாமி "**அதோ இருக்கிறது பார் கால்வாய். அதில் போட்டு விட்டுப் போ**" என்று எதிரிலுள்ள கால்வாயை காண்பித்து கூறினார். அந்த பெண்மணியும் கம்மலை கால்வாயில் வீசி எறிந்தார். கணவன், மனைவி இருவரும் அங்கேயே பதினைந்து நாட்கள் இருந்து வயிற்று வலி முழுவதுமாக குறைந்த பிறகு கிளம்பிச் சென்றனர். ஒரு மாதம் கழித்து மீண்டும் வந்து தேவையான மளிகைச் சாமான்களை வாங்கி வந்து இங்கேயே சமைத்து சுமார் 200 பேருக்கு அன்னதானம் செய்து விட்டுச் சென்றார்கள்.

தென்னாட்டிலிருந்து ஒருவர் வேலூருக்கு வந்தார். அவர் ஸ்ரீ பூண்டி சுவாமியின் மகிமையை கேள்விப்பட்டு வேலூரிலிருந்து கிளம்பி வரும் வழியில் ஒரு ஓட்டலில் டிபன் பார்சல் செய்து கொண்டு ஊர் எல்லையில் திரௌபதி அம்மன் கோயிலுக்கருகில் உள்ள ஸ்ரீ சுவாமியை தேடிக்கொண்டு வந்து சுவாமிகளுக்கு டிபன் தந்தபோது சுவாமி வாங்கிக் கொள்ளவில்லை. பலமுறை முயற்சித்தார். ஸ்ரீ சுவாமி அங்கேயே வைக்குமாறு கூறினார். கடைசியில் ஓரிடத்தில் வைத்து அங்கேயே ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டார் வந்தவர்.

பக்கத்து கிராமமான காப்பலூரில் ஒருவர் அவர் மகளுக்கு பலகாரம் செய்து சீர்வரிசை அனுப்பி விட்டு சுவாமிகளுக்காக சிறிது பலகாரம் எடுத்து வந்து சுவாமிகளுக்கு அன்புடன் அளித்தார். சுவாமியும் பலகாரத்தை திருப்தியுடன் உண்டார். அந்த சமயத்தில் ஆற்றின் பக்கத்தில் கால்வாய் தோண்டிக் கொண்டு நடப்பனவற்றை நாங்கள் பார்த்துக் கொண்டு இருந்தோம். **"என்ன சுவாமி! அந்த மனிதர் எங்கிருந்தோ வந்தார். அவர் வாங்கி வந்ததை சாப்பிடவில்லை. இவரிடம் வாங்கி சாப்பிட்டீர்களே?"** என்று கேட்டோம். **"கர்மா. அது எல்லாம் கர்மா"** என்றார் சுவாமி. வேறு எதையும் கூறவில்லை.

கலசபாக்கத்தில் என் மாமனாருக்கு சாலைப் பக்கத்தில் அரிசி ஆலை (Rice Mill) இருந்தது. அதன் பக்கத்தில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அந்த ஆலமரத்தின் அடிமரத்தில் ஒரு பெரிய பொந்து சிறிய குகை போல் இருந்தது. சுவாமி சிறிது நாள் அங்கு அமர்ந்து இருந்தார். அதன் பிறகு ஆற்றில் சுடுகாட்டின் அருகில் அமர்ந்து இருந்தார். என் மாமனார் ஸ்ரீ சுவாமிகளோடு மிகவும் நெருக்கமாக இருந்தார். உணவு வேளையில் உணவு எடுத்துச் சென்று ஊட்டுவார். சிறிது நாட்கள் கழித்து என் மாமனாருக்கு பொருளாதார சிக்கல் ஏற்பட்டது. ஸ்ரீ சுவாமியை கேட்டபோது **"பொறுத்திரு பார்க்கலாம்"** என்று சுவாமி கூறுவாராம்.

என் மாமனார் வீட்டிற்கு ஒரு பிராமண சுவாமி வந்தார். அவர் என் மாமனாரிடம், **''நீங்கள் சுவாமியைக் கேளுங்கள். என்ன வேண்டுமானாலும் செய்வார்''** என்று கூறி சென்றுவிட்டார். என்

*மாமனார் ஸ்ரீ சுவாமியை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கேட்டுக் கொண்டேயிருந்தார்.* **"பொறுத்துக்கிட்டு இரு மாணிக்கம்"** *என்று கூறிக்கொண்டே இருப்பார் சுவாமி. கலசப்பாக்கம் ஆற்றின் மறுகரையில் மேட்டுப்பாளையம் பக்கத்தில் காட்டிற்குச் சென்று சுவாமி அமர்ந்திருப்பார். வெயில் மழை பார்க்காமல் அங்கேயே இருப்பார். என் மாமனார் பணியாளைத் துணைக்கு அழைத்துச் சென்று* **"என்ன சுவாமி! என் கஷ்டங்களை சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீங்கள் எனக்கு எதுவும் செய்யமாட்டீர்களா?"** *என்று கேட்டார். ஸ்ரீ சுவாமி* **"பொறுத்திரு மாணிக்கம்"** *என்றார். என் மாமனார் பொறுமையிழந்து கோபத்தில் ஸ்ரீ சுவாமியை அடித்துவிட்டார். வேலைக்காரனுக்கு பேருந்து செலவிற்குப் பணம் அளித்து ஸ்ரீ சுவாமியை அழைத்துச் சென்று எங்காவது தொலைவில் விட்டுவருமாறு கூறி அனுப்பினார். அந்த வேலைக்காரர் சுவாமியை அழைத்துச் சென்று எங்கு விட்டு வந்தாரோ தெரியாது. ஆனால் அந்த வேலையாள் திரும்பி கலசப்பாக்கம் வருவதற்குள் ஸ்ரீ சுவாமி கலசப்பாக்கத்தில் அவருக்கு தரிசனம் அளித்தார். அதன் பிறகு ஸ்ரீ சுவாமி கலசபாக்கத்தில் இருக்கவில்லை.*

*ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் திண்ணை மீது அமர்ந்த பிறகு எங்கள் கிராமத்தில் சுந்தரசுவாமி நயினார், நானும் சேர்ந்து பூண்டிக்கு வந்து இரண்டு வாழைப்பழம் வாங்கி வந்து ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து கொண்டு* **"சுவாமி! இதோ வாழைப்பழம்"** *என்றேன்.* **"அப்படி வச்சிடு"** *என்றார் சுவாமி.* **"நான் அப்படி கண்டிப்பாக வைக்கமாட்டேன். நீங்கள் சாப்பிடுகிறீர்களா? இல்லையா?"** *என்று கேட்டேன்.* **"அதை அப்படி வைடா"** *என்றார் சுவாமி. பிறகு பூண்டி சுவாமி* **"டேய் அருணாச்சலம். கலசப்பாக்கத்திலிருந்து பாலையா நயினார் வண்டி ஓட்டிக் கொண்டு வர்றதா சொன்னாரு. கலசப்பாக்கம் வருவதற்கு வண்டி ஓட்டிக் கொண்டு வரச்சொல்லு"** *என்றார். நான்* **"சுவாமி! சைக்கிளில் வந்தேன். நீங்கள் உட்கார்ந்து கொள்ளுங்கள். நாங்கள் அழைத்துச் செல்கிறோம்"** *என்றேன்.* **"அட... நீங்க எங்கியாவது தள்ளிடுவீங்க"** *என்றார் சுவாமி.* **"சுவாமி! நாங்கள் கீழே தள்ளாமல் கவனமா கூட்டிக் கொண்டு செல்கிறோம். வாங்க"** *என்றேன். ஸ்ரீ பூண்டி மகான்* **"அடடே.... பாலைய்யா நயினார் வண்டி ஓட்டி வர்றதா**

**சொன்னாருடா. போ. போ.”** என்றார். நான் அளித்த வாழைப்பழங்களை சாப்பிடவில்லை. நாங்கள் கிளம்பிச் சென்றுவிட்டோம்.

கலசபாக்கத்தில் பாப்பாத்தியம்மா என்று ஒரு பெண்மணி இருந்தார். அவர் ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு காபி கலந்து எடுத்துச் சென்று தர வேண்டும் என்று காபி கலந்தார். அவர் வீட்டிலிருந்த சிறுவன் “**அம்மா எனக்கும் காபி வேண்டும்**” என்று கேட்டான். அப்பெண்மணி சிறுவனுக்கு காபி அளிக்காமல் நேராக பூண்டிக்கு வந்து ஸ்ரீ சுவாமியின் முன் வந்து நின்றவுடனே “**பையன் காபி கேட்கிறான். எடுத்துச் சென்று அவனுக்குக் கொடு**” என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். அவரும் திரும்பி வீட்டிற்கு வந்தார்.

திரௌபதியம்மன் கோயிலுக்கு பக்கத்திலேயே மலையாள சுவாமி கோவில் உள்ளது. அக்கோவிலில் இராமசாமி பூஜைகள் செய்வார். குருபூஜையன்று எங்கள் கிராமத்தில் உள்ள சுப்பிரமணியம் என்பவர் அந்தக் கோவிலுக்குச் சென்றார். “**ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு உணவு எடுத்துச் சென்று அளிக்க வேண்டும்**” என்று இராமசாமி கூறினார். “**நீங்கள் என்னிடம் கொடுங்கள். நான் எடுத்துச் செல்கிறேன்**” என்றார் சுப்பிரமணியம். அங்கு நின்று அவ்விருவர் உரையாடலைக் கேட்ட கந்தசாமி என்பவர் “**தண்டச்சோறு சாப்பிடறவருக்கு எதுக்குச் சாப்பாடு**” என்றார். அவர் பேச்சைப் பொருட்படுத்தாமல் பூஜை முடிந்தபிறகு சுப்பிரமணியம் உணவு எடுத்துச் சென்றார். ஸ்ரீ பூண்டி சுவாமி “**அடே. தண்டச்சோறு சாப்பிடறவன் இருக்கான் அங்கே. கொண்டுபோயி அவனுக்கு கொடுங்க சாப்பிடுவான்**” என்றார். அவரும் உணவை எடுத்துக் கொண்டு திரும்பிச் சென்றார்.

காப்பலூரில் கோவிந்தன் என்று ஒருவர் இருந்தார். அவர் ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர். அவர் நான்கு கிராமில் மோதிரம் செய்து எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் கைவிரலில் போட்டார். சிறிது நேரம் கழித்து அந்த மோதிரத்தை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று வந்தபோது ஸ்ரீ சுவாமி சம்மதிக்கவில்லை. சிறிது நாளில் கைவிரல் வீக்கம் கண்டது. போளூரிலிருந்து ஒரு டாக்டர், கலசப்பாக்கத்திலிருந்து ஒரு டாக்டர், திருவண்ணாமலையிலிருந்து ஒரு டாக்டர் வந்து அவரவர் ஆற்றலுக்கு தகுந்தவாறு

*முயற்சித்தார்கள். சிகிச்சைக்கு ஸ்ரீ பூண்டி மகான் சம்மதிக்கவில்லை. அந்த சமயத்தில் நான் சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு* **"சுவாமி! விரல் வீங்கி விட்டது. மோதிரத்தை கழட்டிவிடுங்கள்"** *என்றேன்.* **"போடா! போடா!"** *என்றார் சுவாமி. விரல் வீக்கம் குறைந்த பிறகு மோதிரத்தை கழட்டிவிட்டார்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு ஒரு பாதத்தில் ஆறு விரல்கள் இருந்தன. பாதத்தில் எறும்பு கடித்து ஓட்டை விழுந்து இருந்தது.* **"சுவாமி. என்ன இது"** *என்றால்* **"அது இருக்கட்டும். போடா"** *என்றார் ஸ்ரீ பூண்டி சுவாமி.*

*ஸ்ரீ பூண்டி மகான் அமர்ந்திருந்த மூன்று ஆலமரங்களும் இப்போது முழுவதும் காய்ந்துவிட்டது. அவ்வளவு பெரிய மரங்கள் எதற்கு அப்படி காய்ந்துவிட்டதோ தெரியாது. ஸ்ரீ சுவாமிகள் ஒரு சட்டைமேல் பல சட்டை அணிந்திருப்பார். அந்தச் சட்டைகளை எடுத்துத் தட்டினால் கைநிறைய பூச்சிகள் விழும். அவை சுவாமிகளை கடிக்குமா? இல்லையா? என்று அவருக்குத்தான் தெரியும்.*

*நான் எதையும் சுவாமிகளிடம் கேட்டதில்லை. ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து கொள்வேன். பூண்டி சுவாமி கூறியபடியே மாணிக்கம் நயினாரின் (என் மாமனார்) மூன்று பெண்களில் என் மனைவி மட்டும் மகிழ்ச்சியாக இருக்கிறார். மற்ற இருவர் துன்பப்படுகின்றனர். ஸ்ரீ பூண்டி சுவாமிகூறியபடி நடந்தது. முக்காலமும் உணர்ந்தவர் ஸ்ரீ பூண்டி மகான்.*



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த மேட்டுபாளையம் ஈஸ்வரன் கோவிலுக்கு பக்கத்திலுள்ள மடம்



ஸ்ரீ ஆற்றுசுவாமி அமர்ந்திருந்த போளூராங்கால்வாய் பாலம்

**நேர்காணல்: 64**
**28.4.2009, பூண்டி**

## C. நடேசன், வயது: 77, C. கங்கம்பட்டு.

*என் அக்காவுக்கு மாமியார் ஊர் காப்பலூர். நான் அடிக்கடி என் அக்காவுக்கு பலகாரம் எடுத்துச் செல்வேன். வழியில் பிராயம்பட்டு அருகில் ஒரு பாலம் மீது ஸ்ரீ சுவாமி அமர்ந்து இருப்பார். நான் பலகாரம் எடுத்துச் செல்லும்போது சுவாமிகள் அப்பலகாரத்திலிருந்து ஒன்று இரண்டு எடுத்துக் கொண்ட பிறகு நான் அங்கிருந்து கிளம்பிச் செல்வேன். சில சமயங்களில் சுவாமிகள் அங்கு இல்லையென்றாலும் சுவாமிகளுக்காக காத்திருப்பேன். சுவாமி வந்து கை வைத்து பலகாரம் எடுத்துக் கொண்ட பிறகு நான் பலகாரத்தை எடுத்துச் சென்று என் அக்காவுக்குத் தருவேன். அப்படி பதினோரு வருடங்கள் அந்த பாலத்தின் அருகில் ஸ்ரீ சுவாமிகளுக்கு பலகாரம் அளித்தேன்.*

*ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் திண்ணை மேல் அமர்ந்த பிறகு முதன்முறையாக நாயுடுமங்கலம் ஜெகதீசன் ஸ்ரீ சுவாமியின் சன்னதியில் கடலை எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றினார். சண்முகம் பூக்கள் கொய்து வந்து சுவாமிகளுக்கு மாலைகள் தொடுப்பார். ஆடைகளை சுத்தப்படுத்துவார். அப்படிச் செய்யும்போது சுவாமிகளின் மலத்தை சேர்த்து வைத்து எடுத்து வந்து எனக்குத் தருவார்.*

*நான் ஒரு நாள் சுவாமிகளின் சன்னதியில் இருந்த சமயத்தில் ஸ்ரீ சுவாமியின் காலில் உள்ள புண்ணிற்கு சிகிச்சை செய்வதற்காக மருத்துவர்கள் வந்தாலும் ஒருவரையும் சுவாமி தொடவிடவில்லை. என்னிடம் 50 காசு இருந்ததால் தேநீர் வாங்கி பூண்டி சுவாமிக்கு அளித்து விட்டு கிளம்பவேண்டும் என்று காத்திருந்தேன். அன்று ஏகாதசி. வந்த மருத்துவர்கள் எதை வாங்கித் தந்தாலும் சுவாமி வாங்கிக் கொள்ளவில்லை. அந்த சமயத்தில் வேலூரிலிருந்து*

தட்சிணாமூர்த்தி வந்தார். அவர் திரு.இராமலிங்க அடிகளாரின் பக்தராவார். நானும் இராமலிங்க அடிகளாரின் பக்தன். அந்த வகையில் எனக்கு அவரைத் தெரியும். நான் எதிரிலுள்ள கடைக்குச் சென்று தேநீர் வாங்கி வந்து பூண்டி சுவாமிக்கு அளித்தேன். சுவாமி அருந்தியபிறகு தட்சிணாமூர்த்தி தேநீர், சிகரெட் வாங்கி வந்தார். சுவாமி வாங்கிக் கொள்ளவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமி **"முள்ளு மேல சேலை போட்டா மெள்ள மெள்ளமா தான் எடுக்கணும். இது எங்கியோ போறது. யாரையாவது கொள்ளையடிச்சி தகராறு பண்ணி அதையெல்லாம் எடுத்துக்கிட்டு வந்து வாங்கிக்கோங்க! வாங்கிக்கோங்க என்றாங்க"** என்றார். தட்சிணாமூர்த்தி வந்து என்னை **"நடேசா! நீ தந்தாய் குடித்தார். நான் தந்தேன் தொடவில்லை"** என்று கேட்டார். **"என்னாப்பா. லாடம் அடிக்கும் சாயுபு வந்து அவர் கடனைத் தீர்த்துக்கிட்டு போறாரு. அவர் தந்தாலும் சுவாமி சாப்பிடுகிறார். அப்படியிருக்க நாம் பிறரை ஏமாற்றிய பணத்தில் வாங்கி வந்தால் சுவாமி எப்படி ஒத்துக் கொள்வார்"** என்று கூறினேன். இருவரும் உணவு உண்டபிறகு தட்சிணாமூர்த்தி மீண்டும் சுவாமியிடம் சென்று தேநீர், சிகரெட் தந்தாலும் வாங்கிக் கொள்ளவில்லை.

ஒரு நாள் மாலையில் பூண்டிக்கு வந்தேன். இங்கேயே இருந்து விட்டேன். ஸ்ரீ சுவாமி அருகே இருந்த ஒரு அன்பரிடம், **"என்னாப்பா! நீ உன் வேலை பாத்துக்கிட்டு இருக்கிற. நீ எங்க மத்தவங்களை கவனிக்கிற"** என்றார். அந்த அன்பர் பதிலேதும் கூறாமல் அங்கேயே நின்று கொண்டார். **''இங்கே எத்தனைபேர் பசியா இருக்கிறாங்க என்று பார்த்துக்கிட்டு வாடா என்று சொன்னால் உனக்கு இங்கு கவனமே இல்லை. உனக்கு சூதாட்டம் மேலயே கவனமெல்லாம் இருக்கு"** என்று கூறியவாறே கையை சீட்டு விளையாடுவது போல் காண்பித்தார். நான் எதிரில் உள்ள குடிசை வீட்டின் அருகில் படுத்துக் கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி மீண்டும் அந்த அன்பரிடம் **"என்னாப்பா. பசியோடு எத்தனை பேர் இருக்கிறாங்க. உனக்கு கவனம் இங்க இல்லை. நான் சொல்லி கேக்க போறியா. உனக்கு ஆட்டம் மேலயே கவனமெல்லாம் இருக்கு"** என்று கூறினார். நான் சென்று தண்ணீர் குடித்து விட்டு படுத்துக் கொண்டேன். கடைசியில் சுவாமி, **"போயி பாத்துட்டாவது அப்புறமா**

**போ"** என்றார். அந்த அன்பர் அனைவரையும் பார்த்தபடி வந்து என்னிடம் நின்று, **"என்ன கெங்கம்பட்டுக்காரரே சாப்பிட்டீங்களா?"** என்று கேட்டார். நான் காலையில் காப்பலூரில் சாப்பிட்டு வந்ததாகக் கூறினேன். **"சுவாமி சொல்கிறார். வா வீட்டுக்குப் போயி சாப்பிட்டு வரலாம்"** என்று அழைத்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிகூறிய பிறகு போகாவிட்டால் சரியில்லை என்று எழுந்து சென்றேன். அந்த வீட்டுப் பெண்மணி காலை எழுந்ததில் இருந்து இரவு படுக்கும் வரை வந்தவர்கள் அனைவருக்கும் உணவளித்துக் கொண்டே இருப்பார். அப்பெண்மணி தன் கஷ்டத்தை யாரிடம் கூறுவார். அந்த அன்பர் மனைவியிடம் உணவு வைக்குமாறு கூறினார். அப்பெண்மணியும் **"வர்றவங்க எல்லாம் நம்ம உயிர் எடுக்க வர்றாங்க"** என்று வெறுப்புடன் கூறினார். என் மனதில் சுருக்கென்றது. அந்த அன்பரே தண்ணீரில் இருந்த உணவை பிழிந்து எடுத்து ஒரு பிடி இலையில் வைத்தவுடனே என் மனம் கலக்கமடைந்து உணவு வேண்டாம் என்று சொல்ல முடியாமல் "இனி போதும். தண்ணீரில் உள்ள சோறு எனக்குப் பழக்கமில்லை" என்று கூறி இலையில் போட்ட உணவை சாப்பிட்டு மீண்டும் சுவாமியின் சன்னதிக்கு வந்தேன். அந்த அன்பரும் என்னோடு வந்தார். **"வாடா யப்பா! ஆஹா! ஔவையார் ஈறு இழுத்து பேன் எடுத்தாமாதிரி பாடுபட்டு ஈறுடன் பேன் வாங்கி அப்படியிருக்கிறது நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு இருக்கிற. உனக்கு கவனம் எல்லாம் அங்க. அங்க சம்பாதிச்சி போட்டுக்கிட்டு இருக்கிறேன் என்று இங்க சம்பாதிச்சி போட்டுக்கிட்டு இருக்கிறேன் என்று நினைச்சிக்கிட்டு இருக்கிறே. நீ போ. போதும்பா"** என்றார் சுவாமி. அங்கு வீட்டில் நடந்த நிகழ்ச்சியை இங்கு ஸ்ரீ பூண்டி மகான் கூறினார். அன்று இரவு அங்கேயே படுத்துவிட்டு காலையில் கிளம்பிச் சென்றேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருஉருவச்சிலையை தயார் செய்ய நான் ஏழெட்டு கிராமம் திரிந்து பித்தளை, வெண்கலம், செம்பு வாங்கி வந்து தந்தேன். என் நிலத்தில் விளைந்த காய்கறிகளை எடுத்து வந்து தருவேன். ஒரு முறை எங்கள் நிலத்தில் விளைந்த பூசணிக்காயை எடுத்து வந்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வீட்டில் தந்தேன். **"வேற காய் எடுத்து வரலாம் அல்லவா"** என்றார்கள். நான் பதில் எதுவும் கூறாமல்

சுவாமியின் சன்னதிக்கு வந்து சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகான் **“பூசணிக்காய் கொண்டு வந்தாய் என்று எதுக்கு கேட்டாய்''** என்று சுப்பிரமணிய சுவாமியை பார்த்துக் கேட்டார். ஸ்ரீ பூண்டி மகான் எங்கு எது நடந்தாலும் எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்கிறார் என்று அறிந்து கொண்டேன்.

திருவண்ணாமலையில் ஒரு கடையில் பேரீச்சம்பழம் வாங்கிக்கொண்டு வந்தேன். தெருவில் உயரமாக பந்தல் போட்டிருந்தார்கள். சுமார் 50 பேர் வரிசையில் இருந்தார்கள். நான் சென்று பின்னால் நின்றேன். ஸ்ரீ பூண்டி மகான் **“சுருட்டைமுடியோட இருக்கிறாரே பார். சுப்பிரமணியம் ... உனக்குச் சொல்லி கூப்பிறடறத்துக்குள்ளே எனக்கு கஷ்டமா இருக்கு. சுருட்டைமுடி இருக்கிறவரை கூட்டிக்கிட்டு வா. ஒன்றரை நாளா மடியில பேரீச்சம்பழம் வச்சிக்கிட்டு எறும்பு கூட ஏறாம ஜாக்கிரதையா பாத்துக்கிட்டு இருக்காரு. கூட்டிக்கிட்டு வா''** என்று கூறினார். அங்கேயே நின்றிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் வரிசையில் நின்றிருந்த அனைவரையும் பார்த்தவாறே வந்து கடைசியில் நின்றிருந்த என்னைப் பார்த்து **“கெங்கம்பட்டுக்காரரே வாங்க. சுவாமி கூப்பிடறாரு”** என்று கூறி உடன் அழைத்துச் சென்றார். நான் வியப்புடன் அனைவரையும் கடந்து முன்னால் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமிகளை வணங்கி நின்றேன். **''பேரீச்சம்பழம் எடுத்துக் கொடு. அதில் ஒண்ணைக்கூட அந்த மூட்டையில சேர்க்கக்கூடாது. இந்த மூட்டையில சேர்க்கணும்''** என்று கூறி ஸ்ரீ பூண்டி மகான் தன் உடம்பைக் காட்டி கூறி பேரீச்சம்பழத்தை எடுத்து அன்புடன் உண்டார். எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஒருமுறை என் அக்காவீட்டிலிருந்து கிளம்பி வந்து சூரியன் மறையும் நேரம் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். என் பின்னால் இருந்த இன்னொரு அன்பர் **“போய்யா! பொழுது போகுது”** என்று அவசரப்படுத்தினார். மீண்டும் அவர் **“சுவாமியிடம் திருநீறு, குங்குமம் என்று கேட்டு நேரம் கடத்தறாரே”** என்று அவசரப்பட்டுக் கொண்டிருந்தார். ஸ்ரீ பூண்டி மகான் எனக்கு திருநீறு வைத்தார்.

குங்குமம் வைக்கவில்லை. எல்லாவற்றையும் சுவாமிகளின் திருவிளையாடல் என்று எண்ணினேன். என் பின்னால் இருந்த அன்பர் என்னை முன்னால் தள்ளினார். ஸ்ரீ பூண்டி மகான் **“கொடுக்கிறவன் கொடுத்தாலும் தடைபண்றவங்களை நான் என்ன பண்றது”** என்றார். சரியாக அதே சமயத்தில் பேருந்து வந்து நின்றது. நான் பேருந்து ஏற வந்து நின்று கொண்டேன். நடேசன் என்ற துணிவியாபாரி ஊர் ஊராகச் சென்று துணி விற்று விட்டு மீதி ஆடைகளை ஒரு மூட்டைக்கட்டி பேருந்து மீது ஏற்றி எடுத்து வந்தார். அவர் குடித்த மயக்கத்தில் கீழே யார் இருக்கிறார்கள் என்று பார்க்காமல் மூட்டையை கீழே தள்ளினார். அந்த துணிமூட்டை என் கால் மேல் விழுந்து என் கால் உடைந்து விட்டது. இரத்தம் வழிகின்றது. இதைப் பார்த்த ஒரு பெண் **“கோவிந்தா! கோவிந்தா!”** என்று கத்தினார். ஸ்ரீ பூண்டி மகான் கீழே போட்டிருந்த மீனாட்சி காடாத் துணியை கிழித்து அந்த துணியால் கட்டுக் கட்டச் சொல்லி **“கொண்டு போயி ஜெயராமன் கிட்ட கட்டு கட்டுங்க. வேற எங்கும் கூட்டிக்கிட்டு போகாதீங்க”** என்று சுவாமி கூறினார். மூன்று மாதம் அங்கேயே இருந்தேன். என் தாயார் எனக்குத் துணையாக இருந்தார்.

நான் பிறந்த ஒன்றரை வருடத்திற்குள் என் தந்தை இறந்து விட்டதாக என் தாயார் கூறினார். எங்கள் வீட்டில் எண்ணெய் இல்லாமல் தீபம் ஏற்றாவிட்டால், கடைக்குச் சென்று எண்ணெய் வாங்கி வந்து விளக்கு ஏற்றுவார். கோயிலுக்காக வைத்திருந்த எண்ணெயிலிருந்து எடுத்து விளக்கு ஏற்றமாட்டார். என் தாயார் ஸ்ரீ பூண்டி மகானை தரிசனம் செய்து கொண்டு **“என் மகன் கால் உடைந்து விட்டது. அந்த ஜவுளிக்கடைக்காரரிடம் சிறிது பணம் வாங்கிக் கொடுங்கள்”** என்று வேண்டினார். ஸ்ரீ பூண்டி மகான் **“அட ... நீ கோயிலுக்கு சொத்து சேர்த்து வைச்சி போகிற கற்புடைய மங்கை. கிட்ட இருந்தாலும் உச்சிக்கரண்டி எண்ணெயை கூட எடுக்க முடியாத நீ, நடேசன் ஏதாவது கொடுப்பானா என்று அவன் சொத்துக்கு எதுக்கு ஆசைப்பட்டுக்கிட்டு இருக்கிறே? கால் உடைஞ்சி போச்சி பையனுக்குன்னு கேட்டுகிட்டு இருக்கிற. நீ கேக்கவே கேக்க வேண்டாம். உன் உத்தமித்தனம் உயர்ந்து வாழும். போயிட்டு வா”** என்று கூறி மீண்டும் **“கர்மா! சொத்து வேண்டாம். அவன்**

**எப்படி வந்தான். எப்படி சம்பாதிக்கிறான்னு உனக்கு தெரியும். இன்னும் சுகமா அவர் ஏதேதோ நடத்தணும்**" என்று கூறினார். என் தாயார் கிளம்பி வந்துவிட்டார்.

இராதாகிருஷ்ணன் அவர்கள் என்னை வில்வாரணி சாமியைப் பார்த்து வருமாறு கூறினார். நான் பூண்டி மகானை தரிசித்துக் கொண்டு நின்றேன். "**நான் சொல்றேன்பா. நாலு கடையில நாலு சாப்பிட்டு குடிச்சிட்டு அவர் பொருளை அவரே வாங்கி சாப்பிட்டு மலைக்கு போயிட்டாரு**" என்று கூறினார் பூண்டி மகான். நான் ரொம்ப நாட்களாக வில்வாரணி சாமியை தரிசிக்கவில்லை. மீண்டும் ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகான் வில்வாரணி சாமியைப் பற்றி "**பர்வதமலையில சஞ்சீவினி மலையில இருக்கிறாரு. கோமணம் வைக்காம பசுவை மேய்ச்சிக்கிட்டு பசுவை மேய்ச்சோமா! கோலைப் போட்டாமான்னு அப்படி இருக்கிறாரு**" என்று கூறினார்.

நான் என் கிராமத்தில் அருட்திரு இராமலிங்க அடிகளாரின் ஆலயத்தை சிறிய அளவில் கட்டிக் கொண்டு ஒவ்வொரு வருடமும் திருவிழா போல் நடத்துவேன். இரண்டு வருடங்கள் திருவிழாவிற்கு அழைப்பிதழ்கள் எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி மகானுக்கு அளித்தேன். ஸ்ரீ பூண்டி மகான், "**அதுல வர்றவங்க வருவாங்க. நீ இரும்பை ஊறவச்சாலும் கல் தேயும் என்றபடி தர்மத்தை கடைபிடிக்கணுமே தவிர வர்றவனை பத்தி யோசிக்கவே யோசிக்கக்கூடாது**" என்று கூறினார். மற்றொரு முறை "**கலிகாலம், ராட்சச தண்டு வரும். மனுஷங்க வரமாட்டாங்க. ராட்சச ரூபத்தில் வருவாங்க. அப்படி வந்தாலும் நம்மதான் புத்திசாலித்தனமா நடந்துக்கணும்**" என்று கூறினார் பூண்டி மகான். நான் கட்டிக் கொண்டிருந்த ஆலயத்தை பற்றி ஒரு முறை ஸ்ரீ பூண்டி மகான் "**கம்பத்துக்கு கம்பம் கட்டி வைப்பே அறுபத்துமூணு பேரை. எங்க போல் இருக்கிறவங்களையெல்லாம்... சித்தர்கள் வருவாங்க. அவங்க வருவாங்கன்னு**" என்று கூறி சிரித்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் மகிமைகளை, அந்த மகானின் லீலைகளை என்னவென்று சொல்லுவது.

நான் என் கிராமத்தில் கட்டுகின்ற திரு. இராமலிங்க அடிகளாரின் கோவில் பல வருடங்களாக முடிவடையவில்லை.. என்

சக்திக்கு முடிந்தவரை கட்டிக் கொண்டு இருக்கிறேன். நேற்று இரவு பூண்டிக்கு வந்து இங்கு படுத்துக் கொண்டு "**எந்தத் தடையும் இல்லாமல் கோவில் பணி விரைவில் முடியவேண்டும்**" என்று ஸ்ரீ பூண்டி மகானை வேண்டிக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகான் "**ஆகாய மார்க்கத்தில் போய்கிட்டு இருக்கிறேன். இந்த கலிகாலத்தில் இங்க பூச்சி, பாம்பு அதிகமா நடமாடிக்கிட்டு இருக்கு**" என்று கூறினார். ஸ்ரீ பூண்டி மகான் நான் எங்கு இருந்தாலும், நான் என்ன செய்து கொண்டிருந்தாலும் என்னை ஒவ்வொரு நொடியும் வழி நடத்துகின்ற கலியுக தெய்வம்.

**நேர்காணல்: 65**
**28.4.2009, பூண்டி**

ஸ்ரீமதி **வேலம்மா**, வயது: 60, பூண்டி.

*ஸ்ரீ பூண்டி மகான் திண்ணை மேல் அமர்ந்த பிறகு நான் தரிசனம் செய்து கொண்டேன். ஒரு நாள் வீட்டில் எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு குழந்தைகளுடன் சேர்ந்து சினிமாவுக்கு கிளம்பி 'வீட்டில் மண்ணெண்ணெய், உப்பு இல்லாவிட்டாலும் குழந்தைகளுடன் சேர்ந்து சினிமாவுக்கு புறப்பட்டோமே' என்று நினைத்துக் கொண்டு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகான் "***வீட்ல மண்ணெண்ணெய், உப்பு இல்லை. போ வீட்டுக்கு***'' என்று கூறினார். நான் மனதில் நினைத்துக் கொண்டு வந்ததை ஸ்ரீ பூண்டி மகான் சொன்னதால் நான் திரும்பி வீட்டிற்குச் சென்றேன்.*

*ஒரு நாள் என் காதிலிருந்த ஜிமிக்கி காணவில்லை. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு "***சுவாமி! என் ஜிமிக்கி எங்கோ விழுந்து விட்டது***" என்று கூறினேன். "***போயி துணி மாத்தற இடத்தில போயி பாரு***" என்று கூறினார் ஸ்ரீ பூண்டி மகான். நானும் சென்று பார்த்தேன். சுவாமிகள் கூறியவாறே கிடைத்தது.*

*ஸ்ரீ பூண்டி மகான் ஒவ்வொருமுறை திருநீறு, குங்குமத்தை நெற்றியில் வைப்பார். ஒவ்வொருமுறை என் கையில் தருவார். நாங்கள் புழுதூரில் குடும்பம் இருந்தோம். நான் ஸ்ரீ பூண்டி மகானைதரிசனம் செய்து கொண்டு, '***சுவாமி! நாங்கள் பூண்டிக்குக் குடித்தனம் வரப் போகிறோம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?***' என்று கேட்டேன். நல்லா இருப்பீங்க' என்று ஆசிகள் வழங்கினார். நாங்கள் பூண்டியில் குடித்தனம் அமைத்தோம்.*

*என் கணவர் TMR பேருந்தில் ஓட்டுனராக பணியாற்றிக் கொண்டிருந்தார். என் பிள்ளைகள் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தோம். எந்த வேலை செய்யவேண்டும் என்றாலும்*

ஸ்ரீ பூண்டி சுவாமியின் ஆசி பெற்றுச் செல்வேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஅருளால் வீடு கட்டிக் கொண்டோம். நிலம் வாங்கினோம். பம்பு செட் கட்டடம் கட்டினோம். எல்லாம் எனக்கு நல்லதே நடந்தது. ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதி அடைந்த பிறகு கூட நான் ஸ்ரீ பூண்டி மகானின் சமாதிக் கோவிலில் வந்து நின்று கொண்டால் பூண்டி மகானிடம் பேசுவது போன்றே அனுபவம் ஏற்படுகிறது. நான் மனத்தில் வேண்டிக் கொண்டு சென்றால் எந்தத் தடையும் இல்லாமல் வேலைகள் நடந்து விடும்.

**நேர்காணல்: 66**
**30.4.2009, பூண்டி**

**ஜெயராமன்**, வயது: 70, பூண்டி.

*ஸ்ரீ சுவாமிகள் கலசப்பாக்கத்தில் நடமாடிக் கொண்டு இருந்த காலத்தில் இருந்து தெரியும். ஆனால் சுவாமிகள் பூண்டியில் திண்ணைமேல் அமர்ந்த பிறகு தரிசனம் செய்து கொண்டேன். யாராவது அன்பர்கள் ஸ்ரீ சுவாமிகளை ஏதாவது கேட்டுக்கொண்டு இருந்தால் "***சுவாமியை கஷ்டப்படுத்தாதீங்க. தரிசனம் செய்து கொண்டால் போதும். நம் மனதில் இருப்பது எல்லாம் சுவாமிக்குத் தெரியும்***" என்று கூறுவேன். ஒரு நாள் என் தாயார் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்ட பிறகு ஒரு சாக்லேட் தந்து "***இது போதுமா சுவாமி?***" என்று கேட்டார். "***மலையளவு சாமிக்கு கடுகளவு கற்பூரம்***" என்று சுவாமி கூறினார். தினந்தோறும் அன்பர்கள் சுவாமிகளுக்கு பாத பூஜைகள் செய்வார்கள். பூஜை முடிந்த பிறகு பஞ்சாமிர்தம் அளித்தால் வாங்கி வருவேன்.*

*அந்த நாட்களில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு கிராமத்தில் உள்ள மக்களை ஒப்புவித்து கூட்டி வருமாறு வாத்தியார்களை வற்புறுத்தினார்கள். அந்த சமயத்தில் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு "***சுவாமி! பாடம் நடத்த விடமாட்டேன் என்கிறார்கள். இந்த வேலை எல்லாம் எப்படிச்செய்வது***" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான் "***சரி! சரி! நீ வில்வாரணிப் பக்கம் போ. கேஸ் இருக்கு***" என்று கூறினார். நாங்கள் நான்கு ஆசிரியர்கள் சேர்ந்து வில்வாரணி சென்றோம். நால்வருக்கும் நான்கு கேஸ் கிடைத்தது. துன்பத்திலிருந்து பூண்டி சுவாமி எங்களைக் காப்பாற்றினார்.*

*நான் ஒருவரிடம் 300 ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தேன். சிறிது நாட்களுக்கு பிறகு பணத்தை திருப்பி அளித்து விட்டேன். கடன் பத்திரத்தைத் தரவில்லை. பிறகு சிறிது நாட்கள் கழித்து கடன் அளித்தவர் பணத்தை*

தரவில்லையென்று கூறினார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து **"சுவாமி! நான் வாங்கிய பணத்தை திருப்பியளித்து விட்டேன். அவர் பணம் தரவில்லை என்கிறார். போலீஸிடம் புகார் அளிக்க நினைக்கிறேன். உங்களிடம் சொன்ன பிறகு போகலாம் என்று வந்தேன்"** என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் **"வேண்டாம். ப்ரோ நோட்டு தருவான் போ!"** என்று கூறினார். மீண்டும் கடனளித்தவரிடம் சென்றவுடன் கடன் பத்திரத்தை அளித்து விட்டார்.

என் மனைவியின் தங்கை வீட்டில் அவர் கணவர் குடித்துவிட்டு வந்து எப்போதும் சண்டை போட்டுக் கொண்டு இருப்பார். அவர் குடும்ப வாழ்க்கை வேண்டாம் என்று பிறந்த வீட்டிற்கு வந்து விட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு அவர் தன் கஷ்டங்களைக் கூறினார். **"இனிமேல் நல்லா இருக்கும் போ!"** என்று சுவாமிகள் ஆசி வழங்கினார். அவரும் குடித்தனம் நடத்தச் சென்றார். அவர் கணவர் மனம் மாறி மிக மகிழ்ச்சியாக அவருடன் வாழ்க்கை நடத்துகிறார்.

ஸ்ரீ பூண்டி மகானின் பஞ்சலோக உருவச்சிலையை செய்து லாரியில் எடுத்து வந்து கொண்டிருந்தனர். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு அன்பர்கள் விடை தருமாறு கேட்டால் **"நீங்கள் போகாதீங்க. பஞ்சலோக விக்கிரகம் வருகிறது. கிராமத் தெருவில் ஊர்வலம் எடுத்துச் சென்ற பிறகு புறப்படுங்கள்"** என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமிகூறியபடியே விக்கிரகத்தை எடுத்து வந்த பிறகு ஊர்வலமாக எடுத்துச் சென்று வந்து பூஜைகள் செய்தார்கள்.

ஒவ்வொரு வருடமும் தைப்பூசத்தன்று விசேஷ பூஜைகள் செய்வார்கள். ஒரு வருடம் நந்தனார் நாடகத்தை கமிட்டியார் ஏற்பாடு செய்தார்கள். அந்த சமயத்தில் பனியும், குளிரும் அதிகமாக இருந்தது. வந்த அன்பர்களுக்கு பந்தல் போட்டுத் தருவது கடினமான வேலை என்று ஞான முதலியார் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து விவரத்தை கூறினார். அந்த ஒரு நாள் பனியும், குளிரும் இல்லாமல் செய்தார் ஸ்ரீ பூண்டி மகான்.

இராமானுஜம் என்ற அன்பர் படிக்கும் சமயத்தில் மனநிலை சரியில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தபோது உடல் மீது துணியைக்

*கட்டிவிடுவார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் அவருக்கு மனநினை சரியாகி ஆசிரியர் பயிற்சிக்கு சென்று வந்து ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமிஅருளால் சுகமாக இருக்கிறார்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்த பிறகு என் மகளுக்கு கூட்டுறவு வங்கியில் எழுத்தர் வேலைக்கு நேர்முகத்தேர்வு அழைப்பு வந்தது. நேர்முகத்தேர்வுக்கு புறப்படுவதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியின் ஆலயத்திற்குச் சென்று வலம் செய்து மனதில் பிரார்த்தனை செய்து சென்றோம். என் மகள் நேர்முகத்தேர்வில் சில கேள்விகளுக்கு சரியான பதில் அளித்தாலும் பிற சில கேள்விகளுக்கு சரியான பதில் சொல்லவில்லை. என் மகள் நம்பிக்கையிழந்து வேலை கிடைக்காது என்று தீர்மானித்துக் கொண்டாள். நான் மட்டும் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் என் மனபாரத்தை இறக்கி விட்டு தவறாமல் உனக்கு இரண்டு ஆர்டர் (பணி நியமன ஆணை) வரும் என்று என் மகளிடம் கூறினேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் என் மகளுக்கு இரண்டு ஆர்டர் நகல் வந்தது. வேலையும் கிடைத்தது.*

*ஸ்ரீ பூண்டி மகான் பரிபூரண ஞானி. நான் எந்த வேலைக்குச் செல்ல வேண்டுமென்றாலும் சுவாமிகளின் கோவிலுக்கு வந்து அவரை வலம் வந்து வணங்கிவிட்டு மனதில் வேண்டிக் கொண்டுச் சென்றால் பலன் தவறாமல் கிடைக்கும். இது என் நம்பிக்கை.*

**நேர்காணல்: 67**
**8.5.2009, பூண்டி**

## ஆறுமுகம், வயது: 59, காங்கனூர்.

*எங்கள் பூர்வீகம் பூண்டி கிராமம். எங்கள் பெரியவர்கள் காங்கனூரில் வீடு, நிலம் வாங்கியதால் அந்த கிராமத்தில் குடித்தனம் வைத்தோம். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஸ்ரீ சுவாமிகளைத் தெரியும். என் சிறுவயதில் ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் அற்புத லீலைகளை நேரிடையாக காணும் பாக்கியமும் கேட்கும் வரமும் கிடைத்தது. ஸ்ரீ சுவாமிகள் எங்கள் வீட்டுப் பெரியவர்களுடன் பேசும் சமயத்தில் தத்துவங்களையும், இரகசியங்களையும் விவரித்து, தெளிவாகப் பேசுவார். நான் சிறு பையனாக இருந்ததால் அப்போது புரிந்து கொள்கின்ற ஆற்றல் இல்லை. பெரியவனாக ஆனதும் என் சொந்த அனுபவங்களால் தெரிந்து கொண்டேன்.*

*நான் ஐந்தாம் வகுப்பு வரை பூண்டி பள்ளியில் படித்தேன். நான் பள்ளியில் படிக்கும் சமயத்தில் அந்தப் பள்ளிக்கு அருகிலுள்ள தர்மபுரியம்மா வீட்டுத் திண்ணை மீது ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்திருப்பார். இடைவேளை சமயத்திலும், மதியம் உணவு வேளையின் போதும் சிறுவர்கள் சுவாமியிடம் வந்து* **“சுவாமி! கதை சொல்லுங்க''** *என்று கேட்ட போது பஞ்சதந்திரக் கதைகள், தெனாலிராமன் கதைகள் மிகவும் நன்றாகக் கூறுவார்.*

*ஸ்ரீ சுவாமிகள் யாரிடமும் கேட்டு சாப்பிடமாட்டார். சிறுவர்கள் அனைவரும் சேர்ந்து, காலணா, அரையணா, அணா என்று எல்லாரிடமும் உள்ள பணத்தைக் கொண்டு கடலை வாங்கி வந்து,* **“சுவாமி! கடலை சாப்பிட்டு விட்டு கதை சொல்வீர்களா? கதை சொல்லிவிட்டு கடலை சாப்பிடுவீர்களா?”** *என்று கேட்டால்* **“உங்களுக்கு எப்படி வேணுமோ அப்படி சொல்றேன். கதை சொன்ன பிறகு சாப்பிடச் சொன்னாலும் சாப்பிடறேன். இல்லை சாப்பிட்டுவிட்டு கதை சொல்லணும் என்றாலும் சொல்கிறேன்''** *என்று கூறுவார் சுவாமி. சிறுவர்கள் சுவாமிக்கு*

*கடலையை ஊட்டுவதற்கு பயப்படுவார்கள். நான் சுவாமிகளுக்கு ஊட்டுவேன். ஸ்ரீ சுவாமியிடம் இருந்த மூட்டையில் திருவாசகம், தேவாரம், திருவருட்பா, பெரியபுராணம், கந்தபுராணம் மேலும் பல புத்தகங்கள் இருந்தன.*

*என் தாத்தா ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார். அவர் பெயர் T. சண்முகபிள்ளை. தற்போது ஸ்ரீ பூண்டி சுவாமி சமாதிக் கோவிலுக்கு வடக்குத் தெருவுக்கு பக்கத்திலுள்ள வீடு எங்கள் பெரியவர்களுடையது. அங்கு 36 தூலம் கொண்ட வீடு பெரிய திண்ணைகளோடு இருந்தன. ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் அந்த பக்கம் வந்தால் என் தாத்தா* “**சுவாமி வாங்க. உட்காருங்கள்**” *என்று அழைத்து அமர வைப்பார். ஒரு சமயம் என் தாத்தா பின்வரும் பாட்டைக் கூறி*

**திருவாசகம் - திருச்சதகம்**

*(1) “மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து*
*உன் விரையார் கழற்கென்*
*கைதான் தலைவைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பி உள்ளம்*
*பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி*
*சயசய போற்றி யென்றுங்*
*கைதான் நெகிழ விடேன்*
*உடையாய் என்னைக் கண்டுகொள்ளே”*

**விளக்கம்:** *என்னை அடிமையாக உடையவனே! உனது பெருங்கருணைத் திறத்தை நினைந்து உடம்பு தானே மயிர்க் கூச்செறிந்து நடுநடுங்க, உனது மணம்பொருந்திய திருவடிகளை வணங்கும்பொருட்டு எனது கைகள் தாமே தலைமேல் கூப்பப்பெற்றுக் கண்களிலிருந்து ஆனந்த வெள்ளம் நிரம்ப, மனமானது ஆர்வத்தால் வெப்பம் உடையதாக, நிலையற்றவற்றின் பற்றுத் தானே நீங்கி ஒழிய உனக்கு வணக்கம். வெற்றி வெற்றி என வணங்கும் ஒழுக்கத்தை நழுவவிடாது மேற்கொண்டு நிற்பேன். அடியேனைக் கண்ணால் பார்த்து ஏற்று அருள் செய்க.*

'இந்தப் பாடல் உங்களுக்காகவே எழுதப்பட்டது போல் உள்ளது' என்று கூறினார். ஸ்ரீ சுவாமிகள் '**அப்படி என்கிறீர்களா**' என்று கூறி சுவாமியின் மூட்டையிலுள்ள புத்தகத்தை எடுத்து அப்பாடலை காண்பித்து "**இதுவா நீங்கள் சொன்னது. சரியா இருக்கா பாருங்க**" என்று கேட்டார். 'ஆமாம் சுவாமி' என்று என் தாத்தாவும் கூறினார். அதன் பிறகு அப்புத்தகத்தை மூட்டையில் வைத்து கட்டிக் கொண்டார்.

வரதன் என்று ஒரு அன்பர் பூண்டியிலிருந்து சென்று செங்கம் என்ற ஊரில் குடித்தனம் இருந்தார். அவர் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வந்து ஒரு கத்தி, ஒரு கிண்ணத்தை மடியில் வைத்துக் கொண்டு சூரியன் உதயமாவதற்கு முன்பு ஸ்ரீ சுவாமிகள் முன்பு கையை கட்டிக்கொண்டு பணிவோடு நின்று "**சுவாமி! தாடியை மழித்துக் கொள்ளுங்கள்**" என்று வேண்டுவார். "**ஆஹாங்**" என்று கூறுவார் சுவாமி. மீண்டும் சிறிது நேரம் கழித்து வந்து வேண்டுவார். அப்படி மணிக்கு ஒரு முறை வந்து வேண்டுவார். ஒரு வாரமானாலும் இங்கேயே இருப்பார். யாராவது அன்பர்கள் '**சுவாமி! வரதன் வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. பிள்ளைக் குட்டிகாரன். இங்கேயே இருக்கிறான். நீங்கள் கருணை காட்டமாட்டீர்களா?**' என்று வேண்டினாலும் சுவாமிகள் சம்மதிக்கமாட்டார். கடைசியில் "**ஆம். ஏதோ உனக்குச் சொல்ல ஆளுங்க இருக்கிறாங்க. நீயும் வந்திட்டே. சரி. உன் இஷ்டம்**" என்று சுவாமி கூறுவார். தலையை மொட்டையடித்து, தாடியை மழித்து கை, கால்களில் உள்ள விரல் நகங்களை வெட்டி விடுவார். ஸ்ரீ சுவாமிகள் அந்த முடியை எடுத்துச் சென்று என்ன செய்வாரோ எதற்கு எடுத்துச் செல்வாரோ என்று யாருக்கும் தெரியாது.

ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்தபோது பல் தேய்ப்பதையோ, குளித்ததையோ யாரும் பார்த்தது இல்லை. ஒரு அன்பர் வேலூரிலிருந்து வந்து முழங்கால் வரை உள்ள சட்டையை (கபனி) தைத்து எடுத்து வந்து சுவாமிக்கு அணிவித்தார். மற்றொரு அன்பர் ஆறு மாதம் கழித்து வேறொரு சட்டைத் தைத்து வந்து அதன் மேலே அணிவித்தார். ஸ்ரீ சுவாமிகள் ஒரு சட்டை மேல் மற்றொரு சட்டை போட்டுக் கொள்வார்.

என் தந்தை ஒரு தீபாவளியன்று "**சுவாமி! இன்று நீங்கள் எங்கள்**

**வீட்டிற்கு வரவேண்டும்**" என்று வேண்டினார். ஸ்ரீ சுவாமிகள் காலை பத்து மணிக்கு வந்து திண்ணை மீது அமர்ந்து கொண்டார். ஸ்ரீ சுவாமிக்கு தோசைகள் வைத்து மூன்று, நான்கு வகை சட்னிகளை பரிமாறினார். சுவாமியும் விருப்பமாக சாப்பிட்டார். அடுத்த நாளிலிருந்து ஸ்ரீ சுவாமிகளுக்கு ஆரோக்கியம் சரியில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது அன்பர்கள் கேட்டதற்கு "**தேவசேனாபதி கூட்டிக்கிட்டு போயி என் உடல்நிலையை கெடுத்திட்டாரு**" என்று கூறினார். மீண்டும் சுவாமிகளுக்கு ஆரோக்கியம் சரியானது. ஸ்ரீ சுவாமிபசிக்கு உணவு யாரையும் கேட்கமாட்டார். சில சமயங்களில் ஸ்ரீ சுவாமி நாகதாளிப் பழங்களை சாப்பிடும் போது என் தாத்தா பார்த்ததாகவும் சித்தர்கள் அப்படி சாப்பிடுவார்கள் என்றும் கூறினார்.

ஸ்ரீ சுவாமிகள் போளூரான் கால்வாய் பாலம் மீது அமர்ந்து இருப்பார். சுற்றுப்புற சீதோஷ்ண நிலையைப் பொருட்படுத்த மாட்டார். ஒவ்வொரு சமயம் ஒரு கையை வேகமாக ஆட்டிக் கொண்டிருப்பார். அப்படி அசைத்துக் கொண்டிருக்கும் போது சிங்கம் கர்ஜிப்பது போல் செய்வார். அப்படி பல நாட்கள் தொடர்ந்து விடாமல் ஆட்டிக் கொண்டேயிருப்பார். மீண்டும் எப்போது நிறுத்துவாரோ தெரியாது. அப்படிப்பட்ட சமயங்களில் ஸ்ரீ சுவாமிகளின் இரண்டு கண்கள் சிவந்து காணப்படும். கண்களில் பீளை கட்டி இருக்கும், அந்த சமயங்களில் யாரும் அருகே செல்ல மாட்டார்கள்.

காங்கனூரில் என் வீட்டிற்கு பக்கத்தில் என் பெரியம்மா வீடு இருந்தது. அவர் பெயர் இராமஜெயம்மா. அவருக்கு ஸ்ரீ பூண்டி சுவாமிமீது அபாரமான பக்தியிருந்தது. ஒரு முறை என்னை மாட்டு வண்டி கட்டி ஓட்டி வரச் சொன்னார். வண்டியில் என் பெரியம்மா, அவர் தங்கை மகள், என் அக்காவும் பூண்டிக்கு வந்தார்கள். என் பெரியம்மா பலவிதமான உணவு வகைகளை செய்து எடுத்து வந்தார்கள். சுவாமிகளை தரிசித்துக் கொண்டு "**சுவாமி! சித்ரான்னம் செய்து எடுத்து வந்திருக்கிறேன். நீங்கள் சாப்பிட வேண்டும்**'' என்று வேண்டினார். "**அப்படியே சாப்பிடறேன்**" என்றார் சுவாமி. "**நீங்க எனக்காக**

**செய்த தயிர் சாதத்தை விட்டுட்டு வந்திட்டீங்களே"** என்றார். அப்போது என் பெரியம்மா எல்லாவற்றையும் தேடிப் பார்த்து விட்டு, தயிர் சாதம் கலந்து வீட்டில் வைத்து மறந்துவிட்டு வந்தேன் என்றவர், உடனே உணவை பக்கத்தில் வைத்து விட்டு இரண்டு கைகளாலும் கன்னத்தில் போட்டுக்கொண்டு **'சுவாமி! நான் தவறு செய்து விட்டேன்'** என்று வேண்டினார். ஸ்ரீ பூண்டி மகான் **"பரவாயில்லை. இன்னொரு முறை கொண்டு வந்தால் சாப்பிட்டால் சரியாப் போச்சு. அதுக்காக வருத்தப்பட தேவையில்லை"** என்றார். மீண்டும் என் பெரியம்மா சில கவளம் கையில் வைத்தார். சுவாமிகளின் கையில் மீந்த உணவை சுப்பிரமணிய சுவாமிக்கு வைத்தார்.

எல்லா வசதிகளும் படைத்த குடும்பத்திலிருந்து ஒரு பையன் பெண்பார்க்க வந்து என் அக்காவையும், என் பெரியம்மாவின் தங்கை மகளையும் பார்த்துச் சென்றார். அந்தப் பையன் யாரைத் திருமணம் செய்வார் என்ற ஆவலுடன் ஸ்ரீ பூண்டி சுவாமியின் கையில் ஒரு ரோஜாப்பூவை வைத்து **"சுவாமி! ஒரு பையன் இரு பெண்களையும் பார்த்துச் சென்றான். அதில் எந்தப் பெண்ணை திருமணம் செய்வாரோ அப்பெண் கையில் ரோஜாப்பூவை கொடுங்கள்"** என்று என் பெரியம்மா வேண்டினார். ஸ்ரீ பூண்டி மகான் அந்த பூவை கையில் வைத்து பார்த்துக்கொண்டே **"ஆங்... ஆஹாங்... ஆங்... ஆஹாங்.."** மீண்டும் சிறிது நேரம் மௌனமாக இருந்து கொண்டு **"ஆங்... ஆஹாங்... ஆஹாங்... ஆங்..."** என்று பலமுறைக் கூறினார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நான் **"சுவாமி! எதற்கு இப்படி செய்ய வேண்டும். யாருக்கோ ஒருவருக்குத் தந்து அனுப்பலாம்"** என்று மனதில் நினைத்தேன். சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஸ்ரீ சுவாமிகள் என் பெரியம்மாவின் தங்கை மகள் கையில் அந்தப் பூவை அளித்தார். என் பெரியம்மா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாங்கள் அனைவரும் சுவாமியை வணங்கி வீட்டிற்குத் திரும்பி வந்தோம்.

அந்தப் பையனின் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் வேறு எத்தனையோ பெண்களைப் பார்த்துவிட்டு இரண்டு வருடம் கழித்துத் திரும்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமி பூ அளித்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

இது இதுவரை யாருக்கும் சொல்லாத ரகசியம். என் சிறு வயதில் நான் என் கண்களால் பார்த்த உண்மை. ஸ்ரீ சுவாமிகளுக்கு ஊர், பெயர், பந்தபாசங்களும் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் ஆரம்ப பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் பத்தரை மணியளவில் இடைவேளை மணியடிப்பார்கள். நான் அந்தச் சமயத்தில் வீட்டிற்குச் சென்று தண்ணீர் அருந்திவிட்டு திரும்பி வரும்போது ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் இரு மனிதர்கள் நின்று கொண்டு "**நீ வா போகலாம்... கிளம்பு போகலாம்.. கிளம்பு போகலாம்**" என்று சுவாமியை வற்புறுத்துகின்றனர். திண்ணைக்கு எதிரில் முனுசாமி நாயுடு தேநீர் கடை வைத்திருந்தார். அவர் தேநீர் கலந்து கொண்டே அந்த இரு மனிதர்களையும் கவனித்துக் கொண்டேயிருந்தார். அவர்கள் எந்த உறவில் அப்படி வற்புறுத்துகிறார்களோ தெரியவில்லை. முனுசாமி நாயுடு முரட்டு சுபாவம் படைத்தவர். முன்கோபி. அவர் நேராகச் சென்று அவ்விருவரிடமும் "**என்னாப்பா! நல்லவிதமா போறீங்களா. இல்லை உதை வாங்கப் போறீங்களா. சுவாமி வரமாட்டேன் என்கிறார் அல்லவா**" என்றார். வந்தவர்கள் ஸ்ரீ பூண்டி சுவாமியைப் புறப்படுமாறு அழைத்தனர். "**ஊகூம்... ஊகூம்... ஊகூம்... ஊகூம்.**" என்கிறார் சுவாமி. பதில் பேசவில்லை. முனுசாமி நாயுடு "**எதுக்குப்பா சுவாமிகிட்ட தகராறு செய்றீங்க. உங்க வேலையைப் பார்த்துக்கிட்டு போங்க**" என்றார். அந்த சமயத்தில் மேலும் சிலர் கும்பல் கூடினார்கள். முனுசாமி நாயுடு வந்தவர்களிடம் "**அவங்க இரண்டு பேரும் சுவாமிக்கு அத்தை மகன்கள் என்று தகராறு செய்கிறார்கள். சுவாமி இரண்டு நாட்களாக வரமாட்டேன் என்று கூறினாலும் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வரச்சொல்கிறார்கள். அவர்களை நான்கு உதை உதைத்து விரட்ட நினைக்கிறேன்**" என்றார். அதன் பிறகு அந்த இருவரும் சென்று விட்டனர். இந்த நிகழ்ச்சியை நான் நேரிடையாகப் பார்த்தேன். முனுசாமி நாயுடுவும் கூறினார். ஆனால் வந்த இருவர் யார்? எங்கிருந்து வந்தார்கள்? என்ற விவரங்களைக் கேட்கவில்லை.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் அன்பர்கள் வந்து பக்கத்தில் உள்ள இடம் கோயில் கட்ட வேண்டும் என்று கேட்டார்கள். அந்த இடம் ஆலயம் கட்ட சரியான இடம் என்று அனைவரும் தீர்மானம் செய்ததாகக்

கூறினார்கள். என் தந்தை உடனே வந்து ஸ்ரீ சுவாமியை தரிசித்துக் கொண்டு "**சுவாமி! என்ன சொல்கிறீர்கள்**" என்று கேட்டார். அந்த சமயத்தில் நானும் பக்கத்திலேயே இருந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் "**அதுக்கென்ன இருக்கு. நாலு பேர் கேக்கிறாங்க. கொடுத்திட்டுப் போங்க**" என்று கூறினார்.

அந்த இடம் என் தாத்தா சொத்து. அந்த இடம் சம்பந்தமான பத்திரங்களில் முதலில் என் தாத்தா சண்முகப் பிள்ளை அதன் பிறகு என் தந்தை தேவ சேனாபதிப் பிள்ளை சாட்சிகளான நான், என் அண்ணன் பாலசுப்பிரமணியம், மற்றும் என் தம்பி சுவாமிநாதன் அனைவரும் சேர்ந்து கையெழுத்துப் போட்டோம். அந்த இடத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் சமாதிக் கோயில் கட்டினார்கள்.

ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு அமர்ந்திருந்த இடத்தில் இருந்தே எல்லாவற்றையும் அறியும் சக்தி இருந்தது. ஸ்ரீ சுவாமிகள் சொன்னது நடந்தது. ஒரு நாள் என் தந்தையோடு சேர்ந்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்த போது என் தந்தை "**சுவாமி! என் பெயர் ஞாபகம் இருக்கா**" என்று கேட்டார். "**ஆங். என்ன நீங்கள் தேவசேனாபதி. எனக்குத் தெரியாதா**" என்றார் ஸ்ரீ சுவாமி. என் தந்தையை சுவாமி இன்றும் தன் பெயரை நினைவில் வைத்திருந்தார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தார்.

**நேர்காணல்: 68**
**8.5.2009, பூண்டி**

**ஸ்ரீமதி கம்பீரம், வயது: 68, பழங்கோவில்.**

*என் பூர்வீகம் பழங்கோவில். என் மாமியார் ஊர் புதுப்பாளையம். ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக்கொண்டிருந்த காலத்திலிருந்து தெரியும். நாங்கள் எங்கள் வீட்டின் அருகில் சிற்றுண்டிக் கடை வைத்திருந்தோம். வேண்டிய மளிகைச் சாமான்களை வாங்குவதற்கு கலசப்பாக்கம் சென்று வரும் சமயங்களில் சுவாமிகள் எதிரில் தென்படும்போது வணங்குவோம்.*

*எனக்கு சுமார் பன்னிரெண்டு பதிமூன்று வயதாக இருக்கும்போது ஒரு நாள் ஸ்ரீ சுவாமிகள் பழங்கோவில் வந்தார். நான் சுவாமிகளை பார்த்து* "**வீட்டுக்குப் போகலாம் வாங்க சுவாமி!**" *என்று அழைத்தேன். சுவாமிகளும் என் வீட்டிற்கு வந்தார். மணைபோட்டு அமர வைத்து இலை போட்டு உணவு படைத்து கீரைக்குழம்பு ஊற்றி நெய் சூடு பண்ணிக் கொண்டு வருவதற்கு அடுப்பின் அருகே சென்றேன். அந்த சமயத்தில் ஒருவர்* "**ஆண்பிள்ளை இல்லாத வீட்டில் சுவாமி சாப்பிடமாட்டார்**" *என்றார். நான் நெய் சூடுபண்ணி கொண்டு வருவதற்குள் சுவாமிகள் இலை முன் இருந்து எழுந்தார்.* "**என்ன சுவாமி?**" *என்று கேட்டேன்.* "**நான் இப்போது தான் இராமச்சந்திரன் கிட்ட தயிர்சாதம் வாங்கி வரச்செய்து சாப்பிட்டு வந்தேன். இப்ப வேண்டாம்**" *என்று கூறிச் சென்று விட்டார்.*

*எங்கள் தெரு கடைசியில் சுப்பிரமணியம் என்று 15 வயது பையன் சுவாமிகளை அழைத்துச் சென்று அவர்கள் வீட்டில் அமர வைத்து சாதம், சாம்பார் கலந்து வைத்தார்கள். சாமி சாப்பிட்டு விட்டு அவர்கள் வீட்டுத் திண்ணைமேல் படுத்துக் கொண்டார். ஒரு மணி நேரம் கழித்து சுவாமி தென்படவில்லை. அப்படியே சென்று பார்த்தபோது சுவாமி சுடுகாட்டில் தென்பட்டார்.*

*பழங்கோவிலிலிருந்து எங்காவது செல்லவேண்டும் என்றால் வில்வாரணி சென்று பேருந்து ஏறவேண்டும். எனக்கு திருமணம் ஆன*

*பிறகு என் பாட்டி உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்று புதுப்பாளையத்திலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்து நான் என் கணவரோடு சேர்ந்து என் பாட்டியைப் பார்க்க கிளம்பி, வில்வாரணிக்குச் சென்று கொண்டிருந்தோம். காளிகா தேவி கோயில் அருகே ஸ்ரீ சுவாமிகள் தோளில் ஒரு மூட்டையை மாட்டிக் கொண்டு வருவதைப் பார்த்து* "**சுவாமி வருகிறார். அவரிடம் உள்ள மூட்டையை வாங்கி வையுங்கள்**" *என்று என் கணவரிடம் கூறினேன். என் கணவர்* "**பயமா இருக்கு. நான் வாங்கி வைக்க மாட்டேன்**" *என்றார். நான்* "**உட்காருங்கள் சுவாமி!**" *என்று கூறி அங்கேயே ஒரு புளிய மரத்தின் கீழ் அமர வைத்து என் பையில் உள்ள முறுக்கு, சமோசாவையும் எடுத்து சுவாமிக்கு அளித்தேன். ஸ்ரீ சுவாமிசாப்பிட்ட பிறகு* "**நீ நினைச்சது கைகூடும். போ. போ. நீ போறத்துக்கும், பஸ் வர்றதுக்கும் சரியா இருக்கும். ஐந்து வருஷம் நம்பிக்கை. போ. போ**" *என்றார். ஸ்ரீ சுவாமிகூறியபடியே நாங்கள் செல்வதற்குள் பேருந்து வந்தது. என் பாட்டி வீட்டிற்குச் சென்றோம். ஸ்ரீ சுவாமி சொன்னபடியே ஐந்து வருடங்கள் என் பாட்டி உயிருடன் இருந்தார்.*

*என் அக்காப் பையனுக்கு உடல் நிலை சரியில்லாத போது ஸ்ரீ சுவாமியிடம் பையனை அழைத்து வந்து உடல்நிலை சரியாகும்படி வேண்டினார். ஸ்ரீ பூண்டி சுவாமி திருநீறு வைத்து* "**இனிமேல் உனக்கு பாறை மேல விழுந்தாலும் சாவு வராது போ**" *என்று ஆசி வழங்கினார். அதன் பிறகு அந்தப் பையனின் உடல்நிலை தேறிச் சுகமாக இருக்கிறார். எனக்கு மகன் பிறந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது என் அக்கா, சுவாமியிடம் அழைத்துச் செல்லுமாறு கூறினார். என் மகன் 11 மாதக் குழந்தையாக இருந்தபோது பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை, தரிசனம் செய்து கொண்டு மகனுக்கு 'உடல்நிலை சரியில்லை' என்று கூறினேன்.* "**இவனை வச்சிக்கிட்டு கல்லும், முள்ளும் பொறுக்கி காட்ல விறகு அடிச்சி எப்படி வாழ்க்கை நடத்தபோறே**" *என்று மூன்று முறை இதையே மீண்டும் மீண்டும் கூறி திருநீறு வைத்து* "**உயிருக்கு அபாயம் இல்லை. நல்லா ஆயிடும்**" *என்று ஆசி வழங்கினார். ஸ்ரீ சுவாமியின் அருளால் உடல்நிலை சரியானது. அதன் பிறகு இன்னொரு மகன் பிறந்தான். என் பெரிய மகன் எதையும்*

கண்டு கொள்ள மாட்டார். என் சிறிய மகனுக்கு முன் கோபம் அதிகம். அதற்கே ஸ்ரீ பூண்டி மகான் ஒருத்தரை கல்லாகவும், மற்றொருவரை முள்ளாகவும், இனி பங்காளிகளிடம் படும் துன்பத்தை காட்டில் விறகு அடிச்சி எப்படி வாழ்க்கை நடத்துவாய் என்று பரிபாஷையில் கூறியதாகப் புரிந்து கொண்டேன்.

நாங்கள் மூன்று சகோதரிகள். என் அக்காவுக்கு கால் ஊனம். அவரை யார் திருமணம் செய்து கொண்டாலும் என் அக்காவுக்கு நாங்கள் உள்ள வீட்டை தரவேண்டும் என்று என் தந்தை தீர்மானித்தார். என் தாயார் இறந்து விட்டார். என் தங்கையை ஒருவருக்கு இரண்டாவது மனைவியாக திருமணம் செய்து வைத்தார் என் தந்தை. ஒரு நாள் என் தங்கை எங்கள் வீட்டிற்கு வந்து என்னை வருமாறு வற்புறுத்தினார். நாங்கள் பேருந்தில் கிளம்பி வந்து பூண்டியில் இறங்கினோம். **"அக்காவுக்கு வீட்டை அப்பா எழுதிகொடுத்து விட்டார். நிலத்தை என்ன செய்வாரோ தெரியவில்லை"** என்று என் தங்கை கூறினார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வருவதற்குள் என்னுள் துக்கம் அதிகமாகி ஓவென்று அழுதுவிட்டேன். **"எதுக்கு என்கிட்ட வந்து அழறே. தொழுநோய்க்கு ஆஸ்பிடல் இருக்கு இல்ல வில்வாரணியில. அங்கபோயி காட்டுங்க உடம்பை. என் கிட்ட எதுக்கு காட்டறீங்க. என் கிட்ட வந்து எதுக்கு அழறீங்க. ஆடு யாரை நம்பும். எஜமானியையா? கசாப்புக்காரனையா? உனக்கு சுதி மதி இல்லை. ஏதோ இருக்கிறதை வாங்கிக்கப் போ''** என்றார் சுவாமி. என் தங்கை என்னருகிலே இருக்கிறார். நான் வீட்டிற்குச் சென்றதும் விஷயம் தெரிந்தது. என் தங்கையை இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்து வைத்ததற்கு இருந்த நிலங்களை எல்லாம் எழுதி வைக்குமாறு என் தந்தையை வற்புறுத்தி திருட்டுத்தனமாக என் தங்கை எழுதி வாங்கிக் கொண்டார். கடைசி வரை என்னிடம் கூறாமல் மறைத்து விட்டார். அதன் பிறகு மீதி இருந்த தங்கத்தை பொற்கொல்லரிடம் எடுத்து வந்து காண்பித்து எனக்கு 3 பவுன் நகை தந்து மீதியை அவர்களே எடுத்து கொண்டனர். ஸ்ரீ பூண்டி மகான் சொன்னபடியே நடந்தது.

என் தந்தையை என்னோடு அழைத்துச் செல்லலாம் என்று கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்தேன். **"இருக்கிற ஊர்ல**

**ஒரு ஓணான் பிடிக்கறத்துக்கு முடியல. அசல் ஊர்ல யானையை பிடிக்கிறியா. எதுக்குன்னா நீ கடைசி காலத்தில வரணும். ஜாக்கிரதை"** என்று என் தந்தையிடம் சுவாமி கூறினார்.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு அங்கேயே நின்றிருந்த சமயத்தில் என் கிராமத்திலிருந்து ஒரு பெண் கைக்குழந்தையை எடுத்து வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்தவுடன் "**கெரசின் வாசனை. தொலைவா எடுத்துக்கிட்டு போ**" என்றார் பூண்டி சுவாமி. அப்பெண் வெளியே வந்தவுடன் நான் வற்புறுத்திக் கேட்டேன். அப்பெண் ஏதோ ஒரு சமயத்தில் வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் வேறு ஒரு ஆளுடன் கள்ளத்தொடர்பு வைத்து கொண்டதாகக் கூறினாள். அதன்பிறகு அந்தக் குழந்தை சிறிது காலம் கழித்து மரணம் அடைந்தது.

ஒரு பெண்மணியின் சங்கிலி தொலைந்து விட்டது. எது நடந்தாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து சொல்லுவோம். அப்பெண்மணி வந்து சுவாமியை தரிசித்து கொண்டு "**சுவாமி! என் சங்கிலி தொலைந்து விட்டது**'' **என்று கூறி அழுதார். ஸ்ரீ பூண்டி சுவாமி"நல்லது. ஏர் உழற காலத்தில கிடைக்கும். இப்ப க்கிடைக்காது போங்க**" என்று கூறினார். அப்பெண்மணிக்கு ஒருவருடம் வரை அந்தச் சங்கிலி கிடைக்கவில்லை. சுவாமியிடம் கூறினாலும் கிடைக்கவில்லை என்று எண்ணி வருத்தப்பட்டார். கடைசியில் அவர்கள் வீட்டுக் குப்பைமேட்டிலிருந்து குப்பை எடுத்துச் சென்று நிலத்தில் போட்டார்கள். ஏர் உழும் சமயத்தில் அதில் சங்கிலி மாட்டிக் கொண்டது. அப்போது அதை கண்டு எடுத்தார்கள். ஸ்ரீ பூண்டி மகான் சொன்னபடியே ஏர் உழும் சமயத்தில் கிடைத்தது.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு "**சுவாமி! போயிட்டு வரலாமா**" என்று கேட்டேன். "**சரி போ! என்னா பண்றது**" என்றார் சுவாமி. அந்த சமயத்தில் என் கணவருக்கு உடல் நிலை சரியில்லை. நான் சென்ற ஒரு மாதத்தில் என் கணவர் மரணம் அடைந்தார்.

நான் என் வீட்டிற்கு வந்து உளுத்தம் பருப்பில் போண்டா சுட்டு பாலில் சர்க்கரை கலந்து காய்ச்சி எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு ஊட்டிய பிறகு சுவாமியிடம் விடைபெற்றுச் சென்றேன். பத்து,

*பதினைந்து நாளில் ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்த பக்தர்கள் ஸ்ரீ சுவாமிகளின் லீலைகள் அனைத்தையும் ஸ்ரீ சீரடி சாயிபாபா லீலைகள் போன்றே உள்ளது என்று கூறுவார்கள்.*

*"ஸ்ரீ சாயிபாபாவே ஸ்ரீ பூண்டி மகான்*
*ஸ்ரீ பூண்டி மகானே ஸ்ரீ சாயி பாபா"*

**நேர்காணல்: 69**
**8.5.2009, பூண்டி**

**ஓம்சக்தி லட்சுமணன்**, வயது: 70, காப்பலூர் லட்சுமணன்.

*என்னுடைய பூர்வீகம் காப்பலூர். கடந்த நான்கு வருடங்களாக பூண்டியில் குடித்தனம் இருக்கிறேன். நான் முதன்முதலில் கலசபாக்கத்தில் ஸ்ரீ சுவாமிகளை தரிசித்துக் கொண்டேன். ஒரு நாள் ஸ்ரீ சுவாமிகள் காப்பலூர் வந்து விநாயகர் ஆலயத்தில் இரண்டு மணி நேரம் அமர்ந்து கொண்டார். அனைவரும் சென்று வணங்கினோம். பிறகு கிளம்பிச் சென்றுவிட்டார்.*

*ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் திண்ணை மீது அமர்ந்த பிறகு நாங்கள் குடும்பத்தோடு வந்து தரிசனம் செய்து செல்வோம். ஒவ்வொருமுறை எங்கள் குடும்ப விஷயங்களை கேட்டபோது* "**நல்லது நடக்கும்**" *என்று ஆசி வழங்குவார். எனக்கு பல வருடங்களாக குழந்தைகள் பிறந்து இறந்து விட்டனர். நான் சுவாமிகளிடம் வந்து குழந்தைப்பேறு உண்டாகி நிலைக்க வேண்டும் என்று ஆசிகள் கேட்டேன். சுவாமி அருள் புரிந்தார். மீண்டும் எங்களுக்கு குழந்தை பிறந்தது. அக்குழந்தையை எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் மடியில் வைத்து பெயர் வைக்குமாறு வேண்டினோம்.* "**மண்ணு" என்று பெயர் வையி**" *என்று கூறி திருநீறு வைத்து பையனின் ஒரு கையில் சாக்லேட் தந்து மற்றொரு கையில் நாலணா (25 காசு) பணம் தந்து* "**நல்லது. போயிட்டு வா**" *என்று ஆசிர்வதித்தார். பிறகு ஒரு மகளும், ஒரு மகனும் பிறந்தார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் நம் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொண்டு பேசும் தெய்வம்.*

**நேர்காணல்: 70**
**8.5.2009, பூண்டி**

**ஜனார்த்தனன்**, வயது: 60, கலசபாக்கம்.

*ஸ்ரீ சுவாமிகள் போளூரான் கால்வாய் பாலம் மீது அமர்ந்து இருக்கும்போது முதன் முதலில் தரிசித்துக் கொண்டேன். அந்த வழியில் செல்பவர்கள் சுவாமிகளுக்கு சாக்லேட், சிகரெட் தருவார்கள். ஸ்ரீ சுவாமிகள் யாருடனோ பேசுவது போல் "***இராக்கெட் விடுவாங்க. பாம் போடுவாங்க. சம்பத்து பீடி விலை அதிகமாயிடும். நாடு கெட்டுப் போயிடும்***" என்று பேசிக்கொண்டிருப்பார்.*

*தச்சாம்பாடியிலிருந்து ஒரு துறவி வந்தார். திரௌபதியம்மன் கோயிலுக்கு அருகில் ஸ்ரீ சுவாமிகளை படுக்க வைத்து நன்றாகத் தண்ணீர் ஊற்றினார். அதன் பிறகு சுவாமியை அமர வைத்து ஸ்ரீ வெங்கடேச பெருமாளுக்கு நாமம் போட்டது போல் சுவாமிக்கு நாமம் போட்டு அலங்காரம் செய்து பூஜை செய்தார். அத்துறவி அப்படிச் செய்தது எங்களுக்கு விருப்பமில்லை. அத்துறவியை அங்கிருந்து துரத்த அனைவரும் கலந்து பேசி அத்துறவியிடம் சென்று சுவாமிக்கு அப்படிச் செய்ய வேண்டாம் என்று கூறினோம். அத்துறவி மரத்தைப் பார்த்து, நிலத்தைப் பார்த்து பேசுவது போல் பேசுவார். கடைசியில் அத்துறவியை அங்கு இருக்க விடாமல் துரத்திவிட்டோம்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணை மேல் அமர்ந்த பிறகு நான் என் கிராமத்திலிருந்து பூண்டிக்கு வரும் வழியில் ஒரு கடை வைத்தேன். சுவாமியின் தரிசனத்திற்கு வரும் அன்பர்கள் பழம், சாக்லேட், பிஸ்கெட்டை கடையில் வாங்கிச் செல்வார்கள். ஒரு நாள் கிருபானந்த வாரியார் அவ்வழியில் சென்றார். நானும் சைக்கிளில் பின்னாடியே தொடர்ந்து சென்றேன். அவர் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்து விட்டு அங்கேயே அமர்ந்து இருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி "***பணப் பயித்தியம் பிடிச்சி இருக்கிறவன் வந்து இருக்கிறான்***" என்கிறார்.*

அந்த வார்த்தைகளை நான் தெளிவாகக் கேட்டேன். உடனே ஸ்ரீ கிருபானந்த வாரியார், எதிரிலுள்ள மண்டபத்தில் வந்து அமர்ந்தார். ஸ்ரீ கிருபானந்த வாரியார் மேடை மீது சொற்பொழிவு ஆற்றும் சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி அங்குப் பார்வையாளர்களோடு அமர்ந்து இருப்பதைப் பார்த்து அவர் உடனே கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்ததாகக் கூறினார்.

பில்லூரிலிருந்து ஒரு விவசாயி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து விட்டு, அவர் மகன் ரேடியோ வாங்கித் தருமாறு தகராறு செய்வதாக சுவாமியிடம் சொன்னார். “**நீ பேசாமல் ஒரு டிரான்ஸ்சிஸ்டர் வாங்கிக் கொடுக்கவேண்டியதுதானே**“ என்று கூறி, மீண்டும் ‘‘**ரேடியோ வாங்கிக் கொடுத்து ஏருக்கு மாட்டிக்கிட்டு உழ சொல்லுப்பா**’’ என்று கூறினார் சுவாமி. அங்கிருந்த அன்பர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகானின் தரிசனத்திற்காக கவர்னர் ஜாட்டி வந்தார். கவர்னர் செல்கிறார் என்று அனைவரும் பின்னால் ஓடிக் கொண்டிருந்ததால் நானும் பின்னாலே ஓடி வந்தேன். கவர்னர் ஸ்ரீ பூண்டி மகானை வணங்கி ‘‘**சுவாமி! எனக்கு இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். இன்னும் திருமணம் ஆகவில்லை**’’ என்று வேண்டிக் கொண்டார். பக்கத்தில் இருந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் “**அவங்க கேட்கிறத்துக்கு ஏதாவது சொல்லுங்க சுவாமி**” என்று வேண்டினார். ஸ்ரீ பூண்டி சுவாமி “**அவர் யார்?**” என்று கேட்டார். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி “**கவர்னர்**” என்றார். “**கவர்னர் இல்லையா. அவர் வீட்டுக்கு யார் போயி பொண்ணு வேணும் என்று கேட்பாங்க. நீங்களா பார்த்து பையனைத் தேட வேண்டியது தான்**” என்று கூறினார் பூண்டி மகான். கவர்னர் ஸ்ரீ பூண்டி மகானை வணங்கி விட்டு கிளம்பிச் சென்றார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் மகிமைகளை அன்பர்கள் அறிந்து கொண்டதால் பக்தர்களின் கூட்டம் அதிகமாகி விட்டது. சுவாமிகளை தரிசிக்க நான் கிளம்பி வரும்போது ஒரு சாக்லேட், fashion show சிகரெட் வாங்கிக் கொண்டு சைக்கிளில் வந்து சுவாமிகளுக்கு சாக்லேட் கொடுப்பேன். ஒவ்வொரு முறை சாப்பிடுவார். ஒவ்வொரு முறை அங்கு வைக்கச் சொல்வார்.

சிகரெட்டைப் பற்ற வைத்து கையில் தருவேன். ஒவ்வொரு முறை திருநீற்றை எடுத்துக் கொள்ளச் சொல்வார். ஸ்ரீ பூண்டி மகானின் மகிமைகளை அன்பர்கள் புகழ்ந்து பேசும் போது இத்தனை நாட்களாக அவர்தம் பெருமைகளை அறிந்து கொள்ளவில்லையே என்று வருத்தப்பட்டேன்.





**நேர்காணல்: 71**
**9.5.2009, பூண்டி**

**பாலமுத்து**, வயது: 87, பூண்டி.

*ஸ்ரீ சுவாமிகள் கலசப்பாக்கத்தில் இருந்த நாட்களிலிருந்து எனக்குத் தெரியும். நான் நாதஸ்வர வித்வான். வரதன் என்பவர் சுவாமிக்கு மொட்டையடித்து தாடி மழிப்பார். அவர் வேறு ஒரு கிராமத்திற்கு குடித்தனம் மாற்றிக் கொண்டு சென்ற பிறகு ஒரு அன்பர் என்னை அழைத்துச் சென்று ஸ்ரீ சுவாமிகளுக்கு மொட்டையடித்து, தாடி மழிக்கச் சொன்னார். நானும் செய்தேன். இரண்டாவது முறை பிராயம்பட்டில் மாணிக்க முதலியார் வீட்டுத் திண்ணை மீது அமர வைத்து சுவாமிக்கு தலைமுடி எடுத்து, தாடியை மழித்தேன். மூன்றாவது முறை பூண்டியிலுள்ள ஒரு சாது சுவாமிகளை பிரார்த்தனை செய்து சம்மதம் பெற்ற பிறகு என்னை மறுநாள் காலை 5 மணிக்கெல்லாம் தயாராக இருக்கச் சொன்னார். மறு நாள் அத்துறவி விடியற்காலையில் ஆற்றுக்குச் சென்று குளித்துவிட்டு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வந்தார். காலையில் நான் சென்றேன். பூண்டியில் பால்வாடி பள்ளிக்கூடத்திற்கு எதிரிலுள்ள குடிசை வீட்டு திண்ணை மீது ஸ்ரீ சுவாமிஅமர்ந்து இருந்தார். நான் சென்று வணங்கி விட்டு* "**சுவாமி! தலைமுடி எடுக்க சொல்றீங்களா?**" *என்று கேட்டேன். சுவாமி* "**சரி! வாங்கிக்கிறேன்**" *என்றார். ஸ்ரீ சுவாமியின் தலைமீது தண்ணீர் தெளித்து நன்றாக தேய்த்து விட்டு, தலைமுடியை மழித்து எடுத்தேன். உடல் மேல் விழுந்த முடியை நீக்கி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். வழியில் சென்று கொண்டிருந்தவர்கள் பக்கத்துக் கடையில் தேநீர் குடித்து விட்டு கிளம்பிச் செல்லும்போது* "**எதற்கு சுவாமி தலைமுடி எடுத்து கொண்டீங்க?**" *என்று கேட்டனர். உடனே ஸ்ரீ சுவாமிகள் அந்த முடியை எல்லாம் எடுத்துக் கொண்டு மூட்டையையும் எடுத்துக் கொண்டு கிளம்பிச் சென்று விட்டார்.*

எனக்கு கால், கைகளில் நடுக்கம் வந்தது. என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. தலைமுடி எடுக்கச்சொன்ன துறவியிடம் சென்று கேட்டேன். “**சுவாமி போய்விட்டார். என்னை என்னப் பண்ணச் சொல்கிறாய்?**” என்று தப்பித்துக் கொண்டார். நான் நேராக ஆற்றுக்குச் சென்று தலைக்குளியல் செய்து வந்து வீட்டிற்குச் சென்று கற்பூரம், ஊதுவத்தி எடுத்து வந்தேன். தற்போது ஸ்ரீ பூண்டி சுவாமிகோயில் உள்ள இடத்திற்கு பக்கத்தில் ஒரு ஓட்டு வீட்டுத் திண்ணை மீது ஸ்ரீ சுவாமிஅமர்ந்து இருந்தார். நான் ஊதுவத்தி ஏற்றிப் பக்கத்தில் வைத்து கற்பூரம் ஏற்றி ஸ்ரீ சுவாமிகளின் திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டேன். ஒரு மணி நேரம் வரை சுவாமி எதுவும் பேசவில்லை. அப்போது சுவாமி மட்டுமே இருந்தார். அதிக நேரம் கழித்து ‘‘**என்னாப்பா?**’’ என்று கேட்டார் சுவாமி. நான் மன வேதனையோடு கண்ணீர் விட்டுக் கொண்டே ‘‘**சுவாமி! நான் எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால் நீங்கள் இப்படி இருந்தால் பார்க்கிறவங்க என்னை என்ன சொல்வாங்க? எனக்கு கை, கால் அசைக்க முடியவில்லை சுவாமி**” என்று வேண்டினேன். “**என்னாப்பா! நீ என்ன பண்ணுவே. வழியில் போறவங்க சொல்லிட்டு போயிட்டாங்க. நீ ஏன் வருத்தப்படறே. எழுந்து போ**’’ என்றார் சுவாமி. நானும் கிளம்பிச் சென்று விட்டேன்.

ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் திண்ணை மீது அமர்ந்த பிறகு பாதபூஜைகள் செய்வார்கள். தைப்பூசத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு மங்கள வாத்தியமும் நாதஸ்வரமும் வேண்டும் என்று என்னிடம் கூறினார்கள். மங்கள வாத்தியம், நாதஸ்வரம் ஸ்ரீ பூண்டி சுவாமி நிஷ்டையை இடைஞ்சல் செய்யும் என்று நான் நினைத்து இரவு 11.30 மணிக்கு வந்து சுவாமி படுத்திருந்த திண்ணைக்கு எதிரில் நின்று கொண்டேன். உள்ளே சுப்பிரமணிய சுவாமி படுத்துக் கொண்டிருந்தார். பதினைந்து நிமிடங்களுக்கு பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமிகள் “**என்னாப்பா**” என்று கேட்டார். “**சுவாமி! தைப்பூசத்தன்று பாதபூஜை இருக்கு என்று சொன்னார்கள். மங்கள வாத்தியமும், நாதஸ்வரமும் வேண்டும் என்று சொன்னார்கள். உங்களுக்கு நிஷ்டாபங்கம் ஏற்படும் என்று பயப்படுகிறேன். தூக்கம் வரவில்லை**’’ என்று

வேண்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "**சரி சொன்னார்களா. வா**" என்று கூறினார். நான் சுவாமிகளின் பாதங்களில் வணங்கிவிட்டுச் சென்று படுத்துக் கொண்டேன். தைப்பூசத்தன்று காலை 5மணிக்கு எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டேன். நேரம் ஆறானது. ஏழானது.11 மணிக்கு ஸ்ரீ பூண்டி சுவாமி ஒரு பாதத்தை கீழே வைத்தார். அதுவரை அனைவரும் எதிர்பார்த்து காத்திருந்தனர். அதன் பிறகு ஒரு பாதத்திற்கு பூஜை செய்தனர்.

என் மகன் கலசபாக்கம் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயத்தில் காக்கா வலிப்பு வந்தது. வாத்தியார்கள் பையனை பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டாம் என்று கூறினார்கள். நான் வைத்தியம் செய்விப்பதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து வணங்கி மனதிலேயே வேண்டிக் கொண்டேன். "**துக்கத்துக்கு வந்த குழந்தைப்பா. எதுக்கு வைத்தியம் பண்றே**" என்றார் சுவாமி. ஒரு மாதம் கழித்து மகன் இறந்து விட்டான்.

என் அண்ணன் மகன் ஐயாசாமி. நான் சுவாமிகளின் முன்பு மங்களவாத்தியமும், நாதஸ்வரமும் வாசிப்பது கண்டு பொறாமை கொண்டு ஒரு தைப்பூசத்தன்று அவர் ஒத்துக் கொண்டார். அன்று மாலை நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். கமிட்டித் தலைவர் என்னை அழைத்து "**உங்க அண்ணன் மகன் மங்கள வாத்தியகாரர்களை குறைந்த பணத்தில் கூட்டி வருவதாகச் சொன்னார்**" என்றார். சரி உங்கள் விருப்பம் என்று கூறிவிட்டு வீட்டிற்குச் சென்று விட்டேன். இரவு சாப்பிட்டு படுத்துக் கொண்டேன். ஆனால் எனக்குத் தூக்கம் வரவில்லை. நான் மனதிலேயே அழுது கொண்டு "**சுவாமி! உங்களிடம் பணத்திற்கு ஆசைப்பட்டேனா? என்னை இப்படி செய்தீர்களே. நீங்கள் மனது வைத்தால் இப்படி நடக்குமா?**" என்று நினைத்தேன். சிறிது நேரத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமி கனவில் தோன்றி "**நீதான் வரணும்பா. நீ தான் வரணும்**" என்று கூறினார். நான் உடனே எழுந்து பார்த்தேன். சுவாமி தென்படவில்லை. அப்போதே கிளம்பி ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் சன்னதிக்கு வந்து சுவாமியின் பாதங்களை வணங்கி நான் எதுவும் பேசாமல் சென்று விட்டேன். காலை என் அண்ணன் மகன் மங்கள வாத்தியத்திற்கு யாரும் வரவில்லையென்று

கூறி சென்று விட்டார். அதன் பிறகு எனக்கு ஆள் அனுப்பினார்கள். பிறகு நான் ஏற்பாடுகள் செய்தேன்.

நானும் என் அண்ணனும் ஒரே வீட்டில் இருந்தோம். என் அண்ணனுக்கு இரண்டு பிள்ளைகள். எனக்கும் இரண்டு பிள்ளைகள். அவர்களுக்கு திருமணம் நடந்த பிறகு ஒருவருக்கு ஒருவர் பிரச்சினை செய்து கொள்வார்கள் என்று வீட்டிற்கு இரண்டு வாசல் வைக்க வேண்டும் என்று கிராம முன்சீப்பிடம் கூறினேன். பெரியவர்களுக்குக் கூறி செய்து கொள்ளச் சொன்னார். எங்கள் தெருவில் இருவரிடம் கூறினேன். அவர்கள் என் அண்ணனை அழைத்துக் கேட்டார்கள். சூரியன் மேற்கு திசையில் உதித்தாலும் அது முடியாது என்று சொல்லி விட்டார் என் அண்ணன். நான் விவரத்தை கிராம முன்சீப்பிடம் கூறினேன். பேசுவதாகக் கூறினார். மாதங்கள் ஓடின. எத்தனை முறைக் கேட்டாலும் பதில் வரவில்லை. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு மனதிலேயே வேண்டிக் கொண்டேன். "**சரியா போயிடும் போப்பா. எல்லாம் சரியா போயிடும். போ**" என்று சுவாமி கூறினார். மறுநாள் ஒரு பெரியவர் 'மூன்று மாதமா சொன்னாலும் அவர் கேட்டுக் கொள்ளவில்லை. இருவரையும் வெளியே தள்ளிப் பூட்டுப் போடுங்க. அதன் பிறகு பார்க்கலாம்'' என்றார். உடனே என் அண்ணன் கணக்குப் பிள்ளையிடம் கூறி இடத்தை பங்கிட்டுத் தந்தார். எனக்கு வந்த பாகத்தில் வீடு கட்டிக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்கிறேன்.

என் மகனுக்கு நாதஸ்வரம் கற்றுத் தர இரு பண்டிதர்களிடம் அனுப்பினேன். எங்கேயும் சரியாக கற்றுக் கொள்ளவில்லை என்று நிறுத்திவிட்டேன். இனி ஸ்ரீ பூண்டி மகானே வழி காண்பிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டேன். என் தூரத்து உறவினர் ஒருவர் அவர் மகளுக்கு திருமணம் நடந்து பத்து வருடங்கள் ஆனாலும் குழந்தைபேறு இல்லை என்ற ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் அருளைப் பெற வந்தார். அன்று பாதபூஜைக்கு மேள, தாளம், நாதஸ்வரம் வாசித்துக் கொண்டிருந்தேன். பூஜை முடிந்தபிறகு என் உறவினர்களை அழைத்துக் கொண்டு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு "**இந்தப் பெண்ணிற்கு திருமணம் செய்து பத்து**

**வருடம் ஆனாலும் குழந்தைப்பேறு இல்லை"** என்று கூறினேன். ஸ்ரீ சுவாமிகள் சிறிது நேரம் கழித்து **"பிறப்பாங்க. போ!"** என்று கூறி திருநீறு அளித்தார். அவர்களை என் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு அருந்தும் சமயத்தில் **"மகன் நாதஸ்வரம் கற்று கொள்கிறான் என்று கேள்விபட்டேன். ஏன் போகவில்லையா?"** என்று என் உறவினர் கேட்டார். **"நான் இருவரிடம் அனுப்பினேன். பலனில்லை"** என்றேன். **"சரி! நான் கற்றுத் தருகிறேன். அனுப்புங்கள். மாமா!"** என்று கூறினார். முதலில் நான் சம்மதிக்கவில்லை. பிறகு யோசனை செய்து மறுநாள் அனுப்பி வைத்தேன். இரண்டு வருடம் அவரிடமே இருந்து நாதஸ்வரம் கற்றுக் கொண்டான். எல்லாம் ஸ்ரீ பூண்டி மகானின் அருள்.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் நிஷ்டைக்கு பங்கம் ஏற்படும் என்று பேசுவதற்கும் பயப்படுவேன். மனதிலேயே கூறிக்கொள்வேன். ஸ்ரீ பூண்டி மகானிடம் இருந்து பதில் கிடைக்கும். ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் அருளால் நான் இன்றும் தினந்தோறும் காலையில் ஆலயம் வந்து சுவாமியை தரிசனம் செய்து விட்டுச் செல்கின்றேன்.

**நேர்காணல்: 72**
**9.5.2009, பூண்டி**

**சிவராமன்**, வயது: 50, பூண்டி.

*நான் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நாளிலிருந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை அறிவேன். நாங்கள் நெற்றியில் திருநீறு வைக்காமல் பள்ளிக்கூடம் சென்றால் வாத்தியார் திட்டுவார். ஒவ்வொரு சமயம் அடிப்பார். அதற்காக தினந்தோறும் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி திருநீறு வைத்துக் கொண்டு செல்வேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் மகிமைகளை, லீலைகளை மக்கள் கூறுவார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி சமாதியடைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு தீபாவளியன்று வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு அந்த வழியில் வந்து கொண்டிருந்தேன். அப்போது தான் திரைப் போட்டிருந்தார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமி அச்சமயத்தில் சுப்பிரமணிய சுவாமியிடம் "***நான் கும்பகோணம் போனேம்பா. கும்பகோணத்துக்காரர் என்னைப் பார்த்தும் பார்க்காத மாதிரி போயிட்டாரு*** *" என்றார். இங்கேயே இருக்கிறார். எப்போது இவர் கும்பகோணம் போனார்? என்று யோசனை செய்து கொண்டே அங்கேயே நின்றிருந்தேன். என்னைப் பார்த்து, "***இங்க ஏன் நின்னுக்கிட்டு இருக்கிறே. போ! போ!*** *" என்றார் சுப்பிரமணிய சுவாமி. நான் வீட்டிற்குச் சென்று பெரியவர்களிடம் விவரத்தைக் கூறினேன். அன்றுதான் ஸ்ரீ பூண்டி மகானின் மகிமை எனக்குத் தெரிந்தது. கும்பகோணத்தில் பேலஸ் உணவக* (Palace Hotel) *எஜமானி ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்கு அடிக்கடி வந்து செல்வார். அவரைப் பற்றி தான் ஸ்ரீ பூண்டி சுவாமிஅப்படி கூறியிருப்பார் என்று பெரியவர்கள் கூறினார்கள்.*

*என் பாட்டி பெயர் உண்ணாமலையம்மன். அவர் சுவாமி எங்கிருந்தாலும் தேடி உணவு எடுத்துச் சென்று வைப்பார். ஒரு நாள் சுவாமி மோட்டூர் தாண்டியபிறகு ஒரு சிவன் கோவில் மண்டபத்தில்*

அமர்ந்து இருக்கும் போது கூழ் கலந்து எடுத்துச் சென்று தந்தார். ஸ்ரீ சுவாமி "**அம்மாவுக்கு நிறைய வேலை. குழந்தைகளைப் பார்த்துக்கணும். வீடு, வாசல் பெருக்கணும். ஆடு, மாடு, பார்த்துக்கணும். உனக்கு எதுக்கு இந்த வேலை**" என்றாராம். "**உங்களுக்காகத் தான். குடிங்க சுவாமி!**" என்று வேண்டவே சுவாமி கூழ் குடித்து "**ஆற்காடு கிச்சிலி, மல்லிகைப்பூ போன்ற சாதம், முருங்கைகாய் சாம்பார், வாழைக்காய் பொரியல், வடை, பாயசம், அப்பளம்**" என்று வரிசையாகக் கூறினாராம். அந்த சமயத்தில் என் பாட்டி சுவாமி சொன்னவை எல்லாம் மீண்டும் எப்போதாவது சமைத்து எடுத்து வரலாம் என்று மனதில் நினைத்து "**சுவாமி! நான் போய் வரேன்**'' என்று விடைபெற்றபோது பதில் ஏதும் பேசவில்லையாம் சுவாமி. அப்போதைக்கே ஸ்ரீ சுவாமியிடம் நாலைந்து பேர் வந்து சேர்ந்தவர்கள். இருபது நிமிடம் கழித்து கொத்தந்தவாடி ரெட்டியார் குடும்பத்தோடு இரண்டு வண்டியில் வந்து முப்பது பேருக்கு தேவையான உணவு, சுவாமி கூறிய பதார்த்தங்களை எல்லாம் எடுத்து வந்து வைத்தார். சுவாமிக்கு ஊட்டி அனைவருக்கும் அங்கேயே பரிமாறினார். அனைவரும் சாப்பிட்டபிறகு விடைபெற்று கிளம்பி வீட்டிற்குச் சென்று விட்டாராம். என் பாட்டி நேரிடையாக இந்த விஷயத்தை திரு.இராதாகிருஷ்ணரிடம் கூறவே அவர் எனக்கு இதைக் கூறினார்.

**நேர்காணல்: 73**
**9.5.2009, பூண்டி**

**கிருஷ்ணன்**, வயது: 49, பூண்டி.

*நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நாளிலிருந்து ஸ்ரீ பூண்டி மகானைத் தெரியும். ஸ்ரீ பூண்டி சுவாமி நடமாடிக் கொண்டிருந்த போது இரண்டு முறை எங்கள் வீட்டிற்கு வந்து உணவு உண்டு சென்றார். மூன்றாவது முறை சுவாமி எங்கள் வீட்டிற்கு வந்தபோது என் தந்தை வீட்டின் உள்ளே சென்று* "**சீக்கிரமா சாப்பாடு செய். சுவாமி வந்துள்ளார்**" *என்று என் தாயாரிடம் கூறினார். என் தாய்* "**நான் தான் பயப்படறேன் உனக்கு. அடுப்புக்கூட பயப்படுமா**" *என்று வேகமாகக் கூறினாராம். என் தந்தை வீட்டின் வெளியே வந்தவுடன்* "**நான் பயப்படறேன் உனக்கு. அடுப்புக் கூட பயப்படுமா**" *என்றவாறு சுவாமிகள் மூட்டையை எடுத்து தோளில் மாட்டிக்கொண்டு சென்று விட்டாராம். அதன் பிறகு சுவாமி மீண்டும் எங்கள் வீட்டிற்கு வரவில்லை.*

*என் தந்தை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியோடு நெருக்கமாக இருப்பார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் ஆடைகளை துவைத்து சுத்தப்படுத்தி எடுத்து வருவார். வீட்டில் எந்த பூஜை செய்தாலும் உணவு எடுத்துச் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு ஊட்டி மீதி சிறிதளவு எடுத்து வருவார். அனைவரும் அதை பிரசாதமாகப் பாவித்து மிச்ச உணவை சாப்பிடுவோம். அதன் பிறகு சேர்ந்து உண்ணுவோம். அதுவே ஸ்ரீ பூண்டி மகான் எங்களுக்கு அளித்த வரம்.*

**நேர்காணல்: 74**
**9.5.2009, பூண்டி**

**தண்டபாணி**, வயது: 64, பூண்டி.

*ஸ்ரீ சுவாமிகளை என் சிறுவயதிலிருந்தே தெரியும். முதலில் ஸ்ரீ சுவாமிகள் புகைப்படம் எடுக்க சம்மதிக்கவில்லை. ஸ்ரீ சுவாமிகளை வேண்டிக்கொண்ட பிறகு சம்மதித்தார். முதன் முதலில் பழங்கோவில் ஈஸ்வரன் கோயிலில் ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்து இருக்கும்போது குடியாத்தம் டாக்டர் அண்ணாமலையார் சுவாமியைப் புகைப்படம் எடுத்தார்.*

*எங்களுக்குத் தேநீர்கடை இருந்தது. கடைக்கு முன்பு போட்டிருந்த பெஞ்ச் மீது ஸ்ரீ சுவாமி வந்து அமர்ந்து கொள்வார். நான் தேநீர் கலந்து தருவேன். ஒரு நாள் சுவாமி பெஞ்ச் மீது அமர்ந்து இருக்கும்போது சுவாமியின் பாதங்களில் எறும்பு கடிப்பதைப் பார்த்த மற்றொரு நபர், "***என்னாப்பா முதலியாரு. சுவாமிகளைக் கட்டெறும்பு கடிக்குது. பார்த்துக் கொண்டு இருக்கறியே***" என்றார். நான் கடை உள்ளே சென்று சிறிது கெரசின் எடுத்துக் கொண்டு வருவதற்குள் ஸ்ரீ சுவாமி எழுந்து நின்று கொண்டார். "***சுவாமி! சிறிது கெரசின் விடறேன்***" என்றேன். "***அது பசிக்கு அது சாப்பிடுது. நாம என்ன பண்றதுப்பா***" என்றார் சுவாமி. சுவாமி பெஞ்ச் மீது அமர்ந்திருந்த போது கடைக்கு வேறு யாராவது வந்தால் எழுந்து போய் விடுவார். என் மீது மிகுந்த அன்புடன் இருந்தார்.*

*ஸ்ரீ சுவாமிகளுக்கு நான் சிகரெட் தந்து "***சுவாமி! புகை வெளியே வரக்கூடாது***" என்பேன். புகை வெளியே வராது. "***சுவாமி புகையை வெளியே விடுங்கள்***" என்று கூறினால் இரயில் என்ஜின் புகை போல் "குபு குபு" என்று வரும். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை அணைத்து விளையாடுவேன். என் சிறு வயதில் எந்த பயமும் இல்லாமல் சுவாமியின் பின்னாலேயே செல்வேன். ஸ்ரீ சுவாமிகள் சட்டை மேல் மற்றொன்று என்று பல சட்டை அணிந்திருப்பார். அச்சட்டைகளை*

கழட்டி பார்த்தால் பூச்சிகள், சிகரெட் மற்றும் பீடிகள் இருக்கும். சுவாமிகள் அப்பூச்சிகளை பொருட்படுத்த மாட்டார். உடல் உள்ளது என்ற எண்ணத்தை விட்டு, உடலோடு நம்முன் நடமாடிய தெய்வம் ஸ்ரீ பூண்டி மகான்.

**நேர்காணல்: 75**
**23.6.2009, பூண்டி**

**ஸ்ரீமதி சன்மார்க்கம்மா**, வயது: 68, பூண்டி.

*ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக்கொண்டிருந்த காலத்தில் எங்கள் வீட்டிற்கு வருவார். வீட்டின் உள்ளே வரமாட்டார். திண்ணை மீது அமர்ந்து உணவு உண்டு செல்வார். ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் வீட்டுத் திண்ணை மீது அமர்ந்த சிறிது நாட்களுக்குப் பிறகு காலையும், மாலையும் நான் சென்று அங்கு பெருக்கி சுத்தம் செய்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு திருநீறு, குங்குமம் பொட்டு வைத்து வணங்கி வருவேன். நாயுடுமங்கலம் ஜெகதீசன் முதன் முதலில் அகலில் எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றினார். பிறகு மின் இணைப்பு வாங்கி பல்பு போட்டார். அதன் பிறகு நான் காலையில் காபி, எட்டு மணிக்கு டிபன், 12 மணிக்கு சாப்பாடு, மாலை எது உள்ளதோ அதை எடுத்துச் சென்று ஊட்டுவேன். கூழ் கலந்து குடுத்தாலும் மகிழ்ச்சியாகக் குடிப்பார். வேறு ஒருவர் வீட்டிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து தந்தாலும் குடிக்க மாட்டார். என் குடும்ப நிலைமை இக்கட்டாக இருந்த சமயங்களில் ஒரு நாள் வேறு ஒருவர் வீட்டிற்குச் சென்று மோர் வாங்கி வந்து கூழில் கலந்து எடுத்து வந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் "***அப்படி பண்ணாதே. நம் வீட்ல இருக்கிற பச்ச தண்ணீர் குடுத்தாலும் குடிக்கிறேன். எங்காவது வாங்கி வந்து எனக்குத் தராதே. வீட்ல இருக்கிறதை எதைக் கொண்டு வந்து கொடுத்தாலும் சாப்பிடுவேன்***" என்றார். அன்றிலிருந்து வீட்டில் இருப்பதை எடுத்து வந்து வைப்பேன். நாயுடுமங்கலம் ஜெகதீசன் கூட ஒவ்வொரு நாள் டிபன் வாங்கி வந்து சுவாமிக்கு ஊட்டுவார். ஸ்ரீ பூண்டி சுவாமி என்னிடம் "***வந்தவங்களை பார்த்து சாப்பாடு போடு. பசியோடு இருக்கிறேன் என்று சொல்லக்கூடாது. வீட்ல இருக்கிற பச்ச தண்ணீராவது கொடு***" என்று கூறினார். சுவாமி சொன்னபடி சேவை செய்து கொண்டு இருப்பேன். குடும்பத்தில் கஷ்டங்கள் வந்து மனம் வேதனையாக இருக்கும்போது "***நீ ஒண்ணும்***

**நினைக்க வேண்டாம். நான் இருக்கிறேன்**" என்று கூறுவார் பூண்டி மகான்.

என் கணவர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் சைக்கிள் கடை வைத்திருப்பார். துணி தைக்கும் மிஷினும் வைத்து இருந்தார். குடும்ப வருமானம் போதிய அளவு இருக்காது. நாங்கள் தண்ணீர் காய்ச்சி எடுத்துச் சென்று சுவாமிகளை குளிப்பாட்டி துணி மாற்றி, அழுக்குத் துணியை மூட்டைக்கட்டி எடுத்து வந்து நாங்கள் இருவரும் ஆற்றுக்கு எடுத்துச் சென்று துணிகளை துவைத்து எடுத்து வருவோம். ஸ்ரீ பூண்டி சுவாமிக்குச் சேவை செய்யும் பாக்கியத்தை ஏற்படுத்தித் தந்தார்.

நான் என்றும் ஸ்ரீ பூண்டி மகானை எதையும் வேண்டும் என்று கேட்டதில்லை. ஒரு சமயம் குடும்ப நிலைமை மிகவும் கஷ்டமாக உள்ளது என்று கேட்டதற்கு "**நான் இருக்கிறவரையிலும் உனக்கு எந்தக் குறையும் இல்லைம்மா. நீ எதையும் எதிர்பார்க்காதேம்மா**" என்று கூறினர் ஸ்ரீ பூண்டி மகான். திண்ணை மீது சுவாமி பக்கத்திலேயே எவ்வளவு பணம் தங்கம் இருந்தாலும் நான் என்றும் ஆசைப்பட்டதில்லை. தொடவும் மாட்டேன்.

ஸ்ரீ பூண்டி மகான் வந்த பக்தர்களுக்கு திருநீறு, குங்குமம் வைப்பார். எனக்கு வைக்கமாட்டார். ஒரு நாள் "**சுவாமி! எல்லாருக்கும் திருநீறு, குங்குமம் வைக்கறீங்க. எனக்கு எதற்கு வைக்கறதில்லை?**" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "**எல்லாம் நம்பளதுதான். ஒண்ணும் நினைக்காம நீயே எடுத்துக்கோ**" என்று கூறினார். நான் ஸ்ரீ பூண்டி மகானுக்கு உணவு எடுத்து வந்த சமயத்தில் சுவாமிகளுக்கு திருநீறு, குங்குமம் வைத்து உணவு ஊட்டி கையெடுத்து வணங்கிச் செல்வேன். உணவை அன்புடன் எடுத்துச் சென்று ஊட்டினால் சாப்பிடுவார். மனதில் சலனத்துடனோ, வேறு விதமான எண்ணத்திலோ, உணவை எடுத்துச் சென்றால் சாப்பிடமாட்டார். நான் வீட்டுக்கு வெளியான போது என் பெரிய மகள் உணவு எடுத்துச் சென்று ஸ்ரீ சுவாமிகளுக்கு ஊட்டுவார்.

என் சிறு வயதில் தன்மார்க்கம் என்று பெயரிட்டார்கள். பிறகு என் பாட்டி சன்மார்க்கம் என்று பெயர் மாற்றினார். சிறிது நாள் கழித்து மார்க்கம் என்று அழைத்தார்கள்.

*ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு ஒரு கட்டி எழுந்தது. ஸ்ரீ சுவாமி* "**அம்மா! நான் இந்த ஏழு நாள் கடந்து போயிட்டால் பிழைச்சிடுவேன். நல்லாயிடும். இந்த ஏழு நாள் தவறி போகவில்லையென்றால் நான் பிழைக்க மாட்டேன்**" *என்று கூறி என் உடல் எல்லாம் தடவி என் முகம் எல்லாம் அன்புடன் தடவி தாய்க்கு குழந்தை முத்தமிடுவது போல் இட்டு, திருநீறு, குங்குமம் வைத்து* "**இந்த ஏழு நாள் தாண்டிவிட்டால் நான் பிழைச்சிடுவேன். இல்லேன்னா இந்த காற்றில் கலந்து விடுவேன். அப்பவும் உங்க வீட்ல கம்பத்துக் கிட்ட இருப்பேன். நான் எங்கும் போக மாட்டேன்**" *என்றார் ஸ்ரீ பூண்டி மகான். ஏழாவது நாள் ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்தார்.*

*நான் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு உணவு அளித்து விட்டுத் திரும்பி வீட்டுக்குச் செல்லும் சமயத்தில் சுவாமி சாப்பிட்டு விட்ட மிச்ச உணவுக்காக ஆசைப்பட்டு அன்பர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள். ஒரு பருக்கை கிடைத்தாலும் போதும் என்று வரிசையில் காத்திருந்து கையை நீட்டிக் கேட்பார்கள். எல்லாம் ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் மகிமை. எங்களுக்கு அளித்த வரம்.*



புலித்தோல் மீது
அமர்ந்து
அபயமளிக்கும்
ஸ்ரீ பூண்டிமகான்



ஸ்ரீ பூண்டி மகானின்
திருஉருவ சிலை -
சமாதி கோவில்

**நேர்காணல்: 76**
**7.5.2009, பூண்டி**

**M. நடராசன்**, வயது: 60க்கு மேல், சோழபுரம், போளூர் மாவட்டம்.

*நான் போளூர்வட்டம் சோழபுரம் கிராமத்தைச் சேர்ந்தவன். ஆசிரியராக பணியாற்றியவன். தினமும் மிதிவண்டியில் பூண்டி மகானை தரிசித்து விட்டு பள்ளிக்குச் செல்லும் பாக்கியம் கிடைத்தது.*

*எனது தாயார் நரம்பு சம்பந்தமான வியாதியால் பெரும் தொல்லைக்கு ஆளாகி அவதியுற்றார். காரணமின்றி கடகடவென சிரிப்பார். உடனே எழுந்து வடதிசை நோக்கி ஓடுவார். தினமும் மகானிடம் வேண்டி விபூதி பிரசாதம் பெற்று வந்து பூசி வந்தேன்.*

*ஒரு நாள் சற்குரு நாதரின் சீடர் காங்கேயநல்லூர் சண்முக சுவாமிகள் வில்வாரணி முருகன் கோயிலில் ஒரு தேநீர் கடையில் அமர்ந்து மக்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டு இருந்தார். நானும் தரிசித்தேன். ஏற்கனவே எனக்கும் சுவாமிகளுக்கும் பழக்கம் உண்டு.*

*சுவாமிகள் என்னிடம் அம்மா எப்படி உள்ளார்? என்று வினவினார். நலமாக உள்ளார் என்றேன் நான். அம்மா சிரிக்கிறார்களா! எழுந்து ஓடுகிறார்களா? என்று கேட்டார். எனக்கு ஒரே ஆச்சரியம். சுவாமி பல மருத்துவரிடம் சிகிச்சை பெற்றும் தாயின் தன்மையின் மாற்றம் இல்லை என்றேன். சரி நாளை காலை அம்மாவை காங்கேயநல்லூர் அழைத்து வா என்றார். நானும் அவ்வாறே சென்றேன்.*

*சண்முக சுவாமிகள் காங்கேய நல்லூரில் தங்கள் வீட்டு எதிரில் உள்ள பிள்ளையார் கோவிலில் தியானத்தில் இருந்தார். நானும், என் தாயாரும் அவர் எதிரில் நின்றோம். உடனே என் தாயாருக்கு அதிஉக்கிரமாக சிரிப்பு வந்து, கடகட என்று மண்ணில் உருண்டு கொண்டிருந்தார். கண் விழித்த சுவாமிகள் தான் அமர்ந்திருந்த கல்லை ஓங்கி அடித்து* **“ஓடி விடு”** *என்றார். அம்மா மூர்ச்சை தெளிந்து*

எழுந்து உட்கார்ந்தார். சுவாமிகள் திருநீறு கொடுத்து அம்மாவை ஊருக்கு பஸ் ஏற்றிவிட்டு வா என்றார். நானும் அவ்வாறே அவரை பஸ் ஏற்றிவிட்டு சுவாமிகளிடம் வந்தேன்.

அவர் உடனே பூண்டிக்கு அப்பாவிடம் செல்லலாம் என்றார். இருவரும் காங்கேய நல்லூரில் இருந்து பூண்டி மகானை சந்திக்க நடந்தே சென்றோம்.

ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சண்முக சுவாமிகள், "**அப்பா, இவர் அம்மாவை அழைத்து வந்தார். அம்மாவை அனுப்பிவிட்டேன்**" என்றார்.

ஸ்ரீ பூண்டி சுவாமி "**நல்லது! சுடுகாட்டில் கல் மண் தின்பதை விட்டுவிட்டு இங்கு என்ன வேலை**" என்றார். மீண்டும் "**நல்லது! போய் வா**" என்றார். எனக்கு விபூதி தங்கள் திருக்கரங்களால் பூசி அம்மாவிற்கும் பிரசாதம் வழங்கினார். என் தாயாருக்கு தினமும் திருநீறு பூசி வந்தேன். என் தாயாருக்கு அவர் இறக்கும் வரை அந்நோயின் பாதிப்பு இல்லை. இது ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் நடந்தது.

ஒரு முறை எனது மூத்த மகள் N. ருக்குமணி இரண்டு வயது குழந்தையாக இருந்தபோது அம்மை நோய் கண்டது. உரிய முறையில் மூன்று முறை வேப்பிலை நீர் ஊற்றினோம். சரியாகிவிட்டது.

மீண்டும் ஒரு வாரத்தில் இரண்டாம் முறை அம்மைக் கொப்பளங்கள் முகத்தில் ஆழமாக காணப்பட்டது. சற்குரு நாதரிடம் சென்று வேண்டினேன். விபூதி பிரசாதம் கொடுத்தார். அப்போது அவர் பேசிய சங்கேத பாஷை எனக்குப் புரியவில்லை. கவலையோடு மகான் கொடுத்த விபூதியை குழந்தைக்குப் பூசினேன். இரவு உறக்கம் வெகுநேரம் வரவில்லை.

அன்று இரவு ஒரு கனவு. எங்கள் ஊருக்கு வடக்கே ஓடும் மிருகண்ட நதியில் வெள்ளம். அவ்வெள்ளத்தில் சற்குருநாதர் தலைமட்டும் தெரிய நடந்து வந்தார். கரையில் நின்றிருந்த நான் காலில் விழுந்து குழந்தையின் முகத்தைப் பார்க்க முடியவில்லை என்றேன்.

உடனே சற்குருநாதர் படைவீடு சென்று அபிஷேக தீர்த்தமும், குங்குமத்தையும் கொண்டுவந்து குழந்தைக்கு தீர்த்தம் தெளித்து,

குங்குமத்தை அம்மை கொப்புளத்தின் மேல் பூசு என்றார். கண் விழித்துப் பார்த்தேன். ஆற்றில் வெள்ளமும் இல்லை. பூண்டி மகானும் அங்கில்லை. விடியற்காலையிலேயே எங்கள் குல தெய்வமான ரேணுகாபரமேஸ்வரியை படைவீட்டில் தரிசனம் செய்து விட்டு மஹான் கனவில் கூறியபடியே அபிஷேக தீர்த்தத்தையும், குங்குமத்தையும் தெளித்து பூசினேன். என்ன அதிசயம். மறு நாள் காலை என் மகள் முகத்தில் இருந்த அம்மை கொப்புளங்கள் சுவடு தெரியாமல் மறைந்து விட்டன. மகானை தரிசித்து நன்றியுடன் விவரம் கூறினேன் "**நல்லது! நல்லது! போய் வா**" என்றார்.

வழக்கமாக சற்குருநாதரை தரிசனம் செய்து விபூதி பெற்றுக் கொண்டு பள்ளிக்குச் சென்று வந்தேன். ஒரு நாள் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு மூதாட்டி தான் வாங்கிய புதிய தங்கச் சங்கிலியை மகான் கழுத்தில் அணிவித்து மீண்டும் பெற்றுக் கொள்ளலாம் என்றெண்ணி அணிவித்துள்ளார். பூண்டி மகான் நிஷ்டையில் அமர்ந்திருந்த நேரம். உரிய நிர்வாகிகள் முன் அணிவித்திருந்தால் பிரச்சனை இருந்திருக்காது. மகானுக்கு அணிவித்த செயின் விவரம் நிர்வாகிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. உரிய விசாரணை மேற்கொண்டு உரிய மூதாட்டியிடம் செயின் ஒப்படைக்கப்பட்டது. அன்று இரவு ஒரு கவிதை புனைந்தேன். அக்கவிதையில் ஈசனையே குற்றம் சாட்டும் பாவச்செயலை செய்துவிட்டேன்.

மறு நாள் காலை வழக்கம் போல் பள்ளிக்குச் சென்றேன். தரிசனம் செய்தேன். சற்குருநாதன் அப்போது கூறியவை என்னைத் திகைக்க வைத்தது. நான் அதிர்ச்சியால் ஆடிப்போனேன். ஸ்ரீ பூண்டி மகான் அப்போது கூறியது "**கவிதையா! பற்றா! விடலையா?**" என்பதுதான். எல்லாம் அறிந்த ஞான குருவைப் பற்றி இவ்வாறு எழுதிவிட்டோமே என்று அவரது காலைத் தொட்டு வணங்கி மானசீகமாக மன்னிக்க வேண்டினேன். அவர் தம் அருட் பார்வை என் மீது பட்டுத் தேங்கியது. தெளிவுற்ற மனநிம்மதியுடன் பள்ளிக்குச் சென்றேன்.

பள்ளியில் இருந்து வீடு திரும்பினேன். மகானையும் தரிசனம்

செய்து மீண்டும் மீண்டும் மன்னிப்பு வேண்டினேன். இரவில் மீண்டும் ஒரு கனவு! நல்ல உறக்கம். கனவில் பூண்டி பெரியவர் ஞானமுதலியார் என்னை மஹானிடம் அழைத்துச் செல்கிறார். மஹான் ஒரு தேவலோகத்தில் இருந்தார். அவருடன் ஒரு ஞானி இருந்தார். என்னைப் பார்த்த பூண்டி மகான் பல பீரோக்களைக் காட்டி திறக்கச் செய்து தேவையானவற்றை (பொன், பொருள்) 'எடுத்துக்கொள்' என்றார். எனக்குத் தேவையில்லை என்றேன். பக்கத்தில் இருந்த ஞானி ஆங்கிலத்தில் "There you are" என்று தட்டிக் கொடுத்தார். கண்விழித்து மகானை வணங்கி உறங்க முயன்றேன். உறக்கமில்லை. அதிகாலையிலேயே பூண்டி சென்று பூண்டி மகானிடம் என் கனவைப் பற்றிக் கூறினேன். அவர் பதிலில் 'நல்லது போய் வா' என்பது மட்டும் புரிந்தது. மற்றவை ஏதும் எனக்குப் புரியவில்லை என்றேன். விபூதி பூசி 'போய் வா! நல்லது' என்று மீண்டும் கூறினார். அதிசயத்தை அசை போட்டவாறே பள்ளிக்குச் சென்றேன். மகான்களை விமர்சிப்பது தவறு என்பதை கனவின் மூலம் புரிய வைத்த ஸ்ரீ பூண்டி மகானின் அருளை எண்ணி எண்ணி நெகிழ்ச்சியுற்றேன்.

ஸ்ரீ பூண்டி மகான் சமாதி அடைவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னர் நடைபெற்றது. நான் காட்பாடி கல்வியியல் கல்லூரியில் B.Ed. பயிற்சியில் சேர்ந்துள்ளேன். தேர்வு எழுத உள்ளேன் என்றேன். பூண்டி நண்பர் எழுத்தர் M. நடராசன் தன் பேனாவை பூண்டி மகானிடம் கொடுத்து ஆசீர்வதித்து என்னிடம் கொடுக்கச் சொன்னார். ஸ்ரீ பூண்டி மகானும் ஆசீர்வதித்து பேனாவைக் கொடுத்தார். B.Ed. தேர்ச்சி பெற்றேன். உதவித் தொடக்கக் கல்வி அலுவலராக பணியாற்றி சற்குருநாதன் அருளால் பணிநிறைவினை மனநிறைவுடன் பெற்றேன். எல்லாம் ஞான சற்குருநாதன் அருளால் தான் நடைபெற்றது.

என் குடும்பத்தில் சகோதரனின் திருமணத்தை ஞான சற்குருநாதன் திருமணமண்டபம் பூண்டியிலேயே நடத்தினோம். பூண்டி மகான் அருளால் நலம் பல பெற்று வளமுடன் வாழ்கின்றனர்.

*எனது ஒரே மகன், மூன்று மகள்கள் திருமணங்களும் ஸ்ரீ பூண்டி மகானின் மானசீக அருட்பார்வையால் நடைபெற்றது. எல்லோரும் நலமாக உள்ளனர். எந்தப் பிரச்சனையானாலும் ஸ்ரீ பூண்டி மகானிடம் வேண்டுதல் செய்தால் நல்லவிதமாக நடைபெறும் என்பது எனது திடமான நம்பிக்கை.*

*அனைவரும் ஸ்ரீ பூண்டி மகானை வணங்குவோம். அவரது அருட்பார்வையால் நலம் பல புரிந்து வளம் பல பெற்று வாழ்வோம் பல்லாண்டு.*

*'ஞான சற்குருநாதன் பூண்டி மகான் திருவடிகளே சரணம்'*

*குரு வாழ்க! குருவே துணை.*

**நேர்காணல்: 77**
**20.10.2009, பூண்டி**

## இராமலிங்கம், வயது: 85, கடலாடி.

*ஸ்ரீ சுவாமிகளை முதன்முதலில் கிருத்திகை கோவில் அருகில் தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீ சுவாமிகளை அழைத்துச் சென்று உணவளிக்க வேண்டும் என்று என்னோடு வந்த மைத்துனரிடம் கூறினேன். சுவாமிகளை வேண்டியதும் கிளம்பினார். வழியில், சுவாமியின் தோளில் உள்ள மூட்டையை நாங்கள் எடுத்துச் கொள்கிறோம் என்று கூறினோம். சுவாமி வேண்டாம் என்றார். மீண்டும் மீண்டும் நாங்கள் வேண்டியதால் எங்கள் கையில் தந்தார். அது சிறிய மூட்டையாக இருந்தாலும் எடுத்துக் கொண்டு நடக்க எங்களால் முடியவில்லை. எங்கள் துன்பத்தைப் பார்த்த சுவாமிகள் மூட்டையை வாங்கிக் கொண்டு அவர் தோளில் மாட்டிக் கொண்டார். எங்களுக்கு அந்த மூட்டை பாரமாக இருந்தாலும் சுவாமிகளுக்கு சிறிதளவுகூட பாரம் இருப்பதாகத் தோன்றவில்லை. நாங்கள் வீட்டிற்குச் செல்வதற்குள் கதவு பூட்டியிருந்தது. "***அங்கு ஒண்ணுமில்லை. ஏன் போறீங்க***" *என்றார் சுவாமி. அப்போது என் மனதில் வருத்தம் ஏற்பட்டது. என் மைத்துனர் வீட்டினுள் சென்று பார்த்தபோது பாத்திரங்கள் காலியாக இருந்தது.* "**நான் சொன்னால் கேட்கவில்லை நீங்கள்**" *என்றார் சுவாமி. நாங்கள் நிலத்தின் அருகில் இருப்பதாக நினைத்து எங்களுக்காக உணவு சமைத்து நிலத்துக்கு எடுத்துச் சென்று விட்டனர் வீட்டுப் பெண்மணிகள். இனி செய்வதற்கு ஒன்றுமில்லாமல் கடைக்குச் சென்று பழம், ரொட்டி வாங்கி வந்து அளித்தோம். ஸ்ரீ சுவாமிகள் சாப்பிட்ட பிறகு தண்ணீர் குடித்துச் சென்றார்.*

*பூண்டியில் திண்ணை மீது ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்த பிறகு 15-20 நாட்களுக்கு ஒரு முறை நான் காலையில் குளித்துவிட்டு கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துச் செல்வேன். அச்சமயத்தில்*

நல்லது, கெட்டதை சுவாமி கூறுவார். என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை. ஸ்ரீ பூண்டி மகானின் தரிசனத்திற்கு வந்து “**சுவாமி! என் மனைவி உடல்நிலை சரியில்லை. அதற்கு தீர்வு என்ன?**” என்று மனதில் நினைத்துக் கொண்டேன். சுவாமி என் பக்கம் உற்றுப் பார்த்து “**நீ பண்றது வீண் முயற்சி**” என்றார். எதற்கு சுவாமி என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான் “**ஒரு விவசாயி கிணறு வெட்டுகிறான். பாறை வருது என்று நினைத்துக் கொண்டு போ**” என்றார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு சேவைகள் புரிந்தால் நான் செல்வந்தராகலாம் என்று மனதில் பேராசையோடு வந்து சுவாமியின் முன் நின்றவுடனே ஸ்ரீ பூண்டி சுவாமி என்னை ஒருவாறு நோக்கி அப்படி உட்காருமாறு கைகளால் சைகை செய்தார். திண்ணைக்குப் பக்கத்தில் கீழே அமர்ந்தேன். “**வீண் முயற்சி வேண்டாம். விட்டுவிடு அதை**” என்றார் சுவாமி. என்னுள் இருந்த கோரிக்கைக்கு அதுவே பதில் என்று நினைத்தேன். சுவாமியின் பாதத்தில் எறும்பு கூடு கட்டி மேய்ந்து கொண்டு இருந்ததால் கையால் தள்ள முயற்சித்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி என் கையை பிடித்துக் கொண்டு “**ஆத்மா. சாப்பிடட்டும். அவசரப்படாதே**” என்று கூறினார். நான் என் முயற்சியை விட்டுவிட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் முகத்தை துண்டால் துடைத்து தாடி, மீசையை கோதி விட்டேன். சுவாமி சட்டைப்பையில் கையை விட்டு பீடியை எடுத்தார். நான் தீக்குச்சி பற்ற வைத்தவுடன் பீடி பற்ற வைத்துக் கொண்டார். “**நல்லது சென்றுவா**” என்று கூறி திருநீற்றை கையில் அளித்தார் பூண்டி சுவாமி.

என் காலில் ஆணி இருந்தது. அதற்கு ஏதாவது மூலிகைகள் கேட்டு அறிந்து கொள்ள வேண்டுமென்று மனதில் நினைத்துக் கொண்டு வந்தேன். ஸ்ரீ பூண்டி மகான் “**வீண் முயற்சி. வேண்டாம் உனக்கு**” என்றார். நான் சுமார் பத்து, பதினைந்து முறை சுவாமியை கேட்டாலும் கூறவில்லை. அப்படியாவது சில மூலிகைகளைத் தெரிந்து கொண்டு அவ்வைத்தியத்தால் பணம் சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற என் எண்ணத்தால் தான் சுவாமிகள் கூறவில்லை என்று எண்ணினேன்.

என் மனைவிக்கு வைத்தியம் செய்விப்பதற்கு ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டே ஸ்ரீ

பூண்டி சுவாமியிடம் வந்தேன். என் எண்ணத்தை அறிந்து கொண்ட ஸ்ரீ பூண்டி சுவாமிகள் என் பக்கம் உற்று நோக்கியவாறு சிறிது நேரத்தில் தியானத்தில் சென்றார். நான் மௌனமாக திண்ணைக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டேன். சிறிதுநேரம் கழித்து சுவாமி தியானத்தை முடித்தார். “**சுவாமி தேநீர் வாங்கி வரட்டுமா?**” என்று கேட்டேன். “**நல்லது. வாங்கி வா**” என்றார். வாங்கி வந்து தந்தேன். சுவாமி பதில் எதுவும் கூறவில்லை. நான் கிளம்பிச் சென்று விட்டேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக கிளம்பி வரும் வழியில் எனக்கு மிகவும் பசித்தது. நான் டிபன் சாப்பிட்டபிறகு சுவாமிகளுக்கு நாலு இட்லி, 2 வடை பொட்டலம் கட்டிக் கொண்டு வந்து சுவாமியின் முன் நின்றவுடனே “**இது செரிக்குமா. செரிக்காதா. எதுக்கு அப்படி வாங்கி வந்தே**” என்றார் பூண்டி சுவாமி. நான் எப்போது வந்தாலும் டிபன் வாங்கி வந்து சுவாமிக்கு தந்தவுடன் நான் சாப்பிடுவேன். நான் செய்த தவறு புரிந்தது. மேற்கு திண்ணை மீது கிழக்கு பக்கம் பார்த்தவாறு பத்மாசனத்தில் அமர்ந்திருந்தார் பூண்டி சுவாமி. ஒரு பாதம் மேலே எடுத்து காண்பித்தார். பூண்டி சுவாமியின் கீழ் மல ஜலம் சேர்ந்து போய் இருந்தது. “**நீ வாங்கி வந்தது இதற்கு சமம்**” என்றவாறு காண்பித்தார் என்று புரிந்து கொண்டேன். எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் மனதில் வருத்தத்துடன் அங்கேயே கீழே அமர்ந்து கொண்டேன். ஒரு மணி நேரம் கழித்து பூண்டி சுவாமி, “**இந்த கருமம் பிடிச்சவன் எல்லாம் எதுக்கு இப்படி ஓடி வர்றான்**” என்றார். யார் சுவாமி என்று கேட்டேன். “**சொல்றேன்**” என்றார் சுவாமி. சிறிது நேரத்தில் குரும்பேரி சுவாமி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் பாதங்களில் பணிந்தார். நான் எழுந்து ஒரு பக்கமாக நின்று கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகான் குரும்பேரி சுவாமிக்கு திருநீறு குங்குமம் அளித்து “**நல்லது-உட்காருங்க**” என்றார். அவரும் அமர்ந்து கொண்டார். இருவரும் சிறிதுநேரம் தேவபாஷையில் பேசிக் கொண்டனர். பிறகு அவர் எழுந்தவுடனே ஸ்ரீ பூண்டி சுவாமிஒரு வாழைப்பழத்தை எடுத்துக்கொண்டு சிறிது சாப்பிட்டு மீதியை குரும்பேரி சுவாமிக்கு அளித்தார். அவர் விடைகோரினார்.

**“நல்லது. சென்று வாருங்கள்”** என்றார் சுவாமி. அவர் கிளம்பிய பிறகு சுவாமி எனக்குத் திருநீறு அளித்தார்.

என் மனைவி பித்து பிடித்தவர் போல் நடந்து கொள்வார். சாப்பிடுவது, வெளியே போவது என்று ஓரிடத்தில் இருக்கமாட்டார். சுவாமியிடம் அழைத்து வரவேண்டும் என்று முயற்சி செய்தாலும் எங்காவது சென்று மறைந்து கொள்வார். எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் மனதில் வருத்தத்துடன் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி, **“சுவாமி! என் மனைவிக்கு நல்ல புத்தியை அளித்து உங்கள் பாதங்களில் வந்து வணங்குமாறு ஆசிர்வதியுங்கள்”** என்று மனதில் வேண்டினேன். சுவாமி **“வீண் முயற்சி வேண்டாம்”** என்றார். **“நான் மருந்து, மந்திரம், தந்திரங்கள் எல்லாவற்றையும் முயற்சி செய்தாலும் பலனில்லை. உங்கள் சன்னதிக்கு வந்தபிறகாவது சிறிது மாறுமா?”** என்று மனதிலேயே வேண்டினேன. **“இன்னும் சிறிது நாள் போகட்டும். அவசரப்படாதே’’** என்று சுவாமி கூறினார். வேறு எங்கேயாவது அழைத்துச் செல்லட்டுமா என்று கேட்டேன். **“வீண் முயற்சி வேண்டாம். செலவு வைக்க வேண்டாம்”** என்று சுவாமி கூறினார்.

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு என் மனைவியை அவர் தாய், சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து பலவந்தமாக ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் அழைத்து வந்தார்கள். என் மனைவி இதோ வருவதாகக் கூறி எங்கேயோ சென்று ஒளிந்து கொண்டாள். அன்று அவர்கள் மனத்தளர்ச்சியுடன் திரும்பி சென்று விட்டனர். என் மனைவி ஒரு நாள் விடியற்காலையில் எழுந்து அவள் அம்மாவோடு சுவாமியிடம் சென்று வருவதாக கூறி கிளம்பி பூண்டிக்கு வரும் வழியில் ஒரு மோட்டார் பம்ப் செட் அருகே குளித்து ஈர உடையுடன் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிமுன் நின்றவுடனே **“ஊம். மூதேவி. வா இப்படி”** என்றார் சுவாமி. என் மனைவி சுவாமியின் பாதங்களில் வீழ்ந்தார். **“சரி. நல்லது”** என்று சுவாமி ஆசிர்வதித்து திருநீறு, குங்குமம் அளித்து ஸ்ரீ சுவாமிஒரு வாழைப்பழத்தை உரித்து கையில் பிட்டு சிறிது சாப்பிட்டு மீதியை என் மனைவிக்கு அளித்து சாப்பிடக்கூறினார். அவளும் வாங்கிச் சாப்பிட்டாள். **“நேரா நீ வீட்டுக்குப் போகணும்”** என்று சுவாமி ஆணையிட்டார். என் கிராமத்திற்கு நடந்துவரும் வழியில் அவளின்

தந்தை, சகோதரர்கள், உறவினர்கள் நிறுத்தினாலும் நிற்காமல் "**நான் வீட்டிற்குப் போகிறேன். சுவாமியிடம் சென்று வருகிறேன்**" என்று கூறி நேராக வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அன்றிலிருந்து அவள் வெளியே செல்லவில்லை. நான்கு நாட்கள் கழித்து நான் கிளம்பி வரும்போது என் மனைவியிடம் ஏற்பட்ட மாற்றத்தை நினைத்துக் கொண்டு சுவாமி இன்று என்ன கூறுவார் என்று பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் வந்து நின்றவுடனே "**ஆம். மூதேவி வந்துட்டாளா?**" என்று கேட்டார் சுவாமி. வந்திடுச்சு சுவாமி என்றேன். "**சரி போ! இனிமேல் எங்கும் போகாது. வீட்லயே இருக்கும் பார்த்துக்க**" என்றார் பூண்டி சுவாமி.

ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்காக மீண்டும் என் மனைவியை அழைத்தாலும் வரவில்லை. "**ஸ்ரீ பூண்டி சுவாமி போகச் சொன்னார். திரும்பி வரக்கூடாது என்றார். இனி வர மாட்டேன்**" என்பாள். நான் சுவாமியை தரிசித்துக் கொண்டு மனதில் நினைத்துக் கொண்டால் அவளுக்கு திருநீறு, குங்குமம் அளித்து, கொண்டுபோய் தருமாறு சுவாமி கூறுவார். நான் திருநீறு குங்குமம் எடுத்துக் கொண்டு போய் அளித்தால் வாங்கிக் கொள்வாள். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்த நாளிலிருந்து அவள் ஆரோக்கியமாக இருக்கிறாள்.

சுவாமிகளுக்கு சட்டை தைத்துப் போடவேண்டும் என்று எத்தனைபேர் வேண்டினாலும் அனைவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்காது. யாரோ சிலருக்கு அனுமதி அளிப்பார். நான் ஒரு நாள் சுவாமியிடம் "**சுவாமி! நான் ஒரு சட்டை தைத்து வரவேண்டும் என்று நினைக்கிறேன்**" என்று வேண்டினேன். ஸ்ரீ சுவாமி "**சரி நல்லது தைச்சிகிட்டு வா**" என்று கூறினார். நான் வீட்டிற்கு சென்று முயற்சி செய்தேன். என் தாய், தந்தையிடம் கூறினேன். என் சகோதரர்களிடம் கூறினேன். என் பேச்சை அவர்கள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. எனக்கு பணம் கிடைக்கவில்லை என்று நினைத்துக் கொண்டே நான் ஒரு சட்டையை தைத்து வரமுடியவில்லையே என்ற வருத்தத்துடன் வந்து சுவாமி முன் நின்றவுடனே "**நல்லது. அதற்காக நீ ஒண்ணும் வருத்தப்பட வேண்டாம்**" என்று கூறினார் சுவாமி. அதோடு என் விருப்பத்தை விட்டுவிட்டேன்.

*ஒரு வருடத்திற்கு முன்பு 125 ரூபாய்க்கு ஒரு சட்டை தைத்து திருவண்ணமலையில் உள்ள ஒரு சுவாமிக்கு சமர்ப்பித்தேன். அத்துறவி சட்டையை இரண்டு நாள் போட்டுக் கொண்டு மூன்றாவது நாள் எரித்துவிட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு போடமுடியவில்லை என்று அத்துறவிக்கு அளித்தேன். எனக்கு பூண்டி சுவாமி சொன்னது சொன்னபடியே நடந்தது. எல்லாம் அவர் திவ்ய அருள் ஆகும்.*

**நேர்காணல்: 78**
**21.10.2009, பூண்டி**

**பொன்னம்பலம்**, வயது: 67, ஆரணி.

*நான் சிற்பக்கலை கற்றுக் கொண்டு 1966ல் முதன்முதலில் பூண்டியில் பெருமாள் கோவில் கட்ட ஒப்பந்தம் செய்துகொண்டேன். அப்போது என் வயது 21. பணி ஆரம்பிப்பதற்கு முன்பு நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு ஆசிகள் அளிக்குமாறு வேண்டினேன். "**போயி செய்**" என்றார் சுவாமி. வேலை ஆரம்பித்து கோபுரத்தின் மேற்பகுதியில் பலவிதமான உருவங்களைச் செய்து ஒட்ட வைத்தேன். கடைசியில் கோபுரத்தின் நான்குபக்கமும் எட்டு உருவங்களை சாய்ந்தவாறு கோபுரம்தாங்கி சிலைகளை அமைக்க வேண்டும். எனக்கு அனுபவம் குறைவு. அச்சிலைகளை ஒட்டவைத்த உடனே கீழே விழுந்து விடுகின்றது. எனக்கு என்னச் செய்ய வேண்டுமென்று தெரியவில்லை. ஒரு நாள் பிற்பகலில் அந்த ஆலயத்தின் தர்மகத்தா வீட்டில் உணவு சாப்பிடும் சமயத்தில் எப்படி செய்ய வேண்டும் என்ற யோசனையுடன் குழம்பிக்கொண்டே சாதத்தை கலந்து கொண்டே எங்கோ கவனத்தில் இருந்தேன். அந்த வீட்டு எஜமானி பார்த்துவிட்டு எதற்கு அப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். 'நேற்று ஒட்ட வைத்த சிலைகள் எல்லாம் இன்று விழுந்துவிட்டது. மனதுக்கு வருத்தமாக உள்ளது' என்றேன். அவர் நீங்கள் எதற்கு கவலைப்படுகிறீர்கள். போய் சுவாமியை கேளுங்கள் என்றார். அப்போது ஏப்ரல், மே மாதமாக இருந்ததால் வெயில் அதிகமாக இருந்தது. நான் கிளம்பி சுவாமியிடம் வந்தேன். சுவாமி மட்டும் அமர்ந்து இருந்தார். சுவாமியின் பாதங்களில் வணங்கி ''**சுவாமி கோபுரம்தாங்கி சிலைகளை ஒட்டவைத்தேன். விழுந்துவிடுகின்றன**" என்று கூறினேன். "**போடா விழாது**" என்றார் சுவாமி.* **"என்ன சுவாமி. சிமெண்டால் ஒட்டவைக்கும் பக்குவம் எனக்குத் தெரியும். விழாதுன்னு சொல்றீங்க. சரி. நாளைக்கு விழுந்து விட்டால் மீண்டும் வந்து**

**சொல்கிறேன்**" என்றேன். "**நல்லது**" என்றார் சுவாமி. நான் சென்று அன்று சிலைகளை ஒட்ட வைக்கும் சமயத்தில் என் மனதில் நீங்கள் திண்ணை மீது அமர்ந்து கொண்டு சொல்கிறீர்கள். நான் வேலை செய்பவன். வேலை எப்படி செய்ய வேண்டும் என்று தெரியும். இப்போது ஒட்ட வைக்கும் சிலைகள் சீக்கிரமாக விழுந்துவிட வேண்டும் என்று விருப்பம் இல்லாமல் வேலை செய்து கொண்டு ஒரு செங்கல் வைக்க வேண்டிய இடத்தில் அரை செங்கல் வைத்து கட்டினேன். ஆனாலும் விழவில்லை. அன்று மாலை வரை ஒட்ட வைத்தேன். ஒரு சிலைகூட விழவில்லை. ஆனால் இப்போது ஒட்டவைத்த சிலைகளுக்கு எல்லாம் சிமென்டை மொத்தை மொத்தையா வைத்ததால் விகாரமாக இருந்தது. நாளை பார்க்கலாம் என்று சென்றுவிட்டேன். மறு நாள் கூட நான் சிரத்தையாக வேலை செய்யவில்லை. எட்டு சிலைகளையும் ஒட்ட வைத்த சமயத்தில் அச்சிலைகள் கீழே விழுந்து விட வேண்டும் என்று வேண்டுமென்றே செய்தேன். எதுவும் விழவில்லை. ஒட்ட வைப்பது முடிந்துவிட்டது. சிலைகள் ஒட்டவைக்கும் சமயத்தில் சிமென்ட் அதிகமாக வைத்ததால் மொத்தையாக இருந்தது. மறுநாள் சுத்தி, உளி எடுத்து வந்து அதிகமாக உள்ள சிமெண்டை அடித்து நீக்கும் சமயத்தில் சிலைகள் உடையாமல், கீழே விழாமல் எப்படி இருக்குமோ? நான் பார்க்கிறேன் என்று எண்ணிக் கொண்டே சென்றேன்.

மறுநாள் உளி, சுத்தி எடுத்து வந்து சிமெண்ட் மொத்தைகள் இருந்த இடத்தில் என் முழு பலத்தையும் உபயோகித்து அடித்தேன். ஆனால் அங்கு எதுவரை சிமெண்ட் பெயரவேண்டுமோ அதுவரையே தனியாக பிரிந்து விழுந்தது. அப்படி ஒன்று முடிவடைந்தது. இடையூறு எதுவும் ஏற்படவில்லை. சரி. இரண்டாவதை உடைத்து சென்று சுவாமியிடம் கூறினால் சரியாகிவிடும் என்று எண்ணியவாறே வேலை செய்தேன். முழு மனதுடன் வேலை செய்யவில்லை. ஒரு சிலையும் கீழே விழவில்லை. உடையவும் இல்லை. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து நின்று கொண்டேன். ஒரு பக்கம் பயமாகவும் இருந்தது. அவமானமாகவும்

இருந்தது. நான் சுவாமி பாதங்களில் தலையை வைத்து கெட்டியாக பிடித்துக் கொண்டு, ''**சுவாமி! கோபுரந்தாங்கி சிலைகள் எல்லாம் ஒட்டவைத்து வேலை முடித்துவிட்டேன்**" என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி திருநீறு வைத்து "**சரி நல்லது**" என்று கூறினார். "**சுவாமி நீங்கள் கூறினாலும் கேட்காமல் விழுந்துவிடும் என்றேன். ஆனால் விழவில்லை**" என்றேன். "**நல்லது**" என்றார் சுவாமி. ஸ்ரீ பூண்டி சுவாமியின் மகிமை சக்தி அனுபவமான பிறகு என்னுள் சுவாமியின்பால் பக்தி, அன்பு, பிரியம் எல்லாம் நிறைவாக ஏற்பட்டது. இனி என் வாழ்க்கையில் ஸ்ரீ பூண்டி சுவாமியைத்தான் நம்பவேண்டும் என்கின்ற நம்பிக்கை ஏற்பட்டது.

என் பூர்வீகம் சேத்பட் அருகில் அப்பேடு கிராமம். அங்கு எங்களுக்கு நிலம், வீடு உள்ளது. தாய், தந்தையர் அங்கு உள்ளனர். இனிமேல் எந்த வேலை செய்ய வேண்டும் என்றாலும் பூண்டி சுவாமியிடம் கேட்டு செய்ய வேண்டும் என்று எண்ணினேன். நிலத்தையும், பயிரையும் பற்றிக் கேட்கலாம் என்று ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் "**சுவாமி! IR-8 நெல் புதுசா வந்திருக்கு. நட்டால் நிலத்தில் விளைச்சல் நன்றாக வருமா?**" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "**நடலாமே**" என்றார். அப்படியானால் நாளை அந்த நெல்லை வாங்கி வருகிறேன். உங்கள் கையால் மூணுபிடி போட்டு திருநீறு போட்டுத் தாருங்கள். நான் எடுத்துச் சென்று நாத்து விட்டு நடுகிறேன். அது நன்றாக விளைந்தால் உங்களுக்கு சிறிது அரிசி எடுத்து வருகிறேன்" என்றேன். "**சரி நல்லது**" என்றார் சுவாமி. நான் பூண்டியிலிருந்து உடனே கிளம்பினேன். அப்போது என்னுள் இருந்த வேகம் எதை நினைத்தாலும் அப்பொழுதே செய்ய வேண்டும். மூன்று பேருந்து மாறி எங்கள் கிராமத்திற்குச் சென்றேன். நெல்லை எடுத்து வந்தேன். ஸ்ரீ சுவாமியிடம் தந்தவுடன் மூன்றுபிடி நெல் தந்து திருநீறு அளித்தார். நான் அந்த நெல்லை எடுத்து சென்று நாத்து விட்டு நட்டேன். எங்கள் நிலம் களர் நிலம். என் தந்தை நெல்லைத் தூவ வேண்டும் என்றார். நான் இது பூண்டி சுவாமி அளித்த நெல். நாத்து விட்டு நடவேண்டும் என்று அப்படியே செய்தேன். அந்த விஷயத்தில் எனக்கும், என் தந்தைக்கும் இடையே மனவேறுபாடு

தோன்றியது. நட்ட நாற்று எல்லாம் காய்ந்துவிட்டது. பத்து இடங்களில் நட்டால் ஒரு இடத்தில் பயிர் பசுமையாக தெரிந்தது. மீதி பிழைக்கவில்லை என்று என் தந்தை என்னை அடித்தார். அடிவாங்கிய நான் பூண்டிக்கு ஓடி வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம், **“சவாமி! என் தந்தை உங்களையும், என்னையும் சேர்த்துத் திட்டுகிறார்”** என்றேன். ஸ்ரீ பூண்டி சுவாமி **“நல்லது”** என்றார். **“என்ன சுவாமி! உங்களைத் திட்டுவது கூட நல்லதா?”** என்று கேட்டேன். **“ஆமாம். நல்லது”** என்றார். நான் வீட்டிற்குச் சென்றேன். என் தந்தை நிலத்தில் ஏர் உழத் தயார் ஆனார். இது ஸ்ரீ சுவாமி தந்த நெல்லால் செய்த பயிர். ஏர் கொண்டு உழ வேண்டாம். எப்படியாவது பயிர் நன்றாக வரும் என்று கூறினாலும் கேட்கவில்லை. மீண்டும் பூண்டிக்கு வந்து என் வேதனைகளை எல்லாம் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு கூறிவிட்டு **“சுவாமி! இப்படி நடக்கின்றது. நீங்கள் சும்மா உட்கார்ந்து இருக்கிறீர்கள். உங்களுக்கே இது நியாயமா”** என்று கேட்டேன். ஸ்ரீ சுவாமி **“நல்லது”** என்றார். **“என்ன சுவாமி! எதைக் கேட்டாலும் நல்லது! நல்லது! என்று சொல்றீங்க. அங்கு நிலத்தில் எனக்கும், என் அப்பாவுக்கும் இடையே போராட்டம் நடக்கின்றது. நீங்கள் இங்கே உட்கார்ந்து நல்லது என்கிறீர்கள். இதற்கு ஒரு முடிவு இல்லையா?”** என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் சிறிது நேரம் என்னைப் பார்த்து **“நல்லது”** என்றார். சிறிது நேரம் கழித்து நான் **“சுவாமி! நிலத்தைச் சுற்றி கால்வாய் எடுத்து தண்ணீர் எல்லாம் வெளியே விட்டு நிலத்தை சிறிது காயவிடவா”** என்று கேட்டேன். **“ஆம். ஆம்”** என்றார் பூண்டி சுவாமி. நான் கிளம்பி எங்கள் கிராமத்தை அடைவதற்குள் இரவு ஒன்பது மணி ஆயிற்று. அப்போதே மண்வெட்டியை கையில் எடுத்துக் கொண்டு நிலத்துக்குச் சென்று சுற்றி கால்வாய் எடுத்து தண்ணீரை வெளியே விட்டபிறகு வீட்டிற்குச் சென்று படுத்துக் கொண்டேன். காலைக்குள் நிலத்தில் உள்ள தண்ணீர் எல்லாம் வடிந்து விட்டது. அப்போதும் என் தந்தை என்னை திட்டிக் கொண்டே இருந்தார். ஒரு வாரம் கழித்து நிலத்தில் பிளவு ஏற்பட்டது. நான் மீண்டும் பூண்டிக்கு ஓடி வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் **“சுவாமி! நிலத்தில்பிளவு ஏற்படுகின்றது. எரு போடட்டுமா? இல்லை செம்மண் போடவா?”** என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி

**"ஆமாம்பா! இரண்டும் போடணும்"** என்றார். என் மனதில் **"இவர் ஏர் உழுது நாத்து நட்டா போல இரண்டையும் போடணும் என்கிறாரே. இரண்டும் போடலாம்"** என்று நினைத்து சென்றேன். நான்கு வண்டி செம்மண் ஒட்டி சமமாகத் தூவி அதன் மேல் எரு போட்டு அதன் மேல் தண்ணீர் பாய்ச்சினேன். மூன்று அடி, இரண்டு அடிக்கு ஒன்று என நெல் பயிர் இருந்தது. என் தந்தை இவ்வளவு செலவு செய்து இந்தப் பயிருக்கு உரம் போடுகிறேன் என்று அங்கு யாரோ கூறி இந்த ஆட்டம் எல்லாம் போடுகிறான் என்று என்னை திட்டிக்கொண்டே இருந்தார். ஒரு வாரம் கழித்து அங்கங்கே துளிர் விட்டது போல் தோன்றியது. அதன் பிறகு பத்து நாட்களில் இன்னும் சிறிது அங்கங்கே பசுமையாக தோன்றியது. சிறிது தூரம் பயிர் பசுமையாகத் தெரிந்தது. மொத்தம் 33 சென்ட். 25 நாட்கள் கழித்து மீண்டும் எருபோட்டேன். மருந்தையும் ஸ்பிரே செய்தேன். 35 நாட்களில் ஒன்றுக்கு ஒன்று நெருக்கமாக இருப்பதுபோல் பயிரின் அடிபாகம் கனமாக வந்தது. அப்போது என் தந்தையிடம் கூறினேன். **"என் சுவாமி தந்த நெல்பயிர் பார்த்தீங்களா?"** என்று சவாலாகக் கூறினேன். **"எல்லாம் எரு போட்டதால் வந்தது"** என்றார் மெதுவாக. **"நீங்கள் அறியாமல் சொல்கிறீர்கள்"** என்றேன். பயிர் விளைந்தது. 13 மூட்டை நெல் விளைந்தது. நெல்லை மில்லுக்கு எடுத்துச் சென்று குத்தி 15 படி அரிசி எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிஅருகில் உள்ள சுப்பிரமணிய சுவாமியிடம் அளித்தேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிஅமர்ந்த திண்ணை மீது ஒரு சிறிய சுவாமி சிலை செய்து வைக்க வேண்டும் என்று கமிட்டியார் தீர்மானித்தார்கள். பித்தளையை உருக்கி சிலை செய்ய வேண்டும் என்றார்கள். அந்த சமயத்தில் என் கிராமத்தில் இருந்து பித்தளைப் பாத்திரங்கள், பழைய விளக்குகள் என்று 12 கிலோ எடுத்து வந்து அளித்தேன். அந்த சிலையை உருவாக்குவதற்கு என்னால் முடிந்த வேலையாக நினைத்து செய்தேன்.

நான் வேலை செய்தபிறகு சில இடங்களில் பணத்திற்காக வாக்குவாதம் செய்யவேண்டி இருந்தது. அதற்காக ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் **"சுவாமி! வேலை செய்த பிறகு அனைவரும் ஏமாற்றுகின்றனர்.**

**அதற்கு என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"** என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் "**அதுக்கெல்லாம் அக்ரிமெண்ட் போட்டு பண்ணுப்பா**" என்றார். சரியாக அதே தருணத்தில் எதிரிலுள்ள மண்டபவேலை நடக்கின்றது. கமிட்டித் தலைவர் கோவிந்த ராஜுலு நாயுடு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் "**சுவாமி! பொன்னம்பலம் உங்கள் சிலையை செய்வானா?**" என்று கேட்டார். ஸ்ரீ பூண்டி மகான் "**ஆம். பண்ணுவான்பா**" என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமியின் விக்கிரத்தை செய்யச் சொல்லி இந்த கமிட்டியார்கள் என்ன செய்வார்களோ என்ற பயம் எனக்கு வந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் "**சுவாமி! உங்களை எத்தனை அடி உயரத்தில் வைப்பது**" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான் "**நான்கு அடியில் வைக்கணும்பா**" என்றார். அதன் பிறகு கமிட்டியார் எனக்கு எதையும் கூறவில்லை. நான் மீண்டும் மீண்டும் கேட்டேன். எனக்கு ஸ்ரீ பூண்டிசுவாமி ஆசி வழங்கியதால் முயற்சி செய்தேன். எனக்கு இதுவரை சந்தர்ப்பம் தரவில்லை. தவறாமல் ஒரு நாள் பூண்டி சுவாமி சிலை செய்வேன் என்ற நம்பிக்கை உள்ளது. சுவாமியை என்றும் மறக்க முடியாது.

என் கிராமத்தில் கிழக்குப் பக்கமாக சாலை உள்ளது. அச்சாலை பக்கத்தில் ஒரு கால்வாய். அதன் பக்கத்தில் ஒரு நிலம் உள்ளது. சுமார் 60 வருடங்களாக அந்நிலத்தில் பயிர் செய்யாமல் விட்டு விட்டதால் மண் மேடு போல் ஆகிவிட்டது. செடிகள் வளர்ந்து இருந்தன. அந்நிலத்தின் உரிமையாளர் அந்நிலத்தை வாங்கிக் கொள்கிறீர்களா? என்று என்னைக் கேட்டார். சரி வாங்கிக் கொள்கிறேன் என்று விலை கேட்டேன். சென்ட் ரூ.5 என்றார். நான் எதற்கும் நல்லது என்று பூண்டி சுவாமியிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருகில் நின்று கொண்டு "**சுவாமி! என் கிராமத்தில் நிலம் சிறிது விற்கிறேன் என்கிறார்கள். அதை வாங்கிக் கொள்ளவா?**" என்று கேட்டேன். சுவாமி "**ஆ.. ஆங். வாங்கலாம். கொஞ்சம் பொறு. பார்க்கலாம்**" என்றார். நான் அந்நில உரிமையாளரிடம் ஆறுமாதம் பொறுத்திருங்கள் பிறகு சொல்கிறேன் என்றேன். மூன்று வருடம் முயற்சி செய்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி, "**பார்க்கலாம். இருப்பா**" என்று சொல்வதும், நான்

*அந்நில உரிமையாளரிடம் சென்று சிறிது நாள் காத்து இருக்குமாறு சொல்வதுமாக காலம் கடந்து விட்டது. சென்ட் 5 ரூபாயிலிருந்து ரூ.150 வரை விலை ஏறியது. இருந்தாலும் வாங்க எண்ணினேன். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் "***சுவாமி! ரூ.5 சென்ட்க்கு கேட்டபோது நீங்கள் வேண்டாம் என்கிறீர்கள். இன்று சென்ட் ரூ.150. விலை போகிறது. எப்படி சுவாமி?***" *என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான்* "**ஊ. ஊஹூம். இருப்பா. வாங்கலாம். அவசரப்படாதே**" *என்றார். ஸ்ரீ சுவாமியிடம் எத்தனை முறைக் கேட்டாலும் பலனில்லை என்று கேட்ட போதெல்லாம் பொறுத்திருக்கச் சொல்கிறார் என்று இப்படியே இருந்தால் விலை ஏறிக்கொண்டேயிருக்கும். வாங்க முடியாது என்று நான் சென்று நிலம் வாங்க வேண்டும் என்று எண்ணி மீண்டும் சுவாமியை கேட்காமல் நிலம் வாங்கி பத்திரப்பதிவு செய்து விட்டேன். நான் நிலம் வாங்கிய இரண்டு மாதத்தில் நன்றாக மழை பெய்து பக்கத்திலிருந்த கால்வாயில் தண்ணீர் பொங்கி பாய்ந்தது. சிறிது நாட்கள் கழித்து அந்நிலத்தில் உள்ள செடிகளை நீக்கி டிராக்டரால் உழுது நிலத்தை சமன்படுத்தினேன். இப்போது அந்நிலம் நல்ல நிலமாக மாறியது. விற்றவர் அந்நிலத்தில் நான்கு சகோதரர்களுக்கு பங்கு இருப்பதாக கூறவில்லை. நான் நிலத்தில் சோளம், (கொள்ளு) போன்றவற்றை தூவ ஏற்பாடு செய்யவே மீதி 3 சகோதரர்கள் வந்து நிலத்தில் ஏர் உழ ஆரம்பித்தார்கள். நான் அவர்களிடம் என்னாப்பா. நான் மூன்று வருடங்களாக பேரம் பேசி வாங்கினேன். எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தானே. நீங்கள் செய்வது நியாயமா?" என்று கேட்டவுடனே அவர்கள்* "**எங்கள் சகோதரர்களுக்குள் எத்தனையோ இருக்கும். எங்களை கேட்கவேண்டும் அல்லவா?**" *என்று வாக்குவாதம் செய்தார்கள். எனக்கும் அவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு எங்கள் இடையில் தகராறு வந்தது. அவர்கள் ஆள் வைத்து அடிப்பது, நானும் ஆள் வைத்து அடிப்பது, அவர்கள் ஒருமுறை உழுதவுடன் நான் மீண்டும் சென்று உழுவதும், அவர்கள் ஒருவிதமான விதைகள் போட்டால், நான் வேறு விதவிதைகளைப் போடுவது என்று நடந்துகொண்டு இருந்தது. அவர்களுடையது என் பக்கத்து கிராமம். எங்கள் இரண்டு கிராமங்களுக்கு இடையே நன்றாக*

சண்டை முற்றி என் பக்கம் சிலர் பேசினால் அவர்களுடையதும் நியாயம் என்று சிலர் அவர்கள் பக்கம் பேசுகின்றனர். இரண்டு பக்கமும் கலகம் செய்து நன்றாக வேடிக்கை பார்த்தார்கள். நான் பூண்டிக்கு ஓடி வந்தேன். ஸ்ரீ சுவாமிபேச்சை கேட்காமல் செய்ததற்கு தகுந்த தண்டனை கிடைத்தது என்று இதுவே நல்லபாடம் என்று நினைத்துக் கொண்டு வந்து வரிசையில் நின்று கொண்டேன். ஸ்ரீ சுவாமியை நெருங்க நெருங்க என் கண்களில் கண்ணீர் தாரைத் தாரையாகக் கொட்டியது. ஒரு பக்கம் என்ன சொல்வாரோ என்ற பயம். வாங்கிய நிலம் என்ன ஆகுமோ என்ற மனவேதனை என் உடல் எல்லாம் வியர்த்துக் கொட்டியது. என் முன் பத்துபேர் நின்று இருந்தார்கள். ஸ்ரீ பூண்டி மகான் "**ஆமாம். ஆமாம்பா! நாலு வண்டியில பனைமரம் ஏத்திகிட்டு வந்தாங்க. ஒரு வண்டி இருசு உடைஞ்சி போயிடுச்சு. இனி மூணும் என்ன பண்ணும்பா!**" என்றார். அந்த வார்த்தைகள் எனக்காக சொன்னதுபோல் நினைத்தேன். சுவாமிகளை நெருங்கியவுடன் பாதங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். என் கண்ணீரும் வியர்வையும் சுவாமி பாதங்களை நனைத்தன. ஸ்ரீ பூண்டி மகான் "எழுந்திரு" என்று கூறி திருநீறு வைத்தார். "**சுவாமி! தெரியாமல் வாங்கி விட்டேன். இப்போது நான் என்ன செய்யறது நீதிமன்றத்துக்குப் போகவா? பஞ்சாயத்து வைக்கவா? இல்லை நீங்களே என்னை விடுவிக்கிறீங்களா?**" என்று கேட்டேன். சுவாமி எதுவும் கூறவில்லை. நான் இரண்டு நாட்களாக பூண்டியிலேயே இருந்தேன். சுவாமியிடம் எதுவும் தெரிந்து கொள்ளாமல் வீட்டுக்குச் செல்லக் கூடாது என்று முடிவு செய்தேன். என் தந்தை என்னைத் தேடி வந்தார். நீதிமன்றத்தில் இருந்து நோட்டீஸ் அனுப்பினார்கள் என்று எடுத்து வந்தார். என் தந்தை வந்தவுடனே அறியாமையால் பேசிக் கொண்டிருந்தார். எனக்கு வியர்த்து கொட்டியது. உடனே சுவாமிகளை அப்படி எல்லாம் பேசாதீர்கள் என்று கூறி என் தந்தையை வற்புறுத்தி தொலைவில் அழைத்துச் சென்றேன். நான் நோட்டீஸ் வாங்கிக் கொண்டு தந்தையை சமாதானப்படுத்தி வீட்டிற்கு அனுப்பிவிட்டேன். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் நோட்டீஸை எடுத்து வந்து, "**சுவாமி! நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்கள்.**

**கேஸ் போடச்சொல்கிறீர்களா? பஞ்சாயத்து பண்ண சொல்கிறீர்களா?"** என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான், **"ஆமாம்பா. பஞ்சாயத்து பண்ணனும்"** என்றார். **"சுவாமி நீங்கள் வருவீர்களா?"** என்று கேட்டேன். **"போ. வருகிறேன்"** என்றார். நான் கிளம்பிச் சென்றேன். மறுநாள் பஞ்சாயத்து வைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது அவர்கள் மூன்று கிராம பெரியவர்களை அழைத்து பஞ்சாயத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். நானும் சென்றேன். மனதில் ஸ்ரீ பூண்டி மகானை வேண்டிக் கொண்டேன். எல்லாரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். நான் நின்று கொண்டிருந்தேன். இருந்தவாறு திடீரென ஒருவர் சபையில் வந்து அமர்ந்தார். அவர் புதியவராக இருந்தார். நான் என்றும் இதற்குமுன் பார்த்தது இல்லை. 50 வயதுக்கு மேல் இருக்கும். அனைவரும் நீங்கள் சொல்லுங்கள் என்று ஒருவரையொருவர் பார்த்து கூறிக் கொண்டு இருந்தனர். வந்த மனிதர், **"என்னாப்பா. சொல்லுங்க. சொல்லுங்க என்கிறீர்கள். அவன் ஒண்ணும் தெரியாதவன். நிலம் கொடுக்கிறவங்க, இது நாலு பேர் அண்ணன் தம்பி பங்கு என்று சொல்லி கொடுக்கணுமா இல்லையா. ஒருத்தர் பெரியவன் மட்டும் வித்திட்டு அவங்க மூணு பேரை மோசம் பண்ணா இவன் எப்படி அதுக்கு பொறுப்பு"** என்றார். அங்கிருந்தவர்கள் எல்லாரும் இந்த வாதத்தை அங்கீகரித்தார்கள். அவர்கள் செய்ததே தவறு என்றார்கள். வந்தவரையே அனைவரும் சேர்ந்து சொல்லச் சொன்னார்கள். அவர் **"இந்தாப்பா. வாங்கினவனுக்கு அபராதமா பத்திரத்துக்கு ஆன செலவு அவனே ஏத்துக்கிட்டும். கொடுத்த பணத்தை அவனுக்கு திருப்பிக் கொடுத்திடுங்க. நிலத்தை நீங்களே வச்சிக்கோங்க"** என்றார். அதுவே சரியென்று அனைவரும் ஏகமனதாக ஆமோதித்தார்கள். அங்கேயே அவர்கள் எனக்கு பணமும் அளித்தார்கள். 1500 ரூபாய் வாங்கிக் கொண்டு திரும்பி பார்ப்பதற்குள் வந்த மனிதர் எங்கும் தென்படவில்லை. ஸ்ரீ பூண்டி மகான் அந்த உருவில் வந்த இந்த பிரச்சினையிலிருந்து என்னை விடுவித்தார் என்று அறிந்து கொண்டேன். மறுநாள் காலை ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து பாதநமஸ்காரம் செய்து கொண்டேன். சிரித்துக் கொண்டே, **"சுவாமி, இரவு பஞ்சாயத்து தீர்ப்பு ஆனது"** என்றேன். ஸ்ரீ பூண்டி மகான் **"ஆமாம்பா! வந்தேனே"**

என்றார். "**நீங்கதானா சுவாமி வந்தது**" என்று கேட்டேன். "**ஆமாம்**" என்றார் சுவாமி. "**எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது சுவாமி**" என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் "**நல்லது**" என்றார். "**அப்பணத்தை என்ன செய்யச் சொல்றீங்க சுவாமி. இருக்கிற கிணத்தில பாறை உள்ளது. அதிலேயே ஆழம் தோண்டச் சொல்கீறங்களா?**" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான் "**ஆமாம்பா. தோண்டு**" என்றார். அப்பணத்தால் என் கிணற்றை ஆழம் எடுத்தேன். நன்றாக தண்ணீர் வந்தது. அப்போதிலிருந்து என் பெரியவர்கள் சம்பாதித்த நிலத்திலேயே பயிர் செய்து வருகிறேன்.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் "**சுவாமி! நான் உங்களைப் போல் ஓரிடத்தில் உட்கார்ந்து தாடி வளர்த்துக் கொண்டு சுவாமி ஆகணும். அந்த நிலை எனக்கு வருமா?**" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி மகான் "**ஆம். வரும்பா?**" என்றார். "**எப்போது சுவாமி?**" என்று கேட்டேன். "**வரும். வரும்**" என்றார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு அன்பர்கள் சமர்ப்பித்த காணிக்கைகள் எல்லாம் நிரம்பி இருந்தன. ஸ்ரீ சுவாமிகளுக்கு பின்புறமாக இருந்தவற்றை அவருக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்ள முயற்சி செய்தபோது கையைப் பிடித்துக் கொள்வார். "**சுவாமி! நீங்களும் சாப்பிடமாட்டீர்கள். நானாவது சாப்பிடுகிறேன்**" என்றால் பூண்டி சுவாமி "**அவன் கர்மாவை எடுத்து வந்து வைக்கிறான். அதை எதுக்கு நீ சாப்பிடறே**" என்பார். "**அந்த கர்மாவை தீர்க்க நீங்கள் இருக்கிறீர்கள் அல்லவா**" என்றால் சுவாமிகள் "**ஆம். நல்லது. இப்படி வா!**" என்று கூறி கையைப் பிடித்து இழுத்து திருநீறு வைத்து அனுப்புவார். என் தாத்தாவோடு எவ்வளவு அன்போடு பேசுவேனோ அப்படியே பேசுவேன். அதற்குமேல் எதுவும் யோசனை செய்யமாட்டேன்.

எனக்கு ஸ்ரீ சுவாமிகளின் விக்கிரகம் செய்யச் சொல்லி ஆசிகள் வழங்கினார். அந்த வயதில் என் அனுபவம் குறைவாக இருந்ததால் சந்தர்ப்பம் அளிக்காமல் இருந்து இருக்கலாம். நான் இப்போது ஓரிடத்தில் 63 நாயன்மார்கள் சிலைகள் செய்கிறேன். அவர்கள் சமீபகாலத்தில் அவதரித்த 63 மகான்களின் சிலைகளையும் செய்யுமாறு கூறினார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியைப் பற்றி

அவர்களிடம் கூறினேன். முதல் சிலையாக ஸ்ரீ பூண்டி சுவாமியின் சிலையைச் செய்யச் சொன்னார்கள். அப்படி அவர்கள் மூலம் ஸ்ரீ சுவாமிகளே அருள் புரிந்தார் என்று எண்ணுகிறேன்.

**நேர்காணல்: 79**
**21.10.2009, பூண்டி**

**நாராயணன்**, வயது: 69, ஆற்காடு.

*நான் வங்கியில் கடைநிலை ஊழியனாக வேலை செய்து கொண்டு இருந்தேன். 1965ஆம் வருடத்திற்கு பிறகு எனக்கு பூண்டி சுவாமியை தரிசிக்கும் பேறு கிடைத்தது. நான் முதன்முதலில் ஸ்ரீ சுவாமிகளுக்கு பாதநமஸ்காரம் செய்து கொண்டு எல்லாம் உங்களுக்கே தெரியும் என்று மனதில் நினைத்துத் திரும்பினேன். எல்லோரும் போய் வருவதாக கூறி விடைபெற்றுக் கொண்டிருந்தனர். நானும் என் மனதில் நினைத்துக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகான் "**ஆங். ஆங். போயிட்டு வா**" என்றார். அதன் பிறகு நான்கைந்து முறை தரிசனம் செய்து கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்த பிறகு நான் சிறிது சிறிதாக துன்பங்களிலிருந்து விடுபட்டேன். ஏதாவது மனதில் நினைத்துக் கொண்டால் ஸ்ரீ சுவாமிகளுக்கு தெரியும்.*

*எங்களுக்கு வீட்டில் உணவுக்குப் பற்றாமல் ஒரு நாள் மனதில் கவலையுடன் சுவாமிகளை வேண்டிக் கொண்டேன். என் வீட்டின் முன் உள்ள திண்ணையில் படுத்துக் கொண்டிருந்தேன். என் மனைவி வந்து என்னை எழுப்பினாள். நான் எழுந்து யோசனை செய்து கொண்டே வாசற்படியை பிடித்துக் கொண்டு நின்றேன். அன்று மாலை மூன்று மணிவரை வீட்டில் அடுப்பு பற்றவைக்கவில்லை. ஒரு பிச்சைக்காரன் கையில் பாத்திரம் எடுத்துக் கொண்டு வந்தான். "**பெரிசா வந்திட்டே போய்யா**" என்று வீட்டினுள் சென்று விட்டேன். அப்போது ஏதோ நினைவுக்கு வரவே உடனே வெளியே வந்து தேடினேன். அவர் எங்கும் தென்படவில்லை. நான் மோசம் போய்விட்டேன். அந்த உருவில் வந்தவர் ஸ்ரீ பூண்டி மகான். இனி செய்வது ஒன்றுமில்லை. வீட்டினுள் வந்தேன். அப்போது ஒரு மார்வாடி முப்பது ரூபாய் எடுத்து வந்து என் கையில் தந்து*

உங்களுக்கு தரச்சொன்னார்கள் என்று கூறி சென்றுவிட்டார். அச்சமயத்தில் என்ன நடக்கிறது என்று யோசனை செய்வதற்குக் கூட என் மனம் தயாராக இல்லை. அது சுவாமிகளின் திவ்யலீலை.

ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் மஹாசமாதிக்கு ஒரு வாரம் முன்பு என்னை வருமாறு கனவில் அழைத்தார். நான் கிளம்பி வந்து ஸ்ரீ சுவாமிகளை தரிசித்துச் சென்றேன். நான் சுவாமியிடம் இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்டதில்லை. எல்லாம் அவருக்கே தெரிந்தபோது நான் கேட்டுச் செய்வது எதுவும் இல்லை என்பது என் எண்ணம்.

**நேர்காணல்: 80**
**21.10.2009, பூண்டி**

**இராமகிருஷ்ணன்**, வயது: 65, ஐயம்பாளையம்.

*நான் கையில் பனம்பழம் வைத்துக்கொண்டு காலையில் நடந்து சென்றபோது ஸ்ரீ சுவாமிகள் எதிரில் வந்து என் கையில் உள்ள பனம்பழத்தை கேட்டார். நான் தரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தேன். ஸ்ரீ சுவாமிகள் என்னை விடாமல் பிடித்துக் கொண்டு என்னை அடித்து என் கையிலுள்ள பனம்பழத்தை வாங்கிக் கொண்டார். அப்போது என் வயது பதினாறு இருக்கும். அதன்பிறகு நான் எதுவும் செய்ய முடியாமல் சுவாமிகளின் பாதங்களை வணங்கினேன். ஸ்ரீ சுவாமிகள்* **"நல்லா இருப்ப. போயிட்டு வா!"** *என்றார்.*

*நான் எங்கள் கிராமத்தின் பக்கத்திலுள்ள மலைகளில் சாதாரணமாக ஏறி இறங்குவேன். ஒரு நாள் நான் பர்வதமலை அருகில் வீரபத்திரர் கோவிலில் படுத்து இருந்தேன். அச்சமயத்தில் எனக்கு கனவில் ஸ்ரீ சுவாமிகள் தரிசனம் அளித்து வில்வம், சிறுகுறிஞ்சா, பெரியகுறிஞ்சா, சிறியா நங்கை, பெரியா நங்கை 5 வகை இலைகளை காம்போடு கட்டி எனக்கு அளித்து* **''இந்தா பிடி. உபயோகமா இருக்கும்"** என்றார். **"இதை என்ன செய்வது சுவாமி?"** *என்று கேட்டேன். ஸ்ரீ சுவாமிகள்* **"தேவைப்படும் பிடி அழவேண்டாம்"** *என்றார். அதுவே இன்று என் வாழ்க்கைக்கு வழியானது. அந்த ஐந்து இலைப் பொடிகளோடு எத்தனையோ வியாதிகளை குணப்படுத்த முடியும். இதில் மகாவில்வம் இரத்தத்தை சுத்தப்படுத்த பயன்படும். அந்த ஐந்து இலைகளைக் கொண்டு வைத்தியம் செய்து பிழைக்கின்றேன்.*

*நான் பூண்டிக்கு அடிக்கடி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துச் செல்வேன். எனக்கு ஒரு பெண், ஒரு மகன். மகன் இறந்து விட்டான். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து* **"சுவாமி! எனக்கு ஆண் வாரிசு இல்லாமல் போய்விட்டதே!''** *என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான்* **"உனக்கு அவ்வளவு தாண்டா ருணம். நான் என்ன பண்றது. அது எல்லாம்**

**கடவுளின் இஷ்டம்**" என்றார். என் பக்கம் பார்த்து, "**உன் வாழ்க்கையில் கடைசி வரையிலும் தரித்திராம்சம் வராது**" என்றார் பூண்டி சுவாமி.

ஒரு சமயம் நிலத்தின் அருகில் தகராறு ஏற்பட்டது. ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கூறினேன். ஸ்ரீ சுவாமிகள் "**போயிட்டு வா. முடிஞ்சிடும்**" என்றார். நான் வீட்டிற்குச் சென்றவுடனே பிரச்சினை தீர்ந்து விட்டது.

**நேர்காணல்: 81**
**21.10.2009, பூண்டி**

## சின்னக்குழந்தை அம்மாள், வயது: 74, சிறுவள்ளூர்.

*ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக்கொண்டிருந்த காலத்தில் கேள்விப் பட்டேனே தவிர தரிசனம் செய்து கொள்ளவில்லை. எனக்குத் திருமணம் ஆனபிறகு ஒரு மகள் பிறந்தாள். அதன் பிறகு நான்கு வருடங்களுக்குப்பிறகு ஒரு பெண் பிறந்து இறந்துவிட்டாள். அதன் பிறகு 15 வருடங்கள் வரை குழந்தை பிறக்கவில்லை. அச்சமயத்தில் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். கையில் திருநீறு அளிப்பார். வாங்கிச் செல்வேன். ஒரு நாள் என் சிறிய மாமியார் என்னோடு வந்தார். ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து கொண்ட பிறகு என் சிறிய மாமியார்* **"என் குழந்தைக்குப் பையன் இல்லை. சுவாமி! அதுக்கு ஏதாவது வழிகாட்டுங்க"** *என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமிகள்* **"இருட்டு வீட்டில் வெளிச்சம் வரும்"** *என்று கூறி*

**"காட்டு வழி போனாலும் கள்ளத்தனமானாலும்**
**ஈட்டி முனைபோல நாட்டி வைத்து**
**தும்பிக்கையா நம்பிக்கோன்னு சொல்லு"** *என்று சொன்னார்.*

*அதன் பிறகு எனக்கு ஒரு மகன் பிறந்தான். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் எடுத்து வந்தேன்.* **"முருகன்"** *என்று பெயரிட்டார். அந்த குழந்தை ஆறு மாதம் 17 நாட்கள் உயிரோடு இருந்தது. ஒருநாள் இரவு வயிற்றுப் போக்கு ஆகி மரணம் அடைந்தது. அதன் பிறகு மூன்று வருடங்களுக்குப் பிறகு ஒரு மகன் பிறந்தான். அப்போதே என் வயது 39 ஆயிற்று. என் பெரிய மகன் இறந்துவிட்டான் என்று என் கணவர் பயந்து இரண்டாவது மகனை ஸ்ரீ பூண்டி மகானிடம் எடுத்து வந்து பெயர் வைக்கவில்லை. சிறிது நாட்கள் கழித்து மகனை எடுத்து வந்து சுவாமிகளைத் தரிசித்தோம்.*

*பூண்டியில் ஸ்ரீ சுவாமிகள் திண்ணையில் வீற்றிருந்த போது தைப்பூசம் விசேஷமாக நடக்கும். நாங்கள் எங்கள் கிராமத்திலிருந்து*

வண்டியில் வந்து எங்களுக்குத் தெரிந்த வேலைகளைச் செய்வோம்.

என் சிறிய மாமியார் ஊர் கேட்டவரம்பாளையம். சிறுவள்ளூர் பக்கத்தில் உள்ளது. அவர் நெல்லை வாங்கி அரிசியாக குத்தி விற்பார். என் கணவர் அவருக்கு ஏதாவது வாழ்க்கைக்கு வழி காண்பிக்க வேண்டும் என்று வியாபாரம் செய்து கொள்ள பணம் அளித்தார். அதன் பிறகு வியாபாரத்தில் பணம் வந்தபிறகு தருமாறுக் கூறினார். நானும் என் சிறிய மாமியாரும் சேர்ந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்து செல்வோம். ஒரு முறை தரிசனத்திற்கு வந்தபோது ஸ்ரீ பூண்டி சுவாமி என் சிறிய மாமியாரிடம் "**இனிமேல் குளிக்க வேண்டாம்**" என்றார். அன்றிலிருந்து பதினைந்து வருடங்கள் குளிக்கவில்லை. கால், கை, முகம் மட்டும் கழுவிக்கொள்வார். யாராவது பெண்கள் வற்புறுத்தி ஆடையை மாற்றுவார்கள். அவரிடமிருந்து எந்தவித துர்வாசனையும் வராது. எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார். ஸ்ரீ பூண்டி சுவாமி சொன்ன மூன்று வருடங்களில் ஒரு நாள் இரவு அன்று வெள்ளிக்கிழமை வந்தார். சனிக்கிழமை எங்கள் வீட்டில் விரதம் இருப்போம். நான் என் சிறிய மாமியாரிடம் "**இன்று சனிக்கிழமை. குளித்து விட்டுச் சாப்பிடுங்கள்**" என்றேன். என் சிறிய மாமியார் குளிக்க சம்மதிக்கவில்லை. நான் வற்புறுத்தினேன். அன்று குளித்தார். அந்த பதினைந்து வருடங்களில் அன்று மட்டுமே குளித்தார். பிறகு குளிக்கவில்லை. என் சிறிய மாமியார் நீ சொன்னதால் குளித்தேன். உனக்கு ஏதோ நல்லது நடக்கப் போகிறது. ஸ்ரீ பூண்டி சுவாமிகூட எதுவும் சொல்லவில்லை என்றார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிபற்றி என் சிறிய மாமியார் பாடல்கள் பாடுவார். திருப்புகழில் முதன் முதலில் முருகப்பெருமான் அருணகிரிநாதரிடம் கூறிய பாடலைக் கற்றுக் கொடுக்கும்படி வற்புறுத்துவார். அப்போது என் சிறிய மகன் ஆறாவது படித்துக் கொண்டு இருந்தார். மகனைக் கேட்டு கற்றுக் கொள்ளச் சொன்னேன். அவர் யாரும் தனக்கு அந்தப் பாடலை கற்றுத் தரவில்லை என்ற வருத்தத்தால் ஸ்ரீ பூண்டி சுவாமியையே நினைத்துக்

*கொண்டு இருந்தார். ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமி அவர் தலைக்கு அருகில் அமர்ந்து கொண்டு அவருக்குப் பாடலை கற்றுத் தந்து* **"சொல்லு. வரும்"** *என்றாராம். அவர் அந்த பாடலைப் பாடும் சமயம் வரை கண்களில் கண்ணீர் வழிந்தோடும். அவர் வியாபார விஷயமாக பக்கத்து கிராமங்களுக்குச் சென்றபோது திருப்புகழைத் தொடர்ந்து பாடுவார். ஸ்ரீ பூண்டி சுவாமிமீது பக்தி பரவசத்துடன் அவரே சிலவற்றையும் பாடுவார். சுற்றுப்புற மக்கள் கூடி நின்று பாடல்களை கேட்பார்கள். ஒரு சமயம் நானும், என் சிறிய மாமியாரும் ஸ்ரீ சுவாமிகளின் தரிசனத்திற்காக வந்தபோது ஸ்ரீ பூண்டி சுவாமி* **"பத்தாங்கிளாஸ் படிச்சவங்க எல்லாம் உட்கார்ந்த இடத்திலேயே இருக்காங்க. ஒண்ணாங் கிளாஸ் படிச்சவங்க ஊர் ஊரா போயி வராங்கப்பா"** *என்று கூறி கலகலவென்று சிரித்தார்.*

*ஒரு நாள் சிறிய மாமியார் உட்கார்ந்து பாடிக்கொண்டு இருந்தபோது அங்கு சிலர் கும்பல் கூடி கேட்டுக் கொண்டு இருந்தனர். அந்த சமயத்தில் என் கணவர் அந்தப் பக்கமாக வீட்டிற்கு வரும்போது அவர் சித்தியைப் பார்த்து* **"சித்தி உட்கார்ந்து பாட்டு பாடிக்கிட்டு இருக்காங்க. வாங்கின பணம் தரணும் என்கிற எண்ணம் இல்லை போல் இருக்கு. சாப்பிடுவது, பாடல் பாடுவது, வியாபாரம் செய்ய சரியாகப் போகிறது"** *என்று மனதில் நினைத்தார். இரவு ஏழரை மணிக்கெல்லாம் சாப்பிட்ட சிறிது நேரத்தில் அவருக்கு அதிகமாக காய்ச்சல் வந்தது. என் கணவரை எடுத்து எடுத்துப் போடுகிறது. போர்வை போட்டு எத்தனைபோர் அழுத்திப் பிடித்தாலும் பிடிக்க முடியவில்லை. எனக்கு பயம் உண்டாகி ஸ்ரீ பூண்டி சுவாமியை மனதில் வேண்டி சுவாமி அளித்த திருநீற்றை வீட்டில் இருந்த சிறிதளவை அவருக்கு வைத்தேன். இரவு இரண்டு மணிக்கு திடீரென எழுந்து அமர்ந்தார். தண்ணீர் தாகம் எடுத்தால் தண்ணீர் தருகிறேன் என்றேன். வேண்டாம் என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமி என் தலைக்கருகில் வந்து அமர்ந்து கொண்டார். என் தலைமீது கை வைத்தார். என் ஜுரம் நன்றாகிவிட்டது என்றார். அன்று நண்பகல் என் கணவர் அவர் சித்தியைப் பற்றி நினைத்ததை என்னிடம் கூறினார். அதற்காகத்தான் எனக்கு இந்த பரீட்சை என்றார். இனிமேல் அந்த பண விஷயத்தைப்*

பற்றி பேச்சே எடுக்க மாட்டேன் என்று கூறி மறு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று பூமாலையை சுவாமிக்கு போட்டு வணங்கி வரலாம் என்றேன். சரி என்றார். மறுநாள் தயிர் சாதம் செய்து கொண்டு வந்தோம். எங்கள் கிராமத்தில் பேருந்துக்காக எதிர்பார்த்து சிறிது தூரம் நடந்து மாதிமங்கலம் கூட்டு ரோட்டுக்கு வந்தோம். அங்கும் எந்தப் பேருந்தும் நிற்கவில்லை. ஐந்தாறு மணி நேரம் எதிர்பார்த்துவிட்டு நடந்தே வந்தோம். என் சிறிய மாமியாரும் எங்களோடு வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி முன் வந்து நின்றவுடனே **"மக்கள் நேர் வழி இருக்கும் போது மூலை மூலைக்கு போயிட்டு வராங்கப்பா"** என்றார். அன்று நாங்கள் ஸ்ரீ சுவாமிக்கு பூமாலை, வேஷ்டி சமர்ப்பித்துக் கொண்டு பாத நமஸ்காரம் செய்து கொண்ட பிறகு திருநீறு வைத்தார். நாங்கள் எடுத்து வந்த தயிர் சாதத்தை சாப்பிடவேண்டும் என்று பக்கத்தில் உள்ள இடத்திற்குச் சென்றோம். அங்கு காப்பலூர் சண்முகம் தென்பட்டார். அவரையும் சாப்பிட அழைத்தோம். அவரும் வந்தார். அவருக்கு உணவளித்த பிறகு காப்பலூர் சண்முகம் "**சிறிது நேரத்திற்கு முன்பு தனக்கு நன்றாக பசியெடுக்கின்றது**" என்று ஸ்ரீ பூண்டி சுவாமியின் முன்பு சென்று நின்றவுடனே "**போப்பா. தயிர் சாதம் வரும்**" என்றாராம் சுவாமி. "**சொன்னபடியே தயிர் சாதமும் வந்தது**" என்றார். நாங்கள் வீட்டிலிருந்து கிளம்பியதிலிருந்து பேருந்து எதையும் நிற்காமல் செல்லச் செய்து நாங்கள் திரும்பி வீட்டிற்குச் செல்கிறோமா? திரும்பி ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வருகிறோமா? என்று எங்களை பரீட்சித்தார் சுவாமி.

நாங்கள் கிளம்பி நட்சத்திரக் கோவில் அருகே சென்றோம். என் கணவர் சட்டையிலுள்ள பணத்தை எடுத்து எண்ணி வைத்துக் கொண்டார். கடையில் வேட்டி வாங்கியபோது கடைக்காரர் சில்லரை அதிகமாகத் தந்துவிட்டதால் மீண்டும் சென்று தந்து விட்டு வருவதாகக் கூறினார். எப்போதாவது பூண்டிக்கு மீண்டும் செல்லும்போது தரலாம் என்றேன். எங்களை வீட்டிற்கு போகச் சொல்லிவிட்டு என் கணவர் பூண்டிக்குச் சென்று கடைக்காரர் அதிகமாக அளித்த பணத்தை திருப்பி தந்து விட்டு

*வந்தார். இது கூட ஸ்ரீ பூண்டி சுவாமி வைத்த பரீட்சை என்று எண்ணினோம்.*

*தென் நாட்டிலிருந்து ஒரு பெரிய விவசாயி ஸ்ரீ பூண்டி சுவாமிதரிசனத்திற்கு வந்தார். அவர் ஸ்ரீ சுவாமியை தரிசித்துக் கொண்டு திருநீறு அளிக்குமாறு கேட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமி* "**திருநீறு தரேன். இரவு இங்கேயே இரு**" *என்று கூறினார். அவர் அன்றிரவு பூண்டியிலேயே படுத்துக் கொண்டார். மறுநாள் காலை அவர் கிராமத்திலிருந்து அவரைத் தேடி வந்த ஆள்* "**இரவு பசுக்கொட்டகை விழுந்துவிட்டது. எல்லா பசுவிம் அதில் சிக்கி இறந்துவிட்டன**" *என்றார். விவசாயி பூண்டி சுவாமி முன் நின்று அழுதார். ஸ்ரீ பூண்டி சுவாமி* "**எதுக்கும் கவலைப்படாதே. போயிட்டுவா**" *என்றார். அந்த விவசாயி அங்கிருந்தால் ஆபத்து வரும் என்று பூண்டி சுவாமி அவரை பூண்டியிலேயே இருக்கச் செய்து காப்பாற்றினார். தினந்தோறும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் அற்புத லீலைகள் எத்தனையோ நடக்கின்றன.*





**நேர்காணல்: 82**
**20.03.2009, பூண்டி**

**M. ஆறுமுகம்**, வயது: 60, பூண்டி.

*நான் விவசாயக்கூலியாக பணிசெய்து கொண்டிருந்தேன். என் பதினெட்டாவது வயதில் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். ஒருநாள் நான், என் நண்பர் சுப்பராயன்,புதூரான் மூவரும் சேர்ந்து வாடகைக்கு மிதிவண்டியை எடுத்துக் கொண்டு இரண்டாவது ஆட்டம் சினிமாவுக்கு கிளம்பிச் செல்லும்போது, ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று வணங்கி நின்றோம்.* "**சுவாமி! சென்று வருகிறோம்**" *என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான்* "**அது எவ்வளவு டயர். அதுல மூணுபேர் போனால் இடையில டயர் வெடிச்சா யாரை குறை சொல்லுவாங்க. எங்கப் போறீங்க. எனக்கு நல்லாத் தெரியும். எந்த தைரியத்தில நீங்க கரும்பு உடைக்கறத்துக்கு போறீங்க. வேலி எதுக்கு போட்டு இருக்காங்க. எப்படி நீங்க வேலி தாண்டி கரும்பு உடைப்பீங்க. எந்த மரத்தில தேங்காய் இருக்கு அறுத்துக்கலாம்னு நினைக்கிறீங்க. போகலாமா. போயிட்டு வாங்க**" *என்று கூறினார். அப்போது இரவு ஒன்பது மணியிருக்கும். எங்கள் உள்ளத்தை அறிந்திருந்தார். நாங்கள் சினிமாவுக்கு போகும்போது கரும்பு உடைத்து சாப்பிட்டு இரண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டு திரும்பி வரும் சமயத்தில் தென்னை மரத்தில் தேங்காயைப் பறித்து மறுநாள் விற்று சைக்கிளுக்கு வாடகை அளித்து சினிமாவுக்கு செலவு செய்தவருக்கு பணம் தரலாம் என்று எண்ணி திட்டம் போட்டு மூவரும் சென்றோம். சுவாமி அப்படி சொல்லியதால் எங்களுக்கு தைரியம் போதவில்லை. பின்னே திரும்பிச் சென்று மிதிவண்டியை கடையில் அளித்துவிட்டு அன்று இரவு வாடகை 75 காசு தந்துவிட்டு வீட்டிற்குச் சென்று விட்டோம்.*

*ஒரு நாள் வீட்டில் சாப்பிட எதுவுமில்லை. வீட்டில் எல்லாரும் பசியோடு பட்டினி இருந்தார்கள். மாலை ஆறுமணியானது. எனக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை. வீட்டில் அனைவரும்*

*எதிர்பார்த்திருந்தனர். நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமிமுன் வந்து நின்று கொண்டேன். ஸ்ரீ சுப்பிரமணியம் ரூ.4.50 தந்து இப்போதைக்கு இவ்வளவு தான் உள்ளது என்று என் கையில் அளித்து மறுநாள் வேலைக்கு வரச்சொன்னார். என் குடும்பநிலைமையை அறிந்து ஸ்ரீ பூண்டி சுவாமிகள் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் மூலமாக எனக்கு பணம் அளித்தார். அன்று இரவு குடும்பத்தினர் அனைவரது பசியை போக்கிய ஸ்ரீ பூண்டி சுவாமி என்னை நல்ல வழியில் நடத்திய மகான்.*

**நேர்காணல்: 83**
**20.01.2010, பூண்டி**

**சுப்பிரமணியன்**, வயது: 65, மோட்டூர் கிராமம்.

எனக்கு பூ வியாபாரம், விவசாயம் போன்றவை வாழ்க்கை ஆதாரங்கள். நான் தினந்தோறும் காளியம்மன் கோவிலுக்கு மாரியம்மன் கோவிலுக்கு தண்ணீர் எடுத்துச் சென்று ஊற்றி பூஜை சமயத்தில் பம்பை வாசிப்பேன். என் சிறு வயதில் சுமார் ஒன்பது வயதில் பசுக்களை மேய்க்கும்பொழுது ஸ்ரீ சுவாமிகள் அவ்வழியில் செல்லும்போது பார்ப்பேன். ஒவ்வொருமுறை பின்னாலேயே செல்வேன். ஒரு நாள் "**சுவாமி! அந்த மூட்டை என்ன? சுமந்துகிட்டு போகிறீர்களே. பாரமா இருக்கா?**" என்று கேட்டேன். ஸ்ரீ சுவாமிகள் பதில் பேசாமல் சென்றார். ஒரு நாள் சில சிறுவர்களோடு சேர்ந்து நானும் ஸ்ரீ சுவாமியின் பின்னாலேயே சென்றேன். நட்சத்திரக்கோவில் அருகே உற்சவமூர்த்தியை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் சகடை மேலே அமர்ந்து இருந்தார். சிறுவர்கள் பயந்து அருகே செல்லவில்லை. நான் சுவாமி அருகில் சென்று வணங்கி நின்றவுடனே "**வா. சுப்பிரமணி! இங்க வந்தியா! என்னை பார்க்கிறத்துக்கு**" என்று அன்புடன் கேட்டு, "**அப்பா வீட்ல இருக்காரா**" என்று விசாரித்தார். இருக்கிறார் என்றேன். சிறிது நேரம் கழித்து கிளம்பி வந்துவிட்டேன்.

ஸ்ரீ சுவாமிகள் ஒவ்வொரு சமயத்தில் எங்கள் தெருவில் நடந்து வந்து எங்கள் குடிசை வீட்டின் முன் நிற்பார். என் தந்தை சுவாமியை அன்புடன் அழைத்து திண்ணை மீது அமர வைத்து, காளிகா ஆலயம், மாரியம்மன் ஆலயத்திலும் பூஜை செய்து நைவேத்தியம் வைத்து எடுத்து வந்த பிரசாதத்தை சுவாமிகளுக்கு ஊட்டி, தண்ணீர் அருந்தச் செய்து, முகம் கழுவி நன்று துடைத்தபிறகு ஸ்ரீ சுவாமிகள் கிளம்பிச் செல்வார்.

ஒரு முறை என் தந்தை ஸ்ரீ சுவாமியிடம் "**சுவாமி! நாங்கள் இப்படியே இருந்தால் எங்கள் குடும்பம் எப்படி சுவாமி?**'' என்று கேட்டார்.

ஸ்ரீ சுவாமிகள் **"நீ வருங்காலத்தில் நன்றாக இருப்பாய். உங்கப் பையனுக்கு பூண்டியில பொண்ணு எடுக்கபோற. அந்தப் பொண்ணுக்கு நான் தான் பராசக்தின்னு பெயர் வைச்சேன்"** என்று கூறி கிளம்பிச் சென்றார்.

என் அக்காவுக்கு மாமியார் ஊர் பூண்டி. எங்கள் கிராமத்திற்கு பக்கத்தில் உள்ளது. நான் அடிக்கடி பூண்டிக்கு வருவேன். ஒருமுறை மழை அதிகமாக கொட்டியதால் பூண்டிக்கு பக்கத்திலுள்ள ஆறு நிறைந்து வழிந்தது. அன்று நான் பூண்டியில் இருந்தேன். அக்கிராமத்தில் பலர் கலசபாக்கத்தை நோக்கி ஓடினார்கள். நானும் ஓடினேன். கலசபாக்கம் போகும் வழியில் திரெளபதியம்மன் கோயில் அருகில் அனைவரும் கும்பல் கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். நானும் ஆவலுடன் பார்த்தேன். ஆற்றின் வெள்ளத்தில் ஸ்ரீ சுவாமிகள் நடந்து கொண்டிருந்தார். ஆற்றில் தண்ணீர் இரண்டாக பிளந்து வழி தந்தது. அங்கிருந்தவர்கள் மகிழ்ச்சியோடும், வியப்போடும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். நானும் அந்த அதிசயத்தை பார்த்த ஆனந்தத்தால் வீட்டிற்குச் சென்று என் அக்காவிடம் கூறினேன். என் அக்கா, மாமா **"நீ எதுக்கு அப்படிப்பட்ட இடத்திற்கு எல்லாம் போனாய்?"** என்று திட்டினார்கள். நான் பொருட்படுத்தவில்லை. சுவாமி பூண்டியில் திண்ணை மேல் அமர்ந்த பிறகு நான் வந்து தரிசனம் செய்து செல்வேன். என் மாமா பூ வியாபாரம் செய்து கொண்டிருந்தார். காலையில் வந்து பூஜைக்கு வேண்டிய மாலை கட்டித் தருவார். என் திருமணத்திற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் **"சுவாமி! திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்"** என்று கூறினேன். ஸ்ரீ சுவாமிகள் **"பண்ணிக்கோ. பராசக்தி என்று நானே பெயர் வைத்தேன். நீ கல்யாணம் பண்ணிக்கோ. சுகமா இருப்பே"** என்று ஆசிர்வதித்தார். நானும் திருமணம் செய்து கொண்டேன். எங்களுக்கு முதல் மகன் பிறந்தவுடனே பெயர் வைக்குமாறு தாழ்மையோடு வேண்டினோம். **"முருகன்"** என்று பெயர் வைத்தார் ஸ்ரீ பூண்டி சுவாமி. இன்று எங்கள் குடும்பத்தில் அனைவரும் சுவாமி அருளால் சுகமாக, சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகின்றோம்.

**நேர்காணல்: 84**
**20.1.2010, பூண்டி**

**குப்புசாமி**, வயது: 65, காப்பலூர்.

*ஸ்ரீ சுவாமிகளை முதன்முதலில் நட்சத்திரக்கோவில் அருகில் தரிசனம் செய்து கொண்டேன். இரண்டாவது முறை ஆற்றில் இருந்தபோது தரிசனம் செய்து கொண்டேன். பிறகு பூண்டியில் திண்ணை மேல் அமர்ந்த பிறகு வந்து தரிசனம் செய்து கொண்டு செல்வேன். ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமிஎன்னைப் பார்த்து* **"எதுக்குப்பா. சும்மா சும்மா வந்து போறே. மாலை கட்டு"** *என்றார். அங்கு நின்றிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளும் கூறினார். அப்போதிலிருந்து நான் தினந்தோறும் வந்து பூமாலை கட்டுவேன். அதன் பிறகு பூஜையை பார்த்துவிட்டு தரிசனம் செய்துசெல்வேன்.*

*ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி எங்காவது வெளியே போக வேண்டுமானால், ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் என்னை இருக்கச் சொல்லிவிட்டு செல்வார். ஸ்ரீ சுவாமிகளை இரவு வேளையில் அமர வைப்பது, படுக்க வைப்பது என்று நான் இருக்கும்போது அருகில் இருந்து செய்வேன். ஒவ்வொரு நாள் இரவில் நான் இங்கேயே இருந்தால் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்களோடு நானும் ஸ்ரீ பூண்டி சுவாமிதிண்ணைப் பக்கத்தில் படுத்துக் கொள்வேன். அப்படி இரவு வேளையில் பூண்டி சுவாமியோடு இருக்கும் சமயத்தில் நிறைய கூறுவார். ஒவ்வொரு சமயம் அவர் விருப்பத்திற்கு பேசிக் கொண்டு இருப்பார். ஒரு நாள் என்னிடம்* **"குடும்பத்தை விட்டுட்டு நீ வரவேண்டாம். இங்கேயும், அங்கேயும் செய்துகிட்டு இரு"** *என்று கூறினார். இரவில் ஸ்ரீ பூண்டி சுவாமியோடு இருக்கும் சமயத்தில் ஆன்மீக வழியில் எப்படி நடக்கவேண்டும் என்று கற்றுத் தருவார். எனக்கு சில வழிகளையும் கூறினார். அவற்றையெல்லாம் என்னால் கடைபிடிக்க முடியவில்லை. யோக சாதனைகள் செய்து காண்பிப்பார். புரிந்து கொள்ள முடியவில்லை. சில வேளைகளில் மௌனமாகப்*

போதிப்பார். பார்த்துதான் புரிந்து கொள்ள வேண்டும்! வெளிப்படையாகக் கூறமாட்டார். சிலவற்றை கண் சைகையால் காண்பிப்பார். இரவில் நான் இருக்கும்போது ஸ்ரீ பூண்டி சுவாமியின் பாதங்களை, கைகளை பிடித்து விடுவேன். அப்படி பூண்டி சுவாமிக்கு சேவை செய்து கொண்டு திண்ணைக்குப் பக்கத்தில் படுத்துக் கொள்ளும் அபூர்வமான சந்தர்ப்பத்தையும் மிகப் பெரிய பாக்கியத்தையும் ஏற்படுத்தினார் பூண்டி சுவாமி.

நான் இரவில் பூண்டி மகான் திண்ணைக்கருகில் படுத்துக் கொண்டபோது ஸ்ரீ பூண்டி சுவாமி ஈஸ்வரன் உருவத்திலோ, ரிஷபவாகனத்தின் மீது சிவன் போலவோ, பார்வதி பரமேஸ்வரன் போலவோ, சுப்பிரமணியசாமி (முருகர்) போலவோ நேரிடையாக தரிசனம் அளித்து எல்லா தெய்வ உருவங்களும் தானே என்ற அனுபவத்தை அளித்து என்னை அனுக்கிரகித்தார். இந்த தேவரகசியத்தை நான் எங்கும் இதுவரை வெளியிடவில்லை. ஒருநாள் பூண்டி சுவாமி எனக்காக தேவதைகளிடம் "**குப்புசாமி எனக்காக கஷ்டப்படறான். சேவை செய்கிறான். ஏதாவது மகிமையை தந்து நல்லது செய்யவேண்டும்**" என்று கேட்டார். பதிலாக தேவதைகள் "**கர்மாவை எல்லாம் அனுபவிக்க வேண்டும். கர்மா எல்லாம் தீரட்டும்**" என்று கூறினார்கள். அவர்களின் உரையாடலை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி எனக்காக எவ்வளவு செய்கிறாரே என்று மெய்மறந்து விட்டேன். நான் எதுவும் கேட்காமலே எல்லாவற்றையும் செய்கிறார். இனி நான் கேட்பதற்கு என்ன இருக்கிறது. கர்மாக்களையெல்லாம் அனுபவித்த பிறகு பலனை அவரே தருவார் என்று நினைத்துக் கொண்டேன். அதற்காகத்தான் நான் எப்போதும் வாய் திறந்து கேட்கமாட்டேன். எல்லையில்லாதவரான நான்கு ஆசிரம தருமங்களை கடைபிடிப்பவர்களுக்கு ஆதாரமானவருக்கு நான் சொல்ல வேண்டியது என்ன? நான் மனதில் என்ன நினைத்தாலும் ஸ்ரீ பூண்டி சுவாமி நிறைவேற்றுவார். ஒரு நாள் இரவு பூண்டி சுவாமி திண்ணைப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு பாதங்களையும், கைகளையும் பிடித்து விட்டுக் கொண்டிருந்தேன். திண்ணைக்குப் பக்கத்தில் சுப்பிரமணிய

சுவாமி படுத்திருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். சுப்பிரமணிய சுவாமி எழுந்து, பூண்டி சுவாமியை எழுப்பி உட்கார வைக்குமாறு என்னிடம் கூறினார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை எழுப்பி அமர வைத்தேன். சுவாமிகள் "**ரொம்ப வலியா இருக்குப்பா. தலைவலியா இருக்கு**" என்றார். ஸ்ரீ சுப்பிரமணியம் "**யாருதோ தலைவலியை நீங்க வாங்கிகிட்டு தலைவலி என்கிறீங்க**" என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமி "**இல்லைப்பா**" என்றார். சுப்பிரமணிய சுவாமி "**குப்புசாமி வீட்டுக்கு போயிட்டு வரேன் என்கிறான்**" என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமி "**என்னாப்பா. தூலம் எல்லாம் அசையுது. குப்பண்ணா ஒரே இடத்தில பூஜை பண்ணட்டும்**" என்றார். ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் "**என்ன சுவாமி! இப்படி சொல்றீங்க**" என்று கேட்கவே "**இல்லைப்பா. குப்பண்ணா ஒரே இடத்தில பூஜை செய்யட்டும்**" என்றார் ஸ்ரீ பூண்டி சுவாமி.

மறுநாள் காலை ஸ்ரீ பூண்டி மகான் தன் பௌதிக உடலை விட்டுப் பிரிந்தார். ஸ்ரீ சுவாமிகளின் சமாதிக்குப் பிறகு நான் பூண்டிக்கு வருவது குறைந்துவிட்டது. எப்போதாவது ஒரு முறை வந்து ஸ்ரீ சுவாமியை சமாதியை தரிசித்துச் செல்வேன். ஸ்ரீ பூண்டி சுவாமி என் கிராமத்தில் உள்ள அங்காளம்மன் கோவிலுக்கு என்னை பூஜை செய்யச் சொன்னார். நானும் பூஜை செய்து கொண்டு ஒரே இடத்தில் இருக்கின்றேன். அத்தேவதையின் சிலையில் எனக்கு ஸ்ரீ பூண்டி சுவாமியின் உருவத்திலோ, ஈஸ்வரன் உருவத்திலோ பார்வதி பரமேஸ்வரன் உருவத்திலோ தரிசனம் அளிக்கிறார். எல்லாம் ஒன்றே என்ற உண்மையை போதித்து என்னை வழி நடத்துகின்ற மகா பெரிய மகான் நித்திய ஞானாநந்த சொரூப பரப்பிரம்ம மூர்த்தியான ஸ்ரீ பூண்டி சுவாமியின் அனுக்கிரகத்தால் ஆனந்தமாக இருக்கின்றேன்.

**நேர்காணல்: 85**
**21.01.2010, பூண்டி**

**சதானந்த சுவாமி**, வயது: 64, தாராபுரம்.

*ஸ்ரீ காளஸ்தியில் 1500 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீசேஷாத்திரி சுவாமி என்று ஒரு மகான் இருந்தார். அவர் வேதங்களில் உள்ள மூலத்தை தெரியபடுத்தும் நானா ஜீவ வாதக்கட்டளை என்ற புத்தகத்தை எழுதினார். அவர் எழுதிய நிறைய புத்தகங்களில் இது மிக பிரசித்தமானது. இதில் ஆன்மீக வளர்ச்சிக்குப் பயன்படும் ஜெகஜீவ ரகசியங்களை வரிசையாக விவரித்துள்ளார். தமிழ்நாட்டில் உள்ள வேதாந்திகள் இதனையே முதல் புத்தகமாக பாவித்து ஆதாரமாகக் கொண்டு பலர் எழுதினார்கள். 1924ல் இந்த புத்தகத்தை "**அர்த்ததீபிகை**" என்ற பெயரில் ஒரு அன்பர் அவர் குருவின் ஆணைப்படி பதிப்பித்தார்கள். அதில் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமி எழுதிய புத்தகமே ஆதாரம் என்று தெளிவாக கூறியிருந்தார்கள். சமீபகாலத்தில் தமிழில் எழுதப்பட்ட அந்த புத்தகம் கிடைப்பது மிக அரிது. வரப்போகிற சந்ததியருக்கு பயன்படும் என்பதால் நான் 2005 ஆம் வருடத்தில் மறுபதிப்பு செய்தேன்.*

*நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை 1976 ஆம் வருடம் தரிசனம் செய்து கொண்டேன். காவேரிக்கு வடக்குப்பக்கமாக வந்தால் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொள்வேன். காவேரிக்கு தெற்குப் பக்கமாகப் போனால் கசவணாம்பட்டி சுவாமியை தரிசனம் செய்து கொள்வேன். திண்டுக்கல் அருகில் இருந்தார். இருவரும் சமக்காலத்தவர்கள்.*

*பூண்டி சுவாமியைக் குறித்து பலரும் பலவிதமாக கூறுகிறார்கள். ஆனால் நான் மகான்களிடம் எதுவும் கோரி வரமாட்டேன். காரணம், மகனுக்கு என்ன வேண்டும் என்று தந்தைக்குத் தெரியும். நம் மனதில் என்ன நினைத்தாலும் மகான்களுக்குத் தெரியாமல் இருக்காது. நமக்கு எது அவசியமோ அதை அவர்கள் தெரிந்து*

கொண்டு தருவார்கள் என்று எண்ணுவேன். சந்தோஷம் அடைவேன். அப்படி நான் வந்து போனதால் மற்றவர்கள் பெற்றதைவிட அதிக பலன் அடைந்தேன். பூண்டி சுவாமியிடம் நான் ஒரு விஷயம் கேட்கவேண்டும் என்று எண்ணி வந்த சந்தர்ப்பம் ஒன்று உள்ளது. எங்கள் வேதாந்த மடத்தில் நான் சமஸ்கிருதம் கற்றுக் கொள்ள விரும்பினேன். நான்கு மொழி கற்றுக் கொண்டால் நல்லது என்று ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் ஆசிகளைக் கேட்டேன். "**போ. படிச்சிட்டு வா**" என்று ஆசீர்வதித்து அனுப்பினார். திருமழப்பாடி மடத்தில் சமஸ்கிருதம் கற்றுக் கொண்டேன். பிறகு பூண்டி சுவாமியை தரிசிக்க கிளம்பி வந்தேன். வரிசையில் நிறைய பேர் இல்லை. காலை சுமார் பதினொரு மணி இருக்கும். நான் ஒருவனே வந்தேன். நான் வடதேசம் செல்ல வேண்டும் என்றும் கற்றுக் கொண்ட கல்வி பயன்பட வேண்டும் என்றும் மனதில் எண்ணினேன். வெளியே சொல்லவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமி பக்கத்தில் உள்ளவருக்கு சொல்வது போல் "**ஊம். எல்லாம் படிச்சால் நல்லா வியாபாரம் பண்ணலாம்**" என்றார். எனக்குத் தெளிவாகக் கேட்டது. அந்தப் பேச்சு என் நெற்றியில் சுத்தியால் அடித்தது போலிருந்தது. வியாபாரம் செய்ய வரவில்லை. நான் யார் என்பதை தெரிந்து கொள்ள வந்தேன். ஆன்மீகம் என்றால் நான் யார் என்பதை அறிந்து கொள்வதே இலட்சியம். மற்ற பூஜை, தான தருமங்கள் போன்றவை எல்லாம் அதற்கு அப்பாற்பட்டவையே. ஒரு மானிடப்பிறவி முழுமை பெற வேண்டுமானால் "**நான் யார்**" என்பதை அறிந்து கொள்ள வேண்டும். "**நான் யார்**" என்பதை அறிய வேண்டுமானால் சத்குருவை தெரிந்து கொள்ள வேண்டும். சத்குருவை அறிந்து கொள்ள சாஸ்திரங்களை நன்கு கற்க வேண்டும். சாஸ்திர ஞானமும் சத்குரு அனுக்கிரகமும் இருக்க வேண்டுமானால் இப்படிப்பட்ட மகான்களின் அருள் வேண்டும். மகான்களின் அருள் எனக்கு முழு அளவில் உள்ளது என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அந்த நம்பிக்கையில் கிளம்பி பல இடங்களில் திரிந்தேன். நம்பிக்கையை இழக்கவில்லை. அதற்காக எத்தனை கஷ்டநஷ்டங்கள். அதை பொருட்படுத்தவில்லை.

*பழனிக்கு வடக்கே பொன்னூதிமலை உள்ளது. அந்த மலையில் ஸ்ரீ போகரின் சீடரான கொங்கண மகரிஷி ஆறு வருடங்கள் தவம் புரிந்தார். அவருக்கு தங்கம் செய்யும் ரசவாதம் என்ற வித்தை அங்கு பலன் அளித்ததால் அந்த மலைக்கு பொன்னூதி மலை என்ற பெயர் வந்ததாக கூறுகிறார்கள். அந்த மலையில் ஸ்ரீ கொங்கண மகரிஷியின் சிலையோடு கூடிய கோவில் ஒன்று உள்ளது. அந்தக் கோவிலும் மிகவும் பாழடைந்த நிலையில் இருந்தது. தனிமையைத் தேடி வந்த நான் அச்சமயத்தில் எங்கும் அலைந்து திரியாமல் அங்கேயே இருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் 2004 ஆம் ஆண்டில் அங்கு இருந்தபோது ஸ்ரீ பூண்டி சுவாமி கசவனாம்பட்டி சுவாமி, சங்கரர், வியாசர், 18 சித்தர்கள், 63 நாயன்மார்கள், உத்தம ஞானிகள், தீர்க்கதரிசிகளான மகான்களின் அனுக்கிரகம் எல்லாம் சேர்ந்து எனக்கு அபரிமிதமான அந்தரங்க ஞான அனுபவம் ஏற்பட்டது. அந்த மலையில் நான் தன்னந்தனியாக வாழ்ந்தேன். உணவைப் பற்றி எண்ணவே இல்லை. ஆனாலும் நான் பசியோடு இருக்கவில்லை. ஏதோ ஒரு உருவத்தில் யார் மூலமாகவோ எனக்கு உணவு கிடைத்தது. நான் வணங்கிய மகான்களின் அருள் அங்கு எனக்கு முழுமையாக கிடைத்தது. அதன்பிறகு என் உள்ளம் தெளிவடைந்து விவேகம் அடைந்து நானா ஜீவவாதக் கட்டளை என்ற புத்தகத்தை சில நண்பர்களின் உதவியோடு மறுபதிப்பு செய்வித்தேன்.*

*பூஜ்யஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகளை ஆனைக்கட்டி ஆசிரமத்தில் சந்தித்தேன். அவர் ஞானி. அவர் பெரிய ஆசிரமத்தை நிர்வகிக்கிறார். ஆனாலும் நிர்வாகத்திற்கும், ஞானிக்கும் சம்பந்தம் இல்லை. எந்த அளவு நிர்வாக வேலையையும் சுலபமாக செய்யக்கூடிய திறமை இருந்தது. அவருக்கு நான் மறுபதிப்பு செய்வித்த புத்தகம் குறித்து விவரித்தபோது* **“தமிழ்நாட்டில் உள்ள துறவிகளில் இப்படிப்பட்ட சந்நியாசியும் இருக்கின்றார்களா? அடுத்தது உங்கள் பணி என்ன?”** *என்று கேட்டார்.* **“ஞானவாசிஷ்டம்” என்ற பெயரில் எளிய முறையில் அனைவரும் படிக்கும் முறையில் வசன நடையில் எழுத வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. எந்த இடைஞ்சலும் இல்லாத இடமாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறேன்”** *என்று கூறினேன்.* **“எழுதுவதற்கு**

**எவ்வளவு காலம் ஆகும்**" என்று கேட்டார். 2055 கதைகளை வசனமாக எழுதுவதற்கு ஏழு மாதங்கள் ஆகும் என்றேன். ரிஷிகேஷில் உள்ள அவரது ஆசிரமத்திற்கு வருமாறு கூறினார். அவர் கூறிய காலத்தில் சென்றேன். அவர் சொன்னபடியே எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். 2055 தமிழ்க் கதை வடிவிலுள்ள ஞானவாசிஷ்டத்திலுள்ள அடிப்படையை 37 கதைகளாக எழுதி "**ஞானத் கதைகள்**" என்ற பெயரில் பதிப்பித்து மகான்களின் அனுக்கிரகத்தோடு பொன்னூதி மலையில் அந்த நூலை வெளியிட்டேன்.

அந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வந்த ஒருவர் என்னைச் சந்தித்து "**சுவாமி! உங்களுக்கு ஆற்றின் கரையில் இருக்கவேண்டும் என்ற விருப்பம் உள்ளது கேள்விப்பட்டேன். எங்கள் வீடு அமராவதி நதிக்கரையில் உள்ளது. அதில் இரு அறைகளை உங்களுக்கு தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன். உங்களுக்கு தடை இல்லை என்றால் உங்கள் தூய பணிகளை அங்கிருந்து செய்து கொள்ளுங்கள்**" என்று தாழ்மையுடன் கேட்டார். அந்த நாட்களில் எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருந்தது. ஏன் என்றால் பொன்னூதி மலையில் தண்ணீர் வசதி குறைவு. நதிக்கரையில் இருக்கவேண்டும் என்று எல்லா துறவிகளும் விரும்புவார்கள். அதற்காக அங்கு சென்றேன். அங்கிருந்து கொண்டு "**திருவள்ளுவரின் குடும்ப வாழ்க்கை**" என்ற புத்தகத்தை என் குருதேவர்கள் அனைவரும் என்னுள் இருந்து சொல்லச் சொல்ல நான் எழுதினேன். மற்றொரு நூலையும் எழுதினேன். ஆனால் இன்னும் வெளியிடவில்லை.

மகான்கள், அவர்களது மகிமைகள், அனுபவங்கள், லீலைகள் போன்றவற்றை யார் தெரிந்து கொண்டு அனுபவித்து பிறருக்கு தம் அனுபவங்களைச் சொல்ல நினைக்கிறார்களே அவர்களையே மகான்கள் தம் குழந்தைகளாக, தம் சீடர்களாக எண்ணுவார்களே தவிர தன்னைச் சுற்றி இருந்து கொண்டு அதிகாரம் என்ற பெயரில் பெத்தனம் செய்பவர்களை மகான்கள் விரும்பமாட்டார்கள். ஸ்ரீ இராமலிங்க அடிகளாரும் "**ஒரு வாழை மரத்தை வெட்டினால் பக்கத்திலேயே மற்றொரு கன்று முளைத்து குலை தள்ளும். அதற்கு முடிவில்லை**" என்றார்.

*பெரிய கோவில்கள் முக்கியமா? சத்குருக்கள், ஞானிகளின் சமாதிகள் முக்கியமா? என்றால் சத்குருக்கள், ஞானிகளின் சமாதிகள் சிறந்தது என்று திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. 100 சைவத் தலங்களை தரிசிப்பதைவிட ஸ்ரீ பூண்டி சுவாமிபோன்ற மகான்களின் சமாதியை தரிசப்பது சிறந்தது. ஆலயத்தில் நூறு முறை வலம் வருவது. ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் சமாதியை ஒரு முறை வலம் வருவதற்கு ஈடாகும். அப்படிப்பட்ட உயர்ந்து, சிறந்து மேன்மை கொண்டது மகான்களின் சமாதி. மகான்கள் பௌதிக உடலோடு நடமாடிக் கொண்டு சத்குருவை தெரிந்து கொண்டு தன்னையறிந்து நடமாடியவர்கள் என்று வேதங்கள், உபநிடதங்கள் போன்ற எல்லா சாஸ்திரங்களும் கூறுகின்றன.*

*இந்த உலகத்தில் வெளிப்படையாக தெரிகின்ற பொருட்களை விட தன்னையறிந்து சொல்பவர்களை உத்தமர்கள் என்பார்கள். ஞானிகளுக்கு அருகிலிருந்து சேவை புரிபவர்கள். மடங்களை அமைப்பவர்கள், பால், தேனால் அபிஷேகம் செய்பவர்கள் பூக்களை அணிவித்து பூஜைகள் செய்பவர்களைவிட மகான்கள் சொன்னவற்றை கடைபிடிப்பவர்களையே மகான்களின் குழந்தைகளாக கருதுவார்கள்.*

**நேர்காணல்: 86**
**21.1.2010, பூண்டி**

**வேலு கவுண்டர்**, **வயது: 71, பழங்கோவில்.**

*எனக்கு பத்தொன்பது வயதாக இருந்த சமயத்தில் இருந்தே ஸ்ரீ பூண்டி சுவாமியைத் தெரியும். என் கிராமத்தில் அருகில் ஆறு உள்ளது. ஸ்ரீ சுவாமிகள் ஆற்றில் அமர்ந்திருந்தபோது ஆற்றுத் தண்ணீர் சுவாமியை விட்டுவிலகி வளைந்து செல்வதை நான் பார்த்தேன்.*

*ஒரு முறை என் பெண் குழந்தைக்கு கால் உடைந்து கட்டு கட்டிக் கொண்டு புத்தூரில் இருந்தாள். எடுத்துச் செல்ல என் மனைவி தோசை சுட்டுக் கொண்டிருந்தார். நான் என் மனைவியிடம் ஸ்ரீ பூண்டி சுவாமிக்கும் இரண்டு தோசை நன்றாக, எங்கும் கருகாமல் பதமாகச் சுடுமாறு கூறினேன். எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு கிளம்பி பூண்டிக்கு வந்தோம். நாங்கள் ஸ்ரீ பூண்டி சுவாமியின் முன் நின்ற உடனே* “**அது என்ன டிபன் எடுங்க பார்க்கலாம்**” *என்று கேட்டார். நாங்கள் எடுத்து கையில் தந்தோம்.* ‘‘**ஒரே எண்ணத்தோட வாங்க. சண்டை போட்டுக்கிட்டு வராதிங்க**” *என்று கூறி இரண்டு தோசைகளை ஸ்ரீ சுவாமிகள் சாப்பிட்டார். நாங்கள் ஸ்ரீ பூண்டி மகானை வணங்கி நாங்கள் செல்லும் வேலை வெற்றியடையுமா? என்று கேட்டோம். ஸ்ரீ பூண்டி சுவாமிகள்* “**வெற்றியடையும்**” *என்று கூறினார். என் பெண் குழந்தையின் கால் சரியாகிவிட்டது.*

*ஒரு முறை என் பெண் குழந்தை வீட்டை விட்டுச் சென்று விட்டாள். நான் உடனே பூண்டி மகானிடம் வந்து கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி* “**ஒரு மூணு மைல் தூரத்தில இருக்கும். போயி கூட்டிக்கிட்டு வந்திடலாம்**” *என்றார். நான் என் கிராமத்தை கடந்து வில்வாரணி பக்கமாகச் சென்றேன். என் பெண் குழந்தை அந்த சாலையில் தென்பட்டார். வீட்டிற்கு அழைத்து வந்தேன்.*

என் பெரிய மகளுக்கு திருமணம் செய்ய ஒரு வரன் பார்த்தேன். நான் பூண்டிக்கு வந்து சுவாமியை தரிசித்துக் கொண்டு கேட்டேன். “**தாராளமா பண்ணலாம். அந்த இடத்தில!**” என்றார். அப்படியே அந்த இடத்தில் என் பெண்ணை அளித்து திருமணம் செய்தேன். சுகமாக வாழ்கின்றனர்.

ஸ்ரீ ஆற்று சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் ஆற்றில் அமர்ந்திருந்த போது நான் வீட்டில் இருந்த கூழினைக் கலந்து எடுத்துச் சென்று அளித்தேன். சுவாமியும் அருந்தினார். மற்றொருமுறை சுவாமி எங்கள் கிராமத்தில் சென்று கொண்டிருந்தபோது சுவாமியை அழைத்துச் சென்று வீட்டுத்திண்ணை மேல் அமர வைத்து உணவு அளித்தேன். அதன் பிறகு சுவாமி சென்று விட்டார். அப்படி மூன்று முறை சுவாமிகளுக்கு உணவளிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது.

நான் நிலம் வாங்க ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து கேட்டேன். “**நீ தாராளமா செய்யலாம்**” என்றார். சுவாமியின் ஆசியோடு நிலம் வாங்கினேன்.

ஒரு முறை என் உடல் நிலை சரியில்லாதபோது வந்து சுவாமியிடம் கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் திருவண்ணாமலைப் பக்கம் கையைக் காண்பித்து “**இந்தப் பக்கமா போ. சரியா போயிடும்**” என்றார். திருவண்ணாமலையில் ஒரு மருத்துவரிடம் சென்று காண்பித்தேன். மருந்துகள் தந்தார். என் உடல்நிலை சரியாகிவிட்டது. நான் எந்த வேலை செய்ய வேண்டும் என்றாலும் ஸ்ரீ பூண்டி மகானிடம் வந்து கேட்டு, சுவாமிகளின் ஆசி பெற்றுச் செய்வேன். அவர் வேண்டாம் என்றால் பிறகு அந்தப் பணியை செய்யமாட்டேன். அந்த வேலையும் நடக்காது. ஸ்ரீ சுவாமிகளின் திவ்ய அருளால் இன்று நான் சுகமாக இருக்கிறேன்.

**நேர்காணல்: 87**
**21.1.2010, பூண்டி**

**கண்ணாயிரம்**, வயது: 65, பிராயம்பட்டு.

*நான் இராணுவத்தில் வாகனம் சரி செய்யும் வேலையில்* (Mechanic) *இருந்து பணியாற்றி ஓய்வு பெற்றேன். ஸ்ரீ சுவாமிகள் 1948ம் ஆண்டிலிருந்து எனக்குத் தெரியும். ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் அழைத்து அமரச் சொன்னால் அமருவார். கூழ் தந்தாலும் அருந்துவார். ஒரு சமயம் ஸ்ரீ சுவாமிகள் போளூரான் கால்வாய் பாலம் மீது அமர்ந்து இருக்கும்போது மூன்று நாட்கள் விடாமல் தொடர்ந்து மழை பெய்தது. அந்த மழையிலும் அந்த இடத்தைவிட்டு அசையாமல் அங்கேயே அமர்ந்து கொண்டார். மழை சிறிது குறைந்தபிறகு ஸ்ரீ பூண்டி மகானை எங்கள் குடிசை வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். அப்போது கார்த்திகை மாதம் மழை மிகவும் பொழிந்து கால்வாயில் தண்ணீர் அதிகமாக பாய்ந்து கொண்டிருந்ததால் அதில் மீன்கள் பிடிப்பார்கள். எங்கள் வீட்டில் மீன் பிடித்து வந்தார்கள். எனக்குச் சிறிய வயது. தெரியாது. சுவாமிகள் வந்து அமர்ந்த பிறகு "***சுவாமி உணவு சாப்பிடுங்கள்***" *என்று கூறினேன்.* "***தம்பி ஏதோ கவுச்சி வாசனை வருது. சாப்பிணும்னு தோணலை***'' *என்று கூறி எழுந்து சென்று விட்டார். ஸ்ரீ சுவாமிஅமர்ந்த இடத்தில் அவர் உடலில் இருந்த ஈரம் என் வீட்டு மண் சுவற்றில் ஊறி அவரது உருவத்தை வரைந்ததுபோல் இருந்தது. அந்த ஈரத்தால் வந்த உருவம் என் மனதில் பதிந்து விட்டது.*

*ஒரு சமயம் நான் இரண்டுமாத விடுமுறையில் வீட்டிற்கு வந்தேன். அப்போது ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணை மீது அமர்ந்து இருந்தார். நான் தினந்தோறும் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்தேன். கிளம்பிய அன்று நான் முன்பாகவே தரிசனத்திற்குச் செல்லவில்லை. காரணம், கிளம்புவதற்கு எல்லாம் தயார் செய்து கொண்டு இருந்ததால் நேரம் கிடைக்கவில்லை. நான் என் சாமான்களை*

எல்லாம் மாட்டு வண்டியில் வைத்து விட்டு இரயில்வே நிலையத்திற்கு எடுத்துச் செல்லுமாறு கூறிவிட்டு போகும் வழியில் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்து செல்லலாம் என்று சுவாமிகளிடம் சென்று "**சுவாமி! எனக்கு நேரமாகிறது. நான் இரயிலில் செல்லவேண்டும்**" என்று கூறினேன். ஸ்ரீ பூண்டி மகான் "**ஏன்? இரண்டு நாள் கழிச்சி போ!**". "**எப்படி சுவாமி? அப்படி சொல்கிறீர்கள். நான் அரசு வேலையில் இருப்பவன். வேலைக்கு செல்ல வேண்டும்**'' என்றேன். ஸ்ரீ பூண்டி மகான் என் கையிலிருந்த தேநீரை வாங்கிப் பக்கத்திலிருந்த கிண்ணத்தில் ஊற்றி விட்டார். நான், பக்கத்து கிராமத்து ஒரு முஸ்லீம்காரர், இருவரும் எப்போது எதை வாங்கித் தந்தாலும் வேண்டாம் என்று கூறாமல் சுவாமி அருந்துவார். சாப்பிடுவார். இரண்டாவது முறை சென்று தேநீர் வாங்கி வந்தேன். கையில் வாங்கி பக்கத்தில் வைத்து விட்டார் சுவாமி. நான் ஏதோ தவறு செய்தேன் போல் உள்ளது. அதனால் தான் ஸ்ரீ பூண்டி சுவாமி அப்படி செய்கிறார் என்று எண்ணினேன். இதுவரை இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்கவில்லை. எனக்கு நிற்க கூட முடியவில்லை. காரணம், இரயிலுக்கு நேரமாகிறது. கலசப்பாக்கம் இரயில்வே நிலையத்திற்கு மாட்டு வண்டி சென்று விட்டது. கடைசியில் நான் "**சென்று வருகிறேன் சுவாமி**" என்றேன். "**நொய் அரிசி கொதி தாங்காதுப்பா**" என்று கூறி மீண்டும் "**நாம எவ்வளவு நல்லபடியா ஆட்டை வளர்த்தாலும் அது நம்பளை நம்புமா? கசாப்புக்காரனை நம்பி போகும். அதோட ஆத்மா பிரியும்**" என்று கூறினார். எனக்கு நேரமாகிக் கொண்டு இருந்தது. நான் சென்று வருகிறேன் சுவாமி என்று கூறி கிளம்பினேன். சென்று இரயில் ஏறினேன். ஆனாலும் என் மனம் மிகவும் வருத்தமாக இருந்தது. செய்வது எதுவுமில்லாமல் யோசனை செய்து கொண்டே வேதனையோடு பயணம் செய்து கொண்டு இருந்தேன். இராணுவத்தில் வேலை செய்பவர்களுக்கு எல்லோருக்கும் தனியாக ஒரு பெட்டி ஒதுக்கினார்கள். மறு நாள் இரவு சுமார் 12.15 - 12.30 மணி இடையில் போத்பூர் (Bodhpur) இரயில் நிலையத்தில் நாங்கள் பயணிக்கும் எக்ஸ்பிரஸ் வண்டி ஒரு கூட்ஸ் வண்டியோடு மோதியது. எக்ஸ்பிரஸில் நான் பயணிக்கும் போது எங்களுக்கு முன்புஉள்ள பெட்டியிலிருந்து விடுபட்டு எங்களுக்கு

பின்புறம் உள்ள பெட்டிகளோடு சேர்ந்து சுமார் ஒரு கிலோமீட்டர் பின்னோக்கிச் சென்றோம். அந்த சமயத்தில் இந்து முஸ்லீம்களுக்கிடையே மதக்கலவரமும் நடந்துக் கொண்டு இருந்தது. சிக்னல் தந்தாலும் லைன் மாற்றாத காரணத்தால் இந்த விபத்து ஏற்பட்டது. ஸ்ரீ பூண்டி சுவாமிகள் கூறியது நடந்தது. ஆனாலும் எங்கள் பெட்டியின் அருகில் விடுபட்டு ஸ்ரீ சுவாமியின் அனுக்கிரகமே தவிர இல்லையென்றால் அப்படி பெட்டியின் இடையில் அறுந்து விடுபடுவது சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி கிடையாது. எங்கள் பெட்டியில் 50 பேருக்கு மேல் இருந்தனர். உடனே இரயில்வே பணியாட்கள் லைனை சரி செய்து காலை ஆறு மணிக்கு எங்களை கல்கத்தாவுக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். எங்களுக்கு முன்பு இருந்த பெட்டியில் பெரும் சேதம் ஏற்பட்டது. காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்த்தார்கள். இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு சிறப்பு மருத்துவமனைகள் உள்ளன. பெட்டியில் கீழ்பெர்த்தில் நான் படுத்து இருந்ததால் என் மேல் பர்த்தில் படுத்து இருந்தவர் இரயில் மோதிய வேகத்திற்கு என் மேல் விழுந்ததால் என் முன்பற்கள் உடைந்து விட்டன. வேறு எந்த காயமும் ஏற்படவில்லை. நாங்கள் சிலிகிரி (Siligiri) மிலிட்டரி முகாமிற்கு சென்று சேர்ந்தோம். எங்கள் நிலைமையை பார்த்து இங்கு இன்னும் கலவரம் நடக்கின்றது. வீட்டிற்குச் சென்று பத்து நாட்கள் ஓய்வு எடுத்து வருமாறு அதிகாரிகள் எங்களை வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். என் சாமான்களை எல்லாம் அங்கேயே வைத்து விட்டு கிளம்பி வீட்டிற்கு வந்தேன். மீண்டும் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு பிறகு கிளம்பிச் சென்றேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமி பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டு நிலைநிறுத்தி பார்த்தவாறு இரண்டு கால் கட்டைவிரல்களை அசைத்தால் அவர் எங்கோ சஞ்சாரம் செய்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீ பூண்டி சுவாமி நடமாடிக்கொண்டிருந்த காலத்தில் போளூரான்கால்வாய் பாலம் மீது அமர்ந்திருப்பார். பக்கத்திலேயே எங்கள் நிலங்கள் இருந்தன. பயிர் வைத்து களை எடுக்கும் சமயத்தில்

ஸ்ரீ சுவாமிகள் "கொளுறு இப்படி கொடு. நானும் களை எடுக்கறேன்" என்று கூறி கொளுறு வாங்கிக் கொண்டு "நீ மட்டும் வெட்டிக்கிட்டு இருக்கறியே. நானும் கொஞ்சம் வெட்டறேன்" என்று கூறி களை எடுப்பார். "நான் உன்னை எங்கேயோ பார்த்தேனே" என்றார். "என்ன சுவாமி! தினந்தோறும் இந்த ரோட்ல தானே போகிறீர்கள். நான் இங்கே தானே இருக்கிறேன்" என்று கூறினால் "அப்படிஇல்லை. இப்படிநீ வேலை செய்யறதை நான் பார்க்கலை. இப்பதான் பார்க்கறேன்" என்று கூறி ஒரு முறை "டேய்! நீ என்ன சும்மா அப்படி இப்படி சுத்திக்கிட்டு தொந்தரவு செய்கிறாயே. பாம்பு, பல்லி, பூச்சிகள், தேள் கடிக்கும். நான் எப்படியாவது போயிடுவேன். அந்த வழியில நீ போக வேண்டாம்" என்றார். அவரிடம் சொல்லாமல் நான் எந்த வேலையும் செய்வதில்லை.

**நேர்காணல்: 88**
**22.1.2010, பூண்டி**

**அருணாச்சலம்**, வயது: 75, பழங்கோவில்.

*கலசப்பாக்கம் காக்கங்கரை விநாயகர் கோயிலுக்கருகில் முதன்முறையாக ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். அப்போது என் வயது சுமார் பத்து. எங்கள் வீட்டிற்கு எதிரில் ஒரு குடிசை வீட்டில் ஒரு பெண்மணி இட்லி சுட்டு விற்றுக் கொண்டிருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிஅந்த சிறிய குடிசையினுள் வந்து அமர்ந்தார். மூன்று நாட்கள் அங்கிருந்து எழாமல் அமர்ந்து கொண்டார். அந்த வீட்டு மூதாட்டி ஸ்ரீ சுவாமிகள் வந்து அமர்நது கொண்டார் என்று பக்கத்திலேயே தீபம் ஏற்றி ஸ்ரீ சுவாமியை பார்த்தவாறு அமர்ந்து கொண்டார். ஆச்சர்யம், ஆனந்தம், அதிசயத்தோடு அந்த மூன்று நாட்களும் சுவாமிகள் யாரையும் தண்ணீர், உணவு என்று எதுவும் கேட்கவில்லை. யாரும் சுவாமியின் அருகிலும் செல்லவில்லை. மூன்று நாட்கள் கழித்து எழுந்து மெதுவாக வெளியே வந்தார். நான் சென்று வணங்கி,* **"சுவாமி! உணவு சாப்பிடுங்கள்"** *என்று வேண்டினேன். ஸ்ரீ சுவாமிகள்* **"சரி"** *என்றார். வந்து எங்கள் வீட்டுத் திண்ணைமேல் அமர்ந்து கொண்டார். உடனே என் தாயிடம் கூறினேன். உணவு சமைத்து இலைபோட்டு பரிமாறினோம். ஸ்ரீ சுவாமிகள் சாப்பிடும் நேரத்தில் ஒரு பருக்கை கையிலிருந்து நழுவி கீழே விழுந்தது. ஸ்ரீ சுவாமிகள் அந்தப் பருக்கையை தங்கம் போல் மீண்டும் எடுத்து உணவில் கலந்து சாப்பிட்டார். உணவு சாப்பிட்டபிறகு கிளம்பிச் சென்று விட்டார்.*

*எங்களுடையது வசதியான குடும்பம். உறவினர்கள் என்னை சிறிது தொல்லைப்படுத்தினார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று வணங்கி* **"சுவாமி! எனக்கு எலுமிச்சம் பழம் ஒன்று கொடுங்கள்"** *என்ற கேட்டேன். இரண்டாவது நாளும் கேட்டேன். அன்று தந்தார்.*

மூன்றாவது நாள் வந்து வணங்கிய பொழுது எலுமிச்சம்பழம் மீண்டும் கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி **“என்னாப்பா! எல்லாம் கொடுத்திட்டு நீ திவாலா வாங்கினாப்போல என்னை திவால் செய்ய வந்தியா! போப்பா!”** என்றார். என்னிடம் பணம் இருக்கும் போது உற்றார், உறவினர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு ஏமாற்றினார்கள். திவாலாகி விட்டேன். அதை ஸ்ரீ பூண்டி சுவாமி மறைமுகமாக சுட்டிக் காட்டினார்.

ஒரு நாள் வேலூருக்குப் பக்கத்தில் இருந்து ஒரு பையனை அழைத்து வந்தார்கள். பக்கவாதம் வந்து கால் நடக்கமுடியாமல் உட்கார்ந்து இருந்தான். இளைஞனாக இருந்தான். **“பக்கவாதம் வந்தது என்று இங்கு ஏன் கூட்டிக்கிட்டு வந்தீங்க? இன்னும் ஒரு மாதத்தில் இறக்கப் போகிறான், இவன் எங்க பிழைக்க போறான். அதன் பிறகு கேட்டவர்களுக்கு எல்லாம் பூண்டி சுவாமியிடம் சென்றேன். இப்படி ஆகிவிட்டது என்று குறை கூறுவதற்கு வந்து உள்ளார்கள்”** என்று மனதில் எண்ணினேன். இதற்குள் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் அந்தப் பக்கம் வரவே அந்த இளைஞன் சுவாமி! என்றழைத்தான். உடனே அவர் **“இருடா! நல்லாயிடும்”** என்றார். நான் திருநீறு வாங்கி வந்து உடல் எல்லாம் பூசுமாறு கூறினேன். வீட்டிற்குச் சென்று விட்டேன். மறுநாள் காலையில் வந்தேன். அந்த இளைஞன் சிரித்தவாறு என் எதிரில் வந்தான். என்னால் நம்பமுடியவில்லை. பக்கவாதம் வந்தவர்கள் பிழைப்பதே கஷ்டம். அப்படிப்பட்ட வியாதிக்கு எந்த மருந்தும் உபயோகப்படுத்தாமல் மறுநாள் காலைக்குள் சாதாரண மனிதர் போல் நடமாட ஆரம்பித்தான் என்றால் அது ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் திவ்யசிறந்த பலனால் மட்டுமே தவிர வேறு எதுவுமில்லை.

ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து நஷ்டமடைந்தவர்கள் எவருமில்லை. ஓரிடத்தில் போனாலும் மற்றொரு இடத்தில் வரும் என்று பெரியோர்கள் கூறுவார்கள். என் பையனை படிக்க வைத்தேன். பத்தாவது வரை படித்து, படிப்பு வராமல் திரும்பி வந்தான். என் மகள் நன்றாக படித்து M.B.B.S. முடித்தாள். மருத்துவரானார். ஸ்ரீ பூண்டி சுவாமியை நம்பினால் எந்த விதத்திலும்

தீங்கு நேராது. நான் எப்போதும் பூண்டி சுவாமியிடம் எதையும் கேட்டதில்லை. ஞானிகளின் திருஷ்டி நம்மேல் விழுந்தால் போதும். நம் பிறவி சாபல்யம் அடையும்.

**நேர்காணல்: 89**
**22.1.2010, பூண்டி**

**சிவராஜ்**, வயது: 60க்கு மேல், பழங்கோவில்.

*நான் விவசாயக்குடும்பத்தில் பிறந்தேன். நான் சிறுவயதில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தேன். எங்கள் ஊர் ஆலயத்திற்கு அருகில் புளியமரம் இருந்தது. அந்த புளியமர நிழலில் ஸ்ரீ சுவாமிகள் வந்து அமர்ந்து கொள்வார். நாங்களும் மாடு மேய்த்துக் கொண்டு வெயில் சமயத்தில் நிழலுக்காக அங்கு செல்வோம். பக்கத்தில் எங்கள் ஊர் ஆலயத்தின் மானிய நிலம் இருந்தது. அந்த நிலத்தை நாங்கள் குத்தகைக்கு எடுத்து இருந்தோம். அந்த நிலத்தில் கம்புப்பயிர் செய்து இருந்தோம். நன்றாக வளர்ந்து கதிர் வந்து இருந்தது. ஸ்ரீ சுவாமிகள் அப்படி வந்து அமர்ந்தால் நான் சென்று வணங்கி, "சுவாமி! கம்பு நறுக்கி தரேன். சாப்பிடறீங்களா?" என்று கேட்டால் "சரி வேணும்பா" என்பார் சுவாமி. நான் சென்று எங்கள் நிலத்தில் நான்கு கதிர்களை அறுத்து வந்து கையால் நன்கு நசுக்கி, பொட்டை ஊதி, ஸ்ரீ சுவாமிகளுக்கு அளித்தேன். சுவாமி சாப்பிட்ட பிறகு "சுவாமி! தண்ணீர் வேணுமா" என்று கேட்டால் சுவாமிகளும் "வேண்டும்" என்பார். வீட்டிற்குச் சென்று ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்து அளித்தால் குடிப்பார். சிறிது நேரம் கழித்துச் செல்வார். ஒவ்வொருமுறை எங்கள் வீட்டுப் பக்கமாக வருவார். எங்கள் வீட்டில் கூழ் இருக்கும். நன்கு கலந்து அளித்தால் சுவாமியும் அருந்துவார். மறு நாள் பிற்பகல் சுமார் 12 மணிக்கு தோளில் ஒரு மூட்டையை மாட்டிக் கொண்டு அந்த புளிய மரத்தின் நிழலில் வந்து அமர்ந்து கொள்வார். அப்படி வந்து அமர்ந்தால் கம்பு நறுக்கித் தருவேன்.*

*ஒரு நாள் பிற்பகலில் புளியமரநிழலில் ஸ்ரீ சுவாமிகள் அமர்ந்திருந்தபோது ஒருவர் ஐந்து வடைகளை எடுத்து வந்து சுவாமியிடம் தந்தார். ஸ்ரீ சுவாமிகள் எனக்கு ஒரு வடை, என்னோடு மாடு மேய்த்துக் கொண்டிருந்த இருவருக்கும் ஒவ்வொன்று, எடுத்து*

வந்தவருக்கு ஒன்று அளித்து சுவாமிகள் ஒன்று சாப்பிட்டார். நான் ‘‘சுவாமி! வீட்டிற்கு போயி தண்ணீர் எடுத்து வரேன்’’ என்று கேட்டேன். ஸ்ரீ சுவாமிகள் “சரிப்பா” என்றார். நான் தண்ணீர் எடுத்து வந்து தந்தேன். குடித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

ஸ்ரீ சுவாமிகள் பூண்டியில் திண்ணைமேல் அமர்ந்தபிறகு நான் வந்து தரிசனம் செய்து செல்வேன். எப்போதாவது “சுவாமி! எங்கள் குடும்பம் இப்படியே உள்ளது” என்று கேட்டால் ‘‘நடக்கட்டும்! நடக்கட்டும்!” என்பார் பூண்டி மகான்.

**நேர்காணல்: 90**
**22.10.2010, பூண்டி**

## R. இராமன், வயது: 76, மஷார்.

*நான் 1972ல் முதன்முறை ஸ்ரீ பூண்டி சுவாமிகளை தரிசித்துக் கொண்டேன். விவசாயம் எங்களது தொழில். ஒரு முறை நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டபொழுது* **"பொம்பளை பேச்சு கேட்கவேண்டாம். பொண்டாட்டின்னு நம்பி எதுவும் கொடுக்க வேண்டாம். உன் குழந்தையையும் நம்ப வேண்டாம். உன் சுயபுத்தியோடு வாழ்ந்தால், உன் வாழ்க்கையில் உனக்கு அனுகூலமாக இருக்கும். அப்படி மீறி செய்ய நினைத்தால் உனக்கென்று சிறிது வைத்துக் கொள்"** *என்று கூறினார். நான் சுவாமி சொன்னபடி கேட்கவில்லை. எனக்கு மனைவி, ஒரு மகன். அதற்கு மேல் யாரும் இல்லை அல்லவா என்று எண்ணினேன். அதன் பிறகு சுவாமிகளின் சொற்படி கேட்காததற்கு கஷ்டங்களை அனுபவித்தேன்.*

*ஒரு முறை நான் மஷாரிலிருந்து கிளம்பி பூண்டிக்கு வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்ட பிறகு காபி வாங்கித் தந்தேன். சுவாமியும் அருந்தினார். ஒரு சிகரெட் வாங்கி அளித்தேன். சுவாமி வாங்கிக் கொண்டார். என்னோடு வந்த நால்வரும் டீ, காபி, வாங்கித் தந்தனர். சுவாமி வேண்டாம் என்று பூனைக்கு ஊற்றி விட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமி என்னிடம்* **"வந்த வழியில போக வேண்டாம். இப்படி போ (என் மாமியார் வீட்டுப் பக்கம்)"** *என்று கை காண்பித்து கூறினார். நான் கிளம்பி பூண்டி கிராமத்தைத் தாண்டினேன். சாலை ஓரத்தில் சிறுநீர் கழிக்க ஒதுங்கிய போது பத்து ரூபாய் நோட்டு பதினாறு நோட்டுகள் தென்பட்டன. மொத்தம் ரூ.160 எடுத்துக் கொண்டு திரும்பி ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து ''*__சுவாமி! இதோ__*'' என்று ரூ.160 தருவதற்குச் சென்றேன். 'எதுக்கு. உனக்கு இல்ல கிடைச்சுது. எனக்கு இல்லையே. எடுத்துக்கிட்டு போ'' என்று கூறி திருநீறு அளித்தார். நானும் கிளம்பி கலசப்பாக்கம்*

*வழியில் திரௌபதியம்மன் ஆலயத்தின் அருகில் சென்றுக் கொண்டிருந்தேன். ஆற்றில் நுரைதள்ளிக் கொண்டு வெள்ளம் வந்து கொண்டிருந்தது. அந்த வெள்ளத்தில் செடி, கொடிகள் அடித்துக் கொண்டு வந்தது. நான் வரும் சமயத்தில் முழங்கால் அளவுதான் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இப்போது திரும்பி செல்லும் சமயத்தில் ஆள் தாண்டமுடியாத அளவு வெள்ளம் வந்தது. அதற்காகத்தான் ஸ்ரீ பூண்டி சுவாமி அந்த வழியில் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை செய்து காப்பாற்றினார் என்று எண்ணினேன். அரைமணிநேரம் அங்கேயே நின்று வெள்ளத்தை பார்த்து, காப்பலூரில் உள்ள என் மாமியார் வீட்டிற்குச் சென்றேன்.*

*மஷாரில் இராமச்சந்திர உடையார் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு மூன்று மனைவிகள். ஆனாலும் பிள்ளைப் பேறு இல்லை. அவர் என்னோடு பூண்டிக்கு வந்து ஸ்ரீ சுவாமியை வணங்கி குழந்தைகள் பிறக்க அருள் தருமாறு வேண்டினார். ஸ்ரீ பூண்டி மகான்* **"பையன் பிறப்பான். ஆனால் குடிசை வீட்டில் இருக்க வேண்டும். மாடி வீட்டில் இருக்கக்கூடாது"** *என்றார். ஸ்ரீ பூண்டி மகான் சொன்னபடியே ஒரு வருடம் கழித்து மூன்றாவது மனைவிக்கு மகன் பிறந்தான். குழந்தை வளர்ந்து நடக்க ஆரம்பித்தான். நன்கு வசதி படைத்த குடும்பம் அவர்களுடையது. அவர்கள் அரிசி ஆலை பக்கத்திலேயே மாடி வீட்டில் இருந்தார்கள். குழந்தை நடந்து சென்று தண்ணீர் தொட்டியில் இறங்கி விட்டான். ரொம்ப நேரமாக அவர்கள் குழந்தையை கவனிக்கவில்லை. பணியாட்கள் பசுக்களுக்கு தண்ணீர் அளிக்க வந்து பார்த்த போது குழந்தை தொட்டியில் சவமாக இருந்தான். இனி செய்வது எதுவுமில்லாமல் துக்கத்தில் மூழ்கி விட்டார்கள். சிறிது நாட்கள் கழித்து அவர் ஒரு பித்தளை அண்டா எடுத்து வந்து பூண்டி சுவாமிக்கு காணிக்கையாக அளித்து* **"குழந்தை பிறந்தால் வாங்கித் தருகிறேன்"** *என்ற வேண்டுதலை நிறைவேற்றிக் கொண்டு ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி ஓவென்று அழுதார். ஸ்ரீ பூண்டி சுவாமி* **"எதுக்கு அழறே? காரணம் என்ன"** *என்று கேட்டார். அவர் குழந்தை இறந்ததை கூறவே,* **"போனது போச்சு. பேச்சை கேக்கலை இல்லையா"** *என்று கூறி* **"இனி பெண் பிள்ளைகள் பிறக்கும்"** *என்று*

ஆசீர்வதித்தார். அவருக்கு மூன்று பெண்கள் பிறந்தார்கள். மீண்டும் அவர் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்தார். "**சரி. இது எல்லாம் பகவானின் அனுக்கிரகம். இதற்கு மேல் கர்ப்பம் தரிக்காது**" என்றார் சுவாமி. அப்படியே அவர் வாழ்க்கையில் நடந்தது.

**நேர்காணல்: 91**
**23.2.2010, பூண்டி**

## இளையபெருமாள், வயது: 75, பழங்கோவில்.

*எனக்கு சுமார் ஆறு, ஏழு வயதிலிருந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை அறிவேன். ஸ்ரீ பூண்டி சுவாமியின் கையைப் பிடித்து விளையாடுவேன். அவரது கையைப் பிடித்து அழைத்துச் சென்று எங்கள் வீட்டின் முன் ஒரு ஸ்டூல் போட்டு ஸ்ரீ சுவாமியை அமர வைத்து திருநீறு உள்ள தட்டை எடுத்து வந்து பக்கத்தில் வைத்தால், சுவாமிகளை வணங்கியவர்களுக்கு திருநீறு வைப்பார். எல்லாம் முடிந்தபிறகு வீட்டில் உள்ள கூழை கலந்து அருந்தச் செய்து முகத்தை சுத்தம் செய்வேன். ஸ்ரீ சுவாமிகளும் கிளம்பி ஆற்றின் பக்கமாகச் செல்வார்.*

*முதன்முறை பழங்கோவில் ஈஸ்வரன் ஆலயத்தில் ஸ்ரீ சுவாமியின் புகைப்படத்தை எடுக்கச் செய்தோம். அந்த சமயத்தில் நானும் அங்கு இருந்தேன். நான் எங்கு சென்றாலும் ஸ்ரீ சுவாமிகளின் ஆசி பெற்று செல்வேன். என் கிராமத்தில் கைத்தறி நெசவாளர்கள் இருந்தார்கள். நான் மதராஸில் நூல் வாங்கி வந்து என் கிராமத்தில் விற்பேன். நெசவு செய்பவர்களும் தினந்தோறும் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொள்வார்கள். நான் மதராஸ் சென்ற சமயத்தில் என் கிராமத்திலிருந்து அவர்கள் வந்தால்* "**இளையபெருமாள் மதராஸ் போயிருக்காரு. வந்திடுவார் போங்க**" *என்று கூறி அனுப்பி வைப்பார் பூண்டி மகான்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணையில் அமர்ந்திருந்த போது அவர் பக்கத்தில் முத்துமாலை ஒன்று இருந்தது. நான் தரிசித்த ஒவ்வொரு நாளும் அந்த முத்துமாலை வேண்டும் என்று கேட்பேன். நான் சுமார் ஒரு மாதத்திற்கு மேல் கேட்ட பிறகு ஒரு நாள் அளித்தார். இன்றும் நான் அந்த மாலையை பூஜையறையில் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்.*

உளூந்தூர்பேட்டையிலுள்ள மறுவாழ்வு இல்லத்திற்கு கைத்தறி இயந்திர பாகங்களை விற்பதற்கு பார்சலை பேருந்தின் மேல் ஏற்றினேன். போகும் வழியில் பார்சல் கீழே விழுந்து விட்டது. சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவிற்கு பேருந்து சென்றது. பேருந்தில் உள்ள எனக்கு "**போ! போ!**" என்ற குரல் கேட்டது. உடனே பேருந்தை நிறுத்தி பார்த்தபோது பார்சல் தென்படவில்லை. தேடிக் கொண்டே பின்னோக்கிச் சென்றேன். சிறிது தூரம் சென்ற பிறகு ஒருவர் கையில் அந்த பார்சல் இருந்தது. அது என்னுடையது என்று கூறினேன். அந்த மனிதர் அதன் மதிப்பு என்ன என்று கேட்டார். நூறு ரூபாய் இருக்கும் என்று பொய் கூறினேன். காரணம் அதன் மதிப்பு அதிகம். உண்மை கூறினால் நிறைய பணம் கேட்பார் என்று அவ்வாறு கூறினேன். அவரும் சரி எடுத்துக்கிட்டு போங்க என்று பார்சலை தந்து விட்டார். நான் அவருக்கு பத்து ரூபாய் தந்து விட்டு வேறொரு பேருந்தில் சென்றேன். ஸ்ரீ பூண்டி மகான் திருவருளால் என் பார்சல் கிடைத்தது. இல்லையென்றால் நான் மிகுந்த நஷ்டம் அடைந்து இருப்பேன்.

நான் பேருந்தில் சென்றபோது சீட் இல்லாமல் நின்றிருந்தபோது மனதில் பூண்டி சுவாமியை வேண்டினால் யாரோ ஒருவர் எழுந்து எனக்கு உட்கார இடம் அளிப்பார்கள். ஒரு வேளை ஏற வேண்டிய பேருந்தில் அதிக கூட்டம் இருந்தால் நான் அப்படியே நின்று மனதிலேயே சுவாமியை வேண்டிக் கொள்வேன். வேறொரு பேருந்து காலியாக வந்து நிற்கும். நானும் அதில் ஏறுவேன். முழுமனதோடு வேண்டினால் போதும். எங்கும், எப்போதும் நான் இருக்கிறேன் என்று பூண்டி சுவாமி அவர் அனுபவத்தை அளிப்பார்.

ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில் நான் சுவாமிகளிடம் நெருக்கமாகப் பழகினேன். ஒரு முறை எனக்கு ஒரு சிகரெட் வேண்டும் என்று சுவாமியை கேட்டேன். "**ஊம்... சிகரெட்... ஊம்**" என்றார். தரவில்லை. நானே அவர் மூட்டையிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துக் கொண்டேன். சுவாமி திண்ணை மேல் அமர்ந்த பிறகு எனக்கு அவரது மகிமை தெரிந்தது. அப்போது என் மனதில் இப்படி உயர்ந்த மகானிடம் சிகரெட் கேட்டு வாங்கிக்

கொண்டோமே என்ற வருத்தமும், பயமும் ஏற்பட்டது. ஒரு நாள் ஸ்ரீ பூண்டி மகான் "**இளையபெருமாளு. ஒரு சிகரெட் வாங்கிக் கொடு**" என்று கேட்டார். உடனே நான் கடைக்குச் சென்று ஒரு சிகரெட் வாங்கி வந்து அளித்தேன். என் கடன் தீர்ந்து விட்டது. நான் அடிக்கடி சிகரெட் வாங்கிச் சென்று ஸ்ரீ சுவாமிகளின் கைவிரலில் வைத்து பற்ற வைப்பேன். ஆனாலும் ஸ்ரீ சுவாமிகள் கேட்டு பெற்ற சிகரெட் எனக்கு அபரிமிதமான ஆனந்தத்தை அளித்தது.

எனக்கு எது வேண்டும் என்றாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வேண்டிக் கொண்டால் போதும். என் கோரிக்கை நிறைவேறிவிடும். அது வியாபார நிமித்தமோ, குடும்ப விஷயமாகவோ இருக்கலாம். அல்லது வேறு ஏதாவது என்றாலும் சரி, அவரது அருள் என் மீது முழுமையாக உள்ளது என்று எண்ணிக் கொள்வேன். என் பிள்ளைகள் பட்டு நெசவு செய்வார்கள். நெசவு செய்யும் சமயத்தில் சில தவறுகள் ஏற்படும். அதை எடுத்துச் சென்று முதலாளிகளிடம் தரும் சமயத்தில் அங்கு தணிக்கை செய்வார்கள். நடந்த தவறுக்கு அபராதமாக ரூ.100 அல்லது ரூ.200 வசூல் செய்வார்கள். நான் நடந்த தவற்றை எல்லாம் ஒதுக்கிவிட்டு ஸ்ரீ பூண்டி சுவாமியை மனதில் நினைத்தவாறு செல்வேன். அங்கு தந்தவுடனே அந்த ஆடைகளை தணிக்கை செய்பவர்களுக்கு எந்தத் தவறும் தென்படாது. எனக்குப் பணமும் அளித்துவிடுவார்கள். இதற்கு மேல் என்ன சாட்சி வேண்டும். சுவாமிகளின் ஆசிகள் எனக்கு எப்போதும் இருக்கும்.

நான் திருமணம் செய்வதற்கு முன்பு நல்ல மனைவி வரவேண்டும் என்று கேட்டேன். அப்படியே அளித்தார். என் பெரிய மகளுக்கு கல்யாண வரன் வந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கூறினேன். "**ஊம். பார்க்கலாம்**" என்றார். மீண்டும் ஒரு மாதத்தில் வேறொரு வரன் வந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கூறினேன். "**ஆம் நல்லது**" என்றார். திருமணமும் நடத்தினேன். சுகமாக உள்ளனர்.

இப்போது நான் இருக்கும் வீடு ஸ்ரீ சுவாமிகள் திருப்பாதங்கள் வைத்த வீடாகும். அதற்காகவே இன்றும் நான் அந்த பழைய வீட்டில் உள்ளேன். அந்த வீடு உள்ள இடத்தில் வேறொரு வீடு கட்ட மனம்

வரவில்லை. ஸ்ரீ பூண்டி மகான் எப்படி வேண்டுமானாலும் செய்யட்டும் என்று அப்படியே வைத்து உள்ளேன்.

நான் வியாபார விஷயமாக டெண்டர் போடுவதற்கு முன்பு என் மனதிலுள்ள கணக்குகளை சுவாமிகளுக்கு கூறிவிட்டு டெண்டர் போடுவேன். அவையும் எனக்கே வரும். அப்படி எத்தனையோ லீலைகள். ஸ்ரீ பூண்டி மகானை நினைத்து எந்த வேலை செய்தாலும் வெற்றியடையும்.

நேர்காணல்: 92
25.2.2010, பூண்டி

**கோவிந்தசாமி**, வயது: 72, பழங்கோவில்.

*ஸ்ரீ சுவாமிகளை நான் என் கிராமத்தில் முதல் முறை தரிசித்தேன். நான் சிறுவயதில் இரவில் சினிமா பார்த்துவிட்டு வீட்டுக்கு வரும் சமயத்தில் ஆற்றில் தென்படுவார். ஸ்ரீ சுவாமிகளின் உருவம் இருட்டில் பெரியதாக தென்படும். ஒரு நாள் ஸ்ரீ சுவாமிகள் என் சித்தப்பா வீட்டுத் திண்ணை மீது அமர்ந்தார். இளநீர் வெட்டித் தந்தோம். சுவாமி சிறிது குடித்தார். இரண்டு மணி நேரம் அமர்ந்து இருந்துவிட்டு பிறகு சென்று விட்டார். இன்று அவருடைய பிள்ளைகள் அனைவரும் நன்றாகப் படித்து மேன்மையான நிலையில் உள்ளனர்.*

*எங்களுக்கு சிறிது நிலம் இருந்தது. கிணற்றில் தண்ணீர் இல்லை. கமிட்டித் தலைவர் கோவிந்தராஜுலு நாயுடுவிடம் சொல்லி ஸ்ரீ சுவாமியை கேட்கச் சொன்னேன். என்னை உடன் அழைத்து வந்து ஸ்ரீ சுவாமியை கேட்டார்.* "**அற்புதமான நல்ல தண்ணீர் இருக்கு. மனசை பின்வாங்காம வெட்டினா தண்ணீர் வரும்**" *என்றார் சுவாமி. நானும் கிணற்றை ஆழம் தோண்டினேன். பாறை வந்தது என்று அக்கிணற்றை மற்றவருக்கு விற்று விட்டேன். வாங்கியவர் மீண்டும் அக்கிணற்றை ஆழப்படுத்தினார். நல்ல தண்ணீர் வந்தது. எனக்கு ஸ்ரீ சுவாமிகள் சொல்லியும் செய்யாமல் விட்டுவிட்டேன். சுவாமிகளின் வார்த்தைகளில் உள்ள மகிமையையும், மர்மத்தையும் தெரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேன்.*

*நான் எங்கள் நிலத்தில் கேழ்வரகு பயிர் விதைத்தேன். அது நன்கு விளைந்தது. அப்பயிரில் இருந்து நல்ல கேழ்வரகு கதிர்களை அறுத்து அவற்றிலிருந்து கேழ்வரகு எடுத்து சுத்தப்படுத்தி புட்டு வைத்து சர்க்கரைத் தூவி புதிய தட்டில் வைத்து எடுத்து வந்து சுவாமிகளை வணங்கி, கேழ்வரகு புட்டை அளித்தேன். ஒரு கோலி அளவு எடுத்து*

*வாயில் போட்டுக் கொண்டார். எனக்கு ஸ்ரீ பூண்டி சுவாமிஉண்டார் என்ற திருப்தி ஏற்பட்டது. மீதியைப் பக்கத்தில் வைத்தார். நான் கேழ்வரகு புட்டை பக்கத்தில் வைத்த தட்டை எடுத்துக் கொள்ளலாம் என்று கையை நீட்டினேன். சுவாமி தட்டைத் தரமாட்டேன் என்றார். அப்படியே விட்டுவிட்டு சென்று விட்டேன். ஸ்ரீ கிருஷ்ணரின் பால்ய நண்பர் குசேலர் அவல் கொண்டு போய் தந்தது போல் நான் சுவாமிகளுக்கு எடுத்துச் சென்று தர முடிந்தது என்ற திருப்தி ஏற்பட்டது.*

*எங்கள் நிலத்தில் இரண்டு ஏக்கர் அளவு ஸ்ரீ சுவாமிகளுக்கு ஆசிரமத்திற்காக வேண்டும் என்று ஸ்ரீமதி. சன்மார்க்கம்மா பெயரில் வாங்கினார்கள். 10,000 ரூபாய்க்கு விற்றேன். சிறிது நாள் கழித்து விற்றுவிட்டார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் ஆசிரமத்திற்காக வேண்டும் என்றதால் தந்தேன். அதைக்கூட சுவாமிகளின் லீலை என்று நினைத்தேன். இன்றும் சுவாமிகளின் ஆசியால், அனுக்கிரகத்தால் இப்படி வர முடிகின்றது.*

**நேர்காணல்: 93**
**நாள்: 1.3.2010**

**பிச்சாண்டி**, வயது: 81, பூண்டி.

*கலசபாக்கத்தில் உள்ள ஈஸ்வரன் கோயிலுக்கருகில் முதல்முறை ஸ்ரீ சுவாமிகளை தரிசித்தேன். ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில், என்னைப் பார்த்தால் அவரோடு அழைத்துச் செல்வார். சில சமயங்களில் சுவாமி ஆற்றில் அமர்ந்து இருக்கும்பேது நான் சென்றால் பலமணி நேரம் பேசுவார். ஆனால் என் சிறு வயதில் அவர் கூறியதை புரிந்து கொள்ள இயலவில்லை. ஒவ்வொரு நாள் சுவாமிகள் பேசும்போது எனக்கு உறக்கம் வந்தால் சுவாமிகளின் தொடைமீது தலைவைத்து தூங்கச் சொல்வார். நானும் சுவாமியின் தொடை மீது தலைவைத்து தூங்குவேன். அப்படி நான் பலநாள் சுவாமியோடு நெருக்கமாக சேர்ந்து இருந்தேன். ஒவ்வொருமுறை ''***வீட்டுக்கு வாங்க சுவாமி***'' என்று அழைத்தால் வீட்டுக்கு வந்து உணவு உண்டு செல்வார். வீட்டில் கஷ்டமாக இருக்கும் போது வீட்டிற்கு வருமாறு அழைத்தால் வரமாட்டேன் என்பார். எல்லாம் அவருக்குத் தெரியும்.*

*பூண்டியில் ஆற்றுக்குச் செல்லும் வழியில் ஒரு புளியமரம் உள்ளது. ஸ்ரீ சுவாமிகள் அம்மரத்தின் நிழலில் அமர்ந்து இருப்பார். அச்சமயத்தில் நானும் சுவாமிகளோடு வெகு காலம் சேர்ந்து இருக்கும் சந்தர்ப்பம் அளித்தார். ஒரு நாள் இரவு 12 மணிக்கு என்னை அழைத்துச் சென்றார். சுவாமி எங்கு அழைத்தாலும் நான் பதில் பேசாமல் செல்வேன். வில்வாரணி சுப்பிரமணிய சாமி கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு பாறை மீது அமர்ந்தோம். எனக்குத் தூக்கம் வந்தது. படுத்துக் கொள்ளச் சொன்னார். நானும் படுத்து உறங்கி விட்டேன். காலையில் எழுந்தவுடனே "**சுவாமி! இங்கே தொல்லை தருவாங்க. போகலாம் வாங்க**" என்றேன். ஸ்ரீ சுவாமிகள் "**இல்லை! இல்லை! இங்கயே இருக்கலாமே. நீ கூட இங்கேயே இரு**" என்றார்.இல்லை சுவாமி! நான்*

*கிளம்புகிறேன் என்றேன்.* **"சரி நீ போ! நான் வரேன்"** *என்றார் சுவாமி. நானும் கிளம்பி வந்துவிட்டேன். ஸ்ரீ சுவாமிகள் என்னை எதற்காக அங்கு இருக்கச் சொன்னாரோ எனக்கு தெரியாது. சுவாமி கூறினாலும் கேட்காமல் கிளம்பி வந்துவிட்டேன். அன்று மாலை சுவாமிகளும் வந்து விட்டார்.*

*நான் வெற்றிலைப்பாக்கு வியாபாரம் செய்து வந்தேன். தினந்தோறும் வந்து ஸ்ரீ சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டபிறகு மிதிவண்டியில் வியாபாரத்திற்காகச் செல்வேன். ஒரு வருடகாலம் சுவாமிகளிடம் காவலாளியாக வேலைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் காவலாளியாக இருந்தபோது வந்து அன்பர்களிடம் சுவாமியை கஷ்டபடுத்தவேண்டாம் என்பேன். ஒரு வருடம் கழித்து காவலாளி வேண்டாம் என்றார்கள். நான் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கேட்டேன்.* **"சரி! நீ எங்கியாவது இரு"** *என்றார்.*

*நான் காவலாளியாக இருந்தபோது* **"ஏதாவது வேணுமின்னா கேளுடா"** *என்றார் பூண்டி மகான். கேட்டு நான் என்ன பண்ணப்போறேன் என்றேன்.* **"நீ பிழைக்கத் தெரியாதவன்"** *என்றார் சுவாமி.*

*எனக்கு முதல் மனைவி இறந்துவிட்டதால் உணவு சமைக்க ஆள் வேண்டும் என்று நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கேட்டேன்.* **"அனுபவிக்க வேண்டியதை அனுபவிச்சிதான் ஆகணும்"** *என்றார்.*

*நான் பூண்டி சுவாமியிடம் காவலாளியாக வேலை செய்து கொண்டிருந்தபோது சுவாமிகள் ஒரு சிகரெட்டை என் கையில் தந்து* **"இந்தா பிடி"** *என்றார். நான் சிறிது தொலைவிற்கு சென்று ஒரு சிறிய சந்தில் நின்று சிகரெட் பிடித்தேன். நான் சிகரெட் பிடித்த சமயத்தில் எனக்கு தேவலோகத்தை காண்பித்தார். தேவலோகத்தில் உள்ள பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், இந்திரன் முதலான தேவர்கள், யமன் அனைவரும் தரிசனம் அளித்தனர். ஏதோ ஒரு மயக்கம் உண்டானது. அனைத்து தெய்வங்களின் சொரூபம் தானே என்று எனக்கு தரிசனம் அளித்து அனுபவப்பூர்வமாக தெரியப்படுத்தினார். அது அவர் எனக்களித்த அனுக்கிரகம். சிறிது சிறிதாக என்னுள் மாற்றங்களைக் கொண்டு வருகிறார் சுவாமிகள்.*

ஸ்ரீ சுவாமிகள் ஒருமுறை என்னிடம் "**நீ எங்கும், எப்போதும், எதிலேயும் கையெழுத்துப் போட வேண்டாம்**" என்றார். எனக்கு என் சகோதரனோடு மனஸ்தாபம் ஏற்பட்டது. திருவண்ணாமலையில் எங்களுக்கு சிறிது இடம் இருந்தது. இங்கு இருப்பவர்கள் கலகம் வைத்து அங்குள்ள இடத்தை என் தம்பிக்குத் தருமாறு எனக்கு சமாதானம் செய்வது போல் கூறி என்னிடம் எழுதி வாங்கிக் கொண்டார்கள். பூண்டியில் உள்ள சிறிது நிலத்தை என் பங்குக்கு அளித்தார்கள். பூண்டியில் ஒருவர் என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்று அப்படி எழுதி கையெழுத்துப் போட வைத்தார். நான் மிகவும் நஷ்டம் அடைந்தேன். ஸ்ரீ சுவாமி சொன்னதை கேட்காததற்கு கஷ்டங்களை அனுபவித்தேன்.

என் நண்பர் ஒருவர் மரத்தை வாங்கி விறகு வியாபாரம் செய்து வந்தார். ஓரிடத்தில் புளியமரம் வாங்கினார். சிறிது பணம் அளித்துவிட்டு மீதி பிறகு தருவதாக ஒப்பந்தப்பத்திரம் எழுதித் தந்தார். அதில் நான் ஜாமீன் கையெழுத்து போட்டால் மரத்தைத் தருவதாக மரத்தின் சொந்தக்காரரர் கூறினார். நானும் என் நண்பருக்காக கையெழுத்து போட்டேன். என் நண்பர் மரத்தை வெட்டி விற்று விட்டார். ஆனால் மீதிப் பணத்தை தரவில்லை. மரத்தின் சொந்தக்காரரர் வழக்கை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றார். ஜாமீன் கையெழுத்து நான் போட்டதற்கு நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சம்மன் வந்தது. நான் ஸ்ரீ சுவாமியிடம் கூறினேன். வழக்கு மன்றத்துக்கு போகவேண்டாம் என்றார். நானும் செல்லவில்லை. கடைசியில் வழக்கு மன்றத்தில் இருந்து அமீனா வந்து சம்மனை கையில் தந்து ஆஜராகும்படி கூறினான். நான் ஸ்ரீ சுவாமியிடம் கூறினேன். "**சரி போயி வா! முன்சீப் கிட்ட சொல்லிட்டு போ**" என்றார். முன்சீப்பிடம் கூறிவிட்டு கிளம்பிச் சென்றேன். நீதிமன்றத்தில் என் பெயரை அழைத்தார்கள். அச்சமயத்தில் நான் உள்ளே செல்வதற்கு முன்பு ஸ்ரீ சுவாமிகள் கருட உருவில் வந்து தரிசனம் அளித்தார். நான் அவரைப் பார்த்து கையெடுத்து வணங்கினேன். உள்ளே சென்று கூண்டில் ஏறப்போனேன். ஏற வேண்டாம். இறங்கி வா என்றார் நீதிபதி. நீ போ! எதுவும் இல்லை

என்றார். என் கண்களில் கண்ணீர் வந்தது. அந்த மகான் என்ன செய்தாரோ எனக்குத் தெரியாது. ஆனால் என்னைக் காப்பாற்றினார்.

ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைவதற்கு முன்பு காலையில் சென்று தரிசனம் செய்தேன். தினந்தோறும் வணங்கியவுடனே **"போயிட்டு வா"** என்பார். அன்று சுவாமி எதுவும் பேசவில்லை. நான் கிளம்பி வியாபாரத்திற்குச் சென்று விட்டேன். சரியாக ஒன்பது மணிக்கு என்னை யாரோ ஆகாயமார்க்கத்தில் அழைத்துச் செல்வது போன்று அனுபவித்தேன். சரியாக அதே சமயத்தில் சுவாமிகள் சமாதியடைந்தார் என்று தெரியவந்தது. நான் உடனே வந்துவிட்டேன். என்னை எங்காவது சென்று வில்வஇலை கொண்டு வருமாறு அனுப்பினார்கள். வேலூரில் உள்ள ஒரு மடத்தில் வில்வமரம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அது மஹாவில்வம். நான் சென்று சில வில்வ இலைகளை கொய்து எடுத்து வந்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமிசமாதியில் அந்த வில்வ இலைகளை பயன்படுத்தினார்கள். அப்படி செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்தினார் சுவாமி.

**நேர்காணல்: 94**
**9.4.2010, பூண்டி**

**வெங்கடேசன்**, வயது: 65, பூண்டி.

*ஸ்ரீ சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்திலிருந்து எனக்குத் தெரியும். சுவாமிகள் தனிமையில் இருப்பதற்கு மிகவும் விரும்புவார். ஸ்ரீ சுவாமிகள் திண்ணை மீது அமர்ந்தபிறகு என் தாயார் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று* **"என் மகன் பொறுப்பில்லாமல் சுற்றுகிறான். திருமணம் செய்து கொள்ளச் சொன்னாலும் மாட்டேன் என்கிறான். நீங்கள் தான் சொல்லணும். இங்கதான் அதிக நேரம் இருக்கிறான்"** *என்று மனவருத்தத்தோடு கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமி* **"நான் சொன்னேன். கல்யாணம் பண்ணிக்குவான். நல்லா படிச்சி வாழ்க்கையில் நன்றாக இருப்பான்"** *என்று கூறி அனுப்பினார். நான் எப்போதாவது* **"சுவாமி! நான் எப்படி இருப்பேன் எதிர்கால வாழ்க்கையில என்று கேட்டால் "நல்லா இருப்பே. சந்தோஷமா"** *என்று கூறுவார்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வரும் அன்பர்கள் வேறுவேறு இடங்களிலிருந்து வருவார்கள். சிலருக்கு தமிழ் மொழி வராது. அன்பர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சுவாமி தமிழில் பதில் அளிப்பார். மொழி தெரியாத அன்பர்களுக்கு நான் மொழிபெயர்த்துக் கூறுவேன். வெளிநாட்டிலிருந்தும் அன்பர்கள் வருவார்கள். ஸ்ரீ பூண்டி மகான் அவர்களுக்கு கூறிய விஷயங்களை மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் கூறுவேன். சிலருக்கு நேரிடையாகவோ, சிலருக்கு மறைமுகமாகவோ பதில் அளிப்பார் சுவாமி. சிலவற்றை நாமே புரிந்து கொள்ள வேண்டும்.*

*என் வாழ்க்கையில் ஆரம்பத்தில் மிகவும் கஷ்ட நிலையில் இருந்தேன். ஒரு சமயம் நான் சுவாமிகளிடம்* **''சுவாமி! நான் வாழ்க்கையில் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன். நன்றாக படிக்கணும். எனக்கு படிப்புமேல் விருப்பமாக உள்ளது. நான் விரும்பினவரை படித்து வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வரவேண்டும்''** *என்று கேட்டேன்.*

ஸ்ரீ பூண்டி சுவாமிகள் "**நல்லா படிப்பே**" என்று ஆசிர்வதித்தார். நான் பத்தாவது வரை படித்து இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து படித்து ஆரம்பப்பள்ளியில் ஆசிரியராக சேர்ந்தேன். வேலை செய்து கொண்டே ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் M.A. M.Ed. வரை படிக்க முடிந்தது.

என் தாய் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். வரும் கூலிப் பணத்தில் எனக்கு உணவு வைத்து அவர் பட்டினி இருப்பார். நான் ஒரே மகன். நான் படித்து வேலையில் சேர்ந்த பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமியிடம், "**என் தாய் மிகவும் கஷ்டப்பட்டு படிக்க வைத்தார். அவருக்குத் தான் நன்றாக செய்ய வேண்டும். ஆசிர்வதியுங்கள்**" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி என்தலை மீது கை வைத்து ஆசிர்வதித்து திருநீறு வைத்து "**நல்லா இருப்பே**" என்றார்.சுவாமி என் கையில் திருநீறு அளித்தால் நான் வாங்க மாட்டேன். நீங்களே என் நெற்றியில் வைங்க என்பேன். பிறகு வைப்பார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிஅமர்ந்த திண்ணைக்கு எதிரில் காலியிடம் இருந்தது. அந்த இடத்தில் ஒரு சிறிய குடிசை இருந்தது. அங்கு ஸ்ரீ சரத்பாபுஜி அமர்ந்து தியானம் செய்வார். ஸ்ரீ பூண்டி சுவாமிஅடிக்கடி அவரை பார்ப்பார். ஸ்ரீ சரத்பாபுஜி அவர்கள் ஸ்ரீ பூண்டி சுவாமியையே ஒரு முகமாக பார்த்தவாறு இருப்பார். அப்படி சுமார் ஒரு மாதத்திற்கு மேல் தீட்சை செய்தார். ஸ்ரீ சரத்பாபுஜியோடு நான் நெருக்கமாக இருந்தேன். அவர் கைப்பட எழுதிய கடிதங்களை நான் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். நானும் கடிதம் எழுதுவேன். நான் என் குடும்பத்தோடு சென்று அவர் ஆசிகள் பெற்றேன். நான் தனியாக சென்றபோது அவரோடு சேர்ந்து உணவு அருந்த வைத்து அனுப்புவார். ஸ்ரீ பாபுஜி அவர்கள் சத்சங்கம் செய்வார். எனக்கு சிலவற்றை கேட்கும் பாக்கியமும் அளித்தார்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் என் பிள்ளைகள் நன்றாக படித்து அனைவரும் நல்ல நிலையில் உள்ளனர். நான் கேட்டதை அளித்து சுவாமி கருணை புரிந்தார். அது ஸ்ரீ பூண்டி சுவாமியின் மகிமை.

**நேர்காணல்: 95**
**27.4.2010, பூண்டி**

**ஆறுமுகம்**, வயது: 60, வேடந்தவாடி.

*ஸ்ரீ பூண்டி சுவாமிமேற்கு திண்ணையில் அமர்ந்திருந்தபோது முதல்முதலில் வந்து தரிசனம் செய்தேன். அதன்பிறகு என் கிராமத்தில் உள்ள அன்பர்கள் அனைவரும் சேர்ந்து ஸ்ரீ சுவாமிகளின் திருஉருவப்படத்தை ஒரு தேர் மேல் வைத்து திருவிழா போல் அந்த தேரினை இழுத்துக் கொண்டு பூண்டிக்கு வருவோம். பிறகு நடந்தே செல்வோம்.*

*எனக்கு சுமார் 15 வயதாக இருக்கும்பேது எங்கள் குடும்பத்தில் தகராறு ஏற்பட்டு வீட்டைவிட்டு வெளியேற முடிவு செய்து நேராக வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து வணங்கி* **"சுவாமி! நான் ஓர் இடத்திற்குச் சென்று வரவேண்டும் என்று நினைக்கிறேன்"** *என்று கூறினேன். பூண்டி சுவாமி* **"சரி போகலாம்"** *என்றார். நான் கிளம்பி கலசபாக்கம் இரயில் நிலையத்திற்குச் சென்று என்னிடமிருந்த பணத்தில் பயணச்சீட்டு வாங்கி இரயிலில் ஏறினேன். இனி என்னிடம் பணமில்லை. என் கண்களில் கண்ணீர் வந்தது. பசி வேதனை தாங்க முடியவில்லை. யாரோ சகபயணி தயிர்சாதம் சாப்பிட அளித்தார். அந்த உணவு கெட்டு வாயில் வைக்கமுடியாமல் உணவை கீழே போட்டுவிட்டேன். மாலை ஏழு மணிக்கு சித்தூர் இரயில்வே நிலையத்தில் இறங்கினேன். அங்கு என் நண்பனிடம் செல்லவேண்டும் என்று நினைத்தேன். அந்நண்பனின் முகவரி இருந்தாலும் இடம் தெரியாது. அங்கு தொடர்வண்டி நிலையத்தில் இருந்த பெஞ்சு மீது அமர்ந்து கொண்டேன். என்னைவிட சிறிய வயது. சுமார் பத்து வயது சிறுவன் என் பக்கத்தில் வந்து அமர்ந்தான். நான் யதேச்சையாக தம்பி உனக்கு இந்த முகவரி தெரியுமா? என்று கேட்டேன். அந்தப் பையன் முகவரியை வாங்கிப் பார்த்துவிட்டு எனக்குத் தெரியாது. வாங்க கேட்டுகிட்டு போகலாம் என்றான்.*

இருவரும் கிளம்பிச் சென்றோம். அந்த சிறுவன் அங்கங்கே முகவரிச்சீட்டை காண்பித்து கேட்டுக்கொண்டே செல்லும்போது நான் பின்னாலேயே சென்றேன். அச்சிறுவன் ஒரு லாட்ஜ்க்கு அழைத்துச் சென்று இதுதான் முகவரி என்றான். அங்கு வாட்ச்மேனிடம் சீட்டை காண்பித்துக் கேட்டோம். அவர் அதைப் பார்த்து, அவன் சமையல் செய்து கொண்டிருப்பான். இப்போது வெளியே வரமுடியாது. இரவு பத்துமணிக்கு வந்து பார்க்குமாறு கூறினார். நான் என்னோடு வந்த சிறுவனைப் பார்த்து **"எனக்காக இவ்வளவு தூரம் வந்தாய்? என்னிடம் பத்து காசு கூட இல்லை"** என்றேன். அதற்கென்ன பரவாயில்லை என்று அச்சிறுவன் கூறி கிளம்பினான். சிறிது தூரம் செல்லும்வரை தென்பட்டான். பிறகு எவ்வழியில், எப்படிப் போனான் என்று தெரியவில்லை. நான் அங்கேயே மூன்று மாதங்கள் இருந்து வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டேன்.

என் வீட்டில் சகோதரர்கள் இடையே பிரச்சினை ஏற்பட்டது. மாலை மூன்று மணிக்கு ஆரம்பமான தகராறு இரவு ஏழு மணியானாலும் முடிவு பெறவில்லை. நான் வீட்டினுள் சென்று பூண்டி சுவாமியின் திருவுருவப் படத்தின் முன் விழுந்து வணங்கி என் மனதில் உள்ளதைக் கூறினேன். சிறிது நாட்களில் அந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டது.

ஒரு நாள் நான் எங்கள் நிலத்தில் கல் எடுத்துக்கிட்டு இருந்தேன். ஒரு வயதான துறவி கையில் ஒரு சிறிய செம்பை வைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தவரை பார்த்து வாங்க சுவாமி என்று அழைத்தேன். அத்துறவியும் வந்தார். அச்சமயத்தில் என்னிடம் கூழ் அல்லது தண்ணீர் எதுவென்று கவனமில்லை செம்பில் வைத்திருந்தேன். அதை சுவாமி! அருந்துங்கள் என்று கூறி அளித்தேன். சரியென்று கூறி வாங்கி அருந்தினார். நான் கல் உடைக்க சம்மட்டி வைத்திருந்தேன். அவர் அச்சம்மட்டியை கையில் எடுத்து இரண்டு கல் உடைத்து விட்டு சரி நான் வரேன் என்று கூறி கிளம்பிவிட்டார். சிறிது தூரம் வரை தென்பட்டார். பிறகு தென்படவில்லை. அந்த உருவத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமிகள் தான்

*வந்து இருந்தார் என்பது என் நம்பிக்கை. எத்தனையோ உருவங்களில் வந்து என்னைக் காப்பாற்றுகிறார். அவர் அனுக்கிரகத்தால் எத்தனைக் கஷ்டங்கள் இருந்தாலும் அவற்றை ஒதுக்கி வாழமுடிகின்றது.*





ஸ்ரீ பூண்டி மகானின் திருஉருவ படத்தை ஊர்வலமாக
எடுத்து சென்ற திருவிழா

**நேர்காணல்: 96**
**28.4.2010, பூண்டி**

**கமலம்மா**, வயது: 85, கொத்தந்தவாடி.

*ஸ்ரீ பூண்டி சுவாமிதிண்ணை மேல் அமர்ந்தபிறகு நான் என் கணவரோடு வந்து தரிசனம் செய்து செல்வேன். என் மாமனாரின் சகோதரர் வீட்டில் நகை திருடு போனது. அத்திருட்டுக்குற்றத்தை என் மாமியார் மேல் போட்டார்கள். அப்பழியைத் தாங்காமல் என் மாமியார் இரண்டரை மாத குழந்தையை விட்டு விட்டு தற்கொலை செய்து கொண்டார். தாயில்லாக்குறையை யாரும் போக்கமுடியாது. என் கணவர் சிறுவயதில் நிறைய துன்பங்களை அனுபவித்தார். எனக்குத் திருமணம் ஆனபிறகு ஒரு தாய் போல் ஆதரித்தேன். ஒரு மனைவி போல் என் தர்மத்தை கடைபிடித்தேன். என் கணவரை நான் எப்போதும் கஷ்டப்படுத்தியது இல்லை. வீட்டில் வேலைகள், நிலத்தில் வேலைகள் எல்லாவற்றையும் நான் கவனித்துக்கொள்வேன். வேளைக்கு வந்து உணவு கேட்பார். குழம்பில் உப்பு, காரம் குறைவாக இருந்தாலும் எதுவும் கேட்கவே மாட்டார்.*

*ஒருமுறை எங்கள் நிலத்தில் வேர்க்கடலைகொடி பாறை மேல் காய வைத்து இருந்தோம். காலையில் நான் நிலத்திற்குச் சென்று அங்கு ஆடு மேய்ப்பவர்களிடம் ஆடுகள் வேர்க்கடலைக் கொடி சாப்பிடாமல் பார்த்துக்கொள்ளுமாறு கூறிவிட்டு வீட்டிற்கு வந்தேன். என் பின்னாலேயே ஒரு பையன் ஓடி வந்து அம்மா! இப்பதான் நீங்க சொல்லிவிட்டு வந்தீங்க. ஆனாலும் ஆடு வேர்க்கடலைக் கொடி சாப்பிடுகிறது என்று கூறினான். நான் 'ஐயோ! பூண்டி சுவாமி. என்னை எதுக்கு இப்படி கொல்றீங்க? நான் எத்தனை முறை நடப்பது. சிறிதளவும் கருணை இல்லையா?' என்று வெறுப்போடு உட்கார்ந்துவிட்டேன். என் மனசு கேளாமல் ஆடுகளை விரட்டி வரலாம் என்று புறப்பட்டு நிலத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு பையன் 'பாட்டி! இப்பதானே வந்து*

ஆட்டையெல்லாம் மாந்தோப்புவரை விரட்டி விட்டாய். மீண்டும் ஏன் வந்தீங்க!' என்று கேட்டான். ஆமாண்டா! முதலில் கூறிவிட்டு வீட்டிற்கு போயிவிட்டேன். மீண்டும் இப்போது தான் வருகிறேன் என்றேன். அட. சும்மா சொல்லாதீங்க என்றான் அந்தப் பையன். சரி நான் வந்தேன் என்று சொல்வதற்கு ஆதாரம் என்ன என்று கேட்டேன். என்னாம்மா. நீங்க அப்போது கூட கருப்பு சேலை கட்டிக்கிட்டு வந்தீங்க என்றான் அந்த பையன். எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. தொலைவில் உள்ள மாந்தோப்பிற்குச் சென்றேன். அங்கு ஆடு மேய்ப்பவர்கள் 'என்னாம்மா! இப்போது தானே இதுவரை துரத்தி ஓட்டி விட்டே. மீண்டும் எதுக்கு வந்தே' என்று கேட்டார்கள். என் கண்களில் கண்ணீர் வந்தது. உடனே நான் இரண்டு கைகளையும் கூப்பி, **"ஐயா! எனக்காக இந்த முள், கல், எதையும் பார்க்காமல் வந்தாயா அப்பா"** என்று எண்ணியவாறு வீட்டிற்கு வந்தேன்.

என் குழந்தைகளுக்கு திருமணம் நடந்து குழந்தைகள் பிறந்து பள்ளிக்குச் செல்லும் சமயத்தில் நான் கர்ப்பம் தரித்தேன். என் மனதளவில் வெட்கத்தால் குன்றிப்போனேன். கருக்கலைப்பு செய்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தேன். புதுப்பாளையத்தில் உள்ள என் அக்காவிடம் கூறினேன். வேலூருக்குச் சென்றால் ஒரு ஊசியால் கருக்கலைப்பு செய்வார்கள் என்று என் அக்கா கூறினாள். என்னைக் கிளம்பி திருவண்ணாமலைக்கு வருமாறு கூறி அவரும் அங்கு வருவதாகக் கூறினார். நான் வீட்டில் வேலைகள் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு சீக்கிரமாக கிளம்பி வீட்டிற்குப் பூட்டு போடும் சமயத்தில் ஒரு துறவி வந்து திண்ணை மேல் அமர்ந்து கொண்டார். அந்தத் துறவி வெள்ளையாடை அணிந்து நரைத்த முடியுடன் ஆஜானுபாகுவான உருவம் கொண்டு உள்ளார். 'வாங்க சுவாமி! தண்ணீர் குடிங்க' என்று கூறி தண்ணீர் கொண்டு வர வீட்டினுள் செல்ல எண்ணினேன். 'வேண்டாம். நில். அங்கேயே நில்' என்றார் துறவி. அப்படியே நின்று கொண்டேன். **"உனக்கு குடும்பத்தில் ரொம்ப கஷ்டம் தான். இருந்தாலும் நீ எந்தக் கவலையும் படாமல் மனதை திடப்படுத்திக்கொண்டு குடும்பத்தை நடத்துவது**

ரொம்ப கஷ்டம். இருந்தாலும் நன்றாக இருப்பீர்கள் அம்மா" என்றார் துறவி. சரி சுவாமி! என்றேன். என் கணவர் சிறுவயதில் பட்ட கஷ்டங்களை என் குடும்பத்தில் நடந்த விஷயங்களை, நடக்கின்றவற்றையும் இருக்கிறது இருக்கிறபடி கூறி "அம்மா! யாரோ வந்து உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கிறாங்க என்று நினைக்கிறியா. இவர் எதுக்கு வந்தாரு. நான் கருக்கலைப்பு செய்து கொள்ள கிளம்பினேன் அல்லவா என்று நினைச்சிக்கிட்டு இருக்கிறியா?" என்று அத்துறவி கேட்டார். இல்லை சுவாமி என்றேன். "ஆங். உன் உள்ளத்தில் உள்ளது எனக்குத் தெரியும்" என்று கூறினார் சாது. இல்லை சுவாமி என்றேன் விருப்பமில்லாமல். எங்கள் வீட்டின் வாசற்படியில் பக்கத்திலேயே திண்ணை உள்ளது. அதற்குப் பக்கத்தில் தபால் நிலையமும் உள்ளது. அங்கு என் கணவர் போஸ்ட் மாஸ்டராக பணியாற்றிக் கொண்டிருந்தார். என் கணவர் என்னிடம் எப்படி நடந்து கொள்வார், எப்படிப் பேசுவார் என்று எல்லாவற்றையும் அத்துறவி கூறினார். எல்லாவற்றையும் கேட்ட நான் வந்தது ஸ்ரீ பூண்டி சுவாமி என்று முடிவு செய்தேன். "நீ எங்கு கிளம்பினாய் தெரியுமா?" இல்லை என்றேன் விஷயத்தை மறைத்தவாறு. "அடடே. அடடே. ஊம்.. ஊம்.." என்றார் சுவாமி. என் கண்களில் கண்ணீர் கொட்டுகின்றது. என் மனதில் "இவர் எங்கிருந்து வந்தாரோ? புறப்படுகிற சமயத்தில் வந்து அமர்ந்து கொண்டார். "எதுக்கு வந்தாரு" என்று திட்டினேன். "அம்மா" என்றார் சுவாமி. நான் சுவாமியின் பக்கம் பார்த்தேன். "பொறுத்துக்க. மனதில் பொறுமையா இரு" என்று கூறி முடிவில் சப்தமாக "நிறுத்து" என்றார். என்னால் துக்கத்தை அடக்கமுடியவில்லை. மீண்டும் "அழுகை நிறுத்து" என்றார். கண்ணீரை துடைத்துக் கொண்டேன். "உன் கர்ப்பத்தில் சிசு வளருது. அவர் உத்தமனாக பிறப்பார். அவருக்கு இராமலிங்கம் என்று பெயர் இடுங்கள். அம்மா! உன்னால் முடியாது. நீ எத்தனை மருந்து சாப்பிட்டாலும் கருக்கலைப்பு செய்ய உன்னால் முடியாது. முடியாது!" என்றார் சுவாமி. அப்படியானால் நான் என்ன செய்வது சுவாமி! என்றேன் பணிவுடன். "எதுவும் செய்ய வேண்டியதில்லை. நல்லா இருப்பீங்க. எந்த கஷ்டங்களும் வராது. அவர் பிறந்தபிறகு உங்கள் வீட்டில் பசுமாடுகள் வந்து எந்த சமயத்திலும் பால் நிறைந்து இருக்கும். உத்தமனாக பிறப்பான். நீ

**கருக்கலைப்பு செய்ய நினைக்காதே**" என்று மீண்டும் கூறி என்னை சத்தியம் செய்யச் சொன்னார். நானும் சத்தியம் செய்தேன். பிறகு சுவாமி திருநீறு அளித்து நெற்றியில் வைத்துக்கொள்ளச் சொன்னார். இவ்வளவு விஷயம் நடந்து கொண்டிருந்தாலும் என் கணவர் திண்ணைக்குப் பக்கத்தில் உள்ள தபால் நிலையத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறாரே தவிர வெளியே வரவில்லை. எல்லாம் முடிந்தபிறகு வெளியே வந்தார். என் கணவரைப் பார்த்த ஸ்ரீ சுவாமிகள் "**நான் குடும்பத் துறவி. நீ வீட்டுத் துறவி. நீ எதுவும் கண்டுக்க மாட்டே**" என்றார். "**ஆமாம் சுவாமி!**" என்றார் என் கணவர். ஸ்ரீ பூண்டி சுவாமி "**சரி! நான் கிளம்பணும்**" என்றார். சுவாமி! இவ்வளவு நேரம் இருந்தீர்கள். தண்ணீர் கூட குடிக்காமல் கிளம்பறீங்களே என்றேன். "**இல்லை அம்மா! மீண்டும் சந்திக்கலாம். குழந்தை பிறக்கட்டும். வரேன்**" என்றார். சுவாமி! சாப்பாடு சாப்பிட்டுப் போனால் எனக்கு திருப்தியாக இருக்கும் என்று கெஞ்சினேன். "**முடியாது**" என்று கூறி கிளம்பி சிறிது தூரம் வரை தென்பட்டார். பிறகு மறைந்து விட்டார்.

என் கணவர் துரைசாமி ரெட்டியார் திருவண்ணாமலை சென்று வீட்டிற்குத் திரும்பி வரும் சமயத்தில் ஒரு துறவியை அவரோடு அழைத்து வந்து "**கமலா! அவரோடு பேசிக்கிட்டு இரு. நான் கருமாரப்பட்டி கிராமம் வரை போய் வரேன்**" என்று கூறி கிளம்பி சென்றார். வந்த துறவியை வீட்டில் அமர வைத்து "**சுவாமி! என்ன சாப்பிடறீங்க**" என்று கேட்டேன். "**எனக்கு எதுவும் வேணாம்மா. பச்சை வேர்க்கடலை, பருப்பு நான்கு, பால் சிறிது வேண்டும். எனக்காக எதுவும் சமைக்க வேண்டாம்மா. நீயும் உட்கார்!**" என்றார் அத்துறவி. மாலை நான்கு மணியானது. குழந்தைகள் அனைவரும் வீட்டில் உள்ளனர். நான் அத்துறவியை கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் அளித்துக் கொண்டிருந்தார். எல்லா தத்துவங்களையும் விவரித்து கூறுகின்றார். இரவு ஒன்பது மணியானது. சுவாமி! இப்பவாவது சாப்பிடுங்கள் என்றேன். "**என்னை விட்டு விட்டுப் போனார் அல்லவா. அவர் வரட்டும்**" என்றார். என் கணவர் வந்த உடனே உணவு வைத்தாயா? என்று கேட்டார். அத்துறவியை உணவு சாப்பிடுமாறு வேண்டினார். "**என்னாப்பா! என்னை விட்டுட்டு போயிட்டே. நான் சாப்பிடறதா?**" என்று கேட்டு என் கணவர் பக்கம்

திரும்பி **"நீ இராமலிங்க சுவாமி சாட்சியா பிற பெண்களை கண் எடுத்து பார்க்க மாட்டேன் என்று சத்தியம் செய்"** என்று கேட்டார் அத்துறவி. வீட்டில் கூடத்தில் இருவரும் நிசப்தமாக ஒருவருக்கு எதிரில் ஒருவர் நடந்து கொண்டிருந்தனர். என் கணவரும் சொல்லவில்லை. அத்துறவியும் விடவில்லை. இரவு பத்து மணியானது, நான் என் கணவரிடம் **"உங்களுக்கு சந்தேகம் இல்லை என்றால் உங்கள் மனதில் அழுக்கு. இல்லை என்றால் சொல்லுங்கள். எதற்கு வாக்குவாதம் நடத்திக்கிட்டு இருக்கறீங்க?''** என்று கேட்டேன். என் கணவர் கூடத்திலிருந்த இராமலிங்க அடிகளார் திருவுருவப்படத்தின் முன் நின்று **''இராமலிங்க சுவாமி சாட்சியா இனிமேல் நான் பிறபெண்களை விருப்பத்துடன் பார்க்கமாட்டேன் என்று சத்தியம் செய்கிறேன்"** என்று கூறி என்னிடம் **"இப்பவாவது ஏதாவது உணவு வை!"** என்றார் அத்துறவி **"நான் வந்த வேலை முடிந்து விட்டது. நான் கிளம்புகிறேன்"** என்று கூறினார். இவ்வளவு நேரம் இருந்தீர்கள். எதுவும் ஆகாரம் சாப்பிடாமல் புறப்படறீங்க. சிறிது பால் மட்டுமாவது அருந்துங்கள்'' என்று வேண்டினேன். சர்க்கரை இல்லாமல் பால் தரச் சொன்னார். டம்ளரில் பாதியளவு எடுத்து வந்து தந்தேன். சிறிது அருந்தி மீதியை பக்கத்தில் வைத்துவிட்டார். அப்போது நேரம் பத்து மணியைத் தாண்டி விட்டது. யாராவது துறவிகள் வந்தால் படுத்துக்கொள்ள கட்டில் செய்து வைத்திருந்தார் என் கணவர். அதில் அத்துறவியை படுத்துக் கொள்ளுமாறு கூறினோம். துறவி திண்ணைமேல் படுத்துக் கொள்வதாக கூறினார். தலையணை அளித்தோம். நீங்கள் கதவை போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறி திண்ணைப் பக்கம் சென்றார் அத்துறவி. சிறிது நேரம் கழித்து வெளியில் கொசு அதிகமாக இருக்கும். சுவாமி எப்படி படுத்துக் கொண்டாரோ என்று எண்ணிக் கொண்டே வந்து கதவைத் திறந்து பார்த்தேன். தலையணை மட்டும் உள்ளது. **"எதற்கு சுவாமி! இப்படி வந்து மாயமாய் போய் விடுகிறீர்கள்"** என்று மனதில் வருத்தத்துடன் சென்று படுத்துக்கொண்டேன்.

என் கணவர் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில் ஸ்ரீ பூண்டி சுவாமி நினைவிற்கு வந்ததால் அந்த நொடியே எழுந்து கை கழுவிக்கொண்டு போட்டுக் கொண்ட துணியோடு அப்படியே

கிளம்பி விடுவார். பணம் கூட எடுத்துக் கொண்டு செல்லமாட்டார். வழியில் போகும்போது இவன் பயித்தியக்காரன். பூண்டிக்குப் போயிட்டு இருக்கிறான் என்று பேருந்தை நிறுத்தி ஏற்றிக்கொண்டு பூண்டியில் இறக்கி விடுவார்கள். ஒவ்வொரு சமயம் அப்படியே நடந்து சென்று விடுவார். ஸ்ரீ பூண்டி சுவாமிகளை தரிசனம் செய்து கொண்ட பிறகு பூண்டி சுவாமி விருப்பப்பட்டு ''**அவர் சும்மா வந்திருக்கார். ஏதாவது பணத்தைக் கொடுத்து அனுப்பு**'' என்று சுப்பிரமணிய சுவாமியிடம் கூறுவார்.

எனக்கு எட்டாவது குழந்தை பிறந்த ஒரு வருடம் கழித்து ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு முன் நின்றிருந்தபோது தெரு முனையில் இருந்து சுவாமிகள் வருவது தென்பட்டது. முதல் முறை வந்த உருவத்திலேயே இருந்தார். நான் சென்று என் கணவரிடம் கூறினேன். ஒரு சமயம் என் கணவர் "**என்ன கமலா! சுவாமி வந்தால் ஒவ்வொரு முறையும் நீயே பார்க்கறே. நான் பார்க்கமுடியாமல் போகின்றது**" என்று கூறி வருத்தப்பட்டார். அதற்காக தான் உள்ளே சென்று கூறினேன். இம்முறையாவது சுவாமியை வரவேற்கட்டும் என்று எண்ணினேன். என் கணவர் எழுந்து வந்தார். நான் வீட்டிற்குள் சென்று செம்பில் தண்ணீர் எடுத்து வந்து வைத்தேன். சுவாமிகள் தென்படவில்லை. மாயமாய் மறைந்து விட்டார். நான் அழுதுவிட்டேன். அன்றிரவு என் கனவில் தரிசனம் அளித்து "**வரணும்னு தான் வந்தேன் அம்மா! அதுக்குள்ள உன்னை யாரோ கூப்பிட்டாங்க. நான் சென்று விட்டேன்**'' என்றார்.

நான் தலை முழுகி ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்காக நெய்யில் சமைத்து எடுத்துக் கொண்டு என் கணவரோடு வந்து கொண்டிருந்தேன். கலசபாக்கத்திற்கு அருகில் வீட்டிற்கு வெளி ஆனேன். என் கணவரிடம் பையை அளித்து வழியில் தலை குளித்து ஈர உடையுடன் அப்படியே வந்தேன். எனக்கு அழுகை வந்தது. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடம் "**சுவாமிகளுக்கு உணவு எடுத்து வந்தேன். உபயோகம் இல்லாமல் போய் விட்டது**'' என்றேன் வருத்தத்துடன். சுப்பிரமணிய சுவாமி "**இரும்மா! நான் சுவாமியை கேட்டு வரேன்**" என்று கூறி சுவாமியிடம் சென்று ''**அம்மா ரொம்ப கவலைபடறாங்க.**

**உங்களுக்காக சமையல் செய்து எடுத்துக் கொண்டு வந்தாங்க. மனதில் வேதனைபடறாங்க**" என்றார். என் கணவரும் அச்சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் சன்னதியில் இருந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமி "**அதுக்கென்ன இருக்கு. சம்பா பயிராட்டும் தானே. பரவாயில்லை. பரவாயில்லை**" என்று கூறினார். அதன் பிறகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் வெள்ளித்தட்டில் உணவு எடுத்துச் சென்று ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு ஊட்டினார்.

எங்கள் வீட்டில் 40 பவுன் தங்கநகை திருடு போனது. அந்த நகைகள் என் மருமகளுடையது. அவள் வெளியே செல்லப் புறப்பட்டு நகைப்பெட்டி திறந்து பார்த்தபோது அவை தென்படவில்லை. நான் ஒரு வாரம் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் சென்று வந்தேன். என் மனதில் "**சுவாமி! என்னைத் தற்கொலை முயற்சி செய்ய வைக்க வேண்டாம். மாமியார் திருடினார் என்று அவர்கள் கூறினால் உங்களால்தான் என் உயிர் போய்விடும்**" என்று நினைத்தேன். என் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகத் தேடினார்கள். எட்டாவது நாள் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசிக்கும் சமயத்தில் காங்கனூர் ஸ்ரீ சண்முகசுவாமிகள் வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் "**அம்மா அழறாங்க. அம்மா அழறாங்க**" என்று அந்த வார்த்தையை பத்து முறை கூறினார். பிறகு மேலும் "**போயிஅந்த நகைகளை எடுத்து கொடுத்திட்டு வந்திடு! அந்த நகைகளை எடுத்து கொடுத்திட்டு வந்திடு!**" என்றார் இருமுறை. சண்முகம் அவர்கள் "**என்ன! நான் உனக்கு ஆளா**" என்று கூறி என் பக்கம் திரும்பி, "**போம்மா. நான் எடுத்துக்கிட்டு வரேன்**" என்றார். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். என் பேரன் அவர் நண்பர்களோடு சேர்ந்து திருவண்ணாமலையில் ஒரு கடைக்குச் சென்று நகைகளை விற்கும் சமயத்தில் ஸ்ரீ சண்முகம் அவர்கள் அக்கடைக்குச் சென்று அவர்களை அந்நகைகளைத் தருமாறு கேட்டார். அவர்கள் தரமுடியாது என்று பிடிவாதம் பிடித்தார்கள். ஸ்ரீ சண்முகம் "**அடே. திருடா! என்னிடமா எடுக்கலை என்று வாதம் செய்யறே. எடுத்துக்கிட்டு வாடா இப்படி**" என்று மிரட்டவே அவர்கள் பயந்தனர். சண்முகம் அவர்கள் "**எந்த சமயத்தில் எங்க எடுத்தாய். எப்படி எடுத்தாய் என்று எனக்குத் தெரியும். திருடவில்லை என்று சொல்றியா. நான் என்ன பண்றேன் பார்**" என்றவுடன் நகைகளை

கொடுத்துவிட்டனர். சண்முகம் அவர்கள் அந்நகைகைள எடுத்து வந்து வீட்டில் தந்து "**அம்மா! உன் வேதனை தீர்ந்துவிட்டதா!**" என்று கேட்டார். "**தீர்ந்து விட்டது சுவாமி!**" என்று கையெடுத்து வணங்கினேன். நகை திருடு போனாலும் பரவாயில்லை. எத்தனை கோடி செலவு செய்தாலும் நீக்கமுடியாத அவச்சொல்லை வராமல் காப்பாற்றினீர்கள். நகைகளை ஒப்படைத்துவிட்டு சண்முகம் அவர்கள் சென்று விட்டார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகள் ஒரு நாள் என் கனவில் தரிசனம் அளித்து "**அம்மா! நாளைக்கு அவரைக்காய் குழம்பு செய்து எடுத்துக் கொண்டு வர்றியா?**" என்று கேட்டார். சரி சுவாமி என்றேன். மறுநாள் ஸ்ரீ பூண்டி சுவாமிகள் ''**கொத்தந்தவாடி அவரைக்காய்**'' என்று கூறவே ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் பூண்டி சுவாமிகளுக்கு அவரைக்காய் சாப்பிடவேண்டும் என்று தோன்றியது போலும் என்று எண்ணி உடனே கிளம்பி கலசபாக்கம் சென்று அவரைக்காய் வாங்கி வந்து வீட்டில் தந்து அவரைக்காய் பொரியல் செய்ய வைத்து எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு ஊட்டுவதற்கு முயற்சித்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிமுகத்தை பக்கத்திற்கு திருப்பிவிட்டார். சாப்பிடவில்லை. சுப்பிரமணிய சுவாமி கொத்தந்தவாடி அவரைக்காய் தான் விருப்பமா? நான் வாங்கி வந்தா பிடிக்கலையா என்று மனவருத்தம் அடைந்தார். ஆனாலும் பூண்டி மகான் பதிலேதும் பேசவில்லை. அன்றே நான் அவரைச் செடியில் அவரைக்காய் அறுத்து நெய்யில் வறுத்து சமைத்து எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு ஊட்டினேன். சுவாமியும் விருப்பமாக சாப்பிட்டார். அதன் பிறகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் நடந்தவற்றை கூறினார்.

நான் எங்கள் வீட்டில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருஉருவப் படத்திற்கு தினந்தோறும் பூவைத்து பூஜை செய்வேன். நான் சுவாமிகளுக்கு வைத்தபூ கீழே விழுந்தால் ஒத்துக் கொள்ள மாட்டேன். உடனே ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் "**என் மேல் உங்களுக்கு என்ன கோபம்? என்னிடம் கூறுங்கள். பூவை எதற்கு கீழே தள்ளி விடறீங்க? காரணம் என்ன?**'' என்று அங்கேயே கேட்பேன். என் வீட்டில்

இருப்பவர்கள் யாரிடம் பேசுகிறாய்! என்று கேட்பார்கள். நான் என் சுவாமியிடம் கேட்கிறேன். நீங்கள் யார் கேள்வி கேட்பதற்கு என்று அவர்களை திருப்பிக்கேட்பேன். இந்த உலகத்தில் சுகதுக்கங்கள் இருக்கும். ஏதானாலும் என்னிடம் நேரிடையாக சொல்லுங்கள் என்று வேண்டுவேன்.

சித்ராபௌர்ணமி திருவிழாவிற்கு எங்கள் வீட்டின் அருகில் தேர் செய்கிறார்கள். 30, 40 பேர் வேலை செய்கிறார்கள். அந்தத் தேரினைப் பார்ப்பதற்கு பூண்டியிலிருந்தும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் வருவார்கள். அனைவருக்கும் எங்கள் வீட்டில் உணவு தயார் செய்து அளிப்போம். தினந்தோறும் எங்கள் வீட்டில் திருவிழா போல் இருக்கும். அந்தத் தேரினைப் பார்ப்பதற்கு மதராஸிலிருந்து 20 பேர் வருவதாக சண்முக சுவாமி கூறினார். அச்சமயத்தில் நன்றாக மழை பெய்துக் கொண்டிருந்தது. நான் வீட்டிற்கு வெளி ஆனேன். நான் அவரிடம் விஷயத்தைக் கூறினேன். **"அதற்கென்ன பரவாயில்லை. தலை குளித்து விட்டு சமையல் பண்ணி வை"** என்று கூறினார். நான் சமையல் செய்யும் சமயத்தில் பக்கத்தில் இருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் உதவி செய்வார்கள். இரவு எட்டு மணி ஆனது. நான் சமையல் செய்து கொண்டிருந்தேன். வீட்டில் நெய் இல்லை. நெய் சிறிது குழம்பில் போட்டால் நன்றாக இருக்கும் என்று மனதில் நினைத்தேன். உடனே சண்முகம் சுவாமிகள் வந்து **''அம்மா! இராமலிங்க சுவாமி என்ன சொன்னார். தயிர் சாதத்தை புளிசாதமா மாத்த முடியும் என்று சொன்னார் அல்லவா. உன் மனக்குறை எனக்குத் தெரியும். சிறிது தண்ணீர் டம்ளரில் எடுத்து மனதில் இது நெய் என்று எண்ணி ஊற்று. நெய் வாசனை வரும்''** என்றார்.நானும் அப்படியே செய்தேன். மதராஸிலிருந்து வந்தவர்கள் அனைவரும் உணவு உண்டபிறகு நெய் எங்கு வாங்கி வந்தீர்கள்! இவ்வளவு கமகமவென்று வாசனை வருகின்றது! என்றார்கள். நான் எங்கள் அப்பா தந்தார். போட்டேன் என்றேன்.

ஒரு முறை ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் தரிசனத்திற்காக வந்த சமயத்தில் சுவாமி ஒரு பக்கமாக சாய்ந்தவாறு தெரிந்தார். நான் என் கணவரிடம் **''என்னங்க! நீங்கள் எல்லாருக்கும் தர்மம் பண்றீங்க.**

**சுவாமிகளுக்கு செய்ய முடியுதா? ஒரு தலையணை தைத்து வந்து சுவாமிகள் பக்கத்தில் வைத்தால் நன்றாக இருக்கும் அல்லவா?"** என்று கூறினேன். என் கணவர் **"என்ன கமலா! தலையணை தைக்கணுமா?"** என்றார். **"ஆமாம்! தலையணை தைத்துத் தந்தால் சுவாமி சாய்ந்து கொள்வார். இப்படி மிகவும் சாய்ந்து இருந்தால் உடம்பு எல்லாம் வலிக்கும் இல்லையா?"** என்றேன். அன்று வீட்டிற்குச் சென்று மீண்டும் சுவாமிகளின் தரிசனத்திற்கு வந்த சமயத்தில் யாரோ அன்பர்கள் தலையணை தைத்து வைத்திருந்தனர். என் கணவர் **"நீ நினைத்துக்கொண்டாய் கமலா. யாரோ பட்டுத் துணியால் தலையணை தைத்து எடுத்து வந்து வைத்து உள்ளார்கள்"** என்றார்.

தைப்பூசத்தன்று எத்தனையோ அன்பர்கள் வருவார்கள். நானும் வந்து ஸ்ரீ சுவாமிகளை தரிசித்துக் கொண்டேன். என் மனதில் **"திருச்செந்தூர் திருமுருகப்பெருமான் கோவிலில் மணி கட்டிஉள்ளது போன்று சுவாமிகளின் சன்னதியில் இரண்டு ஆலயமணி கட்டினால் நன்றாக இருக்கும்"** என்று என் கணவரிடம் கூறினேன். **"என்ன நீ இல்லாததை எல்லாம் நினைக்கிறாய்"** என்றார். நான் மீண்டும் பௌர்ணமிக்கு ஸ்ரீ பூண்டி மகான் தரிசனத்திற்காக வந்தேன். யாரோ அன்பர்கள் இரண்டு ஆலயமணி கட்டி இருந்தார்கள். நான் சுவாமிகளை தரிசனம் செய்து கொண்டு 'நான் நினைத்தேன். நீங்கள் வேலையை முடித்துக் கொண்டீர்கள். இந்த ஏழை என்ன செய்யும் என்று நினைக்கிறீர்களா. யார் மனதில் எண்ணத்தை வரவைத்து இந்த மணியை கட்ட வைத்தீர்கள்?' என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி சிறுபுன்னகையோடு தலையசைத்தார். தலையணை பற்றியும் நான் நினைத்தேன். நீங்கள் நடத்திக்கொண்டீர்கள் என்று கேட்டேன். மீண்டும் ஸ்ரீ பூண்டி மகான் சிறு புன்னகையோடு தலையசைத்தார்.

ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருஉருவச்சிலையை செய்வதற்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் எங்கள் வீட்டிற்கு வந்தார். எங்கள் வீட்டில் இருந்த பித்தளை, செம்பு, வெண்கலம் பாத்திரங்களையும், எங்கள் கிராமத்தில் சிலர் எடுத்து வந்த பாத்திரங்களையும் சேர்த்து ஒரு கோணிப்பையில் போட்டுத் தந்து அனுப்பினேன். குழந்தைகளுக்கு எவ்வளவு சம்பாதித்து தந்தாலும் போதவில்லை என்கிறார்கள்.

ஆனால் மகான்களுக்கு மனநிறைவோடு தந்ததை மறு ஜென்மத்திற்கும் நினைவில் வைத்திருப்பார்கள்.

என் கணவருக்கு ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு பாதுகைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே சந்தனக்கட்டை வாங்கி வந்து பாதுகைகள் செய்து வெள்ளித் தகட்டால் மூடினார்கள். வள்ளிமலை சுவாமிகள் அந்த பாதுகைகளை திருவண்ணாமலைக்கு எடுத்துச் சென்று பூஜை செய்து 100 துறவிகளுக்கு அன்னதானம் செய்து பிறகு பூண்டிக்கு எடுத்து வந்து அந்த பாதுகைகளை ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் திருப்பாதங்களில் அணிவித்து அபிஷேகம் செய்து சிறப்பு பூஜைகள் நடத்தினார். அப்பூஜைகளை ஒரு திருவிழா போல் நடத்தினார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு பாதுகைகள் செய்து வைக்கும் பாக்கியத்தை அளித்தார்.

ஸ்ரீ பூண்டி சுவாமிகள் நடமாடிக் கொண்டிருந்த காலத்தில்கொத்தந்தவாடிக்கு வருவாராம். ஒரு பக்தை கூழ் கலந்து தந்தால் குடித்து விட்டுச் செல்வாராம். ஒரு சமயம் எங்கள் கிராமத்திற்கு வந்து விட்டு திரும்பிச் செல்லும் வழியில் ஒரு நிலத்தில் வேர்க்கடலை பயிர் வைத்து இருக்கவே ஸ்ரீ சுவாமிகள் அந்நிலத்தில் ஒரு செடியை பிடுங்கினார். அந்நில உரிமையாளர் 'யாருடா அவன் செடியை பிடுங்குவது' என்ற உடனே ஸ்ரீ பூண்டி சுவாமிஅச்செடியில் உள்ள காய்களை பிய்த்து தோலை சாப்பிட்டு விட்டு பருப்புக்களை அங்கேயே வைத்து விட்டு கிளம்பிச் சென்று விட்டாராம். இன்று வரை அந்நிலத்தில் வேறு எந்தப் பயிரும் விளையவில்லை. அவர் என் கணவரிடம் வந்து செல்வார்.

என் கணவர் வீட்டு வேலை, நில வேலை எதையும் கண்டு கொள்ளமாட்டார். அவருக்கு வேலை, துறவிகளோடு சத்சங்கம், புத்தகங்கள் படிப்பது தவிர வேறு எண்ணம் இருக்காது. ஒரு நாள் என் கணவர் பூண்டிக்குக் கிளம்பினார். என்னை பாம்பு கடித்து விட்டது.'அதை எல்லாம் சுவாமி பார்த்துப்பார்' என்று கூறி டவலை மேலே போட்டுக் கொண்டு சென்று விட்டார். அதன் பிறகு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்து மருந்து வாங்கி வந்துத் தந்தார்கள்.

*ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் கண்டம் தப்பியது. மாலை என் கணவர் வீட்டிற்கு வந்தவுடனே,* **“கமலா! நல்லாதான் இருக்கிறாய் அல்லவா?’ என்று கேட்டார். ‘உங்க ஆசியால நன்றாகவே இருக்கிறேன். உங்களுக்கு சேவை செய்ய. அது கடிச்சிட்டு போயிடுச்சு. அவ்வளவு தான்’ என்றேன். என் கணவர் ‘யாரோ பண்ணுவாங்க. உன்னை விடமாட்டாங்க”** *என்று கூறி மீண்டும் கிளம்பிச் சென்று விட்டார்.*

*பிள்ளைகள் கல்விக்காக 16 வருடங்கள் நான் திருவண்ணா மலையில் குடித்தனம் இருந்தேன். சண்முக சுவாமிகள் என் கணவர் இறந்து விட்டார் என்று உடலை காரில் எடுத்து வந்து திருவண்ணாமலையில் எங்கள் வீட்டின் அருகில் இறக்கிவிட்டு நேராக அவர் பூண்டிக்குச் சென்று பூண்டி சுவாமியிடம் கொத்தந்தவாடி ரெட்டியார் இறந்துவிட்டார் என்று கூறினார். ஸ்ரீ பூண்டி சுவாமி “***அதோ! மேல போயிக்கிட்டு இருக்கிறாரு. சுகமா போகணும்னு தியானம் பண்ணிக்கிட்டு இருக்கிறேன்*** *” என்று கூறினாராம்.*

*என் கணவர் இறந்த பிறகு விரக்தியால் நான் பூண்டிக்கு வருவதை நிறுத்தி விட்டேன். என் பிள்ளைகள் திருமணத்திற்கும் நான் செல்லவில்லை. ஸ்ரீ பூண்டி சுவாமிஅருளால் எல்லாம் நன்றாக நடத்தினார்கள். என் மனதில் எந்த கள்ளம், கபடம் இல்லாமல் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் முழுமையாக சரண் அடைந்தேன். எனக்கு எத்தனை துன்பங்கள் இருந்தாலும் சுவாமிகளிடம் கூறிக்கொண்டால் தீர்ந்து விடும். ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதி அடைந்த பிறகு சில வருடங்கள் நான் ஆலயத்திற்கும் வரவில்லை. மீண்டும் என்னை சுவாமிகளே வரவைத்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் அனுக்கிரகம் தான் இன்று என்னை வழி நடத்துகின்றது.*

தொகுப்பு: 97
2011, பூண்டி

**பாலகிருஷ்ணன்**, வயது: 74, சென்னை.

*நான் 1970 ஆண்டில் திருமயிலையில் வாசம் செய்து கொண்டு இருந்தபோது ஸ்ரீ பூண்டி மகானைப் பற்றி சில நண்பர்கள் சொல்லக்கேட்டு அவரை தரிசனம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்து ஒரு காரில் சில நண்பர்களுடன் பூண்டி சென்றேன். என் மனம் பக்குவப்படாத நிலை. அவர் முன்னிலையில் சில நிமிடங்கள் நின்றேன். என்னை அவர் கடாக்ஷிக்க மாட்டாரா? என்ற ஏக்கம் ஏன் கொஞ்சம் கோபம் கூட! சகலத்தையும் உணர்ந்த அந்த மகானுக்கு இது தெரியாதா என்ன? அவர் தன் தலையை ஒரு விதமாகச் சாய்த்துக் கொண்டு ஓரக் கண்ணால் பார்க்கவும், அவருடைய மின்சாரப் பார்வையால் நான் ஈர்க்கப்பட்டு, என் உடம்பில் அதிர்வலைகள் ஏற்பட்டது. இந்த அதிர்வலைகளைத் தாங்கும் சக்தி என்னைப் போன்ற பாமரனுக்கு எப்படி இருக்கும்? இதனால் தான் ஒரு கண நேரம் என்னை அருள் செய்தார் என்று நினைக்கிறேன்.*

*நான் வேலை செய்து வந்த அலுவலகத்தில் ஒரு அன்பர் சுவாமிகளின் தீவிர விசுவாசி. அவரிடம் பூண்டி சென்றால் என் பெயரைச் சொல்லி கொஞ்சம் விபூதிப் பிரசாதம் சுவாமிகளிடமிருந்து வாங்கி வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவர் சுவாமிகளிடம் இந்த விவரத்தைச் சொல்லி விபூதி கேட்கவும், அவர் கொடுத்துவிட்டு* **"ஏன் இங்க வரமுடியாத தூரத்தில் இருக்கிறாரா உன் நண்பர்"** *என்று கேட்கவும், எங்கள் வீட்டில் உள்ள கட்டிலில் சுவாமிகள் உட்கார்ந்து தரிசனம் அளிப்பதாக ஒரு உணர்வு ஏற்பட்டது. பிறகு என்ன! பூண்டி நோக்கிப் பயணம் தான்.*

*பூண்டி சென்று மகானை தரிசித்து, அன்றிரவு அவருக்குச் சேவை செய்துவரும் சாது சுப்பிரமணியம் அவர்கள் வீட்டில் தங்கி உபசரிக்கப்பட்டேன்.*

**நேர்காணல்: 98**
**27.04.2009, பூண்டி**

**ஹரி**, வயது: 58, பெங்களூரு.

1977ல் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். பரணிதரன் எழுதிய கட்டுரைகள் பலவற்றைப் படித்துள்ளேன். முதல் முறையாக சுவாமிகளை தரிசித்தபோது வியாபாரம் நன்றாக இருக்க வேண்டும் என்று ஆசிகள் வேண்டினேன். **"நல்லாயிருப்பாய்"** என்று ஆசிர்வதித்தார். நான் வியாபார நிமித்தமாக டில்லியில் இருந்தேன். அதனால் அடிக்கடி வரமுடியவில்லை. 1978ல் ஒரு முறை வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு பாத நமஸ்காரம் செய்து கொண்ட பிறகு **"உங்கள் ஆசிகள் வேண்டும்" என்று கேட்டேன். "ரொம்ப நல்லாயிருப்பே"** என்று அபயஸ்தம் காண்பித்து ஆசிர்வதித்தார். அன்றிலிருந்து எங்களுக்கு வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்பட்டது. ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருளால் வியாபாரத்தில் பெயர், புகழ், பணம் எல்லாம் சம்பாதித்தோம். என் மாமா ரமணி என்று ஒருவர் இருந்தார். அவரும் ஸ்ரீ பூண்டி சுவாமியின் பக்தர் ஆவார். அவர் பூண்டி சுவாமியை தரிசித்த போது மஹா அவதார் பாபாஜி பற்றி கூறினாராம். அந்த நாளில் ஸ்ரீ பாபாஜி பற்றி எடுத்துச் சொன்னது பூண்டி சுவாமி தான். யாராவது யோகா கற்றுத் தருமாறு கேட்டால் ராஞ்சியில் உள்ள ஆசிரமத்தில் ஸ்ரீ பாபாஜியின் சீடர்களிடம் யோகா கற்றுக் கொள்ள அனுப்புவாராம். என் மாமாவிடம் பாபாஜியைப் பற்றி நிறைய விஷயங்களைக் கூறி அவர் ஒரு மகா சித்த புருஷர் என்றாராம்.

ஸ்ரீ பூண்டி சுவாமி மஹாசமாதியடைந்த பிறகு சமாதிக் கோவில் கட்டும் சமயத்தில் என்னால் முடிந்த உதவி செய்யும் சந்தர்ப்பமும், பாக்கியமும் கிடைத்தது. ஸ்ரீ பூண்டி சுவாமிக் கோவிலில் தியானத்தில் அமர்ந்தால் இப்போது கூட சுவாமிகளோடு பேசலாம். இது என் அனுபவம். ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு பக்தர்கள்

வேண்டும் என்ற பிரச்சாரம் தேவையில்லை. ஸ்ரீ சுவாமிகளை சரண் அடைந்தவர்களுக்கு வழிகாட்டியாய் இருந்து அருள் புரிவார்.

நேர்காணல்: 99
03.11.2005, பூண்டி

**ஜெயராமசுவாமி**, வயது: 81, சித்திப்பட்டு

*நான் ஏழு வயதிலிருந்து ஆன்மீக சாதனைகள் யோகாசனம், பிராணாயாமம் செய்து வருகிறேன். என் தொழில் முடி வெட்டுதல். கடந்த 20 வருடங்களாக நான் முடிவெட்டும் தொழிலை செய்வதில்லை. நான் வேறு இருவருடன் சேர்ந்து பூண்டிக்கு வந்து பூண்டித்தலைவரை துணையாக அழைத்து வந்து சுவாமிகளை தரிசனம் செய்து கொண்ட பிறகு என்னுடன் வந்தவர்களில் ஒருவர் வீட்டில் 30 சவரன் நகை கொள்ளையடிக்கப்பட்ட விஷயம் பற்றி சுவாமிகளைக் கேட்டார். "***உனக்கு வேண்டியவங்களே எடுத்துகிட்டாங்க. செல்லுங்க. திருடர்கள் போல வந்தீங்க***" என்றார் சுவாமி. வந்தவர்களுக்கு சுவாமி கூறிய வார்த்தைகளை ஜீரணிக்க அதிக நேரம் பிடித்தது. நான் யோகாசனத்தில் ஒரு சந்தேகம் கேட்டேன். "***நிறுத்தாம அப்படியே செய்து கிட்டு இரு***" என்றார். வேறு ஒரு கேள்வி கேட்டேன். "***சென்று வா***" என்றார். நான் ஸ்ரீ பூண்டி மகானைப் பார்த்து "***கையில் உள்ள சிகரெட், தங்கத்தால் கட்டிய ருத்திராட்சமாலை உங்களுக்கு அவசியமா?***" என்று கேட்டேன். "***நான் என்ன பண்றது. எல்லாம் அவங்க செய்யற வேலை***" என்றார் சுவாமி. துறவிகள் உடலில் எந்த ஆபரணமும் அணியமாட்டார்கள். அதனால் தான் கேட்டேன்.*

*ஸ்ரீ பூண்டி சுவாமியை நினைத்துக் கொண்டால் எனக்கு உடல் எல்லாம் மெய்சிலிர்த்து கண்ணீர் பிரவாகமாக ஓடும். அது ஒரு ஆனந்தம்.*

**நேர்காணல்: 100**
**9.5.2009, பூண்டி**

**பாண்டு**, வயது: 65, கலசபாக்கம்.

என் சிறு வயதில் எங்களுக்கு சோடாக்கடையும், சைக்கிள் கடையும் இருந்தது. ஸ்ரீ சுவாமிகள் சைக்கிள் கடை அருகில் வந்து அமர்ந்து கொள்வார். ஸ்ரீ சுவாமிகளை பைத்தியக்காரர் என்றும், அழுக்குத் துணி போட்டிருக்கிறார் என்றும் கிண்டல் செய்வார்கள். என் தந்தை வீட்டிலிருந்து ரவா உப்புமாவையோ அல்லது ரவா கிச்சடியையோ எடுத்து வந்து சுவாமிகளை சாப்பிடுமாறு கூறுவார். ஸ்ரீ சுவாமி "**போதும் போடா பாலகிருஷ்ணா**" என்று கூறுவார். என் தந்தையை சுவாமிகள் வாடா, போடா என்று பேசுவார். என் தந்தையார் "**சாப்பிடுங்கள்சுவாமி**" என்று வற்புறுத்தினால் "**சரி! உனக்கு எதற்கு கஷ்டம்**" என்று கூறுவார். என் தந்தை கையில் உருண்டை பிடித்துக் கொடுத்தால் சுவாமிகள் சாப்பிட்டு விட்டு கிளம்பிச் செல்வார்.

ஸ்ரீ சுவாமிகள் ஆற்றில் அமர்ந்து இருக்கிறார் என்றால் தண்ணீர் விலகி வளைந்து பாயும். அச்சமயத்தில் சிறுவர்கள் "**சுவாமி! நீங்க உட்கார்ந்தா தண்ணீர் வராது. நீங்க போங்கள் என்று கூறினால் ஸ்ரீ சுவாமி "அட போங்கடா**" என்று கூறி விட்டு கிளம்பிச் செல்வார்.

நான் சுற்று வட்டார கிராமங்களில் உள்ள கடைகளுக்கு எல்லாம் கலர், பன்னீர் சோடா பாட்டில் போடுவேன். ஸ்ரீ பூண்டி சுவாமி திண்ணையில் அமர்ந்த பிறகு கூட நான் ஒரு நாள் கலர், ஒரு நாள் பன்னீர் சோடா என்று மாற்றி சுவாமிக்குத் தருவேன். சுவாமிகளும் குடிப்பார். எப்போதாவது குடிக்க மாட்டேன் என்று கூறினால் நான் போகமாட்டேன் என்பேன். அதன் பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமி "**சரி கொடுப்பா**" என்று கூறிவிட்டு வாங்கிக் குடிப்பார்.

எனக்குத் திருமணம் ஆகி மூன்று வருடங்களாகியும் குழந்தை பிறக்கவில்லை. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு

“**சுவாமி! குழந்தைகள் வேண்டும்**” என்று வேண்டிக் கொண்டு “**பர்வத மலைக்கு சென்று வரணும் சுவாமி**” என்று கூறினேன். “**போய் வா**” என்று சுவாமி ஆசி வழங்கினார். நான் பர்வத மலைக்குச் சென்று வந்த பிறகு என் மனைவி கருவுற்றாள். மகன் பிறந்த பிறகு குழந்தையை எடுத்து வந்து “**சுவாமி பெயர் வைங்க**” என்று வேண்டினோம். “**வெங்கடேசன்**” என்று பெயரிட்டு திருநீறு வைத்தார் சுவாமி. பிறகு இரண்டு வருடம் கழித்து இரண்டாவது மகன் பிறந்தான். அம்மகனை எடுத்து வந்து ஸ்ரீ பூண்டி மகானை தரிசித்துவிட்டு “**சுவாமி, மகனுக்கு பெயர் வைங்க**” என்று வேண்டிக் கொண்டு குழந்தையை சுவாமியின் மடியில் வைத்தோம். ஸ்ரீ பூண்டி மகான் “**கமலக்கண்ணன் போ!**” என்றார். தினந்தோறும் எத்தனையோ பக்தர்கள் வந்து சுவாமியிடம் தம் துன்பங்களை கூறுவார்கள். அனைவருக்கும் சுவாமி பதில் தருவார். ஸ்ரீ பூண்டி மகான் சொன்னபடியே எல்லாம் நடந்தன.

**நேர்காணல்: 101**
**22.04.2008, பூண்டி**

## R. காசி செட்டியார், வயது: 60, கூடுவாஞ்சேரி

*நான் இரயில்வேயில் (Gangman) கேங்மேனாக பணியாற்றிக் கொண்டிருந்தேன். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டு* "**எனக்கு வேலை மிகவும் கடினமாக உள்ளது**" *என்றேன்.*"**உனக்கு அந்த உத்யோகம் போயிடும். இன்னொரு வேலை பண்ணுவ. நல்லா முன்னுக்கு வருவே**" *என்று ஆசி வழங்கினார் பூண்டி மகான். சிறிது நாளில் நான் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு அரிசி வியாபாரம் ஆரம்பித்து நன்கு இலாபம் பெற்றேன். என் மனதில் சுவாமியைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தால் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து செல்வேன். ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்யும் சமயத்தில் என்னுள் உள்ள தீராத வேண்டுதல்களைக் கூறுவேன். ஸ்ரீ சுவாமிகளும் பதிலேதும் சொல்லமாட்டார். ஒருமுறை மட்டும்* "**நல்லா இருப்பே**" *என்று கூறினார் பூண்டி மகான். சில சமயங்களில் சுவாமியை தரிசித்தபோது* "**இருந்திட்டு போ**" *என்று கூறுவார். நான் ஒன்றிரண்டு நாட்கள் இருந்து செல்வேன். நான் எங்கள் பூஜையறையில் ஸ்ரீ பூண்டி சுவாமியின் திருஉருவப்படத்தை வைத்து பூஜை செய்கிறேன். அவரின் அருளால் இன்று சுகமாக வாழ்க்கை நடத்துகின்றேன்.*

**நேர்காணல்: 102**
**8.5.2009, பூண்டி**

**அதிய உடையார்**, வயது: 72, சோமந்தபுத்தூர் கிராமம்.

*நான் முதலில் நட்சத்திர கோவில் அருகில் பாறை மீது சுவாமிகள் அமர்ந்திருந்த போது தரிசித்துக் கொண்டேன். அதன் பிறகு இரண்டு மாதங்கள் கழித்து ஒரு நாள் ஸ்ரீ சுவாமிகள் எங்கள் கிராமத்தின் பக்கம் வந்தார். நான் சுவாமிகளை வணங்கினேன். சுவாமிகள் வந்து எங்கள் வீட்டுத் திண்ணைமீது அமர்ந்தார்.* ''**சுவாமி! ஏதாவது சாப்பிடுங்கள்**'' *என்று வேண்டினேன்.* "**ஊம்**" *என்றார் சுவாமி. ஒரு வடை, இட்லி வைத்தேன்.* "**போதும்**" *எனக்கூறி தண்ணீர் குடித்துவிட்டுச் சென்றார் சுவாமி. நான் சுவாமியின் பின்னாலே சென்றேன். ஆனால் சுவாமியின் வேகத்துக்கு கூட நடக்கமுடியவில்லை.*

*நான் காங்கனூர் சண்முக சுவாமியோடு சேர்ந்து வந்து சுவாமிகளை தரிசித்துக் கொள்வேன். என்னால் முடிந்த சேவைகளை செய்வேன். ஏதாவது குடும்பம் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கேட்டபோது* "**சரி நல்லது நடக்கும்**" *என்று ஆசீர்வதிப்பார். சுவாமிகளின் அருளால் வேலைகள் நடந்து விடும். நான் எப்போதாவது காபி, டீ வாங்கித் தந்தால் அருந்துவார். நான் என்றும் எதையும் கேட்டதில்லை. ஆனால் அடிக்கடி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துச் செல்வேன்.*

**நேர்காணல்: 103**
**31.7.2011, பூண்டி**

**காமாட்சி சத்திய நாராயணன்**, வயது: 73, வேலூர்.

*எனது ஊர் வேலூர். நான் முதன் முதலில் பூண்டி மகானை அறிய வழிசெய்தார் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆவார். அவர் தமது சொற்பொழிவுகளில் பூண்டி மகானைப் பற்றி அடிக்கடிச் சொல்லுவார்.*

*எனக்கு குடலிறக்க நோய் இருந்தது. குடும்பத்துப் பெரியோர்கள் சாதகப்படி கண்டம் இருக்கிறது. எனவே அறுவை சிகிச்சை வேண்டாம் என்றார்கள். அதேபோல சோதனைசெய்த மருத்துவர்களும் உடனடியாக அறுவை மருத்துவம் செய்யத்தான் வேண்டும். ஆனால் இரத்தம் உங்கள் உடலில் குறைவாக உள்ளதால் எங்களுக்கு அச்சமாக இருக்கின்றது என்று சொன்னார்கள். நான் சாமியிடம் வந்து கூறினேன். சுவாமிகள் அனைத்து செய்திகளையும் பரவாயில்லை. அறுவை சிகிச்சை செய்யட்டும்; நான் அருகில் இருந்து பார்த்துக் கொள்கிறேன் என்றார்.*

*பிறகு மருத்துவமனையில் உள்ளிருப்பு நோயாளியாகச் சேர்ந்து அறுவை சிகிச்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யத் தொடங்கியபோது, இடையில் மருத்துவர்கள் என்னைத் தட்டி சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. ஏதாவது வலி தெரியுமானால் கத்தவோ, அசைக்கவோ வேண்டாம். சொன்னால் போதும் பயப்பட வேண்டாம் என்றார்கள்.*

*அதற்கு நான் எங்கள் பூண்டி சாமியார் பார்த்துக் கொள்வார். நீங்கள் தைரியமாகச் செய்யுங்கள் என்று கூறினேன். கூறிய சில வினாடிகளில் அந்த அறையில் சுவாமிகளின் தோற்றம் தெரிந்தது. பின்னர் அறுவைசிகிச்சை நல்லமுறையில் நடந்தேறியது. இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம். இதில் குறிப்பிடும்படியான நிகழ்வு என்னவென்றால், எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்*

அவர்கள் எங்கு இருக்கிறார்? என்று கேட்டார். நான் அனைத்து விவரங்களையும் கூறினேன். அதன்பிறகு தனது மனைவியின் மனநிலை சரியில்லை. அவரிடம் அழைத்துச் செல்வதற்காகக் கேட்டேன் என்றார். பிறகு அவர் தன் மனைவியோடு வந்து சுவாமியை தரிசனம் செய்த பிறகு மனைவியின் மனநிலை சரியாகிவிட்டது என்றார்.

எனது மகள் வயிற்று மூத்த பேரன் 2 வயது இருக்கும்போது குளிக்க வைத்திருந்த கொதிநீர் அடிவயிற்றிலிருந்து உடல் முழுதும் கொட்டிக் கொண்டது. மிகவும் ஆபத்தான நிலையில் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்குக் கொண்டுவந்தார்கள். சிக்கல் நிறைந்த சூழ்நிலை, நாங்கள் உயிருக்கு உறுதி சொல்ல இயலாது. குழந்தை பயகட்டங்களைத் தாண்ட வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். அவனை அனுமதித்திருந்த அறையின் வெளியில் செவிலியர் அனுமதி பெற்று அங்கேயே பூண்டி சுவாமியை நினைத்து தியானம் செய்து கொண்டிருந்தேன். ஐயா! நீங்கள் குழந்தையை காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது. ஆயினும் எங்களுக்கு ஒரு புற அடையாளம் காட்டுங்கள் என்றேன். சுமார் இரவு ஒரு மணி அளவில் எங்கிருந்தோ வந்த பூனை ஒன்று என் அருகில் வந்து நிமிர்ந்து பார்த்து குரல் கொடுத்தது. பின்னர் குழந்தை இருந்த அறைக்குள் சென்றது. போதுமா! என்பதுபோல் ஒரு குரல் எனக்குக் கேட்டது. அமைதியாக மகிழ்ச்சியாக எழுந்துகொண்டேன். பொழுது விடிந்ததும் மருத்துவர்கள் வந்து ஆபத்து நிலையில் குழந்தை உள்ளது என்று சொன்னார்கள். என்ன ஆச்சர்யமோ தெரியவில்லை. குழந்தை நலமாக உள்ளது. ஆறுமாத காலம் சிகிச்சைத் தேவைபடும் என்றவர்கள் 15 நாட்களிலேயே குணமான குழந்தையை அனுப்பிவிட்டார்கள். அப்போதும் அவர்கள் இதை நம்பவே முடியவில்லை என்றார்கள்.

சுவாமியின் அருளால் எங்கள் குடும்பத்தினர் நலமுடன் வாழ்ந்து வருகிறோம்.

ஒரு முறை சுவாமியை தரிசனம் செய்ய வந்தபோது, சுவாமிகள் **“காலைக் கொஞ்சம் பிடிச்சுவிடுப்பா. ரொம்ப அசதியா இருக்குது”** என்றார்.

*ஏன் சாமி? என்றேன்.* **“ஒன்னுமில்லப்பா. பக்கத்துல உள்ள மலைக்குப் போனேம்பா; அங்க 18 பேர் வந்திட்டாங்க. அங்க இங்க போனோம் அசதிப்பா”** *என்றார்.யார் சாமி? என்றதற்கு,* **‘‘அதாம்பா சித்தர்கள் என்று சொல்றாங்களே அவங்கதாம்பா!’’** *எந்த மலை? என்று கேட்டதற்கு* **“பர்வதமலை”** *என்றார். ஒருமுறை என் குடும்பத்தோடு வந்து தரிசனம் செய்தபோது என் மனைவியிடம்* **‘‘ஒன்றும் தயங்காதம்மா, உன் குடும்பத்திற்கு துணையாக நானிருக்கிறேன்’’** *என்று சுவாமிகள் சொன்னார்.*

*நான் திருவண்ணாமலை குடமுழுக்கை பார்த்துவிட்டு சுவாமியை தரிசனம் செய்ய வந்தபோது, முன்னாள் முதல்வர் M. பக்தவச்சலம் அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர் R. ஜீவரத்தினம் அவர்களும் வந்திருந்தார்கள். முதலமைச்சர் சுவாமிக்கு மாலை அணிவிக்க வந்தபோது சுவாமி மாலையை கையில் வாங்கி கீழே வைத்துவிட்டார். ஜீவரத்தினம் தனது மகனுக்கு ஆண் குழந்தை பிறக்கவேண்டும் ஆசீர்வாதம் செய்யுங்கள் என்று கேட்டார்* **“ஹூம்“** *என்று சுவாமிகள் தலையாட்டினார். பின்னர் பக்தவச்சலம் அவர்கள் தன்னுடைய உடல்நிலையைப் பற்றியும் குடும்பத்தையும் பற்றிக் கூறினார்.*

*உள்ளூர் பிரமுகர்கள் உண்டியல் பணத்தை என்ன செய்வதென்று கேட்கச் சொன்னார்கள். உடனே சுவாமிகள்,* **“வந்த வேலையை பாரத்துகிட்டு போ; அது அதுக்கு யார் உண்டோ அவர்கள் வருவார்கள்”** *என்றார்.*

*பக்தவச்சலம் சென்ற பிறகு என்னைப் பார்த்த சுவாமிகள்,* **‘‘பார்த்தியா இவங்களா வந்தாங்கோ; இவங்க இஷ்டப்படி கேள்வி கேட்கறாங்க; குழந்தை பொறக்குமா பொறக்காதா அதெல்லாம் இல்லாம இவங்களா முடிவு செய்துகினு ஆசீர்வாதம் பண்ணுங்கறாங்க. அதற்கு நான் என்ன பண்ணுவேன். எதுக்கோ நான் வந்தேன். எதுக்கோ நான் உட்கார்ந்துகினு இருக்கிறேன். இதெல்லாம் பார் வேடிக்கை”** *என்றார்.*

*ஜெயராமன் என்ற நண்பர் என்னிடம் சுவாமிகளிடம் பெற்ற அனுபவத்தை கீழ்வருமாறு கூறினார்.*

*ஒருநாள் சுவாமியை தரிசிக்கும்போது* **“அட! என்னாப்பா இந்த ஐந்து பேர் கேட்கறதைத்தான் கொடுக்கமாட்டேன்னுட்ட. அஞ்சு வீடாவது**

**கொடுக்கலாம் இல்லையா. அப்படி சொன்னாம்பா அதைக் கூட கேட்கல”.** *இடைமறித்த எனது நண்பர் யார் சாமி என்று கேட்டார்.* **“இதாம்பா இந்த 100 பேர் இருக்கிறாங்களே அவங்கள்ள பெரியவன்பா! சொன்னேன் கேட்கல”** *என்று சொல்ல* **“அப்ப நீங்க யாரு சாமி”** *என்று கேட்டதற்கு* **“எல்லாம் தெரிந்து கொள்ளுவ போ”** *என்றார். பிறகு என்னிடம் நடந்ததைச் சொல்லி விளக்கம் கேட்க, நான் எனக்குத் தெரிந்த வகையில் ஐந்து பேர் என்பது பாண்டவர்கள், 100 பேர் என்பது கௌரவர்கள். சுவாமிகள் கிருஷ்ணபகவான் என்றேன். இதைக் கேட்டுக் கொண்டுச் சென்ற செயராமன் சுவாமியிடம் சென்று விளக்கத்தைக் கூறி* **“அப்ப நீங்க இருந்தீங்களா சுவாமி”** *என்று கேட்டார்.* **“ஆமாம்பா! அப்பவுந்தான் இருந்தேன் இப்பவுந்தான் இருக்கிறேன்”** *என்று சுவாமி சொன்னதாக எனது நண்பர் என்னிடம் கூறினார்.*

**நேர்காணல்: 104**
**31.7.2011, பூண்டி**

**S.C. முத்து**, **S/o. சொக்கலிங்கம், வயது: 67, சோழபுரம், எலத்தூர் P.O.**

*ஐயா நடமாடும் காலத்திலே நான் தரிசனம் செய்து கொண்டேன். அவர் பூண்டியில் திண்ணையில் அமர்ந்தபோது நான் அவரை தரிசனம் செய்தேன். அப்போது அவரைக் கேட்டேன். ஐய்யா என் நிலைமை இப்படியே இருக்கு. என்ன காரணம். அப்போது வயது 27.*

*அதற்கு ஸ்ரீ சுவாமி* **"விளையவில்லை. விளையவில்லையே என்று சொன்னால் எப்படி விளையும்''** *என்று சொன்னார். லௌகீக வாழ்க்கையில் ஒரு மனிதன் மனதில் தோன்றும் எண்ணங்களை பரிசுத்தமாய் வைத்து வாழ்க்கை நடத்தி வந்தால் அவன் இல்லறம் என்ற வாழ்க்கையை கடக்கமுடியும். அதேபோல் அவன் செய்த கர்மாக்கள் மூலம் மனதை பரிசுத்தமாக வைத்துக் கொண்டால் பகவானை அடைய முடியும். இந்த சரீரம் மூத்திரம், மலம் சீவு கொண்டது. இதன் மீது பற்று வைக்கக்கூடாது.*





நேர்காணல்: 105
13.8.2011, பூண்டி

**ராஜகோபால்**, வயது: 83, திருவண்ணாமலை.

நான் திருவண்ணாமலையில் அருணாச்சலேஸ்வர ஆலயத்தினுள் உள்ள திருமஞ்சன கோபுரத்தின் கீழே அமர்ந்து கொண்டு வருத்தத்துடன் **"எனக்கு உடல்நிலை சரியில்லை சுவாமி. என் உடம்புக்கு ரொம்ப கஷ்டமாக உள்ளது. சாகப் போகிறேன். உங்களை நம்பி வந்தேன். நீங்க என்ன சொல்றீங்க?"** என்று மனதில் நினைத்தேன். அருணாச்சலேஸ்வர ஆலயத்தினுள் இருந்து ஒரு துறவி கையில் கம்பை ஊன்றிக்கொண்டு என் முன் வந்து நின்று **'என்னாப்பா தம்பி கஷ்டப்படறே?'** என்று கேட்டார். **"உடல் நிலை சரியில்லை சுவாமி! நான் செத்துவிடப் போகிறேன் எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களை யார் காப்பாற்றுவார்கள்"** என்று கேட்டேன். **'பயப்படாதே. வா!'** என்று கூறி என் கையை பிடித்து நடத்திச் சென்று நந்தி சிலை அருகில் வந்து **"நான் தான் அருணாசலேஸ்வரன். பயப்படாதே. உன் உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. நான் திருவண்ணாமலை ஆலயத்திலும், பூண்டியிலும் உள்ளேன்"** என்று கூறினார். **"எனக்கு பூண்டி எங்கு உள்ளது என்று தெரியாது சுவாமி"** என்றேன். **"பூண்டி தெரியாது என்றால், பேருந்து நிலையத்திற்குச் சென்று வில்வாரணி போகும் பஸ் எதுவென்று கேள். மூன்றரை மணிக்கு பஸ் உள்ளது. நீ வீட்டிற்குச் சென்று உன் மனைவியை அழைத்துக்கொண்டு உடனே பூண்டிக்கு வா. நான் கோயிலுக்குள் செல்கிறேன். சீக்கிரமாக போ!"** என்று அத்துறவி கூறிச் சென்றார். நான் வீட்டிற்குச் சென்று என் மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பி பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கியவுடனே திருநீறு வைத்தார். எனக்கு உடல்நிலை சரியானது.

ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வீடு வாங்க வேண்டும் என்று கேட்டேன். **"வீடு வேண்டாம் உனக்கு. வீடு இல்லை"** என்றார் சுவாமி.

இரண்டு வருடங்கள் சுவாமியை தரிசித்த ஒவ்வொரு முறையும் நான் கேட்டுக்கொண்டே இருந்தேன். "**உனக்கு வீடு இல்லை - போ!**" என்றார்.நான் வீடு வாங்கவில்லை. மீண்டும் நான் பூண்டி மகானிடம் எனக்கு பெரிய வீடு வேண்டாம். ஒரு சிறிய வீடு வாங்கித் தருமாறு கேட்டேன். "**சிறிய வீடு இருக்கிறது**" என்றார் சுவாமி. எங்கு உள்ளது சுவாமி என்று கேட்டேன். "**நீ இருக்கிற தெருவிலேயே இருக்கு. உன்னை கூப்பிட்டு சொல்லுவாங்க. அப்ப என் கிட்ட வா**" என்று சுவாமி கூறினார்.

என் தெருவில் ஒருவர் வீட்டைக் கட்டி பணி முழுவதையும் முடிக்காமல் அப்படியே விட்டுவிட்டு என்னிடம் வந்து "**வீடு வாங்கிக் கொள்கிறீர்களா?**" என்று கேட்டார். நான் சுவாமியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறி விட்டு கிளம்பி பூண்டிக்கு வந்து சுவாமிகளிடம் விவரத்தை கூறினேன். "**எவ்வளவு பணம் கேட்டாலும் அவ்வளவு பணம் கொடுடா. தைரியமா வாங்கு**" என்று கூறினார் பூண்டி சுவாமி. யாரும் அந்த வீட்டை மூவாயிரத்துக்கு மேல் கேட்கவில்லை. அந்த நாட்களில் அவ்வீட்டின் மதிப்பு அவ்வளவுதான். ஆனால் அந்த வீட்டின் உரிமையாளருக்கு பதினாறு ஆயிரம் ரூபாய் கடன் இருக்கின்றது என்றும் கடன் எல்லாம் அடைக்க முடிந்தால் அந்த வீட்டைத் தருவதாக கூறினார். நான் அவருக்கு இருந்த எல்லாக் கடனையும் அடைத்து வீட்டை வாங்கி மீதி வேலையை பூர்த்தி செய்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் கிரஹப்பிரவேசம் செய்தேன்.

எனக்கு காசநோய் (T.B.) வந்தது. நான் நிறைய மருத்துவமனைகள் சுற்றினேன். பத்துவருடங்கள் ஒரு டாக்டரிடம் வைத்தியம் பார்த்துக் கொண்டேன். வேறொரு டாக்டரிடம் ஐந்து வருடங்கள் வைத்தியம் பார்த்தேன். கடைசியில் அந்த டாக்டரும் நோய் குணமாகாது என்றார். சேத்துப்பட்டில் ஒரு டாக்டரிடம் ஒரு வருடம் வைத்தியம் பார்த்துக் கொண்டேன். கடைசியில் அந்த டாக்டர் "எலும்பில் உள்ள பலம் குறைந்து விட்டது. இனி முடியாது" என்று கூறிவிட்டார். நான் செய்வது இனி எதுவுமில்லை என்று வீட்டில் படுத்துக் கொண்டு மன வேதனையுடன் ஸ்ரீ பூண்டி சுவாமியை மனதில் வேண்டினேன்.

ஸ்ரீ பூண்டி சுவாமிக் கனவில் தோன்றி "**எதுக்கு வருத்தபடறே**" என்று கேட்டார். என் வேதனையை கூறினேன். எனக்கு திருநீற்றை பூசி "**பத்து நாட்கள் வந்து நான் திருநீறு பூசுவேன். சரியாகிவிடும்**" என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமி சொன்னபடியே பத்து நாட்கள் என் கனவில் வந்து திருநீறு பூசினார். பத்து நாட்கள் கழித்து நான் மருத்துவரிடம் சென்றவுடனே உனக்கு எலும்பு எல்லாம் பலம் இழந்துவிட்டது. நான் என்ன பண்ணமுடியும் என்றனர். உங்கள் கையால் மாத்திரை எழுதிக் கொடுங்கள் என்று கேட்டேன். அந்த டாக்டர் மருந்து, மாத்திரை எழுதித் தரேன். ஊசிபோடறேன். ஆனால் எனக்கு பணம் வேண்டாம் என்றார். நான் ஒரு வருடகாலம் மருந்து சாப்பிட்டேன். அதன்பிறகு நான் டாக்டரிடம் சென்றவுடன் X-ray எடுத்து வருமாறு கூறினார். நானும் X-ray எடுத்துச் சென்று டாக்டருக்கு காண்பித்தேன். டாக்டர் என்னைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தார். என்ன என்று கேட்டேன். "**பலம் இழந்த உன் எலும்புகள் எல்லாம் பலம் வந்து புது எலும்பு போல் உள்ளது**" என்று கூறி "இது எப்படி சரியானது" என்று கேட்டார். "**பூண்டியில் ஒரு மகான் இருக்கிறார். சுவாமி திருநீறு பூசினார். எல்லாம் சரியாகிவிட்டது**" என்றேன். இது ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய லீலை ஆகும்.

எனக்கு மஞ்சள் காமாலை வியாதி வந்தது. நான்கு மாதங்கள் ஆனாலும் சரியாகவில்லை. எத்தனை வைத்தியம் பார்த்தாலும் குணமாகவில்லை. என் உடல் எல்லாம் மஞ்சள் நிறத்தில் மாறிவிட்டது. ஒரு நண்பர் என்னை பார்த்து திண்டிவனம் அருகில் ஒரு முஸ்லீம் மருந்து தருகிறார். அங்குச்சென்று மருந்து வாங்கி வந்து சாப்பிடு என்றார். நான் அந்த முஸ்லீம் வைத்தியரிடம் சென்றவுடனே அவர் என்னைப் பார்த்து "**உனக்கு சரியாகாது. நீ இறந்து விடுவாய்**" என்றார். எதற்கு சரியாகாது என்று கேட்டேன். அவர் "**உனக்கு மஞ்சள் காமாலை வந்து ஆறு மாதம் ஆகிவிட்டது. எல்லாம் இரத்தத்தில் கலந்து விட்டது**" என்றார். சரி எனக்கு மருந்து கொடுங்கள் என்று கேட்டு பத்து பொட்டலம் வாங்கி வந்தேன். அன்று இரவு பூண்டி சுவாமியை மனதில் நினைத்து எனக்கு எப்போது உடல்நிலை சரியாகும் என்று வேண்டிக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமிகள் "**ஒரு பொட்டலம்**

**மட்டும் சாப்பிடு. அதற்கு மேல் சாப்பிடாதே. நன்றாகிவிடும்"** என்றார். இரவு ஒரு பொட்டலம் மருந்து சாப்பிட்டேன். ஸ்ரீ பூண்டி மகானின் கருணையால் மறுநாள் காலைக்குள் மஞ்சள் காமாலை வியாதி இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

என் கண் பார்வை குறைந்து விட்டது. டாக்டரிடம் சென்று பரிசோதித்துபோது கண்புரை இல்லை. கண்கள் நன்றாக உள்ளது என்றார். பத்துவருடம் வேலூரில் உள்ள ஒரு டாக்டரிடம் சென்று வைத்தியம் பார்த்தேன். நிறைய பணம் செலவழித்தேன். கண்பார்வைக்கு நான் எதுவும் செய்யமுடியாது என்றார் டாக்டர். ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கூறினேன். ஒரு வாரம் கழித்து **"புரை முத்திபோச்சு. போடா!"** என்றார் சுவாமி. நான் கிளம்பி டாக்டரிடம் சென்றேன். டாக்டர் கண்களை பரிசோதித்து புரை வந்தது என்று முடிவு செய்து ஒரு கண்ணில் ஆபரேஷன் செய்து சிறிது நாள் கழித்து மற்றொரு கண்ணிலும் ஆபரேஷன் செய்தார்கள். மீண்டும் சிறிது நாட்களில் முதலில் ஆபரேஷன் செய்த கண்ணில் பார்வை குறைந்து விட்டது. ஐந்து வருடக்காலம் அந்த கண்ணில் பார்வை இல்லாமல் அவதிப்பட்டேன். மீண்டும் டாக்டரிடம் சென்று காண்பித்தேன். **"ஒரு தடவை ஆபரேஷன் செய்தேன். கண் நன்றாக உள்ளது. மற்றொரு முறை ஆபரேஷன் செய்யமுடியாது. நீ கடவுளை வேண்டிக் கொள்"** என்று கூறினார். ஆறாவது வருடம் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் **"சுவாமி! எனக்கு கண்பார்வை தருவீர்களா! இல்லை ஆபரேஷன் செய்து கொள்ளச் சொல்கிறீர்களா?"** என்று கேட்டேன். **"வேண்டாம்பா! காலையில் பார். கண்ணுக்குப் பார்வை வரும்"** என்று கூறினார் பூண்டி மகான். மறு நாள் காலையில் ஸ்ரீ சுவாமிகளின் அருளால் கண்பார்வை வந்தது.

எனக்கு கண்ணாடி போட்டுக் கொண்டால் கண் பார்வை தெரியவில்லை. கண்ணாடியை மாற்ற முயற்சித்தபோது என் கண்ணிற்கு எதுவும் சரியாக அமையவில்லை. நான் ஐந்தாறு மருத்துவர்களிடம் ஆலோசனைக் கேட்டேன். டாக்டர்கள் பரிசோதித்தும் பலனில்லை. கடைசியில் நான் பூண்டி சுவாமியை பிரார்த்தனை செய்தேன். **"கண்ணாடி மாத்த வேண்டாம்.**

**பழைய கண்ணாடியே சரியா இருக்கும்**'' என்று சுவாமி கனவில் கூறினார். இருபத்தைந்து வருடங்களாக பழைய கண்ணாடியை உபயோகித்து கொண்டிருக்கிறேன். எனக்கு எந்த இடைஞ்சலும் ஏற்படவில்லை.

எனக்கு யானைக்கால் வியாதி வந்தது. நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்து வேண்டினேன். "**பயப்படாதே! டாக்டர் கிட்ட போயிட்டு வா. எல்லாம் சரியாப்போயிடும்**'' என்று கூறினார். நான் டாக்டரிம் சென்று வைத்தியம் பார்த்துக் கொண்டேன். நாள்பட சிறிது சிறிதாக குறைந்து விட்டது. யானைக்கால் நோய் குறைந்தது ஸ்ரீ சுவாமிகளின் அருளே என்று டாக்டர்கள் உட்பட அனைவரும் ஆச்சர்யம் அடைந்தனர்.

என் மகளுக்கு திருமணம் செய்ய வரன் தேடி ஐந்து வருடம் திரிந்தேன். 100 பவுன் நகையும் போடுவதாகக் கூறினேன். ஆனால் வரன் அமையவில்லை. நான் ஒரு நாள் கனவில் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கோபமாகப் பேசினேன். "**நான் எங்காவது திருமணம் செய்து தருகிறேன். நீங்கள் போங்கள்**" என்றேன். "**சரி. உன் விருப்பத்திற்கு நடத்துபா**" என்றார் பூண்டி சுவாமி. நான் வரன் தேடி தேடி கடைசியில் ஸ்ரீ பூண்டி சுவாமியே சரணம் என்று வேண்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "**நீ கல்யாணம் செய்து விடுவதாகக் கூறினாயே. செய்யலாம் இல்லையா**'' என்று கேட்டார். என்னால் முடியவில்லை சுவாமி! என்று கூறினேன். "**சரி! தானிப்பாடியில் கொடுடா**" என்றார் பூண்டி மகான். தானிப்பாடியில் ஒரு பையனுக்கு பெண்ணை அளித்து திருமணம் செய்து வைத்தேன். ஆறு மாதத்திலும் பெண் திரும்பி வீட்டிற்கு வந்து விட்டாள். எனக்கு உள்ள சொத்தில் பாதிபாகம் வேண்டுமென்று பையன் வீட்டார் கேட்டார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் கூறினேன். "**நீ சும்மாயிரு! அவனே வந்து கூட்டிக்கிட்டு போவான். இருபத்தைந்து வயதில் திருமணம் செய்தாய். முப்பத்தொரு வயதில் வந்து அழைத்து போவான். நீ போக வேண்டாம்**" என்று கூறினார் சுவாமி. ஆறு வருடகாலம் எங்கள் இரண்டு குடும்பத்தினிடையே போக்குவரத்து நின்று விட்டது. என் மனதில் வேதனையுடன் சுவாமியிடம் கூறினேன். "**நீ சும்மாயிருடா! நான் வரவழைக்கிறேன்டா!**"

என்று கூறினார் சுவாமி. என் பெண்ணிற்கு முப்பத்தொரு வயதில் என் சம்பந்தி வீட்டார் அவர்களாகவே எங்கள் வீட்டிற்கு வந்து பெண்ணை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

மூன்று வருடகாலம் பெண்ணிற்கு பிள்ளைபேறு உண்டாகவில்லை. நான் ஸ்ரீ சுவாமியை வேண்டிக்கொண்டேன். "**நீ சும்மாயிருடா! ஒரு பையன், ஒரு பெண் பிறப்பார்கள்**" என்று கூறினார் சுவாமி. ஸ்ரீ பூண்டி சுவாமிகூறியபடியே என் பெண்ணிற்கு குழந்தைகள் பிறந்தார்கள்.

நான் இரண்டாவது வீடு வாங்க வேண்டும் என்று ஸ்ரீ பூண்டி சுவாமியைக் கேட்டேன். "**இரண்டாவது வீடு வாங்கினால் அழிஞ்சி போயிடுவே**" என்று கூறினார் சுவாமி. சரி எப்போது வாங்க சொல்றீங்க சுவாமி! என்று கேட்டேன். "**உனக்கு எழுபதாவது வயதில் காட்டறேன். அப்ப வாங்கிக்கோ!**" என்று கூறினார் சுவாமி. எழுபதாவது வயதில் சுவாமி ஒரு வீட்டை காண்பித்தார். அந்த வீட்டின் மதிப்பு 20 இலட்சம். எதற்கு சுவாமி! இந்த வீட்டை வாங்க சொன்னீங்க என்று கேட்டேன். "**இந்த வீடு 1-1/2 கோடி விற்கும்பா**" என்றார் சுவாமி. அந்த வீட்டை வாங்கினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி சொன்னபடியே இப்போது அந்த வீட்டின் மதிப்பு 1-1/2 கோடியாகும். மூன்றாவது வீட்டை எப்போது வாங்க சொல்றீங்க சுவாமி என்று கேட்டேன். "**இப்போது வாங்கவேண்டாம்**" என்றார் சுவாமி.

நான் சிறிய மளிகைக்கடை வைத்து வியாபாரம் ஆரம்பித்தேன். அந்தக் கடையிலேயே நான் நிறைய சம்பாதித்தேன். அந்த நாட்களில் தினம் பத்தாயிரம் கூட சம்பாதித்தேன். என் வருமானத்தைக் கண்டு பொறுக்காமல் சிலர் வருமானவரித்துறை, விற்பனை வரித்துறை அதிகாரிகளுக்கு கடிதம் எழுதுவார்கள். ஒரு முறை விற்பனைவரித்துறை அதிகாரிகள் வந்து எல்லாவற்றையும் பரிசோதித்தார்கள். அதில் ஒரு அதிகாரி, "**நான் கடந்த மூன்று வருடங்களாக உங்கள் கடையில் மளிகைச்சாமான்கள் வாங்குகிறேன். குறைந்த இலாபத்தில் நிறைய விற்பனை செய்கிறீர்கள். உங்கள் நேர்மையை கண்டேன் அதற்காக உங்கள்மீது எந்த வழக்கும் வைக்காமல் விட்டுவிட்டேன்**" என்று கூறிச் சென்றார். அதுகூட ஸ்ரீ பூண்டி

சுவாமியின் திவ்ய அருளாலே அந்த சூழ்நிலையிலிருந்து எந்த துன்பமும் இல்லாமல் வெளிப்பட முடிந்தது.

**“அறுபது வயதில் எமன் உன்னை பிடிக்க வருவான். மார்க்கண்டேயன் பிடித்துக் கொண்டது போல் நீ வந்து என்னை பிடித்துக்கொள்”** என்று கூறினார் பூண்டி சுவாமி. என் அறுபது வயதில் எமன் வந்தார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் பாதங்களை பிடித்துக் கொண்டேன். எமன் சென்று விட்டான். பிறகு எழுபது வயதிலும் எமன் வந்தார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் பாதங்களை பிடித்துக் கொண்டேன். எமன் சென்று விட்டான். அப்படியே என் எண்பதாவது வயதிலும் நடந்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி **“தொண்ணூறு வயதில் மீண்டும் எமன் வருவான். ஜாக்கிரதையா இருடா! உனக்கு தொண்ணூறு வருடம் ஆயுள் கொடுத்தேன். அப்போது எமன் வரும்போது என்னை பிடித்துக்கொள். எமன் சென்றால் உன் ஆயுள் 101”** என்று கூறினார். மீண்டும் மறுநாள் சுவாமி தரிசனம் அளித்து **“உன் ஆயுள் 101டா”** என்றார் சுவாமி.

நான் முதலில் வாங்கிய வீட்டின் உள்ளே லிங்கம் பிரதிஷ்டை செய்து ‘‘**ஸ்ரீ பூண்டி சுவாமிஆசிரமம்**’’ என்று பெயர் வைக்க எண்ணினேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஅனுமதிக்கவில்லை. **“சிறிது நாள் பெண் அந்த வீட்டில் இருக்கட்டும். பிறகு நான் சொல்லும் போது செய்”** என்றார் சுவாமி. தற்போது என் பெண் அந்த வீட்டில் குடியிருக்கிறார். ஸ்ரீ பூண்டி சுவாமி எப்போது அனுமதி தருவாரோ என்று காத்திருந்து பார்க்க வேண்டும்.

நான் பூண்டிக்கு வந்த ஆரம்பத்தில் தினந்தோறும் ஏழு மணிக்கு கடை மூடியபிறகு பூண்டிக்கு வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிஇருக்கும் திண்ணைக்கு பக்கத்தில் படுத்துக் கொள்வேன். அப்படி ஒரு வருடகாலம் படுத்துக் கொள்ளும் பாக்கியத்தை தந்தார் சுவாமி.

ஒரு நாள் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் என் குடும்பக் கஷ்டங்களை மனதிலேயே கூறிக்கொண்டேன். சுவாமி கனவில் தரிசனம் அளித்து **“எதுக்குடா அழைத்தாய்”** என்று கேட்டார். **“சுவாமி எனக்கு விஷயத்தை கூறாமல் என்னிடம் என் மகன் கையெழுத்து வாங்கிக்கொண்டான். என் பெயரில் உள்ள சொத்தை அவர் பெயரில் எழுதிக் கொள்வதற்கு”** என்று கூறினேன். **“அது செல்லாது போடா!”** என்றார் சுவாமி. அவர்கள் எழுதி

*வாங்கியது செல்லாது என்று கூறினார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிகனவில் தரிசனம் அளித்து* **“பார்த்தியாடா! என்னை நம்பி செய். அவர்கள் திருப்திக்கு அவர்கள் செய்யட்டும்”** *என்றார்.*

*தினந்தோறும் நான் உறங்குவதற்கு முன்பு ஸ்ரீ பூண்டி சுவாமியை நினைத்துக் கொள்வேன். தினந்தோறும் எனக்கு ஸ்ரீ பூண்டி மகான் கனவில் தரிசனம் அளிப்பார். நான் ஸ்ரீ பூண்டி மகானை கேட்காமல் எந்த வேலையும் செய்ய மாட்டேன். எனக்கு சுவாமிகளே துணையாக இருந்து வழி நடத்துகிறார். எனக்கு சர்வமும் எப்போதும் ஸ்ரீ பூண்டி சுவாமிகளே.*

**நேர்காணல்: 106**
**13.8.2011, பூண்டி**

## இலட்சுமணசிங், வயது: 82, வேலூர்.

*நான் வியாபார விஷயமாக அகமாதாபாத், பம்பாய் சென்று ஐதராபாத் வந்தேன். என்னிடம் நிறைய பணம் இருந்தது. ஒரு ஆட்டோவில் ஏறினேன். அவன் ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று என்னை பணம் தருமாறு பயமுறுத்தினான். அவன் ஒரு கொலைகாரன் போல் இருந்தான். நான் எப்படியோ அவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு வந்து விட்டேன். நான் வீட்டிற்கு வந்த பிறகும் என்னுள் இருந்த பயம் போகவில்லை. அந்த பயத்தினால் சித்தப்பிரமை பிடித்தவன் போல் ஆகி, டாக்டரிடம் சென்று பார்த்தாலும் பலனில்லை.*

*என் கடைக்கு ஸ்ரீ பூண்டி சுவாமியின் அன்பர் ஒருவர் வந்து என் நிலைமையைக் கேட்டு* “**பூண்டி மகானிடம் செல்லுங்கள். உங்களுக்கு உடல்நிலை சரியாகிவிடும்**” *என்று கூறினார்.*

*நான் கிளம்பி வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி மகான் எனக்கு திருநீறு வைத்து* “**நல்லாயிடுச்சு. போப்பா**” *என்றார். உடனே என்னுள் மாற்றம் ஏற்பட்டது. பயம் விட்டது.* “**சுவாமி! நீங்கள் தான் என் கடவுள். உங்களைத் தவிர கடவுளை நான் பார்க்கவில்லை**” *என்று கூறி சரணம் அடைந்தேன்.*

*அன்றிலிருந்து வாரத்திற்கு ஒருமுறை வந்து ஸ்ரீ சுவாமிகளை தரிசித்துச் செல்வேன். நான் எந்த வேலை செய்ய வேண்டும் என்றாலும் சுவாமிகளை கேட்டு செய்வேன். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் பணம், சொத்து, அந்தஸ்து கேட்கவில்லை, உங்களை மறக்காமல் இருக்கவேண்டும் என்று வேண்டினேன்.*

*நான் புல்லட் வாங்க வேண்டும் என்று மூன்று புல்லட்களை பார்த்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் எந்த புல்லட்டை வாங்கச் சொல்கிறீர்கள் சுவாமி? என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி,* “**6670**

**நெம்பர் புல்லட்"** வாங்கிக் கொள்ளுமாறு ஆசிர்வதித்தார். ஒரு முறை அந்த புல்லட்டில் பெல்லாரி வரை சென்று வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்கு வந்த சமயத்தில் **''நான் புல்லட்டில் பெல்லாரிக்கு போயி வந்த சமயத்தில் நீங்கள் என்னோடு வந்தீர்களா சுவாமி!"** என்று கேட்டேன். சுவாமிகளும் எனக்குத் துணை வந்ததாகக் கூறினார். எங்கு சென்றாலும் ஸ்ரீ பூண்டி மகான் எனக்குத் துணையாக இருந்து வழி நடத்துகிறார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்தபோது பான்டா (Fanta) குளிர்பானம் வாங்கி சமர்ப்பிப்பேன். சில முறை அருந்துவார். சிலசமயங்களில் பாட்டிலை வாங்கி பக்கத்தில் வைத்து முகத்தை திருப்பிக் கொள்வார். நான் பக்தியுடன் வேண்டுவேன். **"நான் எங்கியோ போயிக்கிட்டு இருந்தா பாட்டில் வாங்கிட்டு வந்து என் கிட்ட கொடுத்தா நான் என்ன பண்றதுப்பா''** என்றார். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஸ்ரீ பூண்டி மகான் திண்ணை மேல் அமர்ந்திருந்தாலும் வேறு ஒரு உருவத்தில் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருப்பார் என்று புரிந்து கொண்டேன்.

ஒரு ஏழைப்பெண் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி **"நான் மிகவும் ஏழை. என் மகளுக்கு திருமணம் செய்ய வேண்டும். நகை எல்லாம் வங்கியில் வைத்துள்ளேன். வங்கி அதிகாரிகள், பணம் கட்டாவிட்டால் நகைகளை ஏலம் போடுவதாக கூறுகிறார்கள். பணம் இல்லாத காரணத்தால் நான் நகைகளை மீட்க முடியவில்லை. என் மகளுக்கு திருமணம் செய்து வைக்க முடியாமல் போகிறது சுவாமி!"** என்று கண்ணீருடன் வேண்டினார். ஸ்ரீ பூண்டி சுவாமி தன் தேகத்தில் அங்கங்கே சில இடங்களில் கை வைத்து எடுப்பது போல் எடுத்து அந்தப் பெண்ணுக்கு ஒரு தங்கக்கட்டி அளித்து **"உன் மகளுக்கு திருமணம் செய்''** என்று கூறினார். அந்த சமயத்தில் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியின் அருகில் நின்று அந்த அதிசயத்தைப் பார்த்தேன். ஸ்ரீ பூண்டி சுவாமி இதைவிட சிறந்த சித்துகளை செய்ய முடிந்த மகா சித்தர். ஆனால் ஸ்ரீ சுவாமிஎன்றும் சித்து வேலை காண்பிக்க விரும்பவில்லை.

ஒரு நாள் நான் நடு இரவு சுமார் ஒன்றரை, இரண்டு மணியளவில் பூண்டிக்கு வந்தேன். என் பின்னே சுமார் 50 நாய்கள் துரத்தி வந்தன.

*நான் பயத்தால் கை, கால் நடுக்கத்துடன் வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிமுன் நின்று கொண்டேன். "***என்னாப்பா! சமயத்துக்கு வந்து சேருப்பா. காலம், நேரம் தவறி வந்தால் எல்லாம் அது அதுபாட்டுக்கு வேலை செய்யும்பா! அகால மரணம் அடைந்தவர்கள் காற்றில் சுற்றிக் கொண்டிருப்பார்கள். அதற்காக நீ சமயத்திற்கு வந்து சேர்ந்து விடு***" என்று கூறினார். நான் அப்போதிலிருந்து இரவு பதினொரு மணிக்குள் வந்து விடுவேன்.*

*என் பெரிய மகனுக்கு திருமணம் செய்ய ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் வந்து சுவாமி! பையனுக்கு திருமணம் செய்ய வேண்டும். பெண்ணைத் தருகிறோம் என்று மூன்று, நான்கு பேர் போட்டியிடுகிறார்கள் என்று கூறினேன். "***நெல்லூர் சம்பந்தம் பண்ணிக்கோ***" என்றார் சுவாமி. ஸ்ரீ பூண்டி சுவாமியின் திவ்ய அருளால் பையனுக்குத் திருமணம் செய்துவைத்தேன். மகிழ்ச்சியோடு அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்.*

*நெல்லூரில் உள்ள என் மகனை பார்க்க நான் கிளம்பி சென்னை சென்ட்ரலுக்குச் சென்றேன். ஹௌரா எக்ஸ்பிரஸ் 1-1/2 மணி நேரம் தாமதம் என்று அறிவித்தார்கள். நான் அங்கே வெயிடிங் ஹாலில் அமர்ந்து கொண்டேன். அங்கிருந்த பயணிகளில் சில பெண்கள் வெவ்வேறு ஆடைகளுடன் அமர்ந்திருக்கவே என் மனதில் சபலம் ஏற்பட்டு மோகத்துடன் அவர்கள் பக்கம் பார்த்தபடி அமர்ந்திருந்தேன். அந்த சமயத்தில் வளர்ந்த தாடியுடன், கலைந்த முடியுடன் நன்கு வயதான ஒருவர் வந்து "***என்னய்யா! பான்டா குளிர்பானம் இருந்தா பாரு!***" என்று கேட்டார். "***போய்யா!***" என்றேன் வெறுப்புடன். அவரும் சென்றுவிட்டார்.*

*நான் நெல்லூருக்குச் சென்று வந்த பிறகு ஸ்ரீ பூண்டி சுவாமியின் தரிசனத்திற்காக வந்தேன். "***என்னாப்பா! சென்ட்ரல் ஸ்டேஷன். கலர் கலரா இருந்தது இல்லைப்பா! எப்படி இருந்தது***" என்றார் சுவாமி. நான் அதிர்ச்சியுற்று ஸ்தம்பித்து போய்விட்டேன். என் மனத்தில் ஏற்பட்ட சலனத்தை சுவாமி சொன்னவுடனே நான் நடுங்கிப் போனேன். செய்த தவற்றை உணர்ந்தேன். பான்டா வாங்கி வந்து சுவாமிக்கு அளித்தேன். "***என்னாப்பா! நான் பான்டா குளிர்பானம் கேட்டேனே!***

**இல்லைன்னு சொன்னியேப்பா!**" என்றார். அன்று முதியவர் உருவில் வந்தது ஸ்ரீ பூண்டி சுவாமியே என்று அறிந்து மிகவும் வியப்புடன் நின்று விட்டேன். எங்கு எது செய்தாலும் ஸ்ரீ பூண்டி சுவாமி பார்த்துக் கொண்டு இருப்பார் என்று எனக்கு அனுபவம் மூலமாகத் தெரியப்படுத்திய சுவாமிகளை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டேன். அன்றிலிருந்து என் மனதில் சபலம் இல்லாமல் செய்து என் அறியாமையை போக்கி நல்வழியில் நடத்துகிறார் ஸ்ரீ பூண்டி மகான்.

ஒரு பக்தர் ஸ்ரீ சுவாமியை வணங்கி நின்றவுடனே "**சூது, வாது வேதனை செய்யும்பா**" என்றார். மற்றொரு பக்தர் வந்து சுவாமியை வணங்கியவுடனே "**போய் வாப்பா! நேர் வழியில் போ! இல்லைன்னா கல்லும், முள்ளும் காலுக்கு குத்தும்**" என்று கூறினார்.

ஒரு நாள் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கியபிறகு திருநீறு வைத்தார். சுவாமி சிறிது திருநீறு கொடுங்கள் என்று கையை நீட்டி வேண்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "**ஊம்**" என்று விபூதியை கையில் தந்தார். அங்கேயே கீழே விழுந்திருந்த காகிதத்தை விபூதி பொட்டலம்கட்ட கையில் எடுத்தேன். "**என்னாப்பா! எவனோ செய்த கருமம். அதை போட்டுட்டுப் போயிருக்காங்க. அதை நீ ஏன்பா எடுக்கறே?**" என்றார் சுவாமி. அன்றிலிருந்து எவரிடமிருந்தும் சிறிய பொருளாக இருந்தாலும் எதிர்பார்ப்பதை விட்டுவிட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமிபெயரைச் சொல்லி யாராவது அவர்களது சுயநலனைக் கருதினால், முயற்சி செய்தால் நன்கொடையாகவோ, வேறு ஏதாவது ரூபத்திலோ வாங்கி நல்வழியில் பயன்படுத்தவில்லை என்றால் அவர்கள் வாழ்க்கையில் துன்பம் அனுபவிக்க வேண்டியதாகி விடும்.

நான் மும்பையில் ஒரு மனிதரை பார்த்தேன். அவர் ஓரிடத்தில் காரை நிறுத்தி பணத்தை வீசியெறிவார். ஏழைகள் பணத்தை எடுத்துச் செல்வார்கள். ஐந்தாறு முறை நான் பார்த்தேன். அரசு மூன்று பேரை மிசா சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவிட்டது. ஒருவர் தப்பித்துக் கொண்டார். இருவர் பிடிபட்டனர். அந்த இருவரில் நான் மும்பையில் பார்த்த மனிதரும் ஒருவர் ஆவார். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டு "**சுவாமி! ஏழைகளுக்கு**

**உதவி செய்பவர்களை கைது செய்து சிறையில் வைத்தால் எப்படி?"** என்று வேண்டினேன். ஸ்ரீ பூண்டி சுவாமி **''ஒரு போட்டோ அனுப்பு. சரியாகிவிடும்"** என்று கூறினார். நான் சுவாமி போட்டோவை கவரில் வைத்து மும்பையிலுள்ள அவருக்கு அனுப்பினேன். அந்த போட்டோ சேர்ந்தவுடனே இருவரும் சிறையிலிருந்து விடுதலையானார்கள். நான் வந்து சுவாமியை தரிசித்தவுடனே **"வெளியே வந்திட்டாங்கப்பா. நீ சொன்னே. போட்டோ அவருக்குச் சேர்ந்தது. அப்பவே அவங்க வந்திட்டாங்கப்பா"** என்றார். யார் எப்படிப்பட்டவர்கள் ஆனாலும் ஸ்ரீ பூண்டி சுவாமியை சரணடைந்தால் காப்பாற்றுவார். தண்டிக்கமாட்டார். நல்லது செய்துகொண்டு இருந்தால் அவர் குடும்பம், அவர்கள் வாரிசுகள் நலமாக இருப்பார்கள். சுவாமி பெயரை கூறி அநியாயமாக சம்பாதிக்க ஆரம்பித்தால் அவர்கள் குடும்பம், வாரிசுகள் பெயர் கூற கூட இருக்கமாட்டார்கள். இது சுவாமிகள் எனக்கு கூறிய நீதி.

நான் பூண்டிக்கு இரவு நேரத்தில் வந்த சமயத்தில் ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு உடம்பு பிடித்து விடுவேன். எனக்குத் தெரிந்த, சேவைகளை செய்வேன். சுவாமி நடுஇரவில் **"போதும்பா"** என்பார். ஒரு நாள் விடியற்காலையில் நான் சுவாமிகளுக்கு சேவை செய்யும்போது கமிட்டி உறுப்பினர்கள் பார்த்து **"என்னாப்பா! உனக்கு புத்தி இருக்கா. சுவாமியை ஏன் அடிக்கடி தொடறே"** என்று கோபமாக பேசினார்கள். ஸ்ரீ பூண்டி சுவாமிஅவர்கள் பக்கம் பார்த்து **"ஏம்பா! ஆத்துல தண்ணீர் போகுது. குளிச்சிட்டு வாங்கப்பா"** என்றார். கமிட்டி உறுப்பினர்கள் தலையிடுவதை சுவாமிகள் அங்கீகரிக்கவில்லை. **"எங்கிருந்தோ வந்த வண்டு தேனைக் குடிக்குது. இங்கு இருக்கிற தவளைகள் ஏன் கூச்சல் போடணும்"** என்றார். அதன் பிறகு என்னை யாரும் தடை செய்தது இல்லை. என்னை ஸ்ரீ பூண்டி சுவாமிதுணை நின்று வழி நடத்துகிறார். நான் எப்போதும் சுவாமியின் நினைவில் இருக்கிறேன்.

ஈரோடிலிருந்து ஒருவர் எங்கள் கடைக்கு வந்தார். ஸ்ரீ பூண்டி சுவாமிபோட்டோவைப் பார்த்து விசாரித்தார். நானும் விவரித்துக் கூறினேன். மறுநாள் என்னைத் துணையாக வரும்படி வேண்டினார். அப்படியே அவரோடு சேர்ந்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை

வணங்கியவுடனே "**ஆமாம். சரிந்து போயிடுச்சி. பத்து இலட்சம் அட்வான்ஸ் கொடுத்தீங்களே அது வருமா, வராதா. அப்படின்னு பார்க்கலாம்னு வந்து இருக்கறீங்க**" என்றார். "**ஆமாம் சுவாமி! நான் இக்கட்டில் சிக்கிக்கொண்டேன். உங்களை தரிசிக்க வந்தேன்!**" என்று தாழ்மையுடன் கூறினார். "**நீ போட்டோ பார்த்தவுடனே வரணும்னு நினைச்சிக்கிட்டு வந்தே. சரி காத்தாடி வாங்கு**" என்று கூறினார் சுவாமி. காத்தாடி என்றால் என்னவென்று எங்களுக்கு புரியவில்லை. அங்கிருந்த சுவாமியின் அன்பர்களிடம் விளக்கம் கேட்டோம். காத்தாடி என்றால் Stay order என்று கூறினார்கள். உடனே அவர் சென்று Stay Order வாங்கினார். ஒரு வருடம் கழித்து நீதிமன்றத்தில் அவருக்குச் சாதகமாக தீர்ப்பு வந்தது.

அந்த மனிதர் ஒரு பருத்தி ஆலை வாங்க 45 இலட்சம் விலை நிர்ணயித்த பிறகு 10 இலட்சம் அட்வான்ஸ் அளித்தார். வேறொருவர் அந்த ஆலையை 55 இலட்சத்திற்கு வாங்குவதற்கு வந்தார். அக்கம்பெனி உரிமையாளர் அட்வான்ஸ் தந்தவருக்கு கம்பெனியை தரமுடியாது என்று நிராகரித்தார். அந்த சமயத்தில் தான் அந்த மனிதர் ஸ்ரீ பூண்டி சுவாமியை சரணடைந்தார். சுவாமியின் திவ்ய அருளால் கம்பெனி அவருக்கு கிடைத்தது என்று உடனே கிளம்பி பூண்டிக்கு வரும்போது என்னையும் வருமாறு அழைத்தார். நானும் வந்தேன். அவர் ஸ்ரீ பூண்டி சுவாமிகளுக்கு பாதபூஜை செய்து ஒரு மோதிரம் போட்டார். ஸ்ரீ பூண்டி சுவாமி "**ஏம்பா. படிப்புக்கு தனியா மரியாதை இருக்குதுப்பா**" என்றார். எனக்கு புரியவில்லை. வந்தவருக்கு ஏதோ புரிந்து காரில் அமர்ந்திருந்த மாப்பிள்ளையிடம் சென்று சுவாமி கூறிய வார்த்தைகளை அவருக்கு கூறி அழைத்து வந்தார். அவர் வந்தவுடனே சுவாமிகளின் பாதங்களில் விழுந்து வணங்கி, "**சுவாமி! நான் தெரியாம ஆணவமா பண்ணிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்**" என்று வேண்டினார். "**ஆமாம்பா! அவர் ஊருக்கு ராஜா ஆச்சே!**" என்றார் சுவாமி. அதன் பிறகு அவர் கலெக்டர் என்று தெரிந்தது. அவருள் இருந்த அகங்காரத்தை மறைமுகமாக எடுத்துக்கூறி அவருக்கு நல்ல வழியை போதித்தார் ஸ்ரீ பூண்டி மகான். அவர் விபூதி கேட்டாலும் தரவில்லை. எடுத்துக் கொள்ளுமாறு

கூறினார். அவர் வீட்டிலிருந்த பீரோவை திறந்து எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கோ என்றார். நான் சுவாமிகளின் பெயர், புகழுக்காக கூறினேனே தவிர பணத்திற்காக இப்படிப்பட்ட வேலைகளை செய்யவில்லைஎன்று கூறினேன். என்னை ஸ்ரீ பூண்டி சுவாமி பரிசோதித்தார் என்று நினைத்துக் கொண்டேன்.

ஒரு நாள் நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை வணங்கி '**சுவாமி! யார் யாருக்கோ என்னென்னவோ தர்றீங்க. நான் இத்தனை வருடமா உங்களை வேண்டுகிறேன்**' என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "**என்னாப்பா! நீ கேட்டது இதான்பா! உன்னை நான் மறக்காமல் இருக்க வேண்டும் என்று! நான் உனக்கு மறதி இல்லாமல் வைத்து இருக்கிறேன்**" என்றார். சத்குரு நாதர் நான் கேட்டதை எனக்களித்து என்னை வழிநடத்துகிறார் என்று தெரிந்து ஆனந்தம் அடைந்தேன்.

திருமலை திருப்பதியில் காணிக்கை முடியை ஏலம் போடும் சமயத்தில் நானும் சென்றேன். ஏலம் போடும் இடத்தில் சில அதிகாரிகள் இலஞ்சம் வாங்கி பணிபுரிகிறார்கள். நான் இலஞ்சம் தந்து இரண்டு மூட்டை முடி வாங்கினேன். அங்கு அதிகாரிகள் என்னை பின்தொடர்ந்து நீளம் குறைந்த முடியை மார்க்கெட் விலையைவிட குறைவாகத் தருவதாகக் கூறி அவர்களுக்கு இலஞ்சம் அளிக்குமாறு கேட்டார்கள். நான் ஸ்ரீ பூண்டி சுவாமியை தியானித்தேன். "**போறவன் வர்றவன் எல்லாரையும் மொட்டையடிச்சி அனுப்பறான் வெங்கடேசப் பெருமாள். நீ ஏன்பா அவன் தலைமேல கை வைக்கிறே**" என்று கூறினார். வந்த அதிகாரிகளிடம் நான் அவ்வளவு பணம் தந்து வாங்கமுடியாது என்று கூறி வந்துவிட்டேன் - பணத்துக்கு ஆசைப்பட்டால் அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டும் என்று எனக்கு ஸ்ரீ பூண்டி சுவாமிபோதித்தார். அப்படி செய்தால் நம் வாழ்க்கையை நாமே கெடுத்து கொண்டது போலாகும். அப்படி வியாபாரம் செய்தவர்கள் பிடிபட்டு தண்டனை பெற்றார்கள். நான் இன்றும் வியாபாரத்திற்காக எங்கு சென்றாலும் சுவாமி என்னை துணை நின்று வழி நடத்துகிறார். ஏதாவது ஆபத்து நேரிடும் என்றாலும் முன்பே எச்சரித்து வழி நடத்துகிறார். தியானித்தால் எனக்கு பதில் கூறுகிறார். இது ஸ்ரீ பூண்டி மகான் எனக்களித்த வரம்.

**நேர்காணல்: 107**
**13.08.2011, பூண்டி**

**இராதாகிருஷ்ணன்**, **வயது: 72, மதுராந்தகம் அருகில்.**

*ஆனந்தவிகடன் வார இதழில் ஸ்ரீ பூண்டி மகானைக் குறித்து பரணிதரன் எழுதிய கட்டுரையைப் படித்து என் நண்பர்களோடு சேர்ந்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டேன். அதன் பிறகு என் மனதில் சுவாமியை பார்க்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்பட்டபோது சந்தர்ப்பம் பார்த்து வந்து சுவாமிகளை தரிசனம் செய்து செல்வேன். நான் அடிக்கடி வந்து சுவாமிகளை தரிசிப்பது என் மனைவிக்கு பிடிக்காது. அப்படியே விட்டு வைத்தால் சந்யாசியாக மாறி விடுவேன் என்ற பயத்தினால் என் தந்தையிடம் கூறினாள். என் தந்தைக்கு விஷயம் தெரிந்து நான் அடிக்கடி செல்லக்கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டார். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்த சமயங்களில் அடிக்கடி வந்து தரிசனம் செய்து கொள்ளச் சொல்வார். நான்* "**சுவாமி! மதராஸிலிருந்து வரவேண்டும் அல்லவா?**" *என்றேன்.* "**இல்லைப்பா! உனக்கு எப்போதெல்லாம் சந்தர்ப்பம் உள்ளதோ அப்படிப்பட்ட சமயங்களில் தவறாமல் வா**" *என்று சுவாமி கூறினார்.*

*எனக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருந்தது. விடவேண்டும் என்றாலும் பலவீனத்தால் விடமுடியவில்லை. ஸ்ரீ சுவாமிகளை தரிசித்துக் கொண்டு சிகரெட் பிடிப்பது பற்றி கூறினேன்.* "**நானும் தான் பார்க்கிறேன். நீயா விட்டுவிடுவே என்று. எனக்கு யாரு நிறுத்துவாங்க**" *என்றார் சுவாமி. நான் சிகரெட் பிடிப்பதை விட்டுவிட்டேன்.*

*அசைவ உணவு சாப்பிடுவது எங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் பழக்கம். ஒரு சமயம் மாலை போட்டுக்கொண்டு விரதம் இருந்து ஐயப்பன் சுவாமி கோவிலுக்கு சென்று வந்த பிறகு நானும் என் மனைவியும் சுவாமிகளை தரிசித்துக் கொண்டு* "**சுவாமி! நான் ஐயப்பசுவாமிக்கு இருந்த விரதம் முடிந்த பிறகு அசைவ உணவு**

**சாப்பிடுவதை விட்டு விடவேண்டுமா**" என்று கேட்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமி "**ஆமாம்பா! விட்டுவிட வேண்டும்பா**" என்றார். நான் சென்று எதிரிலுள்ள மண்டபத்தின் அருகில் அமர்ந்து கொண்டேன். முட்டை சாப்பிடலாமா? இல்லையா? என்ற சந்தேகம் வந்து மீண்டும் வந்து சுவாமியை கேட்டேன். "**இல்லைப்பா! அதுகூட விட்டுவிடணும்**" என்று கூறினார் சுவாமி.

நான் என் தந்தையோடு வந்து ஸ்ரீ பூண்டி மகானைதரிசித்துக் கொண்டேன். அந்த சமயத்தில் என் தந்தை "**கிணற்றில் தண்ணீர் குறைவாக உள்ளது சுவாமி**" என்று கூறினார். ஸ்ரீ பூண்டி மகான் "**மண்ணை செம்மைபடுத்தினால் நன்றாக இருக்கும்**" என்றார். கிணற்றை தோண்டினேன் சுவாமி! பாறை வந்தது. அந்தக் கிணற்றிலேயே ஆழப்படுத்தச் சொல்றீங்களா! இல்லை வேறிடத்தில் கிணறு தோண்ட சொல்கிறீர்களா? என்று என் தந்தை கேட்டார். "**உங்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்றாலும் அதிலேயே ஆழப்படுத்துங்கள்**" என்று கூறினார் பூண்டி மகான்.

என் அலுவலகத்தில் வேலை செய்யும் கிறிஸ்துவர் பெயர் இராபர்ட். அவர் கடவுள் இல்லையென்று திட்டுவார். அவர் உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையானார். அவரை பார்க்கச் சென்றேன். அவர் தாய் "**என் மகனுக்கு பெண் குழந்தை தான். ஆண் மகன் இல்லை**" என்று தன் மன வேதனையை வெளிப்படுத்தினார். நான் ஸ்ரீ பூண்டி மகானை தரிசித்துக்கொண்டு, "**சுவாமி! இராபர்ட் உடல்நிலை சரியாகி திரும்பிவிடுவாரா?**" என்று கேட்டேன். "**உன்னிடம் எவ்வளவு உள்ளதோ அவ்வளவு கொடு**" என்று கேட்டார் பூண்டி மகான். என் சட்டைப்பையிலிருந்த சில சில்லரைப் பணத்தை சமர்ப்பித்தேன். "**சிறிது நாட்கள் ஆகும்பா. வருவார்**" என்றார் சுவாமி. இராபர்ட்க்கு ஆபரேஷன் செய்யவேண்டும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். ஆனால் அவர் மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் கூறினார்கள். இனி பிழைக்கமாட்டார் என்று நினைத்தார்கள். நான் அலுவலகத்தில் உள்ளவர்களிடம் "**அவர் பிழைப்பார். என் சுவாமி கூறினார்**" என்றேன். ஆனால் அனைவரும் என்னை கேலி செய்தார்கள். அவருக்கு ஆபரேஷன் நடக்கும் சமயத்தில் ஒரு சாது

வந்து உணவு கேட்டாராம். அங்கிருந்தவர்கள் வாங்கித் தந்தார்கள். அவருக்கு உடல்நிலை சரியானதும் அலுவலகம் வந்து “**நீங்கள் சொன்னபடியே சுவாமி என்னை காப்பாற்றினார். ஆனாலும் என்னால் நம்பமுடியவில்லை**” என்று கூறினார். சிறிது நாட்கள் கழித்து அவருக்கு மகன் கூட பிறந்தான். “**இத்தனை நடந்தும் சுவாமியை பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லையா?**” என்று கேட்டேன். “**இஷ்டமிருந்தும் என்னால் செல்ல முடியவில்லை**” என்றார். எத்தனை கடினம் வாய்ந்தவர்களுக்கும் சுவாமி கருணை காட்டுகிறார் என்று எண்ணினேன்.

ஒரு நாள் சுவாமி தரிசனத்திற்கு கிளம்பி வரும்போது ரேஷன் கடையிலிருந்து மூன்று கிலோ அரிசி வீட்டிற்குத் தேவை என்று வாங்கி வந்தேன். ஒரு அன்பர் மறுநாள் காலை ஸ்ரீ பூண்டி சுவாமிக்கு பாதபூஜை செய்கிறார். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் பிரசாதம் செய்ய அரிசிக் குறைவாக உள்ளது என்றார் சுவாமியிடம். ஸ்ரீ பூண்டி **மகான்** “**அதோ இருக்கிறார் பார் மதராஸ்காரரிடம் கேள்**” என்று கூறினார். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி என்னிடம் வந்து அரிசி கேட்டார். நான் சிறிது அரிசி தந்தேன். அன்று நானே பாதபூஜை செய்தது போன்ற அனுபவம் அடைந்தேன்.

என் நண்பர் ஒருவர் சுவாமிகள் சாப்பிட்டு மீந்த உணவு பிரசாதத்தை சாப்பிட முடிந்தால் மிகவும் நல்லது என்றார். ஒரு நாள் நான் டிபன் சாப்பிட்டு விட்டு சுவாமிக்கு டிபன் வாங்கி வந்து ஊட்டிக்கொண்டு இருந்தேன். ஸ்ரீ சுவாமிசாப்பிடும் சமயத்தில் வாந்தியெடுத்தார். சுவாமிகள் சாப்பிட்ட அமுத உணவு நான் ஊட்டும் இட்டிலி மேல் பட்டது. சுவாமி வாந்தியெடுத்தார் என்று நினைத்து எடுத்துச் சென்று வெளியே வீசிவிட்டேன். நடந்ததை என் நண்பரிடம் கூறினேன். சுவாமியளித்த சந்தர்ப்பத்தை என் கைகளால் நழுவ விட்டுவிட்டேன் என்று கூறினார். ஸ்ரீ பூண்டி மகான் நான் எதிர்பார்த்ததைத் தந்தாலும் என் அறியாமையால் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டேன். அதன்பிறகு வருத்தப்பட்டேன்.

ஒருநாள் இரவு ஆற்றில் அமர்ந்து நான் தியானம் செய்யும் சமயத்தில் நான் அமர்ந்த இடத்தின் சுற்றுப்புறத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்குமாறு ஒருவரை பாண்டுரங்கசுவாமி அனுப்பினார்.

*நாய்கள் என்னைச் சுற்றி திரிகின்றன என்றும் அவற்றை உணராமல் இருக்கிறேன் என்றும் அதற்காகத்தான் ஒருவரை அனுப்பி பார்க்கச் சொன்னார்கள். அகால வேளைகளில் நினைத்த இடத்தில் அமர்ந்து தியானம் செய்ய வேண்டாம் என்று ஸ்ரீ பூண்டி சுவாமிஅந்த உருவத்தில் வந்து என்னை சோதித்தார் என்று பாண்டுரங்க சுவாமி தெரியப்படுத்தினார்.*

*என் அலுவலகத்தில் பணி உயர்வுக்காக சுவாமிகளைக் கேட்டேன்.* **"என்னாப்பா! குறுக்கு வழியில போறாங்கப்பா"** *என்றார் சுவாமி. என் அலுவலகத்தில் யாரும் எனக்கு தீங்கு செய்யமாட்டார்கள் என்பது என் நம்பிக்கை. அந்த வார்த்தையை சுவாமியிடமும் கூறினேன். ஆனால், யூனியனிலிருந்த ஒருவர் வேறொருவருக்கு சிபாரிசு செய்ததால் அவருக்கு பணி உயர்வு கிடைத்தது. ஸ்ரீ பூண்டி சுவாமி கூறியபடியே நடந்தது. ஆனால் நான் ஆபிஸர் ஆக வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. மீண்டும் பூண்டி மகானிடம் கேட்டேன்.* **"ஆமாம்பா! உனக்கு நஷ்டம் வருமே"** *என்றார் சுவாமி. நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்றேன். அதன்பிறகு பூண்டி சுவாமி பதிலேதும் கூறவில்லை. ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்தபிறகு என் விருப்பம் நிறைவேறியது. ஆனால் சம்பளம் குறைந்தது. ஸ்ரீ சுவாமிகூறியதை கேட்டிருந்தால் எனக்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்காது.*

*நான் மதராஸில் ஸ்ரீ பூர்ணானந்த சுவாமியை தரிசனம் செய்து கொண்டேன். எனக்கு உபதேசம் அளிப்பதாக கூறினார். நான் ஸ்ரீ பூண்டி மகான் கூறினால் உபதேசம் பெறுவதாகக் கூறி திருவண்ணாமலைக்குச் சென்றேன். விசிறி சாமியாரை தரிசித்து நின்றேன்.* **"நீங்க ஒரு இடமா நிற்கமாட்டேன் என்கிறீங்க. இங்க போற. அங்க போற. என்ன நினைச்சிக்கிட்டு இருக்கறீங்க"** *என்றார் சுவாமி.* **"நீங்கள் பூர்ணானந்த சுவாமிகளை உபதேசம் அளிக்க சொன்னதாகக் கூறினார். அவரிடம் தீட்சை பெறுவது உங்களுக்கு விருப்பமா என்று எனக்குத் தெரியாது. அப்படி தீட்சை பெற வேண்டும் என்று எனக்கு தெரியாது. அப்படி தீட்சை பெற வேண்டும் என்றால் எனக்கு கூறியிருக்கலாம் அல்லவா? நான் உங்களை நம்பியிருக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று**

**தெரியவில்லை சுவாமி. உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வந்தேன் சுவாமி!**" என்றேன். "**என்ன நீ! ஒரு இடத்தில நிற்க மாட்டேன் என்கிறே. இங்கயும், அங்கயும் அலைஞ்சிக்கிட்டு இருக்கிற. போயி எதிரா உட்கார். நான் கூப்பிடறேன்**'' என்றார் சுவாமி கோபமாக. நான் சென்று மண்டபத்தில் சுவாமிக்கு எதிரில் அமர்ந்து கொண்டேன். பிற்பகல் இரண்டு மணியானது. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வந்து "**ரொம்ப நேரமாக உட்கார்ந்து இருக்கறீங்க. இன்னும் உணவு சாப்பிடவில்லையா நீங்க**" என்று கேட்டார். நான் சுவாமி கூறியதைக் கூறி அங்கேயே இருப்பதாகச் சொன்னாலும் கேட்காமல் கையைப் பிடித்து இழுத்து பலவந்தமாக அழைத்துச் சென்றார். சுவாமி சொன்னதை கேட்காமல் தவறியதற்கு நான் உபதேசம் வாங்க முடியாமல் போனது. அங்கேயே அமர்ந்து இருந்தால் உபதேசம் அளித்து இருப்பாரோ என்னவோ? சிறிது காலத்தில் ஸ்ரீ பூண்டி மகான் மஹாசமாதியடைந்து விட்டார்.

ஒரு சமயம் நான் ஸ்ரீ பாத் சுவாமியை தரிசித்துக் கொண்டேன். ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசனம் செய்து கொண்டாயா? என்று கேட்டார். "**ஆமாம். உங்களிடம் இப்போது எப்படி பேசுகிறேனோ அப்படியே ஸ்ரீ பூண்டி சுவாமியிடம் பேசினேன்**" என்று கூறினேன். "**உங்கள் போன பிறவி பலனால் சுவாமியை தரிசிக்க முடிந்தது**" என்றும் "**என்னை சுவாமிக்குச் சமமாக ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம்**" என்றார். ஸ்ரீ பூண்டி சுவாமிகளின் போட்டோ பக்கத்தில் ஸ்ரீ பாத்சுவாமி போட்டோ கூட வைக்க வேண்டாம் என்று பக்தர்களுக்கு கூறுவேன். ஸ்ரீ பூண்டி சுவாமிஎன்றால் அத்தனை கௌரவம். மரியாதை.

**நேர்காணல்: 108**
**14.8.2011, பூண்டி**

**சண்முகம்**, வயது: 54, பிராயம்பட்டு.

*நான் கலசபாக்கத்தில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்தபோது ஸ்ரீ பூண்டி சுவாமியை தினந்தோறும் தரிசித்துக் கொண்டு விபூதி வைத்துக் கொண்டு பள்ளிக்குச் செல்வேன். என் தந்தையார் காளிகாயம்மன் ஆலயத்திற்கு, கன்னிகா ஆலயத்திற்கு பூஜைகள் செய்வார். ஒரு நாள் அவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் என்னை காளிகா ஆலயத்திற்கு பூஜை செய்த பிறகு பள்ளிக்குச் செல்லுமாறு கூறினார். அன்று எங்களுக்கு தேர்வு உள்ளது என்றும் எனவே நேரம் போதாது என்றும் கூறினேன். என் தந்தை என்னை வற்புறுத்தினார். நான் காளிகா ஆலயத்திற்கு சென்று அவசர அவசரமாக அபிஷேகம் செய்து பூஜை முடித்து கிளம்பி பள்ளிக்குச் செல்லும் போது ஸ்ரீ பூண்டி சுவாமியை தரிசித்துக் கொண்டேன். என்னை சுவாமி அருகில் அழைத்து என் நெற்றியில் விபூதியை பட்டையாக கோடு போல் இழுத்தார்.* **"சுவாமி! விபூதி பட்டை பெரியதாக வைத்தீர்கள். கொஞ்சம் சிறியதாக வைங்க"** *என்றேன். பள்ளிக்குச் செல்லும் காரணத்தால் அப்படிக் கூறினேன்.* **"விபூதி இடுறதால் எந்த குறைபாடும் இல்லைப்பா!"** *என்று கூறி* **"கிராம தேவதையான காளி கோயிலில் பூஜை பண்ணியே. பின்னால நனைஞ்சுதா! பின்னால நனையவே இல்லைப்பா!"** *என்று கூறினார். நான் அப்படியே நின்று விட்டேன். எனக்கு எதுவும் தெரியாது. நான் செய்த தவற்றை சுவாமிகள் எடுத்துக் கூறினார்.* **"தேர்வு என்று நீ பின்பக்கம் நனையாம குளிப்பாட்டிவிட்டு வந்திட்டே. இனிமேல் சரியாக பண்ணு பூஜை"** *என்று கூறினார்.*

*நான் பூஜை செய்யும் காளி கோயிலில் கையால் அடிக்கும் மணியின் ஒலி சரியாக வரவில்லை என்று சுவாமியிடம் கூறினேன்.* **"அந்த மணியை எடுத்துக்கிட்டு வந்து இங்கவை. நான் வேறு மணி தருகிறேன். எடுத்துக்கிட்டு போ"** *என்று கூறினார் சுவாமி. நான் பழைய மணியை*



பர்வதமலை கோவிலில்
உள்ள ஸ்ரீ மல்லிகார்ஜுன
சுவாமி



பர்வதமலை
கோவிலில் உள்ள
ஸ்ரீ பிரமராம்பிகையம்மன்

எடுத்து வந்து பூண்டி சுவாமியிடம் அளித்தேன். எனக்கு சுவாமி மற்றொரு மணியை அளித்தார். அந்த மணியை இன்றும் பத்திரமாக வைத்து உள்ளேன்.

எங்கள் கிராமத்தில் நாங்கள் சிலர் சேர்ந்து பம்பை வாசிக்க கற்றுக் கொண்டோம். முதல்முதலில் பம்பை எங்கு வாசிக்க வேண்டும் என்ற குழப்பத்துடன் இருந்தோம். எங்கள் கிராம பெரியவர்கள் ஸ்ரீ பூண்டி சுவாமியின் முன் பம்பை வாசிக்கச் சொன்னார்கள். எல்லாரும் சேர்ந்து வந்து ஸ்ரீ பூண்டி சுவாமிமுன் முதன் முதலில் பம்பை வாசித்தோம். சில பக்திப்பாடல்களை பாடினோம். எல்லாம் முடிந்த பிறகு ஸ்ரீ பூண்டி மகான் என்னையழைத்து "**திரௌபதியம்மன் மீது பக்திப் பாட்டு பாடு**" என்று கேட்டார். நான் திரௌபதியம்மன் மீது பாட்டுப் பாடினேன். என்னைப் பார்த்து சுவாமி புன்னகைத்து "**நீங்க பேரும் புகழோடு பம்பை வாசிப்பீங்க. ஆனால் எல்லோரும் கலந்து ஒரு நாள் பர்வதமலைக்கு போயிட்டு வாங்க**" என்று கூறினார்.

ஒரு வாரம் கழித்து எல்லாரும் சேர்ந்து பர்வத மலைக்குச் சென்றோம். அன்றிரவு பதினொரு மணிக்கு கோவிலில் பம்பை வாசித்து பக்திப்பாடல் பாடும் சமயத்தில் ஒரு துறவி காவியுடை அணிந்து வந்து எங்கள் பக்கத்தில் அமர்ந்துக் கொண்டார். "**என்னய்யா உங்கள் குல தெய்வம் யாரு**" என்று கேட்டார். "**பச்சையம்மன் கோவிலில் உள்ள தேவதை தான் எங்கள் குலதெய்வம்**" என்று கூறினோம். "**பச்சையம்மனுக்கு ரதம் என்ன?**" என்று கேட்டார். "**பச்சையம்மனுக்கு ரதம் என்னவென்று எங்களுக்குத் தெரியாது சுவாமி**" என்று கூறினோம். "**ரதம் காடு, செடி, புதர் அந்த பச்சையான நிறம்**" என்று கூறினார். அதன் பிறகு அத்துறவி "**ஒரு விரல் காட்டினால் ஒரு சாமி ஆடணும். இரண்டு விரல் காட்டினால் இரண்டு சாமி ஆடணும் மனிதர்கள் மேல**" என்றார். அத்துறவி ஐந்து விரல்களை காண்பித்து மந்திரம் உச்சரித்தார். எங்களில் ஐவர் சாமி வந்தது போல் ஆடினார்கள். அப்போதைக்குச் சுமார் ஒரு மணி ஆனது. மீண்டும் அத்துறவி ''**திருப்புகழை பாடக்கூடியவர் யாராவது இருக்கிறீர்களா?**" என்று கேட்டார். எங்களில் ஒருவர் பாடுவதாகக் கூறினார். அங்கு அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றி திரிபோட்டு விளக்கு ஏற்றச் சொன்னார். தீபம் ஏற்றிய பிறகு

திருப்புகழைப் பாடச் சொன்னார். எங்களில் ஒருவர் பாடியவாறு நின்று விட்டதால் முழுவதுமாகப் பாட முடியாமல் போனது. மீண்டும் அத்துறவியே சிறிது நேரம் பாடினார். இரவு இரண்டு மணி கடந்து விட்டது. கோவிலின் உள்ளே கருமேகங்கள் சூழ்ந்தன. சிறிது நேரத்தில் அத்துறவி தென்படவில்லை. எங்கும் தேடிப் பார்த்தோம். அத்துறவி மாயமாய் மறைந்து விட்டார். அனைவரும் வியப்புடன் நின்று விட்டோம். யாரோ ஒரு சித்த மகா புருஷர் வந்து தரிசனம் அளித்துச் சென்றார் என்று மகிழ்ச்சியடைந்தோம். அதன் பிறகு நான் ஒவ்வொரு மாதமும் அமாவாசையன்று பர்வதமலைக்குச் சென்று இரவு கோவிலில் உறங்கி காலையில் கிளம்பி வருவேன். எல்லாம் ஸ்ரீ பூண்டி மகான் எனக்களித்த அனுக்கிரகம்.